
# எழுநா

மே 2024



மாத இதழ்
22

# எழுநா

## இதழ் 22


**பதிப்பாசிரியர்**
கணேசானந்தன் சசீவன்

**பொறுப்பாசிரியர்கள்**
ஸ்ரனிஸ்லஸ் கபில்தேவ்
ஜனனி பாலசுந்தரம்
அச்சுதநாயர் இசைப்பிரியன்
நிவேதிகா இராசன்

**குரல் வடிவம்**
பாலரூபன் கிருஷிகா
பவித்ரா இரமணீகரசர்மா

**வளவாளர்கள்**

| | |
|---|---|
| இ. பத்மநாப ஐயர் | – உசாத்துணை சேவை |
| கனகலிங்கம் சுகுமார் | – உசாத்துணை சேவை |
| தில்லைநாதன் கோபிநாத் | – நூல் வரிசை |
| கதிர் சயந்தன் | – நூல் தயாரிப்பு |
| சுவர்ணலதா செந்தில்குமார் | – மெய்ப்புத் திருத்தம் |
| தங்கராஜா பிரபாகரன் | – மெய்ப்புத் திருத்தம் |
| நடராஜா முரளிதரன் | – அச்சுப்பதிப்பு – விநியோகம் (கனடா) |
| பாலசுப்ரமணியம் சிவகுமார் | – காணொலி/ விவரணப்படம் |
| சிறிதரன் சோமிதரன் | – காணொலி / விவரணப்படம் |
| மகேந்திரன் திருவரங்கன் | – மொழிபெயர்ப்பு |
| பரமசிவம் பவதாரணி | – செயல்பாட்டு மேலாண்மை |

**துறை சார் ஆலோசகர் குழு**

| | |
|---|---|
| ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன் | – மொழியும் இலக்கியமும் |
| கந்தையா ரமணிதரன் | – நீரியலும் நீர்ப்பாசனமும் |
| குமாரவடிவேல் குருபரன் | – சட்டமும் சட்ட முறைமையும் |
| நடராஜா சிறீஸ்கந்தராஜா | – சூழலும் உயிர்ப் பல்வகைமையும் |
| தர்சன் அம்பலவாணர் | – சமயமும் இறையியலும் |
| பால சிவகடாட்சம் | – சுதேசியமும் பாரம்பரிய மருத்துவமும் |
| நாகமுத்து பிரதீபராஜா | – புவியியலும் திட்டமிடலும் |
| பரமு புஸ்பரட்ணம் | – வரலாறும் தொல்லியலும் |
| சனாதனன் தமோதரம்பிள்ளை | – கட்புல அரங்கேற்ற கலைகள் |
| சேரன் உருத்திரமூர்த்தி | – சமூகவியலும் மானிடவியலும் |
| முத்துக்கிருஸ்ணன் சர்வானந்தன் | – பொருளியலும் நிதியியலும் |
| சபா ஜெயராசா | – கல்வியியலும் கற்றலும் |
| மரியோ அருள்தாஸ் | – அரசியலும் மெய்யியலும் |
| இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் | – கட்டடக்கலையும் வடிவமைப்பும் |
| கந்தையா பகீரதன் | – விவசாயமும் மீன்பிடியும் |

**பங்களிப்பாளர்கள்**
கணேசலிங்கம் குகரூபன்
கருணானந்தன் சஞ்யே


**அட்டைப்படம்**
*Source : www.tamilguardian.com*

*முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அங்கு வைக்கப்பட்டிருக்கும் சிலை.*

**FOLLOW**

எழுநா

https://ezhunaonline.com/
https://youtube.com/user/Ezhuna
https://www.facebook.com/Ezhunax/
https://twitter.com/Ezhuna
https://www.instagram.com/ezhunaa/
https://www.tiktok.com/@ezhuna
https://open.spotify.com/show/4Xn
https://tinyurl.com/ykj8ru3f
https://tinyurl.com/3zfkzxme
https://tinyurl.com/2p83m8zj
https://pca.st/swr6zomk
https://radiopublic.com/6rX3L4
https://tinyurl.com/bdeky92h
https://anchor.fm/ezhuna
https://www.clubhouse.com/club/ezhuna
https://www.magzter.com/publishers/


தொடர்பு முகவரி :
எழுநா
63, சேர். பொன். இராமநாதன் வீதி
கலட்டி சந்தி, திருநெல்வேலி.

மின்னஞ்சல்:
contact@ezhunaonline.com
ezhunamedia@gmail.com

மகாவலி அபிவிருத்தித் திட்டம்: பேசாத பக்கங்கள் - மீநிலங்கோ தெய்வேந்திரன் 04

தனிநபர் உரிமைகளும் அரசு அதிகாரமும் : பிரேஸ் கோர்டில் விவகாரத்தை முன்வைத்து ஓர் மீளாய்வு — பகுதி 1,2
- ஆங்கில மூலம் : றெஜி சிறிவர்த்தன
தமிழில் : கந்தையா சண்முகலிங்கம் 17

மக்கள் மயப்பட்ட வைரவர் வழிபாடு -தி. செல்வமனோகரன் 33

எரிக்கப்பட்ட நூலகங்களும் எரிபடமுடியா நூலகக் கனவுகளும் : நூலக நிறுவனம் -பாக்கியநாதன் அகிலன் 39

தமிழினப் படுகொலையின் 15 ஆவது ஆண்டில் இனப் படுகொலையின் அரசியல் -எழில் ராஜன் ராஜேந்திரம் 44

அரபுக்கள், சோனகர், முஸ்லிம்கள் : இலங்கை முஸ்லிம் இனத்துவ அடையாளத்தின் பரிணாமம் — பகுதி 06 -ஜிஃப்ரி ஹாசன் 51

லெயுசிக்காமின் நிலப்படத் தொகுப்பில் யாழ்ப்பாணக் கட்டளையகம் — 3 -இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் 55

'சர்வதேச ஊடாட்டம் அவசியம் ' — யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத் தலைவர், கலாநிதி ராஜேந்திரன் சுரேந்திரகுமாரன்
- ஆங்கில மூலம் : ஜெகன் அருளையா
தமிழில் : த. சிவதாசன் 62

பல்கலைக்கழக வணிக இணைப்பு : கல்வி முனைப்புகள் மூலம் சந்தைகளை விரிவுபடுத்தல்
- ஆங்கில மூலம் : ஜெகன் அருளையா
தமிழில் : த. சிவதாசன் 67

யாழ்ப்பாணத்தில் உருவான சில ஆரம்பகால நூலகங்கள் — 11 -நடராஜா செல்வராஜா 71

மலையகத் தமிழர் எனும் தேசிய இன அடையாளப் பயணம் - எஸ். இஸட். ஜெயசிங் 79

சமனற்ற நீதி : வளர்நிலை
- ஆங்கில மூலம் : ராஜ் ராஜரட்ணம்
தமிழில் : ஓய்வுநிலைப் பேராயர், பேரருட்கலாநிதி எஸ். ஜெபநேசன், முனைவர் சோ. பத்மநாதன் 89

மகாசேனன் காலம் வரை கிழக்கு உரோகணம் - விவேகானந்தராஜா துலாஞ்சனன் 97

பன்மைப் பண்பாட்டுச் சமூகங்களிற்குப் பொருத்தமான அரசியல் யாப்புக்களை வரைதல்: பயனுள்ள சர்வதேச அனுபவங்கள் சில
- ஆங்கில மூலம்: ஜயம்பதி விக்கிரமரட்ண
தமிழில் : கந்தையா சண்முகலிங்கம் 104

வடக்கு மாகாணத்தில் நாகர் - என். கே. எஸ். திருச்செல்வம் 112

மிகுந்தலையில் நாக வழிபாடும், நாகர் பற்றிய பிராமிக் கல்வெட்டுகளும் - என். கே. எஸ். திருச்செல்வம் 115

மத நீக்க ஆன்மீக எழுச்சி - நடேசன் இரவீந்திரன் 120

தமிழ்ப் பெண்புலி (TAMIL TIGRESS) : நிரோமி டீ சொய்சாவினது நினைவுக் குறிப்புகள் - இளங்கோ 127

ஓர் அரசியற் கருவியாக கூட்டுறவு ஏன் வலுவிழந்தது? : கூட்டுறவின் அடையாளம் மற்றும் அரசியல் - வை. ஜெயமுருகன் 135

சிலப்பதிகாரமும் ஆசீவகமும் — பகுதி 1,2 - ஜெகநாதன் அரங்கராஜ் 141

ஆனைக்கோட்டை முத்திரை : உண்மையும் திரிபும் - பரமு புஷ்பரட்ணம் 160

இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தின் வெப்பநிலை - நாகமுத்து பிரதீபராஜா 165

இலங்கையில் பெருந்தோட்டத் தொழிலாளர் வர்க்கத்தின் ஆரம்பம் - சை. கிங்ஸ்லி கோமஸ் 173

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் வாழ்வாதாரத்தில் கைத்தொழில்களின் வகிபாகம் - அமரசிங்கம் கேதீஸ்வரன் 181

கறவை மாடுகளின் இனப்பெருக்கப் பிரச்சினைகளைக் களைதல் - சிவபாத சுந்தரலிங்கம் கிருபானந்தகுமரன் 186

புராதனமான காஞ்சிரமோடை, 'பரராசசேகரன் அணை' எல்லைப் பிரதேசங்களும் பண்டிதர் க. சச்சிதானந்தனின் 'யாழ்ப்பாணக் காவியமும்' - நவரத்தினம் கிரிதரன் 191

எளிமைக்குத் திரும்புதல் : ஒரு வணிக உத்தி - கணபதிப்பிள்ளை ரூபன் 195

காலநிலை மாற்றத்தின் விளைவுகளை இன்று அனைவருமே அனுபவிக்கின்ற நிலையில் பசுமை நோக்கிய நகர்வு குறித்த விழிப்புணர்வும் அக்கறையும் பரந்துபட்டளவில் மக்களைச் சென்றடைந்துள்ளது. பசுமையின் பெயரால் வளச்சுரண்டல்கள், உரிமை மறுப்புகள், மோசடியான வர்த்தகம், போலியான திட்டங்கள் என அனைத்தும் அரங்கேறுகின்றன. குறிப்பாக மூன்றாமுலக நாடுகள் இதற்குப் பலியாகின்றன. இலங்கையும் இதற்கு விலக்கல்ல. இலங்கை உயிரினங்களின் செறிவு அடிப்படையில் ஆசியப் பிராந்தியத்தில் முக்கியமான நாடாக கருதப்படுகிறது. ஆனால் இலங்கையின் உயிர்ப்பல்வகைமை மிகப்பாரிய சவாலை எதிர்கொண்டுள்ளது. கடந்த இரண்டு தசாப்த காலத்தில் காலநிலை மாற்றத்தின் கொடும் விளைவுகளையும் இலங்கை சந்தித்துள்ளது. இவை குறிப்பாக விவசாயத் துறையை சீரழித்துள்ளது. உயரும் கடல்மட்டம் இலங்கைக்கு ஒரு மிகப்பெரிய சவாலாக உருவெடுக்கும் வாய்ப்புகளும் உண்டு. இத்தகைய பின்புலத்தில் இலங்கைச் சூழலில் பசுமை எனும் பெயரால் நடைபெறுகின்ற விடயங்களைத் தத்துவார்த்த ரீதியிலும் வரலாற்று நோக்கிலும் சமகால நிகழ்வுகளுடனும் நோக்க இத்தொடர் விழைகிறது. பசுமையின் பெயரால் நடந்தேறுபவை ஏற்படுத்தும் சமூகப் பொருளாதார மாற்றங்களையும் அதன் அரசியல் சிக்கல்களையும் சேர்த்தே 'பசுமை எனும் பேரபாயம்' எனும் இத்தொடர் கவனம் செலுத்துகிறது.




மீநிலங்கோ
தெய்வேந்திரன்


ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக உள்ள ஞாலசீர்த்தி மீநிலங்கோ தெய்வேந்திரன் அங்கு சர்வதேச அபிவிருத்தி ஆய்வுகள் முதுகலைத் திட்டத்தை வழிநடத்துகிறார். பூகோளத் தெற்கில் புதுப்பிக்கத்தக்க சக்தி மாற்றங்களின் சமத்துவமும் நீதியும் சார் அம்சங்கள் பற்றிய அவரது ஆய்வு, புவிசார் அரசியலின் இயக்கவியல் மீதும்; துப்புரவான சக்தி மாற்றங்களை எய்தலில் வளரும் நாடுகள் எதிர்கொள்ளும் கொள்கைச் சவால்கள் மீதும்; குறிப்பான கவனஞ் செலுத்துகிறது. இவர் கற்பித்தல், திட்ட முகாமை, பொதுக் கொள்கை, சர்வதேச அபிவிருத்தி ஆகியவற்றில் இருபது வருடப் பணி அனுபவம் உடையவர். ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் மானுடப் புவியியலில் முனைவர் பட்டம் பெற்றவராவார்.


# மகாவலி அபிவிருத்தித் திட்டம்: பேசாத பக்கங்கள்

## தொடக்கக் குறிப்புகள்

இலங்கையின் வரலாற்றில் மிகப்பாரிய அபிவிருத்தித் திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது மகாவலி அபிவிருத்தித் திட்டமாகும். இன்றுவரை இலங்கையின் முதன்மையான பல்நோக்கு அபிவிருத்தித் திட்டமாக இது விளங்குகிறது. சுதந்திரத்துக்குப் பிந்தைய இலங்கையின் வரலாற்றில் முதன்மையான இடம் இத்திட்டத்திற்கு உண்டு. ஆனால் இலங்கையின் வரலாற்றாளர்களின் பார்வையில் இது ஒரு அபிவிருத்தித் திட்டம் மட்டுமே. அதேவேளை அபிவிருத்தி தொடர்பான ஆய்வாளர்கள், பணியாளர்கள் ஆகியோரின் பார்வையில் இதுவொரு வெற்றிகரமான அபிவிருத்தித் திட்டமாகும். கொள்கை வகுப்பாளர்களைப் பொறுத்தவரையில் நாட்டின் அபிவிருத்தியை நோக்காகக் கொண்ட ஒரு செயற்திட்டமாக இது கொண்டாடப்பட வேண்டியது. இத்திட்டம் கருக்கொண்டு 65 ஆண்டுகளுக்கு மேலாகிறது. ஆனால் இன்றும் ஒரு பரந்த பன்முனைப் பார்வையில் இத்திட்டம் பார்க்கப்படவில்லை. இலங்கையின் தேசியவாதக் கதையாடலில் இத்திட்டத்திற்கு முக்கிய இடமுண்டு. குறிப்பாக பராக்கிரமபாகுவிற்குப் பிறகு விவசாயத்திற்கு நீர்வளத்தை சாத்தியமாக்கிய திட்டம் என்ற கருத்துருவாக்கம் முக்கியமானது.

இன்று திரும்பிப் பார்க்கின்ற போது, இத்திட்டம் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் பன்முகப்பட்டவை. ஆனால் அவையனைத்தும் 'இலங்கையின் வெற்றிகரமான அபிவிருத்தித் திட்டம்' என்ற போலிப் பெருமிதத்துள் அமிழ்ந்து போயின. இன்றும் இத்திட்டத்தையும் அதன் செயற்பாடுகளையும் விமர்சிப்பது குற்றமாகவும், தேசவிரோச் செயலாகவும் பார்க்கப்படுகிறது. சிங்கள பௌத்த பெருந்தேசியவாதம் தனக்கான இடத்தை வரலாற்றின் வழி நிறுவி வந்துள்ளது. அவ்வழியிலேயே பராக்கிரமபாகுவிற்குப் பிறகு விவசாயிகளுக்கு வாழ்வளித்தது என்ற பெருமையை மகாவலி அபிவிருத்தித் திட்டம் உடையது என்ற படிமம் ஆழமாகப் பதிய வைக்கப்பட்டுள்ளது. இது இத்திட்டத்தின் விளைவுகளை விமர்சனபூர்வமாகப் பார்ப்பதைத் தவிர்த்து வந்துள்ளது. மேற்கத்தேய ஆய்வாளர்களுக்கு வெளியே இத்திட்டத்தை திறந்த பார்வையோடு அணுகியோர் மிகச் சிலரே.




Source: Department of Geography, 2010. Accelerated Mahaweli Development project Area. GIS Lab, University of Peradeniya, Sri Lanka

படம் 2

இத்திட்டம் ஏற்படுத்திய சேதங்கள் மிகப்பல. அதில் நான்கை பிரதானமாக இக்கட்டுரை சுருக்கமாகக் கவனத்தில் கொள்ள விழைகிறது.

இன்று நாட்டின் பல பகுதிகளில் இடம்பெறுகின்ற மண்சரிவுகளுக்கும் மண்ணரிப்புகளுக்கும் ஒரு தொடக்கப்புள்ளி.

குடிநீர் மாசாதலுக்கான முக்கிய காரணி.

மனிதனுக்கும் யானைக்கும் இடையிலான முரண்பாட்டை உருவாக்கிய காடழிப்பை சாத்தியமாக்கியமை.

இன்று விவசாயிகள் எதிர்நோக்கும் நாட்பட்ட சிறுநீரக நோயின் உருவாக்கத்தின் மூலப்புள்ளி.

இவற்றை பார்ப்பதற்கு முன்னர், மகாவலித் திட்டத்தின் தோற்றுவாயைப் பார்க்க வேண்டும். ஏனெனில் முதற்கோணல் முற்றும் கோணல் என்பது போலவே இத்திட்டத்தின் செயற்பாடுகள் அமைந்தன. குறிப்பாக, முதலாம் உலக அபிவிருத்தி மாதிரிகளை இலங்கை போன்ற மூன்றாமுலக நாடுகளில் பயன்படுத்துவதன் பாதகத்திற்கு இத்திட்டம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. இன்று சர்வதேச நாணய நிதியத்தின் வழிகாட்டலில் பொருளாதாரச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதும் இதைப் போன்றதுதான். மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் பாதிப்புகள் பல தசாப்தங்கள் கடந்தும் இலங்கையர்களை வதைப்பது போலவே, சர்வதேச நாணய நிதியம் முன்மொழியும் தீர்வுகளும் எம்மை வதைக்கும்.

## மகாவலியின் கதை

335 கிலோ மீற்றர் நீளமான மகாவலி ஆற்றை மையப்படுத்திய அபிவிருத்தித் திட்டமொன்றைத் தொடங்கும் நோக்கம் 1958 இல் முளைவிட்டது. 1961 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் நாட்டின் வடக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள மகாவலி ஆற்றுப் படுகையை ஆய்வு செய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு நிதியிலிருந்து உதவி கேட்டது. இந்தக் கோரிக்கையை ஏற்று ஒரு பெரிய அளவிலான

**மகாவலி அபிவிருத்தித் திட்டமானது, இலங்கையின் வரலாற்றில் மிகப்பெரிய பல்நோக்கு தேசிய அபிவிருத்தித் திட்டமாகும். இது திட்டமிடப்பட்ட காலப்பகுதியில், உலகில் எங்கும் காணப்படாத நீர் தொடர்பான மிகப்பாரிய அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்றாக இருந்தது. இந்தத் திட்டமானது மகாவலி ஆற்றின் குறுக்கே 12 நீர்த்தேக்கங்களை நிர்மாணித்தது**

நீர்நிலைத் திட்டத்திற்கான சாத்தியக் கூறுகளைத் தீர்மானிக்க ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் திட்டம் (UNDP) மற்றும் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) ஆகியன இணைந்து முதன்முதலில் 1963 இல் ஒரு ஆய்வை மேற்கொண்டன. இவ்விரு அமைப்புகளும் தனது பணியை 3 ஆண்டுகளில் முடித்து விரிவான அறிக்கைகளைச் சமர்ப்பித்தன. குறிப்பாக அக்குழு வழங்கிய பிரதான திட்டம் (Master Plan) முக்கியமானது.


இலங்கை அரசாங்கம் பின்னர் உலக வங்கியிடம் நிதியுதவியைக் (அபிவிருத்தி உதவி) கோரியது. இந்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக உலக வங்கி சர்வதேச அபிவிருத்தி நிபுணர்களின் குழுவொன்றை அனுப்பியது. அக்குழு ஏற்கனவே வரையப்பட்ட பிரதான திட்டத்தை மேம்படுத்துவதை மேற்கொண்டது. உலக வங்கியால் அனுப்பப்பட்ட இரண்டாவது குழு 1968 இல் இலங்கை வந்தது. இக்குழு நெதர்லாந்தை தளமாகக் கொண்ட (NEDECO என அழைக்கப்படும்) ஒரு சுயாதீன ஆலோசனை நிறுவனத்தைப் பயன்படுத்தி திட்டத்திற்கான உறுதியான செயலாக்க உத்தியை உருவாக்க பரிந்துரைத்தது. அதன்படி NEDECO ஆலோசகர்கள் தங்கள் அறிக்கைகளை 1975 இல் அரசாங்கத்திடம் சமர்ப்பித்தனர். அதனைத் தொடர்ந்து மகாவலி அபிலிருத்தித் திட்டத்திற்கான முதற்கட்டப் பணிகள் தொடங்கின.

1977 இல் இலங்கையில் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் இத்திட்டத்தில் பாரிய திருப்பு முனையாகும். ஆட்சிக்கு வந்த வலதுசாரி ஐக்கிய தேசியக் கட்சியானது இத்திட்டத்தை விரைவுபடுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டமாக மாற்றியது. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் செயற்பாடுகள் மாற்றமடைந்து கொண்டிருக்கும் அரசியல் பின்னணியில் வடிவமைக்கப்பட்டமையை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். மேற்குலக சார்பான வலதுசாரி ஆட்சிக்கு நிதியளிக்க சர்வதேச நன்கொடையாளர்கள் தயாராக இருந்தனர். குறிப்பாக முக்கிய திட்டங்களுக்கு நிதியளிப்பதன் மூலம் திட்ட அமுலாக்க காலக்கெடுவை விரைவுபடுத்த முயன்றனர். உலக வங்கி இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்குத் தேவையான பெரும்பான்மையான நிதியை வழங்கியது மட்டுமல்லாமல், இத்திட்டத்திற்கான மேம்பாட்டு உதவி ஒருங்கிணைப்பாளராகவும் செயல்பட்டது.

மகாவலி அபிவிருத்தித் திட்டமானது, இலங்கையின் வரலாற்றில் மிகப்பெரிய பல்நோக்கு தேசிய அபிவிருத்தித் திட்டமாகும். இது திட்டமிடப்பட்ட காலப்பகுதியில், உலகில் எங்கும் காணப்படாத நீர் தொடர்பான மிகப்பாரிய அபிவிருத்தித் திட்டங்களில் ஒன்றாக இருந்தது. இந்தத் திட்டமானது மகாவலி ஆற்றின் குறுக்கே 12 நீர்த்தேக்கங்களை நிர்மாணித்தது (மகாவலியின் வடிகால் படுகை நாட்டின் மொத்த நிலப்பரப்பில் ஐந்தில் ஒரு பங்கை உள்ளடக்கியது). அதன் நீரை வெவ்வேறு வழிகளில் திருப்பிவிடுவதை நோக்காகக் கொண்டது. திசை திருப்பப்பட்ட நீர் இரண்டு வழிகளில் பயன்படுத்தப்படுகிறது: (1) நாட்டில் புதிய பகுதிகளுக்கு நீர்ப்பாசனம் செய்ய, (2) விசையாழிகள் மற்றும் மின் உற்பத்தி நிலையங்களின் கட்டுமானத்தின் மூலம் நீர் மின்சாரத்தை உருவாக்க.

12 முக்கிய நீர்த்தேக்கங்களின் கட்டுமானத்தில் 8 நீர்ப்பாசனத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டது; 4 நீர் மின் உற்பத்திக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இது 3 முக்கிய கட்டங்களாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டது, ஒவ்வொரு கட்டத்திலும் 3 துணைத் திட்டங்கள் இருந்தன. மகாவலி

ஆற்றின் நீரைப் பயன்படுத்தி கிட்டத்தட்ட 400,000 ஹெக்டேர் (1,000 சதுர கி.மீ.) நீர்ப்பாசனத்தை உருவாக்குவதை மகாவலி அபிவிருத்தியின் பிரதான திட்டம் முன்மொழிந்தது. இத்திட்டமான மகாவலி ஆற்றில் ஓடுகின்ற வழித்தடத்தில் இரண்டு வகையான இடங்களைத் தெரிவு செய்தது. முதலாவது, நீர்ப்பாசனக் கூறுக்கான நீர் உட்கட்டமைப்பை உடைய நீர்ப்பாசனம் கிடைக்கின்ற நிலப்பரப்பு. இரண்டாவது, முன்பு நீர்ப்பாசனம் செய்யப்படாத வறண்ட நிலங்களின் பரப்பளவு. நீர்ப்பாசன நிலப்பரப்புகளின் புதிய விரிவாக்கம் சிஸ்டம்ஸ் எனப்படும் 13 துணைப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அகரவரிசைப்படி சிஸ்டம் A முதல் சிஸ்டம் M வரை பெயரிடப்பட்டது. இந்த 13 நீர்ப்பாசன அமைப்புகளில் ஒவ்வொன்றும் பிளாக்ஸ் எனப்படும் பல சிறிய அலகுகளாகப் பிரிக்கப்பட்டன. ஒட்டுமொத்த வடிவமைப்பில் உள்ள ஒவ்வொரு அமைப்பும் அளவில் வேறுபடுவதால், ஒரு அமைப்பிற்கு தொகுதிகளின் எண்ணிக்கையை நிர்ணயிக்கவில்லை. இத்திட்டத்தில் உள்ள சில பெரிய அமைப்புகள் 10 தொகுதிகளைக் கொண்டிருந்தன. அதே சமயம் சிறிய அமைப்புகள் ஒவ்வொன்றும் 25 தொகுதிகள் வரைக் கொண்டிருந்தன. எவ்வாறாயினும், நீர்ப்பாசன அமைப்புகளின் தொகுதிகள் சிறிய அலகுகள் அல்ல. ஒவ்வொரு தொகுதிக்கும் இன்னும் சிறிய அளவிலான பல அலகுகள் இருந்தன. இந்த அலகுகள் நீர்ப்பாசன அமைப்பின் உண்மையான கட்டுமானத் தொகுதிகளாக இருந்தன. மகாவலி ஆற்றில் இருந்து திருப்பிவிடப்பட்ட நீருக்கான இறுதி நிறுத்தமாக விவசாய நிலம் இருந்தது.



படம் 3

இத்திட்டத்தின் வழியாக நிறுவப்பட்ட நீர்மின் துறை, நீர்ப்பாசனத் துறையை விட மிகக் குறைவான சிக்கல்களை உள்ளடக்கியதாக இருந்தது. மகாவலி ஆற்றில் இருந்து நீரைத் திருப்பிவிடும் 12 முக்கிய நீர்த்தேக்கங்களில் 4ஐ மையமாகக் கொண்டு இந்த நீர்மின் வளாகம் அமைந்துள்ளது. நீரின் ஓட்டத்தைத் திசை திருப்பிய பிறகு, இந்த நீர்த்தேக்கங்கள் அதை மிக அதிக அழுத்தத்தில் நிலத்தடி சுரங்கப்பாதை வழியாக அனுப்புகின்றன. நீரோடைகளால் உருவாக்கப்படும் அழுத்தம், விசையாழிகளின் பயன்பாடு மூலம் நீர்மின்சாரத்தை உருவாக்க பயன்படுத்தப்படும். சுமார் 500 மெகாவாட்களை (வருடாந்தம்) தொடர்ந்து உற்பத்தி செய்யும் அதே வேளையில், மகாவலியின் நீர்மின்சார வளாகத்திலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் இலங்கையின் தேசியத் தேவைகளில் 5 சதவீதத்தையே பூர்த்தி செய்கிறது. இதன் பொருள், திட்டத்தின் நீர்மின் கூறு அதன் நீர்ப்பாசனக் கூறுகளுடன் ஒப்பிடும் போது ஒப்பீட்டளவில் சிறியதாக இருந்தது. மகாவலி அபிவிருத்தித் திட்டத்தால் பாதிக்கப்பட்ட நிலப்பரப்பு மற்றும் மக்களை விவரிப்பது எளிதான காரியம் அல்ல, ஏனெனில் அதன் செல்வாக்கு நாடு முழுவதும் பரவியுள்ளது.

## மேற்கிலிருந்து தெற்குக்கு : பிரதியிடலின் பலாபலன்கள்

*இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் உலகளாவிய ரீதியில் இரண்டு விடயங்கள் முக்கியமானவை. முதலாவது பல கொலனித்துவ நாடுகள் விடுதலை அடைந்தன. இரண்டாவது மேற்குலகில் வெற்றியளித்த மாதிரிகள் - குறிப்பாக அபிவிருத்தி - மூன்றாமுலக நாடுகளுக்கு (உலகின் தெற்கிற்கு) கடத்தப்பட்டு பிரதி பண்ணப்பட்டது. மகாவலித் திட்டமும் அதற்கு விலக்கல்ல. இத்திட்டமானது இதுவரை வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டிய முன்னணி பாரிய நீர்த் திட்டங்களில் ஒன்றாகவும், உலகின் மிகப்பெரிய வளர்ச்சித் திட்டங்களில் ஒன்றாகவும் உள்ளது. எனவே இரண்டு கதையாடல்களின் வழி இதை அணுக முடியும். ஒன்று, ஒரு நீரியல் சார் கதையாடலின் வழி, மற்றையது, அபிவிருத்திக் கதையாடலின் வழி.*

*நீரியல் பார்வையில், மகாவலி அபிவிருத்தித் திட்டமானது மேற்குலகிலிருந்து தெற்கிற்கு நீர்தொழில்நுட்ப பரிமாற்றத்தின் (விவசாய விரிவாக்கத்தை நோக்கிய) ஒரு சுவையான நிகழ்வாகும். ஏனெனில் இது அக்காலத்தின் வரலாற்று வரைபடத்தோடு பொருந்தி வருகிறது. 1930 கள் மற்றும் 1940 களில் தொடங்கி, சீனா, அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், பிரேசில், தென்னாப்பிரிக்கா, மெக்சிகோ மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளில் ஆயிரக்கணக்கான அணைகள் கட்டப்பட்டு, உலகம் முழுவதும் பெரிய அணைகளின் கட்டுமானம் பெருகியது. மேலும், பெரிய அணைத் திட்டங்களுக்கு நாடுகடந்த நட்பும் அதற்கான ஆதரவாளர்களின் கூட்டு என்பனவும் தோற்றம் பெற்றன. இதனால் இந்தச் செயல்முறையின் ஆரம்ப ஆண்டுகளில் அதிகளவில் நாடுகள் இணைந்து செயலாற்றத் தொடங்கின. உலகளவில் அணை கட்டுவது பற்றிய அறிவை மாற்றுவதற்கு வசதியாக 1929 ஆம் ஆண்டில் பெரிய அணைகளுக்கான சர்வதேச ஆணையம் (International Commission on Large Dams) என்ற உலகளாவிய தொழில்முறைச் சங்கம் நிறுவப்பட்டது. இதனால் 'பெரிய அணை'கள் சகாப்தத்தின் ஆரம்ப ஆண்டுகளில் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டது. இது மகாவலி அபிவிருத்தித் திட்டத்தைப் பல வழிகளில் பாதித்தது.*

*பெரிய அணைகள் பற்றிய அதீத அக்கறையானது பெரிய அணைக் காலகட்டம் (Big Dam Era) என்று அழைக்கப்பட்ட ஒரு காலப்பகுதிக்கு எடுத்துச் சென்றது. பெரிய அணைகள் மூலம் தண்ணீரைக் கட்டுப்படுத்தும் பாரிய நீர்த் திட்டங்கள் மக்கள் கற்பனையைப் பிடிக்கத் தொடங்கின. 1960 களில் அணைக் கட்டுமானம் தீவிரமடைந்தது. மூன்றாமுலக நாடுகளில் அது நிதி மூலதனத்தோடும் ஜனநாயக மறுப்போடும் பின்னிப் பிணைந்ததாக இருந்தது. இந்நாடுகளில் மேற்குலக நடைமுறைகள் எதுவித விமர்சன நோக்குமின்றிப் பிரதிசெய்யப்பட்டன.*

*அபிவிருத்தி கதையாடலின் வழி நோக்குவதாயின், இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய அபிவிருத்திச் சிந்தனையின் கண்ணோட்டத்தில், மகாவலி அபிவிருத்தித் திட்டம் என்பது வளர்ந்து வரும் சர்வதேச அபிவிருத்தித் தொழிலின் அரசியலுக்கு ஊக்கமளிக்கும் உலகின் முதல் பெரிய அளவிலான வளர்ச்சித் திட்டங்களில் ஒன்றாகும். இந்த திட்டம், அதன் வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தலானது இலங்கையின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலின் மூலக்கல்லாகும். ஏனெனில் இலங்கை அபிவிருத்தியை எவ்வாறு கண்டது என்பதற்கு இந்த அபிவிருத்தித் திட்டமே சான்று. இதன் ஆரம்பகாலத்தில் இலங்கையின் மொத்தத் தேசிய மூலதன அபிவிருத்தி நிதியில் 30 வீதம் ஒதுக்கப்பட்டது. அதேபோல இந்த அபிவிருத்தித் திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்த்திய இன்னொரு அம்சம், அரசாங்கமானது திட்டத்தை நிர்வகிப்பதற்கு தேசிய அமைச்சு ஒன்றை உருவாக்கியமையாகும். அது பின்னர் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு என அழைக்கப்பட்டது.*

*மகாவலி அபிவிருத்தித் திட்டமானது மேற்சொன்ன இரண்டு கதையாடல்களாலும் இடைவெட்டப்பட்ட செல்வாக்குக்கு உட்பட்ட ஒன்றாகவே இருக்கின்றது. பாரிய நீர்த்திட்டங்களின் எழுச்சியானது அபிவிருத்தித் துறையின் எழுச்சியுடன் நெருக்கமாகப்*

பிணைந்துள்ளது. அமெரிக்காவின் டென்னசி பள்ளத்தாக்கு ஆணையத் திட்டம் (Tennessee Valley Authority Project), முதலாவது பாரிய நீர்த் திட்டமாகக் கருதப்படுகிறது. இதனைப் பின்பற்றியே சர்வதேச அபிவிருத்தி உதவிகளின் பெயரால் உலகெங்கும் பல்வேறு நீர்த் திட்டங்கள் உருவாகின. இதனால் இது 'வளர்ச்சித் திட்டங்களின் முன்னோடி' என்று அழைக்கப்பட்டது. இது நீர் மேலாண்மையின் தத்துவங்கள் எந்த அளவிற்கு அபிவிருத்தி குறித்த பார்வைகளால் வழிநடத்தப்படுகின்றன என்பதை நிரூபிக்கிறது. பாரிய நீர்த்திட்டங்கள், அபிவிருத்தியின் நவீனமயமாக்கல் கோட்பாடுகளால் செல்வாக்குக்குள்ளாகின்றன என்பதை இதனூடே அடையாளம் காணலாம். ஏனெனில் இந்த நீர்த்திட்டங்கள் இரண்டு கோட்பாட்டு நோக்கங்களைக் கொண்டுள்ளன. முதலாவது, சமூகங்கள் நவீனத்திற்கு முந்தைய நிலையில் இருந்து நவீனத்திற்கு மாறுவதற்கான வாய்ப்பாக இத்திட்டங்கள் நோக்கப்படுகின்றன. இரண்டாவது, அம்மக்களின் நிலை என்பது பொருளாதார வளர்ச்சியின் புள்ளிவிவரங்களின்படி மதிப்பிடப்படுகிறது. இவையிரண்டும் நவீனத்துவ, தாரண்மைவாத பொருளாதர அடிப்படைகளைக் கொண்ட அபிவிருத்திக் கோட்பாடுகளால் வடிவமைக்கப்பட்டவை.

1950 களின் பிற்பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தி, தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் வருடாந்த வளர்ச்சி விகிதங்கள் ஆகியவை நாடுகளை மதிப்பிடும் அளவுகோல்களாகின. இவை 'அபிவிருத்தி'யை தீர்மானிக்கும் முக்கிய அளவீடுகளாக மாறின. அபிவிருத்தி தொடர்பான இந்த மேலாதிக்க உணர்வுகள் உலகளாவிய தெற்கு நாடுகளில் பாரிய நீர்த் திட்டங்களின் விரைவான வளர்ச்சியைச் சாத்தியமாக்கின. இதற்கு பல காரணங்கள் இருந்தன.

முதலாவதாக, அபிவிருத்தியின் நவீனமயமாக்கல் கோட்பாடுகள் அமெரிக்கா போன்ற நாடுகளை வளர்ச்சி ஏணியின் உச்சியில் நிலைநிறுத்தியது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு ஒரு குறிகாட்டியாக அமெரிக்காவின் வளர்ச்சி காட்டப்பட்டது. இதன்மூலம் உலகளாவிய தெற்கு நாடுகள் (இலங்கை உட்பட) பெரும்பாலும் அமெரிக்கத் திட்டங்களில் இருந்து நீர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் மற்றும் நிர்வாக மாதிரிகளை இறக்குமதி செய்வதன் மூலம் அமெரிக்க பாணியிலான 'அபிவிருத்தியை' அடைய முடியும் என நம்பின.

இரண்டாவதாக, 'ட்ரூமன் கோட்பாடு' எனப்படும் அமெரிக்க அயலுறவுக் கொள்கையின் ஒரு பகுதியாக, அமெரிக்கா தனது நீர்த் தொழில்நுட்பங்கள் மற்றும் நிர்வாக மாதிரிகளை உலகளாவிய தெற்குக்கு தீவிரமாக ஏற்றுமதி செய்தது. கெடுபிடிப்போரின் போது சோவியத் புவிசார் அரசியல் விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்தும் அரசியல் நோக்கத்தையும் ட்ரூமன் கோட்பாடு கொண்டிருந்ததால், அமெரிக்கா தனது வளர்ச்சிக் கொள்கைகளை இலங்கை, இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்ற அணிசேரா நாடுகளுக்கு விநியோகிப்பதில் சிறப்பு அக்கறை எடுத்தது.

மூன்றாவதாக, பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதில் அபிவிருத்திப் புள்ளிவிபரங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. நீர், நிலம் மற்றும் மனித உழைப்பு அனைத்தும் 'அளவிடக்கூடிய விவசாய உள்ளீடுகளாக' மொழிபெயர்க்கப்பட்டு அவற்றின் பொருளாதார உற்பத்தித்திறனை மதிப்பீடு செய்கின்றன. திட்டமிடுபவர்கள் விவசாய உற்பத்தியை திட்டத்தில் உள்ளீடு செய்யப்படும் தண்ணீரின் அளவோடு தொடர்புபடுத்துகிறார்கள். தண்ணீரை அவர்கள் எண்ணெய் போன்ற ஒரு 'பண்டமாகப்' பார்க்கத் தொடங்குகிறார்கள். அதாவது விவசாயத்தை தீவிரப்படுத்துவதற்கான ஒரு துணைப்பொருளாக தண்ணீரைக் கருதினர். இவ்வாறு, பாரிய நீர்த்திட்டங்கள் அபிவிருத்தி குறித்து 'கட்டமைக்கப்பட்ட வியாக்கியானத்தால்' ஒழுங்குபடுத்தபட்டவையாக இருந்தது. இது அபிவிருத்தியை ஒரு நாட்டின் அளவிடக்கூடிய பொருளாதார வளர்ச்சியுடன் சமன்படுத்துகிறது. பாரிய நீர்த்திட்டங்களில் நீர், அபிவிருத்தி மற்றும் பொருளாதார வளர்ச்சியை இணைக்கும் இந்த வழியானது மூன்றாமுலக நாடுகளை மிக மோசமாகப் பாதித்துள்ளன என்பதை பல அபிவிருத்தி ஆய்வுகள் எடுத்துக்காட்டியுள்ளன. இந்த வகைக்குள்ளேயே மகாவலி அபிவிருத்தித் திட்டத்தையும் நோக்க வேண்டும். ஆனால் இலங்கையில் அதுகுறித்த கதையாடல்கள் நிகழவில்லை.

மூன்றாமுலக நாடுகளில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொழில்நுட்பச் சிக்கல்களுக்கு தொழில்நுட்ப தீர்வுகளாகத் தோன்றினாலும் அவை உண்மையில் வளங்களை யாருக்கு எதற்காக ஒதுக்குவது என்ற அரசியல் முடிவுகளாலேயே தீர்மானிக்கப்படுகின்றன என்பதை ஜேம்ஸ் பெர்குசன் விரிவான எடுத்துக் காட்டியுள்ளார். அபிவிருத்தியின் பெயரால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் அனைத்திலும் மறைக்கப்பட்ட ஒரு அரசியல் அம்சம் உள்ளார்ந்ததாக இருந்துள்ளது.

இங்கு இன்னொரு முக்கிய கேள்வியொன்று எழுகிறது : நவீனத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல்களால் வடிவமைக்கப்படும் பாரிய நீர்த் திட்டங்களால் என்ன வகையான விளைவுகள் ஏற்படக்கூடும்? நவீனத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல்களால் ஈர்க்கப்பட்ட பாரிய நீர்த்திட்டங்கள் 'இயற்கையையும்' 'சமூகத்தையும்' வெவ்வேறானதாகப் பிரித்து, இயற்கையை காட்டுமிராண்டித்தனமாகவும் மனிதகுலத்திற்கு எதிரானதாகவும் சித்தரிப்பதன் மூலம் சமூகத்தின் எதிரியாக இயற்கையைக் கட்டமைத்தன.

இதன்மூலம் இயற்கைக்குச் செய்யப்படும் அநீதிகளை நீதியாக்கின. இதன் மூலம் காடழிப்பு, விலங்குகள் அழிப்பு, இயற்கை நிலையில் ஏற்படுத்தப்படும் கட்டாயமான மாற்றங்கள் அனைத்தும் நியாயப்படுத்தப்பட்டன. அதேவேளை இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் இடங்களில் உள்ள மக்களிடம் இருக்கின்ற நிர்வாகத்தின் பன்முகத்தன்மை மற்றும் அறிவு வடிவங்களை முழுவதுமாக அழிக்க முனைகின்றன.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்திலும் இதுவே நடந்தது. இத்திட்டத்தின் பிரதான திட்ட வடிவமைப்பானது குறைந்தது நான்கு தனித்தனி நிறுவனங்களின் (UNDP, FAO, NEDECO மற்றும் உலக வங்கி) ஒருங்கிணைந்த தயாரிப்பாகக் காணப்பட்டது. ஆனால் இதன் இறுதி வடிவமைப்பானது அமெரிக்காவின் டென்னசி பள்ளத்தாக்கு திட்டத்தின் வடிவமைப்பின் மிக நெருக்கமான பிரதியாகவும் அதனது தழுவலாகவும் இருந்தது. இது ஏன் நடந்தது என்பதை நோக்குவது முக்கியமானது.

### பிரதி பண்ணலின் பாதகங்கள்

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் பிரதான திட்டமானது, டென்னசி பள்ளத்தாக்கு ஆணையத்தின் திட்டத்தை ஒத்திருந்ததில் வியப்பில்லை. இரண்டு அமைப்புகளும் அதன் மூலத்திலிருந்து (ஆற்றுப் படுகை) இறுதிப் புள்ளிக்கு (விவசாய வயல்களுக்கு) தண்ணீரைக் கொண்டு செல்ல நேர் - கோட்டுப் புவியீர்ப்பு அடிப்படையிலான வலைப்பின்னல் வடிவமைப்புகளைப் பயன்படுத்துகின்றன. இரண்டு திட்டங்களிலும், பெரிய பல்நோக்கு அணைகள் மற்றும் நீர்த்தேக்க வளாகங்களில் நீர் உருவாகிறது. மேலும் இது ஒரு பெரிய நீர்ப்பாசன இடத்தில் படிப்படியாக விநியோகிக்கப்படுகிறது. (பார்க்க படம்-1)

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் வடிவமைப்புகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதில் இலங்கையின் நீர்ப்பாசன அமைச்சைப் பிரதிநிதித்துவப்படுத்திய உள்ளூர் நிபுணர்கள் டென்னசி பள்ளத்தாக்கு திட்டத்தின் செல்வாக்குக்கு உள்ளாகியிருந்தனர். ஏனெனில் கல்ஓயா திட்டத்திற்கு வருகை தந்த சர்வதேச பொறியியல் நிபுணர்கள் டென்னசி பள்ளத்தாக்கு திட்டம் பற்றிய சிந்தனைகளை இலங்கை நிபுணர்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளனர். இலங்கை வந்த நிபுணர்களின் முயற்சிகளின் ஒரு பகுதியாக, இலங்கை நீர்ப்பாசனப் பொறியியலாளர்களுக்கு நீர் முகாமைத்துவம் தொடர்பில் பயிற்சியளித்தனர்.

> **மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் பாதிப்புகள் பல தசாப்தங்கள் கடந்தும் இலங்கையர்களை வதைப்பது போலவே, சர்வதேச நாணய நிதியம் முன்மொழியும் தீர்வுகளும் எம்மை வதைக்கும்.**

டென்னசி திட்டமானது, நீரை ஒரு வளமாகவும் பண்டமாகவும் பார்த்தது. அதன் நீரியல் சுழற்சியானது நீர் பற்றிய கருத்தை மிகவும் சுருக்கமான பொருளில் விளக்குகிறது. இதனால்

நீர் என்பது இருக்கின்ற அல்லது பயணிக்கின்ற பாதையின் புவியியல், சூழலியல், சமூகவியல் தன்மைகளைப் புறக்கணிக்கிறது. இது புவிசமூகச் சூழல்களில் இயல்பாகவே அடித்தளமாக இருக்கும் நீர் தொடர்பான அறிவுக்கு முற்றிலும் மாறுபட்டது. இது சமதரையான ஒரு பிரதேசத்தில் நீர்ப்பாசனத்தை மேற்கொள்ளல் என்ற எடுகோளை மையமாகக் கொண்டது. இது நிலவியல் சிக்கல் தன்மைகளை மறுக்கிறது. இதனால் இது தொடர்பான பொறியியல் திட்டமிடலும், கொள்கை வகுப்பும் இலகுவானதாக அமைவதோடு அனைத்து நிலப்பகுதிகளுக்கு ஒரே தீர்வை முன்வைக்கிறது. இதையே மகாவலித் திட்டத்தின் போது இலங்கைக் கொள்கை வகுப்பாளர்கள் பற்றிக் கொண்டார்கள்.

டென்னசி திட்டத்தின் மாதிரியைப் பின்பற்றி மகாவலித் திட்டத்தில் நிலவியல் மாற்றங்களை கொள்கை வகுப்பாளர்கள் முன்மொழிந்தார்கள். டென்னசி நீர்ப்பாசன முறையானது எளிய, சமமான சூத்திரங்களின் வழி நடாத்தப்பட்டது. அதையே இலங்கையிலும் பின்பற்ற முயன்றார்கள். இதன்படி டென்னசி திட்டத்தில், சில எல்லை நிலைகளின் அடிப்படையிலான பல எளிய சூத்திரங்கள் (வயற் பயிர்கள் அவற்றின் வாழ்க்கைச் சுழற்சியின் போது உட்கொள்ளும் நீரின் அளவைக் கணக்கிடுவது போன்றவை) கொள்கைத் திட்டமிடலுக்கு பயிர் செய்யக்கூடிய ஹெக்டேர் எண்ணிக்கையைக் கணக்கிட அனுமதிக்கும். இதற்குத் தேவையான குறிப்பிட்ட அளவு தண்ணீர், உரம், விளைச்சல் என்பன குறித்த ஒரு எதிர்வு கூறலைப் பெறவியலும். இது அமெரிக்காவின் நிலைமைகளுக்குப் பொருத்தமானது. ஆனால் இது இலங்கைக்குப் பொருத்தமானதல்ல. டென்னசி திட்டமானது நீரை அதன் மூலத்திலிருந்து இறுதிப் புள்ளிக்குக் கொண்டு செல்வதற்கு *straight - lined gravity - based network* வடிவமைப்புகளைக் கொண்டுள்ளது. இந்த முறையானது நீரின் உள்ளீடு மற்றும் வெளியீட்டைக் கணக்கிடுவதை ஒப்பீட்டளவில் எளிதாக்குகிறது. ஆனால் இலங்கை போன்ற மிகவும் சிக்கலான நீர் மேலாண்மை அமைப்புகளில் இவ்வாறான கணிப்பீடுகள் சாத்தியமில்லை.

இலங்கை பல்லாயிரம் ஆண்டுகள் பழமையான சிக்கலான நீர் அமைப்பைக் கொண்டிருக்கிறது. இது தொட்டிகளின் வலையமைப்பை (கேஸ்கேட்ஸ் என அழைக்கப்படும்) உள்ளடக்கியது. அங்கு தண்ணீர் முதலில் சிறிய தொட்டிகளில் நிரம்பிப் பின்னர் படிப்படியாக பெரிய தொட்டிகளை நிரப்புகிறது. இவ்வகையான நீர்ச் சேகரிப்பு அமைப்பில் நீர் பயன்பாட்டிற்கான டென்னசியின் சூத்திரங்களைப் பயன்படுத்துவது எளிதல்ல. ஆனால் டென்னசியின் சூத்திரங்களின் அடிப்படையிலேயே மகாவலி அபிவிருத்தித் திட்டம் முன்னெடுக்கப்பட்டது துன்பியல்.

விரைவாக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தியை காமினி திசாநாயக்க தலைமையில் அரசாங்கம் முன்னெடுத்த போது உலக வங்கியின் தாளத்திற்கு ஆடுவதே நோக்காக இருந்தது. ஏனெனில் நீண்டகால நோக்கில் திட்டமிடப்பட்ட இந்தத் திட்டத்தை 5 ஆண்டுகளில் முடிக்க அரசாங்கம் முடிவு செய்தது. அரசாங்கம் முட்டாள்தனமான நாட்டின் அனைத்துப் பிரச்சனைகளுக்குமான சர்வரோக நிவாரணியாக துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தைக் கருதியது. இதைப் பாராளுமன்றில் அரசாங்க உறுப்பினர்கள் ஆற்றிய உரைகளில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

இலங்கை அரசாங்கம் குறிப்பாக நாட்டிற்கான நீர்ப்பாசனத்தை மையமாகக் கொண்ட திட்டத்தைக் கோரவில்லை. மாறாக, ஒட்டுமொத்த அபிவிருத்தியை விரைவுபடுத்துவதற்கான வழியைத் தேடியது. எனவே, உலக வங்கியும் ஏனைய சர்வதேச நிறுவனங்களும் (தேசிய அரசாங்கத்திற்கு மாறாக) இலங்கையர்கள் எதிர்கொள்ளும் வேலையின்மை, உணவு மற்றும் எரிசக்தி போன்ற நெருக்கடிகளுக்கு மொத்த அபிவிருத்தித் தீர்வாக நீர்ப்பாசனத்தை மையமாகக் கொண்ட நீர்த் திட்டத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். 1960 களில் புதிதாக உருவாகி வரும் ‘அபிவிருத்தித் தொழிற்றுறை” அமெரிக்காவை மையமாகக் கொண்ட நீர் தொழில்நுட்ப வல்லுனர்களின் வலையமைப்புகளால் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டது என்பதை இது நிரூபிக்கிறது, அந்த வகையில் இலங்கைக்கான

மகாவலித் திட்டத்தின் விளைவால் இன்றும் இலங்கையர்கள் பல்வேறுபட்ட சிக்கல்களையும் சவால்களையும் எதிர்நோக்கி வருகிறார்கள்.

செங்குத்தான சரிவுகளில் சேனைப் பயிர்ச்செய்கைக்காக காடுகளை அழிப்பதும், அப்பகுதியில் நிலவும் உயர் நீர்நிலையும் சேர்ந்து மண்ணரிப்புகளையும் நிலச்சரிவுகளை ஏற்படுத்துகின்றன.

காடுகளை அழிப்பதால், மேல்நிலை மற்றும் கீழ்நிலைப் பகுதிகளில் வனவிலங்குகளின் வாழ்விடங்களில் குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளன.

அபிவிருத்தியானது டென்னசியின் உருவத்தில் நாட்டின் நீர்ப்பரப்பை மறுவடிவமைப்பதன் மூலம் மட்டுமே அடையக்கூடியதாகக் கருதப்பட்டது.

மகாவலி அபிவிருத்தியைத் திட்டமிடுபவர்கள் டென்னசி முறைக்கு ஏற்றபடி செயற்படுவதற்காக ஏற்கனவே இருந்த நீரியல் - சமூக நிலப்பரப்பை மறுவடிவமைக்க முடிவெடுத்தனர். அதிக எண்ணிக்கையிலான உள்ளூர் தொட்டிகள் இடிக்கப்பட்டன. இது இலங்கையின் பாரம்பரிய நீரேந்து நிலைகளைச் சிதைத்தது. தொட்டிகளுக்கு மேலதிகமாக, இலங்கையின் உலர் வலயத்தை வகைப்படுத்தும் பல சுற்றுச் சூழல் மற்றும் நிலப்பரப்பு அம்சங்களும் மறுவடிவமைப்பு செயல்முறையின் மூலம் அழிக்கப்பட்டன. ஏனென்றால், டென்னசியில் பயன்படுத்தப்படும் நேர்கோட்டு மேற்பரப்பு நீர்ப்பாசனம் டென்னசியில் நன்றாக வேலை செய்திருந்தது (டென்னிசி பள்ளத்தாக்கின் நிலப்பரப்பு ஒப்பீட்டளவில் சமமாகவும் ஒரே மாதிரியாகவும் இருந்தது). ஆனால் இலங்கையின் மேற்பரப்பின் சீரற்ற தன்மை மற்றும் அதிக அளவிலான வரையறைகள் ஆகியவற்றால் அது இலங்கையில் வேலை செய்யவில்லை. மேலும் நிலப்பரப்பை முன்கூட்டியே ஒருமைப்படுத்துவதற்கான முயற்சி (மேற்பரப்பு மட்டத்தில் கூட முழுமையாக உணரப்படாத ஒரு முயற்சி. நிலத்தடி நீரின் இயக்கத்தை முற்றிலுமாகப் புறக்கணித்தது) மகாவலித் திட்டத்தில் உள்ள பல்வேறு நீர்ப்பாசன சமூகங்கள் வெவ்வேறு அளவு தண்ணீரைப் பெறுவதற்கு வழிவகுத்தது. இது அவர்களின் வாழ்வாதாரத்தில் பெரும் பாதிப்பையும் ஏற்படுத்தியது.

தண்ணீரை நிர்வகிப்பதற்கான மகாவலித் திட்டத்தின் அணுகுமுறையானது நுகர்வு, வழங்கல், தேவை மற்றும் லாபம் ஆகிய தாராளவாதப் பொருளாதாரக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது. மகாவலி செயல்திட்டத்தின் நீர் இருப்பு பற்றிய பகுதிக்கான ஆரம்ப வாக்கியம் பின்வருமாறு அமைகிறது : “நுகர்வு மற்றும் நுகர்வு அல்லாத பயன்பாடுகள் மற்றும் நீர் வழங்கல் ஆகிய இரண்டிற்கும், மகாவலி ஆற்றுப் படுகையிலிருந்தும் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட நீர்ப்பாசனப் பகுதிகளுக்குள்ளும் நீர் தேவைக்கு இடையேயான சமநிலையை பேணுவதே இதன் அணுகுமுறையாகும்.” டென்னசி முறை இலாபத்தை மையமாகக் கொண்டதனடிப்படையில் மகாவலியும் அதே அணுகுமுறையைப் பின்பற்றியது. ஆனால் அரசாங்கம் மகாவலியை அனைத்துவிதமான அபிவிருத்திச் சவால்களுக்குமான தீர்வாகக் கண்டது முரண்நகை.

## இறந்தகாலம் தந்த எதிர்காலம்

மகாவலித் திட்டத்தின் விளைவால் இன்றும் இலங்கையர்கள் பல்வேறுபட்ட சிக்கல்களையும் சவால்களையும் எதிர்நோக்கி வருகிறார்கள். அவற்றைச் சுருக்கமாகப் பார்க்கலாம். பல நீர்த்தேக்கங்களில் முன்கூட்டிய வண்டல் மண் படிகிறது. செங்குத்தான சரிவுகளில் சேனைப் பயிர்ச்செய்கைக்காக காடுகளை அழிப்பதும், அப்பகுதியில் நிலவும் உயர் நீர்நிலையும்

சேர்ந்து மண்ணரிப்புகளையும் நிலச்சரிவுகளை ஏற்படுத்துகின்றன. காடுகளை அழிப்பதால், மேல்நிலை மற்றும் கீழ்நிலைப் பகுதிகளில் வனவிலங்குகளின் வாழ்விடங்களில் குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ளன. அழிந்துவரும் மற்றும் உள்ளூர் இனங்கள் உட்பட ஏராளமான விலங்குகள் மற்றும் தாவரங்கள் இல்லாது போயுள்ளன. அதிக அளவு வேளாண் இரசாயனங்கள் பயன்படுத்தப்படுவதால், விவசாயத்திற்குத் திரும்பும் நீர் நீர்த்தேக்கங்களில் ஊட்டஞ்செறிதல் (eutrophication) ஏற்படுகிறது. இது தொட்டிகள் மற்றும் பிற நீர்நிலைகளின் பயனுள்ள செயல்பாட்டைக் கெடுக்கின்றன.

மகாவலித் திட்டத்தின் காரணமாக கீழ் நிலையில் உள்ள பகுதிகளில் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. சில பகுதிகளில் உப்புத்தன்மை அதிகரித்தது. விவசாய நடைமுறைகளில் அதிக வேளாண் இரசாயனங்கள் பயன்படுத்தப்படுவதால் இயற்கை நீர் வழிகள் மாசுபடுகின்றன. உயிரிழப்பு மற்றும் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் வன விலங்குகளுடன் மோதல்கள் அதிகரித்துள்ளன.

விரைவுபடுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் தாக்கங்கள் வனவிலங்குகள் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தை விளைவித்தது. இந்தத் திட்டம் தேசிய பூங்கா, சரணாலயங்கள் மற்றும் காடுகளின் வழித்தடங்கள் உள்ளிட்ட பல வனக் காப்பகங்களைக் கண்டறிந்து அறிவித்தாலும், இடம்பெயர்ந்த அல்லது அழிக்கப்பட்ட விலங்கினங்கள், தாவரங்கள் மற்றும் அவற்றின் வாழ்விடங்கள் ஆகியவை முடிவில்லாத அழிவின் நிகழ்ச்சி நிரலாகவே உள்ளன. மனிதத் தலையீட்டால் தற்போதுள்ள வன உயிரினங்களுக்கு இது ஏற்படுத்திய அச்சுறுத்தல்களே இதற்கு முக்கிய காரணமாகும்.

1979 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி கொத்மலை நீர்த்தேக்கத்தினால் சுமார் 590 ஹெக்டேர் நெற்பயிர்களும், 1560 ஹெக்டேர் மலையகப் பகுதிகளும் நீரில் மூழ்கியுள்ளன. இதன் காரணமாக சுமார் 20 மில்லியன் இலங்கை ரூபா பொருளாதாரப் பாதிப்பு ஏற்பட்டது என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அப்பகுதியின் உயிரியல் வளங்கள் அல்லது பல்லுயிர்ப் பெருக்கம் ஆகியவற்றினது அழிவின் செலவு மதிப்பீடு செய்யப்படவில்லை. மேலும், விக்டோரியா திட்டத்தால் 1250 ஹெக்டேர் நெல் நிலங்களும், பழங்கள் மற்றும் கொக்கோ மற்றும் பிற கலப்புப் பயிர்கள் நிறைந்த சுமார் 850 ஹெக்டேர் நிலங்களும் அழிக்கப்பட்டன. மேல் மகாவலி நீர்த்தேக்கங்கள் காரணமாக விக்டோரியாவைச் சேர்ந்த சுமார் 8,000 குடும்பங்களும், கொத்மலைப் பகுதியைச் சேர்ந்த சுமார் 3,200 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன. புதிய வாழிடங்களில் இவர்கள் சவால்களை எதிர்கொள்கிறார்கள்.

மண் பாதுகாப்பு நடவடிக்கையின்றி பல்வேறு விவசாய நடவடிக்கைகளாலும், சாய்வான நிலங்களில் வனச் சீரழிவுகளாலும் சிறிய கிராம நீர்த்தேக்கங்களில் வண்டல் மண் படிக்கின்றன. செங்குத்தான சரிவுகளில் செங்குத்தான பயிரிடுதல், விவசாயத்திற்காக காடுகளை அழித்தல் மற்றும் மத்திய மலைநாட்டில் உள்ள குடியிருப்புகள் ஆகியவை மழை நீரில் மண்ணை வெளிப்படுத்துவதால் தீவிர மண் அரிப்பு ஏற்படுகிறது. அரிக்கப்பட்ட மண், புயல் நீரால் இயற்கை நீர்வழிகளுக்குக் கொண்டு வரப்படுகிறது. இவை அனைத்தும் நீர்த்தேக்கங்களில் வண்டல் மண் படிவதற்கு வழிவகுத்தது.

மகாவலி அபிவிருத்தித் திட்டம் பல வழிகளில் சுற்றுச்சூழல் சீர்கேட்டை ஏற்படுத்தியுள்ளது. புதிய சாலை அமைப்பது மற்றும் திட்டத்திற்கு தேவையான இயந்திரங்களை கொண்டு செல்வது மண் சிதைவை ஏற்படுத்தியது. இந்தச் சாலை அமைப்புகள் இயற்கையான காடுகள் வழியாகவும் சில சமயங்களில் செங்குத்தான தரம் வாய்ந்த நிலங்களிலும் அமைக்கப்பட்டன. பொதுவாக, அதிக வருடாந்த மழை பொழியும் மலையகத்தில், 300 மீ முதல் 1000 மீ உயரத்தில் மண் அரிப்பு வெளிப்படும். இது தவிர, நீர்த்தேக்கப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயக் குடும்பங்கள், உயரமான புதிய குடியிருப்புகளில் உள்ள சாய்வான நிலங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

மலையகத்தில் மண் அரிப்புக் காரணமாக

மகாவலி ஆற்றில் உள்ள அதிகப்படியான பொஸ்பேட்டுகள், நீர்த்தேக்கங்களில் உள்ள பாசிகள் ஆகியன சயனோ பாக்டீரியல் வளர்ச்சிக்கு காரணமாக இருக்கலாம். அசுத்தமான நீர், நீர்வாழ் உயிரினங்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் தீங்கு விளைவிக்கின்றன. 'CKDmfo' நாட்டில் உள்ள ஏராளமான மக்களின் சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையைப் பாதிக்கிறது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் பரிதவிக்கும் நிலையில் உள்ளனர்.

*நீர்த்தேக்கங்களில் வண்டல் மண் படிந்துள்ளது. 1952 முதல் 1982 வரையான காலப்பகுதியில் மேல் மகாவலியிலிருந்து பேராதனை அளவீட்டு நிலையத்தின் ஊடாக 15 மில்லியன் தொன் வண்டல் மண் கொண்டு செல்லப்பட்டுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதில் அதிகளவு வண்டல் மண் பொல்கொல்ல நீர்த்தேக்கத்தில் தேங்கியுள்ளதுடன், 1988 ஆம் ஆண்டில் - அது நிர்மாணிக்கப்பட்டு 12 ஆண்டுகளில் - நீர்த்தேக்கத்தின் மொத்த கொள்ளளவில் 44% வண்டல் மண்ணால் நிரப்பப்பட்டது.*

*தற்போது ரன்தெனிகல மற்றும் ரன்டெம்பே நீர்த்தேக்கங்களிலும் வண்டல் மண் நிரப்பப்பட்டு வருகின்றன. எனவே, அப்பகுதியில் உள்ள இயற்கை நீரூற்றுகளைப் பாதுகாக்க நீர்நிலை மேலாண்மை அவசியம். ஆயிரக்கணக்கான ஆண்டுகால நீர்ச் சேமிப்பு நடைமுறைகளால், பழங்கால கிராமங்களைச் சேர்ந்தவர்கள் கிராம அளவிலான நீர்த்தேக்கங்களைத் தாங்களாகவே சுத்தம் செய்யும் சமூக அமைப்பைக் கொண்டிருந்தனர். இப்போது அது எதுவுமே இல்லை.*

*மகாவலித் திட்டத்தின் விளைவால் காட்டு யானைகள் விவசாயிகளுடன் மோதுகின்றன. காட்டு யானையைத் தவிர்ப்பதற்கான பாரம்பரிய அறிவு புதிதாகக் குடியேறியவர்களுக்கு இல்லை. தவிர்க்க முடியாத மோதலில் மனிதர்களும் யானைகளும் உயிர் இழக்கின்றன. நிலம் இல்லாத காரணத்தால், சில இரண்டாம் தலைமுறைக் குடும்பங்களும் தங்கள் விவசாய நடவடிக்கைகளுக்காக அல்லது குடியிருப்புகளைக் கட்டுவதற்காக காட்டிற்கு இடம்பெயர்ந்தனர். நிலங்களை சேனைப் பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்துதல் மற்றும் பல்வேறு நோக்கங்களுக்காக காடுகளை அகற்றுதல் ஆகியவை யானைகளின் இயற்கை வாழ்விடங்களை இழக்க வழிவகுக்கிறது. யானைகள் இயற்கையாக வாழும் இடங்களுக்காக மனிதனுடன் சண்டையிடுகின்றன. வனச் சீரழிவு காரணமாக காட்டில் உள்ள இயற்கை நீர்நிலைகள் வறண்ட காலங்களில் வறண்டு விடுகின்றன. எனவே, யானைகள் உணவு மற்றும் குடிநீர் தேடி புதிய கிராமங்களுக்கு வருகின்றன. இன்று யானைக்கும் மனிதனுக்குமிடையிலான மோதல் முக்கியமான 'இயற்கை எதிர் மனிதன்' சவாலாகும். மகாவலித் திட்டம் இயற்கைக்கு எதிரானவனாக மனிதனை மாற்றியுள்ளது.*

*நீர் தேங்குவது விவசாய உற்பத்தியில் பல பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகிறது. நீர் மற்றும் உப்பு அளவுகள் அதிகரிப்பதால், ஈரமான மற்றும் வறண்ட பருவகாலப் பயிர்கள் இழக்கப்படுகின்றன. சில பகுதிகள் அண்டை வயல்களில் இருந்து நீர்ப்பாசனம் மூலம் வெளியேற்றப்படும் உப்புகளை உறிஞ்சத் தொடங்குகின்றன. பல விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களை (முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ) கைவிட்டுள்ளார்கள்.*

*1990 களின் நடுப்பகுதியில் இருந்து, இலங்கையின் பல மாகாணங்களில் இருந்து பன்முகத் தோற்றம் கொண்ட நாட்பட்ட சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பதிவாகியுள்ளது. வறண்ட வலயத்திலுள்ள விவசாயப் பகுதிகளை இந்நோய் அதிகமாகப் பாதிக்கிறது.*

பெரும்பாலான பாதிக்கப்பட்ட குடும்பங்கள் ஆழமற்ற கிணறுகள், குழாய்க் கிணறுகள் அல்லது நீரோடைகளில் இருந்து நீரைப் பயன்படுத்துகின்றன. அவை நாட்டின் மிக நீளமான நதியான மகாவலி ஆற்றில் இருந்து நீரைப் பெறுகின்றன. மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக உலர் வலயத்தில் உள்ள பல நீர்த்தேக்கங்கள் பாசன நீரை வழங்குகின்றன. கடந்த மூன்று தசாப்தங்களாக, மலையகத்தில் பொஸ்பேட் உரங்களின் அதிகப்படியான பயன்பாட்டினால் வரும் பொஸ்பேட் உட்பட பல்வேறு கலவைகளால் மகாவலி நதி நீர் மாசுபட்டுள்ளது. மகாவலி ஆற்றின் குடிநீர் பல்வேறு மாசுக்களால் மாசுபட்டுள்ளது. இது 'CKDmfo' எனப்படுத் சிறுநீரக நோயின் வளர்ச்சிக்கு பங்களிக்கின்றது என்று கருதப்படுகிறது.



விக்டோரியா அணையைத் திறந்து வைக்கும் பிரித்தானியப் பிரதமர் மார்க்கிரேட் தச்சர்

Image Source - www.colombotelegraph.com

மகாவலி ஆற்றில் உள்ள அதிகப்படியான பொஸ்பேட்டுகள், நீர்த்தேக்கங்களில் உள்ள பாசிகள் ஆகியன சயனோ பாக்டீரியல் வளர்ச்சிக்கு காரணமாக இருக்கலாம். அசுத்தமான நீர், நீர்வாழ் உயிரினங்களுக்கும் சுற்றுச் சூழலுக்கும் தீங்கு விளைவிக்கின்றன. 'CKDmfo' நாட்டில் உள்ள ஏராளமான மக்களின் சமூக மற்றும் பொருளாதார வாழ்க்கையைப் பாதிக்கிறது. இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் பரிதவிக்கும் நிலையில் உள்ளனர். மகாவலித் திட்டத்தின் கீழ் விவசாயம் ஊக்குவிக்கப்பட்டு எதிர்பார்த்த பலன் கிடைக்காத நிலையில் விளைச்சலை அதிகரிக்க அரசாங்கம் இரசாயன உரங்களையும் பூச்சிக் கொல்லிகளையும் அறிமுகப்படுத்தியது. அதன் தீய விளைவுகளை நாம் இப்போது காண்கிறோம்.

மகாவலித் திட்டம் பற்றிப் பேசுகிற போது, அதிகம் கவனம் பெறாத இன்னொரு அம்சம், இத்திட்டத்தின் பகுதியாக உருவான புதிய நகரங்களும் அதன் திட்டமிலும். இவை குறித்த விரிவான ஆய்வுகள் குறைவு. இந்தப் பகுதிகளில் குடியேறிய மக்கள் இன்றும் எதிர்நோக்கும் சவால்களும் இன்றும் நாட்டின் மிகவும் வளர்ச்சி குன்றிய பகுதிகளாக இந்தப் பகுதிகள் இருப்பதும் ஒரு வலிய செய்தியைச் சொல்கின்றன. மகாவலி அபிவிருத்தித் திட்டம் பலநோக்கு அபிவிருத்தித் திட்டமாகவே முன்னெடுக்கப்பட்டது. ஆனால் அது விரைவாக்கப்பட்ட திட்டமாக மாறிய பின்னணியில் விவசாயம், மின்சார உற்பத்தி என்ற இரண்டு நோக்கங்களைத் தவிர்ந்த அனைத்தும் மறக்கப்பட்டன. அதற்கான சிறந்த உதாரணமாக மகாவலித் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட நகரங்களும் அதற்கான நகரமாக்கல் பொறிமுறைகளும் காணப்படுகின்றன.

## நிறைவுக் குறிப்புகள்

ஒரு அபிவிருத்தித் திட்டம் ஒரு தேசத்தின் தலைவிதியையே மாற்றவல்லது என்பதற்கு நல்லதொரு உதாரணம் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டமாகும். குறிப்பாக

நீண்டகாலத் திட்டமிடலுடன் தொடங்கிய இத்திட்டமானது அரசியற் காரணங்களுக்காக விரைவுபடுத்தப்பட்ட திட்டமாகி இயற்கைக்கும் மக்களுக்கு ஏற்படுத்திய கேடு நிரந்தரமானது. இத்திட்டம் இனத்துவ முரண்பாடுகளைக் கூர்மையாக்கியது. கொலனியாக்கத்தின் பகுதியாகச் செயற்பட்டது. அளவுகடந்த ஊழலுக்கு வழிசெய்தது மற்றும் நிரந்த நோயாளிகளை உருவாக்கியுள்ளது.

இது இயற்கைக்கும் சமூகத்துக்கும் இடையே ஓர் மெய்ம்மையியல் பிளவை உருவாக்கும் அணுகுமுறையின் பகுதியாகும். இயற்கையோடு இயைந்த வாழ்வு தவிர்க்கவியலாதது என்பதை இத்திட்டம் தெளிவாக உணர்த்துகிறது. மேலும் வழக்கமான அபிவிருத்திக் கதையாடலின் வழிப்பட்ட வழக்கமான நீர் மேலாண்மை மற்றும் அபிவிருத்தி அணுகுமுறைகளுக்கு எதிரான முக்கிய சமகால உதாரணமாகத் திகழ்கிறது. 'அபிவிருத்தி' பற்றிய இலங்கை போன்ற மூன்றாமுலக நாடுகளின் சூழலுக்கேற்ற சிந்தனைகளும் செயன்முறைகளும் தேவையாகின்றன. இன்றைய நிலையில் ஒன்றை அனைத்தும் பொருத்த முடியாது. அவ்வாறான தீர்வுகள் (one size fits all) பொருத்தமற்றவை மட்டுமல்ல கேடானவையும் கூட.

## அடிக்குறிப்புகள்

1. இந்தப் பெரிய அணைக் காலகட்டத்தை விளக்கமாகப் பார்க்க: Khagram, S. (2004) *Dams and Development: Transnational Struggles for Water and Power. New York: Cornell University Press.* பிரேசில், இந்தோனேசியா, சீனா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் அனுபவங்களின் வழி எவ்வாறு அபிவிருத்தியின் பெயரால் பாரிய நீர்நிலைத் திட்டங்கள் மக்களைப் பாதித்தன என இந்நூல் எடுத்துக் காட்டுகிறது. நீர் அணுகலை மேம்படுத்தும் நோக்கில் (பாசனம், துப்புரவு அல்லது குடிநீர்த் தேவைக்காக) பாரிய நீர்த் திட்டங்களில் கட்டமைப்பு ஏற்றத் தாழ்வுகளை மறைக்கும் வழக்குகள் ஏராளமாக உள்ளன என்பதை காகிராம் விளக்குகிறார். இந்தோனேசியாவில், பூர்வீகக் குடியேற்றவாசிகளின் மேலாதிக்கத்தை நிலைநாட்ட நீர் தொடர்பான சுகாதாரம் பற்றிய சொற்பொழிவுகள் பயன்படுத்தப்பட்டன. ஆஸ்திரேலியாவில், பொதுச் சுகாதார நடைமுறைகள் மற்றும் மக்கள்தொகை நிர்வாகத்தின் அப்பட்டமான இனவெறிக் கொள்கைகள் 'வெள்ளை' நடத்தை மற்றும் அடையாளங்களை வரையறுக்கவும் வகைப்படுத்தவும் உதவியது. இந்த உதாரணங்கள் காலனித்துவச் சூழல்களுக்கு மட்டுமானவையல்ல. இதற்கு ஒரு வர்க்கப் பரிமாணமும் இருந்தது.
2. இது தொடர்பில் மேலதிக தகவல்களைத் தெரிந்து கொள்ளவும் குறிப்பாக நீரைத் தனியார் மயமாக்குவதன் நோக்கங்கள் குறித்து அறிய: Shiva, V (2002). *Water Wars: Privatization, Pollution, and Profit. Pluto Press* Solomon, S. (2010). *Water: The epic struggle for wealth, power, and civilization. New York: Harper.* Bakker, K. (2010). *Privatizing water: governance, failure, and the world's urban water crisis. New York: Cornell University Press.*
3. பார்க்க: Ferguson, J. (1990). *The antipolitics machine: Development, depoliticization, and bureau cratic power in Lesotho. Cambridge University Press.* இப்புத்தகம் 'நவீனமயமாக்கல்' பற்றிய கதையாடல் உள்ளடக்கியிருக்கின்ற மிகவும் பொதுவான, மிகவும் குழப்பமான செய்திகளை மூன்றாம் உலகத்தின் நிகழ்வுகளின் வழி எடுத்தாளுகிறது. இப்பின்னணியில் பொருளாதார 'அபிவிருத்தி' பற்றிய குறிப்பிடத்தக்க பன்முகப் பார்வையை வழங்குகிறது. உலக வங்கி, உள்ளூர் நிறுவனங்கள் மற்றும் கிராமவாசிகள் எவ்வாறு அபிவிருத்தியின் பெயரால் வெவ்வேறுபட்ட உடன்படாத தவறான புரிதல்களோடு பணிபுரிகிறார்கள் என்பதை பெர்குசன் எடுத்துக்காட்டுகிறார். இதன்வழி இவர் எழுப்பும் மூன்று கேள்விகள் முக்கியமானவை. அபிவிருத்தி என்ன செய்கிறது, அதை யார் செய்கிறார்கள், அது யாருக்கு உண்மையில் பயனளிக்கிறது. வளர்ச்சித் திட்டங்களின் தோல்வியின் அளவை மதிப்பீடு செய்வதிலிருந்தே இவ்வினாக்களுக்கான விடையைக் காண முடியும் என்பது பெர்குசனின் வாதமாகும்.

(தொடரும்)

‘இலங்கையின் அரசியல் 1900 – 1981 : பன்முகநோக்கு‘ என்னும் இத்தொடர் 1900 முதல் 1981 வரையான காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் பற்றிய பன்முக நோக்கிலான கோட்பாட்டு ஆய்வுகளை தமிழ் வாசகர்களுக்கு அறிமுகம் செய்யும் ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்டதாக அமையும். ஆங்கிலத்தில் பருவ இதழ்களிலும் (Journals) அச்சு ஊடகங்களிலும் வெளியான ஆய்வுக் கட்டுரைகளை தழுவியும் சுருக்கியும் தமிழில் எழுதப்பட்டவையாக இக் கட்டுரைகள் அமையவுள்ளன. இலங்கையின் அரசியல் குறித்த பன்முக நோக்கில் (Multi Disciplinary Approach) அமையும் அரசியல் விமர்சனமும் ஆய்வும் என்ற வகையில் அரசியல் கோட்பாடு, சட்டக் கோட்பாடு என்னும் இரண்டையும் இணைப்பனவான உயராய்வுகள் பல ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. மானிடவியல், சமூகவியல், சமூக உளவியல், வரலாறு, அரசியல் ஆளுமைகளின் வாழ்க்கை வரலாறு (Biography of Political personalities) என்னும் துறைகள் சார்ந்த உயராய்வுகளும் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. இவ் ஆய்வுகளை தமிழுக்கு இரவல் பெற்று கொண்டு வருதலும் உள்ளீர்த்துத் தன்வயமாக்கிக் கொள்ளுதலும் இன்றைய அவசியத் தேவையாகும். சி. அரசரத்தினம், ஏ.ஜே. வில்சன், குமாரி ஜெயவர்த்தன, ஜயதேவ உயன்கொட, றெஜி சிறீவர்த்தன, நிறா விக்கிரமசிங்க, ஜயம்பதி விக்கிரமரட்ண, லக்ஷ்மன் மாரசிங்க, சுமணசிறி லியனகே ஆகிய புலமையாளர்களின் கட்டுரைகள் இத்தொடரில் அறிமுகம் செய்யப்படவுள்ளன. இப் பட்டியல் பூரணமானதன்று. இன்னும் பலரைச் சேர்க்க வேண்டியுள்ளது. அவ்வப்போது வேறு பலரும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். 30 மாதங்கள் வரை நீட்சி பெறவுள்ள இத் தொடரில் 30 கட்டுரைகள் வரை இடம்பெறும் என எதிர்பார்க்கின்றோம்.




கந்தையா
சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த ‘இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்’ என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

‘நவீன அரசியல் சிந்தனை’, ‘கருத்தியல் எனும் பனிமூட்டம்’, ‘இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்’ ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.


பகுதி 1

ஆங்கில மூலம் : றெஜி சிறிவர்த்தன

# தனிநபர் உரிமைகளும் அரசு அதிகாரமும் : பிறேஸ் கேர்டில் விவகாரத்தை முன்வைத்து ஓர் மீளாய்வு

றெஜி சிறிவர்த்தன அவர்கள் 2000 ஆம் ஆண்டில் எழுதிய ஆய்வுக் கட்டுரை ஒன்றின் ஆங்கிலத் தலைப்பு பின்வருமாறு அமைந்தது:

*“THE BRACE GIRDLE AFFAIR IN RETROSPECT: CONTRADICTIONS OF IMPERIALISM, OF THE POST COLO NIAL STATE AND OF THE LEFT”*

மேற்படி கட்டுரையின் மையப் பொருளாக தனிநபர் உரிமைகளும் அரசு அதிகாரமும் (RIGHTS OF THE INDIVIDUAL AND THE POWER OF THE STATE) என்னும் விடயப் பொருள் அமைந்துள்ளது.

1937 இல் பிறேஸ் கேர்டில் என்ற பிரிட்டிஷ்காரரை நாடு கடத்தும் கட்டளையை அக்காலத்தில் ஆளுநராக இருந்த சேர். எட்வார்ட் ஸ்ரப்ஸ் பிறப்பித்தார். இக் கட்டளைக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் ஆளுநரின் கட்டளை இலங்கையின் அரசியல் யாப்புக்கு மாறானது (UNCONSTI TUTIONAL) என்றும் சட்டப்படி செல்லாதது என்றும் உயர் நீதிமன்றம் அதிரடியான தீர்ப்பை வழங்கியது. இப் புரட்சிகரமான நீதித் தீர்ப்பை மையமாக வைத்து றெஜி சிறிவர்த்தன தனிநபர்

உரிமைகளும் அரசு அதிகாரமும் என்ற விடயத்தை அலசுகிறார். 'பிறேஸ்கேர்ட்டில் விவகாரம்' (THE BRACEGIRDLE AFFAIR) கட்டுரையாசிரியருக்கு இப்பொருளை மையமாக வைத்து மூன்று முரண்பாடுகளை, இலங்கையின் அரசியல் வரலாற்றோடு தொடர்புபடுத்தி ஆராய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியது. இக் கட்டுரையில் அவர் ஆராய்ந்து வெளிப்படுத்திய மூன்று முரண்பாடுகளாவன:

- **பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகள் (CONTRADICTIONS OF IMPERIALISM)**
- **இலங்கையின் பின்காலனிய அரசின் முரண்பாடுகள் (THE CONTRADICTIONS OF THE POST COLONIAL STATE)**
- **இலங்கையின் இடதுசாரி இயக்கத்தின் முரண்பாடுகள் (THE CONTRADICTIONS OF THE LEFT)**

இம் மூன்று முரண்பாடுகளையும் விளக்கிக் கூறும் றெஜி சிறிவர்த்தன பின்வரும் விடயங்களைப் பற்றிய கூர்மையான அரசியல் விமர்சனத்தை முன்வைக்கிறார்.

1. 1931 ஆம் ஆண்டில் சர்வச வாக்குரிமையின் படியான தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட சட்ட சபையை (LEGISLA TURE) உருவாக்கிய பிரித்தானியா, இலங்கையில் சுதந்திரமான நீதிமுறையையும் உருவாக்கியது. தாராண்மை ஜனநாயகத்தின் இரு தூண்களான இவ்விரு நிறுவனங்களையும் உருவாக்கியதன் மூலம் முற்போக்கான பாதையில் இலங்கையை நடத்திச் சென்ற பிரித்தானியா, ஆளுநர் என்ற சர்வாதிகாரியிடமும், மூன்று செயலாளர்களிடமும் கட்டுப்பாடற்ற நிர்வாக அதிகாரத்தையும் கொடுத்திருந்தது. காலனிய அரசு இரு முகங்களைக் கொண்டதாக இருந்தது. ஒன்று தாராண்மைவாதம் (LIBERALISM) என்ற முகம், மற்றது ஏகாதிபத்திய நலன்களை வெளிப்படுத்திய ஒடுக்குமுறை (REPRESSION) என்ற முகம். இவையே ஏகாதிபத்தியத்தின் முரண்பாடுகள்.
2. காலனிய காலத்தின் நீதித்துறை பிறேஸ்கேர்ட்டில் வழக்கில் புரட்சிகரமான தீர்ப்பை வழங்கியது.

   நிர்வாக அதிகாரத்தைக் கொண்டிருந்த ஆளுநரின் நாடு கடத்தல் கட்டளையை சட்ட முரணானது எனத் தீர்ப்பளித்து, ஆளுநரின் முகத்தில் கரி பூசுவதாக உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு அமைந்தது.

   பின்காலனிய அரசு (POST COLONIAL STATE) காலனிய அரசை விட மேம்பாடுடையதாக இருந்ததா என்ற முக்கியமான கேள்வியை எழுப்பும் றெஜி சிறிவர்த்தன, பிரதமர் சேர். யோன். கொத்தலாவல, சிறிமாவோ பண்டாரநாயக்க, ஜே.ஆர். ஜயவர்த்தன ஆகிய இலங்கையின் நிர்வாகத்துறைத் தலைவர்களான பிரதமர்களதும் ஜனாதிபதியினதும் அரசியல் நடத்தையை நுண் பரிசீலணைக்கு உட்படுத்துகிறார்.
3. பிறேஸ் கேர்ட்டில் விவகாரத்தின் மூலம் பிரபலம் தேடிய இடதுசாரித் தலைவர்கள் பின்காலனிய கட்டத்தில் எவ்விதம் நடந்து கொண்டார்கள்? இலங்கையின் இடதுசாரி இயக்கம் பிறேஸ் கேர்ட்டில் என்ற தனிநபரின் உரிமைக்காக போராடிய வீர வரலாற்றைக் கொண்டதென்றால், காலனிய அரசின் கீழ் வாக்குரிமை பெற்றுத்தந்த தோட்டத் தொழிலாளர் வகுப்பை நாடற்றவர்களாக்கிய பின்னர், சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் நாடு கடத்திய போது கண்மூடி மௌனம் காத்த செயலை எவ்வாறு நியாயப்படுத்த முடியும்?

மேற்குறித்த மூன்று முரண்பாடுகள் பற்றியும் பரிசீலிப்பதற்கு முன் பிறேஸ் கேர்ட்டில் பற்றிய விபரங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுவோம்.

### யார் இந்த பிறேஸ் கேர்ட்டில்?

பிறேஸ் கேர்ட்டில் பிரித்தானியாவில் பிறந்தவர். பிரித்தானியப் பிரஜையான பிறேஸ் கேர்ட்டில் தனது 16 வயதில் அவுஸ்திரேலியாவிற்குச் சென்று அங்கு வாழ்ந்தார். பின்னர் 1936 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்தார். அவர் இலங்கையில் கம்பனியொன்றின் தேயிலைத் தோட்டத்தில் 'தோட்டத்துரை' (PLANTER) வேலையில் பயிற்சியாளராகச் சேர்ந்து வேலை செய்து வந்தார். அவுஸ்திரேலியாவில் இருந்த

காலத்தில் அங்கு 'வாலிபர் கம்யூனிஸ்ட் கழகத்தில்' உறுப்பினராகச் சேர்ந்து கம்யூனிஸ்ட் செயற்பாட்டாளராக இருந்த பிறேஸ் கோர்டில் இலங்கையில் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்த காலத்தில் தோட்டத் தொழிலாளர்கள் மீது அனுதாபம் உடையவராகவும், இடதுசாரிகளோடு தொடர்புடையவராகவும் இருந்தார். இலங்கையின் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் புலனாய்வாளர்கள் இவரது நடவடிக்கைகளைக் கண்காணித்து வந்தனர். ஆளுநருக்கு இவரைப் பற்றிய குற்றச்சாட்டுகள் கொண்ட அறிக்கைகள் அனுப்பப்பட்டன. பிறேஸ் கோர்டில் இலங்கை வந்து ஓர் ஆண்டு காலம் மட்டுமேயான நிலையில் 1937 ஏப்ரல் மாதம் அவரை நாடு கடத்தும் உத்தரவு ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டது. பிறேஸ் கோர்டில் என்ற பெயரையோ அந்த தனிநபர் பற்றியோ கேள்விப்பட்டிராத இலங்கையர்களுக்கு பரபரப்பூட்டும் செய்திகள் வெளிவரத் தொடங்கின. றெஜி சிறிவர்த்தன அப்போது 15 வயது மாணவராக இருந்தார். அந்த நிகழ்வுகளை தமது அனுபவ மீட்டலாக றெஜி சிறிவர்த்தன கூறுவதோடு அவரது கட்டுரை ஆரம்பிக்கிறது.


பிறேஸ் கோர்டில்
Image Source - thuppahis.com

"சேர் எட்வார்ட் ஸ்ரப்ஸ் பிறேஸ் கோர்டிலை நாடு கடத்தும் கட்டளையைப் பிறப்பித்த செய்தியை நான் பத்திரிகை வாயிலாக அறிந்த போது பதினைந்து வயதுப் பள்ளி மாணவனாக இருந்தேன். எனக்கு பிறேஸ் கோர்டில் பற்றி எதுவும் தெரியாது. அவரை நான் கண்டதுமில்லை. ஆளுநர் கட்டளை பிறப்பித்ததும் பிறேஸ் கோர்டில் தோட்டத்தை விட்டு வெளியேறித் தலைமறைவானார். பொலிஸ் புலனாய்வாளர்கள் அவரை சல்லடை போட்டுத் தேடிக் கொண்டிருந்தார்கள். 'டெய்லி நியுஸ்' பத்திரிகையின் நிருபர் ஒருவர் பிறேஸ் கோர்டிலை பேட்டி காண்பதற்காக இரகசியமாக அழைத்துச் செல்லப்பட்டார். அந் நிருபரின் கண்கள் மூடிக் கட்டப்பட்ட பின்பே அவர் இரகசிய மறைவிடத்துக்கு கூட்டிச் செல்லப்பட்டார். நிருபரின் நேர்காணல் டெய்லி நியுஸில் வெளிவந்து பரபரப்பை ஏற்படுத்தியது. இவ்வாறிருக்க தலைமறைவாகி 11 நாட்கள் கழிந்து பிறேஸ் கோர்டில் காலி முகத்திடலில் லங்கா சமசமாஜக் கட்சியினர் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் மேடையில் தோன்றி உரையாற்றினார். இதைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றத்தில் நீதிகோரிய போராட்டம், ஆளுநரின் கட்டளையை நீதிமன்றம் வலிதற்றது என இரத்து செய்தமை, பிறேஸ் கோர்டில் விடுதலை எனப் பரபரப்பான சம்பவங்கள் நிறைந்த ஒரு நாடகம் நடந்தேறியது. அரசியல் அறிவு அதிகம் இல்லாத பாடசாலை மாணவனான எனக்கு பிறேஸ் கோர்டில் 'ரொபின் கூட்' (ROBINHOOD) கதையின் நாயகனை ஒத்த சாகச வீர புருஷனாகவே தோன்றினார். அப்போது லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்களைப் பற்றியும் நான் அறிந்திருக்கவில்லை."

றெஜி சிறிவர்த்தனவின் கதை சொல்லல் முறையில் அமைந்த தொடக்கப் பந்தியை எனது வார்த்தைகளில் மேலே தந்துள்ளேன். றெஜி சிறிவர்த்தன 1937 நிகழ்வுகள் நடைபெற்று நான்காண்டுகள் கடந்த பின் பல்கலைக்கழக மாணவனாகவும், லங்கா சமசமஜாக் கட்சியின் உறுப்பினராகவும் ஆகியிருந்தார். அப்போது தடை செய்யப்பட்டு விட்ட அக்கட்சியின் தலைமறைவு உறுப்பினராக அவர் செயற்படவும் தொடங்கினார்.

லங்கா சமசமஜாக் கட்சி என்ற தலைமறைவு இயக்கத்தின் உறுப்பினனாக நான் ஆகிய போது அந்த இயக்கத்தின் நான்கு தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். பிறேஸ்

கோர்டில் என்ற மனோரதிய வீரதீரர் (ROMANTICA HERO) என்ற பிம்பம் எனது மனதில் பதிந்திருந்தது. அந்த ஏகாதிபத்திய போராளி பற்றி லங்கா சமசமாஜக் கட்சியின் உட்கட்சி உறுப்பினர்களிடையே நல்ல அபிப்பிராயம் இருக்கவில்லை. 1942 இல் ஒரு தடவை நான் எட்மன்ட் சமரக்கொடியை சந்தித்தேன். அவர் சிறையில் இருந்து தப்பியோடி தலைமறைவாக இருந்தார். பிறேஸ் கோர்டில் பற்றி நல்ல அபிப்பிராயம் கொண்டிராத சமரக்கொடி, 'இலங்கைக்கு ஸ்டாலினிசத்தைக் கொண்டு வந்தவர் தான் இந்த மனிதர்' என்று என்னிடம் கூறினார். இதே கருத்தையே எட்மன்ட் சமரக்கொடி 1960 இல் கட்சிப் பத்திரிகையான 'சமசமாஜிஸ்ட்' இதழிலும் (1360 இல்) பதிவிட்டார்.

பிறேஸ் கோர்டில் பற்றிய மாறுபட்ட அபிப்பிராயம் சில ஆண்டுகள் கழிவதற்குள்ளேயே தலைமறைவு இயக்கமான லங்கா சமசமாஜக் கட்சிக்குள் தோன்றி விட்டது. இதன் பின்னணியில் உலக ரீதியில் இடது சாரிகளிடையே ஏற்பட்ட 'ரொட்ஸ்கிசம் எதிர் ஸ்டாலினிசம்' என்னும் கருத்து மோதல் இருந்தது. லங்கா சமசமாஜக்கட்சி 1942 இல் சட்ட விரோத இயக்கமாக அறிவிக்கப்பட்டுத் தடை செய்யப்பட்டது. இத் தடைக்கு இரு ஆண்டுகளுக்கு முன்னர் 1939 ஆம் ஆண்டில் லங்கா சமசமாஜக் கட்சி ஸ்டாலினைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியது. இத் தீர்மானத்தின் பின்னர் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் ஸ்டாலினிற்கும் ஆதரவானவர்களான கம்யூனிஸ்டுகள் லங்கா சமசமாஜக் கட்சியிலிருந்து வெளியேறினர். ல.ச.ச கட்சி இரண்டாகப் பிளவுபட்டது.

### யுத்த காலத்தில் இடதுசாரி இயக்கத்தில் ஏற்பட்ட பிளவு

கம்யூனிஸ்டுகள் ல.ச.ச கட்சியில் இருந்து வெளியேறியமை ரொட்ஸ்கிசம் எதிர் ஸ்டாலினிசம் என்ற சர்ச்சையின் பின்னணயில் நிகழ்ந்ததை மேலே குறிப்பிட்டோம். இப் பிளவு பிலிப் குணவர்த்தன, கொல்வின் ஆர்.டி. சில்வா, லெஸ்லி குணவர்த்தன, என்.எம் பெரேரா ஆகிய தலைவர்களை பிரித்தானியாவின் யுத்த நடவடிக்கைகளுக்கு எதிரான ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுப்பதற்கும், அக் கட்சியில் இருந்து வெளியேறிய கம்யூனிஸ்டுகள் (எஸ்.ஏ. விக்கிரமசிங்கவும் பிறரும்), யுத்தத்தில் பிரித்தானியாவிற்கு சார்பான நிலைப்பாட்டை எடுப்பதற்கும் காரணமாயிற்று. சமசமாஜிஸ்டுகள் ஸ்டாலினிஸ்ட் ஆதரவாளனான பிறேஸ் கோர்டில் மீது கொண்டிருந்த அபிப்பிராயம் மாறியதன் பின்னணி இதுவேயாகும். 1939 இல் சமசமஜாக் கட்சியினர் ஸ்டாலினிற்கு எதிரான முடிவை மேற்கொண்டது சரியான முடிவேயாகும் என்ற கருத்தை றெஜி சிறிவர்த்தன குறிப்பிடுகிறார். அத்தகைய முடிவைச் செய்ததன் மூலம் சமசமாஜக்கட்சி 'கம்யூனிஸ்ட் அகிலம் என்ற வலைப் பொறியில்' (COMINTERN NET) வீழ்வதில் இருந்து தவிர்த்துக் கொண்டது என அவர் குறிப்பிடுகிறார். இம் முடிவைக் கட்சி செய்திராவிடில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் 1942 இல் பிரித்தானியாவின் யுத்த நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கியது போன்று யுத்தத்தை ஆதரித்து, இந்தியாவின் 'வெள்ளையனே வெளியேறு' (QUIT INDIA) இயக்கத்திற்கு எதிராகச் செயற்படும் நிலை ஏற்பட்டிருக்கும் என்றும் கூறுகிறார். எட்மன்ட் சமரக்கொடி அவர்கள் பிறேஸ் கோர்டில் பற்றி 'இலங்கைக்கு ஸ்டாலினிசத்தைக் கொண்டு வந்தவர் தான் இந்த மனிதர்' என்று கூறிய கருத்தைப் பற்றியும் றெஜி சிறிவர்த்தன கூறியிருப்பது சுவாரசியமானது. சமரக் கொடியின் கூற்று மிகைப்படுத்தப்பட்டது. சோவியத் யூனியனின் மதிப்பு அக்காலத்தில் உயர்வாக இருந்தது. அயல் நாடான இந்தியாவில், பாக்கு நீரிணைக்கு அப்பால், பலமானதொரு கம்யூனிஸ்ட் கட்சி இருந்தது. பிறேஸ் கோர்டில் இலங்கைக்கு வந்திருந்தால் என்ன, வராமல் போயிருந்தால் என்ன, ஸ்டாலினிசம் இலங்கைக்கு வந்தேயிருக்கும்.

சமசமாஜக் கட்சியினரிடம் 1940 களில் இருந்த ரொட்ஸ்கிசவாத கொள்கைப்பற்று, பிற்காலத்தில் மங்கிப் போனது என்பதும் இவ்விடத்தில் குறிப்பிடுதல் பொருத்தமானது.

### காலனிய அரசின் முரண்பட்ட கொள்கைகள்

பிறேஸ் கோர்டில் நாடு கடத்தல் சம்பவம் நடைபெற்ற சூழ்நிலையில், பிரித்தானியா தனது

காலனிகள் தொடர்பாக கடைப்பிடித்த கொள்கையில் இரு முரண்பட்ட போக்குகள் இருந்தமையை அவதானிக்கலாம். இந்தியா தொடர்பாக பிரித்தானியா கடைப்பிடித்த கொள்கையில் இருந்து பிரித்தானியாவின் மாதிரிக் காலனியான (MODEL COLONY) இலங்கை பற்றிய கொள்கை வேறுபட்டதாக இருந்தது. பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் மீது பற்றுதலையும் விசுவாசத்தையும் வெளிப்படுத்திய இலங்கைத் தலைவர்களிடம், அவர்கள் கோரிக்கைகளாக முன்வைக்காதவற்றை, பிரித்தானியா வலிந்து வழங்க முன்வந்தது. 1931 அரசியல் யாப்பு சீர்திருத்தம் இலங்கைக்குச் சுயாட்சியை (SELF GOVERNMENT) வழங்கியது. சர்வசன வாக்குரிமையை வழங்கியது. சர்வசன வாக்குரிமையின் அடிப்படையில் தேர்தல் முறை, பிரதிநிதித்துவ ஜனநாயகம் என்பன இலங்கைக்கு கேட்காமலே வழங்கப்பட்ட வெகுமதிகள். அருகே இருந்த இந்தியாவின் தீவிரவாத, கிளர்ச்சிவாத தலைவர்களை நம்புவதற்கு பிரித்தானியா தயாராக இருக்கவில்லை. ஆனால் பிரித்தானிய சாம்ராஜ்ஜியம் மீது பற்றுதலையும் விசுவாசத்தையும் வெளிப்படுத்திய இலங்கைத் தலைவர்களிடம் பிரித்தானியா நம்பிக்கை வைக்கத் தயாராக இருந்தது.

டொனமூர் அரசியல் சீர்திருத்தங்களின்படி சர்வசன வாக்குரிமையை பிரித்தானியா வழங்க முன்வந்த பொழுது, இலங்கையின் பழமைவாதிகளான மிதவாதத் தலைவர்கள் அதனை ஏற்க மறுத்தனர். தொழிற்சங்கத் தலைவரும் அரசியல்வாதியுமான ஏ.ஈ. குணசிங்க மட்டுமே சர்வசன வாக்குரிமையை ஆதரித்தார். ஏனைய தலைவர்கள் படிப்பறிவு இல்லாதவர்களுக்கு வாக்குரிமையை வழங்கக்கூடாது. சொத்துக்கள் இல்லாதவர்கள், வரி செலுத்தாதவர்கள் தம் பொறுப்பை உணர்ந்து செயற்பட மாட்டார்கள் என வாதிட்டனர். இந்த வாதங்களையெல்லாம் புறந்தள்ளிய பிரித்தானிய அரசாங்கம் இலங்கைக்கு இவை யாவற்றையும் தாராளமாக அள்ளிக் கொடுத்தது. காரணம், இலங்கையின் தலைவர்கள் தமக்குக் கொடுத்த ஆட்சி அதிகாரத்தை பிரித்தானியாவின் பொருளாதார, வர்த்தக நலன்களுக்கு எதிராக உபயோகிக்க மாட்டார்கள் என பிரித்தானியா நம்பியது என்று றெஜி சிறிவர்த்தன அவர்கள் குறிப்பிடுகின்றார். பிரித்தானியாவின் காலனிகள் தொடர்பான கொள்கையில் இருமுகங்கள் இருந்தன. அவற்றுள் ஒரு முகம் தாராண்மை முகம். மற்றது ஒடுக்கு முறை முகம் (ONE LIBERAL THE OTHER REPRESSIVE). பிரித்தானியா இலங்கை தொடர்பாக 1930 கள் முதல் 1948 வரை தாராண்மை முகத்தைக் காட்டி வந்தது.

“முதலாவதான (தாராண்மை) முகம் பிரித்தானியா தனது சொந்த நாட்டிற்குள் நடைமுறைப்படுத்திய சட்டங்கள், உருவாக்கிய நிறுவனங்கள், பரிணாம வளர்ச்சியூடாக உருவான நடைமுறைகள் என்பனவற்றின் ஒரு பகுதியை காலனிகளுக்கு மாற்றும் செயல்முறையைக் கொண்டது.”

இலங்கையின் மிதவாதத் தலைவர்களின் மீது மதிப்பை வைத்திருந்த பிரித்தானியா 1930 தொடக்கம் 1948 இல் சுதந்திரம் வழங்கிய காலம் வரை தொடர்ச்சியாக தனது தாராண்மைவாத முகத்தையே காட்டி வந்தது. இலங்கைத் தலைவர்களும் விசுவாசம் மிக்கவர்களாகவே நடந்து வந்தனர். இணக்கப் போக்கும், பொறுமையும் இரு தரப்பினரிடம் இருந்து வந்தது.

பிரித்தானியா இலங்கை என்னும் ‘மாதிரிக் காலனி‘ யில் அரசியல் பரிசோதனை ஒன்றைச் செய்தது என்றும் றெஜி சிறிவர்த்தன குறிப்பிடுகிறார். சர்வசன வாக்குரிமை, பிரதிநிதித்துவ ஜனநாயகம், பிரித்தானியாவின் மந்திரி சபை முறை என்பன இப் பரிசோதனையின் முக்கிய கூறுகள் என்பதே அவரது வாதமாகும். ஆயினும் பிரித்தானியாவின் ‘ஒடுக்கு முறை முகம்‘ தேவையேற்பட்ட போது வெளிப்பட்டதென்றும் குறிப்பிடுகிறார்.

## சேர். எட்வாட் ஸ்ரப்ஸ் அவர்களின் பொறுமையைப் பரிசோதித்த பிறேஸ் கேர்டில்

பிறேஸ் கேர்டிலை கடத்தும் தான்தோன்றித்தனமான, சர்வாதிகாரத் தன்மையுள்ள கட்டளையை சேர். எட்வாட் ஸ்ரப்ஸ் பிறப்பித்ததற்குரிய காரணத்தை


பிலிப் குணவர்த்தன
Image Source - en.wikipedia.org

காலனிய அரசின் ஒடுக்குமுறை இயல்பைக் கொண்டு விளக்கலாம். சட்டசபையின் உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட மந்திரி சபையிடமே பிறேஸ் கேர்டில் நடவடிக்கை தொடர்பான முடிவை எடுக்கும் அதிகாரம் இருந்தது. சேர். எட்வாட் ஸ்ரப்ஸ் மந்திர சபைக்குத் தெரியாமலே தம் கையில் அதிகாரத்தை எடுத்துக் கொண்டு செயலாற்றினார். மிதவாதிகளான சட்டசபை உறுப்பினர்களுக்கு இது அதிர்ச்சியளிப்பதாக இருந்தது. சிறிபால சமரக்கொடி என்ற உறுப்பினர், ஆளுநரின் செயலை எதிர்க்கும் பிரேரணையொன்றைச் சட்ட சபையில் முன்மொழிந்தார். தமது பிரேரணை மீது உரையாற்றிய சமரக்கொடி தம்மை பிரத்தானியாவின் விசுவாசம்மிக்க குடிமக்கள் (LOYAL SUBJECTS) எனக் குறிப்பிட்டார். அவர் விசுவாசம்மிக்க குடிமக்கள் என்ற தொடரை உபயோகித்ததில் ஒரு உள்நோக்கம் இருந்தது. பிலிப் குணவர்த்தன, என்.எம். பெரேரா என்ற இரு சமசமாஜிஸ்டுகள் சட்டசபையில் உறுப்பினர்களாக இருந்தார்கள். இவர்கள் இருவரும் தீவிரவாதிகள். இவர்கள் தவிர்ந்த ஏனையோர் மிதவாதிகள்; பிரித்தானியாவின் விசுவாசிகள். சிறிபால சமரக்கொடி, தான் உட்பட்ட 'விசுவாசிகளை' தீவிரவாதிகளிடம் இருந்து வேறுபடுத்தி விசுவாசம் மிக்க குடிமக்கள் எனக் குறிப்பிட்டதன் காரணம் இதுவே. சட்டசபை விவாதத்தின் போது உறுப்பினர்களிடையே விசுவாசம் மிக்க குடிமக்களின் புண்பட்ட மன உணர்வு வெளிப்பட்டுத் தெரிந்தது என்றும் றெஜி சிறிவர்த்தன குறிப்பிடுகிறார்.

சேர். எட்வேட் ஸ்ரப்ஸ் அவர்களின் நடவடிக்கை பிரித்தானியாவின் இலங்கை பற்றிய கொள்கைக்கு மாறுபட்ட செய்கையாக விளங்கியது. பிறேஸ் கேர்டில் அவர்களின் நடவடிக்கைகளால் அச்சமடைந்த பொலிஸ் திணைக்களத்தின் தகவல்கள் ஸ்ரப்ஸ் அவர்களுக்கும் அச்சத்தை ஊட்டியிருக்க வேண்டும்.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர், அவ்விடயம் பற்றி பிரித்தானியாவின் மந்திரிசபை பரிசீலனை செய்தது. காலனிகளுக்கான அமைச்சர் (SECRETARY FOR COLONIES) மந்திரி சபைக்கு ஓர் அறிக்கையைச் சமர்ப்பித்தார். அவ்வறிக்கையில் அவர் ஆளுநரின் செயல் 'அரசியல் ரீதியில் புத்தியற்ற செயல்' (POLITICAL LY UNWISE) எனக் குறிப்பிட்டிருந்தார். காலனிகளுக்கான மந்திரியின் அரசியல் ரீதியில் புத்தியற்ற செயல் என்ற அபிப்பிராயம் சரியானது என்பதை இலங்கையின் நிகழ்வுகள் நிரூபித்தன என்று றெஜி சிறிவர்த்தன குறிப்பிடுகிறார்.

"டொனமூர் அரசியல் யாப்பு செயல் முறையில் இருந்த காலத்தில் ஏற்பட்ட முக்கியம் வாய்ந்த அரசியல் யாப்பு நெருக்கடி (CONSTITUTIONAL CRISIS) பிறேஸ் கேர்டில் விவகாரத்தால் தோன்றியது. இதன் பயனாக லங்கா சம சமாஜக்கட்சி தேசிய அரங்கில் முன்னிலைக்கு வந்தது. இந்த விவகாரம் அதற்குப் பிரபலத்தையும், மக்கள் ஆதரவையும் தேடித் தந்தது. இப்பிரச்சினையை அக்கட்சி மக்களிடம் எடுத்துச் சொல்லிப் பிரச்சாரம் செய்தது மட்டுமல்லாமல், அப்போதைய மந்திரிசபையின் ஆதரவையும் பெற்றது. சட்ட சபையின் பெரும்பான்மை உறுப்பினர்களினது ஆதரவும் அக் கட்சிக்குக் கிடைத்தது. ஏ.ஈ. குணசிங்க என்ற தொழிற்சங்கத் தலைவரும் தனது ஆதரவை வழங்கினார். எஸ்.டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயக்க, ஏ.ஈ. குணசிங்க, ஜோர்ஜ்.இ.டி. சில்வா போன்ற முக்கியமான தலைவர்கள் லங்கா சமசமாஜக் கட்சியின்

கூட்டங்களில் மேடையில் தோன்றி ஆதரவளித்துப் பேசினார்கள்."

தேசியவாத அலையொன்று பிறேஸ் கேர்டில் சம்பவத்தை அடுத்து மேலெழும்பியது. அத்தேசியவாத எழுச்சிக்கு லங்கா சமசமாஜக் கட்சி தலைமை தாங்கியது. ஆயினும் வெகுவிரைவிலேயே இந்த எழுச்சி அலை அடங்கிப் போனது. இலங்கையின் மிதவாதத் தலைவர்கள் ஆளுநரையும், அவரது உயர் அதிகாரிகளான மூன்று செயலாளர்களையும் புண்படுத்தும் வார்த்தைகளைப் பிரயோகிக்காமல் அவதானத்துடன் பேசினார்கள், இணக்கான முறையில் நடந்து கொண்டனர்.



என்.எம். பெரேரா

Image Source - en.wikipedia.org

புத்தியற்ற இந்நடவடிக்கையை சுதந்திரமான நீதித்துறை என்ற நிறுவனம் தடுத்து நிறுத்தியது. சரி செய்தல் நடவடிக்கை (CORRECTIVE ACTION) மூலம் உயர் நீதிமன்றம் நிர்வாகத் துறையின் செய்கையைச் சமன் செய்தது."

காலனிய அரசின் நிர்வாகத் துறையின் ஒடுக்குமுறை அதிகாரம், எல்லை மீறி உபயோகிக்கப்பட்ட போது, அதனைக் கட்டுப்படுத்தும் நீதி அதிகாரத்தை (JUDICIAL POWER) உயர் நீதிமன்றம் உபயோகித்து, கட்டுப்படுத்தலும் சமன்படுத்தலும் (CHECKS AND BALANCES) என்னும் அரசியல் யாப்புத் தத்துவத்தை செயற்படுத்தியதை பிறேஸ் கேர்டில் விவகாரத்தில் காண முடிகிறது. பிரதம நீதியரசர் சிட்னி அப்பிரஹாம் எழுதிய இத்தீர்ப்பிற்கு நீதியரசர்களான மார்டினஸ் (MARTINEZ), சோறட்ஸ் (SOERTSZ) ஆகிய இருவரும் தமது உடன்பாட்டை வழங்கினர். சேர். சிட்னி அப்பிரஹாம் பிரிட்டிஷ்காரர்; மற்ற இரு நீதிபதிகளும் இலங்கையர்கள் ஆவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஆளுநரின் வேண்டுகோள்

பிரித்தானியாவின் தாராண்மைவாத ஜனநாயக மரபின்படி நிர்வாகத் துறையின் (ஆளுநரின்) எழுந்தமானமான நடவடிக்கை மீது உயர் நீதிமன்றம் தலையீடு செய்தது. ஆளுநரின் கட்டளையை இரத்து செய்த உயர் நீதிமன்றம் சட்டத்தின் முன் யாவரும் சமம் (EQUALITY BEFORE THE LAW) என்னும் மனித உரிமைக் கொள்கையை உறுதி செய்தது. இத்தீர்ப்பு ஏற்படுத்திய தலைகுனிவை விட இன்னொரு சட்டப் பிரச்சினையையும் ஆளுநர் எதிர்நோக்கினார். உயர்நீதிமன்றம் பிறேஸ் கேர்டிலை விடுதலை செய்த பின்னர், ஆளுநர் மீதும் தொடர்புடைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீதும் நட்டஈடு கோரி சிவில் வழக்கைத் தொடரலாம் என்ற ஆபத்து இருந்தது. இதனால் ஆளுநர் காலனிகளுக்குப் பொறுப்பான அமைச்சு அலுவலகத்திற்கு (COLONIAL OFFICE) ஒரு வேண்டுகோளை விடுத்தார். பிரித்தானியா 'ORDER IN COUNCIL' என்ற வகையில் இலங்கைக்கான சட்டங்களை இயற்றும் அதிகாரம் உடையதாய் இருந்தது. அந்தச் சட்டவாக்க அதிகாரத்தை உபயோகித்து, ஆளுநர் மீதும் நிர்வாகத்துறை உத்தியோகத்தர்கள் மீதும் நட்ட ஈடு கோருவதற்கான உரிமையை இல்லாமல் செய்யும் சட்டத்தை இயற்ற வேண்டும் என்பதே ஆளுநரின் வேண்டுகோள் ஆகும். ஆளுநரின் வேண்டுகோளைப் பரிசீலனை செய்த காலனிகளுக்கான அமைச்சு அலுவலகம் (COLONIAL OFFICE) என்ன முடிவை எடுத்தது என்பது பற்றி றெஜி சிறிவர்த்தன இதுவரை அறியப்படாத தகவல்களைத் தருவதோடு, உள்ளொளி பாய்ச்சும் விமர்சனக் குறிப்புக்களையும் பதிவிடுகிறார்.

ஆளுநருக்கும் காலனிய அமைச்சு அலுவலகத்திற்கும் இடையிலான கடிதத் தொடர்புகள் இரகசியக் கோப்புக்களில் கோவையிடப்பட்டிருந்தன. "அண்மையில்

லண்டனின் பொது ஆவணங்களின் காப்பகம் (PUBLIC RECORD OFFICE) இவற்றை யாவரும் படிக்கக் கூடியதாக ஆக்கியது" எனக் கூறும் றெஜி சிறிவர்த்தன, அமைச்சின் சட்ட ஆலோசகர் (LEGAL OFFICER) ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆலோசனை அறிக்கையை மேற்கோள் காட்டி அருமையான விமர்சனக் குறிப்புக்களை தமது கட்டுரையில் பதிவிடுகிறார்.

பிரித்தானியாவின் ஜனநாயக மரபில் தேர்ச்சி பெற்றவரான இச்சட்ட ஆலோசகர் வழங்கிய ஆலோசனைகள் ஆச்சரியம் அளிப்பன.

"இலங்கையின் சட்ட சபையின் அதிகாரத்தை மதியாது, நபர் ஒருவரின் சிவில் உரிமைகளைப் பறித்த செயலானது அரசியல் யாப்புக்கு மாறானது (UNCONSTITUTIONAL) என்பதோடு, அதிகாரத்தின் முறைப்படியான பிரயோகமும் அன்று (NOT A PROPER EXERCISE OF THE POW ER) என்றே எனக்குத் தோன்றுகிறது."

பெயரிடப்படாத அச்சட்ட ஆலோசகரின் கூற்று துணிச்சல் மிக்க அதிகாரி ஒருவரின் கூற்றாகும். தொடர்ந்து அச்சட்ட ஆலோசகர் கூறுவதாவது;

"மேலும் பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் நீதிமன்றினை நாடி நட்ட ஈடு கோரும் உரிமையை பறிக்க வேண்டும் என்பதில் நியாயம் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இவ்வுரிமையைப் பறிப்பதற்கான சாத்தியம் எதுவும் கிடையாது. எந்தத் தத்துவம் (PRINCIPLE), அல்லது சுதந்திரமும் உரிமைகளும் பற்றிய எந்தக் கொள்கையின்படி இலங்கையின் பிரஜை ஒருவரின் உரிமைகளுக்கு குறைந்தளவு மதிப்பைக் கொடுக்க வேண்டும்? பிறேஸ் கேர்டில் ஒரு விரும்பத்தகாத ஆளாக (UNPLEAS ANT PERSON) இருக்கலாம். அது இந்த விடயத்தில் பொருத்தமற்ற ஒன்று. இங்கே கவனிக்கப்பட வேண்டியவை, உயர்ந்த அரசியல் யாப்புத் தத்துவங்களாகும் (HIGH CONSTITUTIONAL PRINCIPLES). இத் தத்துவங்களின் அடிப்படையிலேயே இப்பிரச்சினை பற்றிய தீர்மானம் எடுக்கப்பட வேண்டும்."

இக்கூற்றில் காணப்படும் 'UNPLEASANT PERSON' என்ற தொடர் பிறேஸ் கேர்டில் ஒரு 'கம்யூனிஸ்ட்' என்பதையே குறிக்கிறது. கம்யூனிச/சோஷலிச கொள்கைகளை உடைய விரும்பத்தகாத ஆளாக இருப்பினும் தமக்கு இழைக்கப்பட்ட தீங்கிற்கான இழப்பீட்டு உரிமையை ஒரு நபரிடமிருந்து பறிக்கக் கூடாது என்ற கருத்தையே சட்ட ஆலோசகர் பதிவிடுகிறார். ஆளுநர், உயர் பொலிஸ் அதிகாரிகள் ஆகியோரைப் பாதுகாப்பதை விட இலங்கையில் தனிநபர் உரிமையையும், இலங்கைச் சட்ட சபையின் கௌரவத்தையும் மேலானதாக காலனிய அமைச்சு அலுவலகமும், பிரித்தானிய மந்திரி சபையும் கருதின. ஆளுநரின் வேண்டுகோளை நிராகரிப்பதென மந்திரிசபை முடிவு செய்தது.

பிறேஸ் கேர்டிலுக்கு இழப்பீடு வழங்கும் தேவையேற்பட்டால், ஆளுநர் உட்பட்ட உத்தியோகத்தர்கள் சிலர் இழப்பீடு வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். அப்போது என்ன செய்வது பற்றிய பிரச்சினைக்குரிய தீர்வையும் மந்திரிசபை முடிவு செய்தது. இழப்பீடு வழங்க வேண்டி ஏற்பட்டால் இழப்பீட்டுத் தொகையை ஆளுநரதும், பொலிஸ் உத்தியோகத்தர்களதும் சார்பில் இலங்கை அரசாங்கம் செலுத்தலாம் என மந்திரிசபை முடிவு செய்தது.

பிரித்தானியா முன்மாதிரியான காலனியாகக் கருதிய இலங்கையில் தாராண்மை ஜனநாயகம் வளர்ச்சி பெறுவதற்குத் தேவயையான நிறுவனங்களைப் பாதுகாப்பதிலும் தனிநபர் உரிமைகளுக்கு மதிப்புக் கொடுப்பதிலும் அக்கறை கொண்டிருந்தமை, பிரித்தானியாவின் 'தாராண்மை முகம்' என்ற ஒரு பக்கத்தைப் பிரகாசம் மிக்கதாகக் காட்டுகிறது.

பிரித்தானியாவிற்கு ஒடுக்குமுறை (REPRESSION) என்ற இன்னொரு முகமும் இருந்ததெனவும் றெஜி சிறிவர்த்தன குறிப்பிடுகிறார். இதனையே ஏகாதிபத்தியத்தின் முரண்பட்ட கொள்கைகள் எனவும் குறிப்பிடுகிறார்.

இத் தமிழ்க் கட்டுரை 'THE BRACE GIRDLE AFFAIR IN RETROSPECT: CONTRADICTIONS OF IMPERIALISM, OF THE POST COLONIAL STATE AND OF THE LEFT' என்ற தலைப்பில் றெஜி சிறிவர்த்தன எழுதிய ஆங்கிலக் கட்டுரையினைத் தழுவி எழுதப்பட்டுள்ளது.

# பகுதி 2

பிரித்தானிய ஏகாதிபத்தியம் இலங்கை தொடர்பாகவும், பொதுவாக அதன் காலனிய நாடுகள் தொடர்பாகவும் கடைப்பிடித்த கொள்கையில் இரு முரண்பட்ட போக்குகள் இருந்தன என றெஜி சிறிவர்த்தன குறிப்பிடுகிறார்.

பிறேஸ்கோர்டில் விவகாரத்தைப் பற்றிச் சரியான மதிப்பீட்டைச் செய்வதற்கு நாம் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் இரு முகங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இருபதாம் நூற்றாண்டில் (காலனிகளின் ஆட்சியில்) பிரித்தானியாவின் இந்த இரு முகங்களும் வெளிப்பட்டுத் தெரிந்தன. ஒரு முகம் தாராண்மைவாதம் (LIBERALISM); மற்றது ஒடுக்கு முறை (REPRES SION) என்ற முகம். முதலாவது பிரித்தானியாவிற்குள் உருவாக்கப்பட்ட சட்டங்கள், நிறுவனங்கள், நடைமுறைகள் என்பனவற்றை காலனிகளுக்குப் பகுதியளவில் மாற்றுவதாக அமைவது. இரண்டாவது காலனிகளில் அந்நிய நாடான பிரித்தானியாவின் இறைமையை (அதிகாரத்தை) நிலை நிறுத்துவதும் பாதுகாப்பதும் என்பதோடு, சுரண்டல் அமைப்புக்களையும் உறவுகளையும் பேணிப் பாதுகாப்பதும் ஆகும். தாராண்மைவாதம் முதன்மை பெறுகிறாதா அல்லது ஒடுக்கு முறை முதன்மை பெறுகிறதா என்பது காலம், இடம், சந்தர்ப்ப சூழ்நிலை என்பனவற்றைப் பொறுத்து வேறுபடும் (பிரித்தானியாவின் கொள்கைகளையும் நடைமுறைகளையும் மதிப்பீடு செய்யும் போது). ஒரு முகத்தில் மட்டும் கவனத்தைக் குவித்து, மற்ற முகத்தை காணத் தவறுவது யதார்த்த நிலையைப் புரிந்து கொள்ள உதவாது. அது வரலாற்றைத் திரித்துக் காட்டுவதாகவே அமையும்.

றெஜி சிறிவர்த்தன இலங்கையில் டொனமூர் அரசியல் திட்டம் செயற்பட்ட காலத்தில் பிரித்தானியா, தாராண்மைவாத ஜனநாயகத்தை மாதிரிக் காலனியான இலங்கையில், சட்டம், நிறுவனங்கள் (INSTITUTIONS), நடைமுறைகள் என்பன மூலம் முழுமையாக இல்லாவிடினும் பகுதியளவிலேனும் மாற்றி நடைமுறைப்படுத்தும் செயல்முறையில் ஈடுபட்டிருந்ததைக் குறிப்பிடுகிறார். இக்



பிறேஸ் கேர்டில்

Image source - dailynews.lk

காலப்பகுதியில் இடம்பெற்ற ஒரு விவகாரமான 'பிறேஸ்கோர்டில் நாடுகடத்தல்' என்ற வரலாற்று நிகழ்வையே இக் கட்டுரையில் அலசுகிறார். அப்போது பிரித்தானியாவின் தாராண்மைவாதம் முகம் முன்னிறுத்தப்பட்டிருந்தது என்பதைக் கட்டுரையில் விபரிக்கிறார். அவரது கட்டுரையைப் படிக்கும் வாசகர் மனதில் எழக்கூடிய நியாயமான கேள்வி, றெஜி குறிப்பிடும் ஒடுக்குமுறை முகம் எங்கே, அதைக் கண்டு கொள்ள முடியவில்லையே? என்பதாகும். றெஜி சிறிவர்த்தனவின் இக் கட்டுரையில் ஒடுக்குமுறை முகம் பற்றிய விரிவான தகவல்களோ விளக்கங்களோ இல்லை என்றே கூறலாம். கீழே தரப்பட்டுள்ள மேற்கோளில் காணப்படும் ஒரேயொரு வாக்கியத்தைக் கொண்டு மட்டும் இவ்விடயம் பற்றி நாம் ஊகிக்க வேண்டியுள்ளது. அவ் வசனம் வருமாறு:

*"THE SECOND AROSE FROM THE CONTINUING NEED TO MAINTAIN THE SOVEREIGNTY OF A FOREIGN POWER AND THE EXPLOITATIVE STRUC TURES AND RELATIONS OF COLONIALISM"*

பிரித்தானியா இலங்கை மீதான தனது ஆதிக்கத்தை தளர விடாது பேணுவதற்கு எத்தகைய பாதுகாப்புகளை மேற்கொண்டது என்பதும், காலனிய ஆட்சியின் கீழ் இடம்பெற்ற பொருளாதாரச் சுரண்டலுக்கு ஆதாரமான சுரண்டல் அமைப்புக்களையும் உறவுகளையும் எவ்வாறு பேணியது என்பதும் இக் கட்டுரையில் விரித்துரைக்கப்படவில்லை என்றே கருதலாம்.

### றோடா மில்லர் டி சில்வா விவகாரம்

அமெரிக்கா பிரஜையான றோடா மில்லர் டி சில்வா என்ற பெண்மணி இலங்கையரான யோ டி சில்வா என்பவரைத் திருமணம் செய்திருந்தார். றோடா மில்லரும் அவரது கணவரும் போலந்து நாட்டில் வாழ்ந்தார்கள். அங்கே கம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்புடையவர்களாய் இவர்கள் இருந்தனர். போலந்து நாட்டில் அரசுக்கு எதிராகச் செயற்பட்டார்கள் என்றும், ரொட்ஸ்கிசவாதிகள் எனவும் சந்தேகிக்கப்பட்ட சூழ்நிலையில் இருவரும் போலந்தை விட்டுக் குடிபெயர்ந்து இலங்கையில் வாழலாம் என்ற விருப்பத்தோடு இலங்கைக்கு வந்தனர். பொலிஸ், றோடா மில்லருக்குப் பிரஜா உரிமை வழங்கக்கூடாது என்று சிபார்சு செய்தது. அப்போது பிரதமராக இருந்த டட்லி சேனநாயக்க பொலிசாரின் கோரிக்கையை ஏற்கவில்லை. சிறிது காலத்தின் பின்னர் சேர். யோன் கொத்தலாவல பிரதமர் ஆனார். பொலிசார் தமது கோரிக்கையை மீண்டும் முன்வைத்தனர். 'சிவப்பு ஆபத்து' எனப்படும் கம்யூனிச ஆபத்துப் பற்றி மிகுந்த கவனம் செலுத்திய கொத்தலாவல அக்கோரிக்கையை அங்கீகரித்தார். றோடா மில்லர் அமெரிக்கா நோக்கிப் பயணித்த விமானம் ஒன்றில் ஏற்றி நாடு கடத்தப்பட்டார். அப்போது அவர் சார்பாக நீதிமன்றில் வழக்குத் தொடுக்க யாரும் முன் வரவில்லை. அவர் வழக்குத் தொடுத்திருந்தாலும் அன்றைய சூழலில் அவர் வழக்கில் வெற்றி பெறும் வாய்ப்பும் இருந்திருக்காது. றோடா மில்லர் விரும்பத்தகாத அந்நியர் (UNDESIRABLE ALIEN) என்பதே முடிவு. அதைத் தட்டிக் கேட்க யாரும் துணியவில்லை. றோடா மில்லர் அமெரிக்காவிற்குள் அனுமதிக்கப்படுவதற்கும் வாய்ப்பு இருக்கவில்லை. அக்காலத்தில் அமெரிக்கா, கம்யூனிஸ்டுகளை நாட்டிற்குள் நுழைய அனுமதிப்பதில்லை. பிரித்தானியாவின் சிவில் உரிமைகளைப் பாதுகாக்கும் தொண்டு நிறுவனம் றோடா மில்லருக்குப் பிரித்தானியாவிற்குள் நுழைவதற்கு அனுமதி பெற்றுக் கொடுத்தது. றோடா மில்லர் அவரது கணவரில் இருந்து பிரிக்கப்பட்டிருந்தார். கணவர் இலங்கையிலும், றோடா டி மில்லர் பிரித்தானியாவிலுமாகப் பிரிந்து வாழ நேரிட்டது. பின்னர் அவரது கணவரும் பிரித்தானியாவிற்குச் சென்று அவருடன் இணைந்து கொண்டார். 1956 இல் ஆட்சிமாற்றம் இலங்கையில் ஏற்பட்ட போதுதான் றோடா மில்லரும் அவரது கணவரும் இலங்கைக்கு வந்து இங்கு வாழத் தொடங்கினர். றோடா மில்லர் ஒரு சிறந்த ஊடகவியலாளர் 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் அவர் சுவாரசியமான பத்தியொன்றை தொடர்ந்து எழுதி வந்தார்.



கொல்வின் ஆர்.டி. சில்வா
Image source - en.wikipedia.org

பிறேஸ் கேர்டில், லங்கா சமசமாஜக் கட்சியுடன் தொடர்புடையவராய் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர். அவ்வகையில் அவர் 'சட்ட விரோத' நடவடிக்கையில் ஈடுபட்டார் எனப்பட்டது. றோடா மில்லர்



கொல்வின் ஆர் டி சில்வாவுடன் பிறேஸ் கேர்டில்

Image source - dailynews.lk

ஒரு குற்றமும் செய்யாதவர். அவர் மனதளவில் ஒரு கருத்தை வைத்திருந்தார். அவரிடம் ஒரு அரசியல் கருத்து (POLITICAL OPINION) இருந்ததே அவர் செய்த குற்றம். அவர் லங்கா சமசமாஜக் கட்சியுடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை. எவ்வித அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபடவில்லை. அரசியல் கூட்டங்களில் சொற்பொழிவு நிகழ்த்தவில்லை. அவர் அமெரிக்கப் பிரஜையாகவே இலங்கைக்கு வந்தார். இலங்கைப் பிரஜை அல்லாத அவரை நாடு கடத்தியது சட்டப்படி சரியானதே. அதற்கு எதிராக சட்ட நிவாரணம் கோரும் உரிமை அவருக்கு இருக்கவில்லை. இங்கே கவனிக்க வேண்டிய விடயம் றோடா மில்லருக்கு இழைக்கப்பட்ட செயல் 'அறமற்றது, நியாயப்படுத்த முடியாதது'(IMMORAL AND INDEFENSIBLE) என்பதேயாகும்.

றோடா மில்லர் டி சில்வா ஒரு தனி நபர்; இவரைப் போன்றே பிறேஸ் கேர்டிலும் தனி நபரேயாவர். ஆனால் 1964 ஆம் ஆண்டில் நாலு இலட்சம் இந்தியத் தமிழர்களும் அவர்களில் தங்கியிருப்போரும் சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கையின்படி நாட்டை விட்டு வெளியேற்றபட்டார்கள். அப்போது நாலு இலட்சம் மக்கள் றோடா மில்லர் என்ற ஒருவரைப் போல் சட்டத்தின் துணையற்ற அபலைகளாக ஆயினர். இலங்கை அரசு 1948 இலும் 1949 இலும் அம் மக்களின் பிரஜா உரிமையை அவர்களிடமிருந்து பறித்துவிட்டு 'இந்தியத் தமிழர்கள்' என்ற பெயரில் இங்கே வைத்திருந்து விட்டு, 1964 இல் வெளியேற்றியது. 1947 தேர்தலில் தோட்டத்துறை தொழிலாளர்களுக்கு வாக்குரிமை இருந்தது. அவர்கள் தமது பிரதிநிதிகளை அவ்வேளை பாராளுமன்றத்திற்கு அனுப்பியிருந்தனர். இலங்கை இந்தியக் காங்கிரஸ் பிரதிநிதிகள், பாராளுமன்றத்தில் இடதுசாரிகளுக்குச் சார்பாக வாக்களித்தனர். 'தேசிய வாதம்' எனும் போர்வையில் டி.எஸ். சேனநாயக்க அரசாங்கம் அத்தொழிலாளர்கள் மீது வஞ்சம் தீர்த்து அவர்களை நாடற்றவர்களாக்கி (STATELESS) வாக்குரிமையையும் பறித்தது. 1964 இல் பிரதமராக இருந்தவர் அம்மக்களின் கருத்துக்களைக் கேட்டறியவோ, மதிப்பளிக்கவோ விரும்பாமல் தனது பேரம் பேசலை நடத்தி அவர்களை வெளியேற்றினார். இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு

அனுப்பப்பட்ட அந்த செயல்முறைக்கு ‘சொந்த நாட்டிற்கு அனுப்புதல் (REPATRIATION)’ என்ற பெயரிடப்பட்டிருந்தது. ஆனால் அந்த மக்களில் பெரும்பகுதியினர் இலங்கையிலேயே பிறந்தவர்கள்; இந்நாட்டிற்காக உழைத்தவர்கள். அவர்களிற்கு சொந்தம் என்று சொல்ல வேறு எந்த நாடும் இருக்கவில்லை.

சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் கட்டயாப்படுத்தி நாட்டை விட்டு மக்களை வெளியேற்றிய போது, நபர் ஒருவருக்கான பிரஜா உரிமை மறுக்கப்பட்டதன் அடிப்படை யாது? ஒரு நபரிற்கு பிரஜா உரிமையை வழங்கலாமா, இல்லையா என்ற வினாவிற்கான சான்றாதாரங்களை குறித்த நபரிடமிருந்தல்லவா கேட்டுப் பெற்று ஆராய்ந்து தீர்மானித்திருக்க வேண்டும்? ஆனால் தான்தோன்றித்தனமாக இரு பிரதமர்கள் ஒரு பெரும் மக்கள் சமூகத்தினை இலங்கையை விட்டுத் துரத்துவதை முடிவு செய்தனர். றோடா மில்லரும் அவரது கணவரும் தற்காலிகமாகப் பிரித்து வைக்கப்பட்டனர். இந்தியாவிற்கு அனுப்பப்பட்டு குடும்பங்களைப் பிரித்தமை நிரந்தரமானது; மாற்றி எழுத முடியாதது.

தோட்டத் தொழிலாளர்களை நாடு கடத்திய விடயத்தில் லங்கா சமசமாஜக் கட்சி நடந்து கொண்ட விதம் அதன் பிற்கால நடவடிக்கைகளோடு ஒப்பிடும் போது முரண்பாடானது. பிறேஸ் கேர்டிலின் நாடு கடத்தலுக்கு எதிராகப் போராடிய அக்கட்சி அதைப் பயன்படுத்தி தோட்டத் தொழிலாளர் மத்தியில் தனது ஆதரவைப் பெருக்கிக் கொண்டது. மலையகத்தின் தோட்டத் தொழிலாளர்களின் பலம் மிக்க தொழிற்சங்கம் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைமையில் கட்டியெழுப்பப்பட்டது. 1939 - 40 காலத்தில் அக்கட்சியின் தொழிற்சங்கப் போராட்டங்களின் உச்சமாக முல்லோயா தோட்டத்தில் கோவிந்தன் என்ற தொழிலாளி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்றது. பிறேஸ் கேர்டில் வழக்கைப் போன்று கோவிந்தன் கொலைச் சம்பவம் பற்றிய விசாரணையில் கொல்வின் ஆர்.டி. சில்வா தனது சட்டவாதத் திறமையால் புகழ்பெற்றார். இலங்கையின் தொழிலாளர் வர்க்கப் புரட்சியில் தோட்டத் தொழிலாளர்கள் தாம் பிரதான பாத்திரத்தை ஏற்கப் போகிறார்கள் என்று லங்கா சமசமாஜக் கட்சி கூறியது. கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் கூறப்பட்டது போல் ‘அவர்களுக்கு இழப்பதற்கு அடிமைச் சங்கிலியை விட வேறெதுவும் இல்லை’ என்ற வரையறைக்கு மிகவும் பொருத்தமானவர்களாகத் தமிழ் தோட்டத் தொழிலாளர்களே விளங்குகின்றனர் என லங்கா சமசமாஜக் கட்சி அக்காலத்தில் கூறி வந்தது. பிற்கால மார்க்சியவாதிகள் சிலர் தோட்டத் தொழிலாளர்கள் ஒப்பந்தக் கூலிகளென்றும் அரைகுறைப் பண்ணை அடிமைகளின் பண்புகளையுடையவர்களான அவர்களை சந்தையில் தம் உழைப்பை சுதந்திரமாக விற்கும் தொழிலாளிக்கு (FREE LABOUR) ஒப்பிட முடியாது என்றும் வாதிட்டனர். ஆனால் 1940 களில் லங்கா சமசமாஜக் கட்சி இத்தகைய கருத்தைக் கொண்டிருக்கவில்லை. 1942 இல் இந்தியாவின் போல் செவிக் - லெனினிஸ்ட் கட்சி என்ற பெயரில் தொடங்கப்பட்ட கட்சியில் இந்தியாவில் தலைமறைவாக இயங்கிய சமசமாஜிஸ்டுகள் இணைந்து கொண்டனர். அப்போது அத் தலைவர்கள் எதிர்காலத்தில் நிகழவிருக்கும் புரட்சியில் இந்தியாவினதும் இலங்கையினதும் தொழிலாளி வர்க்கம் இணைந்தே போராடி வெற்றி பெறும் என்று கூறினர். இரு நாடுகளின் தொழிலாளர்களிற்கிடையே பிரிவுபடுத்தும் பிரிகோடு இருப்பதாக அத் தலைவர்கள் கருதவில்லை. 1948 - 49 காலத்தில் தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமையைப் பறிப்பதற்கு எதிரான போராட்டத்தை சமசமாஜக்கட்சி துணிச்சலோடும் நேர்மையோடும் முன்னெடுத்தது. 1950 களில் லங்கா சமசமாஜக் கட்சி தோட்டத் தொழிலாளர்கள் மீதான அக்கறையைப் படிப்படியாகக் குறைத்துக் கொண்டது. பாராளுமன்ற அரசியலில் கூடிய அக்கறை செலுத்திய அக்கட்சிக்கு வாக்குப்பலம் இல்லாத தோட்டத் தொழிலாளர்களின் ஆதரவு தேவைப்படவில்லை. அத்தொழிலாளர் மீதான அக்கறையும் குறைந்தது. 1956 இற்குப் பின்னர் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜா உரிமையைப் பற்றிய பேச்சே லங்கா சமசமாஜக் கட்சிக்கு சங்கடத்தையும் அசௌகரியத்தையும் உண்டாக்கும் விடயமாயிற்று. முல்லோயா துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றிய விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை வெளியான போது

காலனிய ஆட்சியின் போது பிறேஸ் கேர்டில் விவகாரம் தொடர்பாக ஆட்சியாளர்கள் நடந்து கொண்ட முறையை ஜே.ஆர். ஜயவர்த்தன ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் சிலவற்றோடு நாம் ஒப்பீடு செய்து பார்க்கலாம். ஜே.ஆர். ஜயவர்த்தன ஆட்சிக் காலத்தில், பொலிசாரின் அத்துமீறிய செயல்களால் நபர்களின் மனித உரிமைகள் பாதிக்கப்பட்ட இரு சம்பவங்களில், பாதிக்கப்பட்டவர்கள் நட்ட ஈடு கோரி வழக்குத் தொடுத்தனர்.

கோவிந்தன் என்ற தமிழ்த் தொழிலாளியைச் சுட்டுக் கொன்ற சுரவீர என்ற சிங்களப் பொலிஸ் சார்ஜன்ட் கொலைக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட வேண்டும் என்று லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்கள் வாதாடினார்கள். அதே தலைவர்கள் 1964 - 65 காலத்திலும் 1970 - 77 காலத்திலும் சிறிமாவோ பண்டார நாயக்கவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து அரசாங்கத்தில் பங்காளிகளாக இருந்து கொண்டு சிறிமா - சாஸ்திரி உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் பங்கேற்றார்கள்.

றோடா மில்லர் டி சில்வாவிற்கும் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களிற்கும் இடையே இருந்த ஒற்றுமையையும் வேறுபாட்டையும் இவ்விடத்தில் தெளிவுபடுத்த வேண்டும். றோடா மில்லருக்கு பிரஜாவுரிமை இருக்கவில்லை. அந்த உரிமை இல்லாத நிலையிலேயே அவர் வெளியேற்றப்பட்டார். தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு முன்னர் பிரஜா உரிமை இருந்தது; பின்னர் பறிக்கப்பட்டது. அவர்கள் வெளியேற்றப்பட்ட போது பிரஜா உரிமை அற்றவர்களாக இருந்தனர். ஆகையால் சட்ட ரீதியாக றோடா மில்லர் வெளியேற்றமும், தோட்டத் தொழிலாளர் வெளியேற்றமும் நியாயப்படுத்தப்படக்கூடியவை தாம்.

1999 ஆம் ஆண்டில் லங்கா சமசமாஜக் கட்சியின் நீண்டகால உறுப்பினர்களான வெஸ்லி முத்தையா, சிட்னி வண சிங்க என்ற இருவர் பிறேஸ் கேர்டில் விவகாரம் குறித்து ஒரு நூலை வெளியிட்டனர். லங்கா சமசமாஜக் கட்சியின் போராட்ட வரலாற்றில் மிக முக்கியமான பிறேர்ஸ் கேர்டில் விவகாரம் குறித்து கொண்டாடும் / நினைவுகூறும் முகமாக இந்நூல் வெளியிடப்பட்டது. பிறேஸ் கேர்டில் எந்த மக்களின் அவல நிலை கண்டு பொங்கினாரோ அந்த மக்களை கைவிட்டு விட்டு, கட்சியைச் சேர்ந்தவர்கள் மறக்கப்பட்டு போன விடயமாக இருந்த பிறேர்ஸ் கேர்டில் விவகாரம் தொடர்பாக புத்தகம் வெளியிடுவதும், கொண்டாடுவதும் நகை முரணானது என றெஜி சிறிவர்த்தன குறிப்பிடுகிறார். அவர் கூற்றாக வரும் பகுதியொன்றின் தமிழாக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

“பிறேஸ் கேர்டில் இலங்கையில் ஒரு ஆண்டும் மூன்று வாரங்களும் மட்டுமே தங்கியிருந்த போதுதான் ஆளுநர் நாடு கடத்தும் கட்டளையைப் பிறப்பித்தார். அப்போது லங்கா சமசமாஜக் கட்சி பிறேஸ் கேர்டிலுக்காக ஒரு பெரும் போராட்டத்தை ஆரம்பித்தது. பிறேஸ் கேர்டில் விடுதலை செய்யப்பட்டார். அவர் விடுதலையின் பின்னர் ஆறு மாதங்கள் மட்டுமே இலங்கையில் தங்கியிருந்தார். ஆனால் நாடு கடத்தப்பட்ட தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் அவர்கள் வாழ்ந்து வந்த ‘லைன்’ காம்பரா (அறைகள்) என்ற வாழ்விடம் தவிர வேறு எந்த இடத்தையும் வாழ்க்கையில் கண்டிருக்க மாட்டார்கள். இவ்வாறு நாடு கடத்தப்பட்ட தமிழர்களை நான் ‘இந்தியத் தமிழர்கள்’ என்றோ ‘சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டவர்கள் (REPATRIATES)’ என்றோ அழைப்பதை ஏற்றுக் கொள்ள மாட்டேன். தமது தோட்ட வீடுகளில் இருந்தும் வேலைத்தலத்தில் இருந்தும் அகற்றப்பட்டு அவர்களைக் கண்காணா இடங்களுக்கு அனுப்பி வைத்த கொடுமையை எம்மில் பெரும்பாலானவர்கள் கண்டு கொள்ளாமல் விட்டதோடு, மறந்தும் விட்டோம். வலது

சாரியாகவோ அல்லது இடது சாரியாகவோ அல்லது நடுப்போக்குடையவராகவோ ஒருவர் இருந்து விட்டுப் போகலாம். இலங்கையர் என்ற முறையில் எமது சமூக மனச்சாட்சியில் (SOCIAL CONSCIENCE) அழிக்க முடியாத கறையாக தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் நாடு கடத்தல் அமைந்துள்ளது."

## மனித உரிமை மீறல்களைச் செய்தோருக்கு அரவணைப்பும் ஆதரவும்

பிறேஸ் கோர்டில் வழக்கு உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்ட போது நாடு கடத்தல் கட்டளை, சட்டப்படி வலிதுடையதா (LEGALI TY OF THE DEPORTATION ORDER) என்பது பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. பிறேஸ் கோர்டில் விடுவிக்கப்பட்டதும், இன்னொரு பிரச்சினை எழுந்தது. சட்ட முறையற்ற வகையில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டு நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பிறேஸ் கோர்டில் நட்ட ஈடு கோரும் உரிமை உடையவரா என்பதே இப் பிரச்சினையாகும். ஆளுநரும் பொலிசாரும் நட்ட ஈடு செலுத்த வேண்டி வரலாம் என்பதை அறிந்து கொண்ட பிரித்தானிய மந்திரி சபை, அவ்வாறான நிலை எற்பட்டால் இலங்கை அரசாங்கம், தனது வருவாயில் இருந்து அத்தகைய நட்ட ஈட்டைச் செலுத்தலாம் என்ற முடிவை அறிவித்தது. மந்திரி சபையின் இம் முடிவுக்கு காலனிகளுக்கான அலுவலகத்தின் (COLONIAL OFFICE) சட்ட ஆலோசகரின் அறிக்கை அடிப்படையாக அமைந்தது. இது பற்றி இக்கட்டுரையின் முற்பகுதியில் குறிப்பிட்டிருந்தோம். சட்ட ஆலோசகர் பிறேர்ஸ் கோர்டிலை முற்றிலும் விரும்பத்தகாத ஒரு நபர் (THOROUGHLY UNPLEASANT PERSON) என்று குறிப்பிட்டிருந்தார். ஏன் இப்படி அவர் குறிப்பிட்டார்? நாகரிகமான பழக்க வழக்கங்கள் தெரியாதவர் என்றா குறிப்பிட்டார்? இல்லை, பிறேஸ்கோர்டில் ஒரு கம்யூனிஸ்ட் என்பதையே அவ்விதம் குறிப்பிட்டார். சட்ட ஆலோசகரின் அரசியல் முற்சாய்வு (POLITICAL PREJUDICE) வெளிப்படையானது. ஆயினும் உயர் அரசியல் யாப்புத் தத்துவங்களில் (HIGH CONSTITUTIONAL PRINCIPLES) ஒன்றான சட்டத்தின் முன் யாவரும் சமம் என்ற கொள்கையில் இருந்து வழுவி, பிறேஸ் கோர்டிலுக்கு அநீதி இழைக்கக் கூடாது என்ற உணர்வுடையவராக சட்ட ஆலோசகர் நடந்து கொண்டார் என்பதைக் காண்கிறோம். பிறேஸ் கோர்டிலுக்கு நட்ட ஈடு உரிமை உள்ளது என்று அவர் சுட்டிக் காட்டினார்.

காலனிய ஆட்சியின் போது பிறேஸ் கோர்டில் விவகாரம் தொடர்பாக ஆட்சியாளர்கள் நடந்து கொண்ட முறையை ஜே.ஆர். ஜயவர்த்தன ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற நிகழ்வுகள் சிலவற்றோடு நாம் ஒப்பீடு செய்து பார்க்கலாம். ஜே.ஆர். ஜயவர்த்தன ஆட்சிக் காலத்தில், பொலிசாரின் அத்துமீறிய செயல்களால் நபர்களின் மனித உரிமைகள் பாதிக்கப்பட்ட இரு சம்பவங்களில், பாதிக்கப்பட்டவர்கள் நட்ட ஈடு கோரி வழக்குத் தொடுத்தனர். இவற்றுள் ஒன்று விவியன் குணவர்த்தன வழக்கு. மற்றது 'பாவடி ஹண்ட' வழக்கு (PAVADI HANDA CASE). இவ்விரு வழக்குகளிலும் நீதிமன்றம் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனத் தீர்ப்பளித்ததோடு, மனுதாரர்களுக்கு நட்ட ஈடு வழங்க வேண்டும் எனவும் தீர்ப்பளித்தது. இவ்விரு வழக்குகளிலும் குற்றமிழைத்த பொலிசார் செலுத்த வேண்டிய நட்ட ஈட்டுத் தொகையை அரசாங்கம் செலுத்தியது. பிரித்தானிய மந்திரி சபையும் பிறேஸ் கோர்டிலுக்கு நட்ட ஈடு வழங்க வேண்டி வந்தால் அரசாங்க நிதியிலிருந்து நட்ட ஈட்டை வழங்கலாம் என்ற முடிவைச் செய்தது. நட்ட ஈட்டை வழங்கியதோடு நின்றுவிடாமல் ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசு மேற்படி இரு வழக்குகளிலும் குற்றம் இழைத்தவர்களாகக் காணப்பட்டவர்களுக்கு பதவி உயர்வு வழங்கிக் கௌரவித்தது. சட்டவிரோத நடத்தைக்கு வெகுமதி வழங்கி அரசாங்கம் ஊக்குவிப்பு அளித்தது. சேர் எட்வார்ட் ஸ்ரப்ஸிற்கு காலனிய அரசாங்கம் பதவி உயர்வு வழங்கவில்லை. இலங்கை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு அவருக்கு அவமரியாதையைத் தேடித் தந்தது. இலங்கையில் ஜே.ஆர். ஜயவர்த்தன ஆட்சியின் போது பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கிய நீதிபதிகளின் வீடுகளுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டக்காரர்கள் நீதிபதிகளை வசைபாடிக் கூச்சலிட்டனர். அவர்களின் வீடுகளிற்கு கல்லெறிந்து சேதம் விளைவித்தனர்.

இக் காடையர்கள் மீது சட்ட நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை. ஆர்ப்பாட்டக்காரர்களின் அநாகரிக நடத்தையைப் பாராட்டி ஊக்கங் கொடுக்கும் வகையில் ஜே.ஆர்.ஜயவர்த்தன நடந்து கொண்டார். ‘ஒவ்வொருவருக்கும் விமர்சனம் செய்யும் உரிமை உள்ளது’ என்று கூறினார். ஆர்ப்பாட்டங்களுக்குத் தலைமை வகித்தவர் பத்திரிகையொன்றுக்கு அளித்த நேர்காணலில் ஆர்ப்பாட்டத்திற்குரிய பொறுப்பை தாமே ஏற்பதாக கூறினார். அவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

1937 இல் பிரித்தானிய மந்திரி சபையும் அதன் சட்ட ஆலோசகரும் தனிநபர் உரிமைகளை மதிக்கும் வகையிலான முடிவுகளை மேற்கொண்டதை எடுத்துக் காட்டும் றெஜி சிறிவர்த்தன சுதந்திர இலங்கையின் தலைவர்களை விட பிரித்தானிய அரசுத் தலைவர்கள் ஒப்பீட்டளவில் மேலான தாராண்மை ஜனநாயகவாதிகளாக (LIBERAL DEMOCRATS) காணப்பட்டனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

லங்கா சமசாஜக்கட்சி பிறேஸ் கேர்டில் விவகாரத்தை முன்வைத்துச் செய்த பிரச்சாரம் இலங்கை மக்களிடையே ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை வளர்க்க உதவியது. ஆனால் லங்கா சமசமாஜக் கட்சியின் போராட்டமும் சட்ட சபையின் எதிர்ப்புத் தீர்மானமும் பிறேஸ் கேர்டில் விடுதலையைச் சாத்தியமாக்கியன என்று கூறுவது தவறு. பிரதம நீதியரசரும், பிறேஸ் கேர்டில் வழக்கை விசாரித்த மற்ற இரு நீதிபதிகளும் சட்டத்தை நியாயமான முறையிலும் விளக்கிக் கூறினார். நீதித்துறையின் சுதந்திரம் என்ற தாராண்மைத் தத்துவத்தை (LIBERAL PRINCIPLE) உயர்வாக மதித்தார்கள். அந் நீதிபதிகளின் முடிவே பிறேஸ் கேர்டில் விடுதலையைச் சாத்தியமாக்கிய பிரதான காரணி என்று கூறலாம்.

## நீதித்துறையின் சுதந்திரம்

தாராண்மைவாத ஜனநாயக அரசமைப்பு முறையில் நீதித்துறையின் சுதந்திரம் (INDEPENDENCE OF THE JUDICIARY) போற்றிப் பேணப்பட வேண்டிய உயர்வான தத்துவமாகும். உயர் நீதிமன்றம் ஆளுநருக்கு எதிரான தீர்ப்பை வழங்கியதன் மூலம் தனது



றெஜி சிறிவர்த்தன

Image source - www.sundaytimes.lk

சுதந்திரத்தை உறுதியாக வெளிப்படுத்தியது. ஆளுநருக்குப் பணிந்து போகும் முறையில் உயர்நீதிமன்றம் செயற்படவில்லை.

றெஜி சிறிவர்த்தன அவர்கள் கட்டுரையின் இறுதியில் நீதித்துறையின் சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் உதாரணம் ஒன்றைத் தருகிறார்.

பிறேஸ் கேர்டிலை நாடு கடத்தும் கட்டளையை இலங்கையின் ஆளுநர் பிறப்பித்த ஆண்டான 1937 இற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் லியோன் றொட்ஸ்கி சோவியத் ரஷ்யாவின் நாட்டெல்லைக்குள் இருந்து வெளியேற்றப்பட்டார். 1927 ஆம் ஆண்டு சோவியத் நாட்டின் ஆளும் குழுவோடு முரண்பட்ட றொட்ஸ்கி சோவியத் ரஷ்யாவின் கஸகஸ்தான் பகுதிக்குத் துரத்தப்பட்டார். அவர் அங்கு அல்மா அட்ட (ALMA ATA) நகரில் தங்கியிருந்தார். 1939 இல் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ, லியோன் றொட்ஸ்கியை சோவியத் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற முடிவைச் செய்தது. சோவியத் அரசின் அரசியல் பொலிஸ் (POLITICAL POLICE) அந்தக் கட்டளையை

உடனே நிறைவேற்றியது. ரொட்ஸ்கி அல்மா அட்டாவில் இருந்து ரெயில் வண்டி மூலம் ஒடெஸ்ஸா (ODESSA) துறைமுக நகருக்கு அனுப்பப்பட்டார். அங்கே காத்திருந்த கப்பலில் அவர் ஏற்றப்பட்டு சோவியத் எல்லைக்கு வெளியே அனுப்பப்பட்டார். இந்தச் சம்பவத்தை உதாரணம் காட்டும் றெஜி சிறிவர்த்தன, ரொட்ஸ்கியின் நாடு கடத்தல் கட்டளை வெறுமனே ஒரு நிருவாக நடவடிக்கை (ADMINISTRA TIVE ACTION) என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

"இத் தீர்மானமும் நாடு கடத்தலும் வெறும் நிருவாக நடவடிக்கைகளேயாகும். ரஷ்யாவின் புரட்சிக்குப் பிந்திய அரசில் இந்த விடயத்தில் தலையீடு செய்வதற்கான நீதித்துறை நிறுவனம் இருக்கவில்லை. கோட்பாட்டிலும் நடைமுறையிலும் அங்கு நிருவாகத் துறையின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தும் செயல்முறை இருக்கவில்லை. சுதந்திரமான நீதித்துறை, அரசின் நிருவாகத் துறையினால் செய்யப்படும் முடிவுகளையும் நடவடிக்கைகளையும் நீதி மீளாய்விற்கு (JUDICIAL REVIEW) உட்படுத்தல் ஆகிய தத்துவங்கள் சோவியத் அரசு முறையில் ஏற்கப்பட்டிருக்கவில்லை (எளிமைப்படுத்திய மொழிபெயர்ப்பு)"

மேற்குறித்தவாறு சோவியத் ரஷ்யாவின் அரசு முறையின் குறைகளை விளக்கும் றெஜி சிறிவர்த்தன, பிறேஸ் கேர்டில் விவகாரத்தில் காணப்படும் நகைமுரணை எடுத்துக் காட்டுகிறார். ஸ்டாலினிசத்தின் ஆதரவாளரான பிறேஸ் கேர்டில் காலனிய இலங்கையின் நீதித்துறையிடம் முறையீடு செய்து விடுதலை பெற்றார். அவர் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர், லியோன் ரொட்ஸ்கி நாடு கடத்தப்பட்ட போது, ஸ்டாலின் செயலை எந்தவிதமான மனச் சஞ்சலமும் இல்லாமல் ஆதரித்திருப்பார் அல்லவா? இக் கேள்வியை முன்வைப்பதன் மூலம் பிரித்தானியக் காலனியான இலங்கையையும் சோவியத் யூனியனையும் முரண்நிலைப்படுத்திக் காட்டுகிறார். தனிநபர் உரிமைகள் 'பூஷ்வா உரிமைகள்' (BOURGEOIS RIGHT) எனப் புறந்தள்ளக் கூடியனவல்ல என உணர்த்துகிறார். சோவியத் ரஷ்யாவில் ஸ்டாலினதும் கம்யூனிஸ்ட் கட்சியினதும் சர்வாதிகாரப் போக்கைக் கட்டுப்படுத்தக் கூடிய சுதந்திர நீதித்துறை இருக்கவில்லை.

**பிறேஸ் கேர்டிலின் நாடு கடத்தலுக்கு எதிராகப் போராடிய அக்கட்சி அதைப் பயன்படுத்தி தோட்டத் தொழிலாளர் மத்தியில் தனது ஆதரவைப் பெருக்கிக் கொண்டது.**

**லங்கா சமசமாஜக்கட்சி பிறேஸ் கேர்டில் விவகாரத்தை முன்வைத்துச் செய்த பிரச்சாரம் இலங்கை மக்களிடையே ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை வளர்க்க உதவியது. ஆனால் லங்கா சமசமாஜக் கட்சியின் போராட்டமும் சட்ட சபையின் எதிர்ப்புத் தீர்மானமும் பிறேஸ் கேர்டில் விடுதலையைச் சாத்தியமாக்கியன என்று கூறுவது தவறு.**

வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் குறிப்பிட்டதொரு சமூக வர்க்கத்தின் தேவைகள், நலன்களைப் பேணுவதற்கும் வளர்ப்பதற்கும் தோன்றிய கருத்துக்கள் காலப் போக்கில் மானிடத்தின் மரபுரிமையாகப் (HUMAN HERITAGE) போற்றப்பட்டு வேறுபட்ட வரலாற்று சூழ்நிலைகளில் பயனுடையனவாக மாறுவதைக் காணலாம். இவ்விதமே தனிநபர் உரிமைகளின் சமூக வேர்கள் (SOCIAL ROOTS) முதலாளித்துவத்துடன் தொடர்புடையனவாய் இருந்த போதும், அவை மானிடத்தின் மரபுரிமையாகி விட்டது என்ற வாதத்தினை றெஜி சிறிவர்த்தன முன்வைக்கிறார்.

*SELECTED WRITINGS OF REGI SIRIWARDENA POLITICS AND SOCIETY VOLUME II என்ற கட்டுரைத் தொகுதியில் (பக்கம் 307-329) "THE BRACE GIRDLE AFFAIR IN RETROSPECT: CONTRA DICTIONS OF IMPERIALISM, OF THE POST COLO NIAL STATE AND OF THE LEFT" என்ற தலைப்புடைய ஆங்கிலக் கட்டுரையின் தழுவலாக்கமாக இக்கட்டுரை அமைந்துள்ளது. ஆங்கில நூலைத் தொகுத்துப் பதிப்பித்தவர் A.J. CANAGARATNA ஆவார்.*

*வெளியீடு : INTERNATIONAL INSTITUTE FOR ETHNIC STUDIES COLOMBO (2006)*

பின்காலனியச் சூழலில் ஈழத்துப்புலம் தனக்கான தனித்த அடையாளங்களை, அவற்றைப் பேணுதலுக்கான அக்கறையை கொண்டமைந்ததாக இல்லை. பொருளாதாரம், சமயம், பண்பாடு என எல்லாத் தளங்களிலும் ‘மேனிலையாக்கம்’ எனும் கருத்தாக்கத்தை நோக்கிய பயணத்தையே மேற்கொண்டு வருகின்றது. இத்தகைய பின்னணியில் தன்னடையாளப் பேணுகை குறித்த பிரக்ஞையை ஏற்படுத்துதலின் ஒரு பகுதியாகவே ‘ஈழத்து நாட்டார் தெய்வங்கள்’ எனும் இக்கட்டுரைத் தொடர் அமையப்பெறுகிறது. இதில் ஈழத்தில் மட்டும் சிறப்புற்றிருக்கும் தெய்வங்கள், ஈழத்தில் தனக்கான தனித்துவத்தைப் பெற்றிருக்கும் தெய்வங்கள் என்பன கவனத்தில் கொள்ளப்படுகின்றன. இத்தொடரானது தெய்வங்களை அடையாளப்படுத்துவதோடு அவற்றின் வரலாறு, சமூகப் பெறுமானம், சடங்கு, சம்பிரதாயங்கள், தனித்துவம், இன்றைய நிலை, சமூகத்துக்கும் அதற்குமான இடைவினைகள் முதலான பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக அமைகிறது. கள ஆய்வின் வழி நிகழ்த்தப்படும் இவ்வாய்வு விவரணம், வரலாறு எனும் ஆய்வு முறைகளின்படி எழுதப்படுகிறது. இவ்வாய்வுக்கான தரவுகள் நூல்களின் வழியும் நேர்காணல், உரையாடல், செய்திகள் என்பவற்றின் வழியும் பெறப்பட்டு சமூக விஞ்ஞானப் பார்வையினூடாக ஆக்கப்படுகின்றது.




தி. செல்வமனோகரன்

யாழ்ப்பாண பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீடத்தின் சைவசித்தாந்த துறையின் முதுநிலை விரிவுரையாளராக தி. செல்வமனோகரன் திகழ்கிறார் . இந்திய மெய்யியல் கற்கை புலத்தில் கலாநிதிப் பட்டத்தை பெற்றுள்ளார். இந்துக்கற்கை புலம் சார்ந்து காஷ்மீர சைவமும் சைவ சித்தாந்தமும், இலங்கையில் சைவத்தமிழ் பண்பாட்டு வளர்ச்சியில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நாயன்மார் பாடல்கள், தமிழில் மெய்யியல் எனும் நூல்களை எழுதியுள்ளார். பெறுதற்கரிதான இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை மீள்பதிப்புச் செய்துள்ளார். ‘சொற்களால் அமையுலகு’ என்னும் இவரது நூல் கலை, இலக்கியம் சார்ந்த விமர்சன நூலாகும்.



# மக்கள் மயப்பட்ட வைரவர் வழிபாடு

## அறிமுகம்

இந்திய மண்ணில் தோற்றம் பெற்ற தொன்மைச் சமயங்களில் ஒன்றான சைவத்தின் தொன்மைப் பிரிவுகளில் ஒன்று வைரவம். இது வடநாட்டில் தோற்றம் பெற்றதாகவே பெரிதும் நம்பப்படுகிறது. காவல் தெய்வமாகச் சித்தரிக்கப்படும் வைரவரை சிவனின் அம்சமாகவும் மகனாகவும் புராணங்கள் கூறுகின்றன. இவர் பிரமனின் தலையைக் கொய்தவராகவும், வானவரிடம் கபாலத்தில் இரத்தத்தைப் பெற்றவராகவும், அந்தகாசுரனை வதைத்தவராகவும் சிறுதொண்டர் நாயனாரிடத்துப் பிள்ளைக்கறி பெற்றவராகவும் கூறப்படுகிறார். உக்கிரப் போர்த் தெய்வமாகச் சுட்டப்படுகின்ற இவருக்கு சோதிட நூல்களால் கலக நாளாகக் குறிப்பிடப்படும் செவ்வாய்க்கிழமையே, குறிப்பாகத் தைமாத செவ்வாய்க்கிழமை, உகந்த நாளாகவும் சிவந்த செவ்வரத்தம்பூ உகந்த மலராகவும் பரணி நட்சத்திரம் (போருடன் தொடர்புடையது) உரிய நட்சத்திரமாகவும் கூறப்படுகிறது.

புராணங்கள், இவரை “மஹா வைரவர், கால வைரவர், உக்கிர வைரவர், வடுகநாதர், சட்டைநாதர்” எனப் பலவாறு சித்தரிக்கின்றன. சிவ பராக்கியம் எனும் நூல் அஷ்ட வைரவர்களைக் குறிப்பிடுகிறது. இவ் வைரவரின் தோற்றப் பொலிவு பற்றிப் பல விடயங்கள் கூறப்படினும் பொதுவில் கைகளில் கபாலம், தண்டம், தமருகம், சூலம் என்பவற்றை ஏந்தியரவாகக் கூறப்படுகிறார். உக்கிரப் பார்வை, கோரப் பற்கள், சிலம்பு, சிங்கினி மாலை, பாம்பு

**ஈழத்தில் வைரவர் வழிபாடு வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பெரும்பான்மையாக நாட்டாரியல் தெய்வமாகவும், பெருந்தெய்வமாகவும் வழிபடப்படுகின்றது.**



**நாய் வாகனத்துடன் வைரவர்**

Image Source - www.magzter.com

போன்றவைகளுடன்
கூர்மையான வாள், திரிசூலம், பாசம், அங்குசம், வச்சரம், அக்கினி, கதை, வில், அம்பு, தண்டம், கபாலம், சங்கு, சக்கரம், உலக்கை போன்றவற்றுடன் விளங்குபவராகவும் கூறப்படுகிறார். நாய் வாகனத்தை (தெய்வஞாளி, சுவனம்) உடையவராகச் சித்தரிக்கப்படுகிறார். சாதாரணமாக ஒரு மரத்தின் கீழ் திரிசூல வடிவில் இருப்பது முதல் சகல ஆலயங்களிலும் பரிவார தெய்வமாகவும், வைரவர் கோயிலில் கர்ப்பக் கிரக மூர்த்தியாகவும், வீடுகளிலே காவல் தெய்வமாகவும், குல தெய்வமாகவும், எல்லைத் தெய்வமாகவும் வைரவர் வழிபாடு இடம்பெற்று வருகின்றது. இங்கு வைரவர் வழிபாடானது பண்டைய ஐதீகம் மற்றும் நம்பிக்கையின் அடிப்படையில் வழிபடப்பட்டு வருகின்றது.

## ஈழத்தில் வைரவர் வழிபாடு

ஈழத்து நாட்டாரியல் வழிபாட்டில் முக்கிய காவல் தெய்வமாக வைரவர் காணப்படுகின்றார். முத்தலை சூலத்தை வழிபட்ட மக்கள் அதனை காலனித்துவ காலத்தில் அந்நியரின் மேல் உள்ள பயத்தின் நிமித்தம் தேவை ஏற்படும் பொழுது கிறிஸ்தவ சிலுவையாகவும் (இரு தலைகளையும் மடித்து) பாவித்தனர். இச்சூலத்தை திறந்த வெளிகளில் உள்ள வேம்பு, அரசு, நாவல், ஆல், புளி, மருது போன்ற மரங்களில் கீழ் குத்தி வைத்து வழிபட்டனர். இவையே பின்னர் வைரவராக மாறி உருவ வழிபாட்டோடும் பின்னிப் பிணைந்துள்ளது. ஈழத்தில் வைரவர் வழிபாடு வடக்கு, கிழக்குப் பகுதிகளில் பெரும்பான்மையாக நாட்டாரியல் தெய்வமாகவும், பெருந்தெய்வமாகவும் வழிபடப்படுகின்றது. ஆகமம் சாராத வைரவர் வழிபாட்டிலே வீடுகளில், கோயில்களில், பயிர்ச்செய்கை நிலங்களில், மயானங்களில் இடம்பெறும் வைரவர் வழிபாடுகள் முக்கியம் பெற்றுக் காணப்படுகின்றன. இத் தெய்வத்திற்கு மடை பரவுதல் - வடை மாலை சாத்துதல், பொங்கல், மிருகபலி போன்றன செய்து வழிபடும் மரபு இற்றைவரை காணப்படுகிறது. அத்தோடு வைரவருக்கு பிரதேசப் பண்பாட்டுக் கூறுகளுக்கு இணங்கவும் வழிபாடியற்றப்படுகிறது.

காவல் தெய்வங்களை காணிக்குள் வைத்து வழிபடும் முறை பொதுவாக எல்லாப் பிரதேசங்களிலும் காணப்படுகின்றது. ஆனால் ‘வைரவன் பந்தல்’ அமைத்து வழிபடும் முறை மட்டக்களப்பு பிரதேசத்தவரின் தனித்துவமான முறையாகும். வைரவர் வழிபாட்டின் போது ஒவ்வொரு ஊருக்கும் ஏற்ற வகையில் வீட்டின் புறம்பாக, எதிர்ப்பக்கம் நோக்கிய வகையில் ‘வைரவர் பந்தல்கள்’ அமைக்கப்பட்டிருக்கும். நிரந்தரமாக அமைக்கும் பந்தலினைப் பலமான மரங்களினாலும், கற்களினாலும் வடிவமைப்பார்கள். தற்காலிக பந்தலினை வேம்பு மற்றும் பூவரசம் கம்பினை கொண்டு தட்டுப்பந்தல் வடிவில் அமைத்து தென்னம் ஓலைகளால் வேய்ந்து தென்னங் குருத்துக்களால் சுற்றி வளைத்து அலங்கரிப்பர். வீட்டில் உள்ள வைரவன் பந்தல்களிலே வருடாவருடம் குறித்த

பரம்பரையினரை சேர்ந்தவர்களால் வைரவர் சடங்கானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இது "வைரவருக்குச் செய்தல் எனப்படும். வீடுகளில் தீய சக்திகளின் பார்வையினால் தமது குடும்பத்திற்கு எந்தவித கெடுதலும் இடம்பெறாமல் இருப்பதற்காகவும், தமது வீட்டையும் குடும்ப உறுப்பினர்களையும் வைரவர் காப்பார் எனும் நம்பிக்கையிலும், நோய் நீக்கம், நீண்ட ஆயுள், சந்ததி விருத்தி, தனம், தானியம், செல்வ விருத்தி ஏற்படுவதற்காகவும் பாரம்பரியமாக வைரவர் வழிபாடு இடம் பெறுகின்றது.

## வழிபாட்டு முறைகள்

இங்கு பெரும்பாலும் ஆதி வைரவரை அழைத்தே சடங்கு நடாத்தப்படுகின்றது. சில இடங்களில், வீடுகளில் கல்யாண வைரவர், கொங்கை வைரவர், திரிசூல வைரவர், கபால வைரவர், நரசிங்க வைரவர் போன்றோரை அழைத்தும் சடங்கு நடாத்தப்படும்.

சடங்கு இடம்பெறுவதற்கு முன்னர் தீட்டுக்கள் இன்றி புனிதத் தன்மையைப் பேணும் பொருட்டும், தீய சக்திகளின் பார்வை விலகும் பொருட்டும், மஞ்சள் நீர் தெளித்து வீட்டைக் கழுவி சுத்தம் செய்து சமுத்திர நீர் போன்ற புனித தீர்த்த நீரைத் தெளித்து, வீடு வளவுகளை காவல் செய்து வீட்டினுள் சாம்பிராணி, குங்கிலியம் போன்றவற்றினால் புகையிட்டு வீட்டு முன் வாசலில் வேப்பமிலைப் பத்திரத்தினாலான தோரணம் கட்டுவர். வைரவர் உக்கிரமான தெய்வம் ஆகையால் இரவு வேளைகளிலே இச் சடங்கானது இப்பிரதேசங்களில் நடாத்தப்படுகின்றது. சில இடங்களில் இச் சடங்கு இடம்பெறும் நாள் அன்று "அம்மனுக்குச் செய்தல்" எனும் "சர்க்கரை அமுது படைத்தல்" படையல் சடங்கானது பகல் வேளையும், இரவு வேளைகளில் "பேச்சியம்மனுக்கு" "பள்ளயச்சடங்கும்" நடைபெறும் வழக்காறு உண்டு. இவ் வழக்காற்று முறைகளின் போது உற்றார் உறவினர்கள், அயலவர்கள் குறித்த குடும்பத்தினருடன் இணைந்து சடங்கிற்கான பங்களிப்பினை மேற்கொள்வார்கள். இவ் வேளை சமூகத்தினர் இடையே பரஸ்பர தொடர்பு, ஒற்றுமை முதலான விழுமியப் பண்புகள் விருத்தியடைகின்றன.

வீடுகளில் வைரவருக்குச் சிலை அமைத்து வழிபடும் மரபு காணப்படுவதில்லை. திரிசூலம் அல்லது இரட்டைத் திரிசூலம், கல், தென்னம்பாளை, கமுகம் பாளை, செவ்விளநீர், கருங்காலிப் பொல்லு (தண்டம்) என்பன வைரவர் குறியீடாக வைக்கப்பட்டு "மடை வைத்தல்" சிறப்பாக இடம் பெறுகின்றது. வீடுகளில் பூசை வழிபாடானது குறித்த பரம்பரையைச் சேர்ந்த ஒருவரினாலோ அல்லது பூசகரை அழைத்தோ இடம்பெறும். மட்டக்களப்பு தெய்வ வழிபாட்டு முறையில் ஒவ்வொரு தெய்வத்திற்கும் விசேடமான மடைப் பொருட்கள் காணப்படுகின்றன. அரிசிமா ரொட்டி, தவிட்டு ரொட்டி, கஞ்சா ரொட்டி போன்ற ரொட்டி வகைகளும், செவ்விளநீர், கரும்பு, கதலி வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் போன்ற நார்ப்பழ வகைகளும் சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல், பஞ்சாமிர்தம், பாணக்கம், துள்ளுமா, உளுந்து வடை, பூக்கள், வெற்றிலை, பாக்கு, வில்வம் பத்திரம், வேப்பம் பத்திரம் என்பனவும் சிறப்பாக சிவப்பு நிற மலர்கள், கள்ளு, சாராயம் போன்றவையும் வைக்கப்பட்டு மடை அலங்கரிக்கப்படும். ஆதி வைரவரை அழைத்து சடங்கு செய்யும் சில வீடுகளில் கஞ்சா ரொட்டி, கள்ளு, சாராயம் போன்றவற்றை வழிபாட்டின் போது சேர்த்துக் கொள்வது குறைவு.



**மரத்தடியில் வைரவர் - ஒலுவில்**

Image Source - www.oluvilvairavar.com



வைரவர் சிலை
Image Source - www.kalainaalithazh.com

ஆனால் ஏனைய சில வைரவ மூர்த்தங்களை அழைத்து வழிபாடு செய்கின்ற இல்லங்களில் மதுப் பொருட்கள் வைத்து வழிபடப்படும் மரபு காணப்படுகின்றது. ஆரம்ப காலங்களில் வைரவருக்கு தேன் வைத்து வழிபடப்பட்டிருந்த முறையே பிற்காலத்தில் மதுப்பொருட்களாக மாற்றமடைந்து இருக்கலாம். ரொட்டி செய்யப்படும் போது சில இடங்களில் தேங்காய்ப்பூ, உப்பு என்பன கலந்தும் சில இடங்களில் தனி மாவினாலும் செய்வர். மணி ஒலி எழுப்புதல், தீபம் காட்டுதல், உடுக்கை ஒலித்தல், வைரவ தோத்திரங்கள், காவியங்கள் பாடுதல் என்பவற்றோடு சில இல்லங்களில் வைரவர் உருக்கொண்டு வந்து கலையாடுதல், வாக்குச் சொல்லுதல் என்பனவும் இடம்பெறும். சடங்கு வழிபாடு நிறைவு பெற்றதும் தண்ணீர் தெளித்து மடை பிரிக்கப்பட்டு பிரசாதங்கள் பகிர்ந்து அளித்தலுடன் வீட்டுச் சடங்கு நிறைவுபெறும்.

வைரவர் சடங்கு வழிபாடுகளில் பொதுவாக மண்டபம் அமைத்தல், மண்டபம் காவல் பண்ணுதல், கும்பம் வைத்து மடைகள் வைத்தல், கலையாடுதல், தேவாதிகளை கட்டுக்கு வைத்து ஆட்டத்தை ஊக்குவித்தல், தேவாதிகளை யாரும் கட்டினால் வெட்டி ஆடுதல், காவியம் பாடுதல், பள்ளயம் அல்லது பலி கொடுத்தல், வழிபடுதல் முதலிய சடங்கு நிகழ்ச்சிகள் இடம்பெறும். வைரவர் சடங்கின் போது தெய்வம் ஆடுதலில் உடுக்கை, தவில், சிலம்பு, அம்மானைக் காய், சாட்டை போன்ற கருவிகள் பயன்படுத்தப்படும். இவ்வேளை வாக்குச் சொல்லுதல், தீய சக்திகளை விலக்குதல், கழிப்புச் சடங்கு, பலியிடுதல் போன்றவை இடம்பெறும். இங்கு பலியிடலுக்காக ஆடு, கோழி போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. இன்று பலியிடலின் மாற்றீடாக நீத்துப் பூசணிக்காய் பயன்படுத்தப்படுகின்றது. இங்கு வைரவருக்குரிய சிறப்பு வாய்ந்த தோத்திரம், காவியம், அகவல், தாலாட்டு என்பன பாடப்படுகின்ற வழக்கம் காணப்படுகின்றது.

சுடலைக்கு அண்டிய பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் குழுவினர் சுடலை வைரவர் வழிபாட்டினை மேற்கொள்வர். இவ் வழிபாட்டின் போது பனை ஓலைகளினால் இழைத்த பெட்டி ஒன்றினுள் கள்ளு, சாராயம், கஞ்சா ரொட்டி, மொந்தன் வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு வைக்கப்பட்டு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு குறித்த ஒரு இடத்தில் மடை வைக்கப்பட்டு தேங்காய் உடைத்து, கற்பூர தீபம் ஏற்றி குறித்த குடும்பத்தினைச் சேர்ந்த நபரின் மண்டாட்ட வேண்டுதலுடன் சுய வழிபாட்டு முறையில் வைரவர் வழிபாடு இடம்பெறும்.

வைரவர், ஆகமக் கோயில்களில் பரிவார மூர்த்திகளில் ஒருவராகவும் காவல் தெய்வமாகவும் கூறப்படுகிறார். மகோற்சவ ஆரம்பத்தில் கிராம சாந்தியில் வைரவ வழிபாடு இடம்பெறுகின்றது. ஆலய உற்சவ காலங்களின் போது இக் கிரியையானது குறித்த ஆலயத்தில் உள்ள கிராமத்திற்கு எந்தவித இடையூறும் நேர்ந்திடா வண்ணம் மேற்கொள்ளப்படும். உற்சவம் முடிவடைந்ததும் வைரவர்க்குரிய விசேட அபிடேக ஆராதனையுடன் பூசை இடம்பெறும். வைரவர் கோயிலை காவல் செய்யும் தெய்வம் மாத்திரமல்ல, அவர் சுற்றாடலையும் காக்கின்றார். மகோற்சவ காலங்களில் வைரவரைக் கட்டுதல், வைரவர் சாந்தி செய்தல் முதலானவை நடைபெறுவதையும் அவதானிக்கலாம்.

ஈழத்தில் சிறு தெய்வமாக, பெருந்தெய்வமாக வைரவ வழிபாடு பெருஞ்செல்வாக்குற்றுக் காணப்படுகிறது. இதற்குப் பின்வரும் காரணங்களைச் சுட்டலாம்.

1. கந்தபுராணச் செல்வாக்கு.
2. ஈழத்தில் ஆதிக்க மதமான சைவம் (இந்து சமயத்துள்) இருத்தலும், வைரவர் சிவனின் அம்சமாக எடுத்துரைக்கப்படுதலும்.
3. ஒல்லாந்தர் கால சமய அடக்குமுறை அல்லது ஆதிக்க சக்திகளுக்கு எதிரான குரல்.
4. சூல வழிபாட்டு முறை – எளிய வழிபாட்டு முறை
5. சைவ மேனிலையாக்கம் அல்லது சமஸ்கிருத மயமாதல்

“யாழ்ப்பாணக் கலாசாரம், கந்தபுராணக் கலாசாரம்” என்பார் பண்டிதமணி. கந்தபுராணம் முன்னிறுத்தும் சிவகுமாரர்களுள் வைரவர் ஒருவர் என்பதும் அவர் உக்கிர அம்சமாக சுட்டப்படுவதும் இங்கு உற்று நோக்கத்தக்கது. வைரவ வழிபாடு எப்போது ஈழத்திற்கு வந்தது என்பது தெளிவாக உரைக்க முடியாத ஒன்றாகவே உள்ளது.

காலனித்துவ ஆட்சிக்குட்பட்டிருந்த ஈழத்தில் சுதேச சமயமான சைவ சமயத்தை நிலைநாட்ட அக்கால மக்கள் பயன்படுத்திய உபாயமாகவும் முக்கிய செயற்பாடாகவும் அமைந்தது திரிசூல வழிபாடாகும். இத் திரிசூல வழிபாடு என்பது பெரிதும் வைரவர் வழிபாடாகவே அமைந்திருந்தது. சுதேச சமய நடைமுறைகளைப் பின்பற்றுதல் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்ட அச்சூழலில் மரங்கள், நீர்நிலைகள், விவசாய உற்பத்தி நிலங்கள், சில மறைவிடங்கள் என்பவற்றில் இவ் வைரவ வழிபாடு நிகழ்த்தப் பெற்றுள்ளது.

ஒல்லாந்த அரசின் அடக்குமுறைக்கெதிரான மௌனக் குரலாகவும் குறியாகவும் சூலத்தைக் குறிப்பிடலாம். அதேவேளை பரமனை மதித்திடாத பங்கையாசனனுக்கு நிகழ்ந்ததே ஒல்லாந்தருக்கும் நிகழும் என்பதைக் குறியீடாக சைவ வழிபாட்டினூடு உணர்த்தியிருக்கக் கூடும். வானவர் தலையைக் கொய்ததன் குறியீடான மண்டையோட்டு மாலையைக் குறிப்பதாக அமைந்த உழுந்துவடை மாலையும் குருதி பெற்ற கதையினடையாளமாக சிவப்புநிற செவ்வரத்தம் பூ தரித்தலும் ஒல்லாந்தருக்கான எச்சரிக்கையாகவும் அல்லது சுதேச சமயத்தை ஒடுக்கும் அதிகாரத்திற்கு எதிராக மக்களைக் கொதி நிலையில், உணர்ச்சிப் பிரவாகத்தில் வைத்திருக்கும் செயற்பாடாகவும் வைரவ வழிபாடு முன்னிறுத்தப்பட்டிருக்கலாம். தாம் தாம் விரும்பிய நிலையிலும் வகையிலும் மிருகபலி, மடை பரவுதல் தொட்டு ஆகமப் பண்பாடு வரை வைரவ வழிபாடு அகலக் காலூன்றி நிலைத்து நின்றது. ஆகமப் பண்பாட்டை முன்னிறுத்தி சைவ மீட்டுருவாக்கத்தைச் செய்த ஆறுமுகநாவலர் சிவபெருமானின் மகன்களில் ஒருவராக வைரவரைச் சுட்டி அவ் வழிபாட்டை உள்ளீர்த்தமை யாழ்ப்பாணத்தில் அவ் வழிபாட்டுக்கான மேனிலையாக்கத்தையும் ஸ்திர நிலையையும் வழங்கியது.

யாழ்ப்பாணத்தின் அவ்வவ் சமூகத்தின் நோக்கிற்கேற்ப வைரவர் காலவைரவர், வடுகவைரவர், ஆதிவைரவர், கபாலவைரவர், நரசிம்மவைரவர், கிங்கிலியவைரவர் எனப் பலவாறு வழிபடப்பட்டு வருகின்றார். அதேபோல ஆலயம் அல்லது சூலம் அமைந்திருக்கும் இடத்தை வைத்துக் கொண்டு இத்தியடி வைரவர், சுடலை வைரவர், ஆலடி வைரவர் எனப் பலவாறு சுட்டப்படுகிறார். ஆகமக் கோயில்களில் வடுகநாதராகவும், ஷேத்திர பாலகராகவும் காளியின் தலைவராகவும் சுட்டப்படுகிறார். இணுவில், தெல்லிப்பளை, உரும்பிராய், சிறுப்பிட்டி, வடமராட்சி உள்ளிட்ட பல இடங்களில் ஆகம மயப்பட்ட, ஆகம மயப்படாத மிருகபலியோடு கூடிய நாட்டாரியல் பண்புகள் நிறைந்ததான வைரவர் வழிபாட்டு மரபுகள் இன்றுவரை காணப்படுகின்றன.

## சமகாலப் பயில்வுகள்

காலனித்துவ அதிகாரத்திற்கெதிரான, ஒலி வெளிப்படாத, ஆழ ஊடுருவித்தாக்கும் கலகக் குரலாகவே போர்த் தெய்வமான வைரவரும் ஆயுதமான திரிசூலமும் கட்டமைக்கப்பட்டன. ஜனநாயகமான, பேதமற்ற - சாதியக் கட்டுமானம் தாண்டிய மக்கட் தெய்வமாக வைரவர் விளங்குகின்றார். நாவலர் வைரவரை சிவனினம்சமான மகனாக எடுத்துரைத்து மேனிலைத் தெய்வமாக்கினார். இதன்வழி நாட்டாரியல் வழிபாடு, ஆகம வழிபாடு எனும் இருதள மரபிற்குரியதாக, சிறுமரபு - பெருமரபு என வைரவ வழிபாடு மாற்றமுற்றது. பின்

இருபதாம் நூற்றாண்டின் அறுபது எழுபதுகளில் ஏற்பட்ட சிந்தனை மாற்றம், இலவசக் கல்வி, போன்றனவும் நகரமயமாதலும் வைரவ வழிபாட்டை பெருமரபாக்கின. இன விடுதலைப் போராட்டத்தின் எழுச்சி, பேரினவாதத்தின் ஒடுக்குமுறை, போர் என்பன வைரவ வழிபாட்டை மீள் முக்கியத்துவம் பெறச் செய்தன. 1995 இல் ஏற்பட்ட இடப்பெயர்வின் பின்னான மீள் வருகை புதிய அசைவியக்கங்களை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தியது. இராணுவக் கட்டுப்பாடு, மின்சாரம், தொழில்நுட்பத் தொடர்பாடல் வசதிகள், பொருளாதாரத் தடைநீக்கம், திறந்த பொருளாதாரம், சடுதியான வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் (சட்ட ரீதியாவும், களவாகவும்), பொருளாதார ஏற்றம், கல்வி என்பன அவற்றுள் சில. இதன் வழி வாழ்க்கைத் தரம் உயர்கிறது. யுத்தத்தின் நேரடித் தாக்கம் ஓரளவு குறைந்ததனால், மக்கள் தெய்வமாக யுத்தத்தின் அடையாளமாக இருந்த வைரவரை மக்கள் தம் மனங்கட்கேற்ப, சாந்த சொரூபியாக 'ஞான வைரவராக' மாற்றி விடுகின்றனர். ஆகம மரபுவழி ஆலயங்கள் புனருத்தாரணம் செய்யப்படுகின்றன. பிராமணர்கள் பூசை செய்ய நியமிக்கப்பட்டு அலங்கார உற்சவங்கள் நடைபெறுவனவாக வைரவர் கோயில்கள் மாறின. சில ஆலயங்களில் இரதோற்சவங்களும் நடைபெறுகின்றன.

ஆயினும் சமகாலத்தில் வைரவர் வழிபாட்டில் சுதேச பாரம்பரியங்களில் கலப்புகள் ஏற்படுத்தப்படுகின்றது. இதனால் கலப்புறு பண்பாடு தோற்றம் பெறுகிறது. ஆகம விதிமுறைகளுக்கு உட்பட்ட அம்சங்களும், ஆகம விதிமுறைகளுக்கு உட்படாத அம்சங்களும் இணையும் போது இங்கு புதிய கலப்புறு பண்பாட்டம்சங்கள் தோன்றி இரண்டு முறையான வழிபாடுகளையும் ஒரே தளத்தில் இடம்பெறச் செய்கின்றன. வைரவருக்கு உயிர்ப்பலி அதிகமாக கொடுக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது ஒரு சில இடங்களிலேயே உயிர்ப் பலி மேற்கொள்ளப்படுகின்றது.

நகரமயமாதல், உலகமயமாதல், மேனிலையாக்கம் எனும் தளக்கூறுகளின் வழி ஏற்பட்ட சமூக அசைவியக்கமாகவே நாட்டார் பண்பாட்டின் அடையாளமாகக் கருதப்பட்ட



ஞான வைரவர் ஆலயம் - தலையாழி

Image Source - ta.wikipedia.org

யாழ்ப்பாண வைரவர் வழிபாடு, பெருமரபாக சமஸ்கிருத மயமாதலுக்குள்ளான பெருந் தெய்வமாகி சமூக, சாதி அந்தஸ்தை நிலைநாட்டுவதற்கான சமூகக் குறியீடாக சூலக் குறியீட்டைப் புறந்தள்ளி, கருங்கற் தெய்வமாக எழுச்சி பெற்று நிற்பதை இன்று அவதானிக்க முடிகிறது. இம் மேனிலையாக்கம் இன்று வடக்கு, கிழக்கு மட்டுமின்றி இலங்கை முழுவதும் மிகவும் வேகமாக நிகழ்ந்து வருவதைக் காணமுடிகிறது.

## நிறைவுரை

சமஸ்கிருத மயமாதலுக்கும் சாதி, வர்க்கப் படிநிலைக்கும் இடையேயான இயங்கு நிலை அவதானத்திற்கு உரிய ஒன்றாகும். அதிகாரமிகு சாதியத்திற்கும் சமஸ்கிருத மயமாதலுக்கும் இடையிலுள்ள உறவுநிலை கெட்டித்த தன்மையுடையதாகும். அதனாலேயே கீழ்நிலையிலிருந்து மேலெழ விரும்பும் குறித்த மனிதர், குறித்த சாதி, குறித்த வர்க்கம் அதிகார மனிதர்களின் சாதிக்கோ வர்க்கத்திற்கோ சமமாகத் தன் அந்தஸ்தை ஆக்கிக் கொள்ள முயற்சிக்கிறது. இம் முயற்சிக்கு அனுசரணை செய்வன பொருளாதாரம், அதிகாரம், சடங்கு எனும் தகுதிப்பாடுகளாகும். இவற்றில் பெரும்பான்மையைத் தனதாக்கிக் கொள்வதன் மூலம் தன்னதிகாரத்தை - சமூக அந்தஸ்தைப் பெற்றுக் கொள்ள முடிகிறது. இதன் வெளிப்பாடே சுடலை வைரவரும் கிணற்றடி வைரவரும் முச்சந்தி வைரவரும் 'ஞான வைரவரான' வரலாறு. ஆகவே இதில் சாதிய, வர்க்க அமைதி கிடைக்கின்றதே அன்றி உண்மையான ஆன்மீக அமைதி சாத்தியமற்றுப் போகின்றது.

(தொடரும்)

மரபுரிமைகள் பற்றிய அக்கறை நம் சமூகத்தில் அருகிக்கொண்டே சென்றுகொண்டிருக்கிறது. இந்த நிலையில், அத்தகைய அரும்பொருள்களைப் பற்றிய பிரக்ஞையையும், அறிமுகத்தையும், அவற்றைக் காப்பதற்கான அருட்டுணர்வையும் 'மரபுரிமைகளைப் பறைதல்' என்ற இந்தக் கட்டுரைத்தொடர் உண்டாக்க விழைகின்றது. வெறுமனே மரபுரிமைப் பொருட்களை அடையாளப்படுத்துவதோடு நின்றுவிடாமல், அகழ்வாய்வுகளின் தன்மைகள், மரபுரிமை பற்றிய மாற்றுச் சிந்தனைகள், புதிய நோக்குகள், மரபுரிமைச் சின்னங்களை சுற்றுலாத் தலங்களாக மாற்றுவதற்கான சாத்தியங்கள் , அவற்றின் தொடர் பேணுகையும் அதற்கான வழிமுறைகளும், சமயங்களுக்கும் மரபுரிமைகளுக்கும் இடையிலான ஊடாட்டங்கள் என்று பரந்துபட்ட நோக்கில் இந்தக் கட்டுரைத்தொடர் மரபுரிமைசார் விடயங்களை வெளிப்படுத்தும். கள ஆய்வினையே பிரதான ஆய்வுமூலமாகக் கொண்ட இந்தக் கட்டுரைத்தொடரில், நூல்களில் இடம்பெற்றுள்ள மரபுரிமைசார் விடயங்கள், செவிவழிக்கதைகள், மக்களுடனான உரையாடல்கள், நம்பிக்கைகள், ஐதீகங்கள், ஊடகச் செய்திகள் மற்றும் கட்டுரைகள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு, விஞ்ஞானபூர்வமான நோக்குநிலையில் இந்தக் கட்டுரைத்தொடர் அமைகின்றது.

# எரிக்கப்பட்ட நூலகங்களும் எரிபடமுடியா நூலகக் கனவுகளும் : நூலக நிறுவனம்




பாக்கியநாதன் அகிலன்

பாக்கியநாதன் அகிலன் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டத்தினையும் (கலை வரலாறு), பரோடா மகாராஜா சயாஜிராவ் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் (கலை விமர்சனம்) பட்டத்தினையும் பெற்றுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் முதுநிலை விரிவுரையாளாகப் பணிபுரியும் அகிலன் தனது கலாநிதிப்பட்ட ஆய்வை புதுதில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டுவருகின்றார்.

'பதுங்குகுழி நாட்கள்', 'சரமகவிகள்', 'அம்மை', 'எங்கள் மண்ணும் இந்த நாட்களும்' என்பன இவரது கவிதைத் தொகுப்புகளாகும்.

இவரின் ஏனைய நூல்களாகக் 'காலத்தின் விளிம்பு' என்ற மரபுரிமை சார்ந்த நூலும் 'குழந்தை ம. சண்முகலிங்கத்தின் நாடகங்கள் ஐந்து' ஆகியவை அமைவதுடன் 'வெங்கடசாமிநாதன் – வாதங்களும், விவாதங்களும்' என்ற நூலின் தொகுப்பாசிரியர்களுள் ஒருவராகவும் உள்ளார்.




வோர்சோ கலகத்தின் பின்னர் நாசிகளால் எரிக்கப்பட்ட போலந்தியர்களுக்குச் சொந்தமான புராதனச் சுவடிகளின் சாம்பல்

Image Source - commons.wikimedia.org

1981 இல் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டபோது குடாநாட்டின் தென்மேற்குக் கரையோரமாக அமைந்திருக்கும் அராலியில் இருந்தேன். அது என்னுடைய தாயாருடைய ஊர். நூலகம் எரிந்தபோது கடலில் வீழ்ந்த தீச்சுவாலை காரணமாக அராலிக்கடல் தீப்பற்றி எரிவதாக சிறுவனான நான் நினைத்துக்கொண்டேன். அது

என் முதற் பீதிகளில் ஒன்றாய் அமைந்தது. அதற்குப் பின்னால் அடுக்கடுக்காய் பல விடயங்கள் நடந்தேறின. நெருப்பு மூண்டு எரியத் தொடங்கியது. சேரன் தனது 'இரண்டாவது சூரியோதம்' கவிதைத் தொகுதியில், "முகில்களின் மீது நெருப்பு தன் சேதியை எழுதியாயிற்று" என இந்த நிகழ்சியை இலக்கியச் சாட்சியம் செய்தார். ஆயிரமாயிரமாய் இளைஞர்கள் ஆயுதப் போராட்டம் நோக்கித் திரும்பக் காரணமாய் அமைந்த முதன்மைச் சம்பவங்களில் இதுவும் ஒன்றாய் அமைந்தது. கடல் எரியாது நூல்களும், நகரமும் எரிந்துபோன அந்த இரவுக்குப் பின்னர் கடல் எரிந்த நாட்களும், வானம் தீப்பீடித்த நாட்களும் உருவாகின. நகரமும் நூல்களும், பின்னரும் பல தடவை எரிந்ததைக் காணவேண்டி விதிக்கப்பட்ட ஒரு துர்ப்பாக்கியமுடைய தலைமுறையிலிருந்து நான் வந்திருந்தேன்.

1990 களில் இன்னொரு பெரும் நூலழிவு யாரும் அறியாமல் செம்மணிவீதியில் நிகழ்ந்து முடிந்தது. அது நூல்களாற் கட்டப்பட்டது என நான் பல தடவை நினைத்த, பல்லாயிரம் நூல்கள் நிறைந்த மயிலங்கூடலூர் பி. நடராஜனின் வீடு இராணுவத்தால் அழிக்கப்பட்டபோது நடந்தேறியது. அதற்குப் பின்னால் அவரது வீடாயிருந்த மண்மேட்டிலிருந்து கிழிந்து எஞ்சியிருந்த புத்தகத்தின் பக்கங்களை அவர் சேகரித்து குறிப்புப் புத்தகத்தில் ஒட்டிக்கொண்டிருந்ததை காண நேர்ந்தமை மட்டுமின்றி, அவருக்கு நேர்ந்த நினைவுப் பிறழ்வையும் அதனைத் தொடர்ந்த அவரது நடைப் பிண வாழ்வையும் காணவேண்டிய துர்பாக்கியமுடைய மாணவனாயும் நானிருந்தேன். 2009 இல் வன்னியில் குரும்பசிட்டி கனகரத்தினத்தினதும் கலைஞானியினதும் பல்லாயிரக்கணக்கான நூல்கள் உள்ளிட்ட பல சேகரங்கள் அழிந்தபோது முகில்களை எரித்த நெருப்பே முடிவடையாத செய்தியானது. அது திரும்பத் திரும்ப ஒரே சேதியை மறுபடி மறுபடி எழுதிற்று. இலங்கையின் இனத்துவ அரசியல் பின்புலத்தில் இவையாவும் கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை வடிவங்களாக இனங்காணப்படுகின்றன.

இத்தகைய பகைப்புலத்தில் தான் எரிக்க



மயிலங்கூடலூர் பி. நடராசன்
Image Source - www.geotamil.com

முடியாத நூலகக் கனவுகள் ஈழத்தமிழர்கள் மத்தியில் உருவானது. எரிந்த நூலகத்தைக் கண்டவொரு இளைய தலைமுறை எரிக்கப்பட முடியாத ஒரு நூலகத்தை நோக்கி கனவு காணத் தொடங்கியது. அந்தக் கனவு நூலக நிறுவனம் எனும் ஒரு வடிவமாகியது. புதிய தொழில்நுட்பச் சாத்தியங்கள் எரிக்க முடியாத நூலகக் கனவை நனவாக்க முயன்றன. பூச்சிய வெளியில் நூல்களின் பெரும்பரப்பு எண்மிய அலுமாரிகளில் உட்காரத் தொடங்கியது. என்னைப் பொறுத்தவரை நூலகத்தின் வருகை என்பது ஒரு மாற்று நினைவுச் சின்ன உருவாக்கத்தையும், நினைவுகூரும் செயற்பாட்டையும் உள்ளடக்கிய ஒரு எதிர்ப்பு நிலையுமாகும் (Memorial, memorization and resis tance). அவ்வகையில் நூலக நிறுவனம் இலாப நோக்கற்ற ஒரு அறக்கட்டளையாகும்.

'இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் எழுத்தாவணங்களை எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தும் செயற்பாடுகளை ஊக்குவிப்பதோடு, தகவல் வளங்களையும் அறிவுச் சேகரங்களையும் ஒழுங்குபடுத்தி அனைவருக்கும் கிடைக்கச் செய்துவரும் இலாப நோக்கற்ற தன்னார்வ முயற்சி' என தன் செயற்பாட்டு அடிப்படையை நூலக நிறுவனம் கூறுகிறது (மேலதிக விபரங்களுக்கு : https://noolaham.foundation/wiki/index.php/Main_Page).

நவீனத்துவத்தின் உருவாக்கத்தில் அச்சு முதலாளித்துவத்தின் பங்கு என்பது மிகப் பிரமாண்டமானது. 19 ஆம் நூற்றாண்டு தமிழ் பண்பாட்டு வெளி என்பது அச்சுடல்களால் நிரப்பப்பட்டது. அது இலட்சக்கணக்கான நூல்களை மூலைமுடுக்கெல்லாம் பல்வேறு வடிவங்களில் பெருக்கிற்று. அச்சும் அச்சுக்கூடங்களும் அச்சகர்களும் நவீனத் தமிழில் மிகப்பெரிய கருத்து முகவர்களாக மாறினர். நூல்கள், கருத்து மோதல்களின் அச்சிடப்பட்ட களங்களாயின. மதங்கள் மோதின, சாதிகள் மோதின, ஒடுக்கப்பட்டவர்களின் குரலாக நூல்கள் மேலெழுந்தன. குரலற்றவர்களின் குரலாக அச்சுடல்கள் உருவாகின. கருத்துச் சுதந்திரத்தின், ஜனநாயகத்தின் காவிகளாக அவை உலாவரத் தொடங்கின. அறிவை மக்கள் மயப்படுத்தும் பெரும்பணியை அச்சுடல்கள் செய்தன.



கலைஞானி செல்வரத்தினம்

வேறுபட்ட சிந்தனைப் பள்ளிகள், வேறுபட்ட நிலவுருக்கள், மனித உணர்வுகளின் பலவகைக் களங்கள், அவற்றின் புதிய வடிவங்கள் என அச்சுடல்கள் தமிழை நவீனத்தை நோக்கித் திறந்துவிட்டன. தமிழின் முதல் தினசரிகள், வாராந்தப் பத்திரிகைகள், சமூகத்தின் வெவ்வேறு அடுக்குகளில் உள்ளவர்களின் பிரதிநிதித்துவம் என அவை விரிந்தன. அச்சுடல்கள் தேச எல்லைகளைக் கடந்து பிரயாணம் செய்தன. எல்லைகளை பலபோது அழித்தன. பினாங்கு முருகனுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து பதிகம் எழுந்தது. தூத்துக்குடியிலிருந்து யாழ்ப்பாணத்து அந்தோனியாருக்கு அந்தாதி வந்தது. அலோபதி வைத்திய நூல்களை மருத்துவர் கிறீன் யாழ்ப்பாணத்தில் இருந்து தமிழுக்கு முதலில் கொண்டு வந்தார். அவை ஒரு மொழிபெயர் உலகத்தைத் திறந்தன.

அச்சு முதலாளித்துவத்தின் இன்னொரு பரிமாணமாய் ஓலைச்சுவடிகளிலிருந்த நூல்கள் அச்சுவாகனம் ஏறின. ஆறுமுகநாவலர், சி.வை. தாமோதரம்பிள்ளை, சி.வை. தாமோதரம்பிள்ளையூடாக உ.வே. சாமிநாதையர் என விரிந்து பரந்த ஒரு தலைமுறை இலகுவில் அழியக்கூடிய, பிரதி செய்யக் கடினமான ஓலைச் சுவடிப் பிரதிகளை அச்சு வாகனமேற்றி பல்பிரதியாக்கம் செய்தது. அத்துடன் அவற்றை தமிழ் பயிலும் பல களங்களுக்கும் எடுத்துச் சென்றது. நூல்களால் ஒரு பெரும் பண்பாட்டுப் பரப்பு உருவாகிற்று. நூல்கள், வாங்கப்படும், கையளிக்கப்படும், வீடு தோறும் சேகரிக்கப்படும் அறிவுடல்களாயின. மேட்டுக்குடி வீடுகளில் படிப்பறைகள் உருவாகின.

வாசிகசாலைகளும் வாசகர்களும் பெருகினார்கள். யாழ்ப்பாணத்து அரசர்கள் ‘சரஸ்வதி மஹால்’ என்ற பெயரில் நல்லூரில் ஒரு நூலகத்தை வைத்திருந்தார்கள் எனக் கூறப்படுகிறது. அப்படியொரு நூலகத்தை எமக்கு உறுதிப்படுத்துவதில் சிக்கல்கள் இருந்தாலும் கூட உ.வே சுவாமிநாதையரும் சி.வை தாமோதரம்பிள்ளையும் பல பண்டைய கால நூல்களை தேடிய காலத்தில் தமிழகத்தில் கிடைக்கப்பெறாத பல ஓலைச்சுவடிகளை யாழ்ப்பாணத்தில் கண்டெடுத்தார்கள். இது ஒரு பெரும் நூல்சேகரிப்பு இந்தப் பிராந்தியத்தில் இருந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தை வலுப்படுத்துகிறது. பழம்பெரும் ஆலயங்கள் கூட குறைந்தபட்சம் புராணம் முதலான சமயம் சம்மந்தப்பட்ட ஓலைச்சுவடிகளது மையங்களாக இருந்திருக்க வாய்ப்புகள் அதிகம். இன்றும் யாழ்ப்பாணத்தில் இருக்கும் பழமையான கந்தபுராண ஏடு பொலிகண்டி முருகன் கோயிலுக்குரியது. இவற்றுக்கெல்லாம் பின்னால் சட்டத்தரணி நாகலிங்கம் யாழ்ப்பாணத்தின் முதல் நூலகமாக கருதப்பட்ட ‘விக்டோரியா றீடிங் ஹோலை’ உருவாக்கினார். அவரது இந்திய சுதந்திரப்

போராட்ட வங்காள அனுபவங்கள் அதற்குப் பின்னால் இருந்தன. பின்னர் அது யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் நூலகமாகிற்று. இதன் பின்னர் யாழ்ப்பாண பொதுசன நூலகத்துக்கான முதலாவது அடி செல்லப்பாவினால் சிறுப்பிட்டியில் உருவாகியது. அது பின்னர் யாழ்பாணம் பெரிய கடைக்கு வந்தது. மெதுவாக விரிந்து பொதுமக்களிடமும் பணம் சேர்த்து பொதுசன நூலகம் நோக்கி அது நகரத் தொடங்கியது. அது எரிக்கப்பட்டபோது தனிநபர் சேகரிப்புகளாக இருந்த ஏறத்தாழ ஒரு இலட்சம் நூலுடல்கள் ஓர் இரவில் எரிந்து சாம்பலாகின. இந்தச் சாம்பல், பல தலைமுறையின் கோபமாக இன்னமும் பண்ணைக் கடலில் மேல் படிந்திருக்கிறது.

**நூல்கள் என்பன ஒரு பௌதீக பொருண்மை மட்டுமல்ல அவை ஒரு சமூகத்தின் அந்தராத்மாவை, சிந்தனைகளை, நெருக்குவாரங்களை, கருத்தாக்கங்களை காவுகின்ற ஒரு அறிவு வெளியுமாகும். அவை சமூகத்தின் மேன்மையினதும் கீழ்மையினதும் சாட்சியங்களாகும் என்பதுடன் குறிப்பிட்ட சமூகத்தின் மரபுரிமையாகவும் அறிவு வரலாற்றின் தடயங்களாகவும் திகழ்கின்றன.**

நூல்கள் என்பன ஒரு பௌதீக பொருண்மை மட்டுமல்ல அவை ஒரு சமூகத்தின் அந்தராத்மாவை, சிந்தனைகளை, நெருக்குவாரங்களை, கருத்தாக்கங்களை காவுகின்ற ஒரு அறிவு வெளியுமாகும். அவை சமூகத்தின் மேன்மையினதும் கீழ்மையினதும் சாட்சியங்களாகும் என்பதுடன் குறிப்பிட்ட சமூகத்தின்  மரபுரிமையாகவும் அறிவு வரலாற்றின் தடயங்களாகவும் திகழ்கின்றன. அவை எழுதுவதால் மட்டுமன்றி வாசிப்பதனாலும் ஒரு சமூகத்தை கட்டியமைப்பன. அறிவைப் பரவலாக்கம் செய்தல் என்ற செயற்பாட்டில் நூல்களும் நூலகங்களும் முக்கியமான பங்கை ஆற்றியுள்ளன. ஆரம்ப நவீன கால மேற்கத்தேய நாடுகளிலிலுள்ள மேட்டுக்குடி வீடுகளில் வாசிப்பு அறை எனும் நூலக அறை கட்டடக்கலையின் ஒரு பகுதியாகவும் அவர்களது அறிவியல் நாட்டத்தின் வெளிப்பாடாகவும் காணப்பட்டது. அதுவே இன்று மேற்கத்தேய நாடுகளில் உருவாகிய மாபெரும் நூலகங்களினதும் சுவடிக் கூடங்களினதும் மூலங்களாய் அமைந்தன.

இத்தகைய நூல்களாலான உலகளாவிய பண்பாட்டு நிலவுருக்களில் ஒன்றாக ஈழத் தமிழர்களது வாழிடங்களும் காணப்படுகின்றன. திண்ணைப் பள்ளிகளும், கோயில்களது புராணபடன மரபுகளும், காலனிய காலப் பள்ளிக்கூடங்களும் நூல் மாந்தும் ஒரு பெரிய சமூகத்தைக் கட்டியமைத்தன. இன்று வரைக்கும் ஒரு சிறு சமூகத்தில் வருகின்ற பல பத்திரிகைகள் இவற்றின் தொடர்ச்சிதான். அவற்றுக்கொரு பிராந்தியத் தனித்துவம் இருந்தது. இந்த நூல்கள் தமிழில் ஒரு பொதுப் பரப்பை பிரதிநிதித்துவப்படுத்தும் அதேவேளை ஈழத் தமிழின் தனி அடையாளத்தையும் வேறுபட்ட சிந்தனைப் பள்ளிகளையும் சாட்சியம் செய்தன. தமிழுக்குள் ஈழத்தமிழ் தனியொரு முகமாக மேற்கிளம்பும் படிமுறையில் 19 ஆம் நூற்றாண்டு, 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பகால நூல்கள் பெரும்பங்கு வகித்தன. இன்றும் ஜனரஞ்சக நுகர்வுக் கலாசாரத்தில் நிதானமின்றி தவறிச்செல்லும் ஈழத்தின் இன்றைய தலைமுறைக்கு முன் ஒரு பண்டைய வலிமையின் சாட்சியமாக இந்த நூல்கள் நிற்கின்றன. குன்றாத வலிமையும் மங்காத சிந்தனை ஓட்டத்தையும், இன்றும் காலத்தால் நொடிந்து உக்கிச் செல்லும் தம் உடல்களில் காவியபடி வீடுகளின் பழம்பெரும் அலுமாரிகளில் அவை கிடக்கின்றன. அல்லது பழைய கடதாசிகளை விற்கும் இடங்களில் தேடுவாரற்று உட்காந்திருக்கின்றன. மருத்துவமும் சோதிடமும் இலக்கியமுமாகவிருந்த ஓலைச்சுவடிகள் வெறும் காவோலைகளாகி விரைந்து

**குரலற்றவர்களின் குரலாக அச்சுடல்கள் உருவாகின. கருத்துச் சுதந்திரத்தின், ஜனநாயகத்தின் காவிகளாக அவை உலாவரத் தொடங்கின. அறிவை மக்கள் மயப்படுத்தும் பெரும்பணியை அச்சுடல்கள் செய்தன.**

மறைகின்றன.

இந்த இடத்தில் தான் நூலக நிறுவனம் முக்கியமான ஒன்றாக மாறுகிறது. அதுவெறும் எரிபடமுடியாத நூலகமாக மாத்திரமன்றி எங்கிருந்தும் வாசகன் நுழையக்கூடிய பூச்சியப் பரப்பில் உட்காந்திருக்கின்ற ஒன்றாக மாறியிருக்கிறது.



குரும்பசிட்டி கனகரத்தினம்

Image Source - sangam.org

இறந்து செல்லும் பண்டைய நூல்களுக்கு புது இரத்தம் பாய்ச்சி அவற்றுக்குப் புத்துடலைத் தருகின்றன. வாசகர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், புலமையாளர்கள் என அதன் பயனாளர்கள் விரிகிறார்கள். நூலக நிறுவனம் அவ் வகையில் ஒரு மக்கள் இயக்கமாகவும் ஒரு வரலாற்றுத் தடய சுவடிக்கூடமாயும் ஈழத் தமிழின் அச்சு மரபுரிமையின் பாதுகாப்புக் களமாகவும் செயற்படத் தொடங்குகிறது. விரைந்து மறையும் அச்சுப் பண்பாட்டை, சுவடியெழுத்துக்களை எண்மியத் தொழில்நுட்பம் ஊடாக அது எண்மிய மரபுரிமையாக்கம் செய்கிறது. அது ஒரு வகையான கூட்டு எதிர்ப்பு (collective resistance); ஒரு வகையான கூட்டுச் சமூகத் திரள்வு. அவ்வகையிற் பொதுச் சமூகப் பங்களிப்பிற்காக அது உருவாக்கியிருக்கும் நிறுவன மாதிரி (institutional model) முக்கியமானது.

ஒருவகையில் ஈழத்தமிழர் சார்ந்து நிறுவனங்களை கட்டமைக்க விரும்புவர்களுக்கான அல்லது அதனைப் பற்றிச் சிந்திப்பதற்கான சந்தர்ப்பத்தைத் தருகின்ற மாதிரி என்ற வகையிலும் அது முக்கிமானது. ஏற்கனவே விவசாயச் சங்கங்கள், நுகர்வாளர் சங்கங்களுக்கூடாக உருவாகிய கூட்டுறவுச்சங்க மாதிரியின் தொடர்ச்சியாக, அதிலிருந்து மாறுபட்ட தன்மைகளை உடைய ஒரு மாதிரியாக உருவாகியுள்ள இந்த அமைப்பு முறை முக்கியமானது எனக் கருதுகிறேன். குறிப்பாக ஒடுக்கப்பட்ட சமூகங்கள் - அரசற்ற தரப்புக்கள் செல்லக் கூடிய வழிவரைபடம் பற்றிச் சிந்திக்கவும் நூலக நிறுவன முறைமை உதவக்கூடியதென நினைக்கிறேன். குறிப்பாக பொதுநிதி, தொண்டு நிதி உருவாக்கம், பங்குபற்றும் பங்களிப்பு முதலானவற்றுடன் கூடிய செயற்பாடுகள் பற்றிச் சிந்திக்க இவை முக்கியமானவை.

மிகவும் சுட்டிப்பாக புலம்பெயர் தமிழர்கள், உள்ளூர்வாசிகள் என பொதுத் தமிழ்ப் பரப்பை இணைக்கக்கூடிய நூலக நிறுவனத்தின் வலைப் பின்னல் அரசியல் ரீதியாகவும் முக்கியத்துவமுடையது. குறிப்பாக அனைத்து விளிம்புநிலை தமிழ்பேசும் சமூகங்களுக்குமான பிரநிதித்துவம் என்கிற நூலகத்தின் பூச்சியப் புவியியல் (cyber geography) மிக முக்கியான ஒரு கூட்டு அரசியற் பிரதிநிதித்துவத்திற்கான ஒரு கருத்தாடல் மாதிரியாகும்.

**பொது மக்கள் நிதிப் பங்களிக்க :**
**https://www.noolahamfoundation.org/wiki/index.php?title=Contribute**



எரிக்கப்பட்ட யாழ். நூலகம்

Image Source - www.flickr.com




எழில் ராஜன்
ராஜேந்திரம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுயாதீன ஆய்வாளரான அருட்தந்தை எழில் அவர்கள், தன்னுடைய முதுகலைமாணிப் பட்டப்படிப்பை லண்டன் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் நிறைவு செய்துள்ளார். இவர், தமிழின விடுதலை சார்ந்த அநுபவங்களை உள்ளடக்கிய 'உள்மை' என்ற கவிதைத் தொகுப்பை 2006 ஆம் ஆண்டிலும், 2009 இற்குப் பின்னரான தமிழ்த் தேசிய வெளி, தமிழ்த் தேசிய அரசியற் கருத்தியல் சார்ந்த பத்திகளின் தொகுப்பை 'பின்முள்ளிவாய்க்கால்' என்ற பெயரில் 2023 ஆம் ஆண்டிலும் வெளியிட்டுள்ளார்.




Image Source - archives1.dailynews.lk

# தமிழினப் படுகொலையின் 15 ஆவது ஆண்டில் இனப் படுகொலையின் அரசியல்

**பலஸ்தீனமும் முள்ளிவாய்க்காலும்**

தமிழினப் படுகொலையின் 15 ஆவது ஆண்டில், நாங்கள் யாவரும் சாட்சிகளாய் பார்த்திருக்க பலஸ்தீனப் படுகொலை அரங்கேறிக் கொண்டிருக்கின்றது. இஸ்ராயேல் - பலஸ்தீனப் போரை வெறும் இஸ்ராயேல் - பலஸ்தீனப் போராக மட்டுமே அவதானிக்க முடியாதென்பதை எல்லோருமே அறிந்திருக்கின்றோம். எனது ஆய்வு நோக்கம் கருதி இப் போரை, மத்திய கிழக்கில் பேரரசுக் கட்டமைப்புக்காக, புவிசார் அரசியல் தளத்தில் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்ற பலப் பரீட்சைக்கான போராகவே நான் பார்க்க விரும்புகின்றேன். இந்தப் பலப் பரீட்சையில் ஏகாதிபத்திய வல்லதிகாரப் பலம் மத்திய கிழக்கில் நிலை நாட்டப்படும். ஏகாதிபத்தியப் பேரரசு வல்லாதிக்கப் போட்டியில், உப ஏகாதிபத்திய வல்லாதிக்கத்தை நிலைநாட்டுதல், தவிர்க்கப்பட முடியாததான அபத்தத்தைத் தோற்றுவிக்கின்றது. தமிழினப் படுகொலையும், தற்போது அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் பலஸ்தீனப் படுகொலையும், மக்களின் உயிர்களை பலியெடுக்கும் ஏகாதிபத்தியப் பேரரசுக் கட்டமைப்புக்குத் தயாராகும் ஓர் அரசியல் - இராணுவக் கட்டமைப்பை அம்பலப்படுத்துவது மாத்திரம் அல்லாமல், இவ்வாறான பலப் பரீட்சையில் மக்களின் உயிர்கள் ஒரு பொருட்டே அல்ல என்பதோடு, புவிசார் அரசியல் நலன்களுக்காக வல்லாதிக்கப் பேரரசு எவ் உயரிய விலையையும் கொடுக்கத் தயாராய் இருப்பதையும் சுட்டிக்காட்டுகின்றது.

தமிழினப் படுகொலையின் அரசியல் வரலாற்றுப் பின்புலத்திலும், தற்போது நடந்தேறிக் கொண்டிருக்கும் பலஸ்தீன இனப்

படுகொலையின் அரசியல் வரலாற்றுப் பின்புலத்திலும் ஏகாதிபத்தியப் பேரரசுக் கட்டமைப்பு ஒன்றாகவே இருப்பதால், இரண்டு இனப் படுகொலைகளுக்கும் இடையே, இனங்களின் இருப்பை அழிக்கும் உத்திகள் தொடர்பில் ஒற்றுமைத் தன்னை இருப்பதை அவதானிக்க முடிகின்றது. தமிழினப் படுகொலை, பலஸ்தீனப் படுகொலை ஆகியன தொடர்பான ஒப்பீட்டு ஆய்வுகள் மைய நீரோட்ட ஆய்வுப் பரப்பில் செல்வாக்குச் செலுத்த முடியாவிட்டாலும், ஆய்வுப் பரப்பு வெளியை திறந்து விட்டிருப்பது என்பது மனநிறைவு தருவதாய் உள்ளது.



Image Source - www.bbc.com

இவ்விரண்டு இனப் படுகொலைகளின் மூலகாரணியாய் இருப்பது காலனித்துவம். காலனித்துவ அரசியல் கட்டமைப்பு நிலத்தையும், மக்களையும் இனவாத மையப்படுத்திய இயங்கு நெறிக்குள் காலனித்துவ, பின் காலனித்துவ அரசியல் வரலாற்றுச் சூழலை நிர்ப்பந்தித்தது. அதுவே நாளடைவில் வரையறுக்கப்பட்ட நியதியாக்கப்பட்டது. இவ்விரண்டு இனப் படுகொலைகளிலும் பிரித்தானியக் காலனித்துவத்தின் பங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தது. இது தொடர்பிலான பேராசியர் சுஜித் சேவியரின் ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை. அவர் குறிப்பிடுகின்ற இனநிற முதலாளித்துவம் (*ethnoracial capitalism*) என்ற கருத்தியலின் காரணியாக்க வகிபாகம் முக்கியமானது. இனவாதம், முதலாளித்துவம், வன்முறை இவற்றுக்கிடையிலான தொடர்பு புறக்கணிக்கப்பட முடியாதது. அதே நேரத்தில் சர்வதேசச் சட்டம் மறைமுகமான இனவாத ஏற்றத்தாழ்வை, குறிப்பாக வெள்ளைத்தோல் மீயுயர்வை தக்கவைத்துக் கொண்டே இருக்கும். அவர் குறிப்பிடுகின்ற காலனித்துவத்திற்கும் வன்முறை வரலாற்றிற்குமான தொடர்பு இனநிற முதலாளித்துவ வில்லைகளுக்கூடாக ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. இந்த ஆய்வு சர்வதேசச் சட்டங்களின் உள்நோக்கத்தையும் அது உருவாக்கும் கட்டமைப்பையும் சிக்கலுக்கு உட்படுத்துகின்றது. இன்னொரு சாரார் பிரித்தானியப் புவிசார் அரசியல் நலன்களுக்காக உருவாக்கப்பட்ட அரசியல் ஒற்றையாட்சி அரச கட்டமைப்பை தமிழினப் படுகொலைக்கான காரணியாக்கி அதை கேள்விக்கு உட்படுத்துகின்றனர். மேற்கூறப்பட்டவை தமிழினப் படுகொலையின் அரங்கேற்றத்தில் பல்வேறு காரணிகள், உள்ளக, வெளியகச் சக்திகள் செல்வாக்குச் செலுத்தின என்பதை அம்பலப்படுத்துகின்றன.

அதேபோல் தற்போது அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் பலஸ்தீன இனப் படுகொலையில் எவ்வாறு பல்வேறு சக்திகள் ஈடுபட்டுள்ளன என்பதை, ஏகாதிபத்திய வல்லாதிக்கம் கட்டமைத்த சட்டகமே அம்பலப்படுத்துகின்றது என்பது கேலிக்குரியது. இந்த அதிகாரப் போட்டியில் பல்வேறு முகத்திரைகள் கிழிக்கப்படுவது, தமிழினப் படுகொலையின் சூத்திரதாரிகளின் முகத்திரைகளையும் கிழிக்கின்றது என்பது ஐயமுற வெளிப்படுத்தப்படுகின்றது. பின்காலனித்துவ வரலாற்றுச் சூழலில் உருவாக்கப்பட்ட அரச வடிவக் கட்டமைப்புக்கும், அரங்கேற்றப்பட்ட, அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கும் இனப் படுகொலைகளுக்கும், காலனித்துவத்திற்கும், ஏகாதிபத்திய வல்லரசுக் கட்டமைப்புக்கும், இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

மேற் குறிப்பிட்ட இரண்டு இனப் படுகொலைகளுக்குமான புவிசார் வெளி என்பது தெளிவாக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. கடலை அண்மித்த வெளி. முள்ளிவாய்க்கால், காசா

இவை இரண்டுமே கடலை அண்மித்த புவிசார் வெளியையே கொண்டுள்ளது. இதனூடாக மக்கள் ஓரங்கட்டப்பட்ட விதம் முக்கியமானது. இரண்டு இனப் படுகொலைகளிலுமே வைத்தியசாலைகள் தாக்குதல்களுக்குள்ளாகின, மனித நேயப் பணிகள் முடக்கப்பட்டன. உணவை ஆயுதமாக்கியதன் மூலம் பட்டினிச் சாவின் விளிம்பு வரைக்கும் செல்ல போர் வலயத்திற்கு உட்பட்டோர் நிர்ப்பந்திக்கபட்டனர்.

மனித உரிமைக் காவலர்கள் என்று கூறிக் கொள்ளும் வல்லாதிக்க நாடுகளின் இனப் படுகொலை உடந்தைத்தன்மை இனப் படுகொலைக் குற்றப் பொறுப்பில், பங்கு கொள்ளுதலாக கணிக்கப்படுகின்றது. இனப் படுகொலை குற்றத்திற்கு உடந்தையான ஆனால் நேரடியாக தங்கள் கைகள் இரத்தம் தோயவில்லை என்று தப்பித்துக் கொள்ளும் மனித உரிமைக் காவல் நாடுகள், தங்களையும் காப்பாற்றிக்கொண்டு, இனப் படுகொலை குற்றத்தில் நேரடியாக ஈடுபட்டவர்களையும் காப்பாற்றிக் கொள்ளல் என்பது தண்டனை விலக்கீட்டுத் தன்மைக் கலாச்சாரத்திற்கு வலுச் சேர்க்கின்றது.

இந்தத் தண்டனை விலக்கீட்டுக் கலாசாரத்தில் நான் ஆய்வுக்கு உட்படுத்திய புதிய அலகான 'கதாநாயக தண்டனை விலக்கீட்டுத்தன்மை' குறிப்பிடத்தக்கது (*Heroic impunity*). குற்றவாளிகளைக் கதாநாயகர்களாக விபரித்து அந்தக் கதாநாயகத் தன்மைக்குள் குற்றங்களுக்கான விலக்கீட்டுரிமை கொடுக்கின்ற செல்நெறியை தற்போதைய இனவாதக் கட்டமைப்பு உருவாக்கியுள்ளது. கதாநாயகத் தன்மைக்கும், இனப் படுகொலைக் குற்றத்திற்குமான முடிச்சு, தண்டனை விலக்கீட்டுரிமைக் கலாசாரத்தை வலுவாக்குகின்றது. இவ் வலுவாக்கல் செயன்முறையில் பாதிக்கப்பட்ட மக்களின் பொறுப்புக் கூறலிற்கான கோரிக்கை அர்த்தமற்றதாகின்றது. பொறுப்புக் கூறல் செயன்முறைக் கட்டமைப்பு வலுவிழந்த நிலையில்தான், கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலை தொடர்ந்து இடம்பெறுகின்றது. இது பலஸ்தீனத்தில் 'வலிந்து குடியிருப்பதினூடு' (*settler colonialism*) தொடர்ந்து நடக்கின்றது. வடக்கு - கிழக்கில் சிங்கள - பௌத்த மயமாக்கலூடாகவும், இராணுவ மயப்படுத்தலுக்கூடாகவும் இது தொடந்து அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது. பலஸ்தீனத்திலும், வடக்கு - கிழக்கிலும், விடுதலைக்கும், நில மீட்புக்குமான தொடர்பு துண்டிக்கப்பட முடியாதது. தமிழின விடுதலையும், பலஸ்தீன மக்களின் விடுதலையும், நில மீட்பும் உதிரியான இயங்குதள வெளியல்ல.

ஒரு தேசத்தின் கூட்டிருப்பு என்பது நிலத்தில் தங்கியுள்ளது. நிலமின்றி தேசத்திற்கான கோரிக்கை செல்லுபடி அற்றதாகின்றது. தேசத்திற்கான கோரிக்கையை நிராகரிப்பதற்கு, நிலக் கூட்டுரிமைக் கோரிக்கையை இல்லாது செய்தல், உத்தி சார்ந்து அவசியமாகின்றது. நிலக் கூட்டுரிமைக் கோரிக்கையை இல்லாது செய்வதற்கான உத்தியாகத்தான் வலிந்து குடியிருப்பது (*settler colonialism*), வடக்கு - கிழக்கை சிங்கள - பௌத்த மயமாக்குவதோடு இராணுவ மயப்படுத்துவதும் அவசியமாக்கப்படுகின்றது. கூட்டு நில உரிமைக் கோரிக்கையை 'வாக்களிக்கப்பட்ட நாடு' என்ற சொல்லாடல்களுக்கூடாகப் பூசி மெழுகுதல் இலகுவானது. ஈழத்தமிழ், பலஸ்தீன இரு தளங்களிலும் 'வாக்களிக்கப்பட்ட நாட்டை மீட்டெடுத்தல்' சொல்லாடல்களுக்கூடாக மதச் சாயத்தைப் பூசி பேரரசுக் கட்டமைப்பு நலன்களை முன்னெடுத்தல் இலகுவான உத்தியாகப் பயன்படுத்தப்படுகின்றது; சிறிலங்காவில் புத்தர் வாக்களித்த தேசத்தை மீட்டெடுத்தல், பலஸ்தீனத்தில் யாவே வாக்களித்த தேசத்தை மீட்டெடுத்தல். வாக்களிக்கப்பட்ட தேசத்தை மீட்டெடுத்தல் சொல்லாடல் 18 ஆம் 19 ஆம் நூற்றாண்டுகளில் சிறிலங்காவிலும் பலஸ்தீனத்திலும் காலனித்துவத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட காலனித்துவ உத்தி, காலனித்துவ மேலாண்மையைத் தக்கவைப்பதற்காகச் செயற்படுகின்றது. நிலம் என்ற கருத்தியல் பூகோள வெளியை மட்டும் குறிப்பிடவில்லை. ஏகாதிபத்தியப் பேரரசுக் கட்டமைப்புக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலமானது புவிசார் அரசியலில் மிக முக்கியமானது. வடக்கு - கிழக்கின், பலஸ்தீனத்தின் கேந்திர முக்கியத்துவம், புவிசார் அரசியலில் மிகக் கணிசமான செல்வாக்கைச் செலுத்துகின்றது. இங்கு நிலம் என்று வெறும் நிலத்தை மட்டும் குறிப்பிடவில்லை; கடல் வெளியையும்

சேர்த்தே குறிப்பிடுகின்றேன். பலஸ்தீனம், மத்திய கிழக்கில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகவும்; தெற்காசியாவில் / ஆசியாவில், வடக்கு - கிழக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் இருக்கின்றது; திருகோணமலைத் துறைமுகம் உள்ளடங்கலாக.

தமிழினப் படுகொலையிலும், பலஸ்தீனப் படுகொலையிலும் இனப் படுகொலை ஒரு வரலாற்றுச் செயன்முறையாக கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. சிறிலங்காவில் 1815 கண்டிச் சாசனத்திலிருந்தும்; பலஸ்தீனப் படுகொலை, நக்பா 1948 இல் இருந்தும், இனப் படுகொலை ஆரம்பமாகின்றது. இவ் இரு இனப் படுகொலைகளுக்கான உத்திகள் அரச இயந்திரத்தினூடாக நிறுவனமயப்படுத்தப்பட்டிருப்பதோடு, சாதாரண மயமாக்கப்பட்டுள்ளது. இதனால் அசாதாரண இயங்குநெறி, மக்களுக்குச் சாதாரணமாகத் தென்படுகின்றது. இது ஒரு பண்பாடாகவே மாறிவிட்டுள்ளது எனக் கூறினால் மிகையாகாது என நினைக்கின்றேன்.

## தமிழ்த் தேசிய நம்பிக்கையைச் சிதைத்தல்

ஆயர் இராயப்பு ஜோசப்பின் இனப் படுகொலைக்கான நீதிவேண்டிய கோரிக்கை 2009 இற்குப் பின்னரான அரசியல் வரலாற்றுச் சூழலில் மிக அவசியமானது. தமிழ்த் தேசிய நம்பிக்கை விழுமியங்களை சிதைப்பதற்கான முயற்சிகள், பல தசாப்தங்களுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும், 2009 இற்குப் பின்னர் அதை ஒரு உளவியற் போராகவே சிறிலங்கா அரசு மிக வினைத்திறனோடு முன்னெடுத்திருந்தது. மிக அண்மையில் யாழில் ஒரு பாடசாலையில் நடந்த விளையாட்டுப் போட்டியில் காட்சிப்படுத்தப்பட்ட பூ கார்த்திகைப் பூவா? காந்தள் பூவா? என்ற விடயம் அதற்குச் சிறந்த உதாரணமாகும். அது காந்தள் பூ என்றும், காவல்துறை குறிப்பிடும் கார்த்திகைப் பூவை தாம் வைக்கவில்லை என்றும் மாணவர்கள் கூறுவதும், அதை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் விசாரணையும் தமிழ்த் தேசிய நம்பிக்கையைச் சிதைத்தலின் மிக அண்மைய உதாரணமாகும்.

போர் வலயத்திற்குள் அகப்பட்ட மக்களுக்கு வெளியேறுவதற்கான அல்லது தப்பிப்பதற்கான தெரிவைக் கொடுக்காது ஓரங்கட்டுதல் என்பது, அடக்கப்பட்ட மக்களுடைய விடுதலைக்கான போரின் நம்பிக்கையைச் சிதைத்தல் ஆகும். அடக்கப்பட்ட மக்களுக்காக உருவான / உருவாக்கப்பட்ட விடுதலைப் போராளிகளின் இயலாத்தன்மையில் மூலதனமிட்டு, விடுதலை வீரர்களை தங்கள் சொந்த மக்களையே காப்பாற்ற முடியாதவர்களாய், உணவு கொடுக்க முடியாதவர்களாய், மருத்துவ வசதிகளைப் பெற்றுக்கொடுக்க முடியாதவர்களாய், ஒட்டு மொத்தத்தில் அடிப்படை வசதிகளைப் பெற்றுக்கொடுக்க முடியாதவர்களாய் காட்டுவதன் மூலம், விடுதலை வேண்டிப் போராடுபவர்கள் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை சிக்கலுக்குட்படுத்துவது என்பது அவ் நம்பிக்கையைக் கட்டுடைப்பதாகும்.

மக்கள் விடுதலைக்காகப் போராடுகின்ற கூட்டு நம்பிக்கையை உடைப்பது, நம்பிக்கைக் கட்டுடைப்பில் மிக மோசமான பாதிப்பை கொண்டுவரக் கூடியதாகும். அடக்குமுறைக்கு உட்பட்ட சமூகம், அடக்குமுறைக்கு எதிராகப் போராடுவதற்கு கூட்டு நம்பிக்கை அவசியமாகின்றது. அந்தக் கூட்டு நம்பிக்கையே அவர்களின் போராட்ட இயங்குதளத்தை தக்க வைத்துக் கொள்ளும். கூட்டு நம்பிக்கையில் இருந்து தான், கூட்டுப் பிரதிநிதித்துவப்படுத்தல் உருவாகின்றது. கூட்டு பிரதிநிதித்துவப்படுத்தலில் கூட்டு முகவராண்மை (collective agency) தங்கியிருக்கின்றது. கூட்டு முகவராண்மையை அடக்குமுறைத் தளத்திலிருந்து வெளியகற்றல் பேரரசுக் கட்டமைப்புக்கு இன்றியமையாதது. அடக்குமுறைக்கு எதிராய் போராடும் மக்களிடமிருந்து கூட்டு விடுதலை முகவராண்மையை இல்லாது ஒழித்தல் மூலம் தமிழினத்திற்கான விடுதலை கொடுப்பவர்களாக, தெற்கிலிருந்தும், வேறு நாடுகளிலிருந்தும் வெள்ளை மீட்பர்களை இறக்குமதி செய்தல் நடைபெறுகிறது. இதனூடாக விடுதலை மையப்புள்ளி களத்திலிருந்து அகற்றப்படுகிறது.

பிரதிநிதித்துவப்படுத்தல்; பின் காலனித்துவ, பெண்ணியற் கற்கைத் திறனாய்வுகளில் மிக முக்கியமான கருத்தியலாகக் கொள்ளப்படுகின்றது. ஒரு சமூகத்தின் வலுவாக்கற் பயணத்தில் அடக்குமுறைக்கு உட்பட்ட சமூகத்தின் முகவராண்மைத் தன்மையை அகற்றுதல் - புலிக்குப் பல்லைப் பிடுங்குவதற்கு ஒப்பானது. முகவராண்மைத்

தன்மை தான் பிரதிநிதித்துவப்படுத்தலை விடுதலை மையத்தை நோக்கி நகர்த்திக் கொண்டே இருக்கும். இது கட்டுடைக்கப்படும் போது, பிரதிநிதித்துவப்படுத்தலை அடக்குமுறைக்கு உட்பட்ட மக்கள் சார்பாக, அடக்குமுறைக்குட்பட்ட மக்கள் தவிர்த்து ஏனையோர் செய்ய முற்படுதல் நிகழ்கின்றது. இது இயல்பாக உருவாவதல்ல. மையம் உடைக்கப்படுவதன் மூலம், அதிகாரத்தைக் கையில் கொண்டுள்ளோரிடம் பிரதிநித்துவக் கட்டமைப்பு ஒப்படைக்கப்பட்டு, அவ் அதிகாரம் தான் உண்மை என நினைப்பதை பொது வெளியில் கட்டமைத்து, அரசியல் நுகர்வு செய்யப்படுகின்றது. அதிகாரம் கட்டமைக்கும் அரசியல் உண்மையில் மற்றமைகளின் சொல்லாடல்களுக்கான வெளி இல்லாமல் போகின்றது. மற்றமைகளின் விவரணம் என்பது மாற்று விவரணம்; அது அதிகாரம் கட்டமைக்கும் உண்மையைச் சிக்கலுக்குட்படுத்துகின்றது.

பூக்கோ, உண்மைக் கட்டமைப்பு, அதிகார வரம்புகளுக்கு அப்பாற்பட்டதாக இருக்க முடியாது என குறிப்பிடுகின்றார். மேற்கூறப்பட்ட இரண்டுமே, ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளது. மற்றமைகளின் கதைகள் எப்போதுமே அதிகாரத்தையும் அதிகாரம் கட்டமைக்கும் உண்மையையும் சவாலுக்கு உட்படுத்தும் போது அதிகாரத்தின் வலுச் சமநிலை கேள்விக்கு உட்படுத்தப்படுகின்றது. இவ்வாறான ஒரு கொதிநிலை நிச்சயமற்ற தன்மையைக் கட்டமைத்துக் கொண்டே இருப்பதால், அச்சம் உருவாகுகின்றது. அதிகாரம் தனது ஐயுறவிலா உண்மைக்குள் இருந்தே நிச்சயமற்ற தன்மையை அரசியல் நுகர்விற்காக பரப்புகின்றது. ஆனால் மற்றமைகள் கட்டமைக்கும் உண்மை, அதிகாரத்தின் ஐயுறவில்லாத உண்மையைக் கட்டவிழ்க்கின்றது.

தமிழ்த் தேசியத்தின் நம்பிக்கை விழுமியங்கள், அதிகாரம் கட்டமைக்க முயலும் ஐயயுறவில்லா உண்மையின் நிச்சயத்தன்மையைக் கேள்விக்கு உட்படுத்திக் கொண்டே இருக்கப் போகின்றது. ஏனெனில் அது மற்றமைகள் தங்கள் அடக்குமுறைக்கு உட்பட்ட அனுபவத்தால் கட்டமைத்த உண்மை. இதனால் தான் தமிழினப் படுகொலை என்பது எப்போதுமே அதிகாரம் கட்டமைக்க முயலும் உண்மையைச் சிக்கலுக்குட்படுத்தும். ஆயர் இராஜப்பு ஜோசப்பின் தமிழினப் படுகொலைக் கோரிக்கையின் தீர்க்கதரிசனப் பார்வை, சாட்சியங்களின் விவரணங்களிலிருந்து உண்மையைக் கட்டமைத்தலை மையமாகக் கொண்டது. மற்றமைகளின் உண்மை, முள்ளிவாய்க்காலில் உச்சம் தொட்ட இனப் படுகொலையிலிருந்து உயிர் பிழைத்த சாட்சியங்களிலிருந்து கட்டமைக்கப்பட்ட உண்மை; பொய்மையைத் தூங்கவிடாது நீதியைத் தட்டி எழுப்பிக் கொண்டே இருக்கப்போவது.

தமிழினப் படுகொலைக் கோரிக்கை ஊடாகத்தான் தேசக் கோரிக்கையையும், தமிழ்த் தேசிய நம்பிக்கையின் விழுமியங்களையும் மீட்டெடுக்க முடியும் என்பது ஆயர் இராஜப்பு ஜோசப்பின் நம்பிக்கையாக இருந்தது. ஈழத் தமிழர்கள் ஒரு தேசத்திற்குரியவர்கள் என்பதை, தமிழினப் படுகொலைக் கோரிக்கை ஊடான நீதிப் பயணத்தில்தான் நிறுவ முடியும் என நம்பினார். அந்த நம்பிக்கை தமிழ்த் தேசிய நம்பிக்கையிலிருந்து எழுகின்றது.

தமிழினப் படுகொலையின் இயக்கிகள், தமிழ்த் தேசியத்தின் மீதான நம்பிக்கையை இல்லாது ஒழிப்பதற்கான அனைத்து முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார்கள். அந்த உளவியல் போர் - ஈழத் தமிழினம் எதிர்கொள்வது மட்டுமல்ல - விடுதலைக் கிளர்ச்சியை அடக்குவதற்கான ஓர் 'counter insurgency' உத்தியாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

## தமிழினப் படுகொலை ஆய்வு மையத்தின் அவசியம்

தமிழினப் படுகொலையும், பலஸ்தீனப் படுகொலையும், இனப் படுகொலைக் கற்கை திறனாய்வு வெளியில் ஆய்வுப் பரப்பை திறந்துவிட்டுள்ளது. இனப் படுகொலைகளில் பொதுத் தன்மை இருந்தாலும் ஒவ்வொரு இனப் படுகொலையும் தனித்துவமானது. அந்தத் தனித்துவத்தை ஆய்வுகளுக்கு ஊடாக வெளிக் கொணர முடியும் என நம்பிக்கை கொண்டால், தமிழினப் படுகொலை ஆய்வு மையத்தின் அவசியம் வரலாற்றுத் தேவையாகின்றது.

முள்ளிவாய்க்காலில் உச்சந்தொட்ட பேரவலம் இனப் படுகொலையா இல்லையா என்ற விவாதம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.




Image Source - www.flickr.com/climatalk

இனப் படுகொலைச் சாசனத்தின் வரைவுகளை சட்டரீதியாக அணுகுவோர் இந்த விவாதத்தின் கொதி நிலையை தக்கவைத்துக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துள் இருக்கின்றனர். காரணம் இனப் படுகொலை என்பது சட்டரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டால் தமிழினத்தின் தேசக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டதாகிவிடும். அதுவே சுய நிர்ணய உரிமைக்கும் வழி வகுத்துவிடும். இனப் படுகொலை உள்நோக்கம் கொண்ட அரச கொள்கையோடு இன்னொரு இனம் - சமூகம் சேர்ந்திருக்க முடியாது. தமிழினப் படுகொலைக்கான தனித்தன்மையை ஆய்வு செய்ய ஓரளவிற்கு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும், தற்போது பலஸ்தீனத்திற்கு திரட்டப்படுகின்ற அளவிற்கு முயற்சிகள் எடுக்கப்படவில்லை. இனப் படுகொலையின் ஒரு பரிமாணமாக சட்டரீதியாக அணுகுதல் காணப்பட்டாலும், அதற்கு பல்வேறு பரிமாணங்களும் உள்ளன.

மிக அண்மையில் எடுக்கப்பட்ட முயற்சிகளில் தமிழினப் படுகொலைக்கு உடந்தையானவர்களாக ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா உட்பட்ட பல்வேறு நாடுகளின் பட்டியல் இனங் காணப்பட்டது. பொறுப்புக்கூறல் பொறிமுறையில் இவர்களுக்கான தண்டனை என்ன என்பதையும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். அதைவிட இனப் படுகொலையின் சூத்திரதாரியாக அடையாளம் காணப்படும் காலனித்துவத்தில் பங்கேற்றமை தொடர்பாக அவர்களுக்குரிய தண்டனை போன்றன இன்னும் ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. தமிழினப் படுகொலையில் மதத்தின் வகிபாகம் ஆய்வுக்கு உட்படுத்தப்படுவதற்கான முயற்சிகள் தெரிகின்றன. இராணுவமயப்படுத்தப்பட்ட பௌத்தம் பற்றிய அல்லது மதத்திற்கும் வன்முறைக்கும் இடையிலான தொடர்பு பற்றி ஆய்வுகள் வெளியாகி உள்ளன. ஆனால் தமிழினப் படுகொலைக்கும் பௌத்த மதத்திற்குமான

தொடர்புகள் பற்றிய ஆய்வுகள் இன்னும் தொடங்கவில்லை.

தற்போதைய இனப் படுகொலை ஆய்வுப் பரப்பில் இனப் படுகொலைச் சாசனத்தின் இருண்ட பக்கங்களும் அம்பலப்படுத்தப்படுகின்றது. குறிப்பாகச் சர்வதேச சட்டம் எவ்வாறு இனவாதத்தை அடிப்படையாக கொண்டதோடு வெள்ளை மேலாண்மையை தக்கவைப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றது என்பதும் கேள்விக்கு உட்படுத்தப்படுகின்றது. இனப் படுகொலைக்கு பல்வேறு அணுகுமுறைகள் உண்டு. உதாரணமாக சமூகவியல், மானுடவியல், உளவியல்; இன்னும் பல. இவை இன்னும் ஆய்வு செய்யப்படாமலேயே உள்ளன. இவற்றை விட இனப் படுகொலையோடு தொடர்புடைய ஏனைய குற்றங்களும் இனங் காணப்பட்டுள்ளன. அவையும் தமிழ் ஆய்வுப் பரப்பில் ஆய்வுக்கு உட்படுத்தப்படாத வெளியாகவே உள்ளது. உதாரணத்திற்கு மிக அண்மைக் காலமாகவே பேசு பொருளாகி உள்ள அரசியல் இனப் படுகொலை (Political Genocide), அரசியல் படுகொலை, பண்பாட்டுப் படுகொலை, நினைவுத்திறப் படுகொலை, கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலை என பட்டியல் நீண்டுகொண்டே செல்கின்றது.

ஒரு சமூகத்தின் இருப்பு என்பது நினைவுத்திறத்தை தக்கவைப்பதில் தங்கியுள்ளது. அதே நேரத்தில் தேவை, நோக்கம் கருதிய நினைவுத்திற மீள் வாசிப்பு தென்னிலங்கையில் அடிக்கடி நிகழ்கின்றது. உதாரணமாக தென்னிலங்கையில் “அபாயகரமான நினைவுத்திறம்” அடிக்கடி மீள் வாசிக்கப்படுகிறது. வரலாற்றில் தமிழ்நாட்டிலிருந்து வந்த படையெடுப்பை மேற்கோள்காட்டி தொடர்ந்தும் ஈழத் தமிழர்களை சிங்கள - பௌத்த மக்களின் எதிரியாகத் தக்கவைப்பதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. ஈழத் தமிழினம் அடக்குமுறைக்கு எதிராக வெவ்வேறு வடிவங்களில் போராட்டத்தை முன்னெடுத்தது தொடர்பான நினைவுகள் எல்லாமே திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன. தமிழின நினைவுத் திறத்தை ஆய்வு செய்வோரும் கூட பெரும்பாலும் விடுதலை மைய அணுகுமுறையை தவிர்த்த, தாராளவாத மையத்திலிருந்தே அணுக முற்படுகின்றனர். மேற்குலகிலிருந்து படையெடுக்கும் ஆய்வாளர்களுக்கென்று தனி அரசியல் நிகழ்ச்சித்திட்டம் உண்டு என்பது வெள்ளிடைமலை. ஈழத் தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட பொருளாதாரக் குற்றங்கள் தொடர்பில் இதுவரையும், எனக்குத் தெரிந்து, எந்த ஆய்வுமே முன்னெடுக்கப்படவில்லை. பொருளாதாரக் குற்றங்கள் தமிழினப் படுகொலை சார்ந்து விவரணம் பெறவில்லை. அதே போல் மரபுரிமை சார் பக்கங்களும் இன்னும் புரட்டப்படாமலேயே உள்ளது. அதைவிட தமிழினப் படுகொலைச் சாட்சியங்களின் நேரடி அனுபவங்கள் எவையுமே தமிழினத்திடம் இல்லை. அவை பெரும்பாலுமே தமிழர் அல்லாத தனியார் அரச சார்பற்ற நிறுவனங்களிடமே உள்ளன. அவையே அதற்கான ஏகபோக உரிமையையும் வைத்துக்கொள்கிறது.

நில அபகரிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர், பொருளாதாரச் சுமையால் திருமணம் ஆகாமல் இருப்போர், அதனால் ஏற்படுத்தப்பட்ட தலைமுறையின்மை, நிறுவனமயப்படுத்தப்பட்ட வன்புணர்வு, தமிழ்ப் பெண்களுக்கு எதிரான வன்கொடுமை, இராணுவமயமாக்கம், அதன் விளைவுகள் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம் போன்றன தமிழினப் படுகொலை தொடர்பிலும், கட்டமைக்கப்பட்ட இனப் படுகொலை தொடர்பிலும் ஆய்வு செய்யப்பட வேண்டும். இவற்றிற்கான முயற்சி, கூட்டு முயற்சியாக இருக்க வேண்டும் என நான் சொல்ல வேண்டிய அவசியமில்லை. போதைவஸ்து பாவனையின் அதிகரிப்புக்கும், வன்முறைக்கும், யுக்திய நடவடிக்கைக்கும், யுக்திய நடவடிக்கையால் சிறையில் தள்ளப்படும் ஏராளமான தமிழ் இளையோருக்கும் இடையே நெருங்கிய தொடர்புண்டு. இனிதொரு தலைமுறை விடுதலை பற்றிய நம்பிக்கையை கொண்டிருக்கக்கூடாது என்பதற்காக இவை உருவாக்கப்படுகின்றது என்பதன் உள்நோக்கம் கவனிக்கப்பட வேண்டும்.

ஆய்வுகளால் எல்லாவற்றிற்கான தீர்வைத் தர முடியாவிட்டாலும், உண்மை நோக்கிய தேடலை உருவாக்கி, நம்பிக்கையை உருவாக்க முடியும். தமிழ்த் தேசிய விடுதலை மீதான நம்பிக்கையைத் தக்க வைப்பதன் மூலம் தான் விடுதலைப் பயணத்தை தொடர்ந்து முன்னெடுக்க முடியும்.

இலங்கை முஸ்லிம்கள் குறித்து பண்பாட்டு மானிடவியல் ரீதியான ஆய்வுகளை மானிடவியல் ஆய்வு மரபுகளைப் பின்பற்றி முறையான பரந்துபட்ட வகையில் மேற்கொண்டவர் பேராசிரியர் டெனிஸ் மெக்கில்ரே. அமெரிக்கரான டெனிஸ் மெக்கில்ரே கொலராடோ பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறைப் பேராசிரியர். இலங்கைத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் குறித்த பரந்துபட்ட மானிடவியல் ஆய்வுகளை மேற்கொண்ட மேற்கத்தேயப் பேராசிரியர்களுள் மிக முக்கியமானவர் மெக்கில்ரே. குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் பண்பாட்டு மானிடவியல் மரபுகள், தொன்மங்கள், பண்பாட்டுக் கூறுகள் குறித்த விரிந்த ஆய்வுகளை மேற்கொண்டு அதனை உலகப் பரப்புக்குக் கொண்டு சென்றவர் என்ற வகையில் இலங்கைத் தமிழர்களும், முஸ்லிம்களும் அவருக்குக் கடமைப்பட்டுள்ளனர். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு, பண்பாடு, மானிடவியல் மரபுகள், தொன்மங்கள் பற்றிய அவரது சமூகவியல் நோக்கிலான ஆய்வுகள் மற்றும் கள ஆய்வுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் 'டெனிஸ் மெக்கில்ரே ஆய்வுகளில் தமிழரும் முஸ்லிம்களும் : பண்பாட்டு மானிடவியல் நோக்கு' எனும் தலைப்பில் வெவ்வேறு உப தலைப்புகளுடன் வெளிவரும்.




ஜிஃப்ரி ஹாசன்

மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனையைச் சேர்ந்த ஜிஃப்ரி ஹாசன் அவர்கள் சப்ரகமுவப் பல்கலைக்கழகத்தில் சமூகவியல் துறையில் பட்டம் பெற்றவர். மேலும் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வியியலிலும் பட்டப்பின் டிப்ளோமா பட்டம் பெற்ற இவர், தற்போது ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிகிறார்.

சிறுகதை, கவிதை, இலக்கிய விமர்சனம், பண்பாட்டு ஆய்வு, மொழிபெயர்ப்பு என விரிந்த தளத்தில் தீவிரமாக இயங்கி வருபவர். இவரது 'போர்க்குணம் கொண்ட ஆடுகள்', 'அகாலத்தில் கரைந்த நிழல்' ஆகிய இரண்டு சிறுகதைத் தொகுப்புகள் வெளிவந்துள்ளன. கட்டுரை, கவிதை, மொழிபெயர்ப்பு சார்ந்து இவரது நூல்கள் பல வெளிவந்துள்ளன.

இலங்கை முஸ்லிம் பண்பாடு, சமூகவியல், ஈழ இலக்கியம், சிங்கள இலக்கியம் முதலான கருபொருள்களில் ஆழமான கட்டுரைகளை எழுதியுள்ளார்.


# அரபுக்கள், சோனகர், முஸ்லிம்கள் : இலங்கை முஸ்லிம் இனத்துவ அடையாளத்தின் பரிணாமம்

பகுதி 06

*1920கள் மற்றும் 1930களில் இலங்கைச் சோனகர்கள் அகில இலங்கை முஸ்லிம் லீக் மற்றும் அகில இலங்கைச் சோனகர் சங்கம் என இரண்டு போட்டி அரசியல் வம்சமாகப் பிளவுபட்டனர். இவ்விரு அரசியற் சங்கங்களின் தலைமைகளான T.B. ஜாயா மற்றும் சேர் ராசிக் ஃபரீட் ஆகிய இருவருமே புதிய அரசியல் சீர்திருத்தச் சட்டசபையில், சிறுபான்மைப் பிரதிநிதித்துவம் '50 : 50' அமைய வேண்டும் என்ற வீணான கோரிக்கையை முன்வைத்த இலங்கைத் தமிழ்த் தலைமைகளையே ஆரம்பத்தில் பின்பற்றினர். இதனால் இவர்களின் பின்னால் அணி திரள முடியாமல் போனது (ரஸ்ஸல் 1982: அத்தியாயம் 12). எவ்வாறாயினும், 1936 தேர்தலில் அவர்களின் அனைத்து வேட்பாளர்களும் மோசமான தோல்வியைச் சந்தித்ததை அடுத்து அவர்கள் சிங்களப் பெரும்பான்மை ஆதிக்கத்தின் ஆற்றலை சரியாக விளங்கினர். இதனால் சோனகத் தலைமை, தந்திரோபாய ரீதியாக தங்கள் ஆதரவை சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளுக்கு மாற்றியது. சோனகருக்கும், தமிழ் மொழிக்கும் இடையே அவசியமான இணைப்பைக் கூட அது வெளிப்படையாக மறுத்தது.*

*1948 சுதந்திரத்தின் போது சிங்கள முன்னணிக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியில், மூத்த முஸ்லிம் தலைவர்கள் (டி.பி. ஜயா மற்றும்*

ராசிக் ஃபரீத்) இருவருமே தங்களுடைய பட்டய அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொண்டனர் (கே.எம். டி சில்வா1986a, 1986b).

புதிதாக நிறுவப்பட்ட பாராளுமன்றத்தில் பெரும்பாலான முன்னணி இலங்கைத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான சிங்களவர்களிடத்தில் நல்லெண்ணத்தைக் காப்பாற்றும் எதிர்பார்ப்புடன், இறுதியில் அணிகளை உடைத்து, மலையகத் தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் 780,000 இந்தியத் தோட்டத் தமிழர்களின் வாக்குரிமையை ரத்துச் செய்ய, யூ.என்.பி எம்.பி.க்களுடன் இணைந்து வாக்களித்தனர். இதனால் இரு அணிகளாக தமிழர்கள் உடைந்தனர். அதே போன்று இலங்கையில் இன்னும் வியாபாரம் செய்து வந்த 35,000 இந்திய முஸ்லிம்களின் வாக்குரிமையை ரத்துச் செய்ய, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிங்கள எம்.பிக்களுடன் இணைந்து வாக்களித்தனர். தீவின் தமிழ் பேசும் சமூகங்களுக்கிடையில் பிளவுகளை வளர்ப்பதில் டி.எஸ். சேனநாயக்கா அடைந்த வெற்றிக்கு இந்த இரண்டு நடவடிக்கைகளும் சாட்சியமளிக்கின்றன. அத்துடன் சுதந்திரத்திற்குப் பிந்தைய காலத்தில், தேர்தலில் சிங்கள மேலாதிக்கம் அதிகரித்தது (அலி 1986-87: 155-56; இஸ்மாயில் 1995: 71-72, 84-85; மற்றும் குறிப்பாக சாஸ்திரி 1998).

1956 தேர்தல்களில், கிழக்கில் ஒரு தற்காலிகத் தமிழர் - சோனகர் கூட்டாட்சிக் கட்சிக் கூட்டணியைத் தவிர, சுதந்திரம் முதல் 1980 களின் நடுப்பகுதி வரை, சோனகர்கள் இரண்டு பெரிய சிங்களத் தேசியவாதக் கட்சிகளான UNP மற்றும் SLFP ஆகியவற்றிற்குள் கூட்டணி அரசியலுக்கான ஒரு மூலோபாயத்தைத் தொடர்ந்து தேர்ந்தெடுத்தனர். சில சோனக அரசியல்வாதிகள் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்ததோ அந்தக் கட்சியில் இணைவதற்கான டிக்கெட்டை எப்போதும் உடன் வைத்திருந்தனர் (மோகன் 1987: 47; பட்னிஸ் 1979).

சுதந்திரத்தின் ஆரம்பத் தசாப்தங்களில், முன்னணி சோனக அரசியற் தலைமையாக வெளிப்பட்ட சேர் ராசிக் ஃபரீத், 1956 இல் சிங்களம் மட்டும் தேசிய மொழிக் கொள்கையை வெளிப்படையாக



T.B. ஜாயா Image Source - archive.roar.media

அங்கீகரித்தார். அவரது உரைகளில், கல்வியிலும் உள்ளூர் நிர்வாக நியமனங்களிலும் சோனகருக்கு எதிரான தமிழ்ப் பாகுபாடு பற்றியும், சோனகருக்கு குறைந்தளவு பிரதிநிதித்துவம் வழங்கப்படுவதாகவும், குற்றம் சாட்டினார். 1956 இல் அரச கரும மொழி விவாதத்தின் போது, தமிழ் எம்.பி ஒருவர், அவரை சிங்களப் பிரிவினையாளர் என்று காரசாரமாகக் குற்றம் சாட்டினார். தன்னையும் சோனக சமூகத்தையும் 'தமிழ் மதம் மாறியவர்கள்' என்று ஒருபோதும் கருத முடியாது என்று கூறி ஃபரீத் சொல்லாட்சியாக மேசையைத் திருப்பினார். 1888 - 1907 இல் நிகழ்ந்த பழைய இராமநாதன் - அஸீஸ் 'இனவியல்' வாதத்தின் சூடான மறுபதிப்பு உடனடியாக பாராளுமன்றத்தின் அரங்கில் நடந்தது (ஹசன் 1968: 96-106). கிங்ஸ்லி டி சில்வா வெளிப்படையாகக் குறிப்பிடுவது போல், 'இலங்கையில் தமிழ் - முஸ்லிம் போட்டி என்பது ஒரு அரசியல் யதார்த்தம். மேலும் தமிழர்களுக்கு எதிராக சிங்களவர்களை ஆதரிப்பதற்காக, முஸ்லிம்கள் தங்கள் எதிர்வினையை ஆற்றி இருக்கிறார்கள் (கே.எம்.

டி சில்வா *1986a: 449)*.

இந்த அர்த்தத்தில் பார்த்தால், சுதந்திர இலங்கையில் உள்ள சோனக அரசியல், தமிழக முஸ்லிம்களினதும், கேரள மாப்பிளாக்களினதும் பிரதான பெரும்பான்மைக் கட்சியுடன் இணையும் மூலோபாயத்தை பின்பற்றத் தொடங்கியது எனலாம். ஆனால் இவை அனைத்தும் கவனமாக 'தமிழ் அல்லாத' கொழும்புச் சோனக இனத்தின் கீழேயே கட்டமைக்கப்பட்டது. டி சில்வாவும் ஏனையோரும் முஸ்லிம்களின் கலாசாரத்தை, தமிழர்கள் போலன்றி, சிங்களச் சமூகத்தில் இணைத்துக் கொள்வதையும், அவர்களின் நடைமுறைச் சமய அரசியலையும், ஒரு 'நல்ல' சிறுபான்மையினரின் அடையாளமாகக் கருதுகின்றனர் (கே.எம்.டி. சில்வா,1986a,1988 தேவராஜ் 1995).



சேர். ராசிக் ஃபரீத்

Image Source - en.wikipedia.org

இந்த இணக்கமான நடத்தைக்கான உறுதியான வெகுமதிகளை அரசாங்கமும் முஸ்லிம்களுக்கு வழங்கியது. அத்துடன் முஸ்லிம்களின் ஆதரவு வலுவாக இருக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் விருப்பத்தின் அடையாளமாக - மத்திய கிழக்கின் முஸ்லிம் நாடுகளுடனான பொருளாதார உறவுகள் (அலி 1984), 1970 களில் முஸ்லிம் மாணவர்களுக்காக தனியான அரசாங்கப் பள்ளிகளை நிறுவியமை மற்றும் அவர்களுக்குப் பணிசெய்ய முஸ்லிம் ஆசிரியர் குழுவிற்குப் பயிற்சி அளித்தமை, நிலையான பாடங்களைத் தவிர, முஸ்லிம் பள்ளிகளிலுள்ள பாடத்திட்டத்தில் இஸ்லாம் மற்றும் விருப்பத்துக்குரிய அரபு மொழி ஆகிய பாடங்களை அறிமுகம் செய்தமை, சமீபத்திய ஆண்டுகளில் ஒரு தனித்துவமான முஸ்லிம் பள்ளிச் சீருடையை அறிமுகப்படுத்தியமை - போன்ற அரச செயற்பாடுகள் நிகழ்த்தப்பட்டன. இது முஸ்லிம் கல்வியின் வெற்றியை மேம்படுத்தியுள்ளது (அலி 1986-87, 1992a). ஆனால் வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இடையிலான நேரடியான தொடர்பைக் கட்டுப்படுத்தியதன் மூலம் இனப் பதட்டங்களை மோசமாக்கியுள்ளது. 1960 ஆம் ஆண்டு முதல் அனைத்து அரசாங்கங்களினதும் பிரகடனக் கொள்கையான மதவாதமற்ற அரசக் கல்விக் கோட்பாட்டைத் தகர்க்கும் வகையிலான முஸ்லிம் சமூகத்திற்கான தனித்துவமான அரசியல் சலுகையையும் இது பிரதிபலிக்கிறது (கே.எம். டி சில்வா 1997: 33).

கிறிஸ்டியன் வாக்னர் விரிவாக ஆவணப்படுத்தியுள்ளபடி, புவியியல் ரீதியாகவும், வகுப்புவாரியாகவும் பிளவுபட்ட சோனகச் சிறுபான்மையினருக்கு சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளிடமிருந்து வெகுமதிகளைப் பெறுவதற்கான இந்த முயற்சி, கிராமப்புறக் கிழக்குக் கரையோரச் சோனக விவசாயிகள் மற்றும் மீனவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பின்வரிசைச் சோனக எம்.பி.க்களுக்கும், சில மேற்குக் கரையோர பணக்கார முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கும், அவர்களின் நலன்கள் சார்ந்து பெரும்பாலும் ஒத்துப்போவதில்லை. கிழக்குக் கரையோர விவசாய, மீனவ முஸ்லிம்களின் கடைகள், மதத் தலங்கள், நெல் வயல்கள் போன்றன

கிழக்குக் கரையோரச் சோனக விவசாயிகளை சமூகப் பொருளாதார ரீதியாக வலுவிழக்கச் செய்த அதே நேரம் மேற்குக் கரையோரச் சோனகச் சமூக உயர் குழாத்தினருக்கு அரசியல் ரீதியாகச் சலுகைகளை வழங்கிய இந்த நேர்த்தியற்ற ஏற்பாடு, 1983 இற்குப் பிறகு தமிழ் கெரில்லாப் போர் உருவானதை அடுத்து, கிழக்குப் பகுதியில் சோனகரின் உயிருக்கும் உடமைக்கும் உத்தரவாதம் அளிக்க முடியாது என்ற உண்மையை உணர்த்தி நின்றது.

அவ்வப்போது உள்ளூர்ச் சிங்களக் கும்பலால் அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிற போதும், மேல் மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் - செல்வாக்குமிக்க அமைச்சரவை நியமனங்களைப் பெற்றனர் (எம்.ஐ.எம். மொஹிதீன் 1986: 424; ராபர்ட்ஸ் 1994 ஆ: 283, வாக்னர் 1990: 136-84, 1991).

1970 கள் மற்றும் 1980 களில் முஸ்லிம்கள் மத்தியில் ஒரு படித்த நடுத்தர வர்க்கம் தோன்றியது. நடைமுறை சார்ந்த சமூகப் பொருளாதாரச் சலுகைகளுக்கான அதன் கோரிக்கைகள் (உதாரணமாக பல்கலைக்கழக அனுமதிகள் மற்றும் வேலை ஒதுக்கீடுகள்) மத்திய கிழக்கின் சுன்னி மற்றும் ஷீயா அரசாங்கங்களின் நிதியளிப்பின் உதவியுடன், இஸ்லாமிய மத மற்றும் கலாசார நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டு ஆற்றுப்படுத்தப்பட்டன. இதில் அரசாங்கத்திற்கு எதுவும் செலவாகவில்லை (ஓ'சுல்லிவன் 1997).

கிழக்குக் கரையோரச் சோனக விவசாயிகளை சமூகப் பொருளாதார ரீதியாக வலுவிழக்கச் செய்த அதே நேரம் மேற்குக் கரையோரச் சோனகச் சமூக உயர் குழாத்தினருக்கு அரசியல் ரீதியாகச் சலுகைகளை வழங்கிய இந்த நேர்த்தியற்ற ஏற்பாடு, 1983 இற்குப் பிறகு தமிழ் கெரில்லாப் போர் உருவானதை அடுத்து, கிழக்குப் பகுதியில் சோனகரின் உயிருக்கும் உடமைக்கும் உத்தரவாதம் அளிக்க முடியாது என்ற உண்மையை உணர்த்தி நின்றது.

1980 களின் நடுப்பகுதியில், ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் யூ.என்.பி அரசாங்கம் இஸ்ரேலிய இராணுவ ஆலோசகர்களை நியமித்தமை, அம்பாறை மாவட்டத்தின் முக்கிய முஸ்லிம் தேர்தல் தொகுதிகளை, சிங்களப் பெரும்பான்மைமிக்க விரிவாக்கப்பட்ட ஊவா மாகாணத்தோடு இணைப்பதன் மூலம் அம்பாறையில் முஸ்லிம் அரசியல் நலன்களை சவாலுக்குள்ளாக்கியமை போன்ற செயற்பாடுகள், இறுதியாக UNP மற்றும் SLFP யில் இருந்து கிழக்கு முஸ்லிம்கள் பிரிந்து, சுதந்திர இலங்கையின் முதல் தனித்துவமான முஸ்லிம் அரசியல் கட்சிகளை ஒழுங்கமைக்க வழியமைத்தது.

கிழக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் முன்னணி (ESLMF), பின்னர் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி (MULF) மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (SLMC) ஆகியன இந்த தனியான அரசியல் முன்னெடுப்பில் உள்ளடங்கியது. 1989 இல் SLMC நான்கு வெற்றிகளைப் பெற்றது. கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் சமூக அரசியல் தலைமைகளின் முதல் சுயவெற்றியாக இதனைக் கருதலாம் (அலி 1992b; ஹென்நாயக்க என்.டி. வாக்னர் 1990, 1991).

இருப்பினும், 1996 தேர்தலில் மத்திய மற்றும் மேல் மாகாணங்களிலுள்ள மாவட்டங்களில் இருந்து UNP கட்சி சார்பில் முஸ்லிம் வேட்பாளர்கள் பெற்ற வெற்றியானது, வடக்கு - கிழக்கு பிராந்தியத்தில் செறிந்து வாழும் விவசாய முஸ்லிம்களின் பிராந்திய நலன்களைப் பாதுகாக்கும் SLMC யின் உறுதியான கொள்கைகளுக்கும், சிங்களவர்களுடன் ஊடுருவி வாழும் வளமான மற்றும் பாதுகாப்பற்ற முஸ்லிம் நடுத்தர வர்க்கத்தின் மோதலற்ற ஆசைகளுக்கும் இடையே வளர்ந்து வரும் அரசியற் பிளவை அடையாளம் காட்டுவதாக அமைகிறது (ஓ' சல்லிவன் 1997).

(தொடரும்)

இலங்கையில், குடியேற்றவாத காலத்திலிருந்துதான் நிலப்படங்களும் வரைபடங்களும் நமக்குக் கிடைக்கின்றன. குறிப்பாக ஒல்லாந்தர் காலத்தைச் சேர்ந்தவை இலகுவாகக் கிடைக்கின்றன. எழுத்துமூல ஆவணங்கள், புழங்கு பொருட்கள், ஓவியங்கள், தொல்லியற் கண்டுபிடிப்புகள் ஆகியவற்றையும் இவற்றைப்போன்ற இன்னோரன்ன பழைய நிலப்படங்கள், வரைபடங்கள் வரலாற்றுத் தகவல்கள் என்பனவும் இங்கு பொதிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த நிலப்படங்களும் வரைபடங்களும் இவற்றுள் அடங்கும். எனினும், யாழ்ப்பாணப் பிரதேசத்தின் வரலாற்றுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு இவற்றைப் பயன்படுத்துவது குறைவாகவே உள்ளது. வரலாற்றுத் தகவல்களை வழங்குவதில் குடியேற்றவாதக் கால நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பதாகவும், யாழ்ப்பாணத்தின் வரலாற்றுத் தகவல்களை நிலப்படங்கள் வரைபடங்களிலிருந்து விளக்குவதாகவும், நிலப்படங்களினதும் வரைபடங்களினதும் தகவல் உள்ளடக்கங்கள் குறித்து ஆராய்வதாகவும் 'யாழ்ப்பாணப் பிரதேசத்தின் குடியேற்றவாதக் காலத்து வரலாற்றுத் தகவல் மூலங்களாக நிலப்படங்களும் வரைபடங்களும்' என்ற இத்தொடர் அமையவுள்ளது.




இரத்தினவேலுப்பிள்ளை
மயூரநாதன்

இரத்தினவேலுப்பிள்ளை மயூரநாதன் அவர்கள் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தில் உருவாக்கச் சூழல் துறையில் விஞ்ஞான இளநிலைப் பட்டத்தையும் (B.Sc. (BE)) பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் கட்டடக்கலையில் விஞ்ஞான முதுநிலைப் பட்டத்தையும் (M.SC. (Arch)) பெற்றார். அத்துடன் இலங்கைக் கட்டடக்கலைஞர் சங்கம் (AIA (SL)), பிரித்தானியக் கட்டடக் கலைஞர்களின் அரச சங்கம் (RIBA) ஆகியவற்றில் பட்டயம் பெற்ற உறுப்பினராவார்.

தமிழ் விக்கிப்பீடியா தொடங்கிய காலத்திலிருந்து அதன் முதற் பயனராகப் பங்களிப்புச் செய்து வருகின்றார். தமிழ் விக்கிப்பீடியாவில் 4500இற்கும் மேற்பட்ட கட்டுரைகளைத் தொடங்கியுள்ளதுடன், மேலும் பல ஆயிரம் கட்டுரைகளின் விரிவாக்கத்திலும் பங்களிப்புச் செய்துள்ளார்.

தமிழ் விக்கிப்பீடியாவில் இவரது பங்களிப்புக்காக கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் 2015 ஆம் ஆண்டின் வாழ்நாள் சாதனையாளருக்கான இயல்விருது பெற்றுக்கொண்டார். தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் ஆனந்தவிகடன் இதழ் வழங்கும் நம்பிக்கை விருதுகளில் 2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த 10 மனிதர்களுள் ஒருவராக தெரிவு செய்யப்பட்டு விருதை பெற்றுள்ளார்.


# லெயுசிக்காமின்
## நிலப்படத் தொகுப்பில்
## யாழ்ப்பாணக் கட்டளையகம் – 3

இந்தத் தொடரின் சென்ற இரண்டு கட்டுரைகளில் லெயுசிக்காம் நிலப்படத் தொகுப்பிலுள்ள யாழ்ப்பாணக் கட்டளையகத்தை முழுமையாகக் காட்டும் நிலப்படத்தின் சில அம்சங்கள் குறித்து ஆராய்ந்தோம். அதன் தொடர்ச்சியாக, இந்தக் கட்டுரையிலும் மேற்படி நிலப்படத்தில் உள்ள வேறு சில அம்சங்களைப் பற்றிப் பார்க்கலாம்.

### போக்குவரத்தும் வீதிகளும்

ஏற்கெனவே யாழ்ப்பாணக் கட்டளையகத்தைக் காட்டும் தூர்சியின் நிலப்படம் தொடர்பாக எழுதியபோது, அக்காலத்தில் கட்டளையகத்தில் இருந்த வீதிகளைப் பற்றியும் விளக்கினோம். உண்மையில் தூர்சியின் நிலப்படம் வரைந்த காலத்துக்கும் லெயுசிக்காமின் தொகுப்பிலுள்ள நிலப்படத்தின் காலத்துக்குமிடையே பெரிய வேறுபாடு இல்லை. லெயுசிக்காமின் நிலப்படம் தூர்சியினுடையதைவிட 21 ஆண்டுகள் மட்டுமே பிற்பட்டது. எனவே, வீதிகள் தொடர்பில் பெரிய மாற்றங்கள் எதுவும் ஏற்பட்டிருக்கும் என எதிர்பார்க்க முடியாது. சிலவேளைகளில் இரண்டு நிலப்படங்களும் ஒரே தகவல்களின் அடிப்படையிலேயே வரையப்பட்டிருக்கவும் கூடும். எனினும், பிந்திய நிலப்படத்தில் முந்தியதில் குறிக்கப்படாத வீதிகள் சில




**படம் 1 : லெயுசிகாமின் யாழ்ப்பாணக் கட்டளையகத்தைக் காட்டும் நிலப்படத்தில் வீதிகள் தெளிவாகக் காட்டப்பட்டிருப்பதுடன் ஊர்ப் பெயர்கள் சில தமிழில் தரப்பட்டுள்ளன**
**( மூலம் : Nationaal Archief )**

காணப்படுகின்றன. அத்துடன், பிரிவு எல்லைகள், புதிய இடப்பெயர்கள் என்பன பிந்திய நிலப்படத்தில் உள்ளதால் அவற்றுடன் இணைத்து வீதிகளை ஆராய்வதற்கான வாய்ப்புகளும் உள்ளன. எனவே, இவ்வாறு பெறக்கூடிய மேலதிக தகவல்களை இந்தக் கட்டுரை விளக்குகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டையும் தீவுகளையும் பொறுத்தவரை அங்கிருந்த வீதிகள் குறித்த தகவல்களை இதே தொகுப்பிலுள்ள வேறு நிலப்படங்கள் தெளிவாகக் காட்டுவதால், அந்த நிலப்படங்களைப் பின்னர் விளக்கும்போது அப்பகுதிகளிலுள்ள வீதிகள் தொடர்பில் பார்க்கலாம். இந்தக் கட்டுரையில் அவற்றைப்பற்றி விளக்குவதைத் தவிர்த்துள்ளோம். இங்கே தலைநிலப் பகுதியில் உள்ள வீதிகளை மட்டும் பார்க்கலாம்.

வன்னியில் குறிப்பாக உட்புறப் பகுதிகளில் இருந்ததாக நிலப்படம் காட்டும் வீதிகள் பல தற்காலத்தில் இல்லை. பிரித்தானியர் காலத்தில் புதிதாகப் பல வீதிகள் அமைக்கப்பட்டதால், பழைய வீதி வலையமைப்பில் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம் என இத்தொடரின் முன்னைய கட்டுரையொன்றில் குறிப்பிட்டோம். இவ்வகையில், 1848 ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தையும் கண்டியையும் இணைக்கும் வகையில் வன்னியின் நடுப்பகுதியை ஊடறுத்துச் செல்லும் விதமாக அமைக்கப்பட்ட 200 மைல் நீளமான வீதியும், அவ்வீதியிலிருந்து கிழக்குக்

கரையிலிருந்த முல்லைத்தீவுக்கும் மேற்குக் கரையை அண்டிய மன்னாருக்கும் செல்வதற்காக அமைக்கப்பட்ட வீதிகளும் முக்கியமானவை. கண்டி வீதியிலுள்ள மாங்குளத்திலிருந்து முல்லைத்தீவுக்கான புதிய வீதி அமைக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து சுண்டிக்குளம் ஊடாக முல்லைத்தீவுக்குச் சென்ற கிழக்குக் கரையோர வீதி பெருமளவுக்குக் கைவிடப்பட்டதாக ஜே. பி. லூயிஸ் எழுதியுள்ளார்.[1] இவற்றைவிட, 19 ஆம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இருந்த முக்கியமான ஊர்களைப் புதிய வீதிகளுடன் இணைப்பதற்காக 250 மைல்கள் நீளமான சிறிய வீதிகள் பல புதிதாக அமைக்கப்பட்டது குறித்தும் அவர் விரிவாக விளக்கியுள்ளார்.[2] ஒல்லாந்தர் கால நிலப்படங்களில் உள்ள வீதி வலையமைப்புக்கும் தற்கால வலையமைப்புக்கும் இடையிலான வேறுபாடுகளுக்கான காரணத்தை இது ஓரளவு விளக்குகிறது.

19 ஆம் நூற்றாண்டில் வன்னிப்பகுதி பிரித்தானியரின் நேரடி ஆட்சிக்குள் வந்து, அதே நூற்றாண்டின் நடுப்பகுதியில் நாடு முழுவதும் வீதிக் கட்டளைச்சட்டம் நிறைவேற்றப்பட்டு வீதிப்பராமரிப்புக்கும் வீதியமைப்புக்கும் வளங்கள் உருவாக்கப்படும்வரை வன்னிப்பகுதியில் இருந்த வீதிகள் வெறுமனே காடுகளூடாக மரங்களையும் புதர்களையும் வெட்டி அகற்றி ஏற்படுத்திய வழித்தடங்கள் மட்டுமே. பல இடங்களில் சில்லுப் பொருத்திய வண்டிகள் செல்வதற்கு உகந்தவையாக இவ்வீதிகள் இருக்கவில்லை.[3] ஒல்லாந்தர் காலத்திலும் நிலைமை இவ்வாறே இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. எவ்வாறெனினும், வன்னியின் பல்வேறு பகுதிகளில் இருந்த குடியிருப்புகளை இணைப்பதற்கு மண் வீதிகளாலான செறிவான வலையமைப்புகள் இருந்ததை நிலப்படம் காட்டுகிறது.

அது மட்டுமன்றி முக்கியமான வீதிகளில் பயணிகள் தங்கிச் செல்வதற்காக அம்பலங்கள் அல்லது மடங்கள் இருந்தது பற்றியும் அவை நிலப்படத்தில் குறிக்கப்பட்டிருப்பதைப் பற்றியும் முன்னைய கட்டுரையில் பார்த்தோம்.

## தலைநிலத்தில் நிலப்படம் காட்டும் வீதிகள்

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலைக்குச் செல்வதற்கான ஒரே நிலப்பாதை முல்லைத்தீவூடாகச் சென்றதாக 1895 ஆம் ஆண்டில் எல். பி. லூயிஸ் எழுதிய வன்னிக் கையேடு என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.[4] இந்த வீதியை லெயுசிகாமின் நிலப்படத்தில் காணமுடிகிறது. இதன் தடம் நிலப்படத்தில் துல்லியமாக இருப்பதாகக் கூற முடியாவிட்டாலும், இது கடந்து சென்ற பல்வேறு இடங்கள் பற்றி அறிந்துகொள்ள முடிகின்றது. நிலப்படத்தில் உள்ளபடி இவ்வீதி யாழ்ப்பாணத்திலிருந்து தென்மராட்சி, பச்சிலைப்பள்ளியூடாகச் சுண்டிக்குளம் சென்று அங்கிருந்து வன்னிப் பகுதிக்குள் நுழைகிறது. அங்கிருந்து பூவரசந்தொடுவாய்மடம், பாலிவயல், மூலெண்மடு, வல்லியன்மடம், அன்னலிவாய்க்கால் ஆகிய இடங்களூடாக முல்லைத்தீவை அடைந்து பின்னர் தெற்கு நோக்கித் திருகோணமலைக்குச் செல்கிறது. பல இடங்களில் இவ்வீதி கடல்நீரேரிளுக்குக் குறுக்காகச் செல்வதை நிலப்படம் காட்டுகிறது. எனவே, கோடை காலங்களில் நீரேரிகள் வற்றியிருக்கும்போதே இவ்வீதியூடான பயணங்கள் சாத்தியமானவையாக இருந்திருக்கும்.

முல்லைத்தீவிலிருந்து வன்னியைக் குறுக்காக ஊடறுத்து, மேற்குக் கரையில் உள்ள அரிப்பு என்னும் இடத்துக்குச் செல்வதற்கான வீதியொன்று இருந்ததாகவும் லூயிஸ் குறிப்பிட்டுள்ளார்.[5] ஆனால், முல்லைத்தீவிலிருந்து நேராக அரிப்புக்குச் செல்வதற்கான வீதி எதையும் நிலப்படம் காட்டவில்லை. பல்வேறு வீதிகளூடாகச் சுற்றுவழியில் பயணம் செய்ய வேண்டியிருந்ததாகவே தெரிகிறது. முல்லைத்தீவிலிருந்து பள்ளியான்குளம், வண்ணாத்திமுறிப்புக்குளம், வாவெட்டி, பழையவிளாங்குளம், நெடுங்கேணி, கொம்புவைத்தகுளம், நீலக்குட்டியர்குளம், பூவன்னிவாய்க்குளம், நெடுங்குளம், பாண்டியன்கட்டு, நானாட்டான் ஆகிய இடங்களூடாகவே அரிப்புக்குச் செல்லமுடியும். இது ஒரு நீண்ட சுற்றுவழி. மேற்கூறிய இரண்டு

வழிகளூடாக யாழ்ப்பாணத்திலிருந்தும் மன்னாரிலிருந்தும் பொதிமாடுகளைப் பயன்படுத்தி முல்லைத்தீவுக்கான போக்குவரத்து இடம்பெற்றதாகவும், பெரும்பாலும் முஸ்லிம் வணிகர்கள் “தவளம்” என்று அறியப்பட்ட இந்த முறையில் வணிகப் பொருட்களை எடுத்துச் சென்றதாகவும் தெரிகிறது. பிற பயணிகள் குதிரைகளையும் பல்லக்குகளையும் பயன்படுத்தியதாக லூயிஸ் குறிப்பிடுகிறார்.[6] அதிகாரிகளும் ஐரோப்பியருமே அவ்வாறு பயணம் செய்திருப்பர் எனலாம். சாதாரண உள்ளூர்ப் பொதுமக்கள் கால்நடையாகவே இவ்வழிகளில் பயணம் செய்திருப்பர்.

நிலப்படத்தில் உள்ளபடி, யாழ்ப்பாண நகரப் பகுதியிலிருந்து தலைநிலத்துக்குள் நுழைவதற்கான இன்னொரு வீதி பூநகரிப் பிரிவிலுள்ள கல்முனையில் தொடங்குகிறது. யாழ்ப்பாணத்திலுள்ள கொழும்புத்துறையிலிருந்து படகுகள் மூலம் கல்முனைக்கு வரும் பயணிகள் மண்ணித்தலை, கௌதாரிமுனை, நைனாகட்டு ஆகிய ஊர்களூடாகப் பூநகரியை அடையலாம். வன்னிப் பகுதியூடாகத் தெற்கு நோக்கிச் செல்லும் எல்லா முக்கிய வீதிகளுக்கும் பூநகரியிலிருந்து இணைப்புகள் இருந்ததை நிலப்படத்தில் காணமுடிகிறது.

பூநகரியில் தொடங்கும் முக்கிய வீதிகளுள் ஒன்று யாழ்ப்பாணக் கட்டளையகத்தின் மேற்குக் கரையோரத்தை அண்டித் தெற்கு நோக்கிச் செல்கிறது. இது பூநகரிப் பிரிவைக் கடந்து, பல்லவராயன்கட்டு, இலுப்பைக்கடவை, பெருங்கழிப்பற்று, மாதோட்டம், நானாட்டான், முசலிப்பற்று ஆகிய பிரிவுகளூடாக யாழ்ப்பாணக் கட்டளையகத்தின் எல்லையைக் கடந்து தென்பகுதிக்குச் செல்கிறது. இவ்வீதியைப் பற்றியும், அது ஒல்லாந்தர்கால யானை வீதியின் ஒரு பகுதியாக இருந்தது குறித்தும் முன்னைய கட்டுரையொன்றில் விவரமாகப் பார்த்தோம். பூநகரியில் தொடங்கும் இன்னொரு வீதி நல்லூர், தியாகம் ஆகிய இடங்களூடாகப் பனங்காமப் பிரிவில் குறித்துள்ள வலைவச்சபுலோ என்னும் இடம்வரை செல்வதை நிலப்படம் காட்டுகிறது.

மேலே குறிப்பிட்ட தியாகம் என்ற இடத்திலிருந்து யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் தலை நிலத்துக்கும் இடையிலுள்ள கடல்நீரேரியின் தெற்குக் கரையோரத்தை அண்டிச் செல்லும் ஒரு வீதி கரைச்சி, கருநாவற்பற்று, கரிக்கட்டுமூலை ஆகிய பிரிவுகளூடாகப் புதுக்குடியிருப்பிலுள்ள மூலெள்மடு என்னும் இடம்வரை செல்கிறது. கரைச்சிப் பிரிவுக்குள் இந்த வீதியில் அமைந்த புதுமடம் என்ற இடத்திலிருந்து தெற்கு நோக்கிச் செல்லும் இன்னொரு வீதி, முன்னர் குறிப்பிட்ட வலைவச்சபுலோவினூடாக முறிகண்டியை அடைகிறது. இவ்விடத்தில் இரண்டாகப் பிரியும் வீதியின் ஒரு கிளை மணற்குளம், மல்லாவி என்னும் ஊர்களூடாகவும் மற்றக் கிளை அம்பலவி, அம்மிவச்ச ஊர் என்னும் இடங்களூடாகவும் சென்று ஒற்றைரெட்டைக்குளம் என்னும் இடத்தில் மீண்டும் சந்திக்கின்றன. அங்கிருந்து தெற்கு நோக்கித் தொடரும் வீதி





Image Source - www.amazon.com

**ஒல்லாந்தர் காலத்தில் வன்னியூடாகப் பயணம் செய்வது மிகவும் கடினமாக இருந்துள்ளது. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து நான்கு ஐரோப்பியர் கால்நடையாக மேற்கொண்ட கொழும்புப் பயணம் குறித்து அப்பயணக் குழுவின் ஒரு உறுப்பினரான ஹாஃப்னர் என்பவர், தான் எழுதிய நூலொன்றில் விவரித்துள்ளார். இவ்விவரிப்புகளிலிருந்து அக்காலத்திலிருந்த சில வீதிகளின் தன்மைகள் குறித்தும், அவ்வழியே பயணம் செய்பவர்கள் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்சினைகள் குறித்தும், வழியில் பயணிகளின் தேவைக்காக இருந்த வசதிகள் பற்றியும் அறியமுடிகிறது..**

கிடாபிடிச்சகுளம், நெடுங்கேணி, கொம்புவச்சகுளம், மடத்தில்விளாங்குளம், பன்னிச்சைக்குளம், சாலம்பைக்குளம், வெளிக்குளம், பழையவூர் ஆகிய இடங்களூடாகச் சென்று கட்டளையகத்தின் தெற்கு எல்லையைக் கடக்கிறது. இந்த வீதி கரைச்சி, பனங்காமம், பறங்கிச்செட்டிகுளம் ஆகிய மூன்று பிரிவுகளூடாகச் சென்றாலும், இதன் பெரும்பகுதி பனங்காமப் பிரிவுக்குள்ளேயே அடங்குகிறது.

நிலப்படம் மைல் கணக்கான நீளம் கொண்ட பெரிய வீதிகளையும் சிறிய வீதிகளையும் காட்டுகின்றது. இது, வன்னிக்கும் அதன் அயல் பிரதேசங்களுக்கும் இடையிலும், வன்னிக்குள் இருந்த ஊர்களுக்கு இடையிலும் சிறப்பான இணைப்புகள் இருந்ததுபோல் காட்டினாலும், அக்காலத்தைச் சேர்ந்த பிற எழுத்துமூல ஆவணங்கள், வீதிகள் தொடர்பிலும் பயணிகளுக்கான பிற வசதிகள் தொடர்பிலும் இருந்த பிரச்சினைகளை எடுத்துக் காட்டுகின்றன.

## ஹாஃப்னரின் வன்னியூடான பயணம்

ஒல்லாந்தர் காலத்தில் வன்னியூடாகப் பயணம் செய்வது மிகவும் கடினமாக இருந்துள்ளது. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் இறுதிப் பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து நான்கு ஐரோப்பியர் கால்நடையாக மேற்கொண்ட கொழும்புப் பயணம் குறித்து அப்பயணக் குழுவின் ஒரு உறுப்பினரான ஹாஃப்னர் என்பவர், தான் எழுதிய நூலொன்றில் விவரித்துள்ளார். இவ்விவரிப்புகளிலிருந்து அக்காலத்திலிருந்த சில வீதிகளின் தன்மைகள் குறித்தும், அவ்வழியே பயணம் செய்பவர்கள் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்சினைகள் குறித்தும், வழியில் பயணிகளின் தேவைக்காக இருந்த வசதிகள் பற்றியும் அறியமுடிகிறது..

பல நாட்கள் எடுக்கக்கூடிய இப்பயணத்துக்குத் தேவையான உணவு, உடை, ஆயுதங்கள் முதலிய பொருட்களைச் சுமந்து செல்வதற்கும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் பல வேலையாட்களை அழைத்துச்செல்ல வேண்டியிருந்தது. நான்கு ஐரோப்பியர்களைக் கொண்ட இப்பயணக் குழுவில் இதற்காக 12 உள்ளூர் வேலையாட்கள் இருந்தனர்.[7] இங்கே ஹாஃப்னரும் அவரது நண்பர்களும் கால்நடையாகப் பயணம் செய்ய முடிவு செய்ததாலேயே இந்த எண்ணிக்கை போதுமானதாக இருந்தது. சிவிகையில் பயணம் செய்ய எண்ணியிருந்தால் இன்னும் பல வேலையாட்கள் தேவைப்பட்டிருப்பர்.

ஹாஃப்னர் குழுவினர், பயணிகள் வழமையாகக் கொழும்புக்குச் செல்லப் பயன்படுத்தும் கிழக்குக் கரையோரப் பாதையைப் பயன்படுத்தாமல், கரையிலிருந்து சற்று உட்புறமாக இருந்த வீதிகளூடாகவே பெரும்பாலும் பயணம் செய்தனர். ஆனாலும் அவர்கள் வன்னியர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த பகுதிகளுக்குள் செல்லாமல், ஒல்லாந்தரின் நேரடிக் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளூடாகவே பயணம் மேற்கொண்டதாகத் தெரிகிறது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள கொழும்புத்துறையிலிருந்து படகுகளில் புறப்பட்ட ஹாஃப்னரும் நண்பர்களும் வேலையாட்களும், குடாநாட்டையும் தலைநிலத்தையும் பிரிக்கும் கடல்நீரேரியைக்

கடந்து எதிர்ப் பக்கத்திலுள்ள கல்முனையிலிருந்து ஏறத்தாழ 100 யார் தொலைவிலுள்ள ஒரு இடத்தில் இறங்கினர். அங்கிருந்து, மண்ணூர், பூனகரி, செம்பரன்கொண்டி, பல்லவராயன்கட்டு, பாலியாறு, விடத்தல்தீவு, வங்காலை, அரிப்பு, கல்லாறு, மோர்கம், மாதரோடை ஆகிய இடங்களூடாக யாழ்ப்பாணக் கட்டளையகத்தின் தெற்கு எல்லையைக் கடந்து தென்னிலங்கைப் பகுதிக்குள் நுழைந்துள்ளனர். இந்தப் பயணத்தின்போது அவர்கள் பயன்படுத்திய வீதிகள் வெவ்வேறு தன்மைகளைக் கொண்டனவாகக் காணப்பட்டன. அவற்றினூடாகப் பயணம் செய்தவர்கள் வெவ்வேறு விதமான பிரச்சினைகளை எதிர்நோக்கினர். கல்முனையிலிருந்து பூனகரி நோக்கிச் சென்ற வீதி ஆழமான மணற்பாங்கான பகுதிகளூடாகச் சென்றதால், அதில் நடப்பது கடினமாக இருந்தது. இதனால், பாதையை விட்டு விலகிக் கடற்கரையோரமாகச் சில மைல்கள் நடக்கவேண்டியிருந்ததாக ஹாஃப்னர் குறிப்பிட்டுள்ளார்.[8] பூனகரியிலிருந்து பல்லவராயன்கட்டுவரை அவர்கள் பயணம் செய்த பாதை அடர்ந்த காட்டுப்பகுதியூடாகச் சென்றதாகவும் அப்பாதை ஒடுக்கமானதாகவும் வளைந்து நெளிந்து சென்றதாகவும் அறியமுடிகிறது. ஒருவர்பின் ஒருவராக மட்டுமே நடக்கக்கூடிய அளவுக்கு ஒடுக்கமான இப்பாதைகளின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு மனிதர்களின் உயரத்துக்கு நெருக்கமான புதர்கள் காணப்பட்டதாகவும் ஹாஃப்னர் கூறுகிறார்.[9] பாதையில் அடிக்கடி வளைவுகள் இருந்ததால், நடக்கும்போது முன்னே குறுகிய தூரமே பார்க்க முடிந்தது என்றும் இதனால், பாதையைக் கடக்க முயலும் காட்டு விலங்குகளைச் சடுதியாக எதிர்கொள்ளவேண்டி ஏற்பட்டதாகவும் அவர் விவரம் தந்துள்ளார்.[10] யானைகளின் நடமாட்டங்கள் அதிகமாக இருந்த இடங்களில் அவை முறித்துப் போட்ட பெரிய மரக்கிளைகளினால் பல இடங்களில் பாதைகளில் தடைகள் ஏற்பட்டிருந்தனவாம்.

கடற்கரையோர வழிகள் மணற்பாங்காக நடப்பதற்குக் கடினமானவையாக இருந்தது ஒருபுறமிருக்கச் சில இடங்களில் மணல் மேற்பரப்புக்கு வெளியே துருத்திக்கொண்டு இருந்த கூரிய கற்களும், வேறிடங்களில் மணலுக்குள் புதைந்து காணப்பட்ட முட்களும் கால்களைப் பதம் பார்த்தன.

கடற்கரைக்குக் குறுக்காக இருந்த சில முட்புதர்களைத் தவிர்ப்பதற்காகக் கடலுக்குள் இறங்கி நடக்கவேண்டியிருந்தது குறித்தும் ஹாஃப்னர் எழுதியுள்ளார்.[11] இவை தவிரக் கடியெறும்புகளின் தொல்லையும், இரத்தம் உறிஞ்சும் அட்டைகளின் தொல்லையும் பயணிகளுக்கு இடையூறாக இருந்துள்ளன.

வன்னியிலிருந்ததாக நிலப்படம் காட்டும் வீதி வலையமைப்பு இலகுவான பயணங்களுக்கு உகந்த, முறையான வீதிகளைக் கொண்ட வலையமைப்பு அல்ல என்பதை ஹாஃப்னரின் விவரிப்புகளிலிருந்து ஓரளவு அறியலாம்.

**யாழ்ப்பாணக் குடாநாட்டையும் தீவுகளையும் பொறுத்தவரை அங்கிருந்த வீதிகள் குறித்த தகவல்களை இதே தொகுப்பிலுள்ள வேறு நிலப்படங்கள் தெளிவாகக் காட்டுவதால், அந்த நிலப்படங்களைப் பின்னர் விளக்கும்போது அப்பகுதிகளிலுள்ள வீதிகள் தொடர்பில் பார்க்கலாம்.**

## தங்குமிட வசதிகள் குறித்த ஹாஃப்னரின் தகவல்கள்

வீதிகளின் தரம் ஒருபுறமிருக்க, நீண்ட பயணங்களின்போது, ஓய்வெடுப்பதற்கும், இரவில் தங்குவதற்கும், உணவுத் தேவைக்கும் தேவையானால், சமைத்துச் சாப்பிடுவதற்குமான வசதிகளும் பல இடங்களில் ஏற்றுக்கொள்ளத் தக்கவையாக இருக்கவில்லை. பயணிகள் தங்கிச் செல்வதற்கான அம்பலங்கள் அல்லது மடங்களை ஒல்லாந்தர்கால நிலப்படங்கள் குறித்துக் காட்டுவது பற்றி ஏற்கெனவே இத்தொடரின் பல கட்டுரைகளில் விளக்கியுள்ளோம்.

ஆனால், இவ்வாறான மடங்களின் அமைப்பு, எந்த அளவுக்கு அவை பயணிகளுக்குப் பயனுள்ளவையாக இருந்தன முதலிய சில

விவரங்களையும் ஹாஃப்னரின் நூலிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

ஊர்களின் நுழைவாயில்களிலும், ஊர்களுக்கு உள்ளும் சில வேளைகளில் வீதியோரங்களில் நடுக் காட்டிலும்கூட அம்பலங்கள் இருந்ததுபற்றி ஹாஃப்னர் குறிப்பிட்டுள்ளார். ஆனால், அவை பெரும்பாலும் பயன்பாட்டுக்கு உகந்தவையாக இல்லாதிருந்ததையே ஹாஃப்னரின் குறிப்புகள் புலப்படுத்துகின்றன. இவ்வாறான தங்குமிடங்கள் பற்றிப் பொதுவாகக் குறிப்பிட்ட ஹாஃப்னர், ஏறத்தாழ அவை அனைத்துமே வைக்கோலால் வேயப்பட்ட கொட்டில்கள் என்றும், 10 பயணிகளுக்கு மேல் தங்கமுடியாத அளவு சிறியவை என்றும் கூறுகிறார். அத்துடன், இலங்கையில் பயணிகள் இரவில் தங்குவதற்கான வசதிகள் போதுமானவையாக இல்லை என்றும் பொதுவாக அவர்கள் இரவை மரங்களுக்குக் கீழேதான் கழிக்கிறார்கள் என்றும் அவர் குறிப்பிடுகிறார்.[12]

பூனகரியிலிருந்து பல்லவராயன்கட்டுக்குச் செல்லும் வழியில் காட்டின் நடுவே செம்பரன்கொண்டி என்னும் இடத்திலிருந்த அம்பலம் ஒரு தங்குமிடம்போல் அல்லாமல் சிதைந்த நிலையில் இருந்த ஒரு குடிசை போன்றே இருந்ததாம்.[13] அதேபோல, வங்காலையில் இருந்த அம்பலம் சிறிதாகவும் அழுக்காகவும் பயணிகளால் நிறைந்தும் காணப்பட்டதாக ஹாஃப்னர் கூறுகிறார்.[14] விடத்தல்தீவில் கைவிடப்பட்ட ஒரு போர்த்துக்கேயத் தேவாலயம் பயணிகள் தங்குமிடமாகப் பயன்பட்டதாகவும், அக்கட்டடத்தில் சுவர்கள் உறுதியாக இருந்தபோதும் சாளரங்களையும் கதவுகளையும் காணவில்லை என்றும் அவர் தகவல் தந்துள்ளார்.[15]

இவ்வாறு நிலப்படங்களில் பயணிகள் தங்கிச் செல்வதற்கான அம்பலங்கள் பல்வேறு இடங்களில் காட்டப்பட்டிருந்தாலும், அவற்றுட் பல பயன்படக்கூடிய நிலையில் இருந்தனவா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. அதேவேளை, ஹாஃப்னரின் பயணம் இடம்பெற்றது ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின் இறுதிக் கட்டத்திலாகும். முன்னர் நல்ல நிலையில் பேணப்பட்ட இத்தகைய வசதிகள், ஒல்லாந்தர் அரசியல் ரீதியாகவும், நிதி நிலையிலும் நெருக்கடியை எதிர்நோக்கியிருந்த பிற்காலத்தில், பராமரிப்பின்றிக் கைவிடப்பட்டிருக்கக்கூடிய வாய்ப்புகளையும் மறுப்பதற்கில்லை.

## குறிப்புகள்


1. J. P. Lewis, A Manual of the Vanni Districts, Ceylon (New Delhi: NAVRANG, 1895), 215.
2. Lewis, A Manual of the Vanni Districts, 216.
3. Lewis, A Manual of the Vanni Districts, 212.
4. Lewis, A Manual of the Vanni Districts, 212.
5. Lewis, A Manual of the Vanni Districts, 212.
6. Lewis, A Manual of the Vanni Districts, 212.
7. J. Haafner, Travels on foot through the island of Ceylon (New Delhi: Asian Educational Services, 1995), 910.
8. Haafner, Travels on foot through the island of Ceylon, 17.
9. Haafner, Travels on foot through the island of Ceylon, 22.
10. Haafner, Travels on foot through the island of Ceylon, 24.
11. Haafner, Travels on foot through the island of Ceylon, 46.
12. Haafner, Travels on foot through the island of Ceylon, 18.
13. Haafner, Travels on foot through the island of Ceylon, 24.
14. Haafner, Travels on foot through the island of Ceylon, 41.
15. Haafner, Travels on foot through the island of Ceylon, 40.


(தொடரும்)

நீண்டகால யுத்தத்தின் முடிவிற்கு பின்னர், போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு சாத்தியமாகாத நிலையில், மீள்கட்டுமானத்திற்கும் அபிவிருத்திக்கும் அரசிடமிருந்து போதுமான ஆதரவு கிடைக்காத சூழலே யதார்த்தமாகியிருக்கிறது. இந்நிலையில், வடக்கில் முனைப்படைந்து வரும் தொழில் முயற்சிகளையும் முயற்சியாளர்களையும் பலரதும் கவனத்திற்கு கொண்டுவருவதே ‘வளரும் வடக்கு’ எனும் இத் தொடரின் நோக்கமாகும். வடக்குப் பிரதேசத்தில் புலம்பெயர் சமூகத்தின் முதலீடு, புத்தாக்க தொழில் முனைப்புகள், வேலைவாய்ப்புகளை உருவாக்கும் எத்தனிப்புகள், தொழில் முனைவோரின் அனுபவப் பகிர்வு, முயற்சிகளின் தோல்விகளில் இருந்து கற்ற பாடம், வடக்கு பிரதேசத்தில் தனித்துவமாகக் காணப்படக்கூடிய பிரச்சனைகள், உலகளாவிய சமூகத்துடன் இணைந்து முயற்சிகளை வெற்றிகரமாக மாற்றக்கூடிய சந்தர்ப்பங்கள் போன்றவற்றை உள்ளடக்கியதாக இத்தொடர் அமையும். இத் தொடர் வடக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமூக, பொருளாதார முயற்சிகளை விபரிப்பதோடு மட்டுமே நின்றுவிடாது, அதன் தொடர்ச்சியான அசைவிற்குத் தேவையான முன்னெடுப்புகளின் சாத்தியம் குறித்தும் இலங்கையின் பொருளாதாரப் பின்னணியில் தரவுகளோடு ஆராய்கிறது. இது புதிய முயற்சியாளர்களுக்கு பாடமாக அமைவதோடு மேலும் பல முயற்சியாளர்களை வடக்கை நோக்கி வரவழைக்கும்.




*தமிழில் : த. சிவதாசன்*

# ‘சர்வதேச ஊடாட்டம் அவசியம்’

## யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத் தலைவர், கலாநிதி ராஜேந்திரன் சுரேந்திரகுமாரன்


ஜெகன் அருளையா


இக் கட்டுரை ஆசிரியர் ஜெகன் அருளையா, இலங்கையில் பிறந்து தனது 2 வயதில் தனது பெற்றோருடன் பிரித்தானியாவிற்கு இடம் பெயர்ந்தவர். லண்டனில் வளர்ந்து, 1986 இல் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் இயற்கை விஞ்ஞானத்தில் பட்டம் பெற்ற அவர் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக தகவற் தொழில்நுட்பத் துறையில், அதில் பாதிக் காலம் மென்பொருள் தயாரிப்பாளராக, இலங்கையிலும் வேறு நாடுகளிலும், பிரித்தானிய நிறுவனங்களிலும் பணியாற்றியவர். 2015 இல், நிரந்தரமாக யாழ்ப்பாணத்துக்குக் குடிபெயர்ந்து அங்கு சமூக, பொருளாதாரத் திட்டங்களில் தன்னை ஈடுபடுத்தி வருகிறார்.




யாழ். பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் புதிய பீடத் தலைவராக செப்டெம்பர் 2021 முதல் நியமனம் பெற்ற டாக்டர் ராஜேந்திரன் சுரேந்திரகுமாரன் (சுரேன்) அவர்களைச் சந்திக்கும் வரை சர்வதேசங்களுடனான ஊடாட்டத்தின் முக்கியத்துவம் பற்றி நான் அதிகம் பொருட்படுத்தியிருக்கவில்லை. ஒரு தொழில்துறையின் வெற்றிக்கு நிபுணத்துவம், அனுபவம், ஆராய்ச்சி, நிதியுதவி ஆகியன எவ்வளவு முக்கியமோ அதே போன்று கல்வித்துறையின் வெற்றிக்கும் அவை அவசியமானவை. தனது நண்பர்கள், சக பணியாளர்கள் என்ற பரந்த வலையமைப்பின் ஊடாக



டாக்டர் ராஜேந்திரன் சுரேந்திரகுமாரன்,
யாழ். பல்கலைக்கழக மருத்துபீடத் தலைவர்

Image Source - marumoli.com

சுரேன் புலம்பெயர் தமிழர்களுடன் ஏற்படுத்தியுள்ள ஈடுபாட்டைப் பார்த்து நான் புளகாங்கிதம் அடைந்தேன். பிரித்தானியாவிலுள்ள

பேர்மிங்ஹாம் பல்கலைக்கழகம், பிறிஸ்டல் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் கல்வியாளர்களோடு அவர் உறவை ஏற்படுத்தியிருக்கிறார்; 'வெல்கம் ட்றஸ்ட்' (Wellcome Trust), 'றோச் குளோபல்' (Roche Global), பிரித்தானியாவின் சுகாதார ஆராய்ச்சிக்கான தேசிய நிலையம் (National Institute of Health Research (NIHR) மற்றும் பிரித்தானிய தேசிய சுகாதார சேவை (National Health Service - NHS) ஆகிய அமைப்புகளிடமிருந்து சுரேன் தனது திட்டங்களுக்கு நிதியுதவியைப் பெற்றிருக்கிறார். சீரற்ற இதயத் துடிப்பு (Atrial Fibrillation ) ஆராய்ச்சி தொடர்பாக யாழ்ப்பாணத்திலுள்ள அவரது குழு பிரேசில், சீனா ஆகிய நாடுகளிலுள்ள ஆராய்ச்சியாளர்களுடன் இணைந்து பணியாற்றி வருகிறது. வடக்கு, கிழக்கில் புற்றுநோய்த் தடுப்புக்கான 'கேன்' (Cancer control North East (CANE)) அமைப்பின் தலைவராக சுரேன் பணிபுரிகிறார். இவ்வமைப்பு பிரித்தானியாவின் 'கேன் - யூ.கே' (CANE UK) என்ற தொண்டு நிறுவனத்தின் ஆதரவில் இயங்குகிறது. 'கேன்' ஆதரவுடன் யாழ்ப்பாணத்தில் சுரேன் ஆரம்பித்த, வலி முகாமைத்துவத்துடன் (pain management) கூடிய, அந்திமகாலப் பராமரிப்புச் சேவை (Palliative Care) கனடிய தொண்டு நிறுவனமான 'இரு உலக புற்றுநோய் ஒத்துழைப்பு' (Two World Cancer Collaboration - TWCC) மற்றும் கனடா, அமெரிக்காவைத் தளங்களாகக் கொண்ட அனைத்துலக மருத்துவ நல அமைப்பு ( International Medical Health Organisation - IMHO) ஆகியவற்றின் ஆதரவில் நடைபெற்று வருகிறது.

இச்சேவையின் உண்மையான பலனாக, TWCC மற்றும் IMHO தொண்டு நிறுவனங்களின் ஆதரவில், வட மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் உதவியுடன் சுரேன் ஆரம்பித்த நடமாடும் அந்திம காலப் பராமரிப்பு மற்றும் வலி முகாமைத்துவ சேவைக் குழுவினர் நோயாளிகளின் வீடுகளுக்குச் சென்று அவர்களின் இறுதிக் காலங்களை வலி குறைந்தவையாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருவது காணப்படுகிறது. இச் சேவை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் நோயாளிகள் தம் இயலாமையையும் பொருட்படுத்தாது தூர இடங்களிலிருந்து பஸ் வண்டிகளில் ஏறி மருத்துவமனைகளுக்கு வந்துபோக வேண்டியவர்களாக இருந்தார்கள்.

யாழ். மருத்துவ பீடத் தலைவராகப் பணியாற்றாத வேளைகளில் சுரேன், சிறிய பிராந்திய மருத்துவமனைகளில் பணி புரிகிறார். 1973 இல், தான் பிறந்த மருத்துவமனையான மூளாய் கூட்டுறவு மருத்துவமனையில், கௌரவ மருத்துவ ஆலோசகராகப் பணியாற்றுகிறார். புலம்பெயர் தமிழரது ஆதரவுடன், மானிப்பாய் கிரீன் மெமோரியல் மருத்துவமனையில், 2011 இல், மருத்துவ விஞ்ஞான நிலையம் (Institute of Medical Sciences - IMS) சுரேனால் ஆரம்பிக்கப்பட்டது. இதற்காக சுரேன் லண்டனிலுள்ள பிரபல செய்ன்ட் பார்தலோமியூ மருத்துவமனையில் ஒரு வருட விசேட கல்வியைப் பெற்றிருந்தார். சுகாதார சேவைகளை வழங்குவதுடன், மருத்துவரல்லாத, இதர மதிப்பற்ற சுகாதார சேவைகளில் இளையோரை ஈடுபடுத்தும் பயிற்சிகளையும், வழிகாட்டல்களையும் இம் மருத்துவ விஞ்ஞான நிலையம் வழங்கி வருகிறது.

மருத்துவத் துறைக்கு அப்பால், சுரேன் பல சமூக சேவைகளிலும் தன்னை ஈடுபடுத்தி வருகிறார். உலக சுகாதார அமைப்பின் ஒரு பிரிவானதும், அதன் நிதி ஆதரவில் இயங்குவதுமான 'யாழ்ப்பாண சுகாதார நகர்' (Jaffna Healthy City) என்ற அமைப்பின் யாழ்ப்பாண முகாமைத்துவக் குழுவிற்குத் தலைவராகவும் சுரேன் செயற்படுகிறார். அரசியல் அர்ப்பணிப்பு, நிறுவன ரீதியான மாற்றம், சுகாதார அபிவிருத்தி, திறன் உருவாக்கம், பங்காளி அடிப்படையில் திட்டமிடல், புதுமையான திட்டங்கள் ஆகிய நடைமுறைகளினூடு உள்ளூராட்சி அரசுகளை சுகாதார அபிவிருத்தியில் ஈடுபட ஊக்குவிக்கும் முயற்சிகளை உலக சுகாதார நிறுவனம் இவ்வமைப்பினூடாகச் செய்ய எத்தனிக்கிறது. இதைவிடவும், உலக வங்கியின் 'எஹெட்' (World Bank's AHEAD) திட்டத்தின் கீழ் வட மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் 'நீர்ப் பாதுகாப்பு' திட்டத்தில், வட மாகாணத்தில் 'பல பங்குதார' (multistakeholder) அணுகுமுறையைக் கையாள முன்னெடுக்கப்பட்டுவரும் ஆராய்ச்சியில்




நடமாடும் அந்திமகாலப் பராமரிப்பு மற்றும்
வலி முகாமைத்துவ சேவைக் குழுவினர்

Image Source - marumoli.com

சுரேன் ஒருங்கிணைப்பாளராகச் செயற்பட்டு வருகிறார். குப்பைகூழ முகாமைத்துவம், மீள் சுழற்சி, ஆரோக்கிய உணவு, உடற் பயிற்சி ஆகிய விடயங்களில் முன்னெடுப்புக்களை நடைமுறைப்படுத்தும் உத்திகளையும் செயற்பாட்டு முறைகளையும் அறிமுகப்படுத்துவதற்கு இளைய தலைமுறையினரை ஈடுபடுத்துவதில் தற்போது சுரேன் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.


### சமகாலப் பிரச்சினைகள்

பீடத் தலைவராகப் பதவியேற்றதிலிருந்து எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினைகள் என்ன என்று நான் கலாநிதி சுரேந்திரகுமாரனைக் கேட்டேன்.

இளம், மதியூகிகளான மருத்துவர்களைக் கல்வித்துறைக்குள் ஈர்க்க மருத்துவ பீடம் சிரமப்படுகிறது. வெளி மாகாணங்களுக்கு நகர்வது, வெளிநாடுகளுக்குக் குடிபெயர்வது ஆகியவற்றின் மூலம் பல மருத்துவர்கள் அதிக சம்பாத்தியத்தையும், சந்தர்ப்பங்களையும் நோக்கிச் செல்கிறார்கள். சம்பள வழங்கல் விடயங்களில், இலங்கையின் பல்கலைக்கழக மருத்துவ பீடங்கள், உயர்கல்வி அமைச்சின்கீழ் வருகிறது. இது அரசாங்க மருத்துவமனைகளில் மருத்துவர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தை விடக் குறைவானது.

ஆராய்ச்சி, அபிவிருத்திகளில் (R&D) செய்யப்படும் முதலீடுகள் இலங்கையில் மிகவும் குறைவு. இலங்கை நிதியமைச்சின் புள்ளிவிபரப்படி, 2020 இல் இலங்கையின் மொத்த உற்பத்தியின் 0.2 சதவீதமே ஆராய்ச்சி, அபிவிருத்தித் துறையில் முதலீடு செய்யப்பட்டது. யுனெஸ்கோ நிறுவன புள்ளிவிபரங்களின்படி இவ்விடயத்தில் இலங்கை மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது.

கொழும்பு, மொறட்டுவ உள்ளிட்ட இதர பல்கலைக்கழகங்கள், தனியார், அறக்கட்டளைகள், நிதியங்கள், இலாப நோக்கற்ற அமைப்புக்கள் மற்றும் அரச திணைக்களங்களிலிருந்து நிதியைப் பெறுவதால் இவ்விடயத்தில் வெற்றிகரமாகச் செயற்படுகின்றன. அத்தோடு அவை தனியார் - அரசு இணைந்த (Public Private Partnerships - PPP) கூட்டு உற்பத்தி, சேவை வழங்கல் முறைகளையும் கடைப்பிடிக்கின்றன. இவற்றைப் போன்று தனியார் நிதிகளைப் பெறும் வழிகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் கற்றுக்கொள்ள வேண்டும். இவ்வழிகளைத் திறமையாகக் கையாளக் கற்றுக்கொள்வதன் மூலம் யாழ்.




புள்ளி விபரம்

Image Source - marumoli.com

பல்கலைக்கழகமும் ஆராய்ச்சி, அபிவிருத்தித் துறையில் மேம்பட்ட ஒன்றாக வரமுடியும்.

குறிப்பாக, யாழ். பல்கலைக்கழகம், பல்கலைக்கழக - தொழில் நிறுவன இணைப்புகளை (University Business Linkages - UBL) உருவாக்க வேண்டும். பல்கலைக்கழகங்களை தொழில் நிறுவனங்களுடன் இணைப்பதன் மூலம் இருதரப்பும் பரஸ்பர நன்மைகளைப் பெறமுடியும். விஞ்ஞான முறைகளைப் பின்பற்றுவதால் உயர் இலக்குகளை அடையக்கூடிய வளங்களைத் தொழில் நிறுவனங்கள் பெற்றுக் கொள்ளலாம். அதே வேளை, உதவிப் பணங்களில் தங்கியிருப்பதை விட, தொழில் நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுவதன் மூலம், பல்கலைக்கழகம், குறிப்பாக இளம் கல்வியாளர்கள், மாணவர்கள், நிஜமான புதிய கண்டுபிடிப்புக்களையும், புதிய சேவைகளையும் அறிமுகம் செய்து அதன் மூலம் பெரும் பணமீட்டலைச் செய்துகொள்ள முடியும்.

பல்கலைக்கழகம் தனது கற்கைநெறியைப் புதுமைப்படுத்திக்கொள்ள வேண்டும். நிதிப்பற்றாக்குறையாலும், புதிய அனுபவங்களையும் எண்ணக்கருக்களையும் கொண்டுவரக்கூடிய புதியவர்களை ஈர்க்காமையால், நவீன தொழில்நுட்பத்தையும் வளங்களையும் பெற்றுக்கொள்ள முடியாமல் யாழ். பல்கலைக்கழகம் பின்தங்கிவிட்டது. வெளிநாட்டு கல்வி நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் இங்குள்ள கல்வியாளர்கள் அங்கு சென்று புதிய அனுபவங்களையும், எண்ணக்கருக்களையும் கொண்டுவர முடியும். இலங்கையின் இதர பல்கலைக்கழகங்கள் மிகச் சிறந்த வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளன. இப்படி வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் யாழ் பல்கலைக்கழகத்திற்கும் பல இளைய, விவேகமான கல்வியாளர்களை ஈர்க்க முடியும்.

பல்கலைக்கழகத்தின் இதர பீடங்களுடன் நெருங்கிய ஒத்துழைப்பை உருவாக்கிக் கொள்ளலாம். கிளிநொச்சியில் இருக்கும் பொறியியல் பீடத்தோடு ஏற்கனவே இணைந்து செயற்படுவதன் மூலம், 3D வார்ப்பு (3D Printers) தொழில்நுட்பத்தைப் பாவித்து செயற்கை இருதய வால்வுகள், மூட்டுக்கள், அவயவங்கள் ஆகியன உற்பத்தி செய்யப்படுகின்றன. டிஜிட்டல் சுகாதாரத் திட்டத்தின் கீழ், ஸ்மார்ட் ஃபோன்களின் உதவியுடன் இருதயத் துடிப்பைக் கண்காணிக்கும்/எச்சரிக்கும் (ECG ) வழிமுறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் ஒரு நோயாளி மருத்துவமனைக்கு விரைவாகவே சென்று சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியும். வீடுகளில் தனிமைப்படுத்தப்படுபவர்களது

சுகாதாரத்தைக் கண்காணிக்கும் வழிமுறைகள் ஆராய்ச்சியில் உள்ளன. பெருந்தொற்றுக் காலத்தில் இவை மிகவும் பிரயோசனமாகவிருக்கும்.

கல்வியாளர்கள் ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்காக நேரம் ஒதுக்கப்படுவதில்லை. அவர்களது நேரம் முழுவதும் கற்பித்தலுக்காகவே ஒதுக்கப்படுகிறது. அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் உட்பட, பலவற்றால் ஆராய்ச்சிகளுக்காக ஒதுக்கப்படும் பணத்தை எப்படிப் பாவிப்பது என்பது பற்றி கல்வியாளர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டும். பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை அவர்கள் சமர்ப்பிக்க வேண்டும். ஒரு பல்கலைக்கழகத்தின் பெயரும் புகழும் இப்படியான ஆராய்ச்சிகளில் தான் தங்கியிருக்கிறது.



சிங்கப்பூர் லீ அறக்கட்டளை ஆதரவில்
யாழ். பல்கலைக்கழகத்தில் எலும்பியல் திணைக்களம் ஆரம்பம்

Image Source - marumoli.com

### புலம்பெயர் தமிழரின் வலு

பல்கலைக் கழகத்துக்கு ஆதரவு வழங்குவதில் புலம் பெயர் தமிழர்களின் பலம் பற்றி சுரேன் மீண்டும் அழுத்திக் கூறுகிறார். பெர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தின் நிதியாதரவு, நான்கு ஆய்வாளர்கள், 25 தரவு சேகரிப்பாளர்களைக் கொண்ட குழு, ஒரு நிலையத்தை நிர்வகிப்பதற்கான செலவு ஆகியவற்றைக் கவனித்துக் கொள்கிறது. யாழ் பல்கலைக்கழகத்தின் அறுவைச் சிகிச்சைத் திணைக்களம், எலும்பியல் பிரிவு சிங்கப்பூர் லீ அறக்கட்டளை மற்றும் சிங்கப்பூர் நலன் விரும்பிகள் ஆகியவர்களின் ஆதரவில் நடைபெற்று வருகிறது.

புற்றுநோயியல் ஆராய்ச்சிக்கென வழங்கப்படும் ஏ.எஸ். தம்பையா நன்கொடையைத் தன் தந்தையின் நினைவாக மலேசியாவிலிருந்து திரு. ரி. யோகேஸ்வரன் வழங்கி வருகிறார். புற்றுநோய் ஆராய்ச்சிக்கான ஒரு பேராசிரிய இருக்கைக்கு இந் நிதியம் ஆதரவு தருகிறது.

ரொறோண்டோ பலகலைக்கழகத்தின் இடப்பகிர்வுத் திட்டத்தின்கீழ் பலர் தொண்டு ரீதியிலும், சம்பள ரீதியிலும் வட மாகாணத்துக்கு வந்து சேவை புரிகிறார்கள். தம் தாயகத்தைப் பற்றி அறிந்திராத இரண்டாம் தலைமுறை புலம்பெயர் தமிழர்கள் இத் திட்டத்தின் மூலம் தாய் மண்ணுடன் இணைப்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும். பல தமிழர்கள், புலம் பெயர் தேசங்களில் பல உயர் பதவிகளில் இருக்கிறார்கள். இப்படியான தொடர்புகளை ஏற்படுத்துவதிலுள்ள அவசியத்தையும் அதனால் ஏற்படுத்தவல்ல சந்தர்ப்பங்களையும் அவர்கள் உணர்வார்கள்.

மக்கள் தம் சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவல்ல சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக்க புலம்பெயர் தமிழர்கள் அதிக உதவிகளைச் செய்யவேண்டும் என்கிறார் டாக்டர் சுரேந்திரகுமாரன். சிறந்த பயிற்சி, சிறந்த வேலை, சிறப்பான சந்தர்ப்பங்கள் ஆகியன பண உதவியால் கிடைக்கும் 'சுய பிரயோசனமற்றவர்' என்ற உணர்வு நிலையைவிடச் சிறந்தவை. இதுவே வடமாகாணத்தில் இன்று காணப்படும் நீடித்த உடல், மன, சமூக நோய்களுக்கான காரணம்.

டாக்டர் சுரேந்திரகுமாரனைத் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் surenthirakumaran@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளலாம்.

**நன்றி : மறுமொழி, Lanka Business Online (www.lankabusinessonline.com)**

(தொடரும்)

# பல்கலைக்கழக வணிக இணைப்பு:

# கல்வி முனைப்புகள் மூலம் சந்தைகளை விரிவுபடுத்தல்

தொழில் முனைவோர் தமது எண்ணங்களை வணிகப்படுத்தி பணம் பண்ணுகிறார்கள். அள்ளப்படும் குப்பைகள் பெறுமதிமிக்க கட்டிடப் பொருட்களாகவும் எரிபொருட்களாகவும் மாற்றப்படுகின்றன. மைக்குறோவேவ் உலைகளும், தீக்குச்சிகளும் இன்னோரன்ன தற்செயலான கண்டுபிடிப்புகளும் மிகப்பெரிய தொழிற்கூடங்களை உருவாக்கிவிட்டன. உபத்திரவமெனக் கருதப்பட்ட பசையை யாரோ 'சுப்பர் குளூ' (superglue) என விற்கத் தொடங்கிவிட்டார்கள். ஒட்டவில்லை என விலக்கிவைத்த பசையை இன்னொருவர் 'போஸ்ற் இற்' (PostIt) குறிப்புக் கட்டுகளாக விற்கிறார். தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்ட அன்டிபயோட்டிக்ஸ், இன்சுலின் போன்ற மருந்துகள் இன்று பல மில்லியன்களை ஈட்டித்தரும் வணிகப் பொருட்களாகிவிட்டன.

இங்கு பணம் மட்டுமல்ல பேசு பொருள், புகழும் கூடவே. நீங்கள் திருவாளர் லவுட்டைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அல்லது திருவாளர் பைறோ பற்றி? 'பைறோ' போல்பொயிண்ட் (ballpoint) பேனாவினால் புகழ் பெற்ற பெயர் அது. 1888 இல் திரு. லவுட் போல்பொயிண்ட் பேனாவுக்கான உரிமத்தைப் (patent) பதிவு செய்தார். முறையான வணிகச் சந்தைப்படுத்தல் இல்லாமையால் லவுட்டின் முயற்சி தோற்றுப் போனதுடன் அவரது உரிமமும் கைகழன்று போனது. முறையான தொழில் முனைவோருடன் அவர் தன்னை இணைத்துக் கொண்டிருந்தாரேயானால் இப்போது நாம் இப்போது 'லவுட்' பேனாக்களைத் தொலைத்துக்கொண்டோ அல்லது இரவல் வாங்கிக்கொண்டோ இருந்திருப்போம். ஐம்பது வருடங்களுக்குப் பிறகு, 1938 இல், பைறோவுக்கு 'போல்பொயிண்ட்' உரிமம் வழங்கப்பட்டது. அடுத்த நாற்பது ஆண்டுகளுக்கு 'பைறோ' பேனாக்களுக்கு பெரும் கிராக்கி இருந்தது. 1950 இல் மார்செல் பிச் (Bich) என்ற இன்னுமொரு தொழில் முனைவர் புதிய பிளாஸ்டிக் தொழில்நுட்பத்தைப் பாவித்து, பாவனை முடிந்ததும் குப்பைக்குள் வீசக்கூடிய, மிகவும் மலிவாக பைறோக்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்தார். மை முடிந்ததும் அதை வீசிவிட்டுப் புதிய

Image Source - marumoli.com

பேனாவை வாங்கிவிடலாம். இதற்குப் பெயர் தான் 'பிக்' (*Bic*). இன்று அநேகமான அலுவலகங்களிலும், வீடுகளிலும், பெரும்பாலானாரின் பைகளிலும் புழக்கத்திலிருப்பது இந்த 'பிக்' பேனா தான். 2006 இல் அது 56 வருடங்களைப் பூர்த்தி செய்தபோது 100 பில்லியன் பேனாக்களை விற்றுத் தீர்த்திருந்தது.

உத்வேகம் (*inspiration*), கற்பனை (*invention*), புதுமை (*innovation*), செயலாக்கம் (*execu tion*), வணிகப்படுத்தல் (*commercialization*) ஆகியனவே இங்குள்ள மந்திரம். வியாபாரங்களை, வேலைகளை, சம்பளத்தை, இலாபத்தை உற்பத்தி செய்து தருவது இந்த மந்திரம் தான். பாடசாலைகளையும், மருத்துவமனைகளையும் நிர்மாணிப்பதற்கான வரியை ஈட்டித் தருவதும் இதுதான். இந்த உத்வேகத்தை முதலீட்டாளர்களிடமும் தயாரிப்பாளர்களிடமும் கொண்டு செல்வது முதல், கற்பனைகளை வடிவமைக்கத் தூண்டுவது, விற்பனைக்கான பாதைகளை சந்தைகளாக மாற்றுவது, புதுமைகளை நுகர்வோருக்கு விற்பனை செய்வது, பணியாட்களுக்கு ஊதியத்தைப் பெற்றுக்கொடுப்பது, முதலீட்டாளர்களுக்கு இலாபம் பெற்றுக்கொடுப்பது என இம்மந்திரம் நீட்சி பெறும்.

ஸ்ரான்ஃபோர்ட், ஹார்வார்ட், ஒக்ஸ்ஃபோர்ட், கேம்பிரிட்ஜ், இம்பீரியல், யூ.சீ.எல் போன்ற பிரபல பல்கலைக்கழகங்கள் முதல் ஐ.ஐ.ரீ போன்ற பெருந்தொகையான இந்திய தொழில்நுட்பக் கல்லூரிகள் வரை செய்யும் மந்திரம் கல்விமான்களையும் தொழில்முனைவர்களையும் இணைத்துவிடுவது தான். பல பில்லியன் டாலர்கள் முதலீடுகளை இந்நிறுவனங்கள் இலகுவாகக் கறந்துவிடுகின்றன. பெருங் கட்டணங்களை வசூலிக்கும் சட்ட வல்லுனர்களைப் பணிக்கமர்த்தி இப் பல்கலைக்கழகங்கள் அதேயளவு கூர்மதி கொண்ட சட்ட நிபுணர்களைக் கொண்ட தொழில் முனைவோருடன் பேரம் பேசித் தமது இணைப்புகளை நிர்மாணித்துக் கொள்கின்றன. இப் பேரத்தின் மூலம் இக் கல்வி நிறுவனங்கள் குறைந்த பட்சம் தொழிலில் பங்குதாரராகவோ (*equity share*) அல்லது பாவனை உரிமைக்காரராகவோ (*royalty*) தம்மை இணைத்துக் கொள்கின்றன. பேராசிரியர்களும் மாணவர்களும் புதிய தொழில் நிறுவனங்கள் உருவாகுவதற்குக் காரணகர்த்தாக்களாகின்றனர். இவற்றில் சில உலகின் இராட்சத நிறுவனங்களாகவும் பரிணமிக்கின்றன.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களும் உயர் கல்வி நிறுவனங்களும் இதையே தான் செய்யவேண்டும். பல்கலைக்கழக வணிக இணைப்பு (*University Business Link UBL*) என்னும் அமைப்பு இலங்கையில் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் இப்படியான முயற்சியை எடுத்து வருகிறது. பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் பிரசுரத்தின் பிரகாரம் பல்கலைக்கழக - வணிக இணைப்புகளை அபிவிருத்தி செய்யப் பல்கலைக்கழகங்கள் உள்ளடக்க வேண்டியவை எனப் பரிந்துரைக்கப்படும் விடயங்கள்:

1. வணிகத்தை அடிப்படையாகக்கொண்ட மாணவர் வேலைத் திட்டங்கள் மற்றும் பயிற்சிகளை அபிவிருத்தி செய்தல்.
2. வணிக நிறுவனங்களுக்கு பயிற்சிகளை அளித்தல்.
3. வணிக நிறுவனங்களுக்கு (தொழில்நுட்ப) ஆலோசனைகளை வழங்கும் சேவைகளை நடைமுறைப்படுத்தல்.
4. பல்கலைக்கழகங்களில் அறிவுசார் சொத்து (Intellectual Property – IP) பற்றிய செயற்திட்டங்களை அறிமுகப்படுத்தல்.
5. பல்கலைக்கழக உப தொழில்முனைப்புகளை முன்னெடுத்தல்.
6. வணிக நிறுவனங்களுக்கும் பல்கலைக்கழகங்களுக்குமிடையே கூட்டு ஆராய்ச்சி முயற்சிகளை ஊக்குவித்தல்.
7. தனியார் நிறுவனங்களுடன் இணைந்து பல்கலைக்கழகங்களில் ஆய்வுகூடங்களை நிர்மாணித்தல்.

## யாழ். பல்கலைக்கழக - வணிக இணைப்பு

யாழ். பல்கலைக்கழக - வணிக இணைப்பு அலுவகத்துக்கு வரும்படி அதன் பணிப்பாளரும் யாழ். பல்கலைக்கழக விலங்கியல் பேராசிரியருமான ரீ. ஈஸ்வரமோகன் என்னை அழைத்திருந்தார். யாழ். பல்கலைக்கழகப் பட்டதாரியான அனு ராகவன் தலைமையிலான குழுவினரை நான் இங்கு சந்திக்க முடிந்தது. ராகவனை நான் இதற்கு முன்னரும் சந்தித்திருக்கிறேன். சூழலியல் திட்டங்களுட்படப் பல திட்டங்களில் அவர் பணிபுரிந்திருக்கிறார். அவரது குழுவில் இரண்டு அண்மைக்கால பட்டதாரிகளும் யாழ்ப்பாணத்தில் முன்னணியிலிருக்கும் பாடசாலையான ஹார்ட்லி கல்லூரி முன்னாள் மாணவர் ஒருவரும் இருக்கிறார்கள். இப் பல்கலைக்கழகம் ஆராய்ச்சிகளை உரிமங்களாக்கும் (patent) முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது. இது இன்னும் ஆரம்ப நிலையிலேதான் இருக்கிறது. 14 உரிமக் கோரிக்கைகளில் 3 தான் இதுவரை பதிவு பெற்றிருக்கின்றன. யாழ். பல்கலைக்கழகத்தின் 48 வருட வரலாற்றில் இந்த மூன்று பதிவுகள் தான் பல்கலைக்கழகத்துக்குச் சொந்தமானவை.




Image Source - marumoli.com

இவ்வுரிமங்களில் ஒன்று இலங்கை உரிம அலுவலகத்திற்குச் சொந்தமானது. நீர்க்குழாயில் நீரோட்டம் (water tap) மற்றும் கழுவல் திரவ ஓட்டம் (soap dispensing) ஆகியவற்றின் அளவைத் தேவைக்கேற்றபடி தானியக்க முறையில் கட்டுப்படுத்தும் ஒரு வகையான 'ஸ்மார்ட் ராப்' இன் உருவாக்கத்துக்கான கண்டுபிடிப்புக்கு இவ்வுரிமம் சொந்தமானது. ஒரு மருத்துவமனையில் நீர், சவர்க்காரத்திற்கான பாவனை, பாடசாலை அல்லது உணவகத்திலுள்ளதை விட சற்று அதிகமாக இருக்க வாய்ப்புண்டு. சுகாதாரத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதுடன் நீர், சவர்க்காரத்தின் வீணடிப்பைக் குறைப்பதுவே இதன் நோக்கம். ஏனைய உரிமப் பதிவுகளில் ஒன்று முகக் கவசங்களை முப்பரிமாண அச்சுயந்திரங்களில் (3D Printers) வார்த்தெடுப்பதற்கான கண்டுபிடிப்புக்கானது. இன்னுமொரு பெருந்தொற்று வந்தால் மருத்துவமனைப் பணியாளர்களும், சக மனிதரும் இலகுவாகக் கையாளக்கூடிய வகையில் இம் முகக்கவசங்கள் வடிவமைக்கப்படும். தற்போது யாழ். குடாநாட்டில் பிரபலமாக வந்திருக்கும் பணமீட்டும் தொழிலாகிய கடலட்டைப் பண்ணைகளில் தோன்றியிருக்கும் ஒரு பிரச்சினை அட்டைகளின் தோல்களில் சுண்ணாம்புப் படிவு ஏற்படுவது. இவ்வட்டைகளைச் சுத்தப்படுத்த தற்போது பணியாளர்கள் அவற்றின் தோல்களை கைகளால் உரஞ்சிக் கழுவுகிறார்கள். இது சில வேளைகளில் அட்டைகளைப் பாவனைக்குதவாமலாக்கி விடுகின்றது. இவ்வட்டைக் கழிவுகளை வீணாக்காதிருப்பதற்காக யாழ். பல்கலைக்கழகம் உருவாக்கிய திட்டம் கழிவுகளாக்கப்பட்ட அட்டைகளை இலகுவாகவும் விரைவாகவும் விலங்குத் தீனியாக்குவது. இதற்கு அவர்கள் ஒருவகை கரும் இலையான்களின் நுண்புழுக்களைப் (Black Soldier Fly Larvae) பெருமளவில் உற்பத்தி செய்து அவற்றின் மூலம் கழிவுகளைத் தீனியாக்குகிறார்கள். மீன்கள், பன்றிகள், கோழிகள் போன்றனவற்றிற்கு இவ்வுணவு சிறந்த தீனியாகின்றது.

யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாயத் திணைக்களம் கண்டுபிடித்திருக்கும் இன்னுமொரு

புதுமை வில்வம் பழத்திலிருந்து பாகு தயாரித்தல். இலங்கையில் சாதாரணமாக விளையும் இப்பழம் பல வைட்டமின்களைக் கொண்டதுடன் ஆயுர்வேத மருத்துவத்திலும் பயன்படுத்தப்படுகிறது. முல்லைத்தீவில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் ‘முல்லை மில்க் புறொடக்ட்ஸ்’ (Mullai Milk Products) ஸ்தாபனத்துடன் இணைந்து 2022 இல் யாழ். பல்கலைக்கழகம் இப் பாகுவிற்கான உரிமத்தைப் பதிவுசெய்திருக்கிறது. மிகவும் ருசியானதும் ஊட்டமுள்ளதுமான தயிர்ப்பாகுவாக இது தற்போது இலங்கையில் விற்பனையாகிறது.

இன்னுமொரு மிகவும் சுவாரசியமான ஆராய்ச்சி பனங்காயிலிருந்து (நுங்கு) வளர்ப்பு மீன்களுக்குத் தேவையான உணவாக பாகு தயாரிப்பது பற்றியது. தொட்டிகளில் வளர்க்கப்படும் மீன்களின் நிறங்களை அழகாக்கும் திறமை இவ்வுணவுக்கு உண்டு என்கிறார் ராகவன்.

பல்கலைக்கழக - வணிக இணைப்பு வேறு பல ஆதார சேவைகளையும் செய்கிறது. உரிமப் பதிவுகளைச் செய்வது (Patent Filing), வர்த்தக முத்திரைகளை (Trade Marks) பதிவு செய்வது, பதிப்புரிமை மற்றும் தொழில் வடிவமைப்பு, வர்த்தகப் பங்காளிகளைத் தேடிக் கொடுப்பது, ஒப்பந்தங்களைப் பேரம் பேசுவது, புதிய தொழில் முயற்சிகளை உருவாக்கிக் கொடுப்பது போன்ற துறைகளிலும் அது தனது சேவைகளை வழங்கி வருகிறது.

## மக்களே உற்பத்திகள்

கண்டுபிடிப்புக்களுக்கும், சிறந்த சிந்தனைகளுக்கும் அப்பால் ஒரு பல்கலைக்கழகத்தின் சிறந்த உற்பத்தியாக இருப்பது அதன் மாணவர்களும் பட்டதாரிகளுமேயாவர். சிந்தனைகளை மீன்களாக உருவகித்தால் பட்டதாரிகள்தான் மீனவர்கள். பல்கலைக்கழக - வணிக இணைப்பிற்கு மாணவர்களைச் சேர்க்கும் உத்தியாக யாழ். பல்கலைக்கழகம் மாணவர்களிடையே சில போட்டிகளை வைக்கிறது. இதில் வடக்கிலிருக்கும் சில நிறுவனங்களுடன் மாணவர்கள் சிறு சிறு குழுக்களாக ஊடாடுகிறார்கள். இரு தரப்பினரும் இணைந்து வணிக நெறிகள் சிலவற்றைப் பரீட்சிக்கிறார்கள். அனுபவம் மிக்க தொழில் முனைவோருக்கும் மாணவர்களுக்குமிடையே போட்டிகள் உருவாக்கப்படுகின்றன. கடந்த பெப்ரவரி மாதம் இப்படியான நிகழ்வொன்று பிரித்தானியாவைச் சேர்ந்த பேராசிரியர் கணேஸ் கே. ராஜா அவர்களின் ஏற்பாட்டில் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக - வணிக இணைப்பின் ஆலோசகர் குழுவில் ஒருவரான பேராசிரியர் கணேஸ், பிரித்தானியாவிலுள்ள றோயல் விவசாயக் கல்லூரியில் வணிக நடத்தையும் புதுமையும் என்ற துறையில் பேராசிரியராகக் கடமையாற்றியவர். இப்போது நிர்வாகம் மற்றும் தொழில்முறை மேம்பாட்டு மையத்தில் நிர்வாகப் பணிப்பாளராகப் பணிபுரிகிறார்.

இணைப்பு என்பது இருவழிப் பாதை போன்றது. பல்கலைக்கழகங்கள் சாதகமான பிரதிபலன் கிடைக்கலாம் என்ற நம்பிக்கையோடு தமது ஆராய்ச்சியை தொழில்துறைகளுக்கு பரிந்துரைக்கலாம். ஆனால் உண்மையில் தொழில்துறைகளிடம் என்ன இருக்கிறது, என்ன தேவை, எது இலாபகரமானது என்பது பற்றிய அறிவு பல கல்விமான்களுக்கு இருப்பதில்லை. ஆனால் சந்தை எதை எதிர்பார்க்கிறது, எது விற்பனையாகக் கூடியது, எது வருவாயைத் தரக்கூடியது என்பதை தொழில்துறை நன்றாக அறிந்து வைத்திருக்கிறது. இதனால், தொழில்துறைகள் தான் தமக்குத் தேவையான துறைகளில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ள பல்கலைக்கழகங்களைத் தூண்ட வேண்டும்.

தமது வணிக ஆற்றல் வளம் பற்றி பல பல்கலைக்கழகங்கள் அறிந்திருப்பதில்லை. ஆனால் பல்கலைக்கழகங்களில் என்ன ஆய்வுகள் நடைபெறுகின்றன என்பதை வணிகத் தரப்பு நன்றாக அறிந்து வைத்திருக்கிறது. பல்கலைக்கழக - வணிக இணைப்பு தங்கக் கோபுரங்களிலிருக்கும் கல்விமான்களையும் உலகம் முழுவதிலிருக்கும் கடைகளையும் சந்தைகளையும் இணைக்கும் ஏணியாகத் தொழிற்படுகிறது. எமது பொருளாதாரத்தின் இரண்டு முனைகளையும் இணைப்பது இந்த ஏணிதான்.

**நன்றி : மறுமொழி, Lanka Business Online (www.lankabusinessonline.com)**

(தொடரும்)

”யாழ்ப்பாணக் குடாநாட்டின் நூலகப் பாரம்பரியம் என்ற இத்தொடரானது, யாழ்ப்பாணத்தில் புராதன நூலக வரலாறு முதல் நவீன தனியார் நூலக வளர்ச்சி, பொது நூலக வளர்ச்சி, நூலகவியல் கல்வியின் அறிமுகம், நூலகத்துறையில் ஈழத்தமிழர்களின் முன்னோடி முயற்சிகளாக யாழ்ப்பாணத்தில் எழுந்த நூலகவியல்சார் நூல் வெளியீடுகள், நூலகவியல் துறைசார் சஞ்சிகைகளின் வெளியீடுகள், யாழ்ப்பாண கல்வியியல் வரலாற்றில் தடம் பதித்த நூலகங்களின் வரலாறு என்பவை உள்ளிட்ட விடயங்களை பற்றி பேசவிழைகின்றது.




நடராஜா செல்வராஜா

நடராஜா செல்வராஜா, யாழ். இராமநாதன் பெண்கள் கல்லூரியில் நூலகராகவும், யாழ்ப்பாண, சர்வோதய சிரமதான சங்கத்தின் யாழ்.மாவட்ட நூலகப் பொறுப்பாளராகவும், இலங்கை உள்ளூராட்சி அமைச்சின் நூலகராகவும், இந்தோனேசியா, ஐக்கியநாடுகள் சபையின் கிராமிய பொது நூலக அபிவிருத்திப் பிரதிநிதியாகவும், ஈவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தின் ஆய்வு நூலகத்தின் பொறுப்பாளராகவும், கொழும்பு இனத்துவக் கல்விக்கான சர்வதேச நிலைய ஆய்வு நூலகப் பொறுப்பாளராகவும் பதவி வகித்துள்ளார்.

அயோத்தி நூலக சேவையின் ஸ்தாபகரும், நூலகவியல் காலாண்டுச் சஞ்சிகையின் தாபக ஆசிரியராகவும் செயற்பட்டார். ஊடகத்துறையிலும் பணியாற்றிவிட்டு, தற்போது ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் இவர், ரோயல் மெயில் தபால் நிறுவனத்தின் அந்நிய நாணயப்பிரிவில் அதிகாரியாக தற்போது பணியாற்றுகின்றார். இவர் நூலகவியல் பற்றி தொடர் ஆய்வுகளை மேற்கொண்டு வருவதுடன், நூலகவியல் பற்றியும் பல வெளியீடுகளை செய்துள்ளார்.


# யாழ்ப்பாணத்தில் உருவான சில ஆரம்பகால நூலகங்கள்

11

## ஹண்டி ஞாபகார்த்த நூலகம் (பரி.யோவான் கல்லூரி)

1818 ஆம் ஆண்டு C M S Mission மதப் பணிக்காக இலங்கைக்கு வருகைதந்த வண. ஜோசப் நைட் (Rev. Joseph Knight) அவர்கள் நல்லூரில் வீடு ஒன்றைக் கொள்வனவு செய்து தனது மதக் கல்விப் பணியைத் தொடர்ந்த நிகழ்வானது யாழ்ப்பாணத்தில் பரி. யோவான் கல்லூரி (St. John’s College) உருவாகுவதற்கான ஆரம்பப் புள்ளியாக அமைந்தது.

வண. ஜோசப் நைட் அவர்கள் நல்லூர் ஆங்கில செமினரியை (Nallur English Seminary) மார்ச் 1823 இல் ஏழு மாணவர்களுடன் தனது நல்லூர் இல்லத்தில் தொடக்கி வைத்தார். விவிலிய நூல் வாசிப்பே அங்கு பிரதானமான பாடமாக இருந்தது. மேலதிகமாக மதச்சார்பற்ற பாடங்களும் அங்கு போதிக்கப்பட்டன.

அடுத்த ஆண்டில் மாணவர் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்தது. அவ்வாண்டு வண. வில்லியம் அட்லி (Rev. William Adley) அவர்கள் இலங்கை வந்து வண. ஜோசப் நைட் உடன் செமினரியின் கல்விப் பணியில் இணைந்து கொண்டார். 1825 இல் செமினரியின் பொறுப்பை தானே ஏற்றுக் கொண்டார். 1826 இல் மாணவர் எண்ணிக்கை 30 ஆக அதிகரித்தது. 1839 இல் வண. வில்லியம் அட்லியின் துணைவியார் மரணமடைந்ததும் அவ்வாண்டே அவர் இங்கிலாந்துக்குத் திரும்பிச் சென்றுவிட்டார். 1841 இல் அவர் இலங்கைக்குத் திரும்பி வந்தபோதும் பின்னாளில் கல்விப் பணிகளில் ஈடுபடவில்லை.

இக் கல்லூரி தொடங்கப்பட்ட ஆரம்ப காலத்திலிருந்தே ஒரு தொகுதி நூல்களுடன் சிறிய நூலகமொன்றும் போர்த்துக்கேயருடைய பழைய ஆலயமாக இருந்த ஒரு கட்டடத்தின் ஒரு பகுதியில்

இயங்கி வந்தது. பழைய தேவாலயம் 1859 இல் இடிக்கப்பட்டு புதிய ஆலயம் கட்டப்பட்டது. 1862 ஆம் ஆண்டு வண. ரொபர்ட் பர்கிற்றர் (Rev. Robert Pargiter) அவர்கள் புனருத்தாரணம் செய்து நூலகத்திற்கென ஒரு பெரிய மண்டபத்தையும் தாழ்வாரத்தையும் அக்கட்டடத்தில் ஒதுக்கினார்.



பரி. யோவான் கல்லூரி

Image Source - www.colombotelegraph.com

இந்நூலகத்தை மேம்படுத்துவதற்காக 1890 ஆம் ஆண்டு பாடசாலை நூலகக் குழுவொன்று (School Library Association) உருவாக்கப்பட்டது.

1891 இல் தமது கல்வி நிலையத்துக்கு பரி. யோவான் கல்லூரி (St. John's College) என்று பெயரிட்டனர்.

1899 ஒக்டோபர் 13 இல் பாடசாலையின் பிரதான மண்டபக் கூரை இடிந்து வீழ்ந்தது. இதனால் பாடசாலைக் கட்டடம் மீண்டும் சேதமடைய இக்காலகட்டத்தில் அதிபராக இருந்த வண. ஜாக்கொப் தொம்சன் (Rev. Jacob Thomson), தனது பாடசாலை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகளிடம் மரங்களையும் கட்டடப் பொருட்களையும் அன்பளிப்பாகப் பெற்று கட்டடத்தை மேலும் திருத்தம் செய்தார். இக்காலத்தில் தலைமை ஆசிரியராக இருந்த வண. சீ.சீ. ஹண்டி (Rev. C.C.Handy) அவர்கள் நூலகத்திற்கு தனியானதொரு கட்டிடம் அவசியம் என்று உணர்ந்து இதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தார்.

இக்கல்லூரியின் தலைமை ஆசிரியர் (1889-1908) பதவி வகித்தவரும் இக்கல்லூரியின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவருமான வண.சீ.சீ. ஹண்டி அவர்களின் ஞாபகார்த்தமாக நூலகம் அமைப்பதற்காக 1908 ஆம் ஆண்டு நிதிக் குழுவொன்று அமைக்கப்பட்டது. இக் குழுவின் முயற்சியால் ரூபா 450.55 நிதி சேகரிக்கப்பட்டது. அத்துடன் வண.சீ.சீ. ஹண்டி குடும்பத்தினரும் மேலதிகமாக அன்பளிப்புகளை வழங்கினர்.

1913 ஆம் ஆண்டு வண.சீ.சீ. ஹண்டி அவர்களின் சகோதரரான கலாநிதி ஜே.எம். ஹண்டி (Dr. J.M.Handy) அவர்களால் தனது சொந்தச் செலவில் கட்டிமுடிக்கப்பட்ட Handy Memorial Library கல்லூரி நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது. அத்துடன் 500 இற்கும் அதிகமான நூல்களையும் அவர் தான் வாழ்ந்து வந்த சிங்கப்பூரிலிருந்து ஹண்டி ஞாபகார்த்த நூலகத்திற்கென அனுப்பிவைத்திருந்தார்.

அன்றாட சமூக வாழ்வின் ஏற்ற இறக்கங்களுடன் ஹண்டி ஞாபகார்த்த நூலகம் தன் தொடர் இருப்புக்காகப் போராடியே வந்துள்ளது. இந்த நூலகத்தின் காலக்கிரம வளர்ச்சி பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை அதிகளவில் காண முடியவில்லை.

1980 களின் பின்னாளில் போர்ச் சூழல் காரணமாக யாழ்ப்பாண நகரத்தில் மேற்கொள்ளப்பட்ட ஷெல் வீச்சு, குண்டுவீச்சுத் தாக்குதல்களால் பல கட்டிடங்களுக்கும் ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகளின் போது பரி. யோவான் கல்லூரியும் அதன் நூலகமும் பாதிப்படைந்தன என அறியமுடிகின்றது. நூல்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை ஈடுசெய்யும் நோக்கில், செப்டெம்பர் 1996 இல் 430 நூல்களை ஏசியா பவுண்டேஷன் நிறுவனம் அன்பளிப்பாக வழங்கியிருந்தது.

எட்டு ஆண்டுகளாக செயலிழந்திருந்த சிறுவர் நூலகப் பகுதி 2003 ஜுன் 16 அன்று மீளத் திறந்து வைக்கப்பட்டது.

இவ்வாறான வரலாற்றைக் கொண்ட நூலகமானது தற்போது சுமார் 20,000 நூல்களை தன்னகத்தே கொண்டு வளர்ச்சிபெற்றுக் காணப்படுகின்றது.

## யாழ்ப்பாணத்தில் ஏட்டுப் பிரதிகளின் வரலாறு

அச்சியந்திரத்தின் அறிமுகம் ஜேர்மனியரான ஜோஹனஸ் கூட்டன்பேர்க் (Johannes Gutenberg 1400-1468) அவர்களால் 1455 இல் கூட்டன்பேர்க் விவிலியத்தின் (Gutenberg Bible) அச்சுப்பதிப்புடன் ஆரம்பமாகியது. அதற்குப் பல நூறு வருடங்களுக்கு முன்பிருந்தே எகிப்தியர்கள் நைல்நதி தீரத்தில் பப்பைரஸ் புற்களைக் கொண்டு பத்திரிகைத்தாள் (பப்பைரஸ்) உற்பத்தித் தொழில்நுட்பத்தை கண்டறிந்திருந்தார்கள். சீனர்களும் அச்சுக்கலையை அறிந்துவைத்திருந்தார்கள். இத்தகைய பல நூல்கள் அண்மையில் திபெத்திய மடாலயங்களில் கண்டெடுக்கப்பட்டதை இத்தொடரின் முதல் பதிவில் தெரிவித்திருக்கிறேன்.

ஜோஹனஸ் கூட்டன்பேர்க் பிறப்பதற்கு முன்னரே நாணற் புல்லைக் காயவைத்து செய்யப்பட்ட தட்டுகள், மட்பாண்டங்கள், ஆட்டுத்தோல், மாட்டுக் கன்றுத் தோல், கற்பலகைகள், என்பவற்றின் வழியாக தென்னாசிய முன்னோர்கள் தமது தகவல்களை அடுத்த தலைமுறையினருக்குப் பதிவுசெய்து கடத்தி வந்துள்ளார்கள்.

கருங்கற்பாறைகள் அற்ற, யாழ்ப்பாணத்தில் எமது முன்னோர்களுக்கு கைவரப்பெற்றது பனை ஓலைச் சுவடிகளாகும். இன்று புத்தகப் பதிப்பும், விற்பனையும் ஒரு தொழில்துறையாக வளர்ந்துள்ளதைப் போலவே அன்றும் ஏட்டுப் பிரதிகளை உருவாக்குவதும், சந்தைப்படுத்துவதும் ஒரு குடிசைக் கைத்தொழிலாக வழக்கிலிருந்துள்ளது. பனந்தொழில் வல்லுநர்கள், கொல்லர்கள், தச்சர்கள், ஏடு எழுதுவோர் ஆகியோர் இத்தொழிலின் பங்காளிகளாயிருந்தனர்.

பனையோலைகளை வெட்டி அவற்றின் நார் பிரித்து, அளவாக நறுக்கி, களங்கமற்ற ஏடுகளாக்கி, துளையிட்டு, பதப்படுத்தி வழங்கும் பணியை பனந்தொழில் வல்லுநர்கள் மேற்கொண்டனர். இது அக்காலத்தில் லாபகரமான வர்த்தகமாகவும் இருந்துள்ளது. ஏடெழுதும் எழுத்தாணிகளைச் செய்வதற்கு கொல்லர்கள் பயிற்சி பெற்றிருந்தனர். எழுத்தாணிகளின் கைவினைத் தரத்திற்கேற்பவும், பயன்படுத்தப்பட்ட உலோகத்திற்கேற்பவும் பல்வேறு விலைகள் எழுத்தாணிகளுக்காக நிர்ணயிக்கப்பட்டிருந்தன. ஒரு முனையில் கத்தியுடன் இணைக்கப்பட்ட எழுத்தாணிகளின் விலை அதிகமாக இருந்துள்ளன. தச்சுத் தொழிலாளர்கள் ஏடுகளுக்கான சட்டகங்களை (சட்டப் பலகைகளை) கலை நுணுக்கத்துடன் உருவாக்குவதில் திறமைபெற்றிருந்தார்கள்.

'யாழ்ப்பாணத்தில் ஏட்டுப் பிரதிகளின் தோற்றமும் பயன்பாடும்' என்ற தலைப்பில்



ஜோஹனஸ் கூட்டன்பேர்க் அவர்களின் ஓவியம்

Image Source - www.britannica.com

கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்களால் எழுதப்பட்ட விரிவான கட்டுரையொன்று யாழ்ப்பாணத்தில் பயன்பாட்டிலிருந்த ஏட்டுச் சுவடிக் கலாச்சாரம் பற்றி சுவையான பல தகவல்களை எமக்கு வழங்குகின்றது (நன்றி: கருத்தூண் சிறப்பு மலர் 2005-2015: பக்கம் 88-94).

'ஏடுசாத்துதல்' என்ற மரபு பற்றி அவர் பின்வருமாறு அக் கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.

"ஏடு சாத்துதல் என்பது தொகுக்கப்பட்ட ஏட்டுச் சுவடியில் இருந்து ஒருவர் ஓலையொன்றைத் தெரிந்து வாசித்தலாகும். பெரும்பாலும் மகாபாரத ஏட்டுப் பிரதியே ஏடு சாத்துதலுக்குப் பயன்படுத்தப்பட்ட சுவடியாகும். உதாரணமாக ஒருவர் தேர்ந்து எடுத்த சுவடியில் பாஞ்சாலி துகிலுரிதல் பற்றிய செய்தி வந்தால் அவருக்குக் கெட்டகாலம் என்றும், அர்ச்சுனனுடைய பெருவெற்றி பற்றிய செய்தி வந்தால் அவருக்கு நல்ல காலம் வருகின்றது என்றும் நம்பி வந்தார்கள்".

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மத மாற்றத்தை மக்களிடையே ஏற்படுத்தவென யாழ்ப்பாணம் வந்த மேலைநாட்டு மிசனரிகளின் மதத்தொண்டர்கள் ஓலைச் சுவடிகளையே தமது மதப்பிரச்சாரத்திற்கு பயன்படுத்தினார்கள் என்பதை அறியமுடிகின்றது. கிறிஸ்தவ வேதாகமத்திலுள்ள வசனங்களை ஓலைகளில் எழுதி, அவற்றைக் காவிக்கொண்டு குதிரைகளில் சென்று பொதுமக்களுக்கு விநியோகிக்கும் வழக்கம் அன்றைய யாழ்ப்பாணத்தில் இருந்து வந்துள்ளது.

*'We are now in want of Tamil testaments for those under our care, and are now committing portions of Scripture written upon Ola' (Missionary Herald, February 1818: p.90)*

இந்தியாவில் 1577 இல் அச்சு வடிவில் நூல்கள் வெளிவரத் தொடங்கிவிட்ட போதிலும், சாமானிய பொதுமக்கள் மத்தியில் அச்சியந்திரம் அவ்வேளையில் பிரபல்யமடையவில்லை. ஆங்கிலேய காலனித்துவவாதிகள் தமிழ்நாட்டை ஆட்சிசெய்யத் தொடங்கியதும் தாங்கள் மாத்திரம் அச்சியந்திரத்தைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர். ஆனால் 1835 ஆம் ஆண்டுதான் அனைத்து மக்களும் அச்சியந்திரத்தைப் பயன்படுத்தி நூல்களை உருவாக்கலாம் என்று அனுமதி வழங்கினார்கள்.



சி. வை. தாமோதரம்பிள்ளை

Image Source - ta.wikipedia.org

யாழ்ப்பாணத்தில் அச்சகங்களின் பயன்பாடு தொடர்பான வரலாறு தமிழகத்திலிருந்து சற்றே வேறுபட்டது. இலங்கையை தமது காலனித்துவப் பிடிக்குள் கொண்டவந்த ஆங்கிலேயர்கள் அங்கிருந்த அமெரிக்க மிஷனரிகளின் சமயப் பணிக்கு ஆதரவாகவே செயற்பட்டு வந்தனர். 1820 இல் அவர்களது கொள்கையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. அப்போது தேசாதிபதியாகப் பதவியேற்று வந்திருந்த எட்வேர்ட் பாண்ஸ் அவர்களின் நிர்வாகக் காலத்தில் தான், 1820 இல் கண்டி - கொழும்பு தரைப் போக்குவரத்துக்கான வீதி அமைக்கப்பட்டது. 1821 இல் அம்பேபுஸ்ஸவிலிருந்து இவர் ஒவ்வொரு மாகாணத்தின் தலைநகரங்களையும் இணைக்கத் திட்டமிட்டிருந்தார். ஏனோ அவர் அமெரிக்க மிஷனரிகள் தொடர்பாக நல்லெண்ணம் கொண்டிருக்கவில்லை.

*1820 இல் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய அமெரிக்க மிஷனரிமாருக்கு அவர்களுடைய தாய்நாட்டிலிருந்து ஒரு அச்சு இயந்திரம் வந்து சேர்ந்தது. இதனைக் கொண்டுவந்தவர் ஜேம்ஸ் கரற் என்ற அமெரிக்க அச்சகராவார். ஆனால் அமெரிக்க மிஷனரிமார் அச்சகமொன்றை நடத்துவதற்கான அனுமதியை எட்வேர்ட் பாண்ஸ் வழங்கவில்லை. வேறு வழியின்றி அந்த அச்சியந்திரம் நல்லூரில் இருந்த ஆங்கிலேய திருச்சபைத் தொண்டர்களுக்கு விற்கப்பட்டது. 1834 இல் நிலைமை மாறியது. பிரித்தானிய அரசு, அமெரிக்கர்களும் அச்சியந்திரத்தைப் பயன்படுத்த அனுமதி வழங்கியது. அதன் பின்னர் 1834 இல் அமெரிக்க மிஷனரியினர் தமது முதலாவது அச்சகத்தை மானிப்பாயில் நிறுவினார்கள். இதன் நிறுவுநர் ஈஸ்மன் மைனர் ஆவார். இதுவே யாழ்ப்பாணத்தில் தோன்றிய முதலாவது அச்சகமாகும். அச்சகம் செயற்படத் தொடங்கியதும் ஏடுகள் அச்சுவாகனமேறி நூலின் பிரதிகள் அதிகரித்து, தனிப்பிரதியின் விலைகள் குறைவடையலாயின.*

*மயிலை சீனி. வெங்கடசாமி அவர்கள் 1962 இல் வெளியிட்ட 'பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்' என்ற நூலிலே (பக்கம்- 94) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.*

*"அச்சுப் புத்தகங்கள் வந்தவுடனே ஏட்டுச் சுவடிகள் மறைந்துவிடவில்லை. 19 ஆம் நூற்றாண்டிலே ஏட்டுச் சுவடிகளும் அச்சுப் புத்தகங்களும் இரண்டுமே வழக்கத்தில் இருந்து வந்தன. பின்னர் 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மெல்ல மெல்ல ஏட்டுச் சுவடிகள் மறைந்து அச்சுப் புத்தகங்கள் நிலைபெற்றன".*



*யாழ்ப்பாணத்தில் மக்கள் அதிகமாகப் பயன்படுத்திய ஏட்டுப் பிரதி கந்தபுராணமாகும். மகாபாரதம், சோதிட நூல்கள், சித்த வைத்திய நூல்கள், பஞ்சாங்கம் என்பனவற்றையும் ஏட்டுப் பிரதிகளாகப் படித்தும் பாதுகாத்தும் வந்துள்ளனர். ஆனால் அச்சிடப்பெற்ற நூல்கள் ஓலைச் சுவடிகளைவிட மிகவும் குறைந்த விலையிலேயே பலராலும் வாங்கக்கூடியதாக இருந்துள்ளது. 1835 ஆம் ஆண்டிற்கு முன்பு பத்துப் பவுணுக்கு (150 ரூபா) விலைக்கு வாங்கப்பட்ட 'சதுரகராதி' என்ற ஏட்டுச் சுவடி அச்சுவாகனம் ஏறிய பின்னர் அச்சுப்புத்தக வடிவில் இரண்டு ரூபாவுக்கு விற்கப்பட்டதாக அறிய முடிகின்றது.*

*கலாநிதி எஸ். ஜெபநேசன் தனது கட்டுரையில் ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.*

*"யாழ்ப்பாணத்திலே ஏட்டுச் சுவடிகளின் விலை எவ்வாறு இருந்தது என்பதனை ஈ.கே. ஜேசுதாசன் என்னும் மதகுரு தாம் எழுதிய 'ரி. பி.ஹண்ட் என்பவரின் வாழ்க்கை வரலாறு' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். பிள்ளைகள் படிக்கவேண்டும் என்ற ஆர்வத்தினால் தகப்பனார் தம் காதுகளிலிருந்த ஒரு சோடி கடுக்கனை கழற்றி விற்று ஒரு 'பாரத ஏடு' வாங்கிக் கொடுத்தார் என்று குறிப்பிட்டுள்ளார். திண்ணைப் பள்ளிக்கூடங்களை நடாத்திய உபாத்தியாயர்களும் ஏட்டுச் சுவடிகளை*

வட்டுக்கோட்டைச் செமினரி (Batticotta Seminary) 1855 இல் மூடப்பட்டபோதும் அங்கிருந்த அரிய சுவடிகளின் நூலகம் பாதுகாக்கப்பட்டு, பின்னாளில் அதே இடத்தில் 1872 இல் யாழ்ப்பாணக் கல்லூரி உருவாக்கப்பட்ட வேளையில் கல்லூரி நூலகத்தில் அதற்கான புதிய பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டது.


யாழ்ப்பாணக் கல்லூரி

Image Source - jaffnacollege.lk

உருவாக்கி மாணவர்களுக்கு விற்றதாகத் தெரிகின்றது. ஏடுகளை உருவாக்குவதும் விற்பதும் சில குடும்பங்களின் பரம்பரைத் தொழிலாகவும் இருந்தது. ஓரறிஞர் பயன்படுத்திய ஏடுகளை அவருடைய அந்தியேட்டியின் போது தண்ணீரில் அல்லது கடலில் ஓடவிடுவது மரபாக இருந்தது".

மயிலை சீனி வெங்கடசாமி அவர்கள் ஏட்டுப் பிரதிகள் சம்பந்தமான விடயத்தில் தமிழகத்தில் சில குடும்பத்தினர் செய்த வேலைகளையும் கவலையுடன் குறிப்பிட்டுள்ளார்.

"புலவர் பரம்பரையில் வந்தவர்கள் எல்லோரும் புலவர் அல்லர். அந்தப் பரம்பரையில் கல்வியருமையறியாத பதர்களும் இருந்தனர். இவர்கள் நூல்களின் பெருமையறியாமலும் பழுதான அருமை நூல்களைப் பிரதி எழுதி வைக்காமலும் இருந்தனர். அன்றியும் பதினெட்டாம் பெருக்கில் தம் வீட்டு ஏடுகளைக் கொண்டுபோய் வெள்ளத்தில் போடுகின்ற வழக்கமும் இவர்களிடம் இருந்தது. சிதைந்துபோன ஏட்டுச் சுவடிகளை, அவற்றின் அருமை தெரியாமல் அடுப்பில் போட்டு நெருப்பில் இட்டுக் கொழுத்தியவர்களும் உண்டு. இவ்வாறு அழிந்துபோன நூல்கள் பல. அக்காலத்தில் அச்சியந்திரம் இருந்து பழைய நூல்கள் அச்சிடப்பட்டிருந்தால் பல நூல்கள் அழிந்திராமலும் உயிர் பெற்றிருக்கும்."

மயிலை சீனி வெங்கடசாமி அவர்களின் தமிழக அனுபவத்தில் எழுந்த ஆதங்கம் இன்றைய காலகட்டத்தில் வாழும் ஈழத்தவரின் கதைகளைக் கேட்கும் பொழுதெல்லாம் எனக்கும் ஏற்படுவதுண்டு. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தமது ஏட்டுப் பிரதியை மீள எழுதிப் பாதுகாக்க பெரும் பணச்செலவு ஏற்படும் என்ற நிலையில் பாதுகாக்கத் தவறியுமிருக்கலாம். ஆனால் அச்சு ஊடகம் வளர்ச்சியடைந்திருக்கும் இந்த 21 ஆம் நூற்றாண்டில்கூட தமது நூல்களின் பிரதிகளை யாழ்ப்பாண மாவட்ட பிரதான நூலகங்களிலுள்ள சுவடிக் காப்பகப் பிரிவுகளிலோ, மின்வருடல் முறையில் பாதுகாத்து ஆவணப்படுத்திவைக்கும் நூலக இணையத்திலோ, லண்டனில் நான் பாதுகாத்துவரும் ஆவணக் காப்பகத்திலோ தாம் வெளியிடும் நூலின் ஒரு பிரதியை வழங்கிப் பாதுகாத்து வைக்கும் எண்ணம் இன்றைய எழுத்தாளர்களுக்கோ, ஆசிரிய வெளியீட்டாளர்களுக்கோ இல்லையே

என்பதே எனது கவலையாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிலவிய மற்றுமொரு சூழலையும் கலாநிதி எஸ். ஜெபநேசன் குறிப்பிடுகின்றார்.

"மேலைநாட்டு மதத் தொண்டர்களும் தமிழ் ஏட்டுச் சுவடிகளைப் பெற்று, படிப்பதிலும், பேணிப் பாதுகாப்பதிலும் ஆர்வமுடையவர்களாக இருந்தனர். ஆனால் அவர்களுக்கு ஏடுகளை விற்பதற்குத் தமிழ் மக்கள் விரும்பவில்லை. வட்டுக்கோட்டையில் பணியாற்றிய டானியல் புலவர் என்ற அமெரிக்கத் தொண்டர் தாம் கந்தபுராண ஏடொன்றினை ஒரு தமிழ் அறிஞரிடமிருந்து பெற்றுக்கொண்டதாகவும், அவரும் அதனை தாம் அவருக்கு விற்றதனைத் தெரியப்படுத்த வேண்டாம் எனக் கூறியதையும் குறிப்பிட்டுள்ளார். எனினும் மேலை நாட்டுத் தொண்டர்கள் சிறிது சிறிதாக பல தமிழ் ஏட்டுச் சுவடிகளைப் பெற்றுக்கொண்டனர். யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய மதத் தொண்டர்கள் தமது அறிவை வளர்த்துக்கொள்ள 1821 ஆம் ஆண்டிலேயே ஒரு தமிழ்க் கழகத்தை நல்லூரில் அமைத்திருந்தனர். இந்தக் கழகத்தில் கூட்டங்கள் மாதம் இருமுறை நடைபெற்றன. இங்கு ஒரு நூல் நிலையமும் இருந்தது. இந்த நூல் நிலையத்தில் தமிழ் ஏட்டுச் சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வந்தனவெனத் தெரிகின்றது (Winslow Mision, Missionary Hereald, 1831: p.6)".

கலாநிதி ஜெபநேசன் மேலும் இது பற்றிக் குறிப்பிடுகின்றார்.

"யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய அமெரிக்க மதத் தொண்டர்கள் இங்கு காணப்பட்ட ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து ஒரு சம்பூரணமான பட்டியலை வெளியிட்டனர். இந்தப் பட்டியலில் 137 ஏட்டுச் சுவடிகளின் பெயர்கள் தரப்பட்டுள்ளன. இந்த நூல் 1839 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டதாகத் தெரிகின்றது. இதனை 1820 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த லீவை ஸ்போல்டிங் என்ற தொண்டரே தொகுத்து முடித்தார் எனத் தெரிகின்றது. இப் பட்டியலில் குறிப்பிடப்படாத வேறு பல ஏட்டுச் சுவடிகளும் இங்கு இருந்திருக்கலாம். அவற்றை யாரும் தொகுத்து வெளியிட்டதாகத் தெரியவில்லை. இந்தப் பட்டியலைப் பார்க்கின்ற பொழுது ஏட்டுப் பிரதிகளை எழுதுகின்றவர்கள் பல பிழைகளை விட்டிருப்பதாகத் தென்படுகின்றது. அவை பிரதி செய்தவர்களது பிழையா அல்லது அப் பட்டியல்களைத் தொகுத்த அமெரிக்கர்களது பிழையா என்பது புரியவில்லை.

'ஆசாரக்கொலை', 'திறிகடகம்', 'நாகபாச படலம்', 'கலிங்கத்துப் பறணி', 'கும்பகர்ணபல்லம்', 'சம்மதைப்பிள்ளைத் திருநாயம்', 'நற்கீரர் சிந்தாமணி', 'சம்மந்தமூர்த்தி புராணம்', 'உரிச்சுவடி கியக்கணக்கு', 'சமதம்', 'அமரகோசம் அமான' என்பவை இதில் காணப்படும் பிழைகளுக்கு உதாரணங்களாகும்.

சைவ சித்தாந்த சாத்திர நூல்களில் ஒன்றுமே நூலாசிரியருக்கு கிடைக்கவில்லை. 'தத்துவ விளக்கம்' என ஒரு நூலைக் குறிப்பிட்டுள்ளார். இது 'தத்துவக் கட்டளையாக' இருந்திருக்கலாம். சங்க இலக்கியங்கள் பற்றி ஒரு குறிப்புமே இல்லை. இந்தப் பட்டியல் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட ஏட்டுச் சுவடிகளை அறிந்துகொள்வதற்கு ஓரளவு துணைபுரிகின்றது."

1823 இல் தொடங்கப்பட்ட வட்டுக்கோட்டைச் செமினரி (Batticotta Semi nary) 1855 இல் மூடப்பட்டது. மூடப்படுவதற்காக வட்டுக்கோட்டை அமெரிக்கன் சிலோன் மிஷன் முன்வைத்த காரணம் "இந் நிறுவனம் இந்துக்களை மதமாற்றம் செய்து கிறிஸ்தவராக்குவதில் பின்னடைவைக் கண்டுள்ளது" என்பதாகும். இதற்கு அக்காலத்தில் நிலவிய ஆறுமுக நாவலர் அவர்களின் புத்தெழுச்சி இயக்கம் பெருமளவிற்கு காரணமாயமைந்ததாகவே ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

வட்டுக்கோட்டைச் செமினரியில் நீண்டகாலமாக இருந்த ஏட்டுச் சுவடிச்சாலையே பதிப்புச் செம்மல் சி.வை. தாமோதரம்பிள்ளையை உருவாக்கியதென்று கொள்ளலாம். சி.வை.தாமோதரம்பிள்ளை 1844 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைச் செமினரியில் சேர்ந்து ஆறு வருடங்கள்

அறிவியல் துறையில் பயிற்சி பெற்றவர். அதன் பின்னர் 1852 இல் கோப்பாயில் போதனாசக்தி வித்தியாசாலையில் ஆசிரியராகச் சிலகாலம் பணி புரிந்தார். அமெரிக்க மிசனரிமார் படித்துப் பாதுகாத்து வைத்த ஏட்டுச் சுவடிகளை தொடர்ந்தும் பாதுகாக்க வேண்டும் என்ற ஆவலை அவரது உள்ளத்தில் தோற்றுவித்தது வட்டுக்கோட்டைச் செமினரியே. 1857 இல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் முதலிரண்டு பட்டதாரிகளாக சி.வை. தாமோதரம்பிள்ளையும் அவருடைய ஆசிரியர் கரொல் விசுவநாதபிள்ளையும் சிறப்புப் பெற்றனர். சி.வை. தா. அவர்கள் சென்னையில் மெதடிஸ்ட் மதப்பிரசாரகர் பீற்றர் பெர்சிவல் நடத்திய 'தினவர்த்தமானி'யின் ஆசிரியராகப் பணியாற்றிய பின்னர் புதுக்கோட்டை நீதவானாக பதவியேற்றார். இக்காலகட்டத்தில் தான் அவர் ஏட்டுச் சுவடிகளை அச்சுவாகனமேற்றி புத்தகங்களுக்கு புதுவாழ்வினை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்தார்.

வட்டுக்கோட்டைச் செமினரி (Batticotta Semi nary) 1855 இல் மூடப்பட்டபோதும் அங்கிருந்த அரிய சுவடிகளின் நூலகம் பாதுகாக்கப்பட்டு, பின்னாளில் அதே இடத்தில் 1872 இல் யாழ்ப்பாணக் கல்லூரி உருவாக்கப்பட்ட வேளையில் கல்லூரி நூலகத்தில் அதற்கான புதிய பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொண்டது.

பின்னாளில் வட்டுக்கோட்டை நூலகம் கல்வியாளர்களால் ஆசியாவின் சிறந்த கல்லூரி நூலகம் என்று போற்றப்பெற்றது. இக்கல்லூரி நூலகத்தில் ஆரம்பம் முதல் 1963 வரை திரு. கே. செல்லையாவும், 1963 முதல் 1974 வரை, அதாவது, இலங்கை அரசாங்கம் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவையும், கல்லூரி நூலகத்தையும் சுவீகரிக்கும் வரை, திரு.ஆர். எஸ். தம்பையாவும் இந்நூலகத்தை கண்ணும் கருத்துமாகப் பாதுகாத்து வந்தனர். அதன் பின்னர் இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகம் உருவானதன் பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரி நூலகம் யாழ்ப்பாண வளாக நூற்சேர்க்கையுடன் கலக்கப்பட்டது.

இந்த நிகழ்வுகளை யாழ்ப்பாணக் கல்லூரியின் 'உள்வீட்டுப் பிள்ளையாக' இருந்த கலாநிதி எஸ். ஜெபநேசன் அவர்கள் கனத்த உள்ளத்துடன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"1974 ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகம் அமைப்பதற்காகச் சுவீகரிக்கப்பட்டது. இந்த நூல்நிலையத்தில் இருந்த அனைத்து நூல்களும் திருநெல்வேலியில் இருந்த பல்கலைக்கழக வளாகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அப்படி எடுத்துச் செல்லப்பட்டபோது வழியில் மாயமாய் மறைந்தவை சில. திரு.ஆர். எஸ். தம்பையாவும் யாழ்ப்பாண வளாகத்தின் உத்தியோகத்தரானார். இதன் பின்னர் யாழ்ப்பாணக் கல்லூரி இயக்குநர் சபை தமது நூல்களைத் திரும்பப் பெறும் முயற்சியில் ஈடுபட்டது. 1974 ஆம் ஆண்டு சுவீகரிப்பு விதியின்படி அசையும் சொத்துக்கள் சுவீகரிக்கப்பட முடியாது என்று அற்றோனி ஜெனரல் (Attorney General) அறிவித்தார். ஆனாலும் நூல்கள் உடனடியாக வட்டுக்கோட்டைக்குத் திரும்பவில்லை.

திரு.ஆர்.எஸ். தம்பையாவின் பதவியை உறுதி செய்ய நேர்முகப் பரீட்சை நடைபெற்றது. அப்பரீட்சையின் பின் திரு.ஆர்.எஸ். தம்பையா நிரந்தர நூலகராக நியமனம் செய்யப்படவில்லை. திரு.இ. முருகவேள் நிரந்தர நூலகராக நியமிக்கப்பட்டார். இவருடைய உத்தரவின் பேரில் யாழ்ப்பாணக் கல்லூரி நூல்கள் திரும்பவும் வட்டுக்கோட்டைக்கு அனுப்பப்பட்டன.

1990 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இலங்கையில் உள்நாட்டுப்போர் உத்வேகமடைந்தது. 1991 இல் இலங்கை இராணுவம் வட்டுக்கோட்டையைக் கைப்பற்றிவிடும் ஆபத்து தென்பட்டது. எமது நூல்கள் வட்டுக்கோட்டையிலிருந்து மானிப்பாய் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மீண்டும் நூல்களின் இடப்பெயர்வினால் வழியில் நூல்கள் மாயமாய் மறைந்தன. 1994 இல் மானிப்பாயிலிருந்து மீண்டும் வட்டுக்கோட்டைக்கு நூல்கள் வந்த சேர்ந்தன. மீண்டும் வழியில் பல இழப்புகள் நேர்ந்தன. ஆசியாவின் மிகச் சிறந்த கல்லூரி நூலகம் தொடர்ந்து செயற்படுகின்றது. ஆனால் இன்று அதன் வரலாறு கண்ணீர்க் காவியம்."

(தொடரும்)

மலையக மக்கள் தென்னிந்தியாவிலிருந்து கோப்பித் தோட்டங்களிலும் தேயிலைத் தோட்டங்களிலும் கூலி வேலைக்காக அழைத்துவரப்பட்டு 200 ஆண்டுகள் ஆகியிருக்கின்றன. 'இந்திய வம்சாவளித் தமிழர்கள்' எனும் பெயரோடு ஆரம்பித்த இரு நூற்றாண்டுப் பயணம் 'மலையகத் தமிழர்' எனும் தேசிய அடையாளமாக இவர்களை முன்னிலைப்படுத்தும் அரசியற் பாதைக்கு வழி செய்திருக்கிறது. இந்த இடைப்பட்ட காலத்து அரசியல், சமூக, பொருளாதார வரலாற்றில் வீழ்ச்சிகளும் உண்டு; எழுச்சிகளும் உண்டு. இதனை நினைவுபடுத்துவதாகவும் மீட்டல் செய்வதாகவும் 'மலையகம் 200' நிகழ்வுகள் உலகு தழுவியதாக நடைபெற்றன. இவை மலையக மக்களின் பிரத்தியேக கலை, கலாசாரம், பண்பாடு, சமூக – பொருளாதார நிலை, அரசியல் போன்ற விடயங்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள், பின்னடைவுகள், செல்ல வேண்டிய தூரம் போன்ற விடயங்களை வெளிப்படுத்துவதாக அமைந்தன. அதற்கேற்ப, விம்பம் அமைப்பு எழுநாவின் அனுசரணையுடன் கட்டுரைப் போட்டியொன்றை நடத்தியது. இப் போட்டியில் வெற்றி பெற்ற வெவ்வேறு எழுத்தாளர்களின் கட்டுரைகள் 'மலையகம் 200' எனும் தலைப்பில் தொடராக எழுநாவில் வெளியாகின்றன.

எஸ். இஸட். ஜெயசிங்

'மலையம் 200' நிகழ்வுகளை முன்னிட்டு, விம்பம் அமைப்பினரால் எழுநாவின் அனுசரணையுடன் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் இஸட். ஜெயசிங் அவர்களால் எழுதப்பட்ட 'மலையகத் தமிழர் எனும் தேசிய இன அடையாளப் பயணம்' எனும் இக் கட்டுரை ஆறுதல் பரிசைப் பெற்றது.

# மலையகத் தமிழர் எனும் தேசிய இன அடையாளப் பயணம்

திருநெல்வேலி, திருச்சி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சிவகங்கை, முசிறி, துறையூர், நாமக்கல், மதுரை, அறந்தாங்கி போன்ற தமிழக மாவட்டங்களில் காணப்பட்ட பொருளாதாரசமூக ஏற்றத்தாழ்வுகள், நில உரிமையாளர்களின் ஆதிக்கம், சாதிய ஒடுக்கு முறைகள், வறுமை போன்றவை வாட்டி வதைத்த காலப் பகுதியில், ஏறக்குறைய 200 வருடங்களுக்கு முன்னர், அவற்றிலிருந்து விடுபட வழி தேடி இலங்கை, மலையகம் நோக்கிப் பயணித்தவர்கள் இன்று வரை வலியோடு வாழ்வுக்காக போராடிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் கடந்து வந்த



Image Source - lankapura.com

பாதையும் இன்றைய வாழ்க்கைப் பயணமும் வலி மிகுந்தது. வானம் பார்த்த வறண்ட மண்ணிலிருந்து வாழ்வு தேடி இராமேஸ்வரம் மண்டபம் சென்றடைந்தவர்களுக்கு உடற் பரிசோதனைக்கு பின்னர் 'கூலி' என நெஞ்சில் சேங் கொட்டை (*Markingnut*) கொண்டு சூடு

போட்டு அடையாளமிடப்பட்டது. தமிழ் நாட்டில் இருந்து கடல் வழியாகவும் கால்நடையாகவும் மலைநாட்டை நோக்கிய அவர்களின் நெடுவழிப்பாதை கரடு முரடானது. கடற் பயணத்தின் போது படகுகள் கவிழ்ந்து ஏராளமானோர் சமுத்திரத்தில் மூழ்கிய சம்பவங்களும் வரலாற்றில் உண்டு. பலரையும் ஏற்றி வந்த 'ஆதிலட்சுமி' படகும் இவ்வாறே கடலில் கவிழ்ந்து.

அடர்ந்த காடுகள் மத்தியில் பாதுகாப்பற்ற நெடும் பயணத்தில் நோய்வாய்ப் பட்டும், வனவிலங்குகளுக்கு இரையாகியும் எண்ணற்றோர் மடிந்தனர். வாகன வசதி இல்லாத நிலையில் ஒற்றையடிப் பாதைகளை உருவாக்கிக் கொண்டு தலைமன்னாரில் இருந்து தொடங்கிய அவர்களின் இடைவிடாத நடைபயணம் துயரத்தின் தொடக்கமாகும். 140 மைல் தொலைவில் உள்ள மாத்தளை வரையிலான காட்டுவழிப் பாதையில் போதிய உணவோ மருந்தோ தண்ணீரோ கிடைக்காமல் பாதி வழியில் கைவிடப்பட்டு இறந்தோர் ஏராளம். வெயில், மழை, குளிர் போன்ற இயற்கையின் சீற்றங்களும் அவர்களைத் தாக்கியது. கொடிய வனவிலங்குகளின் தாக்குதல்களுக்கு உள்ளானது மட்டுமல்லாமல் அட்டைக் கடி, நுளம்புக்கடி, தேள்கடி, பாம்புக் கடி என பல்வேறு அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு நடந்தனர். கொலரா, மலேரியா, அம்மை என பலதரப்பட்ட கொடிய நோய்களுக்கான மருத்துவ உதவி எதுவும் இல்லாததால் வழியில் பலரும் மடிந்தனர்.

'பாதி வழியில் ஏ ராசாவே

பரலோகம் போயிட்டியே'

என்ற வலி மிகுந்த ஒப்பாரிப் பாடல்கள் வழியெங்கும் வலி கலந்து ஒலித்தன. இவ்வாறு வழி நெடுக வலியோடு வந்தவர்களில் 25 முதல் 40 வீதத்தினர் இறந்திருப்பர் எனக் கூறப்படுகிறது .

இவர்களைக் கண்காணித்து அழைத்து வந்த ஆங்கிலேயத் துரைமார்களின் முகவர் 'கங்காணி' என அழைக்கப்பட்டனர். கங்காணி என அழைக்கப்பட்டவர்களின் சர்வாதிகார அடக்கு முறையால் பலர் பாதிப்புக்கு உள்ளாகினர். முதல் ஒரு நூற்றாண்டு காலம் கங்காணிமார்களின் அடக்குமுறை பெருந்தோட்டமெங்கும் தலைவிரித்தாடியது. தொழிலாளர்கள் அடிமைக் கூலிகளாக நடத்தப்பட்டனர். மனிதர்களாக மதிக்கப்படவில்லை. உழைப்புக்கேற்ற ஊதியம் இன்றி கங்காணிமார்களின் சுரண்டலுக்கு ஆளானார்கள். ஆண்கள் உடல் ரீதியான பாதிப்புக்கும் பெண்கள் பாலியல் சீண்டலுக்கும் உள்ளானார்கள். அவர்கள் எதிர்பார்த்து கடல் கடந்து வந்த உலகம் மிகவும் கொடுமையானதாக காணப்பட்டது. முன் அனுபவம் இல்லாமல் காலை முதல் மாலை வரை இடைவேளை இல்லாது பெருந்தோட்டத்தில் வேலை செய்வது என்பது அவர்களின் முதுகெலும்பை முறிப்பதாக இருந்தது. வேலை செய்ய மறுத்தால் அல்லது முரண்டு பிடித்தால் கடும் தண்டனை நிச்சயமாகியது. சில வேளைகளில் சவுக்கடிகளும் வழங்கப்பட்டதாக அறியப்படுகிறது. எலிப்பொறியில் சிக்கிவிட்டதாக உணர்ந்தனர். வந்து விட்டோம்; வேறு வழியில்லை; வலியை பொறுத்துக் கொண்டு வாழ்வோம் என்ற விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டனர் .

கங்காணிமார்களுக்கு நிகராக துரைமார்களின் அடக்கு முறையும் அவர்களை அதிக துன்பத்துக்கு உள்ளாக்கியது. இவர்களின் அடக்கு முறையை லண்டனில் வசிக்கும் மலையக எழுத்தாளர் திரு. நித்தியானந்தன் அவர்கள் 'துரைத்தன அடக்கு முறையும் கூலித் தமிழும்' என்ற கட்டுரையில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். கூலிகளாக வந்த இவர்கள் கொடூரச் சுரண்டலுக்கு இரையானதைக் காண முடிகிறது. இத்துரைமார்களில் பெரும்பாலானவர்கள் எந்தவித மனிதாபிமானமும் இல்லாதவர்களாகவே இருந்துள்ளனர். தொழிலாளர்களை மனிதப் பிறவிகளாக எண்ணாமல் இழிவாக நடத்தும் போக்கு துரைமார்களிடம் அதிக அளவில் இருந்ததை அவர்களின் நடவடிக்கைகள் மூலம் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. எந்தவிதமான சிரமங்கள் வந்த போதும் தொழிலாளர்கள் தோட்டத்தை விட்டு ஓடிவிட முடியாத வகையில் சட்ட திட்டங்கள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் இருந்தன. மீறுபவர்கள்

காவல்துறை உதவியுடன் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அப்போதைய மலைநாட்டு தொழிலாளர்கள்,

*‘பாலு மரம் வெட்டலான்னு*
*பழைய கப்பல் ஏறி வந்தேன்*
*நாப்பத்தைஞ்சி காசைப் போட்டு*
*நட்டெலும்பை முறிக்கிறானே’*

என்றும்,

*‘பஞ்சம் பொழைப்பதற்கு*
*பாற்கடலை தாண்டி வந்தோம்*
*பஞ்சம் பொழைச்சு நம்ம*
*பட்டணம் போய் சேரலையே’*
*‘ஒரு பழம் தப்பிச்சுன்னு*
*ஒதச்சாண்டி சின்னத்துரை’*

என்றும் நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் தங்களின் வேதனை நிறைந்த வாழ்க்கையை வெளிப்படுத்தியதைக் காணலாம். பாலும் தேனும் ஓடும் என நம்பி வெளிச்சத்தை தேடி வாழ வந்தவர்களுக்கு இருட்டு மட்டுமே பதிலாகக் கிடைத்தது.

தோட்டத் தொழிலாளியின் மூச்சு, வாழ்வு, இருப்பு அனைத்தும் அவன் வாழ்ந்த தோட்டத்துக்குள்ளேயே முடங்கிப்போனது. தன் வியர்வையையும் உதிரத்தையும் தேயிலைச் செடிகளுக்கு உரமாக்கி அடிமையாக வாழ்ந்த அவனுக்கு கிடைத்த உறைவிடமோ எந்த அடிப்படை வசதியும் இல்லாத லயன் (LINE) வீடுகளாகும். மேற்கு இந்திய தீவுகளின் அடிமைகளைப் போன்றே இவர்களும் நடத்தப்பட்டனர். குடும்ப உறுப்பினர்கள் ஆடு, மாடுகளைப் போல ஒரே அறையில் அடைக்கப்பட்டார்கள். நாளெல்லாம் இடைவேளை இன்றி உழைத்துக் களைத்து வரும் தொழிலாளிக்கு இளைப்பாற உரிய உறைவிட வசதி செய்து கொடுக்கப்படவில்லை. கால் நீட்டிப் படுக்க முடியாத அன்றைய அவல நிலை இன்றும் மலையகத்து லயன் வாழ்க்கையில் தொடர்கிறது. குடி நீர் வசதி, கழிப்பிட வசதி, மின்சார வசதி அன்று அறவே இருக்கவில்லை. சுகாதார வசதி இன்றி கடுமையான நோய்களுக்கு ஆளாகி இளம் வயதிலேயே பலர் இறந்தனர். இன்றும் மலையகத்தில் தேசிய சராசரியை விட இறப்பு விகிதம் அதிகமாகவும் பிறப்பு விகிதம் குறைவாகவும் இருப்பதை அவதானிக்க கூடியதாக இருக்கிறது. எனவேதான் “தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையில் நடத்தப்படும் விதம் வெட்கக் கேடாக இருக்கிறது” என நூற்றாண்டுக்கு முன்பே டொரிங்டன் என்ற ஆங்கில தேசாதிபதி குறிப்பிட்டார்.

குடும்ப வறுமையில் இருந்து விடுபட குடும்பத் தலைவிகளும் தோட்டத்தில் கூலி வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர். கசங்கிய சேலை, இரவிக்கை, இடுப்பில் படங்கு சாக்கு, முதுகில் கொழுந்துக் கூடை



Image Source - lankapura.com

என்பது அவர்களின் நூற்றாண்டகால அடையாளமாகிப் போனது. கடும் குளிரில் இரத்தம் உறிஞ்சும் அட்டைக் கடியின் வலியை தாங்கிக் கொண்டு, தேயிலைக் கொழுந்து பறிக்கும் மலையகத் தோட்டப் பெண் தொழிலாளர்கள் விடியலுக்காக காத்திருக்கிறார்கள். 200 வருடங்கள் கடந்தும் அவர்களின் வலிமிகுந்த வாழ்க்கையில் வெளிச்சம் தெரியவில்லை. வேலைக்கு நடுவில் சிறுநீர் கழிக்க எந்தவித வசதி வாய்ப்பும் இல்லாத காரணத்தினால், தாகம் எடுத்தாலும் தண்ணீர் குடிக்க முடியாத கொடுமை தோட்டப் பெண்களின் வாழ்க்கையில் அன்று முதல் இன்று வரை நிலவுகிறது.



Image Source - lankapura.com

பெருந்தோட்ட மலையக மக்கள் மனிதர்களாக மதிக்கப்படவில்லை. அவர்களும் இலங்கை நாட்டின் பிரஜைகள் என்பதை இனவாதம் பேசிய மக்கள் மட்டுமல்ல படித்த அரசியல்வாதிகளும் கூட ஏற்க முன்வரவில்லை. அதன் காரணமாக 1930 களில் மலையக மக்களுக்கும் சர்வசன வாக்குரிமை வழங்க டொனமூர் அரசியல் குழு முன்வந்த போது வலதுசாரி அரசியல்வாதிகள் அதனை எதிர்த்தனர். அதனால் மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமையே வழங்கப்பட்டது. இலங்கை நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இம் மலையக மக்கள் ஆற்றிய பங்களிப்பை கவனத்தில் கொள்ளாத இலங்கையின் இனவாத, சந்தர்ப்பவாத வலதுசாரி அரசியல்வாதிகள் கடந்த 200 வருடங்களாக மலையக மக்களின் அரசியல் உரிமைகளுக்கு தடையாகவே இருந்து வந்துள்ளனர். அரசியல் உரிமை பெறுவதன் ஊடாகவே இவர்கள் தங்களின் ஏனைய உரிமைகள், தேவைகளை நிலை நிறுத்திக் கொள்ள முடியும். இவர்களின் வலி மிகுந்த வாழ்க்கைப் பயணத்தை பெரும்பான்மை சிங்கள மக்களும் அரசியல் தலைவர்களும் உணர வேண்டும்.

இலங்கையின் பெருந்தோட்ட வளர்ச்சியில் மட்டுமல்லாமல் இலங்கையின் அனைத்து துறைகளின் வளர்ச்சியிலும் இவர்களின் பங்களிப்பு மிக அதிகம். இவர்கள் பெற்றுத் தந்த தேசிய வருமானம் மற்றும் அந்நியச் செலாவணி வாயிலாக இலங்கையின் அனைத்து மக்களும் கடந்த காலங்களில் பெரும் பயனை அடைந்திருக்கிறார்கள். அதனை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். இலங்கை நாட்டின் வளர்ச்சிக்காக வரலாறு முழுவதும் இவர்கள் அனுபவித்த வேதனைகளை, வலிகளை வெறும் வார்த்தைகளில் கூறிவிட முடியாது. ஆனால் அதற்கு சன்மானமாக இலங்கையின் இனவாத அரசியல்வாதிகள் அவர்களின் குடியுரிமையை, வாக்குரிமையைப் பறித்தமை இலங்கை வரலாற்றில் கறை படிந்த பக்கங்களாகும்.

## குடியுரிமைப் பறிப்பு

1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றதும் இலங்கை அரசியலானது தீவிர இனவாத அரசியலாக வடிவம் பெறத் தொடங்கியது. வாக்கு வங்கி அரசியலில் இனவாதம் முக்கிய புள்ளியாக மாறத் தொடங்கியது. மலையகத் தொழிற் சங்கங்களும் இடதுசாரி அமைப்புக்களும் முடங்கிப் போயின. முடிவில் 1948, 1949 ஆகிய ஆண்டுகளில் ஏற்படுத்தப்பட்ட சட்டங்கள் மூலம் 10 இலட்சம் மலையக மக்கள் அதுவரை

அனுபவித்த குடியுரிமை மற்றும் வாக்குரிமையை இழந்து நாடற்றவர்கள் என்ற நிலைக்கு தள்ளப்பட்டனர். இது தொழிலாளர் வர்க்கத்திற்கு இழைக்கப்பட்ட மிகப் பெரும் துரோகச் செயலாகும். வெயில், மழை, குளிர் என எதுவும் பாராது விசுவாசத்தோடு உழைத்த மலையக மக்கள் இதனால் பெரும் அதிர்ச்சி அடைந்தனர். வேதனைக்கும் வலிக்கும் உள்ளாகினர். இதன் விளைவாக அவர்களின் அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டன. அரசு வேலைகள் மறுக்கப்பட்டன. உயர்கல்வி தடுக்கப்பட்டது. நில உரிமை, வீட்டுரிமை என்பன பிரச்சினைக்குள்ளாகின.

பேரினவாத வலதுசாரி அரசியல்வாதிகள் குடியுரிமையை பறித்தெடுத்ததோடு நின்றுவிடவில்லை. குடியுரிமை பறிப்பின் தொடர்ச்சியாக அவர்களை இந்தியாவிற்கு நாடு கடத்த வேண்டும் என்ற குரல் சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகளிடம் ஆக்ரோஷமாக மேல் எழுந்து நின்றது. இம் மக்களை நாட்டைவிட்டு வெளியேற்றுவது என்பது தேர்தல் மேடைகளில் பிரதான பேசு பொருளாகியது. ஆங்காங்கே இடதுசாரிகள் மேற்கொண்ட சிறிய அளவிலான எதிர்ப்பு, தொழிற்சங்கங்களின் போராட்டம் போன்றவை எந்தப் பயனையும் தரவில்லை. முடிவில் பேரினவாத அரசியலே வெற்றியும் பெற்றது. அதன் விளைவாக 1964 ஆம் ஆண்டில் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தமும் 1974 இல் சிறிமாஇந்திரா காந்தி ஒப்பந்தமும் ஏற்படுத்தப்பட்டு, ஆறு இலட்சம் பேர் இந்தியாவிற்கு நாடு கடத்தப்பட வேண்டும் என்றும் 375,000 பேருக்கு இலங்கை குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது. இலங்கையிலேயே நிரந்தரமாக வாழ விரும்பியவர்களை வலுக்கட்டாயமாக, விருப்பத்திற்கு மாறாக நாடுகடத்தும் இச் செயலானது மனிதகுல வரலாற்றில் மலையக மக்களுக்கு இழைக்கப்பட்ட மற்றுமொரு துரோகமாகும். நூற்றாண்டுகளாக பல தலைமுறைகளாக ஆல மரமாக வளர்ந்து நின்றவர்கள் வேருடன் பிடுங்கப்பட்டு இந்திய மண்ணில் எறியப்பட்டமை அவர்களின் வாழ்வில் மிகவும் கொடூரமான விளைவை ஏற்படுத்தியது.

இந்த உடன்படிக்கைகள் மூலம் குடும்பங்கள் சிதறுண்டன. ஒன்றாக வாழ்ந்த குடும்ப உறுப்பினர்கள் பிரிக்கப்பட்டார்கள். அரசுகளுக்கோ சந்தர்ப்பவாத அரசியல்வாதிகளுக்கோ இம் மக்களின் வலி தெரியவில்லை. தொப்புள் கொடி உறவுகள் என்ற உரிமையுடன் தாயகம் திரும்பியவர்கள் இன்னமும் எதிர் பார்த்த வாழ்க்கை அமையாமல் மறுவாழ்வு தேடி அலைந்து கொண்டு இருக்கிறார்கள். 200 வருடங்களுக்கு முன் வலியோடு வாழ்வு தேடி இலங்கைக்கு வந்தார்கள். இரு நாடுகளின் ஒப்பந்தங்களால் அதே வலியோடு மறுவாழ்வு தேடி தாயகம் திரும்பினார்கள். தாயகம் திரும்பியோருக்கான மறுவாழ்வுத் திட்டங்கள் திருப்திகரமாக இல்லாத நிலையில், அவர்களும் அவர்களின் சந்ததியினரும் இந்திய மண்ணில் வாழ்ந்து வருவதாக வரலாற்றுப் பதிவுகள் கூறுகின்றன .

## இன வன்முறை

இலங்கைஇந்திய உடன்படிக்கையின் பின்னர் இலங்கையே எங்கள் தாயகம் என எண்ணி வாழ்க்கையை தொடங்கிய எஞ்சிய 5.5 % மலையக மக்களின் வாழ்க்கையிலாவது வசந்தம் வீசியதா என்றால் அதுவும் நடக்கவில்லை. அதன் பின்னரான வாழ்க்கைப் பயணமும் வலியும் வேதனையும் நிறைந்ததாகவே காணப்பட்டது. இலங்கையின் அரசியல் நகர்வானது பெரும்பான்மை x சிறுபான்மை என்ற இனவாதத்தை மையமாகக் கொண்டு இருப்பதால் பாதிக்கப்படும் சிறுபான்மையினர் வரிசையில், மலையக மக்களும் அடங்குகின்றனர். குறிப்பாக 1956, 1958, 1977, 1981, 1983 ஆண்டுகளில் நடைபெற்ற இனக் கலவரங்கள், 1972 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தம் என்பன மலையக மக்களின் வாழ்க்கையை பெரிதும் பாதிப்புக்கு உள்ளாக்கின.

1956 இல் ஆரம்பமான இனக்கலவரமானது பல்வேறு காலகட்டங்களாக தொடர்ந்து வந்த நிலையில், 1983 இல் வரலாறு காணாத மிகப் பெரும் இனக் கலவரமாக மாறியது. பிரிவினைவாதத்தை எந்தக் கட்டத்திலும் முன் வைக்காத மலையக மக்கள் இக் கலவரத்தில் மிகப் பெரும் அழிவை சந்தித்தனர். 3000 பேர் கொல்லப்பட்டனர். 25,000 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். நூற்றுக்கணக்கான வீடுகள், வணிக நிறுவனங்கள் சேதத்திற்கு உள்ளாகின. எதிர்த்து தாக்கும் வலிமையை மலையகத் தொழிலாளர்கள்

வடக்கில் குடியேறிய மலையக மக்களின் பேச்சு, மொழி, நடை – உடை – பாவனை, கலை – கலாச்சாரம் என்பன இலங்கை தமிழர்களில் இருந்து மாறுபட்டு இருப்பதால் அங்கு இவர்கள் சமத்துவமாக நடத்தப்படவில்லை. இவர்கள் அங்கு குழப்பமான அடையாளத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். பிறப்புச் சான்றிதழ் போன்றவற்றில் இலங்கைத் தமிழர்கள் என குறிப்பிட்டுக் கொள்ள விரும்பும் இவர்கள் நடைமுறை வாழ்க்கையில் மலையகத் தமிழர்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

பெற்றிருக்கவில்லை. அதனால் சில தோட்டங்களில் தொழிலாளர்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்ள காடுகளில் பதுங்கினர். இன்னும் சிலர் பாதுகாப்புத் தேடி அகதி முகாம்களில் தஞ்சமடைந்தனர். இக் கலவரமானது மலையக மக்களின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டது என்றே கூற வேண்டும். அவர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியானது. இனவாதத்தை ஆதரிக்காத அவர்கள் இன வெறியர்களால் கொல்லப்பட்டார்கள். வன்கொடுமைக்கு ஆளானார்கள். உடமைகளை இழந்தார்கள். சிறுபான்மை என்ற ஒரே காரணத்தினால் இவர்கள் ஒவ்வொரு கலவரத்தின் போதும் தாக்குதலுக்கு உள்ளாகியமை மிகவும் கொடுமையான செயலாகும். இவர்கள் இலங்கை நாட்டின் உண்மையான பிரஜைகள். அவர்களின் உயிருக்கும் உடமைக்கும் அரசு உத்தரவாதம் தர வேண்டும்.

## வடக்கு, கிழக்கு நோக்கி நகர்ந்த மலையக மக்கள்

மலையக பகுதிகளில் மிகவும் நெருக்கமாக வாழ்ந்து வரும் தொழிலாளர்கள் தங்களின் எதிர்கால நலன் கருதி கலவரங்களில் இருந்து தற்காத்துக் கொள்ள உள் நாட்டிற்குள்ளேயே இடம் பெயர்ந்து வாழ வழி தேடினர். குறிப்பாக முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற பகுதிகளுக்கு ஓடினார்கள். 1974 ஆம் ஆண்டுப் பகுதியில் இவர்கள் காடுகளை வெட்டி உருவாக்கிய நிலப் பகுதிகள், சிறு காணிகளாக பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு பிரித்து அளிக்கப்பட்ட போது, வேலை இழந்த தொழிலாளர்களும் வடக்கு நோக்கி நகர்ந்தனர். பாதுகாப்புக் கருதி அப் பகுதிகளில் நிரந்தரமாகக் குடியேறவும் விரும்பினர்.

கடின உழைப்பால் அங்கேயும் காடுகளை அழித்து அவற்றை களனிகளாக மாற்றினார்கள். இவர்களின் இப்புதிய வாழ்க்கை சுகமானதாக, சுலபமானதாக அமைந்துவிடவில்லை. அங்கும் வலியோடு தான் வாழ்க்கையை தொடங்க வேண்டி இருந்தது. பெருமளவில் நன் செய் நிலங்கள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. நீர்ப்பாசன வசதி குறைந்த அல்லது வசதி இல்லாத வானம் பார்த்த நிலங்களில் பயிர் செய்ய வேண்டி இருந்தது. ஒரு சிலர் காணி உரிமையாளர்களாக மாறி உள்ளனர் என்ற போதும் அவர்களுக்கான சட்டபூர்வமான காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படுவதில் பாகுபாடு காட்டப்படுவதாகவும் கூறப்படுகிறது.

விவசாய நிலம் இல்லாத பெருந் தொகையினர் பெரு நில உடமையாளர்களின் காணிகளில் விவசாயக் கூலிகளாக வேலை செய்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களால் காடழித்து உருவாக்கப்பட்ட விவசாயப் பண்ணைகள் இலங்கை இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்கு உள்ளாகியுள்ளது. வடக்கே வந்து குடியேறுங்கள் என இரு கரம் நீட்டி அழைப்பு விடுத்தனர் தமிழ் அரசியல்வாதிகள். ஆனால் அவர்களுக்கான வாழ்வாதாரத்தை பெற்றுக் கொடுப்பதில் சில பொதுநல அமைப்புகள் காட்டிய அக்கறையை இந்த அரசியல்வாதிகள் காட்டத் தவறிவிட்டனர் என்றே கூற வேண்டும்.

வடக்கு நோக்கி நகர்ந்தவர்கள் அங்கு தாங்கள் பாதுகாப்பாக இருக்கலாம் என்ற

நம்பிக்கையுடனேயே இடம் பெயர்ந்தனர். அங்கு பாதுகாப்பாக வாழ்ந்து விடலாம் என்று நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் இவர்கள் கிராமங்களின் எல்லையோரப் பகுதிகளில் பெருமளவில் குடியமர்த்தப்பட்டனர். உள்நாட்டு யுத்தங்களின் போது இராணுவத் தாக்குதல்களால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

வடக்கில் குடியேறிய மலையக மக்களின் பேச்சு, மொழி, நடை - உடை - பாவனை, கலை - கலாச்சாரம் என்பன இலங்கை தமிழர்களில் இருந்து மாறுபட்டு இருப்பதால் அங்கு இவர்கள் சமத்துவமாக நடத்தப்படவில்லை. இவர்கள் அங்கு குழப்பமான அடையாளத்துடனேயே வாழ்ந்து வருகின்றனர். பிறப்புச் சான்றிதழ் போன்றவற்றில் இலங்கைத் தமிழர்கள் என குறிப்பிட்டுக் கொள்ள விரும்பும் இவர்கள் நடைமுறை வாழ்க்கையில் மலையகத் தமிழர்களாகவே வாழ்ந்து வருகின்றனர்.

உள் நாட்டு யுத்தம் தந்த வலி மிகுந்த வாழ்விலிருந்து விடுபட சிலர் தமிழகம் நோக்கி படகுகளில் உயிரை பணயம் வைத்து அகதிகளாகப் போனார்கள். ஆனால் அங்கேயும் அவர்களுக்கு விடியல் கிடைக்கவில்லை. 30,000 மேற்பட்ட மலையக மக்கள் அகதிகளாக தமிழக அகதி முகாம்களில் இன்றும் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். குடியுரிமை இல்லாது கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக தமிழ் நாட்டில் அகதி முகாம்களில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். 2019 ஆம் ஆண்டில் இந்திய அரசு கொண்டு வந்த குடியுரிமை சட்டத்திலும் இவர்கள் உள்வாங்கப்படவில்லை. மாறாக சட்ட விரோதமாக குடியேறியவர்கள் என அடையாளப்படுத்தப்பட்டு வருகின்றனர். வலி மிகுந்த இவர்களின் உரிமையற்ற வாழ்க்கையை பற்றி இலங்கை - இந்திய அரசுகளோ உலக சமூகமோ கவலைப்படுவதாக தெரியவில்லை.

மலையக மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தொடர் தாக்குதல்களைச் சந்தித்து கொண்டே வந்திருக்கிறார்கள். 1972 ஆம் ஆண்டு பெருந் தோட்டங்களை தேசிய உடமையாக்கிய பின்னர் அவற்றின் பெரும் பகுதி சிங்களப் பெரும்பான்மை சமூகத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டதால் தோட்டத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இலங்கை நாட்டிற்காக பெருந் தோட்டங்களில் உதிரம் கொட்டி வியர்வை சிந்தி உழைத்தவர்களுக்கு நிலம் பகிர்ந்து அளிக்கப்படவில்லை. அதன் விளைவாக அவர்கள் வேலை இழந்தனர். பலர் இதனால் வாழ்விழந்து வீதிக்கு வரவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டனர். வேலை இழந்த வீடு இழந்த பலரும் பல திசைகளிலும் சிதறுண்டு போனார்கள். சிலர் உள் நாட்டில் கூலித் தொழிலாளர்களாக பல்வேறு மாவட்டங்களுக்கு சிதறுண்டு சென்றார்கள். சிலர் நகரங்களை நோக்கி நகர சிலர் வடக்கு, கிழக்கு நோக்கி நகர்ந்தனர். 85 % வீதமானோர் காணி உரிமை இல்லாமலும் வீட்டுரிமை இல்லாமலும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

பெருந் தோட்டங்களில் வேலை பார்த்து வேலை இழந்தவர்கள் சிறு தோட்டங்களில் வேலைக்குச் சேர்ந்தனர். ஆனால் அங்கே சிலநாள் மட்டுமே வேலை இருந்தது என்பதுடன் வேலைக்கான உத்தரவாதமும் வழங்கப்படவில்லை. உரிய ஊதியமும் தரப்படவில்லை. இதன் தாக்கம் கொரோனா நோய் தொற்றுக் காலத்திலும் இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் போதும் வெளிப்படையாகத் தெரியத் தொடங்கியது. பொருளாதார நெருக்கடியின் போது மலையக மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இந்தியாவில் இருந்து சென்ற உணவுப் பொருட்கள் கூட இவர்களைச் சென்றடையவில்லை என்று கூறப்படுகிறது. இந்திய சமூகம் உட்பட யாரும் இவர்களின் நெருக்கடி மிகுந்த வாழ்க்கையை கண்டு கொள்ளவில்லை. பலவீனமானவர்களை பாதுகாக்க உலக சமூகம் முன்வர வேண்டும். ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. மேடை போட்டு பேசுபவர்களும் வீதிக்கு இறங்கி வந்து உதவிக் கரம் நீட்டவில்லை.

இரு நூற்றாண்டுக்கு மேலாக பெருந் தோட்டங்களில் அடைபட்டு கிடக்கும் மலையக மக்களின் அடிப்படை உரிமைகள், தேவைகளை நிறைவேற்றுவதில் அரசாங்கமோ அரசியல் தலைவர்களோ தொழிற் சங்க தலைவர்களோ பெரிய அளவில் முனைப்புக்

காட்டவில்லை என்றே கூற வேண்டும். ஊதிய உயர்வு, ஆயிரம் ரூபாய் சம்பளம் போன்றவை வெறும் பேச்சிலும் எழுத்திலும் மட்டுமே இருக்கிறது. வேலை இழப்பு, வருமானம் குறைவு காரணமாக போதிய ஊட்டச்சத்து இன்றி நோய்களின் தாக்கம் மலையக மக்களிடம் அதிகரித்து வருகிறது. பாரபட்சமாகவும் கவனிப்பாரற்றும் அரசின் மருத்துவ சேவைகள் இருப்பதால் ஏராளமான சுகாதார சீர்கேடுகள் மலையகத்தில் அதிகரித்து வருகிறது. இதனால் முதுமைக்கு முன்னதாகவே இறப்போர் அதிகரித்து வருகின்றனர்.

இரு நூற்றாண்டுகளுக்கும் மேலாக இருந்து வரும் தோட்டப்பாடசாலை முறைமையின் தரம் உயர்த்தப்படாமை தோட்ட தொழிலாளர்களின் குழந்தைகளின் படிப்பில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. 1931 ஆம் ஆண்டு இலவசக் கல்வியை இலங்கையில் அமுல்படுத்த முன்வந்த போது தோட்டப் பகுதிகளுக்கு அது தேவை இல்லை என இலங்கை அரசியல்வாதிகள் வாதிட்டதை மலையக மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். இன்று உயர் கல்வி பெற வேண்டுமாயின் பெருந் தோட்ட தொழிலாளர்களின் குழந்தைகள் நெடுந்தொலைவு நகரங்களை நோக்கிச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றனர். போதிய வருமானம் இல்லாத பெற்றோர்களால் அனைத்து பிள்ளைகளையும் பணம் செலவழித்து வாகனங்களில் அனுப்பி படிக்க வைக்க முடியாத சூழ்நிலை மலையகத்தில் தோன்றி இருக்கிறது. இதனால் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகள் உயர் கல்வி பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக மலையகத்தில், கல்வியில் இடை நிறுத்தல் என்பது தேசிய சராசரியை விட அதிகமாக இருக்கிறது. தகுதி வாய்ந்த ஆசிரியர்கள், பயிற்றுவிக்கப்பட்ட அறிவியல், கணித ஆசிரியர்கள் போதிய அளவு மலையகத்தில் இல்லாதிருப்பது பெரும் குறையாகக் காணப்படுகிறது. மலையகத்தில் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. தங்களின் உழைப்பு உணவுக்கே போதாத நிலையில் குழந்தைகளை எவ்வாறு படிக்க வைப்பது என்ற ஏக்கமும் வலியும் ஒவ்வொரு மலையக தொழிலாளியிடம் இருந்து வருகிறது .

## மலையக மக்களுக்கான காணி, வீடு

இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கு வந்த தோட்டத் தொழிலாளர்கள் பல சந்ததிகளாக மலைநாட்டில் வாழ்ந்து வந்த போதும் அவர்களுக்கென ஒரு சிறு காணித்துண்டோ, வீடோ சொந்தம் என்று சொல்லிக் கொள்வதற்கு இல்லை. விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் மட்டுமே குறைந்தளவு காணிகளை பெற்றவர்களாக இருக்கின்றனர். மிக அண்மைக் காலங்களில் இவர்களுக்கான வீடமைப்பு திட்டம் இலங்கை அரசால் கொண்டு வரப்பட்டது. இந்திய அரசின் உதவியுடனும் ஒரு சில வீடமைப்புத் திட்டங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. வீடுகள் தேவைப்படும் தொழிலாளர்களின் தொகையுடன் ஒப்பிடும் போது வீடுகளின் எண்ணிக்கை மிகவும் குறைவான ஒன்றாகும். இதுவரை இருந்த வலி மிகுந்த லயன் வாழ்க்கை என்பது ஒரு சாபக்கேடு. தனித் தனியாக உரிமை உள்ள வீடுகள் என்பது அவர்களின் நீண்ட நாள் கனவு. எந்தவித பாரபட்சமும் பாராது வீடமைப்பு திட்டத்தை துரிதப்படுத்தி அனைத்து தொழிலாளர்களுக்கும், உரிமை உள்ள வீடுகளை வழங்க வேண்டியது சமூக அக்கறை கொண்ட சனநாயக அரசின் முக்கிய கடமையாகும்.

200 வருட காலம் தோட்டங்களில் வாழ்ந்து வரும் தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி பகிர்ந்தளிப்பில் இனத்துவத்தை அளவு கோலாக்குவது கண்டிக்கத்தக்கதாகும். இலங்கை நாட்டின் பொருளாதார கட்டமைப்புக்கு முதுகெலும்பாக இருந்தவர்களுக்கு பாரபட்சம் காட்டாது, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முன்வர வேண்டுமேயன்றி அவர்களை மேலும் மேலும் நசுக்கக் கூடாது. பெருந்தோட்டங்களே எங்களின் வாழ்வாதாரம் என அத் தோட்டங்களிலேயே 200 வருடங்களாக வாழ்ந்து கொண்டிப்பவர்கள் இன்று பகிர்ந்தளிக்கப்படும் நிலத்தின் மீது உரிமை கொள்ள பூரணத் தகுதி உடையவர்கள். அவர்கள் பாடுபட்டு உருவாக்கிய நிலத்தில் அவர்களுக்கான உரிமை வழங்கப்படவில்லை. ஒரு தேசத்தில் ஒட்டு மொத்தமாக ஒரு சமூகப் பிரிவினர் மட்டும் பின்தள்ளப்படுவது

நியாயமாகாது. காணி பகிர்ந்தளிப்பில் தோட்டத் தொழிலாளர்களையும் இணைத்து அவர்களின் வாழ்க்கையில் நம்பிக்கை ஏற்படுத்த வேண்டியது இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் கடமையாகும்.

## மலையக தேசிய இன அடையாளம்

1964 இற்கு முன் இலங்கையின் இரண்டாவது பெரிய சமூகமாக இருந்து இன்று மக்கள் தொகை அடிப்படையில் நான்காவது சமூகமாக மாறியிருக்கின்ற மலையக மக்கள், 200 வருடங்கள் கடந்த நிலையில், ஒன்றுபட்ட இலங்கையில் தாங்கள் ஒரு தேசிய இனமாக கருதப்பட வேண்டும் என எண்ணுகின்றனர். அரசியல், பொருளாதாரம், சனநாயகம், சமத்துவம் போன்ற மறுக்கப்படும் உரிமைகளை வென்றெடுப்பதற்கு தேசிய இன அங்கீகாரமும், அடையாளமும் மிகவும் அவசியமாகும். தோட்ட தொழிலாளர்கள், கூலிகள், இந்தியத் தமிழர், இந்திய வம்சாவளியினர், வடக்கத்தையான், தோட்டக்காட்டான் என பல்வேறு அடைமொழிகளால் அழைக்கப்பட்ட சமூகம் இன்று 'மலையகத் தமிழர்' என்ற கௌரவமான பெயருடன் தலை நிமிர்ந்து நடக்க விரும்புகிறது. இது புதிய சகாப்தத்தின் தொடக்கப் புள்ளியாகும். மலையகம் என்பது இச் சமூகத்தின் வரலாற்றுக் குறியீடாகவும் தேசிய இன அடையாளத்தின் முகமாகவும் விளங்குகிறது.

மலையகத்தை மையமாகக் கொண்டு இலங்கை தேசமெங்கும் கிளை பரப்பி கால் பதித்து வாழ்ந்து வரும் அனைவரும் மலையக மக்களே. திரு. லெனின் மதிவாணன் கூறுவதைப் போன்று மலையகத் தேசியத்தை வெறும் புவியியல் எல்லைக்குள் சுருக்கி விட முடியாது. மலையகத்திலும் மலையகத்திற்கு வெளியிலும் வாழ்கின்ற மலையகத் தமிழர்களை நான்காவது தேசிய இனமாக 'மலையகத் தமிழர்' என அழைப்பதும் அங்கீகரிப்பதும் நியாயமான கோரிக்கையாகும். மலையகமே இவர்களின் இன்றைய தாயகம். இன்றைய 99% மலையக மக்கள் இந்திய தேசத்தை கண்களால் கண்டிராதவர்கள். இந்தியா இவர்களின் இன்றைய தாயகம் அல்ல. இன்றைய சந்ததியினருக்கு இலங்கையே அவர்கள் பிறந்து வளர்ந்த மண். இலங்கையின் பெருந்தோட்ட செய்கை உட்பட அனைத்து உட் கட்டமைப்பு வசதிகள் ஏற்படவும் மேம்படவும் காரணமானவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள். இலங்கை நாட்டின் சகல அபிவிருத்திக்கும் உழைத்த இம் மக்கள் கேட்பது 'மலையக தமிழர்' என்ற தேசிய இன அடையாளமே. பச்சை நிற ஆடை அணிந்த பசுமையான மலையக மலைத் தொடர்கள் மிகவும் அழகானவை. ஆனால் அங்கே வாழும் மக்களின் வாழ்க்கை அழகானதாக பசுமையானதாக மாற்றியமைக்கப்படவில்லை. அவர்களின் வாழ்க்கைத் தரத்தில் பெரிய அளவில் முன்னேற்றங்கள் ஏற்படவில்லை. இலங்கையின் ஏனைய மூன்று சமூகங்களை விட மலையக மக்கள் அனைத்து துறைகளிலும் பின்தங்கியவர்களாக, வஞ்சிக்கப்பட்டவர்களாக வாழ்ந்து வருகின்றனர்.

மலையகத்தை மையமாகக் கொண்டு இலங்கை தேசமெங்கும் கிளை பரப்பி கால் பதித்து வாழ்ந்து வரும் அனைவரும் மலையக மக்களே. திரு. லெனின் மதிவாணன் கூறுவதைப் போன்று மலையகத் தேசியத்தை வெறும் புவியியல் எல்லைக்குள் சுருக்கி விட முடியாது. மலையகத்திலும் மலையகத்திற்கு வெளியிலும் வாழ்கின்ற மலையகத் தமிழர்களை நான்காவது தேசிய இனமாக 'மலையகத் தமிழர்' என அழைப்பதும் அங்கீகரிப்பதும் நியாயமான கோரிக்கையாகும்.

மலையக மக்கள் தங்களின் வாழ் நாள் முழுவதும் உழைக்கும் வர்க்கமாக மட்டுமே வாழ்ந்து வந்துள்ளனர். எந்த ஒரு வசதி வாழ்க்கையையும் இவர்கள் பெற்றதில்லை. கடந்த 200 வருட வாழ்க்கைப் பயணத்தில் இவர்கள் முதலாளி வர்க்கத்தினரால் அடிமைகளாக உரிமை இல்லாதவர்களாக நடத்தப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் கடந்த 200 வருட வரலாற்றில் பெற்றதை விட இழந்தவைகளே அதிகம். இப்போது இவர்கள் இவ் வலிகளில் இருந்து விடுபட வேண்டும் என விரும்புகிறார்கள். அதன் ஒரு அங்கமாக தாங்கள் மலையகத் தேசிய இனம் என்பதை

**மலையக மக்களின் 200 வருட வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும் போது அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள், அநீதிகள் ஏராளம். காணி உரிமை, கல்வி உரிமை, வீட்டு உரிமை, உழைப்புக்கேற்ற ஊதியம் என அனைத்தும் மறுக்கப்பட்ட வலியோடு வாழும் அவர்களிடம் தற்போது அவற்றை அடைந்தே தீருவது என்ற உத்வேகம் எழத் தொடங்கி இருக்கிறது.**

நிலை நிறுத்தத் தொடங்கி விட்டார்கள். முஸ்லிம் மக்களும் இலங்கைத் தமிழரும் ஒரு தேசிய இனமாகக் கருதப்படும் போது நாங்களும் ஒரு தேசிய இனமாக ஏன் கருதப்படக் கூடாது என்ற முழக்கம் மலையகம் எங்கும் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது.

மலையகத் தமிழர் என்ற தேசிய இன அங்கீகாரம் என்பது தனி நாட்டிற்கான கோரிக்கை அல்ல என்பதை அரசும் ஏனைய சமூகங்களும் குறிப்பாக பெரும்பான்மைச் சிங்கள சமூகமும், ஆட்சியாளர்களும் புரிந்து கொள்ள வேண்டும். இவர்களின் போராட்டமானது வாழ்வாதாரத்தை நிலை நிறுத்திக் கொள்வதற்கானதேயன்றி, நாட்டை துண்டாடுவதற்கானதல்ல. தங்களை உலக அரங்கிலும் இலங்கையின் அரசியல் செயற்பாட்டிலும் நிலைநிறுத்திக் கொள்ள தங்களுக்கான அடையாளத்தை ஆழமாகப் பதிய விரும்புகிறார்கள். இது இவர்களின் திடீர் கோரிக்கை அல்ல. 1967 ஆம் ஆண்டுக்கு முன்பே மலையகம் என்ற முத்திரை அழுத்தமாக பதியப்பட்டு அதனை ஒட்டி அனைத்துச் செயற்பாடுகளும் நடந்து வந்துள்ளன. இன்று மலையகத்தில் படித்தவர்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள், தொழில் அதிபர்கள், ஆசிரியர்கள், அரசு அதிகாரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் என ஏராளமான அறிவார்ந்தவர்கள் எழத் தொடங்கியிருக்கிறார்கள். இலங்கை சமூகத்தில் இவர்களின் அடையாளம் தற்போது தனித்துவமாகத் தெரியத் தொடங்கியிருக்கிறது.

இந் நிலையில் இந்தியாவில் இருந்து இலங்கையில் குடியேறி 200 வருடங்கள் கடந்து பல தலைமுறைகள் ஆன பிறகும் அவர்களை 'இந்தியத் தமிழர்' என அடையாளப்படுத்த சிலர் முற்படுகின்றனர். அது ஒரு பகுதியினரின் சுயநலம் சார்ந்தது. அதில் சமூக நலன் இல்லை. அவ்வாறு இந்தியத் தமிழர் என அடையாளப்படுத்துவது ஏனைய சமூக மக்களிடம் இருந்தும் இலங்கைத் தேசியத்திலிருந்தும் அந்நியப்படுத்திக் கொள்வதாக அமைந்து விடும். இந்திய வம்சாவளி என்ற இன அடையாளமானது வரலாற்றைக் குறித்துக் காட்டுமேயன்றி அவர்களின் தேசிய இன அடையாளத்தை குறிப்பதாக அமையாது. மலையகத் தேசிய இனம் என்ற ஆரோக்கியமான பயணத்தில் இந்தியத் தமிழர் என்ற அடையாளத்தை தவிர்த்து முன்நோக்கிச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் மலையக மக்கள் இருக்கிறார்கள்.

மலையக மக்களின் 200 வருட வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும் போது அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள், அநீதிகள் ஏராளம். காணி உரிமை, கல்வி உரிமை, வீட்டு உரிமை, உழைப்புக்கேற்ற ஊதியம் என அனைத்தும் மறுக்கப்பட்ட வலியோடு வாழும் அவர்களிடம் தற்போது அவற்றை அடைந்தே தீருவது என்ற உத்வேகம் எழத் தொடங்கி இருக்கிறது. மலையக மக்களின் வாக்குரிமை பறிப்பு, குடியுரிமை இழப்பு, பலவந்தமாக நாடுகடத்திய 1964 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய உடன்படிக்கை, 1971 ஆம் ஆண்டு உள்நாட்டு கிளர்ச்சி, 1972 இல் தோட்டங்கள் தேசிய மயம், உணவுப் பஞ்சம், 1977 - 1981 - 1983 ஆகிய ஆண்டுக் காலப் பகுதிகளில் ஏற்பட்ட இன வன்முறை போன்ற பல்வேறு நிகழ்வுகள் மலையக மக்களின் தேசிய இன உணர்வை அதிக அளவில் எழுச்சி பெறச் செய்துள்ளன. தலை நிமிர்ந்து நிற்கும் உரிமையும் தகுதியும் இந்த இனத்திற்கு நிச்சயம் உண்டு. முல்லோயா கோவிந்தன் தொடங்கி பல போராளிகளை உரிமைக்காக பலி கொடுத்த வரலாற்றை உடைய மலையக மக்கள் வலி நீங்கி வாழப் போராடுவதற்கு தயாராக இருக்கிறார்கள். உரிமைகள் உள்ள வாழ்விற்காக காத்திருக்கிறார்கள். கதவுகள் திறக்கப்பட வேண்டும். விடியல் விரைந்து வர வேண்டும்.

(தொடரும் )

ராஜ் ராஜரட்ணம், சட்டத்துக்கு முரணாக ‘உட்தகவல் வணிகம்’ (Inside Trading) செய்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில், அமெரிக்கப் புலனாய்வுப் பணியகத்தால் 2009 ஒக்டோபரில் கைது செய்யப்பட்டார். அக் குற்றச்சாட்டுப் பொய்யானது என வாதாடியும், நீதிமன்றம் அவருக்கு 11 வருடங்கள் சிறைத்தண்டனையும் அமெரிக்க வரலாற்றிலே உச்சபட்சமான அபராதத் தொகையும் விதித்தது. ராஜ் ராஜரட்ணம் தான் அவமானப்படுத்தப்பட்டதாக உணர்ந்தார்; தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக் கெதிராகப் பேச வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டார். இந் நிலையில், சிறையிலிருந்தவாறே அவர் ஆங்கிலத்தில் எழுதிய நூலே ‘Un even Justice’. இந்நூல் அமெரிக்க நீதித்துறை மீதும், நீதிபதிகள் மீதும், அமெரிக்க வழக்குரைஞர் நாயகத்தின் மீதும், எப்.பி.ஐ. மீதும் மிகக் கடுமையான விமர்சனங்களை முன்வைக்கிறது. மூன்று வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட இந்நூல் அண்மையில் ஓய்வுநிலைப் பேராயர் பேரருட்கலாநிதி எஸ். ஜெபநேசன், முனைவர் சோ. பத்மநாதன் (சோ.ப) ஆகியோரால் ‘சமனற்ற நீதி’ எனும் பெயரில் தமிழாக்கம் செய்யப்பட்டு, ‘யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மன்றத்தினால்’ வெளியிடப்பட்டது. தமிழ் வாசகர்கள் அறியும் நோக்கில் இந் நூல் ‘சமனற்ற நீதி ‘ எனும் பெயரிலேயே எழுநாவில் தொடராக வெளிவருகிறது.



தமிழில் : ஓய்வுநிலைப் பேராயர், பேரருட்கலாநிதி எஸ். ஜெபநேசன்,
முனைவர் சோ. பத்மநாதன்

ராஜ் ராஜரட்ணம்

திரு ராஜ் ராஜரட்ணம் அவர்கள் 1957 இல் கொழும்பில் பிறந்தார். ஆரம்பக் கல்வியை கொள்ளுப்பிட்டி புனித தோமையர் கல்லூரியில் கற்றார். பின்னர் இங்கிலாந்து சென்று பள்ளிப் படிப்பை நிறைவுசெய்து சசெக்ஸ் பல்கலைக்கழகத்தில் பொறியியல் பட்டம் பெற்றார். 1983 இல் பென்சில்வேனியா உவார்ட்டன் பல்கலைக்கழகக் கல்லூரியில் எம்.பி.ஏ பட்டம் பெற்றார். ராஜ் ராஜரட்ணம் தனது பணியை முதன்முதலில் சேஸ் மான்ஹறட்டன் வங்கியில் கடன் வழங்கும் அதிகாரியாகத் தொடங்கினார். 1985 இல் நியூயோர்க்கின் நீடம் நிறுவனத்தில் சேர்ந்து பணியாற்றினார். 1987 இல் அந்நிறுவனத்தின் ஆய்வுப் பகுதியின் தலைவராகவும், மார்ச் 1991 இல் அந்நிறுவனத்தின் தலைவராகவும் ஆனார்.

1997 இல் தனது சொந்த நிறுவனமான கலியன் முதலீட்டு நிதியத்தை ஆரம்பித்தார். இந்நிதியத்தைப் பின்னர் அவர் கலியன் குழுமம் எனப் பெயர் மாற்றினார். இது உலகின் மிகப்பெரிய முதலீட்டு நிறுவனங்களில் ஒன்றாக மாறியது. ஒரு காலகட்டத்தில் கலியன் குழுமம் 180 பணியாளர்களுடன் 7 பில்லியன் அமெரிக்க டொலர்களை நிருவகித்தது.

2009 இல் அமெரிக்கப் புலனாய்வுப் பணியகம் ராஜ் ராஜரட்ணத்தைத் திட்டமிட்டுக் கைது செய்தது. உட்தகவல்களைப் பெற்று வர்த்தகம் செய்ததாகவும் 0.01 சதவீதம் குற்றமிழைத்ததாவும் அவர் மீது பொய்க்குற்றச் சாட்டுக்களை முன்வைத்தது. குற்றத்தைப் ஒப்புக்கொள்ளுமாறு அவர்மீது பல்வேறு அழுத்தங்களைப் பிரயோகித்தது. தான் நிரபராதி என்பதில் உறுதியாக நின்ற ராஜ் ராஜரட்ணம் அமெரிக்க நீதித்துறையில் உள்ள பேராசை பிடித்த சில தனிபர்களின் சதிகளாலும் பொய்ச்சாட்சிகளாலும் வஞ்சிக்கப்பட்டார். 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை பெற்ற ராஜ் ராஜரட்ணம் அவர்கள் 7 ஆண்டுகளில் விடுவிக்கப்பட்டார். சிறையில் இருந்து ராஜ் எழுதிய நூல் Uneven Justice என்ற பெயரில் 2021 இல் வெளிவந்தது. இந்நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு 2024 இல் யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாண போதனா மருத்துவமனை மன்றத்தால் வெளியிடப்பட்டது. ராஜ் ராஜரட்ணம் தற்போது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ்ச் சமூகத்தின் மீள்கட்டுமானப் பணிகளுக்கு பல்வேறு வழிகளில் உதவி வருகிறார்.

# சமனற்ற நீதி : வளர்நிலை

1983 ஆம் ஆண்டு, நான் வோற்ரன் வணிகப் பள்ளியில் பட்டம் பெற்றதும், நிதியியல் சார்ந்த துறையிலேயே பணியாற்ற விரும்பினேன். தொழில்சார் வாழ்க்கையின் முதலாவது காலடியை சேஸ் மான்ஹறாட்டன் வர்த்தக வங்கியிலிருந்து தொடங்கினேன். அமெரிக்காவில் சில வருடங்கள் பணியாற்றி விட்டு, ஆசியாவுக்குத் திரும்பிச் சென்றுவிடுவதே எனது இலக்காக இருந்தது.

அந்த வங்கியின் கடன் வழங்கும் துறையில் நிதிப் பகுப்பாய்வாளராக ஒன்பது மாதப் பயிற்சிக்குப் பின் பதவி என்ற அடிப்படையில் இணைந்து கொண்டேன். அது ஊதியத்துடன் கூடிய பயிற்சியே. இத்தகையை பதவிகளுக்குத் தேர்வு செய்யும் முறை மிகவும் கடினமானதாக இருந்தது. என்னோடு நூற்றுக்கும் அதிகமானவர்கள் பயிற்சி பெற்றார்கள். அந்தக் காலகட்டத்தில், இது மதிப்புமிக்க பயிற்சியாகக் கருதப்பட்டது. எமது அணி பயிற்சியை முடித்துக்கொண்டு பதவி ஏற்பதற்கு முன்பே வெவ்வேறு பெரிய



வோற்ரன் வணிகப் பள்ளி

Image Source - www.cnbc.com

நிறுவனங்களிலிருந்தெல்லாம் எமக்கு வேலை வாய்ப்புக்கள் குவிந்தன. இதனால் கிட்டத்தட்ட முப்பது வீதமானவர்கள் ஓரிரு வருடங்களுக்குள் பதவியிலிருந்து நீங்கி, அதிக சம்பளம் வழங்கும் வேறு நிறுவனங்களில் வேலைக்குச் சேர்ந்தார்கள்.

நாங்கள் நிதி மற்றும் பணப் புழக்கத்தைப் பகுப்பாய்வு செய்வதில் கடுமையான பயிற்சிகளைப் பெற்றிருந்தோம். இந்தப் பயிற்சிகளின் வழியே, ஒரு நிறுவனத்தினுடைய கடன் தொடர்பான விவகாரங்களைச் சல்லடைபோட்டு ஆராயவும், ஒரு நிறுவனத்தின் பல்வேறு பொருளாதார நிலைகளைத் துருவிப்பார்க்கவும் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தோம். காலை நேரத்தில் வகுப்பறையில் படித்தும், மாலை நேரத்தில் கூட்டுத்தாபன வங்கியின் கடன் கொடுக்கும் அதிகாரிகளுடன் கடன் பரிசீலனையை மேற்கொண்டும் எம்மை அந்தத் துறையில் தகுதியானவர்களாக ஆக்கிக்கொண்டோம். கடன் விவகாரங்களுக்கான பயிற்சி பிற்காலங்களில் மாற்றமடைந்தது. தற்காலத்தில் அந்தப் பயிற்சி நாம் எடுத்த பயிற்சி போன்று கடுமையானதாக இல்லை. சேஸ் மான்ஹாட்டன் வங்கியில் நான் பெற்ற அந்தக் கடுமையான உயர்தரப் பயிற்சிக்கு என்றுமே நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அது எனது பகுப்பாய்வுத் திறமையை பன்மடங்கு மெருகேற்றி உயர்த்தியது. எனது அடுத்த நகர்வான “தொழில் நுட்ப நிதிப் பகுப்பாய்வாளர்” என்ற பதவியில் என்னைச் சரியாக நிலை நிறுத்திக்கொள்ள மேற்சொன்ன பயிற்சியும், வோற்ரன் பள்ளியில் நான் பெற்றுக் கொண்ட எம்.பி.ஏ. பட்டமும், சசெக்ஸ் பல்கலைக்கழகப் பொறியியல் படிப்பும் எனக்குப் பெரிதும் உதவின.

சேஸ் மான்ஹாட்டன் வங்கியில் பயிற்சித் திட்டத்தை முடித்து விட்டு, மின்னணுவியல் நிறுவனங்களைக் கையாளும் பிரிவில் பதவியில் அமர்ந்தேன். 1980 களில் வர்த்தக வங்கிகளும் முதலீட்டு வங்கிகளும் தொழில்ரீதியாக ஒன்றுக்கொன்று நேர்மாறான முறைகளையும் பண்புகளையும் கொண்டிருந்தன. வர்த்தக வங்கிகள் அவசரத்தைத் தவிர்த்து நிதானமாகச் செயற்பட்டன. வர்த்தக வங்கிகளின் அலுவலர்கள் குறைந்த நேரமே வேலை செய்தார்கள். இதனால் “வங்கியாளர்களின் நேரம்” என்றொரு மரபுத்தொடரே உருவாகியிருந்தது.

பெரும்பாலான நாட்களில், சேஸ் மான்ஹாட்டன் போன்ற வர்த்தக வங்கிகளின் ஊழியர்கள் மாலை ஐந்து மணியளவில் வேலைத்தளத்திலிருந்து வெளியேறிவிடுவார்கள். அந்திப் பொழுதுகளில் இவர்கள் வேலை செய்வது அரிது. வாரயிறுதி நாட்களில் வேலை செய்வதே இல்லை. வர்த்தக வங்கி கலாசாரம் ஒரு கனவானின் போக்கை ஒத்திருந்தது. இதற்கு நேர்மாறாக, முதலீட்டு வங்கியின் கலாசாரம் துடிப்பாகவும் முனைப்பாகவும் இருந்தது. எனவே, நான் துடிப்பும் தொழில் முனைப்பும் கொண்ட முதலீட்டு வங்கித்துறைக்கு ஈர்க்கப்பட்டேன். முக்கியமாக, முதலீட்டு வங்கிகளுக்கும் பங்குச் சந்தை வணிகத்திற்கும் இடையே நேரடியான பாதையிருந்தது. எனது பயிற்சிக்கும் படிப்புக்கும் ஏற்ப எனது அறிவையும் திறமையையும் பயன்படுத்த வேண்டிய இடம் சேஸ் மான்ஹாட்டன் வர்த்தக வங்கியல்ல. மாறாக, மின்னல் வேகத்தில் தெறிக்கும் பங்குச் சந்தையில் முதலீடுகளைச்

செய்யும் முதலீட்டு வங்கிகள் உள்ள வால் ஸ்ட்ரீட்டே நான் சென்றடைந்து வெற்றிகரமாக இயங்க வேண்டிய இடம் என்று விரைவிலேயே உணர்ந்து கொண்டேன்.

## நீடம்

இரண்டு வருடங்கள் சேஸ் மான்ஹாட்டன் வர்த்தக வங்கியில் பணியாற்றிய பின்பாக, 1985 ஆம் ஆண்டு, செப்டெம்பர் மாதம், நான் அங்கிருந்து விலகி, புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்த “நீடம்” நிறுவனத்தில் பணிக்குச் சேர்ந்து கொண்டேன்.

நீடம் நிறுவனத்தில் எனது பணி “செமி கொண்டக்டர்” எனப் படும் குறைக்கடத்திகள் உற்பத்தித் தொழிற்துறையைக் குறித்து ஆராய்ந்து, அந்தத் துறையிலுள்ள நிறுவனங்களின் எதிர்கால வருவாயைக் குறித்த பகுப்பாய்வுகளைச் செய்து அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதாகும். இதன் மூலம் அத்துறையிலுள்ள நிறுவனங்களுடைய பங்குகள் எதிர்காலத்தில் எத்தகைய ஏற்ற இறக்கங்களைச் சந்திக்கவுள்ளன என்பது குறித்த விவரங்கள் எமது நிறுவனத்தின் வாடிக்கையாளர்களான நிதி மேலாளர்களுக்கு வழங்கப்பட்டன. அவர்கள் எமது நிறுவனத்திற்கூடாகப் பங்குகளை வாங்குவார்கள் அல்லது விற்பார்கள்.

இதுதான் நான் கனவுகண்ட வேலை. எனது படிப்புக்கும் பயிற்சிக்கும் ஏற்ப பொறியியல், நிதிப் பகுப்பாய்வு, நான் பேரார்வம் கொண்டிருக்கும் பங்கு வணிகம் ஆகியவற்றை உள்ளடக்கிய மிகப் பொருத்தமான வேலை. நவீன மின்னணுவியலுக்கு குறைக்கடத்தி சிலிக்கன் பளிங்குகளே அடித்தளமாகவிருக்கின்றன. 1980 களின் நடுப்பகுதியில் மடிக் கணினிகளின் பெருக்கத்தால், இந்தத் துறை வேகமாக வளர்ச்சியடைந்தது. குறைக் கடத்தி உற்பத்தியில் புதிய தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சிலிக்கன் பள்ளத்தாக்கு அபார வளர்ச்சியடைந்தது. புதிய புதிய தொழில் நிறுவனங்கள் தோன்றின. இந்தத்துறையில் செல்வம் கொழித்துக் கொட்டியது.



சேஸ் மான்ஹாட்டன் வர்த்தக வங்கி
Image Source - en.wikipedia.org

நீடம் நிறுவனத்தில் என்னுடைய பணியை இரண்டாகப் பிரிக்கலாம். நான் ஆய்வு செய்யும் நிறுவனத்தின் நிதி நிர்வாகத் தரவுகளை முதலில் பகுப்பாய்வு செய்வேன். எனது நேரத்தின் பெரும் பகுதியை நிறுவனங்களின் உத்தியோகபூர்வ நிதி அறிக்கைகளை துருவிப் பார்த்தல், நிறுவனத்தினுடைய பங்குகளின் பெறுமதி அலைவுறும் திசையைக் கணிப்பது, சிலிக்கன் பள்ளத்தாக்கின் தொழில்நுட்ப வளர்ச்சிகளைக் குறித்துச் சஞ்சிகைகளிலும் செய்தித்தாள்களிலும் வரும் கட்டுரைகளைக் கவனமாக வாசித்துக் குறிப்புகளை எடுப்பது என்பவற்றிலேயே செலவிட்டேன். ஒரு நிறுவனத்தின் அனைத்துத் தரவுகளையும் திரட்டிக்கொண்ட பின்பாக, அந்த நிறுவனத்திற்குச் சென்று அதிகாரிகளைச் சந்திப்பேன். மாதம் ஒரு முறை நான் சிலிக்கன் பள்ளத்தாக்குக்குச் செல்வேன். அங்கு குறைக்கடத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் முதன்மை நிர்வாகிகளுடனும் அவர்களுடைய போட்டியாளர்களுடனும் சந்திப்புகளை

மேற்கொள்வேன். நிர்வாகிகள் என்னிடம் சொல்லும் தரவுகள் நம்பகமானவையா எனப் பல வழிகளிலும் குறுக்கு விசாரணைகளில் ஈடுபடுவேன்.

நிறுவனங்களின் தலைமை நிறைவேற்று அதிகாரிகளைச் சந்திப்பது எனக்கு மிகவும் பிடித்தமான வேலையாகவிருந்தது. அவர்களிடமிருந்து நான் ஏராளமாகக் கற்றுக் கொண்டேன். நான் சிலிக்கன் பள்ளத்தாக்குக்குச் செல்லும் போதெல்லாம், நாளொன்றுக்கு நான்கு அல்லது ஐந்து சந்திப்புக்களை தலைமை நிறைவேற்று அதிகாரிகளுடன் ஏற்படுத்துவேன். வாரத்திற்கு அண்ணளவாக இருபது சந்திப்புக்கள் நடந்தேறின. வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் 3.30 மணி விமானத்தைப் பிடித்து, வாரயிறுதியை எனது குடும்பத்தினருடன் செலவிடுவதற்காக நியூயோர்க் திரும்பிவிடுவேன். அந்த விமானப் பயணத்தில், அந்த வாரம் முழுவதும் நான் கற்றுக்கொண்டவற்றை எழுதி வைப்பேன். குறிப்பாக, எனது பகுப்பாய்வுகளைத் தொடருவதற்குத் தேவையான தரவுகளைத் தொகுத்து எழுதிக் கொள்வேன். இந்த வழக்கத்தை எனது பணிக்காலம் முழுவதுமே நான் தவறாமல் கடைப்பிடித்தேன். பிற்காலத்தில், நான் ஆரம்பித்த கலியன் நிறுவனம் துரிதகதியில் வளர்ச்சியடைந்த போதும் ஒவ்வொரு தொழில்சார் பயணத்திலிருந்தும் வீடு திரும்புகையில் பறக்கும் விமானத்திற்குள்ளிருந்து குறிப்புக்களைத் தொகுத்து எழுதி வைப்பேன்.

நீடத்தில் எனது வேலையில் நான் சிறப்பாகச் செயற்பட்டதால், மிக விரைவிலேயே முதலீட்டு ஆய்வு இயக்குநராகப் பதவி உயர்வு பெற்றேன். நிறுவனத்தின் அனைத்துத் துறைகளிலும் ஆய்வுகளுக்கான தலைமைப் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. தொழில்நுட்பம், சுகாதாரச் சேவை, நுகர்வோர் சேவை ஆகிய மூன்று துறைகளில் எங்களது முதலீட்டு ஆய்வுகளை நடத்தினோம். புதிய பொறுப்பு பல்வேறு நிறுவனங்களைப் பற்றிப் பயனுள்ள நுண்ணறிவை எனக்கு வழங்கியது. இந்தத் துறைகளில் வேகமாக



ஜோர்ஜ். ஏ. நீடம்

Image Source - www.needhamfnds.com

அபிவிருத்தியடைந்துவரும் போக்குகளையும் விளங்கிக்கொள்ள முடிந்தது. இந்தப் படிப்பினைகள் பிற்காலத்தில் நான் ஆரம்பிக்கவிருந்த என்னுடைய சொந்த முதலீட்டு நிறுவனம் இந்தத் துறைகளில் முதலீடு செய்வதற்குப் பேருதவியாக அமைந்தன.

நீடத்தின் நிறுவனர் ஜோர்ஜ் நீடம் அவர்கள் நிறுவனத்தின் வருமானத்தில் 50 சதவீதத்தை ஊழியர்களுக்குப் பகிர்ந்தளித்தார். அத்தோடு, சகல ஊழியர்களுக்கும் நிறுவனத்தின் பங்குதாரர்களாகும் வாய்ப்பையும் வழங்கினார். அந்த நிறுவனம் தமக்கே உரியது என்று ஊழியர்கள் எண்ணும்படி உற்சாகமூட்டினார். நீடம் நிறுவனத்தின் கலாசாரம் எல்லோருக்கும் ஏற்புடையதாக இருக்கவில்லை என்பதும் உண்மை. சில பெரிய நிறுவனங்களிலிருந்து நீடத்துக்கு வேலைக்கு வந்தவர்கள், இந்தச் சிறிய நிறுவனத்தின் கலாசாரத்தை விரும்பவில்லை. திறமை இல்லாதவர்கள் ஒளிந்துகொள்வதற்கு இங்கே எந்த இடமும் இல்லை.

இங்கே ஒருவர் அதிகமாக உழைத்தால் அதிகமான கொடுப்பனவைப் பெறுவார்.

அப்படி இல்லாவிட்டால் அடிப்படை ஊதியத்தைப் பெறுவதோடு திருப்தியடைய வேண்டியதுதான். தொடக்கத்தில், அடிப்படைச் சம்பளம் வருடத்திற்கு 60,000 டொலர்களாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. மேலதிகக் கொடுப்பனவு வேலைத்திறனையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. நீடம் சிறிய நிறுவனம் என்பதால், ஏனைய வால் ஸ்ட்ரீட் சம்பளங்களோடு ஒப்பிடும் போது, நீடம் நிறுவனத்தில் அடிப்படைச் சம்பளம் 25% அல்லது 30% குறைவாகவேயிருந்தது. ஆனால், நீடத்தின் பங்குகளை உடைமையாகப் பெறுவது என்ற வகையில் மற்றைய நிறுவனங்களை விட மொத்தத்தில் கொடுப்பனவு அதிகமாகவேயிருந்தது. எனினும், நீடம் நிறுவனத்தின் ஊழியர்களில் பலர் பங்குடமை குறித்து எவ்விதமான ஆர்வமும் கொள்ளவில்லை என்பதைக் கண்டு நான் வியப்படைந்தேன். பங்குகளில் அல்லாமல் அவர்கள் சம்பளத்தில்தான் ஆர்வம் கொண்டிருந்தனர். இது வால் ஸ்ட்ரீட்டின் குறுகிய காலப் பணிக் கலாசாரத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது. உயர்ந்த பதவியும் கூடிய ஊதியமும் கொடுக்கும் நிறுவனங்களுக்குச் சட்டெனத் தாவிவிடுவதே அவர்களின் வழக்கமாக இருந்தது.

1992 ஆம் ஆண்டு, நான் ஏழு வருடங்கள் நீடத்தில் பணியாற்றியதன் பின்பாக, அதன் தலைவராகப் பதவி உயர்வு பெற்றேன். அப்போது எனக்கு முப்பத்தைந்து வயது. முதலீட்டுக் குழுமத்தை இயக்குவது ஜோர்ஜ் நீடத்தின் பொறுப்பாக இருந்தது. வணிகம், ஆய்வு என்பவற்றை உள்ளடக்கியிருந்த மூலதனச் சந்தைக்கு நான் பொறுப்பாக இருந்தேன்.

சிலிக்கன் பள்ளத்தாக்கு நிறுவனங்களுடனான என் தொடர்பாடல்கள் மூலமாக நான் ஒன்றை அறிந்துகொண்டேன். அதாவது, சம்பளம் பெறுவதைக் காட்டிலும் பங்குகளைப் பெற்றுக் கொள்வதிலுள்ள பயனைத் தெரிந்துகொண்டேன். அக்காலத்தில், சிலிக்கன் பள்ளத்தாக்கு ஊழியர்களில் ஏராளமானோர் தமது நிறுவனங்களின் பங்குகளைப் பெற்று மில்லியனர்களாக உயர்ந்தார்கள். ஆனால், தமது சம்பளத்தில் மட்டுமே கண்ணாக விருந்த ஊழியர்களுக்கு இந்த அதீத முன்னேற்றம் நிகழவில்லை.

நான் நீடம் நிறுவனத்தில் பன்னிரண்டு வருடங்கள் பணியாற்றினேன். ஜோர்ஜ் நீடம் அவர்கள் என்னைக் கண்ணியமாக நடத்தியதுடன், முக்கியமான பொறுப்புகளையும் எனக்கு வழங்கியிருந்தார். நிறுவனத்தின் இயக்குநராக நான் உயர்ந்த போது, எனக்கு விருப்பமில்லாத வேலையொன்றையும் நான் செய்ய வேண்டியிருந்தது. நீடம் நிறுவனத்தைவிட அதிக சம்பளம் வழங்கிய நிறுவனங்களுக்கு நீடம் ஊழியர்கள் தாவிவிடாமல் தடுப்பதே அந்த விருப்பமில்லாத வேலையாகும். நான் ஊழியர்களிடம் விசுவாசம் பற்றிப் பேசியபோது "ராஜ்... நானொரு விசுவாசம் மிக்க மனிதன்தான். ஆனால், விசுவாசத்தைக் காட்டிலும் முக்கியமானது எனது குடும்பம். குடும்பத்தினரின் நன்மைக்காக நான் அதிக ஊதியத்தைத் தேடிச் செல்வது எனது கடமையாகும்" என்பதுவே எனக்குப் பதிலாகக் கிடைத்தது. இதற்கு என்னால் எந்தச் சமாதானத்தையும் கூற முடியவில்லை. நீடத்தில் ஊழியர்களைத் தக்கவைப்பது என்பது மிகவும் சவாலாகவும் எனக்கு பிடிக்காத வேலையாகவுமிருந்தது.

1992 ஆம் ஆண்டு, நான் ஏழு வருடங்கள் நீடத்தில் பணியாற்றியதன் பின்பாக, அதன் தலைவராகப் பதவி உயர்வு பெற்றேன். அப்போது எனக்கு முப்பத்தைந்து வயது. முதலீட்டுக் குழுமத்தை இயக்குவது ஜோர்ஜ் நீடத்தின் பொறுப்பாக இருந்தது. வணிகம், ஆய்வு என்பவற்றை உள்ளடக்கியிருந்த மூலதனச் சந்தைக்கு நான் பொறுப்பாக இருந்தேன்.

நீடத்தின் பங்குச் சந்தை வணிகர்களுக்கும் வால் ஸ்ட்ரீட்டின் ஏனைய நிறுவனங்களின் பங்குச்சந்தை வணிகர்களுக்கும் இடையில் எந்த வித்தியாசமும் இல்லை. பங்குச் சந்தை

வணிகர்கள் பெரும்பாலும் சூதாடிகளாக இருந்தார்கள். அவர்கள் விளையாட்டுகளிலும் குதிரைகளிலும் பந்தயங்கள் கட்டுவதோடு நின்றுவிடாமல், பொதுவாக எல்லாவற்றிலுமே சூதாடுவார்கள். ஒரு நிமிடத்திற்குள் பதினைந்து ஐஸ்கிரீம்களை ஒருவரால் சாப்பிட முடியுமா? இல்லையா? என்றுகூடப் பந்தயம் கட்டுவார்கள். தங்களது ஓய்வு நேரங்களைக் கழிப்பதற்காகச் சூதாட்டத்திற்குப் புகழ்பெற்ற அட்லாண்டிக் நகரத்திற்கோ அல்லது லாஸ் வேகஸ் நகரத்திற்கோ போவார்கள். ஆனால், அவர்கள் வேலை நாட்களில் கண்களைக் கூட இமைக்காமல் பங்குச் சந்தையைக் கவனித்துக்கொண்டிருப்பார்கள். உணவு வேளைகளில் கூடத் தமது இருக்கைகளை விட்டு அகலமாட்டார்கள். அங்கிருந்தபடியே அவசர அவசரமாக உணவை அள்ளி விழுங்குவார்கள். பிற்பகல் நான்கு மணிக்குப் பங்குச் சந்தை மூடப்பட்டதுதான் தாமதம், அவர்கள் மாயமாகிவிடுவார்கள்.

பங்குச் சந்தை வணிகர்களைக் கண்காணிப்பது மிகவும் கடினம். வணிகர்களை வணிகர்களாக இருக்கவிடுவதே சரியானது என்று நான் கற்றுக்கொண்டேன். அவர்களைக் கண்ணியமானவர்களாகவும் சாந்தமானவர்களாகவும் நான் மாற்றப் போவதில்லை. அவர்கள் பிடிவாதமான அபிப்பிராயங்களைக் கொண்டவர்களாகவும் உரத்த தொனியில் முரட்டுத்தனமாகப் பேசுபவர்களாகவும் இருந்தார்கள். கடுமையான அழுத்தத்திற்கு மத்தியிலிருந்து அவர்கள் வேலை செய்வதால் கத்துவதும் கூச்சலிடுதும் அவர்களது கலாசாரமாக இருந்தது. பங்குச் சந்தை வணிகர்களைத் திரைப்படங்களும், தொலைக்காட்சித் தொடர்களும் பேராசைக்காரர்களாகச் சித்திரித்தன. எனது வழக்கு விசாரணையின்போது, இத்தகைய சித்திரிப்புக்கள் அரசுத் தரப்பு வழங்குரைஞர்களுக்குச் சாதகமாகயிருந்தன. அவர்கள் ஜூரிகள் சபையின் முன்னே, திரைப்படங்களின் கற்பனைப் பாத்திரங்களை உதாரணங்கள் காட்டித் தமது நாக்குகளைச் சாட்டையாகச் சொடுக்கினார்கள்.

ஆனால், உண்மை என்னவென்றால், பங்குச் சந்தை வணிகர்கள் முற்றிலும் வேறானவர்கள். தொழிலில் தீவிரமும் வெறியும் கொண்டவர்கள். பங்குச் சந்தையில் ஏற்படும் விறுவிறுப்புக் கொண்ட வேகமான போட்டிகளை விரும்பியவர்கள். அவர்கள் போட்டியின் விதிகளை நன்கு அறிந்திருந்தார்கள். கிடைக்கும் வெற்றிகளைக் கௌரவமாகவும் உற்சாகமாகவும் கொண்டாடினார்கள். இந்த வணிகர்களைப் பற்றிப் பொதுவெளியில் நிலவிய கேலியான விமர்சனங்களுக்கு மாறாக, இவர்களுடைய தொழிலில் கொள்கைகளும் இறுக்கமான விதிகளும் இருந்தன.

கடும் உத்வேகத்தோடிருக்கும் பங்குச் சந்தை வணிகர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவர்கள் பகுப்பாய்வாளர்கள். இவர்கள் நிதானமானவர்களாகவும் கற்பதில் ஆர்வம் உள்ளவர்களாகவும் ஆழமான ஆய்வுத்திறனுடனும் இருப்பார்கள். இவர்களுடன் வேலை செய்வது எனக்கு இனிமையான அனுபவமாகவே இருக்கும். நான் சில தெற்காசியர்களைப் பகுப்பாய்வாளர்களாக நீடம் நிறுவனத்தில் நியமித்தேன். அவர்கள் மிகத் திறமையானவர்களாகவும் வால் ஸ்ட்ரீட்டில் தோன்றும் சவால்களைச் சாமர்த்தியமாக எதிர்கொள்பவர்களாகவும் இருந்தார்கள்.

1980 - 2000 காலப்பகுதியில் வால் ஸ்ட்ரீட்டில் தெற்காசியர்கள் அரிதாகவே பணியிலிருந்தார்கள். ஆனால், நீடம் நிறுவனத்தில் பணியாற்றிய பதினைந்து பகுப்பாய்வாளர்களில் ஐவர் தெற்காசியர்களாக இருந்தார்கள். நான் தெற்காசியர்களுக்கு முன்னுரிமை கொடுத்துப் பணிகளில் அமர்த்துகிறேன் என்று கூட அலுவலகத்தில் ஒரு சலசலப்பு ஏற்பட்டது. இது குறித்து ஜோர்ஜ் நீடம் என்னிடம் கேட்டபோது, நீடம் நிறுவனத்தில் நிதித்துறை முழுமையாகவே ஆங்கிலோ சாக்ஸன் வெள்ளையர்களாலேயே நிரப்பப்பட்டிருப்பதையும், நிறுவனத்தின் பங்குச் சந்தை வணிகர்கள் எல்லோருமே யூத இனத்தைச் சேர்ந்த ஆண்கள் என்பதையும் அவரிடம் சுட்டிக் காட்டினேன். “நான் வேலைக்கு அமர்த்தியிருக்கும் தெற்காசியப் பகுப்பாய்வாளர்கள் தங்களது வேலையைத் திறம்படவே செய்கிறார்கள். இதில் என்ன பிரச்சனை உள்ளது?” என்று திருப்பிக்

கேட்டேன். ஜோர்ஜ் நீடம் அமைதியாகிவிட்டார். அவர் பொதுவாகவே யதார்த்த நிலவரங்களுக்கு இணங்கிச் செயற்படுபவர்.

நீடம் நிறுவனத்தில் இருந்த கடும் உழைப்பாளிகளான அலுவலர்களைப் போலவே, ஜோர்ஜ் நீடமும் கடுமையாக உழைத்தார். நான் அவரிடமிருந்து பலவற்றைக் கற்றுக் கொண்டேன். தொழிலைப் பொறுத்தளவில் அவரிடம் நல்லொழுக்கமும் திடமான மனவுறுதியும் காணப்பட்டன. இவை தொழிலில் நீடித்து நிற்பதற்கும் வெற்றிகரமாக இயங்குவதற்குமான அடிப்படைப் பண்புகளாகும். அவரிடம் நான் கற்றுக்கொண்ட இத்தகைய பண்புகள் முப்பத்தைந்து வருடங்களுக்குப் பின்னரும் எனக்கு நல்ல பயனைத் தருகின்றன. காலப்போக்கில், பல நிறுவனங்கள் தடயமே இல்லாமல் அழிந்தபோதும், நீடம் நிறுவனம் தொடர்ந்தும் வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கிறது.

## நீடத்திலிருந்து வெளியேறுதல்

நீடம் நிறுவனத்தில் எனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்புகளைத் தாண்டி முன்னே செல்ல நான் திட்டமிட்டேன். முதலீட்டு நிதி மேலாளராக ஆகிவிட விரும்பினேன். பங்குச் சந்தையில் இறங்கிப் பணம் ஈட்டுவதைக் குறித்துத் தீவிரமாகச் சிந்தனை செய்யத் தொடங்கினேன். நீடம் நிறுவனத்தில் ஒரு முதலீட்டு நிதியத்தை உருவாக்கி, எனது முதலீட்டு ஆய்வு அனுபவத்தைப் பயன்படுத்துவதற்கான முன்னெடுப்புகளில் சுறுசுறுப்பாக இறங்கினேன். 1992 ஆம் ஆண்டு, நன்கு அறிந்திருந்த சிலிக்கன் பள்ளத்தாக்குப் பங்குச் சந்தையில், நீடம் நிறுவனம் சார்பாக ஒரு முதலீட்டு நிதியத்தைப் பதினைந்து மில்லியன் டொலர்கள் மூலதனத்தோடு ஆரம்பித்தோம்.

இந்த முதலீட்டு நிதியம் மிக நன்றாகச் செயற்பட்டது. பதினைந்து மில்லியன் டொலர்கள் மூலதனம் நான்கே நான்கு வருடங்களில் இருநூற்றைம்பது மில்லியன் டொலர்களாக வளர்ச்சியுற்றது. எனக்குத் தொழிலில் இருந்த பேரார்வமே இந்த வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணியாக அமைந்தது. தினமும் பயனுள்ள தரவுகளைத் தேர்ந்தெடுக்கும் சவாலும், திரட்டிய பல்வகைத் தரவுகளையும் தொகுத்துக் கூர்மையாக ஆராய்ந்து முதலீட்டைச் செய்யும் நுட்பமும் எனக்கு உற்சாகத்தையும் திருப்தியையும் கொடுத்தன.

ஜோர்ஜ் நீடம் எனக்கு வால் ஸ்ட்ரீட்டுக்குள் நுழையச் சந்தர்ப்பம் அளித்ததோடு, என்னை மரியாதையுடன் நடத்தி வந்தார். எனக்கு நிறுவனத்தில் பொறுப்புக்கு மேல் பொறுப்பாகக் கொடுத்து உயர வைத்தார். சிலிக்கன் பள்ளத்தாக்கிலுள்ள ஆற்றலும் ஊக்கமும் கொண்ட தொழிலதிபர்களுடன் நான் நெருக்கமாகப் பழகி வேலை செய்ததால், நானும் அவர்களைப் போன்று ஒரு தொழிலதிபர் ஆக வேண்டும் என்று மனதார விரும்பினேன். முதலீட்டு மேலாண்மையில் மட்டுமே என்னுடைய கவனத்தைக் குவித்தேன். எனவே, எனக்கு முப்பத்தொன்பது வயதானபோது, நீடம் நிறுவனத்திலிருந்து விலக முடிவெடுத்தேன். நான் அங்கே பன்னிரண்டு வருடங்கள் பணியில் இருந்திருக்கிறேன்.

1996 நவம்பர் மாதத்தில், ஜோர்ஜ் நீடம் அவர்களிடம் வருட முடிவில் நான் நீடம் நிறுவனத்திலிருந்து விலகி, எனக்கெனச் சொந்தமாக முதலீட்டு நிதியமொன்றை ஆரம்பிக்கப் போவதாகச் சொன்னேன். நான் பணியிலிருந்து விலகுவதைக் குறித்து ஜோர்ஜ் நீடம் அவர்கள் நிறுவன ஊழியர்களுக்கு அறிவிப்புச் செய்த கடிதம் பின்வருமாறு:

“எனது நண்பரும் பங்காளியுமான ராஜ் ராஜரட்ணம் இந்த வருட இறுதியில், எமது நிறுவனத்தை விட்டு விலகிச் செல்கிறார் என்பதைக் கவலையுடன் அறியத் தருகிறேன். அவர் நியூயோர்க்கில் சொந்தமாக ஒரு முதலீட்டு நிதியத்தை ஆரம்பிக்கத் திட்டமிட்டிருக்கிறார். 1985 ஆம் ஆண்டு எமது நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டபோது, ராஜ் ராஜரட்ணம் எங்களோடு இணைந்துகொண்டார். அதற்கு முன்னே, சேஸ் மான் ஹாட்டன் வங்கியில் அவர் நிதிப் பகுப்பாய்வாளராகப் பணியில் இருந்தார்.

ராஜ் ராஜரட்ணம் அவர்கள் நீடம் நிறுவனத்தில்

பகுப்பாய்வாளர், தலைமை நிர்வாகி, இயக்குநர் சபை உறுப்பினர், தலைவர் ஆகிய பதவிகளை ஏற்றுத் திறம்படப் பணியாற்றியுள்ளார். குறிப்பாக, எமது வாடிக்கையாளர்களுடன் நெருக்கமானதும் சுமூகமானதுமான தொடர்பைப் பேணிவந்துள்ளார்.

நான் அறிந்த பகுப்பாய்வாளர்களில் இவரே மிகச் சிறந்தவர். பங்குச் சந்தைகள் குறித்து ஆராய்ந்து விளங்கிக் கொள்வதில் இவருக்கு இணையான எவரையுமே நான் கண்டதில்லை. எமது நிறுவனத்தையும், முதலீட்டு நிதியத்தையும் கட்டியெழுப்புவதில் இவருடைய அர்ப்பணிப்பான உழைப்பு மகத்தானது. இவருடைய பங்களிப்பின்றி எமது நிறுவனத்தின் மாபெரும் வெற்றியை நாம் அடைந்திருக்கவே முடியாது. இவர் எமது நிறுவனத்தில் பல்வேறு பதவிகளை வகித்தாலும், இவருடைய முதன்மை ஆர்வம் முதலீட்டு மேலாண்மையே என்று உணர்ந்துள்ளார்.

எனவே, தனது கவனம் முழுவதையும் அந்த துறையிலேயே செலுத்த தீர்மானித்துள்ளார். அவர் எமது நிறுவனத்தில் வருட இறுதிவரை பணியாற்றி, தகுதியானவர்களிடம் பொறுப்புகளை ஒப்படைத்துச் செல்வார். ராஜ் ராஜரட்ணம் தொடர்ந்தும் நீடம் நிறுவனத்தின் பங்காளிகளில் ஒருவராக இருப்பார்.

நீங்கள் எல்லோரும் என்னோடு இணைந்து ராஜ் ராஜரட்ணம் அவர்களுடைய பங்களிப்புக்கு நன்றியும், அவரது புதிய முயற்சியில் பெருவெற்றி பெற வேண்டுமென்று வாழ்த்துகளும் சொல்வீர்கள் என்று நம்புகிறேன்."

**நீடம் சிறிய நிறுவனம் என்பதால், ஏனைய வால் ஸ்ட்ரீட் சம்பளங்களோடு ஒப்பிடும் போது, நீடம் நிறுவனத்தில் அடிப்படைச் சம்பளம் 25% அல்லது 30% குறைவாகவேயிருந்தது. ஆனால், நீடத்தின் பங்குகளை உடைமையாகப் பெறுவது என்ற வகையில் மற்றைய நிறுவனங்களை விட மொத்தத்தில் கொடுப்பனவு அதிகமாகவேயிருந்தது.**

நீடம் நிறுவனத்தில் நான் பெற்ற அனுபவங்கள் உண்மையிலேயே விலை மதிப்பற்றவை. எனது சொந்த நிறுவனமான கலியனை நான் ஆரம்பித்தபோது, அந்த அனுபவங்கள் எனக்கு அத்திவாரங்களாக அமைந்தன. ஒரு நிறுவனம் நன்கு வளர்ச்சியடைய வேண்டுமென்றால், முதுநிலை ஊழியர்களுக்கு உயர்ந்த ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பதை நான் ஜோர்ஜ் நீடம் அவர்களிடமே கற்றுக்கொண்டேன். அத்தோடு, ஆக்கத்திறன் இல்லாதவர்களைக் களையெடுக்க வேண்டுமென்றும் அறிந்து கொண்டேன். ஊழியர்கள் சொல்வதை நீங்கள் செவிமடுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட விடயத்தை அவர்கள் விரும்பாவிட்டாலோ அல்லது அதனில் மாற்றம் வேண்டுமென எண்ணினாலோ, அது குறித்துத் தொழில்சார் அறத்துடன் அவர்களோடு கலந்தாலோசிக்க வேண்டும். நான் இதை எப்போதும் கடைபிடித்தேன். எனது ஊழியர்கள் சொல்வதைச் செவிமடுப்பதற்காக எனது காதுகளை எப்போதும் திறந்தே வைத்திருந்தேன்.

மாறாக, எனது ஊழியர்கள் என்னை அச்சுறுத்தினால், வேலையிலிருந்து இராஜினாமா செய்யப்போகிறேன் எனப் பயமுறுத்திப் பார்த்தால் "அதிஷ்டம் உண்டாகட்டும்" எனச் சொல்லி அவர்களை வாழ்த்தி வழியனுப்பிவிட்டு எனது பணியைத் தொடர்வேன். கடுமையான அல்லது முரட்டுத்தனமான அணுகுமுறைகளால் என்னை ஒருபோதுமே வளைக்க முடியாது. என்னுடைய இத்தகைய மனவுறுதியைப் பின்னொரு நாளில் அமெரிக்க நீதித்துறை ஆச்சரியத்துடன் பார்த்தது.

(தொடரும்)

இலங்கையில் பண்பாட்டுத் தனித்துவம் கொண்ட பல்வேறு நிலப்பரப்புகளுள் கிழக்கு மாகாணத்தின் கீழைக்கரை எனும் நிலப்பரப்பும் ஒன்றாகும். இந்நிலப்பரப்பு ஒரு நெடிய பாரம்பரியத்தையும், ஆதிவேரான பழங்குடிகளின் தொல்மரபையும் கொண்டமைந்துள்ளது. அவ் வரலாற்றை சிங்கள வரலாற்றாதாரங்களுடன் ஒப்பிட்டு, நவீன ஆய்வுப்பார்வையில் எழுதும் முயற்சியே 'ஈழத்துக் கீழைக்கரை: ஒரு வரலாற்றுப் பார்வை' என்ற இத்தொடராகும். இதன்படி, இலங்கையின் கிழக்கு மாகாணம் எனும் அரசியல் நிர்வாக அலகின் பெரும்பகுதியையும் அப்பகுதியைத் தாயகமாகக் கொண்ட மக்களின் பண்பாட்டையும் வரலாற்று ரீதியில் இது ஆராய்கிறது. கிழக்கிலங்கையின் புவியியல் ரீதியான பண்பாட்டு வளர்ச்சியையும், அங்கு தோன்றி நிலைத்திருக்கும் தமிழர், சோனகர், சிங்களவர், ஏனைய குடிகள் போன்றோரின் வரலாற்றையும், இன்றுவரை கிடைத்துள்ள சான்றுகளை வைத்துத் தொகுத்துக் கூறும் தொடராக இது அமைகிறது.



# மகாசேனன் காலம் வரை கிழக்கு உரோகணம்


விவேகானந்தராஜா
துலாஞ்சனன்

விவேகானந்தராஜா துலாஞ்சனன் அவர்கள் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் மூலக்கூற்று உயிரியலும் உயிர் இரசாயனவியலும் கற்கைநெறியில் இளமாணிப் பட்டம் பெற்றவர். அதே பல்கலைக்கழகத்தின் பட்டக்கற்கைகள் பீடத்தில் பொது நிர்வாகமும் முகாமைத்துவமும் துறையில் முதுமாணிக் கற்கையைத் தொடர்கிறார்.


இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாகக் கடமையாற்றும் இவர் தற்போது மட்டக்களப்பு போரதீவுப்பற்று வெல்லாவெளி பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளராகப் பணி புரிகிறார்.

இலங்கை சைவநெறிக்கழக வெளியீடான 'அலகிலா ஆடல்: சைவத்தின் கதை' எனும் சைவ வரலாற்று நூலையும் (2018), தனது திருமண சிறப்புமலராக 'மட்டக்களப்பு எட்டுப் பகுதி' நூலையும் (2021) வெளியிட்டுள்ளார்.


அனுராதபுரத்தை ஒரு அரசன் ஆளும் போது அவனுக்கு அடுத்து அரசராகத் தகுதி உடைய அரசரின் நெருங்கிய உறவினன் ஒருவன் 'உபராசன்' என்ற பெயரில் மகாவலி கங்கைக்கு கிழக்காக இருந்த உரோகணப் பகுதியை ஆள்வது வழக்கமாக இருந்தது. உரோகணத்தின் முதன்மையான நகரங்களாக சம்மாந்துறைப்பற்று தெற்கு தீகவாவியும், அம்பாந்தோட்டையின் மாகம்பற்று மாகாமமும் (இன்றைய கிரிந்த) திகழ்ந்தன. இவற்றில் ஒன்றையே அனுராதபுரத்தின் உபராசன் தன் ஆட்சித்தானமாகக் கொண்டிருந்திருக்கிறான். சில சந்தர்ப்பங்களில் அனுரையின் மேலாதிக்கத்தை நீங்கி உரோகண அரசர்கள் சுயாட்சி செலுத்தியதும் நிகழ்ந்திருக்கிறது.

பொமு 2 ஆம் நூற்றாண்டுக்கும் பொபி முதலாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் கீழைக்கரையின் தீகவாவி மாத்திரமன்றி, அதன் தென் மேற்கே அமைந்துள்ள விந்தனைப்பற்று வடக்கு (உகண) இராசக்கல் மலையைச் சூழ்ந்த பகுதி, வடக்கே அமைந்திருந்த ஏறாவூர்ப்பற்றுப் (செங்கலடி) பகுதி என்பனவும், அதன் தெற்கே அமைந்திருந்த பாணமைப்பற்றுப் பகுதியும் கூட குறிப்பிடத்தக்க மக்கள் தொகையினருடன் முக்கியமான குடியிருப்புகளாகத் திகழ்ந்திருந்தன. இங்கெல்லாம் வாழ்ந்த மக்களில் பலர் புத்த சமயத்தைத் தழுவியிருந்ததுடன், அச் சமயத் துறவிகளை நன்கு ஆதரிப்போராகவும் காணப்பட்டனர். பேரா. பத்மநாதனின் கருதுகோளின் படி, அங்கிருந்த நாகரில் பலர் தொடர்ந்தும் நாக வழிபாட்டினராகவும் சைவராகவும் இருந்ததுடன், கைத்தொழில்களும் நெற்செய்கையும் இப்பகுதிகளில் செழித்திருக்கிறது (பத்மநாதன்,

*2016:341 - 342).* இந்த வளர்ச்சிக்கு தீகவாவிக்கு அருகே கல்லாறு, மட்டக்களப்பு வாவி என்பவற்றிலும் மாகாமத்தின் அருகே கிரிந்தி ஓயா - மாணிக்க கங்கையிலும் இடம்பெற்று வந்த வெளிநாட்டு வணிகமும் ஒரு காரணமாக இருந்திருக்க வேண்டும்.




**அரசர்களின் வம்ச வரைபடம்**

தீகவாவி பின்னாளைய கல்வெட்டுகளிலும் இலக்கியங்களிலும் 'தீகவாபிமண்டலம்' என்றே சொல்லப்பட்டுள்ளது. இரண்டாம் முதலாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த பல கல்வெட்டுகள் தீகவாவிக்குத் தெற்கே வேகம்பற்று தெற்கு (தமண) பகுதியிலுள்ள கிங்குராணை, மலையாளிக்கண்டம், எக்கலாறு ஆகிய இடங்களிலும் கண்டறியப்பட்டுள்ளன (Dias, *1991:4).* இந்த மண்டலத்தின் சரியான எல்லைகள் இன்று அறியக்கூடவில்லை.

ஆனால் சாகாமத்திலுள்ள நூறானைக்கண்டக் கல்வெட்டு சத்தா திசையன் காலத்தில் அமைக்கப்பட்ட விகாரம் பற்றிச் சொல்வதால், சத்தா திசையனின் காலத்தில் தீகவாவி மண்டலத்தின் ஆட்சிப்பரப்பு அக்கரைப்பற்று தெற்கு (திருக்கோவில்) சாகாமம் வரை நீடித்தது என்பதை உறுதிப்படுத்தலாம். சாகாமத்துக்கு அருகே தான் பத்து உடன்பிறந்தோர் குல இளவல் உபராசன் நாகனின் கல்வெட்டுப் பொறித்த மொட்டையாகல் கல்வெட்டு பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நாம் மீண்டும் விட்ட இடத்திலிருந்து வரலாற்றுக்குத் திரும்புவோம். வட்டகாமணியின் மைந்தனான சோரநாகன் அனுராதபுரத்தை ஆளும் போது (பொமு 62 - 50), அவனது அரசி அனுலா தேவியால் (பொமு 50 - 41) நஞ்சூட்டிக் கொல்லப்பட்டான். பதவியிலும் சிற்றின்பத்திலும் திளைத்துவந்த அரசி அனுலை அடுத்தடுத்து ஆடவரை தன் அழகால் மயக்கி அரியணையில் அமர்த்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தாள். ஒருவனை கணவனாக வரித்திருக்கும் போதே இன்னொருவன் மீது மையல் கொண்டு முந்தையவனை நஞ்சூட்டிக் கொன்று அடுத்தவரை அரியணையில் பொம்மை அரசனாக அமர்த்தி, அனுராதபுரத்தை தானே ஆண்டு கொண்டிருந்தாள் (மவ. 16 - 27).

வட்டகாமணியின் அண்ணனான கல்லாட நாகனின் மகன் குடாக்கண்ணன் அபயன், அனுலையின் ஆட்சியில் அவளுக்கு அஞ்சி உரோகணத்திற்குத் தப்பியோடி அங்கேயே வாழ்ந்து வந்தான் (மவ.28 - 29). அவன் அனுரை மீது படையெடுத்து அனுலா தேவியைக் கொன்று முடிசூடும் வரை (பொமு 41 ஆம் ஆண்டு) தீகவாவி மண்டலத்திலேயே உபராசனாக வாழ்ந்து வந்திருக்கிறான். இராசக்கல் மலையில் தன் சிற்றப்பன் இலஞ்ச

திசையன் கட்டிய இராசக்கல் மலையில் இருந்த விகாரத்துக்கு அவன் திருப்பணி செய்ததுடன், அவனால் 'புடகண |கமணி தி`ச' என்ற பெயரில் ஒரு பிராமிக் கல்வெட்டும் அங்கு பொறிக்கப்பட்டுள்ளது (Ranawalla, 2018:66-67).

குடாக்கண்ண திசையனின் மகன் உபராசன் நாகன் 'கபடுகம்' எனும் நீர்த்தேக்கத்தை 'கும்பிளாபிதிச' விகாரத்துக்கு ஒப்படைத்ததாக இராசக்கல் மலையின் இன்னொரு கல்வெட்டுச் சொல்லும். இவனை குடாக்கண்ணனின் இளைய மகனான அனுரை அரசன் மாதாடியன் மாநாகனாக (மஃகாடாதிக மஃகாநா|க, Mahdthika Mahnga) இனங் காண்பர். இவன் அனுரையை ஆள முன்னர் உரோகணத்தை உபராசனாக ஆண்டு வந்ததுடன், அக்காலத்தில் இவன் பாணமைப்பற்று பொத்துவில்லின் அருகே இருந்த 'ஃகுவாசகண்ணிகா' (Huvca kannik) எனும் பகுதியில் சூலநாக பர்வதம் எனும் விகாரத்தை அமைத்திருந்தான் (மவ. 34:90 - 91).

மாதாடியன் மகாநாகனின் மகன் வழிப் பேத்தி சீவள்ளிக்குப் பிறந்த ஈழநாகன் என்பவன் பற்றிய தகவல்கள் திசமாராமத்தில் (தி`ச்`சமஃகாராம - Tissamahrma) கிடைக்கின்றன. ஈழநாகன் 'இலம்பகர்ணர்' எனும் வம்சத்தாருடன் முரண்பட்டு மேற்குக்கரைக்கு (சேர நாட்டுக்கு) தப்பிச் சென்று விடுகிறான். அனுரையை இலம்ப கர்ணர் ஆளும் போது, சேரநாட்டில் படை திரட்டி, உரோகணத்தின் சக்கரசொப்ப துறைமுகத்தில் வந்திறங்கும் ஈழநாகன், இலம்பகர்ணருடன் போரிட்டு வென்று அனுரையில் முடிசூட்டினான்.

வேகம்பற்றின் முவாங்கல்லிலுள்ள முதலாம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று 'சப' என்ற அரசனின் மைந்தன் திசைய மகாராசன் என்பவன் தீகவாவியை அண்டிய அப் பகுதியை ஆண்டு கொண்டிருந்ததாகச் சொல்லும் (Ranawalla, 2018:70). 'சப' என்பதை 'சுப' என்பதன் ஈழப்பாகத வடிவம் எனக் கொண்டால், ஈழநாகனின் மகனான யசலாலக திசையனைக் கொன்று அனுராதபுர அரசைக் கைப்பற்றிய சுபமகாராசனே (60-65) இவன் எனலாம். அது உண்மையாயின் வழமைப்படி, சுபமகாராசன் அனுரையில் அரசாண்ட போது, தன் மகன் திசையனை தீகவாவியில் உபராசனாக நியமித்திருக்க வேண்டும்.

அனுரையை சுபமகாராசன் ஆண்டு வரும்போது (பொபி 59 - 65) அவனை அடுத்து 'வசபன்' என்ற பெயருடைய ஒருவனே அரசில் அமர்வான் என்ற எதிர்வுகூறல் சொல்லப்பட்டதால், அவன் நாட்டிலுள்ள எல்லா வசபரையும் கொல்ல ஆணையிடுகிறான். இதையறிந்து இலம்பகண்ண குலத்தைச் சேர்ந்த வசபன் என்பான் (67 - 111) உரோகணத்துக்குத் தப்பிச் சென்று அங்கு ஈராண்டுகள் தங்கியிருந்து படை திரட்டி வந்து சுபனை வென்று ஆட்சியைக் கைப்பற்றுகிறான்.

வசபன் உரோகணத்தில் தீகவாவியை அண்டிய பகுதியிலேயே தங்கியிருந்தான் என்பதற்கு கீழைக்கரையில் கிடைக்கும் இரு கல்வெட்டுகள் சான்றாகின்றன. ஏறாவூர்ப் பற்றுக் காசிமோட்டைக் கல்வெட்டு வசப இராசனின் கீழ் உரோகணத் துணைப் போசகன் (ரோகண சுள்ளபோ|சிக, Rhana cullabjika) என்ற பதவி வகித்த 'அமைச்சன் ஃகோணையன்' என்பவனின் மகனான தேவநாகன் ப`ச்`சிமநகரம் (passimanagara, மேற்கு நகரம்) எனும் பகுதியை ஆண்டு வந்ததைச் சொல்கிறது. இன்னொரு கல்வெட்டு அம்பாறை கொன்றைவட்டுவானில் கிடைத்தது. சுபமகாராசனின் மைந்தன் திசையனை வசபன் தீகவாவியிலிருந்து அகற்றியிருக்கலாம் என்பதற்கு இக்கல்வெட்டை ஒரு சான்றாகக் கூறலாம்.

வசபனின் பேரனே சிலப்பதிகாரத்தில் கூறப்பட்டதாகச் சொல்லப்படும் முதலாம் கயவாகு (114 - 136). அவனது ஆட்சிக்காலத்தில் பத்தினி வழிபாடு இலங்கைக்கு அறிமுகமானது என்பர். எனினும் இதற்கு தொல்லியல் சான்றுகள் கிடைக்கவில்லை. அவனுக்குப் பின்னர் அவன் மகன் வழிப்பேரன் இரண்டாம் பாதிய திசையனும் (143-167) அவனுக்குப் பின்னர் பாதிய திசையன் தம்பி இளைய திசையனும் (167 - 186) ஆண்டனர். சிங்களக்

கல்வெட்டுகள் இளைய திசயனை மலுதிச என்றும் பாளி நூல்கள் அவனை 'கனித்த திச' என்றும் குறிப்பிடுகின்றன.

இளைய திசையன் சற்று பலம் வாய்ந்த ஆட்சியாளனாகவே இனங் காணப்படுகின்றான். இவனது கல்வெட்டுகள் தம்புள்ளை, பொலனறுவை, அம்பாந்தோட்டைப் பகுதிகளிலும் கிடைத்துள்ளன. கீழைக்கரையில் பாணமைப்பற்றின் பொத்துவில் லைனாமலையும் வாகூரை நெலும்பற் பொக்குணையும் இவன் கல்வெட்டுக் கிடைத்த முக்கியமான இடங்கள் ஆகும்.

பொத்துவிலுக்கு மேற்கே உள்ள லைனாமலையில் இளைய திசையனின் கல்வெட்டுகள் இரண்டு பொறிக்கப்பட்டுள்ளன. 'காலராம ராயரையன்' குளத்தை விலை கொடுத்து வாங்கிய மன்னன் அருகில் ஊரொன்றை உருவாக்கி குளத்துக்கான நீர் வரியை விகாரத்துக்கு காணிக்கையாகக் கொடுத்தான். சீபருவத மடத்திலிருந்த துறவிகளின் உணவுக்காக இது பயன்பட்டது. இந்தக்குளம் ஃகுவாவ கண்ணிகா பகுதியை நாகன் முல்லையன் ஆண்டபோது ரதியன் சோணையன் தேவையன் என்பவனால் கட்டப்பட்டது. அதன் கீழுள்ள இளைய திசையனின் இன்னொரு கல்வெட்டின் படி அவனால் கிரிகாமவாவி, மல்லகேதகம் எனும்

மகாசேனன் இடித்தழிப்பித்த புத்த விகாரங்களுக்கு பகரமாக தத்தீசன் ஒவ்வொரு விகாரைத் தலத்திலும் கதிரேசன் ஆலயம் இயற்றுவிக்கிறான். சிங்கள வரலாற்றாசிரியர்கள் இலங்கையின் முருக வழிபாட்டுக்கு மகாசேனனிலிருந்தே ஆரம்பம் தேடுவது இங்கு இணைத்துப் பார்க்கத்தக்கது.



**புராதன இலங்கையின் இராச்சியங்கள்**

Image Source - en.wikipedia.org

வயல்வெளி, சோரவாவி எனும் குளம் என்பன சீபருவதத்து மடத்திலுள்ள பிக்குகளுக்கு உணவுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது (*Paranavitana, 2001:137-139*).

பாணமைப்பற்றின் தென்பகுதியில் பூமுனைக் காட்டில் வாகூரைக்கு அருகே நெலும்பற் பொக்குணை என்னும் இடத்தில் கிடைத்த கல்வெட்டில் நாக மகாராசாவின் மைந்தனான இளைய திசைய மகாராசன், ஆரிய வருசச் சடங்குக்காக மகாநகரப் புறக் கால்வாய்க்கான நீர் வரியை நீக்கியமை சொல்லப்படுகின்றது (*Paranavitana, 2001:148*). ஆரிய வருசச் சடங்கு என்பது மழை பொழிவதற்கான புத்தச் சடங்கு. வாகூரைக்கு அண்மையில் புதிதாக நகரொன்றை உருவாக்கி அந் நகரின் நீர் வரியை புத்த மடத்துக்கு அவன் கொடுத்திருக்கலாம்.

இளைய திசையனுக்குப் பின்னர் ஒரு நூற்றாண்டு காலம் கீழைக்கரை அல்லது

தீகவாவியின் நிலை என்னவாக இருந்தது என்ற விபரம் அறியக் கூடவில்லை. ஆனால் இடைப்பட்ட காலத்தில் புத்த சமயத்துக்கு இணையாக சைவமும் சமணமும் கீழைக்கரையில் தழைத்தது என்பதை அறிய முடிகின்றது. நாகரின் தமிழி வடிவம் பொறித்ததாக பேரா.சி. பத்மநாதன் இனங்காணும் கொட்டியாரப்பற்றில் கிடைத்த கரைசையம்பதிச் சிவலிங்கம் பொபி இரண்டாம் நூற்றாண்டுக்குரியதே. போரதீவுப்பற்று வெல்லாவெளியில் சமணப் பெண் துறவியரின் குகைகள் அமைக்கப்பட்டு பேணப்பட்டன. ஆனால் அடுத்த நூற்றாண்டில் அனுரையில் பதவியேற்ற மகாசேனன் (276-303) புத்த சமயத்தின் மகாயானக் கிளையைக் கடைப்பிடித்ததுடன் தேரவாத புத்த சமயத்தையும் சைவம் முதலிய ஏனைய சமயங்களையும் கடுமையாக ஒடுக்கினான். அவனது அடக்குமுறை தாங்கொணாது அனுராதபுரத்தின் மகாவிகாரத்தில் தங்கியிருந்த புத்தத் துறவியர் இடம்பெயர்ந்து உரோகணத்துக்குக் குடிபெயர்ந்தனர். உரோகணத்தின் திருக்கோணமலைக் கோவிலும், ஏரகாவில்லில் அமைந்திருந்த கோவிலும், பிராமணன் கலந்தன் ஊரிலிருந்த கோவிலும் அவனால் இடிக்கப்பட்டு அங்கெல்லாம் விகாரங்கள் எழுப்பப்பட்டன (மவ. 37 - 41).

மகாயானம் மகாசேனனால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நெறியன்று. அது முன்பும் இங்கிருந்தது. மகாசேனனுக்கு சில தசாப்தங்கள் முன்பு ஆண்ட வியவகாரிக திசையன் (209-231) காலத்தில் அவன் வேதுல்ய (வைதூலியம் - மகாயான புத்தம்) கொள்கையை ஒடுக்கியது குறிப்பிடப்பட்டுள்ளது. மகாவம்ச உரைநூல் தெளிவாகவே சிவலிங்கம் அமைந்த ஆலயங்கள் உட்பட புத்தத்தைக் கடைப்பிடிக்காதோரின் கோவில்கள் மகாசேனனால் சிதைக்கப்பட்டன என்று குறிப்பிடுகின்றது (Geiger, 2000:270). ஆனால், மகாசேனனின் ஆட்சியில் தேரவாதப் பிக்குகள் உரோகணத்துக்கு அடைக்கலம் தேடிச் சென்றதும், அங்கிருந்த (சைவக்?) கோவில்கள் இடிக்கப்பட்டதும் சைவத்துக்கும் தேரவாதத்துக்கும் ஆதரவான சக்தியொன்று உரோகணத்தில் நிலைத்திருந்தது என்று ஊகிக்க வைக்கின்றது. அது பற்றிய குறிப்பெதுவும் நமக்குக் கிடைக்கவில்லை. அந்தச் சக்தி புத்தமும் சைவமும் சார்ந்திருந்த பழைய நாகக் குடிகளின் சிற்றரசுகளாகலாம்.

> “
>
> **பாணமைப்பற்றின் தென்பகுதியில் பூமுனைக் காட்டில் வாகூரைக்கு அருகே நெலும்பற் பொக்குணை என்னும் இடத்தில் கிடைத்த கல்வெட்டில் நாக மகாராசாவின் மைந்தனான இளைய திசைய மகாராசன், ஆரிய வருசச் சடங்குக்காக மகாநகரப் புறக் கால்வாய்க்கான நீர் வரியை நீக்கியமை சொல்லப்படுகின்றது**

ஆனால், மகாயான புத்தத்தைச் சார்ந்த மகாசேனன் திருக்கோணேச்சரத்தை இடித்த கதை வாய்வழியாக் கடத்தப்பட்டு உருத்திரிந்து மட்டுக்களப்புப் பூர்வ சரித்திரத்தில் பதிவாகி இருக்கிறது. திருக்கோணமலைத் தொன்மங்களில் குளக்கோட்டனாக இனங்காணப்பட்ட ஆடகசவுந்தரியின் நாயகனாக இந்த மகாசேனனை அடையாளப்படுத்திய அந்நூல், அவன் கடைப்பிடித்த வைதூலியத்தை (மகாயான புத்தம்) சைவ சமயப் பிரிவாகப் புரிந்து கொண்டதுடன், அவன் திருக்கோணேச்சரத்துக்கு திருப்பணிகள் செய்தான் என்றும் கூறுகின்றது (கமலநாதன் & கமலநாதன், 2005:22-23).

பாளி வம்ச இலக்கியங்களில் மகாசேனனுக்கு இரண்டு முகங்கள் உள்ளன. முதலாவது, அவன் பழுத்த வைதூலியன். எனவே சைவத்தையும் தேரவாத புத்தத்தையும் ஒடுக்கினான். இரண்டாவது, அவன் நீர்ப்பாசனத்தை வளப்படுத்துவதில் இணையற்ற சாதனைகள் படைத்தவன். இந்த இரண்டுமே குழப்பகரமான நிலையில் மட்டுக்களப்புப் பூர்வ சரித்திரத்தில் பதிவாகியுள்ளன. முதலாவது விடயம், அவன் வைதூலியன் என்பதால் புத்தாலயங்களை

**மகாயானம் மகாசேனனால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட நெறியன்று. அது முன்பும் இங்கிருந்தது. மகாசேனனுக்கு சில தசாப்தங்கள் முன்பு ஆண்ட வியவகாரிக திசையன் (209-231) காலத்தில் அவன் வேதுல்ய (வைதூலியம் - மகாயான புத்தம்) கொள்கையை ஒடுக்கியது குறிப்பிடப்பட்டுள்ளது.**




மகாசேனன் சிலை

Image Source - www.flickr.com

இடிப்பித்தான் என்றும், இரண்டாவது விடயம், அவனே மணிச்சிறை வாவி (இன்றைய மின்னேரி) உள்ளிட்ட நீர்நிலைகளை அமைத்தான் என்றும், கந்தளாய்க் குளத்தையும் கட்டியவன் அவனே என்கிறது பூர்வ சரித்திரம்.

பூர்வ சரித்திரம் குறிப்பிடும் இன்னுமிரு விடயங்கள் சுவையானவை. கலிங்கத்திலிருந்து இலங்கைக்கு வந்து அனுரையை ஆளும் தத்தீசனோடு 'சகோதர முகமன்' உரைத்து உறவாடுகிறான் மகாசேனன். மகாவம்சத்தின் படி தத்தீசனும் (|சேட்டன் திசையன், Jettha Tissa, 266 - 276) மகாசேனனும் உடன்பிறந்தோர்; கோதாபயனின் மைந்தர்கள். இன்னொரு விடயம், மகாசேனன் இடித்தழிப்பித்த புத்த விகாரங்களுக்கு பகரமாக தத்தீசன் ஒவ்வொரு விகாரைத் தலத்திலும் கதிரேசன் ஆலயம் இயற்றுவிக்கிறான். சிங்கள வரலாற்றாசிரியர்கள் இலங்கையின் முருக வழிபாட்டுக்கு மகாசேனனிலிருந்தே ஆரம்பம் தேடுவது இங்கு இணைத்துப் பார்க்கத்தக்கது. அத்துடன், மகா விகாரத்தை இடித்து வைதூலிய விகாரங்களை அமைக்கும் மகாசேனன் பிற்காலத்தில் தன் நண்பன் கோட்டக அபயனுக்காக மனம் மாறி மீண்டும் தேரவாத புத்த விகாரங்களை மீளக்கட்டியதை மகாவம்சம் சொல்லும். ஒரு வேளை தேரவாத விகாரங்களுடன் சேர்த்து, தான் முன்பு இடித்த சைவக் கோவில்களையும் மகாசேனன் மீளக்கட்டினானா, அதுவே பூர்வ சரித்திரத்தில் அவன் கோணேச்சரத்துக்கு திருப்பணி செய்ததாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறதா என்பது சுவாரசியமான ஒரு வினா.

## அடிக்குறிப்புகள்

**1.** *siddha kakavana tisa maha rajaha puti tisa maha raji vejagala vihara karaya avijavaya dini maha parika ceyata bahidiya viharahi dini biku saga hata.*

சித்||த ககவன தி`ச மஃகர|சஃக புதி தி`ச மஃகர|சி வெ|ச|கல விஃகர அவி|சவய |திணி மஃக பரிக செயத |பஃகி||தியவிஃகரஃகி திணி |பிகு ச|க ஃகத.

சித்தம். காக்கைவண்ண திசைய மகாராசனின் மைந்தன் திசைய மகாராசனால் வைத்தியக்கல் விகாரைக்காக செய்த அவி|ச வாவியை மகா பரிகார சைத்தியத்துக்கும் |பஃகிடிய (bahidiya) விகாரத்துக்கும் செய்து பிக்கு சங்கத்துக்கு வழங்கினான். (Gamage, 2020:57)

வைத்தியக்கல் - வெ|ச|கல, (Vejagala), அவி|சவய (Avija vaya) இன்றுள்ள சாகாமக் குளத்தைக் குறிக்குமெனின் அதை

அமைத்தவன் சத்தா திசைய மன்னன் என்றாகும்.

2. இலஞ்ச திசையன் ‘கிரிகும்பீள’ எனும் விகாரத்தை தீகவாவியில் அமைத்ததாக மகாவம்சம் பாடுகின்றது (33:14-15) இராசக்கல் மலையிலிருந்த விகாரமே “கிரிகும்பீள” (சங்கதம்: ।கிரிகும்।பீர, *girikumbra*, முதலைமலை) என்பது அங்கு கிடைத்த குடாக்கண்ண திசையனின் கல்வெட்டுகள் மூலம் தெரியவருகின்றது.

3. இந்தத் துறைமுகம் எங்கிருந்தது என்று தெரியவில்லை. ஈழநாகனை “அலுநாகன்” அல்லது “எலுநாகன்” என்று குறிப்பிடும் கல்வெட்டுகள் திசமாராமத்தில் கிடைத்துள்ளதால் அது தென்னிலங்கையில் எங்கோ அமைந்திருக்கக்கூடும்.

4. வசபன் - வ்ரு_ ^ச।।பன், *Vrsbhan*, காளை போன்றவன்.

5. பச்சிமநகரம் - மேற்கு நகரம். இது முந்தனை ஆற்றுக்கு மேற்கிலிருந்த ஏதும் நகரமா என்பது தெரியவில்லை. சுல்ல ரோகண போ।சிக (*Culla Rohana Bojika*)

6. பாதிகன், வட. ।ப்ராதிக, *Bhratika*, உடன்பிறந்தான். இளைய திசையன், பாதிய திசையனுக்கு இளையவன் என்பதால் மூத்தவன் உடன்பிறந்தான் என்று அழைக்கப்பட்டிருக்கக்கூடும். அப்பெயரைப் பெற்றிருக்கக்கூடும். இவன் இரண்டாம் பாதியன். முதலாம் பாதியன் குடாக்கண்ண திசையனி மூத்த மகன். குடாக்கண்ணனின் இரு மைந்தரும் திசையன் என்றே அறியப்பட்டனர். அவர்களில் இளையவனான மாதாடியனே புகழ்வாய்ந்தவன். இளையவர் மூத்தவரை விடப் புகழுறும் போது இளையவர் ஆட்சிக்காலத்தில் மூத்தவரை இவ்வாறு மரியாதையாக “உடன்பிறந்தார்” என்று அழைப்பது வழக்கம் போலும்.

7. மலு/மள - இன்றைய சிங்கள மல்லி (தம்பி). கனித்த - வடமொழி கனி`ச்ட (*Kanistha*)

8. இந்த ரதியன் (வடமொழி: ரா^ச்ட்ரி_ய, *Rastrya*) என்ற சொல், தமிழ் நாடனுக்குச் சமனானது. கண்ணிகை, பழைய நிருவாகப்பிரிவுகளுள் ஒன்று. ஃகுவாவ (*Huvava*) என்பது மகாவம்சத்தில் ஃகுவாச (*Huvaca*) என்று இடம்பெற்றுள்ளது (சங்கதம்: சுவாப, நல்ல விதைப்புக்குரிய). இதிலிருந்தே இன்றுள்ள சிங்கள ‘ஊவா’ என்ற சொல் வந்தது. எனினும் இன்றைய ஊவா எனும் நிருவாகப்பகுதிக்கும், இக்கல்வெட்டிலுள்ள ஃகுவாவுக்கும் தொடர்பில்லை.

9. திருக்கோணமலையிலிருந்த கோவில் திருக்கோணேச்சரமாகலாம். ஏனைய இரண்டும் அடையாளம் காணப்படவில்லை. ஏரகாவில்லை ஏறாவூர் என்பர். அதனருகே காசிமோட்டைப் பகுதி வசபன் காலத்திலேயே குடியிருப்பாக இருந்ததால் அதற்கு வாய்ப்புண்டு. அல்லது ஏரகாவில் என்பதை தீகவாவிக்கு அருகே எரகம என்று முன்பு அறியப்பட்ட இறக்காமமாகவும் ஊகிக்கலாம்.

## உசாத்துணை


கமலநாதன், சா.இ., கமலநாதன், க. (2005). மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம், கொழும்பு : குமரன் புத்தக இல்லம்.

பத்மநாதன், சி. (2016). இலங்கைத் தமிழர் வரலாறு: கிழக்கிலங்கையில் நாகரும் தமிழரும் (கிமு 250 - கிபி 300). கொழும்பு: இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.

*Dias, M. (1991). Epigraphical Notes No. 1 - 18, Colombo: Department of Archaeology.*

*Gamage, D.P. (2020). Epigraphical Notes No. 22 - 23, Colombo: Department of Archaeology.*

*Geiger, W. (2000). The Mahavamsa or the Great Chronicle of Ceylon (Mabel Haynesbode Trans), New Delhi Madras: Asian Education Services.*

*Paranavitana, S. (2001), Inscriptions of Ceylon, Volume II, part II, (Malini Dias Ed.), Colombo: Department of Archaeology.*

*Ranawella, G.S. (2018). History of the Kingdom of Rohana: From the Earliest Times to 1500 AC. Colom bo: Ministry of Higher Education and Department of Archaeology.*


(தொடரும்)

இனக் குழுமம், சமயம், மொழி, பண்பாடு ஆகியவற்றால் வேறுபாடுகளைக் கொண்ட பன்மைப் பண்பாட்டுச் சமூகங்களில் (MULTI – CULTURAL SOCIETIES) சமாதான வழிகளில் தீர்க்க முடியாதனவான சிக்கலான அரசியல் பிரச்சினைகள் தீவிரமடைந்து உள்நாட்டுக் குழப்பங்களிற்கும், உள்நாட்டு யுத்தங்களிற்கும் வழிவகுத்துள்ளன. இதனை மூன்றாம் உலக நாடுகளின் சமகால வரலாறுகள் உணர்த்தியுள்ளன. இவ்வரசியல் பிரச்சினைகளைப் பேச்சு வார்த்தைகள் மூலம் சமாதான வழியில் தீர்த்தல், சம்மந்தப்பட்ட நாடுகளின் அமைதிக்கும், சமூக – பொருளாதார – அரசியல் முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைகிறது. அமைதி வழியான தீர்வை அரசியல் தீர்வாக (POLITICAL SOLUTION) அமைப்பதோடு அதிகாரப் பகிர்வு (POWER SHARING), சுயாட்சி (SELF RULE) ஆகியவற்றுக்கான ஆட்சிக் கட்டமைப்புக்களை, அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் மூலம் உருவாக்குவதும் இன்றியமையாத முன் தேவையாக உள்ளது. அந்த வகையில், 'அதிகாரப் பகிர்வும் சுயாட்சியும் : மூன்றாம் உலக அனுபவம்' என்னும் இப்புதிய தொடரில் மூன்றாம் உலக நாடுகளான இலங்கை, இந்தியா, மலேசியா, பாகிஸ்தான், நைஜீரியா, எத்தியோப்பியா, சூடான், மெக்சிக்கோ ஆகிய நாடுகளின் அனுபவங்களை விளக்கியுரைக்கும் கட்டுரைகளின் தமிழாக்கம் வெளியிடப்படும். பல்வேறு தீர்வு மாதிரிகள், அத்தீர்வு மாதிரிகளின் பின்னால் உள்ள அரசியல் கோட்பாடுகள் (POLITICAL THEORIES), அரசியல் யாப்புத் தத்துவங்கள் (CONSTITUTIONAL PRINCIPLES) என்பனவும் விளக்கிக் கூறப்படும்.

*ஆங்கில மூலம்: ஜயம்பதி விக்கிரமரட்ண*

# பன்மைப் பண்பாட்டுச் சமூகங்களிற்குப் பொருத்தமான அரசியல் யாப்புக்களை வரைதல் : பயனுள்ள சர்வதேச அனுபவங்கள் சில




கந்தையா சண்முகலிங்கம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்ற இவர், இலங்கை நிர்வாக சேவையில் பணியாற்றிய ஓய்வுநிலை அரச பணியாளர். கல்வி அமைச்சின் செயலாளராக விளங்கிய சண்முகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளருமாவார். இவர் மொழிபெயர்த்த 'இலங்கையில் முதலாளித்துவத்தின் தோற்றம்' என்ற நூல் சிறந்த மொழிபெயர்ப்புக்கான பரிசை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

'நவீன அரசியல் சிந்தனை', 'கருத்தியல் எனும் பனிமூட்டம்', 'இலங்கையின் இனவரைவியலும் மானிடவியலும்' ஆகியவை இவரின் ஏனைய நூல்களாகும்.


அரசியல் யாப்பு அறிஞரும், முன்னாள் அமைச்சருமான ஜயம்பதி விக்கிரமரட்ண அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரை "CONSTITUTION MAKING IN MULTI - CULTURAL SOCIETIES : SOME INTERNATIONAL EXPERIENCES" ஒரு சிறு நூலின் அளவுடையது. 74 பக்கங்களைக் கொண்ட இந் நீண்ட கட்டுரையின் முதல் 9 பக்கங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைத் தழுவி இத் தமிழ்க் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

'அதிகாரப் பகிர்வும் சுயாட்சியும் : மூன்றாம் உலக அனுபவம்' என்னும் இப் புதிய கட்டுரைத் தொடரின் முதலாவது கட்டுரையாக இவ்வாக்கத்தை வழங்குகிறோம்.

பண்பாட்டுப் பன்மைத்துவம் (CULTURAL DIVERSITY) ஒரு தேசத்திற்கு அழகையும் பொலிவையும் வழங்குகிறது. அதேவேளை அது குறித்த தேசத்திற்குள் முரண்பாடுகளையும் மோதல்களையும் உருவாக்குகிறது. பல்வேறு பண்பாட்டுச் சமூகங்களும் தத்தமது அடையாளங்களைப்

பேணுவதுடன் ஒன்றுபட்ட ஒரு தேசமாக, ஒருமையுணர்வை வளர்த்து முன்னேற்றப் பாதையில் செல்வதில் பல இடர்பாடுகள் எழுகின்றன. மோதல்களையும், முரண்பாடுகளையும் சட்டங்களால் மட்டும் முகாமை செய்து தீர்வு செய்ய முடியாது. ஆயினும் சட்டங்கள் தேவையற்றவை என அவற்றை நிராகரிப்பதும் தவறு. பண்பாட்டுப் பன்மைத்துவத்தோடு தொடர்புடைய பிரச்சினைகள் யாவும் அரசு அதிகாரம் (STATE POWER) என்பதுடன் தொடர்புடையன. பன்மைப் பண்பாட்டுச் சமூகங்களில் அரசு அதிகாரத்தைப் பகிர்தல், வரையறை செய்தல் ஆகிய அரசியல் யாப்புப் பிரச்சினைகள் சிக்கலானவையாக உள்ளன. பன்மைத்துவத்துடன் இணைந்ததாக, தாம் அல்லாத பிற குழுக்கள் மீது அச்சம் - குரோதம் - தப்பெண்ணம் - ஆதிக்கம் செய்யும் மனப்பான்மை என்பனவும், விட்டுக் கொடுத்தலும் இணங்கிப் போதலும் ஆகிய பண்புகள் இன்மையும் செயற்படுகின்றன. இவை பிரச்சினைகளைச் சிக்கலாக்குகின்றன.

மேற்கூறிய சிக்கல்கள் இருந்த போதும், பன்மைப் பண்பாட்டுச் சமூகங்கள் பல, தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் வெற்றி கண்டுள்ளன. வேறு சில பிரச்சினைகளைத் தீர்வு செய்வதில் தோல்வி கண்டுள்ளன. இலங்கை, பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளில் தோல்வியைத் தழுவிய நாடுகளின் பட்டியலில் இன்று சேர்ந்துள்ளது வருத்தத்தைத் தருவது.

அரசியல் யாப்புச் சட்டம் பொது இணக்கப்பாட்டோடு ஏற்கப்பட வேண்டிய சாசனம். அரசியல் யாப்புச் சட்டத்தை இயற்றும் செயல்முறை சமூக ஏற்புடமையைப் பெறத்தக்கதாக இருத்தல் வேண்டும். ஐக்கிய அமெரிக்காவில் 13 அரசுகள் (STATES) ஒன்று கூடி தமக்கென ஒரு அரசியல் யாப்பை ஏற்று அங்கீகரித்தன. இந்தியாவின் அரசியல் யாப்புச் சபை (CONSTITUENT ASSEMBLY) அரசியல் யாப்பை வரைந்தது. இச் சபையில் நாட்டின் பல்வேறு பகுதிகளின் மக்களின் பிரதிநிதிகள் பங்கு கொண்டனர். மூன்று ஆண்டுகள் இச் சபை அரசியல் யாப்புப் பற்றி விவாதித்தது. பொது மக்கள் தங்கள் கருத்துக்களைக் கூறச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. 7,635



ஜயம்பதி விக்கிரமரட்ண

Image Source - www.dailymirror.lk

திருத்தங்கள் பிரேரிக்கப்பட்டன. 2,473 திருத்தங்கள் பற்றி சபையில் விவாதம் நடைபெற்றது. 1949 நவம்பர் 26 ஆம் திகதி இந்திய அரசியல் யாப்பு ஒரு மனதாக ஏற்கப்பட்டது. பிலாடெல்பியா மாநாட்டில் ஐக்கிய அமெரிக்காவின் அரசியல் யாப்பு அங்கீகரிக்கப்பட்ட நிகழ்வின் பின்னர் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு 1949 இல் இந்தியாவின் அரசியல் யாப்பு ஏற்கப்பட்டமையாகும். இந்தியாவின் ஐக்கியத்தின் குறியீடாக, பெரும் தொகையான மக்களால் ஏற்கப்பட்டதாக இந்திய அரசியல் சாசனம் விளங்குகிறது.

இலங்கையின் இன்றைய அரசியல் யாப்பு 1978 இல் உருவாக்கப்பட்ட போது, அது இலங்கையின் எல்லாப் பகுதி மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருக்கவில்லை. இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதற் தடவையாக ஐக்கிய தேசியக் கட்சி 1977 தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'தமிழ் மக்களுக்கு நியாயமான மனக்குறைகள் உள்ளன. அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாதபடியால் தான் பிரிந்து தனி நாடாகப் போக வேண்டும் என்ற கோரிக்கை தமிழர்களிடம் தோன்றியது. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும்' என்று குறிப்பிட்டிருந்தது. அக் கட்சி தமிழ் மக்கள் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு செய்வதற்காக வட்ட மேசை மாநாடு கூட்டப்படும் எனவும் வாக்குறுதி அளித்தது.

1977 தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) பிரிவினைக் கோரிக்கையை முன்வைத்து தமிழர் வாழ் பகுதிகளில்

போட்டியிட்டது. பெரும்பான்மை இடங்களை அக் கட்சி வென்றது. வடக்குக் கிழக்கிற்கு வெளியே வாழ்ந்த தமிழர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தனர். அதே போல் முஸ்லீம்களும், இந்தியத் தமிழர்களும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தனர். ஐக்கிய தேசியக் கட்சி தனி அங்கத்தவர் தேர்தல் முறையான 'FIRSTPASTTHE POST' தேர்தலில் 5/6 பெரும்பான்மையைப் பெற்று வெற்றியடைந்தது. ஆயினும் மொத்த வாக்குகளில் 51 வீதத்திற்கும் சிறிது குறைவாகவே பெற்றது. வாக்குறுதி கொடுத்ததற்கு அமைய வட்ட மேசை மாநாட்டைக் கூட்டுவதற்குப் பதிலாக ஐக்கிய தேசியக் கட்சி ஒரு புதிய அரசியல் யாப்பை வரைந்து அதனைச் செயற்படுத்தியது. தமிழர்கள் புதிய அரசியல் யாப்பினை வரைவதில் பங்குபற்றுவதை நிராகரித்தனர். தென்பகுதியின் எதிர்க்கட்சி பலவீனமுற்றிருந்தது.

**அரசியல் யாப்புச் சட்டம் பொது இணக்கப்பாட்டோடு ஏற்கப்பட வேண்டிய சாசனம். அரசியல் யாப்புச் சட்டத்தை இயற்றும் செயல்முறை சமூக ஏற்புடமையைப் பெறத்தக்கதாக இருத்தல் வேண்டும். ஐக்கிய அமெரிக்காவில் 13 அரசுகள் (STATES) ஒன்று கூடி தமக்கென ஒரு அரசியல் யாப்பை ஏற்று அங்கீகரித்தன.**

அதன் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது அரசியல் யாப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1978 அரசியல் யாப்பு இலங்கையை ஒற்றையாட்சி அரசாகப் பிரகடனப்படுத்தியது. பௌத்த சமயத்திற்கு முதன்மையிடத்தை வழங்கியது. நிறைவேற்று அதிகாரம் உடைய பலம் கொண்ட ஜனாதிபதி முறையை உருவாக்கியது. அரசியல் யாப்பின் சில முக்கிய பிரிவுகளைத் திருத்துவதாயின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் சர்வசன வாக்குரிமை மூலம் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் எனவும் விதிக்கப்பட்டது. விகிதாசாரத் தேர்தல் முறையின் கீழ் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை எந்தக் கட்சியும் பெற முடியாது என்பதால் எதிர்காலத்தில் அரசியல் யாப்பை திருத்துவதென்பதே இயலாத விடயமாக்கப்பட்டது. 1978 அரசியல் யாப்பு மக்களின் ஏற்புடமையைப் பெறத் தவறி விட்டது.

## சிறுபான்மை இனங்களின் தலைவிதி


காலனிய ஆட்சிக் காலத்தில் ஆட்சியாளர்கள் தமது விருப்பத்தின்படி நாடுகளின் எல்லைக் கோடுகளை வரைந்தார்கள். இதனால் வரலாற்றுத் தேசிய இனங்களின் வாழ்விடங்கள் பிரிக்கப்பட்டு எழுந்தமானமாக எல்லையிடப்பட்டன. பல்வேறுபட்ட பண்பாடுகளை உடையனவும் சமயம், மொழி முதலியவற்றால் வேறுபட்ட அடையாளங்களை உடையனவுமான பண்பாட்டுச் சமூகங்கள் அவற்றின் விருப்பத்திற்கு மாறாக ஒன்றிணைக்கப்பட்டன. சில சமூகங்கள் வரலாற்று ரீதியாகத் தாம் அனுபவித்து வந்த சுயாதீனத்தை இழந்தன.




கென்யாவிலும் தன்சானியாவிலும் மாசாய் மக்கள் வாழும் பிரதேசம்

Image Source - maasai-association.org

ஆபிரிக்காவில் மாசை (MAASAI) தேசிய இனத்தவர்கள் கென்யா (62%), தன்சானியா (38%) எனப் பிளவுபடுத்தப்பட்டு இரு வேறு நாடுகளுக்குள் உள்ளடக்கப்பட்டனர். அனியி (ANYI) என்ற தேசிய இனத்தவர்கள் கானா (58%), அய்வரிகோஸ்ட் (42%) என இரு நாடுகளுக்கிடையே பிளவுபட்டு கிடந்தனர். சிவா (CHEWA) இனம் மொசாம்பிக் (50%), மாலாவி (34%), சிம்பாவே (16%) என பிரிபட்டுக் கிடந்தது. நெம்பு (NDEMBU) இனத்தவர் அங்கோலா, சயர் (ZAIRE), சாம்பியா ஆகிய மூன்று நாடுகளுக்குள்ளும், நுக்வே (NUKWE) இனத்தவர் அங்கோலா, நமிபியா, சாம்பியா, பொட்ஸ்வான என்ற நான்கு நாடுகளுக்குள் சிதறிக் கிடந்தனர். மன்டிங்கோ (MANDINKO) இனம் மேற்கு ஆபிரிக்காவில் காம்பியா, செனகல், மாலி, பேர்கினோ ப(F) சோ, கினியா பிசோ, சியராலியோன் என்னும்




மேற்கு ஆபிரிக்காவில் மான்டிங்கோ இனம் பரவி வாழும் பிரதேசம்

Image Source - en.m.wikipedia.org

ஆறு நாடுகளில் சிதறுண்டு உள்ளது. மலிங்கே (MALINKE), மான்டிங்ஹோ (MANDINGO) என்ற வேறு இரு பெயர்களாலும் அழைக்கப்படும் இந்த இனம் 11 மில்லியன் சனத்தொகையை உடைய பெரிய இனமுமாகும். ஒரு காலத்தில் மாலியில் இவ்வினத்தவர் தாம் மிகப்பெரிய இனமாகத் திகழ்ந்தனர். இன்றும் காம்பியாவில் மன்டிங்கோ மிகப்பெரும் இனமாக விளங்குகிறது. கீழே தரப்பட்டுள்ள நில வரைப்படம் மன்டிங்கோ இனத்தவர் செறிந்து வாழ்ந்த பகுதியை விளக்குவதாக உள்ளது.

எரிட்றியா (ERITREA), சர்வதேச சமூகத்தால் அரசு அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேசிய இனத்திற்குச் சிறந்த உதாரணமாகும். இத்தாலியின் காலனியாகவிருந்த எரிட்றியா இரண்டாம் உலக யுத்தத்தில் இத்தாலி தோற்கடிக்கப்பட்ட பின்னர் பிரித்தானியாவின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. எரிட்றியாவின் மக்களைக் கலந்தாலோசியாமலே எரிட்றியாகளின் தலைவிதியை உலகின் பிற நாடுகள் பல தீர்மானித்தன என்பது வருத்தத்திற்குரிய செய்தியாகும். பிரித்தானியர்கள் அந் நாட்டைச் சமய அடிப்படையில் கூறுபோடும் ஆலோசனையை முன்வைத்தனர். சூடான் நாட்டிற்கு கையளிக்கப்பட்ட பகுதியில் முஸ்லீம்களும், எதியோப்பியாவுக்குக் கையளிக்கப்பட்ட பகுதியில் கிறிஸ்தவர்களும் ஆதிக்கம் செலுத்தினர். உலக யுத்தத்தின் பின்னர் இத்தாலியில் கம்யூனிஸ்டுகள் ஆட்சியைக் கைப்பற்றுவார்கள் என எதிர்பார்த்த சோவியத் ரஷ்யா எரிட்றியாவை முதலில் இத்தாலிக்கே நம்பிக்கைப் பொறுப்பாகவோ அல்லது காலனியாகவோ கொடுக்க வேண்டும் என்ற கருத்தை ஆதரித்தது. அராபிய நாடுகள் எரிட்றியா சுதந்திர நாடாவதை விரும்பின. அந் நாட்டில் முஸ்லீம்களே பெரும்பான்மையினராதலால், தமக்கு அந் நாடு ஆதரவாக இருக்கும் எனக் கருதிய அராபிய நாடுகள் அதற்கு சுதந்திரம் வேண்டும் எனக் கேட்டனர்.

எத்தியோப்பியாவின் அரசுத் தலைவரான பேரரசர் ஹெய்லி செலஸ்சிக் (EMPEROR HAILE SELASSIE) இத்தாலிய சோமாலிலாந்து, எரிட்றியா என்ற இரு தேசங்களையும் எத்தியோப்பியாவிற்கே தந்துவிட வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டுக்கு கடிதம் எழுதினார். இதே கோரிக்கையை அவர் பாரிஸ் நகரில் இடம்பெற்ற சமாதான மாநாட்டிலும் முன்வைத்தார். ஐ.நா சபையின் அமர்விலும் இதனைத் தெரிவித்தார். இரண்டாம் உலக யுத்தத்தில் பேரரசர் செலஸ்சிக் தமக்கு உதவி

செய்த நன்றிக் கடனாக, அவரின் கோரிக்கையை ஆதரிப்பதென பிரித்தானியாவும் ஐக்கிய அமெரிக்காவும் முடிவு செய்தன. ஐக்கிய நாடுகள் மன்றத்தில் ஐக்கிய அமெரிக்காவின் தூதுவரான யோன் பொஸ்டர் டல்லஸ் பேசும் போது பின்வருமாறு குறிப்பிட்டார்.

“நீதியின்படி எரிட்றியன் மக்களின் கருத்துக்களிற்குச் செவி சாய்க்க வேண்டும். ஆயினும், ஐக்கிய அமெரிக்காவின் இராஜதந்திர நலன்களையும், செங்கடல் பிராந்தியத்தில் எமக்குள்ள பாதுகாப்புத் தேவைகளையும் உலக அமைதியையும் கருத்திற் கொண்டு எறிட்றியாவை எதியோப்பியாவுடன் இணைத்து விட வேண்டியுள்ளது.”

ஐக்கிய நாடுகள் சபையின் ஆணைக்குழு ஒன்று எதியோப்பியாவுடன் எரிட்றியாவை ஒரு இறுக்கமற்ற கூட்டிணைவில் சேர்த்து விடலாம் என்று குறிப்பிட்டது. ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்தச் சிபார்சை ஏற்றது. பிரித்தானியா, எரிட்றியா மக்கள் எதியோப்பியாவுடன் இணைய விரும்புகிறார்களா என்பது குறித்து சர்வசன வாக்கெடுப்பு (REFERENDUM) நடத்தியிருக்க வேண்டும். அதற்குப் பதிலாக எரிட்றியாவின் சட்ட சபைக்கான தேர்தலை நடத்தியது. இச் சட்ட சபையில் முஸ்லீம்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் சமத்துவமான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. கட்சிகளின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபை, ஐ.நா. ஆணைக்குழு சமர்ப்பித்த அரசியல் யாப்பை ஏற்றுக் கொண்டது. எரிட்றியாவின் மக்களில் 75% வீதத்தினர் பூரண சுதந்திரத்தையே கோருகின்றனர் என்பதை ஒரு இரகசிய அறிக்கையில் ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் அமெரிக்க இராஜாங்க அமைச்சுக்கு அனுப்பி வைத்தார். இறுக்கமற்ற கூட்டிணைவு (CONFED ERATION) என்னும் உறுதியுரையும் பின்னர் கவனிக்கப்படவில்லை. பேரரசர் செலஸ்சிக் கொடுத்த அழுத்தம் காரணமாக, தெரிவு செய்யப்பட்ட பிரதம நிர்வாகி, பதவியில் இருந்து விலகினார். எரிட்றிய மக்களின் சுதேச மொழிகள் அராபியும், ரிகிரினியாவும் (TIGRIN YA) ஆகும். ஆனால் எதியோப்பிய அரசு ‘AMHARIC’ மொழியை உத்தியோக மொழியாக அறிவித்து எரிட்றிய மக்கள் மீது திணித்தது. சமஷ்டி முறையை ஒழித்து விட்டு எதியோப்பியாவுடன் ஐக்கியமாகும்படி பேரரசர் செலஸ்சிக் அழுத்தம் பிரயோகித்தார். எதியோப்பியாவுடன் எரிட்றியா இணைக்கப்பட்டது. 1958 இல் ஆரம்பித்த எரிட்றிய மக்களின் விடுதலைப் போராட்டம் 1993 வரை நீடித்தது. 99.79% மக்கள், யுத்தத்தின் முடிவில், எரிட்றியாவின்



எரிட்றியா - எத்தியோப்பியா பிரிவினையை விளக்கும் படம்

Image Source - www.britannica.com

விடுதலைக்காக வாக்களித்தனர். அவ் வாக்கெடுப்பு ஐ.நா வின் மேற்பார்வையில் நடத்தப்பட்டது. வேறு வழியில்லாமல் எதியோப்பியா எரிட்றியாவின் சுதந்திரத்தை ஏற்றது.

பன்மைச் சமூகங்களை இவ்வாறு எழுந்தமானமாகக் கூறு போட்டு அவற்றின் சுயநிர்ணய உரிமையை மறுப்பது, முன்னாள் காலனிகளில் மட்டும் நடைபெற்ற விடயம் என்று கூற முடியாது. ஆக்கிரமிப்பு மூலம் நாடுகளைக் கைப்பற்றல், இனக் குழுமங்களை அவற்றின் விருப்பத்திற்கு மாறாக பேரரசுகள் இணைத்துக் கொள்ளுதல், எழுந்தமானமாக நாடுகளின் புவியியல் எல்லைகளை வகுத்தல் என்பன வரலாறு முழுவதும் நடந்துள்ளது.

ஆக்கிரமிப்பும் எதிர்பாராத விபத்துக்களும் நிறைந்தது தான் ஐக்கிய இராச்சியம் (U.K), ஸ்பானியா, பெல்ஜியம் ஆகிய பன்மைத் தேசியங்கள் வாழும் நாடுகளின் வரலாறு. மேலே குறிப்பிட்ட மூன்று நாடுகளும் காலனிகளை பிடித்து பன்மைப் பண்பாட்டுச் சமூகங்களைக் கூறுபோட்டுப் பிரித்து ஆட்சி செய்த வரலாற்றை உடையவை.

முன்னாள் சோவியத் ஒன்றியத்தில் 100 வரையான தேசிய இனங்கள் இருந்தன. ஆனால் இத் தேசிய இனங்கள் பெரும்பான்மைத் தேசிய இனம் ஒன்றின் மேலாதிக்கத்திற்கு உட்பட்ட அரசுகளுக்குள் உள்ளடக்கப்பட்டன. சோவியத் யூனியனின் அரசுகளின் அரசியல் எல்லைகளும் இனக் குழுமப் புவிப்பரம்பல் எல்லைகளும் ஒன்றோடொன்று இணைந்திருக்கவில்லை. மக்களின் இடப்பெயர்வும், இனக் குழுமங்களின் புவியியற் பரம்பலை மாற்றியமைத்தது. இறுதியில் சோவியத் யூனியன் உடைந்து தனித்தனி நாடுகள் உருவாகின. அப்போது 43 மில்லியன் மக்கள் தமது இனக் குழுமங்களில் இருந்து பிரிக்கப்பட்டு வேறு அரசியல் எல்லைக்குள் சேர்க்கப்பட்டிருக்கும் நிலை காணப்பட்டது. உதாரணமாக 33.4% வீதம் ஆர்மீனியர்கள் ஆர்மீனியாவிற்கு வெளியே வாழ்கிறார்கள்.

இவ்வாறு வாழும் தேசிய இனங்கள் பற்றிய புள்ளி விபரம் வருமாறு :

- **தாஜிக்குகள் (TAJIKS) - 24.7%**
- **பைலோ ரஷ்சியர்கள் (BELO RUSSIANS) - 21.3%**
- **கசாக்கியர் (KAZAKHS) - 19.7%**
- **ரஷ்யர்கள் (RUSSIANS) - 17.4%**
- **மொல்டோவியன்கள் (MOLDOVANS) - 16.7%**

இதனை விட முன்னாள் சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து சென்ற பின்வரும் நாடுகளுக்குள் ரஷ்யர்கள் பெருந் தொகையில் வாழ்ந்து வரும் நிலை பெரும் சிக்கல்களுக்கு காரணமாக உள்ளது.

- **லாட்யாவில் - 27.8% ரஷ்யர்கள்**
- **எஸ்டோனியாவில் - 24.8% ரஷ்யர்கள்**
- **உக்கிரெயினில் - 17.3% ரஷ்யர்கள்**

என ரஷ்ய இனக் குழுமம் (புட்டினின்) ரஷ்யாவிற்கு வெளியே வாழ்ந்து வருகின்றது.

1. **ஆர்மினியா எதிர் அஜர் பைஜான்**
2. **ஜோர்ஜியா எதிர் ஓசற்றியா (OSSETIA)**
3. **ஜோர்ஜியா எதிர் ஆப்காசியா (ABKHAZIA)**
4. **ஜோர்ஜியா எதிர் இங்குஸ் (INGUSH)**
5. **மொல்டோவியா எதிர் PRINDENESTROVJE**

ஆகிய முரண்பாடுகள் ஒரே புவியியல் எல்லைக்குள் திணிக்கப்பட்டுள்ள இனக் குழுமங்களின் பிரச்சினைகளே என்பது கவனிக்கத்தக்கது.




குர்திஷ்தான்

Image Source - www.britannica.com

குர்தியர்கள் (KURDS) என்னும் தேசிய இனத்தின் பிரச்சினை இன்னொரு சிறந்த உதாரணமாகும். துருக்கி, ஈராக், ஈரான், ஆர்மீனியா, சிரியா என்னும் ஐந்து நாடுகளின் எல்லைகளுக்குள் குர்தியர்கள் பிளவுபட்டுச் சிதறியுள்ளனர். அவர்கள் வாழும் இந்தப் பகுதி குர்திஸ்தான் (KURDISTAN) என அழைக்கப்படுகிறது. ஈராக்கிற்குள் அமைந்த குர்திஸ்தான் பகுதிக்கு 2005 இன் ஈராக் அரசியல் யாப்பு சமஷ்டி அலகு என்னும் அந்தஸ்தை வழங்கியுள்ளது.

## நாடுகளின் எல்லைகளுக்குள் அகப்பட்டுள்ள சிறுபான்மை இனங்கள்

பண்பாடு, சமயம், மொழி என்பவற்றால் வேறுபட்ட இனக் குழுமங்கள் (ETHNIC COMMU NITIES) ஒரு நாட்டின் எல்லைக்குள் சேர்ந்து வாழும் நிலை இருக்கும் போது இனக் குழுமங்களின் உரிமைகள் தொடர்பான சிக்கலான பிரச்சினைகள் எழுகின்றன. சட்டசபை போன்ற அரசாங்க நிறுவனங்களில் வெவ்வேறு இனக் குழுமங்களிற்குப் பிரதிநிதித்துவம் வழங்குதலும் அதிகாரத்தில் அவற்றின் பங்கும் (SHARE OF STATE POWER) மிக முக்கியமான பிரச்சினையாகும். சிறிய இனக் குழுமங்களும் சமூகக் குழுமங்களும் ஒரு நாட்டிற்குள் சிதறிப் பரவியிருக்கும் நிலையில் அவ் இனக் குழுமங்களுக்கு தேவைப்படுவது சமத்துவம் (EQUALITY) ஆகும். சட்ட சபைகளிலும் நிர்வாகத் துறையிலும் தமது சனத் தொகை வீதாசாரத்திற்கு ஏற்ற அளவு பிரதிநிதித்துவத்தை அவ் இனக் குழுமங்கள் எதிர்பார்க்கின்றன. இதுவே அவை கேட்கும் சமத்துவ உரிமை. அத்தோடு இச் சிறுபான்மை இனக் குழுமங்களுக்குப் பாரபட்சம் காட்டப்பட மாட்டாது என்பதற்கான அரசியல் யாப்பு உத்தரவாதமும் (CONSTITUTIONAL GUAR ANTEES OF EQUALITY AND NONDISCRIMINATION) வழங்கப்பட வேண்டும் என அவை எதிர்பார்க்கின்றன. வேலை வாய்ப்புகளில் சம உரிமை, கல்வி வசதிகள், பாடசாலைகள், பல்கலைக் கழகங்களிற்கு அனுமதி என்பன போன்ற பிரச்சினைகளும் எழுகின்றன. அச் சமூகங்களின் பண்பாட்டைப் பாதுகாப்பதும், அவற்றை வளர்ப்பதும் மிக முக்கியமான விடயமாகும். சிறுபான்மை இனக் குழுமங்களின் மொழியுரிமை பாதுகாக்கப்பட வேண்டும். அரசாங்கத்துடன் தமது சொந்த மொழிலேயே கருமங்களை ஆற்றுவதற்கும் தொடர்பு கொள்வதற்கும் உரிமை வேண்டும். சிறிய சமூகங்கள் தம்மை 'சிறுபான்மை' (MINORITY) என்ற சொல்லால் அழைப்பதையே வெறுக்கின்றன. அவை தம்மை ஒரு தேசிய இனம் (NATION) அல்லது மக்கள் (A PEOPLE) என அழைப்பதையே விரும்புகின்றன.

'சிறுபான்மை' என்ற சொல் சிறிய இனக் குழுமங்களை இழிவுபடுத்தும் சொல்லாகக் கருதப்படுகின்றது.

## தாயகம் அல்லது வாழிடம்

சிறிய இனம் ஒன்று ஒரு நாட்டின் குறித்த ஒரு பகுதியில் செறிந்து வாழுமிடத்து அது ஒரு புவியியல் பகுதியைத் தனது தாயகமாக அல்லது வாழிடமாகக் கொண்டதாக அமைகிறது. அவ்வாறான வாழிடத்தைக் கொண்ட சமூகங்கள் வெறுமனே 'சமத்துவம்' (EQUALITY) என்பதுடன் திருப்தியடைவதில்லை. அச் சமூகங்கள் தாம் வாழும் பகுதியிலே தமது அலுவல்களைத் தாமே தீர்மானித்துக் கொள்ளும் அரசியல் அதிகாரத்தையும் வேண்டி நிற்கின்றன. ஒருங்கே ஓரிடத்தில் ஒரு சமூகம் வாழும் போது தனது பண்பாட்டு அடையாளத்தை வெளிப்படுத்தவும், அரசியல் தளத்தில் அரசு அதிகாரத்தில் (STATE POWER) பங்கேற்பு செய்யவும் விரும்புகிறது. இதனை சுய ஆட்சி (AUTONOMY) என்பர். சுயாட்சிக்கான கோரிக்கையை இச் சமூகம் முன்வைக்கக் காரணமாக அமைவது ஒன்றாக ஓரிடத்தில் வாழ்தல் (BEING TOGETHER) என்னும் பண்புக் கூறாகும். பிரதேச சுயாட்சிக்கான கோரிக்கை ஒரு குறித்த சமூகம் ஓரிடத்தில் செறிந்து வாழ்வதால் இயல்பாகவே தோன்றுவது. அது குறைபாடுகள், மனக்குறைகள் என்பன இருப்பதன் காரணமாகத் தோன்றுவதில்லை. குறைகள் என எவையும் இல்லாதவிடத்தும் சுயாட்சிக் கோரிக்கை தோன்றலாம். அக் கோரிக்கை பண்பாட்டு அடையாளம் காரணமாகவே எழுகிறது. குறைகள் இருந்தால் அக் கோரிக்கை மேலும் வலுப்பெறும் என்பதே உண்மையாகும்.

பெரும்பான்மைவாதம் பேசுவோர் புரிந்து கொள்ளத் தவறும் ஒரு உண்மையை ரொப்பர்வீன் (TOPPERWEIN) பின்வருமாறு எடுத்துக் கூறுகின்றார்.

"சிறு இனக் குழுக்கள் தனிநபர்களின் சமத்துவ உரிமைகளைக் (EQUAL RIGHTS) கோரவில்லை. அவை ஒரு சமூகக் குழு என்ற முறையில் குழுவிற்கான சமத்துவத்தையே கோருகின்றன (THEY DO NOT DEMAND EQUAL RIGHTS BUT THE RIGHT TO BE EQUAL AS GROUPS). பிரஜைகள், தனிநபர்கள் என்ற முறையில் அரசியலில் செல்வாக்கைச் செலுத்துவது மட்டுமல்லாமல் தமது இனக் குழுவின் உறுப்பினர்கள் என்ற முறையில் செல்வாக்கைச் செலுத்துவதையும் விரும்புகின்றன. அவை பெரும்பான்மை

ஆட்சியை விரும்புவதில்லை. காரணம், பெரும்பான்மை சிறுபான்மையின் நலன்களைக் கருத்தில் எடுத்துக் கொள்வதில்லை. சிறுபான்மையினர் தொடர்ச்சியாக தமது நலன்கள் பெரும்பான்மைப் பலத்தால் புறந்தள்ளப்படுவதையும், தாம் தொடர்ந்து தோல்வியடைபவர்களாகும் ஆபத்தையும் உணருகிறார்கள்."

**சிறிய இனம் ஒன்று ஒரு நாட்டின் குறித்த ஒரு பகுதியில் செறிந்து வாழுமிடத்து அது ஒரு புவியியல் பகுதியைத் தனது தாயகமாக அல்லது வாழிடமாகக் கொண்டதாக அமைகிறது. அவ்வாறான வாழிடத்தைக் கொண்ட சமூகங்கள் வெறுமனே சமத்துவம் (EQUALITY) என்பதுடன் திருப்தியடைவதில்லை.**

"பெரும்பான்மைச் சமூகங்கள், சிறுபான்மைச் சமூகக் குழுக்களை அரவணைத்து அவர்களின் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து நடந்து கொள்வதால் நாட்டின் ஐக்கியத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் அறை கூவலாக அமையும் வகையில் சிறுபான்மைக் குழுக்கள் பலாத்கார வழிகளில் இறங்குவதில்லை" என்பதையும் ரொப்பர்வீன் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் முடிவுகளை எடுக்கும் செயல் முறையில் சிறுபான்மைக் குழுக்கள் பங்கேற்பதற்கு உத்தரவாதம் அளிப்பதால், அக் குழுக்கள் அரசுக்கு விசுவாசம் உடையனவாகவும், அரசுடன் தம்மை இணைத்து அடையாளப்படுத்தி நடந்து கொள்வனவாகவும் இருப்பதற்கு முன் வருகின்றன. தாம் நிரந்தரமாகவே இழப்புகளை ஏற்பவர்கள், தோல்வியைச் சுமப்பவர்கள் என்ற உணர்வு எழாமல் தடுப்பதற்கும் சிறுபான்மைக் குழுக்கள் அரசியலில் இருந்து அந்நியப்படுவதைத் தடுப்பதற்கும் இது உதவுகிறது. தம்மைப் பற்றிய அடையாள உணர்வு கொண்ட சிறு குழுக்களை உள்ளீர்த்தல் (INCLUSION) அரசியல் செயல்முறையில் அவர்களின் பங்கேற்பை அதிகரிக்கும். அதனால் பிளவுகளும், பலாத்கார மோதல்களும் தவிர்க்கப்படும். சிறுபான்மைக் குழுக்கள் அரசியல் செயல் முறையில் பங்கேற்பதன் ஊடாகத் தமது நலன்களைப் பெறலாம் என்பதை உணரும் போது அரசியலுக்கு அப்பாற்பட்ட வழிகளில் (EXTRAPOLITICAL MEANS) நம்பிக்கை கொள்வதில்லை. பங்கேற்பு உரிமைகளை வழங்குவதால் அரசியல் பொறுப்புகளைச் சிறுபான்மைக் குழுக்கள் பகிர்ந்து கொள்ள முன் வருகின்றன. அது அரசின் ஐக்கியத்திற்கு உதவுகிறது.

பன்மைச் சமூகங்கள் எதிர்நோக்கும் அறைகூவல் சிறிய இனக் குழுமங்களின் நலன்களையும், தேவைகளையும் அறிந்து அவற்றிற்கு இடம் கொடுத்து உதவுதல் ஆகும். ஆகவே முதற்படியாகத் தெரிந்து கொள்ள வேண்டிய விடயம் சிறிய சமூகங்கள் சிதறிப் பரவியுள்ளனவா (DISPERSED) அல்லது ஒரு புவியியல் பிரதேசத்தில் செறிந்து உள்ளனவா என்பதாகும். இதனைப் பொறுத்தே அச் சமூகங்களின் அரசியல் பங்கேற்பை உறுதி செய்யலாம். இனக் குழும அரசியல் முரண்பாடுகள் (ETHNO POLITICAL CONFLICTS) 'சாராம்சத்தில் அரசு அதிகாரம்' (STATE POWER) பற்றிய பிரச்சினையாகும். பெரும்பான்மைவாதம் பேசுவோரில் பலர் புரிந்து கொள்ளத் தவறும் அல்லது ஏற்றுக் கொள்ளத் தவறும் அரசியல் அரிச்சுவடி இதுவாகும். அரசு அதிகாரத்தை மையப்படுத்தி அமையும் இத்தகைய பிரச்சினைகள் அரசு அதிகாரப் பகிர்வு (SHARING OF STATE POWER) மூலமே சாத்தியமாகும்.

'CONSTITUTION MAKING IN MULTI ETHNIC SOCIETIES SOME INTERNATIONAL EXPERIENCES' என்னும் தலைப்பில் அமைந்த 74 பக்கங்கள் வரை நீளும் நீண்ட கட்டுரையின் 1 முதல் 9 ஆம் பக்கம் வரை உள்ள கருத்துக்களைத் தழுவியும் சுருக்கியும் இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. அரசியல் யாப்புச் சட்ட அறிஞர் ஜயம்பதி விக்கிரமரட்ண எழுதிய 'TOWARDS DEMOCRATIC GOVERNANCE IN SRI LANKA A CONSTITUTIONAL MISCELLANY' என்னும் நூலின் முதலாவது அத்தியாயமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

வெளியீடு : INSTITUTE FOR CONSTITUTIONAL STUDIES RAJAGIRIYA, SRI LANKA (2014)

(தொடரும்)

‘இலங்கை பிராமிக் கல்வெட்டுக்களில் நாகர்’ எனும் இத்தொடர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றை தொல்லியல் ரீதியாக நிரூபிக்கத் தேவையான ஆதாரங்களைக் கொண்ட ஆவணமாகும். நாகர் தமிழ் மொழி பேசியவர்கள் எனவும், ஆதி இரும்புக் காலப் பண்பாட்டை பிரதானமாக அவர்களே இலங்கையில் பரப்பினார்கள் எனவும், இங்கு கி.மு ஏழாம் நூற்றாண்டு முதலாகத் தமிழ் ஒரு பேச்சு வழக்கு மொழியாக நிலை பெற்றிருந்தது எனவும் பேராசிரியர் எஸ். பத்மநாதன் கூறியுள்ளார். இலங்கையில் 2300 ஆண்டுகளுக்கு முன்பு பொறிக்கப்பட்ட சுமார் 100 பிராமிக் கல்வெட்டுக்களில் நாக மன்னர்கள், நாக தலைவர்கள், நாக பிரதானிகள், நாக சுவாமிகள், நாக அதிகாரிகள் ஆகியோர் பற்றிய குறிப்புகள் உள்ளன. இலங்கையின் வரலாற்றுதயக் காலத்தில் நாக எனும் பெயர் கொண்ட மன்னர்கள் பலர் ஆட்சி செய்துள்ளனர். இவர்களில் பலர் தமிழ்ச் சமூகத்தோடு தொடர்புடையவர்கள். இவர்கள் பற்றிய வரலாறு மற்றும் வழிபாட்டுப் பாரம்பரியம் ஆகியவை பிராமிக் கல்வெட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு இத்தொடரில் ஆராயப்படுகின்றன.

# வடக்கு மாகாணத்தில் நாகர்




என். கே. எஸ். திருச்செல்வம்

கடந்த 25 வருடங்களாக இலங்கைத் தமிழர் வரலாறு, தமிழர் வழிபாட்டுப் பாரம்பரியம், பிராமிக் கல்வெட்டுகள், இந்து சமயம் என்பன தொடர்பாக ஆய்வுப் பணிகளில் ஈடுபட்டுவரும் கலாநிதி என்.கே.எஸ். திருச்செல்வம் அவர்கள் வரலாற்றுத் துறையில் இளமாணிப் பட்டத்தைப் பெற்றவர். தனது எழுத்துப்பணிக்காகப் பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

இவர் இதுவரை பல உள்நாட்டு மற்றும் சர்வதேசக் கருத்தரங்குகளில் தனது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளதுடன் 18 நூல்களையும் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்களில் ‘தென்னிலங்கையின் புராதன இந்துக்கோயில்கள்’, ‘புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்’, ‘இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்’, ‘யார் இந்த இராவணன்’, ‘பாரம்பரியமிக்க கதிர்காம பாத யாத்திரை’, ‘பண்டைய தமிழ் நூல்களில் சிவன்’, ‘கன்னியா: பண்டைய சைவத் தமிழரின் பாரம்பரிய அடையாளம்’, ‘தமிழரின் குமரி நாடு உண்மையா? கற்பனையா?’ போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும். இவர் தேசிய மற்றும் சர்வதேச சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகியவற்றில் இதுவரை 295 ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.


இலங்கையின் வடபகுதியில் பண்டைய காலத்தில் நாகர் வாழ்ந்தமை மற்றும் நாக வழிபாடு செய்தமை தொடர்பான சான்றுகள் பரவலாகக் காணப்படுகின்றன. சுமார் 2400 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு ஒரு நாக இராச்சியம் சிறப்புற்று விளங்கியதாக பண்டைய நூல்கள் கூறுகின்றன. இங்கு நாகதீபம் எனும் நாக இராச்சியம் இருந்ததாகவும், இங்கிருந்த மகோதரன், சூளோதரன் எனும் இரு நாக மன்னர்களின் மணிமுடி தொடர்பான பிணக்கைத் தீர்ப்பதற்காக புத்த பகவான் இலங்கைக்கு வந்ததாகவும் மகாவம்சம் கூறுகிறது.

வட இலங்கையில் பல இடங்களில் நாகர் கட்டிய குளங்களும், அவர்கள் அமைத்த கோயில்களும் உள்ளன. அவர்கள் கட்டிய குளங்களின் அருகில் தமது வழிபாட்டுச் சின்னமான மூன்று தலை, ஐந்து தலை கொண்ட நாகச் சிலைகளை அமைத்து அக் குளங்களுக்குக் காவலாக அமர்த்தினர். இவ்வாறான நாகச் சிலைகள் வட மாகாணத்தில், வன்னிப் பகுதியில் உள்ள பாவற்குளம், நெளுக்குளம், தண்ணிமுறிப்பு குளம், மதகுவைத்த குளம், சமளங்குளம் ஆகிய பண்டைய குளங்களின் அருகில் இன்றும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

வட மாகாணத்தில் தற்போது உள்ள 5 மாவட்டங்களில் இரண்டு மாவட்டங்களில் மட்டுமே பிராமிக் கல்வெட்டுகள்

காணப்படுகின்றன. அவை வவுனியா மாவட்டத்தில் உள்ள மகாகச்சக்கொடி, எருப்பொத்தான, பெரிய புளியங்குளம் ஆகிய இடங்களிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வெடுக்குநாறி மலையிலும் பொறிக்கப்பட்டுள்ளன. இந் நான்கு இடங்களிலும் மொத்தமாக 54 கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுகள் அனைத்தும் இங்குள்ள மலைப்பகுதியில் இயற்கையாக அமைந்துள்ள கற்குகைகளில் பொறிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பிராமிக் கல்வெட்டுகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை.

வவுனியா மாவட்டத்தில் நான்கு இடங்களிலும் உள்ள 54 பிராமிக் கல்வெட்டுகளில் 7 கல்வெட்டுகளில் மட்டுமே நாகர் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் எழுதப்பட்டுள்ள விபரங்களைப் பார்க்கலாம்.

## மன்னன் நாகன், சுட்டி நாகன், பக்தன் நாகன் ஆகியோர் பற்றிக் கூறும் பெரிய புளியங்குளம் கல்வெட்டுகள்


வவுனியா நகரில் இருந்து ஹொரவப் பொத்தானைக்குச் செல்லும் வீதியில் 2 கி.மீ தூரத்தில் உள்ள வெளிக்குளம் சந்தியில் இருந்து வடக்கு நோக்கிச் செல்லும் வீதியில் 15 கி.மீ தூரத்தில், காட்டு மாங்காய் குளம், மாமாடு, மகாகச்சக்கொடி ஆகிய இடங்களைக் கடந்து செல்லும் போது பாதையின் வலது பக்கம் எருப்பொத்தானை குளம் காணப்படுகிறது. இக் குளத்தைக் கடந்து சற்று தூரம் சென்றதும் பெரிய புளியங்குளம் சந்தியை அடையலாம். இச் சந்தியின் அருகில் வலது பக்கம் ஒரு மலைப்பகுதி அமைந்துள்ளது. இங்குதான் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

இவ் உயரமான கற்பாறைத் தொகுதியில் சுமார் 100 அடி உயரமான ஒரு நீண்ட பாறையின் மீது மூன்று பெரிய கற்பாறைகளும், ஐந்துக்கும் மேற்பட்ட சிறிய கற்பாறைகளும் தூக்கி வைத்தாற்போல் இயற்கையாகவே அமைந்துள்ளன. இவற்றிலே பெரிய பாறை ஒன்று முதலையின் வடிவில் காணப்படுகிறது. இதனால் இது முதலைப் பாறை (சிங்கள மொழியில் கிம்புலாகல) என அழைக்கப்படுகிறது. இப் பாறைத் தொகுதியில் இயற்கையான பல கற்குகைகள் காணப்படுகின்றன. இவற்றின் மேற்பகுதியில் கற்புருவங்கள் வெட்டப்பட்டு அதன் கீழே கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன.

பெரிய புளியங்குளம் மலைப்பகுதியில் மொத்தமாக 39 பிராமிக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 35 முற்கால பிராமிக் கல்வெட்டுகளும், 4 பிற்கால பிராமிக் கல்வெட்டுகளும் அடங்குகின்றன. இக் கல்வெட்டுகளில் 6 கல்வெட்டுகள் நாகர் பற்றிக் குறிப்பிடுகின்றன. அவை பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

***“ரஜ நாக ஜித ரஜ உதி ஜய அபி அனுரதி க ரஜ உதி க கரபிட செ இம லேன சட்டுதிசச சகய அகட்ட கட்டன பசு விகரயே அபரிமித லோகதட்டுய சட்டன சித சுகயே”***

இதன் பொருள்; *Princess Abi Anurathi, daughter of King Naga and wife of king Uttiya, and king Uttiya, caused this cave to be established, for the sangha of the four quarters, as comfortable abode of all that are come, and for the welfare and the happiness of beings in the boundless universe”* என்பதாகும்.



மன்னன் நாகன் பற்றிக் குறிப்பிடும் நான்கு கல்வெட்டுகளின் பிரதிகள்

தமிழில் இது பின்வருமாறு பொருள்படுகிறது;

“மன்னன் நாகனின் மகளும், மன்னன் உத்தியனின் மனைவியுமான இளவரசி அனுராதியின் இந்தக் குகை நாலாபுறமும் உள்ள

சங்கத்தாருக்காகவும், வருவோர் அனைவருக்கும் வசதியான வசிப்பிடமாகவும், எல்லையற்ற பிரபஞ்சத்தில் உள்ள உயிரினங்களின் நலன் மற்றும் மகிழ்ச்சிக்காகவும் வழங்கப்பட்டது."

மேலும் 3 கல்வெட்டுகள் இதே மாதிரியாக, இதே அர்த்தத்துடன் பொறிக்கப்பட்டுள்ளன. இந் நான்கு கல்வெட்டுகளிலும் மன்னன் நாகன் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந் நாக மன்னன் இப் பிரதேசத்தை ஆட்சி செய்த ஒரு சிற்றரசனா அல்லது இலங்கையை ஆட்சி செய்த நாக மன்னர்களில் ஒருவனா என்பது தெரியவில்லை. கல்வெட்டு பொறிக்கப்பட்ட இக் காலப்பகுதியில் கல்லாட்ட நாகன், சோர நாகன் எனும் இரு நாக மன்னர்கள் அநுராதபுரத்தில் இருந்து இலங்கையை ஆட்சி செய்துள்ளனர். மட்டக்களப்பு மான்மியத்தின் குறிப்புகளின்படி இக் காலப்பகுதியில் மண்டு நாகன், சேரர் நாகன், கொட்டியன் ஆகிய மூன்று நாகச் சிற்றரசர்கள் கிழக்கிலங்கையை ஆட்சி செய்துள்ளனர். கல்வெட்டு குறிப்பிடும் நாக மன்னன் இந்த மூவரில் ஒருவனாகக் கூட இருக்கலாம்.

பெரிய புளியங்குளத்தில் காணப்படும் கல்வெட்டுகளில் நாகர் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள ஐந்தாவது கல்வெட்டின் வாசகங்கள் பின்வருமாறு :

**"பருமக உதி புத சுடி நாகசு லேனே"**

இதன் பொருள் ஆங்கிலத்தில் "*The cave of Cudi Naga, son of the chief Uttiya*" என்பதாகும். இது தமிழில் "பெருமகன் உத்தியனின் மகனான சுட்டி நாகனின் குகை" எனப் பொருள்படும்.



சுட்டி நாகன் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டின் பிரதி

நாகர் பற்றிக் கூறும் ஆறாவது கல்வெட்டின் விபரங்கள் பின்வருமாறு :

**"உபசக நாகஹ லேனே சகச தினே"**

இதன் பொருள் "பாமர பக்தன் நாகனின் குகை சங்கத்தாருக்கு வழங்கப்பட்டது" என்பதாகும். ஆங்கிலத்தில் இது "*The cave of the lay devotee Naga, is given to the sangha*" எனப் பொருள்படும்.



பாமர பக்தன் நாகன் பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டின் பிரதி

பெரிய புளியங்குளத்தில் நாகர் பற்றிக் குறிப்பிடும் மேற் சொல்லப்பட்ட ஆறு கல்வெட்டுகள் கூறும் செய்திகளின்படி, இப்பகுதியில் நாக மன்னனின் மகளான இளவரசி ஒருத்தி குகைகள் சிலவற்றைப் பயன்படுத்தியுள்ளமை தெரிகிறது. மேலும் இப் பகுதியில் சுட்டி நாகன் என்பவனும், நாகன் எனும் பெயர் கொண்ட பாமர பக்தன் ஒருவனும் இருந்துள்ளமையும் தெளிவாகத் தெரிகிறது.

## நாக எனும் பெயர் கொண்ட பாமரப் பெண் பக்தை பற்றிக் கூறும் எருப்பொத்தான கல்வெட்டு

வவுனியா நகரில் இருந்து பெரிய புளியங்குளத்திற்குச் செல்லும் வழியில் எருப்பொத்தானை குளம் அமைந்துள்ளது. இக் குளத்தின் அருகில் உள்ள காட்டுப் பகுதியில் உள்ள மலைப் பாறைகளில் இயற்கையாக அமைந்துள்ள குகைகளில் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. கற்புருவங்கள் வெட்டப்பட்ட இக் குகைகளில் மொத்தமாக 12 கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் உள்ள ஒரு கல்வெட்டில் நாகர் பற்றி கூறப்பட்டுள்ளது. அக் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ள வாசகங்களின் விபரங்கள் பின்வருமாறு :

***"பருமக ஹடகஹ பரிய உபாசிக நாகய க புத்த உபாசக திசஹ க உபாசக தேவஹ க லேனே அகட்ட அனகட்ட சட்டு திச சகச நியதே"***

# மிகுந்தலையில் நாக வழிபாடும், நாகர் பற்றிய பிராமிக் கல்வெட்டுகளும்



**மிகுந்தலை மலைப்பகுதி**

*அனுராதபுரம் மாவட்டத்தில் மொத்தமாக 431 பிராமிக் கல்வெட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 347 கல்வெட்டுகள் ஆங்கிலேயர் காலத்திலும், 84 கல்வெட்டுகள் அண்மையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.*

*இவற்றில் தமிழர் வழிபாட்டுப் பாரம்பரியம் மற்றும் இந்துத் தெய்வங்கள் தொடர்பான 116 கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் நாகர் பற்றி 31 கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*அனுராதபுரம் நகரில் இருந்து திருகோணமலைக்குச் செல்லும் வீதியில் 15 கி.மீ தொலைவில் மிகுந்தலை என்னுமிடம் அமைந்துள்ளது. இங்கு மலைப் பாறைகள் நிறைந்த பிரதேசத்தில் இயற்கையாக அமைந்த நூற்றுக்கணக்கான கற்குகைகளும், அவற்றில் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளும் மற்றும் பரந்த அளவில் பண்டைய கட்டிட இடிபாடுகளும் காணப்படுகின்றன. இங்கு சுமார் 2000 வருடங்களுக்கு முற்பட்ட காலங்களிலே நாக வழிபாடு நிலவியிருந்தமை தொடர்பான சான்றுகள் பல காணப்படுகின்றன.*

### மணிநாக மந்திரய எனும் மணிநாகன் பள்ளி

மிகுந்தலை மலையடிவாரத்தில் மலைக்கு ஏறிச் செல்லும் பிரதான வாயிலில், பிரசித்தி பெற்ற அகலமான கற்படிகளின் தொடக்கத்தில், அதன் இடது பக்கத்தில் ஒரு கட்டிட இடிபாடு காணப்படுகிறது. நீள் சதுர வடிவமுள்ள பாரிய கற்பாளங்களின் மூலம் கட்டப்பட்ட மதிற் சுவரினால் சூழப்பட்டுள்ள இக் கட்டிடத் தொகுதியில் மொத்தமாக ஐந்து கட்டிட இடிபாடுகள் காணப்படுகின்றன. சதுர வடிவமான இக் கட்டிடங்களின் அடித்தளமும், சில தூண்களும் மட்டுமே எஞ்சியுள்ளன.


மணிநாகன் பள்ளி


இக் கட்டிடத் தொகுதிக்குச் செல்ல தூண்களுடன் கூடிய வாயில் அமைக்கப்பட்டுள்ளது. வாயிலைக் கடந்தவுடன் இடது பக்கமும், வலது பக்கமும் இரு கட்டிடங்கள் காணப்படுகின்றன. இவற்றைக் கடந்தவுடன் மத்தியில் ஒரு பெரிய கட்டிடம் உள்ளது. அதை அடுத்து இடது பக்கமும், வலது பக்கமும் இரு கட்டிடங்கள் காணப்படுகின்றன. இவற்றின் பின்பக்கம் மலைப் பாறைகள் இக் கட்டிடத் தொகுதிக்கு அரணாக அமைந்துள்ளன.

இக் கட்டிடத் தொகுதி “மணிநாக மந்திரய” எனப் பெயரிடப்பட்டுள்ளது. பேராசிரியர் எஸ். பத்மநாதன் தனது நூல்களில் குறிப்பிட்டுள்ள மணிநாகன் பள்ளிகளில் ஒன்றாக இது இருக்க வேண்டும். பண்டைய காலத்தில் கிழக்கிலங்கையில் நாகர் அமைத்த மணிநாகன் பள்ளிகள் பற்றி பேராசிரியர் எழுதிய இலங்கைத் தமிழர் வரலாறு எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

### கந்தக்க தூபியில் நாகராஜர் மற்றும் நாகச் சிற்பங்கள்

மிகுந்தலையில் உள்ள மிகப் பழமை வாய்ந்த தூபிகளில் ஒன்றே கந்தக்க தூபியாகும். மணிநாகன் பள்ளியைக் கடந்து அகலமான கற்படிகளில் ஏறிச் செல்லும்போது ஒரு சிறிய மேடை உள்ளது. இம் மேடையின் வலது பக்கத்தில், மேல் நோக்கிச் செல்ல கற்படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்


கந்தக்க தூபியில் உள்ள ஐந்து தலை நாகத்தின் புடைப்புச் சிற்பம்


கந்தக்க தூபியில் உள்ள நாகராஜனின் புடைப்புச் சிற்பம்



**ஐந்து தலை நாகத்துடன் காணப்படும் நாகச் சுனை**

கற்படிகள் மூலம் மேல் நோக்கிச் சென்றால் கந்தக்க தூபியை அடையலாம். இத் தூபியின் வாகல்கட என்றழைக்கப்படும் நான்கு பக்கங்களிலும் உள்ள வாயில்களில் அதிகளவில் புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள ஒரு வாயிலின் இரண்டு பக்கங்களிலும் மூன்றரை அடி உயரமான ஐந்து தலை நாகத்தின் புடைப்புச் சிற்பங்கள் இரண்டு செதுக்கப்பட்டுள்ளன.

இன்னுமோர் வாயிலின் இரு பக்கங்களிலும் மூன்றரை அடி உயரமான கை கூப்பிய நிலையில் உள்ள ஏழு தலை நாகராஜனின் இரண்டு புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இத் தூபி யாரால், எந்தக் காலப் பகுதியில் அமைக்கப்பட்டது எனும் விபரங்கள் வரலாற்று நூல்களில் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. இருப்பினும் பொ.ஆ.மு 59 - 50 காலப்பகுதியில் இலங்கை மன்னனாகவிருந்த லஜ்ஜிதிஸ்ஸ எனும் மன்னன் கந்தக்க தூபிக்கு பூஜைகள் நடத்தியது பற்றிய குறிப்புகள் மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளன.

எனவே இவனது காலத்திலோ அல்லது இதற்கு சற்று முந்திய காலத்திலோ கந்தக்க தூபி அமைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது. இதன்படி மிகுந்தலையில் கந்தக்க தூபி அமைக்கப்பட்ட காலத்தில் அதாவது சுமார் 2000 வருடங்களுக்கு முன்பு இங்கு நாக வழிபாடு செல்வாக்குடன் விளங்கியிருக்கும் என நம்பக்கூடியதாக உள்ளது. இத் தூபியில் வாகல்கட என்றழைக்கப்படும் வாயிலில் பிள்ளையாரின் வடிவமும் புடைப்புச் சிற்பமாக செதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. கந்தக்க தூபியில் விநாயகர் மட்டுமல்லாது இரண்டு தூண்களில் அழகிய நந்தியின் சிற்பமும் காணப்படுகிறது. இது இப் பகுதியில் நிலவிய சிவ வழிபாட்டின் அடையாளமாகும்.

### நாகச் சுனை

மிகுந்தலை மலை உச்சிக்குச் செல்லும் போது இடையில் காணப்படும் இடம் மெத மழுவ (மத்திய பகுதி) என அழைக்கப்படுகிறது. இங்கு தான் பிரசித்தி பெற்ற இரண்டு கற்பலகைக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவ்விடத்தில் இருந்து இடது பக்கமாக மலையின் உச்சிப் பகுதிக்குச் செல்லும் கற்படிகளில் சிறிது தூரம் சென்றதும் படிகளின் வலது பக்கமாக ஒரு ஒற்றையடிப் பாதை செல்கிறது. இப் பாதை வழியாகச் சிறிது தூரம்

சென்றதும் இயற்கையாக அமைந்துள்ள ஒரு நீர்ச் சுனையைக் காணலாம். இதுவே நாக பொக்குன என்றழைக்கப்படும் நாகச் சுனையாகும்.

சுமார் 30 அடி உயரமும், 90 அடி நீளமும் கொண்ட ஒரு பாறையின் கீழ்ப்பகுதியில் இயற்கையாக அமைந்துள்ள உட்குழிவான பகுதியில் மழை நீர் தேங்கி நிற்பதனால் இச் சுனை உருவாகியுள்ளது. சுமார் 15 அடி ஆழமும், 20 அடி அகலமும், 80 அடி நீளமும் கொண்ட இச் சுனையின் பின்பக்கம் உள்ள செங்குத்தான கற்பாறையின் மத்திய பகுதியில் ஐந்து தலை நாகம் படமெடுத்த வண்ணம் இருக்கும் வடிவம் செதுக்கப்பட்டுள்ளது. 15 அடி உயரமான இந் நாகத்தின் தலையுடன் கூடிய உடலின் பாதி நிலைக்குத்தாக நின்ற வண்ணமும், அடுத்த பாதி வாலுடன் பின்பக்கமாக பாறைக்குள் செல்வது போலவும் நாகத்தின் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது.

மகாவம்சத்தில் மகிந்த தேரர் இலங்கைக்கு வருகை தந்தமை தொடர்பான வரலாற்றுச் செய்திகளில் “நாக சதுஷ்க” எனும் சுனை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. மகிந்த தேரர் மிகுந்தலை மலையில் தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பொ.ஆ. 575 - 608 காலப் பகுதியில் இலங்கையை ஆட்சி செய்த 1 ஆம் அக்ரபோதி மன்னன் “நாக சொந்தி” எனும் சுனையை அமைத்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. இது இந்த நாகச் சுனையாக இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.

## பிராமிக் கல்வெட்டுகள்


மிகுந்தலையில் உள்ள மலைகளில் உள்ள குகைகளில் மொத்தமாக 82 பிராமிக் கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் இந்து வழிபாட்டு பாரம்பரியம் சம்பந்தமான 11 பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவற்றில் நாகர் தொடர்பாக 5 கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மிகுந்தலையில் அதிகளவில் பிராமிக் கல்வெட்டுகள் காணப்படும் மலைப்பகுதி அட்டசட்ட லேன என அழைக்கப்படுகிறது. இதன் பொருள் அறுபத்தெட்டு கற்குகைகள் என்பதாகும். இயற்கையாக அமைந்த இக் கற்குகைகளில் கற்புருவங்கள் வெட்டப்பட்டு அவற்றின் கீழே பிராமி எழுத்துக்களில் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

மிகுந்தலையில் காணப்படும் நாகர் தொடர்பான கல்வெட்டுகளில் முதலாவது கல்வெட்டில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

***“உபசிக மஹாநாகய ஜிதய உபசிக ரொனிய சகச”***




பெருமகன் நாகன் பற்றிய கல்வெட்டின் பிரதி



பக்தன் நாகமித்தன் பற்றிய கல்வெட்டின் பிரதி

இது ஆங்கிலத்தில் “*The cave of the female lay devotee Roni [Rohini], daughter of the female lay devotee Mahanaga [is given]to the sangha*” எனப் பொருள்படுகிறது. இதன் தமிழ் அர்த்தம் “பாமர பெண் பக்தையான மகாநாகவின் மகளான பாமர பெண் பக்தை ரொனியின் [ரோகிணியின்] கற்குகை” என்பதாகும்.



பெண் பக்தை மகாநாக பற்றிய கல்வெட்டின் பிரதி

இரண்டாவது கல்வெட்டின்

விபரங்கள் பின்வருமாறு:

*“பருமக நாக புத்த அசலிய லேன அகட்ட அனகட்ட சட்டுதிசிக சகய”*

இதன் கருத்து “பெருமகன் நாகனின் மகனான அசலியவின் கற்குகை, நாலா திசைகளிலும் உள்ள சங்கத்தார் வந்தாலும், வராவிட்டாலும் வழங்கப்பட்டுள்ளது” என்பதாகும். இது ஆங்கிலத்தில் “*The cave of Asali, son of the chief Naga, [is given] to the sangha of the four quarters, present and absent*” எனப் பொருள்படும்.

மூன்றாவது கல்வெட்டில் “உபசிக நாகமித்த பரியய உபசிக சிலய லேனே சகச” எனப் பொறிக்கப்பட்டுள்ளது. இது ஆங்கில மொழியில் “*The cave of the female lay devotee Sila, wife of the lay devotee Nagamitta, [is given] to the sangha*” எனவும், தமிழில் “பாமர பக்தன் நாகமித்தனின் மனைவியான பாமர பெண் பக்தை சிலாவின் கற்குகை சங்கத்தார்க்கு வழங்கப்பட்டது” எனவும் பொருள்படுகிறது.

நான்காவது கல்வெட்டின் விபரங்கள் பின்வருமாறு:

*“பருமக நாக புத பருமக பிகல குதச லேனே அகட்ட அனகட்ட சடு திச சகச தினே”*

இதன் பொருள் “பெருமகன் நாகனின் மகனான பெருமகன் பிங்கலகுத்தனின் குகை நாலா திசைகளிலும் உள்ள சங்கத்தார் வந்தாலும், வராவிட்டாலும் வழங்கப்பட்டுள்ளது” என்பதாகும். இது ஆங்கிலத்தில் “*The cave of the chief Pingalagutta, son of the chief Naga, is given to the sangha of the four quarters, present and absent*” எனப் பொருள்படும்.

மிகுந்தலையில் நாகர் பற்றிக் குறிப்பிடும் ஐந்தாவது கல்வெட்டு பிற்காலத்தில் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டாகும். இக்கல்வெட்டின் விபரங்கள் பின்வருமாறு:

***“கமிக உடக புதஹ மேல நாகஹ லேன சட்டு திச சகச”***

இதன் பொருள் “கிராம அதிகாரி உடவின் மகனான மேள நாகனின் குகை நாலா திசைகளிலும் இருந்து வரும் சங்கத்தாருக்கு வழங்கப்பட்டுள்ளது” என்பதாகும். ஆங்கிலத்தில் இது “*The cave of Mela Naga, son of the village councillor Uda, is given to the sangha of the four quarters*” எனப் பொருள்படும்.

**மகாவம்சத்தில் மகிந்த தேரர் இலங்கைக்கு வருகை தந்தமை தொடர்பான வரலாற்றுச் செய்திகளில் “நாக சதுஷ்க” எனும் சுனை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. மகிந்த தேரர் மிகுந்தலை மலையில் தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பொ.ஆ. 575 - 608 காலப் பகுதியில் இலங்கையை ஆட்சி செய்த 1 ஆம் அக்ரபோதி மன்னன் “நாக சொந்தி” எனும் சுனையை அமைத்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது. இது இந்த நாகச் சுனையாக இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது.**

மிகுந்தலையில் உள்ள மேற் குறிப்பிடப்பட்டுள்ள நாகம் தொடர்பான கல்வெட்டுகளில் பெண் பக்தை மகாநாக, பெருமகன் நாகன், பக்தன் நாக மித்தன், மேள நாகன் ஆகிய நாகரின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மிகுந்தலைப் பகுதியில் நாகர் வாழ்ந்துள்ளனர் என்பது உறுதியாகத் தெரிகிறது.

மேலும் இப்பகுதியில் அமைந்திருந்த மணிநாகன் பள்ளி, நாகச் சுனை மற்றும் நாக சிற்பங்கள் ஆகியவை மிகுந்தலை மலைப் பகுதியில் 2000 வருடங்களுக்கு முன்பு நாகர் வாழ்ந்துள்ளதோடு, நாக வழிபாடுகளையும் மேற்கொண்டுள்ளனர் என்பதை உறுதி செய்யும் சான்றுகளாக அமைகின்றன.

(தொடரும்)

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக வர்க்க அரசியலை மேவியதாக அடையாள அரசியல் மேலெழுந்து வந்துள்ளது. இனத்தேசியம் மதபேதம் என்பவற்றுக்கு அப்பால் சாதியுணர்வுடன் இணைந்த அடையாள அரசியல் முதன்மை இடம்பெற்றுள்ள இன்றைய சூழலில் எமது சமூக கட்டமைப்பில் வர்க்கமும் சாதியும் பின்னிப்பிணைந்துள்ளன எனும் விடயம் பேசுபொருளாகியுள்ளது. எமது சமூக உருவாக்கம் வர்க்க அடித்தளம் உடையதல்ல சாதிகளின் கட்டமைப்பு சார்ந்து இயங்கும் எமக்கான அரசியல் செல்நெறி வர்க்க அமைப்பின் வரலாற்றுச் செல்நெறிக்குரியதினின்றும் வேறுபட்டது என்ற விடயத்தினை தமிழர் வரலாற்றுத் தொடக்கமாக அமைந்த திணை வாழ்வியலை மையமாக கொண்டு ஆய்வு செய்வதாக 'தமிழ்ப் பண்பாடு: ஊற்றுகளும் ஓட்டங்களும்' என்ற இத்தொடர் அமைகிறது.



நடேசன் இரவீந்திரன்

இரவீந்திரன் அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி கலைப்பட்டதாரி. பேராதனைப் பல்கலைக்கழகத்திலேயே முதுகலைமாணிப்பட்டத்தினையும் 'திருக்குறளின் கல்விச்சிந்தனை' எனும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் மலையகத்தின் சிறிபாத கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளதுடன் 1995இல் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும் பணியாற்றியுள்ளார்.

இரவீந்திரன் 18இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் 'பாரதியின் மெய்ஞ்ஞானம்', 'இலங்கையின் சாதியமும் அவற்றிக்கெதிரான போராட்டங்களும்', 'பின்நவீனத்துவமும் அழகியலும்', 'கலாச்சாரம் எதிர் கலாச்சாரம் புதிய கலாச்சாரம்', 'இந்துத்துவமும் இந்து விடுதலை நெறியும்', 'சாதியமும் சமூக மாற்றங்களும்', 'இரட்டைத் தேசியமும் பண்பாட்டுப் புரட்சியும்', 'சாதி தேசம் பண்பாடு' என்பன குறிப்பிடத்தக்கவை.

# மத நீக்க ஆன்மீக எழுச்சி

மத நாயகம் இயக்கி வந்த மனித சமூக வரலாற்றில் ஜனநாயகத்தினுடைய இயங்காற்றல் வேகம் கொள்ளத் தொடங்கிய பத்தொன்பதாம் நூற்றாண்டை இப்போது அலச வேண்டியவர்களாக இருக்கிறோம். பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக்கூறில் (1789) ஏற்பட்டிருந்த பிரான்சியப் புரட்சி நிலப்பிரபுத்துவ முடியாட்சியைத் தகர்த்ததைத் தொடர்ந்து முதலாளித்துவ ஜனநாயக வாழ்முறை விரிவாக்கம் பெற்று வளர்ந்தது. அரை நூற்றாண்டுப் போராட்டங்கள் ஊடாகவே முதலாளித்துவ ஜனநாயக அரசு முறைமை நிலைபேறான உறுதியினைப் பிரான்சிலும் எட்ட இயலுமாயிற்று. அவ்வாறு எட்டிய போது பாட்டாளி வர்க்கம் தனக்கான அமைப்பாக்கத்தை (கம்யூனிஸ்ட் கட்சியை) ஐரோப்பிய அளவில் வடிவப்படுத்தியவாறு ஏற்றத் தாழ்வான வாழ்வியலை ஒழித்துக் கட்டுவதன் வாயிலாகச் சமத்துவத்தை வென்றெடுப்பதற்கு உரிய வர்க்கப் போராட்டக் களத்தைத் திறந்ததுமன்றி அதனை முனைப்பாக்கவும் தொடங்கிவிட்டிருந்தது.

அன்றைய வர்க்கப் போராட்டக் கூர்முனையாகத் திகழ்ந்த பிரான்சில் சோசலிச நாட்டம் மேலோங்கிய சமகாலத்தில் திணை அரசியல் முறைமையை வெளிப்படுத்தும் செயற்களமாக நீண்ட வரலாற்றுத் தடத்தில் இயங்கிய தமிழகம் எவ்வகை மாற்றங்களை அரங்கேற்றியது? எமக்கான திணை அரசியல் சமூகத்திலும், வர்க்க அரசியல் முனைப்பாகச் செயலாற்றிய ஐரோப்பாவிலும் எவ்வகை வகிபாகத்தை மதம் பெற்றிருந்தது என்பதனை விளக்கம் கொள்வதன் வாயிலாக இதனைப் புரிந்து கொள்ள முயற்சிக்கலாம். ஐரோப்பிய நிலப்பிரபுத்துவத்தின் மதமாக இயங்கிய கிறிஸ்தவம் தனக்கான

**கடவுள் சிந்தனையில் ஏற்பட்டு வந்த விருத்திகள் ஒவ்வொன்றும் சமூக அமைப்பு மாற்றங்களுடன் தொடர்புடையன. மக்களுடைய வாழ்வாதார விருத்திகளுக்கு வழக்கிலுள்ள பொருளுற்பத்தி முறைமை முட்டுக்கட்டை இடும் போது அதனைத் தகர்த்தவாறு புதிய பொருளுற்பத்தி உறவு மேலெழுவதன் ஊடாகவே மனித குல வரலாறு வளர்ச்சி பெற்று வந்தது.**



வள்ளலார் Image Source - ta.wikipedia.org

திருச்சபை மூலமாக அரசு நிர்வாகத்தைத் தனது கண்காணிப்புக்குள்ளும் கட்டுப்பாட்டிலும் வைத்துக்கொண்டது. எந்தவொரு அரச குலம் ஐரோப்பிய நாடொன்றை ஆட்சி செய்வதாயினும் திருச்சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வேண்டும். அந்த நாடு அரசால் மட்டுமன்றி திருச்சபை ஊடாக மதத்தாலும் ஆளப்படுவதாக இருந்தது. சமூக மனசாட்சியாக அமையவல்ல கல்வி, இலக்கியம், கலை என்பனவும் மதத்தைச் சார்ந்தே இயங்க அனுமதிக்கப்பட்டன. அறிவியல் (விஞ்ஞானத்) தேடல் முற்றாகத் தடுக்கப்பட்டிருந்தது. நிலப்பிரபுத்துவ அரசைத் தகர்த்து மக்களால் மக்கள் ஆளப்படும் அரசாக அமையும் ஜனநாயகக் குடியரசுக் கட்டமைப்பின் தேவை எழுச்சி பெற்றபோது அரசு, கல்வி, பண்பாட்டுச் செயலொங்குகள் என்பன யாவும் மதச் சார்பற்றதாக இயங்க வேண்டும் என்ற அறிவுப் புரட்சியுடன் இணைந்ததாக அந்த மாற்றம் அங்கே நடந்தேற வேண்டியிருந்தது!

அடிமைகளால் போற்றப்பட்ட ஜேசு கிறிஸ்துவை நிலப்பிரத்துவத்துக்கானதாக மடை மாற்றியிருந்தது திருச்சபை. பண்ணைக்குச் சொந்தக்காரனான எசமானருடன் அவரது நிலத்துடன் பிணைக்கப்பட்டு பணியாற்றும் பண்ணையடிமையாகிய விவசாயியைத் திருச்சபையின் உள்ளூர் அமைப்பில் ஒன்றிணைப்பதன் வாயிலாக உழைப்பு அபகரிப்புக்குரிய செயலொழுங்குகளைக் ஐரோப்பாவில் கண்காணித்து மேற்கொள்ள வேண்டியிருந்தது. முன்னதாக இடம்பெற்ற கிரேக்கஉரோம் அடிமைப் புரட்சிகள் காரணமாக அந்த அடிமைகள் பின்பற்றிய மதத்தைக் கையேற்று திருச்சபை ஒன்றின் வாயிலாக மாற்றிப் புதுக்கிய வடிவில் ஆன்ம ஒருமையைப் பரப்புரை செய்ய வேண்டியிருந்தது. இந்த மண்ணிலே நிலப்பிரபுக்கள் சுகபோகங்களை அனுபவித்த போதிலும் விசுவாசமிக்க கிறிஸ்தவப் பண்ணையடிமைக்கு நித்திய சுவர்க்கம் மரணத்தின் பின் கிடைக்கும் என்ற ஆறுதலை வழங்குகின்ற போதனையைத் திருச்சபை முன்வைத்தது.

மதத்தின் போலிப் பரப்புரையாக அமைந்த ‘நித்திய சுவர்க்கம்’ பற்றிய மயக்கத்தைத் தகர்த்து முதலாளித்துவப் புரட்சி வாயிலாக நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவில் மண்ணுடன் இறுகப் பிணைக்கப்பட்டிருந்த விவசாயி தனது உற்பத்தி சக்தியைத் சுதந்திரமாக விலைபேச வல்லமை படைத்த பாட்டாளி வர்க்கமாகப் பரிணமிக்க இடமேற்படுத்தியாக வேண்டிய

**இன மரபுக் குழுக்கள் பிளவுபட்டு வர்க்கங்களாக சிதறிய ஐரோப்பியச் சமூகத்தில் எதிரெதிர் வர்க்கங்களை ஒரே மத நிறுவனத்துக்குள் ஒன்றிணைத்து ஆன்மீக ஒருங்கிணைப்பை முன்னெடுத்தாக வேண்டிய அவசியம் அங்கே இருந்தது. அத்தகைய ஒரு தேவை சாதியச் சமூகத்துக்கு இருந்ததில்லை; மட்டுமன்றி, கடின உடலுழைப்புக்குரிய சாதிப் பிரிவினரைத் தமது மத நிறுவனத்தினுள் அனுமதிக்க மறுத்துத் தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் அளவில் விலகலைப் பேணுகின்ற நடைமுறைதான் இங்கு இருந்தது.**

அவசியம் இருந்தது. அதன் காரணமாகக் கல்வி, அரசு என்பன மதசார்பற்று இயங்குவனவாக அமைய வகை செய்தாக வேண்டும் என்ற கோரிக்கையை எழுச்சி பெற்று வந்த முதலாளித்துவம் முன்னிறுத்தியது!

இன மரபுக் குழுக்கள் பிளவுபட்டு வர்க்கங்களாக சிதறிய ஐரோப்பியச் சமூகத்தில் எதிரெதிர் வர்க்கங்களை ஒரே மத நிறுவனத்துக்குள் ஒன்றிணைத்து ஆன்மீக ஒருங்கிணைப்பை முன்னெடுத்தாக வேண்டிய அவசியம் அங்கே இருந்தது. அத்தகைய ஒரு தேவை சாதியச் சமூகத்துக்கு இருந்ததில்லை; மட்டுமன்றி, கடின உடலுழைப்புக்குரிய சாதிப் பிரிவினரைத் தமது மத நிறுவனத்தினுள் அனுமதிக்க மறுத்துத் தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் அளவில் விலகலைப் பேணுகின்ற நடைமுறைதான் இங்கு இருந்தது. அடிமை வர்க்கமாக மாற்றம் பெற்ற மக்கள் பிரிவினர் முன்னதாகத் தமது இன மரபுக் குழு வாழ்வில் பின்பற்றி வந்த பண்பாட்டையும் அதற்குரியதாக இருந்த மத அனுஷ்டானங்களையும் முற்றாகக் கைவிட வேண்டியவர்களாக ஐரோப்பாவில் மாற்றப்பட்டிருந்தனர். அடிமை வாழ்வு நீடித்த நிலையில் அவர்களுக்கானதாக அமைந்த கிறிஸ்தவத்தையே பின்னர் நிலப்பிரபுத்துவச் சுரண்டலின் அவசியம் காரணமாகப் 'பொது மதமாக' ஆக்கித் தமது வர்க்க நலனை முன்னெடுக்கும் வகையில் உழைக்கும் மக்களை வசப்படுத்த வேண்டியிருந்தது அங்கே. இன மரபுக் குழுக்கள் ஒவ்வொன்றும் தமக்கான பூர்வமத பண்பாட்டையும் குழுக்கள் சாதிகளாக மாற்றம் பெற்ற எமது சாதியச் சமூக வாழ்முறையில் சாதிகள் ஒவ்வொன்றும் தத்தமக்கான சமயங்களைக் கொண்டிருக்க அனுமதிக்கப்பட்டன (சாதிச் சமயங்கள் ஒவ்வொன்றிலும் போல மேலாதிக்கப் பரம்பொருளின் வரலாற்றுக்கும் சனாதனப் பழைமைப் பண்பைக் கூறிய படியே வரலாற்றுப் பணிக்கான கடமைப் பொறுப்புக்களும் வலியுறுத்தப்படும்). பல்வேறு சாதிச் சமயங்களும் நிலப்பிரபுத்துவ சாதிய வர்க்கச் சமயத்துக்கு உரியவரான பரம்பொருளுக்கு (முழு முதல் கடவுளுக்கு) தமது சாதிக் கடவுள் கட்டுப்பட்டவர் என்ற மேலாதிக்கச் சமூக நிலவரத்தை அனுசரித்தாக வேண்டியிருந்தது. அதனைக் கண்காணித்து ஒழுங்கமைக்கும் பொறுப்பு அரசுக்கு உரியது. அதற்குமேல் ஆதிக்கச் சாதிச் சமயம் மட்டுமே தன்னுடன் இணைந்து இயங்குவதாக அதிகாரப் பங்கீட்டை மதத்துடன் அரசு இங்கே ஏற்படுத்திக் கொண்டிருக்கவில்லை. பல்வேறு சாதிச் சமயங்கள் இயங்குவதற்கு அவசியப்பட்ட இத்தகைய மதச்சார்பின்மையின் நீடிப்பாக புறச் சமயங்களோ, புறப்புறச் சமயங்களோ இங்கே இயங்குவதனையும் சாதியச் சமூகத்தின் அரசு அங்கீகரிப்பதில் தடை ஏதும் இருக்கவில்லை.

அந்தவகையில், எமக்கான முதலாளித்துவ ஜனநாயக உணர்வெழுச்சி ஏற்படத்தக்க சமூக மாற்றக் காலகட்டத்தில் மதச் சார்பின்மை பற்றிப் பேசும் அவசியம் இங்கே எழவில்லை. சுரண்டும் சாதிய வர்க்க மேலாதிக்கத்துக்கு உரிய பரம்பொருளுக்கு அனைத்துத் தரப்பாரும் அடிபணிந்தாக வேண்டும் என்பதனை முறியடிப்பதன் வாயிலாக உழைக்கும் மக்களின் வழிபாட்டுக்குரிய கடவுளர்களையும் சமத்துவ ஊடாட்டத்துக்கும்உரிய மதிப்புணர்வுடன் போற்றும் சமூக நியதியைச் சாதிப்பதே எமக்கான ஜனநாயகப் புரட்சியில் மதத்

தளத்துக்கான கடமையாக அமைய இயலும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அதற்கான வழித்தடத்தை ஏற்படுத்தும் முதல் பணித் தொடக்கத்துக்குரிய வகிபாகத்தைக் கையேற்று முனைப்புடன் செயற்பட்ட பேராளுமையாக வள்ளலார் (இராமலிங்க அடிகளார் - 5.10.1823 - 30.1.1874) வெளிப்பட்டார்!

## சிறை மீட்கப்பட்ட தேவாரப் படிகளும் தில்லை வாழ் அந்தணர்களும்

சமயங்களின் சமயமாக அனைத்துச் சாதிகளது ஐதீகங்களையும் உள்வாங்கி ஒரு முழு முதல் கடவுளை மேலாதிக்கத்துக்கு உரியவராக ஏற்க வழி செய்த வைதிக நெறி (சனாதன தர்மம், பின்னர் பொது வழக்காகிய இந்து மதம்) பத்தொன்பதாம் நூற்றாண்டில் பண்பு மாற்றத்தைப் பெற வேண்டியேற்பட்டது. கி பி 4 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னரே பிராமண மதமானது ஏனைய இனமரபுக் குழுக்களுக்குரிய மதங்களையும் உள்வாங்கி 'ஒரு முழு முதல் கடவுளை' முன்னிறுத்தும் நிலப் பிரபுத்துவ அமைப்புக்கான சமயமாக இந்து மதத்தை வடிவப்படுத்தியிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலப்பிரபுத்துவ அமைப்பின் மீது அதிர்வை ஏற்படுத்திக் காலனித்துவ ஆட்சியாளர்கள் வாயிலாக முதலாளித்துவ

வாழ்முறையின் அறிமுகம் தலையெடுத்ததைத் தொடர்ந்து மேலாதிக்கப் பரம்பொருள் பெற்றிருந்த பீடமும் சலனப்பட வேண்டியதாயிற்று.

வட இந்தியாவில் இந்த மாற்றம் அங்கு மேலாதிக்கம் பெற்றிருந்த பிரமக் கோட்பாட்டில் ஜனநாயகப் பண்பை மேலோங்கச் செய்வதாக அமைந்திருந்தது. பக்திப் பேரியக்கம் தமிழகத்தில் வீறுகொள்ளத் தொடங்கிய காலத்தின் கருத்தியல் வீச்சை உள்வாங்கியபடி இங்கிருந்து (இன்று கேரளத்துக்கு உட்பட்டதாயுள்ள காலடி எனும் கிராமத்திலிருந்து) வட இந்தியா சென்று பிரமத்துக்கான நிலப்பிரபுத்துவக் காலகட்டக்



சங்கரர்

Image Source - maduraiyampathi.blogspot.com

கருதியலை வடிவப்படுத்திப் பரப்புரை செய்தவர் சங்கரர். இவரே ஒவ்வொரு பிராந்தியங்களுக்குமுரிய முழு முதல் கடவுளர்களான விஷ்ணு, சிவன், சக்தி, முருகன், கணபதி, சூரியன் ஆகியோருக்குரிய அறுவகைச் சமயங்களையும் இணைத்த 'சண்மார்க்கம் - வைதிக சமயப் பொதுப்படுத்தலை மேற்கொண்டவர். அதன் வாயிலாக எந்தப் பகுதிக்குமுரிய வைதிக நெறியானது வேதத்தின் சனாதனப் புனிதத்தை மதித்தவாறே தனக்கான தனித்துவ வழித்தடத்தை உறுதிப்படுத்த வகை செய்யும் முறைமைக்கான கோட்பாட்டுத் தளத்தைத் தொடக்கி வைத்தார்.

பிரபஞ்சம் முழுமையும் பிரமத்தின் தோற்றம் எனக் கூறிய அதே வேளை நிலவுடைமையாளர்களது மேலாதிக்கத்தை வலியுறுத்தும் வகையில் பிராமணரே பிரமத்தைத் தம்முள் உணர்ந்து அதனுடன் அத்வைதக் கலப்படையும் பேறைப் பெறுவர்

எனவும் வலியுறுத்தியிருந்தார் சங்கரர். முதலாளித்துவ ஜனநாயகச் சிந்தனைக்குரியதாக பிரமக் கோட்பாட்டை வடிவப்படுத்தும் தொடக்குனராக ராஜாராம் மோகன் ராய் (1772-1833) திகழ்ந்தார். அத்வைதக் கோட்பாட்டின் பிரகாரம் பிராமணர் மட்டுமன்றி அனைவரும் பிரமத்துடன் அத்வைதம் ஆகும் முழுமைப்பட்ட ஜனநாயக மயப்படலுக்குரிய செயல்முறை வேதாந்தத்தை விவேகானந்தர் (1863-1902) முன்வைத்தார். இயற்கை அம்சங்கள் அனைத்தும் கடவுள்களென வழிபடப்பட்ட புராதன பொதுவுடைமைச் சமூகச் சிந்தனை ஆரம்பகால ரிக் வேதப்பாடல்களில் வெளிப்பட்டிருந்தது. அதனை நிலை மறுத்து பிரபஞ்சத்துக்கு அப்பாலான பிரமம் பற்றி ஏற்றத்தாழ்வான

**கடவுள் சிந்தனையில் ஏற்பட்டு வந்த விருத்திகள் ஒவ்வொன்றும் சமூக அமைப்பு மாற்றங்களுடன் தொடர்புடையன. மக்களுடைய வாழ்வாதார விருத்திகளுக்கு வழக்கிலுள்ள பொருளுற்பத்தி முறைமை முட்டுக்கட்டை இடும் போது அதனைத் தகர்த்தவாறு புதிய பொருளுற்பத்தி உறவு மேலெழுவதன் ஊடாகவே மனித குல வரலாறு வளர்ச்சி பெற்று வந்தது.**

வாழ்முறை தொடங்கிய போது வேதாந்தக் கோட்பாடு மேற்கிளம்பி வந்தது. உழைப்புடன் இணைந்த செயல்முறை வேதாந்தத்தை முன்வைத்த விவேகானந்தரும் இயற்கைக்கு அப்பாலான பிரமம் பற்றிய கருத்தைக் கொண்டிருந்தார். இயற்கையம்சங்கள் மட்டுமே பிரமம் எனப் 'பச்சை வேதத்துக்கு' மீளச் செல்ல வேண்டும் என வலியுறுத்துகிறவராக மகாகவி பாரதி நிலைமறுப்பின் நிலைமறுப்பை முழு நிறைவாக்கினார். அவை குறித்துப் பின்னால் தனியொரு இயலில் விரிவாகப் பேச அவசியமுள்ளது.

கடவுள் சிந்தனையில் ஏற்பட்டு வந்த விருத்திகள் ஒவ்வொன்றும் சமூக அமைப்பு மாற்றங்களுடன் தொடர்புடையன. மக்களுடைய வாழ்வாதார விருத்திகளுக்கு வழக்கிலுள்ள பொருளுற்பத்தி முறைமை முட்டுக்கட்டை இடும் போது அதனைத் தகர்த்தவாறு புதிய பொருளுற்பத்தி உறவு மேலெழுவதன் ஊடாகவே மனித குல வரலாறு வளர்ச்சி பெற்று வந்தது. அவ்வாறு மாற்றத்தை ஏற்படுத்திய புதிய சமூக அமைப்பு ஆரம்பத்தில் வளப்பெருக்கங்களை விருத்தியுறச் செய்யும் வகையில் அதற்கு ஆதரவாக மக்கள் மனங்களை வடிவப்படுத்திய கருத்தியல்கள் முற்போக்குத் தன்மை உடையனவாகத் திகழும். கி.பி. 4 ஆம் நூற்றாண்டு முதலாக வடிவமைப்பைப் பெற்று வளர்ந்த நிலப்பிரபுத்துவம் மூன்று நூற்றாண்டுகளில் உறுதி படைத்த கட்டமைப்பாக நிலையூன்றியது. அந்த வளர்ச்சி நிலையில் நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவுக்குப் பொருத்தமாக பிரமக் கோட்பாட்டை வடிவமைத்த சங்கரரின் கருத்தியல் அன்றைய வரலாற்றுத் தேவையை நிறைவு செய்த முற்போக்குப் பாத்திரம் உடையது.

நிலத்துடன் கட்டுண்டு உழைப்பாளர்கள் பணி செய்தாக வேண்டிய பொருளுற்பத்தி முறையில் ஆதிக்கத் தரப்பினர் மட்டும் பிரமத்துடன் ஐக்கியமுற இயலும் என்பது பொருத்தமுடையதாக இருந்தது. உற்பத்தி சக்தியை சுதந்திரமாக விரும்பிய முதலாளிக்கு விலை பேசக் கூடிய வாழ் முறைக்குத் தடையேற்படுத்தும் சிந்தனை அது. பிற்போக்கான அந்தக் கருத்தியலைத் தகர்த்து இந்து விடுதலை நெறிக் கோட்பாட்டுக்கு உரிய செயல்முறை வேதாந்தமாக விவேகானந்தர் முன்வைத்த போது பண்ணையடிமைத் தனத்தையும் காலனிய ஒடுக்குமுறையையும் தகர்க்கும் கருத்தியலாக மாற்றியமைத்தார்.

உழைக்கும் மக்களின் நலனை முன்னிறுத்தித் தமிழகத்தில் கடவுள் கோட்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்திய வள்ளலார் வேறொரு தளத்துக்கு உரியதாக வளர்த்தெடுத்தார். அவர் தனக்கான கருத்தியலைப் பெறத் தொடங்கிய ஆரம்ப காலம் சிதம்பரத்தில் இயக்கம் கொண்டிருந்தது. சோழப் பேரரசர்கள் தமக்கான முடிசூடலைச் சிதம்பர நடராசர் ஆலயப் பூசகர்களான தில்லைவாழ் அந்தணர்கள் வாயிலாகவே மேற்கொண்டனர். எட்டாம் நூற்றாண்டு வரை தன்னை நிலை நிறுத்துவதற்காகப் போராடிய படி முன்னேறிய

நிறுத்துவதற்காகப் போராடிய படி முன்னேறிய நிலப்பிரபுத்துவம் அடுத்த நூற்றாண்டிலிருந்து சமூகத்தின் மீது மேலாதிக்கத்தை வலுப்படுத்தும் ஒடுக்குமுறைச் சக்தியாக வெளிப்பட்டது. அத்தகைய அதியுச்ச மேலாதிக்கத்தின் கொடுமுடியாகத் திகழ்ந்த ராஜராஜ சோழன் தில்லைவாழ் அந்தணர்களின் அதி புனிதக் கற்பிதங்களுக்கு வழிசமைத்துக் கொடுப்பவராக இருந்தார். வேத - வேதாந்தத்தை முன்னுறுத்தி 'தமிழ் வேதமான' தேவார - திருவாசக ஓலைச் சுவடிகளை அறையொன்றில் பூட்டி வைத்து கறையானுக்கு இரையாக்கி அழித்துவிடும் நோக்கம் தில்லைவாழ் அந்தணர்களுக்கு இருந்தது. ஒரு அரசாணை மூலமாக அவற்றை மீட்டெடுக்கக் கூடிய அதிகாரத்தில் இருந்த பேரரசன், தில்லைவாழ் அந்தணர்களது கூற்றுப் பிரகாரம் தேவார - திருவாசக முதலிகள் நேரில் வந்தால் மட்டுமே ஓலைச் சுவடிகள் உள்ள அறையைத் திறக்க இயலும் என்ற நிபந்தனையை ஏற்கிறார். நாயன்மார்களது சிலைகளுடன் சென்ற ராஜராஜ சோழன், 'இறைவனின் சொரூபங்களில் கடவுள் தரிசனம் கிட்டுமென்றால் இந்தச் சிலைகளும் அவர்கள் நேரில் வந்ததை குறிக்கத் தக்கதே' என்ற தர்க்கத்தை முன்னிறுத்தியே தேவார - திருவாசகச் சுவடிகளைச் சிறை மீட்க இயலுமாயிற்று!



ராஜாராம் மோகன் ராய்

Image Source - ch.pinterest.com

### சமூகத் தளத்தில் சமரச சன்மார்க்கம்

அரசின் ஆணைக்கும் மேலாக தில்லைவாழ் அந்தணர்கள் முன்னிறுத்திய மத அதிகாரத்தை ராஜராஜ சோழன் மதித்ததன் வாயிலாக முழுச் சமூகமும் சிவனின் மேலாதிக்கத்துக்கும் பணிந்தாக வேண்டும் என்பதற்கு அழுத்தம் கொடுத்திருந்தார். மேலாதிக்க அதியுச்சத்தில் ஒடுக்குமுறைக் கருவியாக இருந்தபோதிலும் கடல்கடந்த தூர தேசங்களில் தங்களது ஆதிக்கத்தை நிலை நாட்டும் ஆளுமையுடன் செயற்பட்ட காலம் அது. மேன்மை கொள் சைவ நீதி அகிலமெங்கும் கோலோச்சும் என்ற கருத்து சோழப் பேரரசர்களது ஆக்கிரமிப்பு யுத்தங்களால் நிதர்சனமாக நிலை நாட்டப்பட்டுக் கொண்டிருந்தது.

தமிழ் நிலப்பிரபுத்துவ சக்தியானது ஆற்றல் அனைத்தையும் இழந்து பண்பாட்டுச் சிதைவுகளுக்கும் ஆளாகி வந்த சில நூற்றாண்டுகள் கடந்த நிலைக்குரிய பத்தொன்பதாம் நூற்றாண்டில் சிலைகளால் எதனையும் சிறை மீட்க இயலாது என்பது தெளிவு. அந்தக் கதைகள் ஊடாடிய போதிலும், கலிமுற்றி நாசம் பெருகிய காலத்தில் அத்தகைய அற்புதங்கள் சாத்தியமில்லை என்ற 'நம்பிக்கை' மேலோங்கி வந்தன. இத்தகைய அவ நம்பிக்கை பெருகும் சூழலில் மதத்தின் வகிபாகம் எவ்வாறு இயங்க இயலும்? நிலப்பிரபுத்துவத்தின் மூன்று கட்டங்கள் போலவே முதலாளித்துவமும் தனக்கான தொடக்க காலம் - அதியுச்ச அதிகார நிலை நிறுத்தல் - சிதைவுக் காலம் எனும் மூன்று கட்டங்களைக் கடந்து வந்துள்ளது. சில தசாப்தங்களுக்கு முன்னர் (இருபதாம் நூற்றாண்டின் அறுபதாம், எழுபதாம் ஆண்டுகளில்) எமது தேசங்களின் முதலாளித்துவம் நம்பிக்கை தரத்தக்க உச்ச நிலை அதிகாரத்துடன் இருந்தது. இன்று மூன்றாம் கட்டத்தின் சிதைவுகள் மேலோங்கி உள்ளன.

நேருவின் தலைமையில் சுதந்திர இந்தியா முன்னெடுத்த 'முதலாளித்துவ (ஜனநாயக) சோசலிச' பொருளாதார அடித்தளங்கள் பல நெருக்கடிகளை முகங்கொண்டவாறு சில நம்பிக்கைக் கீற்றுகளையும் எழுபதாம் ஆண்டுகளில் வெளிப்படுத்தியவாறு இருந்தது.




சிதம்பர நடராசர் ஆலயம்

Image Source - www.aanmeegam.in

ஆண்டுகளில் வெளிப்படுத்தியவாறு இருந்தது. அந்த எழுபதாம் ஆண்டுகளில் நவ காலனித்துவ நாடுகளுக்கு முன்னுதாரண நாடாக இலங்கை காட்டப்படுவதனை இன்னமும் இழந்து விடாத முதலாளித்துவச் சோசலிசச் சுயசார்பின் தன்னிறைவு நோக்கி முன்னேற்றம் நிலை பெற்றிருந்தது. முதலாளித்துவ ஜனநாயக எல்லைப்பாடுகள் சார்ந்த தவறுகளுடன் எண்பதாம் ஆண்டுகளில் இலங்கையின் உட் கட்டமைப்புகள் அனைத்தும் பலவீனமடைந்தன. இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல் முன்னெடுப்பை இலங்கையர்களால் தொடர்ந்தும் நிர்வகிக்க இயலாது என்ற புரிதலை ஏற்படுத்தும் செயலொழுங்குகள் வளரும் வகையில் முதலாளித்துவ ஜனநாயகச் சீரழிவு உச்சத்தை எட்டியுள்ளது.

திறந்த பொருளாதார ஊடுருவலுக்கு இடமளித்ததன் வாயிலாக எமக்கான அரசியல் பண்பாடு, பொருளாதாரக் கட்டமைப்பு என்பன யாவும் சீரழிவுக்கு உள்ளாயின. எண்பதாம் ஆண்டுகளுக்குப் பின்னர் அரசியல் ஜனநாயகச் சிதைவுகள் இந்தியாவிலும் வலுத்து வந்த போதிலும் இன்று பொருளாதார வளர்ச்சியில் உலகின் மூன்றாம் இடத்தை எட்டிப் பிடிப்பதை நோக்கி இந்தியா முன்னேற இயலுமாகி உள்ளதே அது எப்படி? அந்த விவாதங்களுக்குள் செல்ல இங்கு அவகாசம் இல்லை. ஒரேயொரு விடயம், ஏகாதிபத்திய சக்திகளால் இயக்கப்பட்டு எமக்குள் ஒவ்வொரு இனத் தேசியங்களின் மேலாதிக்க நலன் சார்ந்தவர்களே தலைமை கொள்ள இலங்கையில் இடமளித்தோம். விடுதலைக்காகப் போராடிப் பெற்ற இந்திய சுதந்திரம் அங்குள்ள இனத் தேசியங்கள் ஒவ்வொன்றும் தமக்கான சுய முன்னேற்றத்தை வளர்ப்பதற்கு இடமளித்த அதேவேளை முதலாளித்துவ நலனே முன்னிலை பெற்ற காரணத்தால் ஏகாதிபத்திய அணிக்குரிய நாடாக இந்தியாவினால் வளர்ச்சி பெற இயலுமாகி உள்ளது.

உள்ளமைப்பில் மேலாதிக்கப் பண்புடன் ஏகாதிபத்தியத்திடம் அடிமை மனப்பாங்கை வளர்த்து வரும் இலங்கையின் தேர்தல் இந்த ஆண்டில் இடம் பெற உள்ளது. பிராந்திய மேலாதிக்க இந்தியாவிலும் உலக மேலாதிக்கத்தைத் தக்க வைப்பதற்கு முயற்சித்தபடி உள்ள ஐக்கிய அமெரிக்காவிலும்

இந்த ஆண்டு தேர்தல் ஜனநாயகம் பிரயோகிக்கப்பட உள்ளது. இந்த ஜனநாயகம் எந்தவொரு நாடும் நாசகாரச் சிதைவுக்கு ஆட்படப் போவதைத் தடுக்கப்போவதில்லை!

இந்தப் பின்னணியை உதாரணமாக முன்னிறுத்தியவாறு நிலப்பிரபுத்துவச் சிதைவுடன் அதற்கான ஒட்டுறவில் இயங்கிய மதம் கொண்டிருந்த உறவுப் பிணைப்பு பத்தொன்பதாம் நூற்றாண்டில் எவ்வாறு அமைந்தது என்பதனை மறுவாசிப்புக்கு உட்படுத்த இயலும். ஆரம்பத்தில் இருந்தே

சைவசித்தாந்த மேலாத்திக்கவாதத் தத்துவ நிலைப்பாடுகளுக்கு வள்ளலார் ஆட்படாது இருந்துள்ளார். அதேவேளை சிதம்பர நடராசரின் தெய்வீகக் கலா நுட்பத்துக்குப் பக்திச் சிரத்தையுடன் பாடல்கள் புனையும் நாட்டம் அவரை இயக்கிய காரணத்தால் தில்லைவாழ் அந்தணர்களின் கருத்து நிலைகளுக்குள் ஆட்படுகிறவராக அவரை வரம்பிட்டிருந்தது.

காலனித்துவ அடிமைத் தனத்துக்கு எதிராகப் பண்பாட்டுத் தேசியத்தை முன்னெடுத்து இயங்கிய ஆறுமுகநாவலர் சிதம்பரத்தில் தில்லைவாழ் அந்தணர்களுக்கு எதிராகவே வழக்காடினார். அவர்களுக்குச் சார்பாக வள்ளலார் சாட்சியாளரான காரணத்தால் பின்னர் மோதல் திசைதிரும்பி வள்ளலார் - நாவலர் பகையாக மாறி இன்று வரை பாரதூரமான தீங்குகளுக்கு இடமேற்பட்டுள்ளது. காலனித்துவத்திற்கும் நிலப்பிரபுத்துவத்திற்கும் எதிரான போராட்டத்தில் ஒன்றிணைய வேண்டிய இரு தரப்புக்கள் தமக்குள் மோதுவது மக்கள் விடுதலையைப் பின்னடைவுக்கு உள்ளாக்கும்.

வள்ளலார் விரைவில் தில்லைவாழ் அந்தணர்களை விட்டொழித்தார். தில்லை நடராசரிடம் இருந்தும் விடுதலை பெற்றார். அருட்பெரும் சோதியே வழிபாட்டுக்குரியது எனத் தேர்ந்தார். வறுமையில் வாடிய மக்களுக்காக அணையாத அடுப்பேற்றி பசிப்பிணி நீக்க முயன்றார். தனது ஆன்மீக நாட்டத்தை மதத்தை விட்டொழித்து மக்கள் தளத்துக்கானதாக மாற்றினார். அனைத்து மேலாதிக்கங்களுக்கும் எதிரான அவரது சுத்த சமரச சன்மார்க்கம் பற்றி விரிவாக அலசும் அவசியம் உள்ளது!

## மேலாதிக்கங்களால் இயக்கப்படும் சூத்திரக் கயிறுகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட வள்ளலார் - நாவலர் மோதல் இன்றுவரை தொடர்வதன் காரணம் என்ன? மிகப் பெரும்பாலானவர்கள் இவ்விரு ஆளுமைகளில் ஒருவரைப் போற்றித் துதிபாடி வழிபாட்டுக்கு உரியவராக ஆக்கியபடி மற்ற ஆளுமை குறித்த அவதூறுகள் பரப்பும் நிலை நிலவுகிறது. ஐந்தாம் குரவராக நாவலரை வழிபடும் தரப்பினர் அவரது சமூக, பண்பாட்டு, அரசியல் தாக்கங்கள் குறித்து அக்கறை கொள்வதில்லை. ஒருவகையில், இத்தகையோரிடம் உள்ளுறைந்து சாதியபிமானம் நாவலரை மேலும் தாக்குவதற்கு இடமளிப்பதாகவே அமைகிறது.

நாவலர் சாதியாசாரங்களைப் பின்பற்றுவதற்கு அழுத்தம் கொடுத்தபோது அதனைக் கைவிட்டு ஆங்கில ஆட்சியாளரின் எடுபிடிகளாகிப் பண்பாட்டுச் சிதைவுகளுக்கு உள்ளான வெள்ளாளர்களையே கண்டனத்துக்கு உள்ளாக்குகிறவராக இருந்தார். அவரிடம் இருந்த காலனித்துவ எதிர்ப்பு முதன்மைக்கு உரியது என்ற பக்கத்தை மூடி மறைத்து சாதிவாதியாக அவரைத் தாக்குவது என்பது தாக்குகிறவர்களிடம் மேலோங்கியுள்ள காலனித்துவ அடிமை மனப்பாங்கையே காட்டும். வள்ளலார் - நாவலர் விவாதங்களை வேறொரு தளத்தில் அலசுவோம்!

இங்கு எமக்கு முக்கியத்துவம் உடைய விவகாரம் நிலப்பிரபுத்துவ - மதவாத மேலாதிக்கங்களைத் தகர்ப்பதற்குப் போராடும் சம காலத்தில், காலனித்துவ - ஏகாதிபத்திய எதிர்ப்பும் வலுவுடன் முன்னெடுக்கப்படுவது அவசியம் என்பதன் மீது கவனக்குவிப்பை ஏற்படுத்துவதாகும். இருபதாம் நூற்றாண்டிலும் இந்த இரு தரப்புகளும் தனித்தனியாக இயக்கம் பெற்றிருந்தன. இன்று வரையில் பலரிடமும் இந்தப் பிளவு மனப்பாங்கு ஊடுருவி உள்ளது. தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டின் இயங்கு நிலைகளைப் பார்ப்போம்!

(தொடரும்)

ஈழத்தில் போர் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக உக்கிரமாக நடந்திருக்கின்றது. அது அங்கிருந்த அனைத்து மக்களையும் ஏதோ ஒருவகையில் பாதித்திருக்கின்றது. இப்போது யுத்தம் முடிந்து பதினைந்து ஆண்டுகள் ஆகின்றன. போர் ஒரு கொடுங்கனவாய் மக்களின் மனதில் இருந்து மறக்கடிக்கப்பட்டிருந்தாலும், அதன் நிமித்தம் ஏற்பட்ட உடல்/உள வடுக்கள் இன்னும் இல்லாமல் போகவில்லை. இனங்களிடையே நல்லிணக்கம் மட்டுமில்லை, போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆற்றுப்படுத்தல்கள், உதவிகள் கூட போரால் வெற்றி கொள்ளப்பட்ட அதிகாரத் தரப்பால் நிகழ்த்தப்படவில்லை. இன்னுமின்னும் இலங்கையில் இருக்கும் ஒவ்வொரு இனங்களும் துவிதங்களாகப் பிரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் ஈழத்துப் போர்ச்சூழலின் பின்னணியில் எழுதப்பட்ட பனுவல்களை முன்வைத்து வாசிப்புச் செய்யப்படுகின்ற ஒரு தொடராக ‘இருத்தல்களின் மீது கவியும் இன்மைகள்’ அமைகின்றது.



இளங்கோ

யாழ்ப்பாணம் அம்பனையில் பிறந்தவர். ஈழத்திலிருந்து போரின் நிமித்தம் தனது பதினாறாவது வயதில் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து தற்போது ரொறொண்டோவில் வசித்து வருகிறார். கவிதைகள், சிறுகதைகள், நாவல் தவிர, ‘டிசே தமிழன்’ என்னும் பெயரில் கட்டுரைகளும், விமர்சனங்களும், பத்திகளும் பல்வேறு இதழ்களிலும், இணையத்தளங்களிலும் எழுதி வருகின்றார். நாடற்றவனின் குறிப்புகள் (கவிதைகள் 2007), சாம்பல் வானத்தில் மறையும் வைரவர் (சிறுகதைகள் 2012), பேயாய் உழலும் சிறுமனமே (கட்டுரைகள் 2016), மெக்ஸிக்கோ (நாவல் 2019), உதிரும் நினைவின் வர்ணங்கள் (திரைப்படக்கட்டுரைகள் 2020), ப்யூகோவ்ஸ்கி கவிதைகள் (மொழிபெயர்ப்பு 2021), தாய்லாந்து (குறுநாவல் 2023) ஆகியவை இதுவரையில் இவர் எழுதிய பனுவல்கள் ஆகும்.

# தமிழ்ப் பெண்புலி (Tamil Tigress) :

# நிரோமி டீ ஸொய்ஷாவினது நினைவுக் குறிப்புகள்



நிரோமி டீ ஸொய்ஷா

Image Source - www.niromidesoyza.com

ஒருவர் ஈழத்தில் இயக்கமொன்றில் இணைந்து போராடியதற்குப் பல்வேறு காரணங்கள் இருந்திருக்கலாம். முக்கியமாய் போர் உக்கிரமாய் நடைபெறும் பிரதேசங்களில் - போராட்டத்தில் இணைந்துகொள்ள - புறக்காரணிகள் இன்னும் அதிக நெருக்கடிகளைக் கொடுக்குமென்பதை நாமனைவரும் அறிவோம். எமது இயக்கங்களில் பலர் பெருந்தொகையாய்ச் சேர *1974* உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுச் சம்பவமும், *1981* இல் யாழ். நூலக எரிப்பும், *1983* இல் ஜூலைக் கலவரமும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய காரணங்களாய் அமைந்தன. ஆனால் யாழ். சமூகத்தில்

அவ்வளவு ஒட்டமுடியாத, உயர் வர்க்கத்தைச் சேர்ந்த ஒருவர் இயக்கத்தில் இணைந்து கொள்கின்றமை, நமது போராட்ட வரலாற்றைக் கற்றுக் கொள்வோருக்குச் சற்று வியப்பாக இருக்கலாம். 'தமிழ் பெண் புலி' (*Tamil Tigress*) என்கின்ற நினைவுகளின் தொகுப்பை எழுதிய நிரோமி டீ ஸொய்ஷா தன்னை மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தவர் எனக் கூறிக்கொண்டாலும், அவர் விபரிக்கும் யாழ்ப்பாண வாழ்க்கையை வைத்து, அவர் யாழின் உயர் வர்க்கத்தைச் சேர்ந்தவரென எவரும் எளிதாக அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

நிரோமி புலிகளில் சேரப்போகின்ற காலத்திலேயே, இலங்கை இராணுவத்தினர் யாழைக் கைப்பற்ற முயல்கின்ற 'ஒபரேஷன் லிபரேஷன்' நடவடிக்கை தொடங்குகின்றது. இலங்கை இராணுவம் ஊர்களுக்குள் புகுந்தால் நம்மைக் கொலை செய்துவிடுவார்கள் என்கிற பயம் மட்டுமல்ல, ஒரு பதின்ம வயதுப் பெண்ணாகவும் நிரோமி இருப்பதால், இராணுவம் பெண்ணுடல் மீது நிகழ்த்தப்போகும் வன்முறையும் அவரைப் பயமுறுத்துகின்றது.

போரின் நிமித்தம் மூடுண்ட பிரதேசங்களில் பிறந்து வளர்ந்த தலைமுறையில் அநேகர், போரின்றி வேறு வாழ்வில்லையெனவே அந்தக் காலங்களில் நம்பிக் கொண்டிருந்திருப்பார்கள். அவர்கள் ஒவ்வொரு நாளும் போருக்குள்ளிலிருந்து எப்பிடித் தப்புவதென்பதைப் பற்றியே நிறைய யோசித்தபடி நாட்களைக் கழித்துமிருக்கவும் கூடும். ஆனால் நிரோமி மலையகத்தில் - நோர்ட்டன் பிரிஜ்டில் - வாழ்ந்தபோது அவர் நெருங்கிப் பழகியது சிங்கள மற்றும் பறங்கிய சமூகங்களுடனாகும். மேலும் அவர் சிங்கள் இராணுவ முற்றுகையோ ஆதிக்கமோ அவ்வளவு இல்லாத பகுதியில் வாழ்ந்தும் இருக்கின்றார். அவரது சிறுபராயம் அவ்வளவு பதற்றமில்லாத சூழலிலேயே கழிந்திருக்கின்றது என்பதை நாமறிய முடியும். பலருக்கு வாய்க்காத பல்லினச் சமூகங்களோடு வாழும் சூழ்நிலையும் அவருக்கு வாய்த்திருக்கின்றது. அப்படியெனில் ஏன் நிரோமி பிற்காலத்தில் இயக்கத்தில் சேருகின்றார்?

நமது இயக்கங்களின் வரலாற்றை அலசுவோர் இலங்கையில் இனங்களுக்கிடையிலான ஒடுக்குமுறை என்பது வடக்கு, கிழக்கு தமிழ் மக்களினது பிரச்சினை மட்டுமே என்பதோடு தமது பார்வையைச் சுருக்கிவிடுவர். உண்மையில் இது வடக்கு, கிழக்கு மக்களினது பிரச்சினை மட்டுந்தானா? தமிழ் பேசும் அனைத்துச் சமூகங்களினதும் பிரச்சினை இல்லையா? யாழ்ப்பாணிகள் இந்தப் போராட்டத்தின் திசையைச் சிதறடித்தார்கள்/ வீழ்ச்சியடையச் செய்தார்கள் என்கிற விமர்சனத்தை வேண்டுமானால் நாம் முன்வைக்கலாம். ஆனால் இனப் பிரச்சினையை யாழ்ப்பாணிகளின் பிரச்சினையாக மட்டும் சுருக்கிவிடும் பொழுது பிறரின் போராட்டத்திற்கான வகிபாகத்தை நாம் மறுத்துவிடுபவர்களாய் மாறிவிடும் அபாயமுண்டு. மேலும் யாழ்ப்பாணத்தவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளுக்கு ஒரு தனிப்பட்ட வரலாறு இருப்பதுபோல, பிற மாவட்டங்களிலுள்ள மக்கள் எதிர் நோக்கிய பிரச்சினைகளுக்கும் தனித்துவமான வடிவங்கள் இருப்பதையும், அவர்கள் அவற்றைத் தமது சூழலுக்கு ஏற்ப எதிர்கொண்டதையும் நாம் கவனித்தாக வேண்டும்.

மலையகத் தமிழர்கள் பெரும்பான்மைச் சமூகத்தால் வன்முறைக்கு உள்ளாக்கப்படுவதைப் பார்க்கையில் நிரோமிக்கு தன் தமிழ் சார்ந்த அடையாளம் நினைவுக்கு வருகின்றது. அதுவரை தன்னையொரு சிறிலங்கரெனவே உணரும் அவர் தன்னையொரு தமிழராகப் பார்க்கவேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்படுகின்றார். மேலும் 1977 கலவரம், தமிழர் என்ற அடையாளத்தை இன்னும் தீவிர அரசியல் சொல்லாடலாக மாற்ற, இலங்கையில் அரசியல் சூழ்நிலைகளும் மாற்றமடைகின்றன. 1979 இல் நிரோமி மலையகத்திலிருந்து பாதுகாப்பு நிமித்தம் யாழ். நகரை வந்தடைகின்றார்.

நிரோமியின் இந்த நினைவுகளின் நூலை (*Memoir*) வாசிக்கும் ஒருவர், நிரோமி என்னும் ஒருவரின் வாழ்வை முன்வைத்து, நமது போராட்டத்தை விளங்கிக்கொள்வது என்பது எவ்வளவு சிக்கலும் ஆழமும் நிறைந்ததென்பதைப் புரிந்து கொள்ள முடியும். நிரோமியின் வாழ்வை நாம் ஒரு '*Case Study*' ஆகச் செய்தால் கூட அது இன்னும் வித்தியாசமான பார்வைகளை நம் போராட்டம்

குறித்து தரவும் கூடும். ஏனெனில் நிரோமி:

(1) தன் சிறுவயதில் பல்லினச் சமூகங்களோடு நெருங்கிப் பழகியவர்.

(2) மத்திய (உயர்தர) வர்க்கத்தைச் சேரந்தவர்.

(3) சமூகத்தில் இரண்டாம் பாலினத்தவராக - பெண்ணாக - இருப்பவர்.

(4) புலிகளில் சேரும்போது புலிகள் தம்மோடு போராடப் போன பிற இயக்கங்களை அழித்தவர்கள் என்பதை ஏலவே அறிகின்றவர்.

(5) அதையும் தாண்டி சிங்களப் பேரினவாதத்தோடு போராடி தனித்தமிழீழம் பெறுவதே சுதந்திரத்திற்கான வழியென நினைத்தவர்.

(6) எந்த எதிரியோடு போராட வேண்டுமெனப் போனாரோ, அதனோடு போராட முடியாது, இன்னொரு இராணுவமான இந்திய இராணுவத்தோடு போராடியவர்.

(7) புலிகள் தம் சகோதர இயக்கங்களை அழித்ததை அறிந்தவர் மட்டுமல்ல, புலிகள் இயக்கத்தின் உட் கொலைகளையும் அறிகின்றவர்.

(8) தன்னோடு இயக்கத்தில் சேர்ந்த தன் நெருங்கிய தோழியை தன் கண்முன்னே இந்திய இராணுவத்துடனான மோதலில் பலி கொடுத்திருக்கின்றார். புலிகள், தான் நினைத்துச் சென்ற இயக்கமல்ல என உணருகின்ற கால கட்டத்தில் இயக்கத்தை விட்டு வெளியேறுகின்றவர்.

(9) புலிகளை விட்டு வெளியேறப் போகின்றார் எனத் துண்டு கொடுத்ததன் பின்னரும், புலிகள் நிரோமியை அவரின் பெற்றோரோடு இணையும் வரை பத்திரமாகப் பாதுகாத்தமை.

ஆக, நிரோமி என்கின்ற ஒருவரது - அதுவும் புலிகளில் ஒன்றரை வருடத்திற்கும் குறைவாக இருப்பவரின் - வாழ்விலிருந்து நம் போராட்டம் குறித்து எண்ணற்ற கேள்விகள் எழும்போது, அவற்றிற்கான விடைகளைத் தேடுவதென்பது சிக்கலாக இருக்கும்போது நமது முப்பதாண்டு கால ஆயுதப் போராட்ட வாழ்க்கையைப் புரிந்துகொள்ள எமக்கு நிறையக் காலம் தேவைப்படும் என்பதை நம்மில் பலர் மறந்துவிடுகின்றோம். ஆகவேதான் எழுந்தமானமாக, தனிப்பட்ட விருப்பு சார்ந்து எழுத விழைகிறோம். அவற்றையே நம் போராட்டத்தின்/ இயக்கங்களின் வரலாறு எனவும் தீர்க்கமாய்ச் சொல்லியும் கொள்கிறோம். சில வேளைகளில் அவ்வாறு சொல்லிக் கொள்வதால் நமது ஆற்றாமையை, காயத்தை, வெறுப்பை கரைத்து ஆறுதலடையக் கூடும். ஆனால் பல வேளைகளில் அது முடிந்துபோன ஆயுதப் போராட்டம் குறித்த பன்முகப் பார்வைகளைத் தவறவிட்டு, தட்டையாக நகர்ந்துவிடக் கூடிய அபாயமாகவே காணப்படுகிறது.

நிரோமி புலிகளில் சேரப்போகின்ற காலத்திலேயே, இலங்கை இராணுவத்தினர் யாழைக் கைப்பற்ற முயல்கின்ற ‘ஒபரேஷன் லிபரேஷன்’ நடவடிக்கை தொடங்குகின்றது. இலங்கை இராணுவம் ஊர்களுக்குள் புகுந்தால் நம்மைக் கொலை செய்துவிடுவார்கள் என்கிற பயம் மட்டுமல்ல, ஒரு பதின்ம வயதுப் பெண்ணாகவும் நிரோமி இருப்பதால், இராணுவம் பெண்ணுடல் மீது நிகழ்த்தப்போகும் வன்முறையும் அவரைப் பயமுறுத்துகின்றது. அத்தோடு இலங்கையில் தமிழர்கள் இரண்டாம் பிரஜைகளாய் நடத்தப்படுவதும், நம் சமூகத்தில் பெண்கள் இரண்டாம் பாலினராக ஒடுக்கப்படுவதும், இயக்கத்தில் சேர நிரோமியை நிர்ப்பந்திக்கின்றன. நிரோமி விபரிக்கின்ற பல சம்பவங்களோடு நாம் நம்மைப் பொருத்திப் பார்க்கவும் முடியும். உதாரணமாக எந்நேரமும் யுத்தத்தால் கொலைகளும், அங்க இழப்புக்களும், இடப்பெயர்வுகளும் நிகழ்ந்து கொண்டிருந்தபோது, எப்படியும் ஒருநாள் இராணுவத்தின் கரங்களினால் சாகத்தான் போகின்றோம், ஆகவே இப்படி வீணாய்ச் சாவதைவிட இயக்கத்தில் சேர்ந்து கொஞ்ச இராணுவத்தைக் கொன்றுவிட்டு செத்தால்தான் என்ன என நம்மில் பலர் ஒருகாலத்தில் யோசித்திருப்போம். நிரோமியும் இப்படி யோசிப்பதை பல இடங்களில் எழுதிச்

செல்கின்றார். வேறெந்த வெளியுலகத் தொடர்புமில்லாது, போருக்குள் வாழ்ந்தவர்களுக்கு இப்படியான உளவியல் நிலைதான் இயல்பென்பதை நாமறியாததல்ல.

இவ்வாறாகத்தான் ஒரு தலைமுறை, புலிகளை பேரினவாதத்திற்கெதிராகப் போராடும் ஒரேயொரு இயக்கமாக நினைத்துக் கொண்டது. தன்னை அந்த இயக்கத்திற்காய் - எவ்வித விமர்சனமுமின்றி - முழுமையாக அர்ப்பணித்தும் கொண்டது. ஆகவேதான் புலிகள் எவ்வளவு மூர்க்கமான இயக்கமாயிருந்தாலும் - தாம் நம்பிய கொள்கைகளுக்காய் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட பல்லாயிரக்கணக்கான போராளிகளால் - புலிகளால் இவ்வளவு காலத்திற்கு நின்று தாக்குப் பிடித்திருக்கவும் முடிந்திருக்கின்றது. நிரோமி புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளராயிருந்த திலீபன், அன்றைய காலப் புலிகளின் மாணவர் அமைப்பின் தலைவராய் இருந்த முரளி போன்றவர்களுடனான தன் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும்போது அதை நம்மால் விளங்கிக்கொள்ள முடிகின்றது. மென்மையானவர்களாகவும், எல்லோர் மீதும் அக்கறையுள்ளவர்களாகவும், தாம் சொல்வதைச் செவிமடுப்பவர்களாகவும் இவர்களைப் பற்றி நிரோமி கூறும்போது புலிகளின் ஆன்மா என்பது இவர்களைப் போன்ற போராளிகளின் உண்மையான அர்ப்பணிப்புக்களால்தான் கட்டியெழுப்பட்டது என்கின்ற புரிதலுக்கு வந்திருப்போம்.

நிரோமியும் அவரின் நீண்டகால பள்ளித் தோழியான அஜந்தியும் இயக்கத்தில் இணைய முரளியின் காரியாலத்திற்குப் போகும்போது முரளி அவர்களை இணைத்துக்கொள்ள மறுக்கின்றார். இவர்களின் பிடிவாதத்தைக் கண்டு, திலீபனை வோக்கியில் அழைத்து அவருடன் நேரடியாகப் பேச வைக்கின்றார். திலீபன் இவர்களிடம் “வெளியே நீங்கள் பார்க்கும் இயக்கமல்ல புலிகள், உள்ளே வேறுவிதமானது” என எச்சரிக்கின்றார். அந்த எச்சரிக்கையைப் பல்வேறு விதமாய் நிரோமி புலிகளுக்குள் இருந்த காலங்களில் மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துவதை இந்நூலை வாசிக்கும்போது நாம் அறிந்து கொள்ளலாம்.





Image Source - www.amazon.in

நிரோமியின் இந்த நினைவுகளின் பிரதியை முக்கியமாகக் கொள்வதற்கு சில காரணங்கள் இருக்கின்றன. இதுவரை அவ்வளவாய்ப் பதியப்படாத, இயக்கங்களில் பெண்கள் முதன் முதலாய்ச் சேருகின்ற கால கட்டம் இதில் விபரமாய்ப் பதிவு செய்யப்படுகின்றது. என்னைப் போன்றவர்கள் பதின்மங்களில் இருந்த காலத்தில், ஆண்களைப் போல பெண்களும் இயக்கத்தில் சேருவது ஒரு இயல்பான விடயமாய் இருந்திருக்கின்றது. ஆனால் நிரோமியின் காலத்தில், பெண்கள் இயக்கத்தில் சேரும்போது, அவர்கள் பெண்களாய் இருப்பதால், அவர்களுக்குத் தம் உடல் சார்ந்தும் புறவெளி சார்ந்தும் சிக்கல்கள் இருந்தன. நிரோமி போன்ற பெண்கள் மீது சக ஆண்களுக்கு வருகின்ற காதலிலிருந்து, சகோதர வாஞ்சையோடு அவர்களைப் போராட்டக் களங்களிலிருந்து காப்பாற்றுகின்ற நிலைமை வரை பல விடயங்கள் இதில் வாசிக்கக் கிடைக்கின்றது.

**நிரோமி போன்ற பெண்கள் மீது சக ஆண்களுக்கு வருகின்ற காதலிலிருந்து, சகோதர வாஞ்சையோடு அவர்களைப் போராட்டக் களங்களிலிருந்து காப்பாற்றுகின்ற நிலைமை வரை பல விடயங்கள் இதில் வாசிக்கக் கிடைக்கின்றது**

நிரோமி புலிகள் இயக்கத்தில் இருந்த அனுபவங்களைச் சொல்லும்போது சற்று மிகையானதோ என்று தோன்றக்கூடிய சில இடங்களும் இருக்கத்தான் செய்கின்றது. சிலவேளை இன்னொருவிதமாய் அது புலிகளின் - முக்கியமாய் பெண்புலிகளின் - தொடக்க கால கட்டமாய் இருப்பதால் அப்படியிருந்திருக்கவும் கூடும். நிரோமியின் பதிவுகளை வாசிக்கும்போது, அநேகமாய் ஈழத்தில் வைத்து முதன்முதலாய் ஆயுதப் பயிற்சி கொடுக்கப்பட்ட பெண்களின் அணியில் அவர் இருந்திருக்கக் கூடுமென ஊகிக்கின்றேன். அதற்கு முதல் வரை இந்தியாவிலேயே பெண்கள் ஆயுதப் பயிற்சி பெறச் சென்றிருக்கின்றார்கள் என்பதை நாமறிவோம். ஆகவேதான் தென்மராட்சியில் இவர்களின் பயிற்சி முகாமிற்கு வரும் பிரபாகரன், நிரோமியை அடையாளங்கண்டு அவரோடு சாதாரணமாய் உரையாடுவதை வாசிக்கும் போது, அது சற்று அதிகப்படியானதாக நமக்குத் தோன்றுகின்றது. பெண் புலிகளுக்கான சீருடைகளிற்கான செலவுக்கு, தானே நேரில் எவ்வளவு வேண்டுமெனக் கேட்டு பணம் கொடுத்து, மேலும் தேவையெனில் தயக்கமின்றிக் கேட்கலாம் எனச் சொல்கின்ற பிரபாகரனை நாம் இங்கே அவதானிக்க முடியும். ஆனால் இந்திய இராணுவத்தோடு போர் தொடங்குவதோடு பிரபாகரன் இந்த நூலிலிருந்து காணாமற் போகின்றார். மாத்தையா அந்த இடத்தை 'முதலை' என்ற பட்டப் பெயரோடு எடுத்துக் கொள்ளுகின்றார்.

நிரோமியின் குழுவினருக்கு ஆயுதப்பயிற்சி கொடுக்கப்பட்டபின், விரும்பியவர்கள் வீட்டுக்குப் போகலாம் எனப் புலிகள் அனுப்புகின்றனர். நிரோமி வீட்டுக்குத் திரும்புகின்றார், ஆனால் அதேவேளை அவரது நெருங்கிய தோழியான அஜந்தி மீண்டும் வீட்டுக்குப் போவதைத் தவிர்க்கிறார். இந்த இடத்தில் நிரோமி, ஏன் தன் நெருங்கிய தோழியை விட்டுவிட்டு தனியே வீடு திரும்புகிறார் என, வாசிக்கும் ஒருவருக்கு எழும் சந்தேகத்திற்கு நிரோமியால் இந்த நூலில் எந்தப் பகுதியிலும் சரியான காரணத்தைச் சொல்ல முடியவில்லை. இந்தப் புள்ளியிலிருந்தே, நிரோமிக்கு இயக்கத்தோடு இணைந்து போராடும் தடுமாற்றம் தொடங்குகிறது.

நிரோமியை விட அஜந்திதான் போராடுவதற்கான உண்மையான அர்ப்பணிப்போடு இருந்திருக்கின்றார் என வாசிக்கும் ஒருவர் நினைப்பதும், தவறாக இருக்காது. இன்று அஜந்தி உயிரோடிருந்தால், அவர் சொல்லும் 'நினைவுகள்' நிச்சயம் நிரோமியைப் போன்றிருக்காதென உறுதிபடக் கூறமுடியும். நிரோமி இங்கே தன்னைப் பற்றி கட்டமைக்கும் விம்பங்கள் பலதை உடைக்கக் கூடியதாய்க் கூட, அந்தப் பிரதி இருந்திருக்கக் கூடும்.

இயக்கப் பயிற்சி பெற்று வீட்டுக்குப் போகும் நிரோமி மீண்டும் பாடசாலைக்குப் போக விரும்புகிறார். மிகுந்த கட்டுப்பாடுகளையுடைய பாடசாலை நிர்வாகம் நிரோமியை மீண்டும் பாடசாலையில் சேர்த்துக் கொள்ள மறுக்கிறது. எனினும் புலிகளின் மாணவர் அமைப்புக்குப் பொறுப்பாயிருக்கும் முரளியின் செல்வாக்கால் நிரோமி மீண்டும் பாடசாலையில் சேர்க்கப்படுகிறார். பாடசாலைக்குப் போய்க் கொண்டிருந்தாலும், புலிகளின் வாத்திய அணியில் ஒருவராகவும், மாணவர்கள் - புலிகள் இணைந்து யாழில் செய்யும் ஊர்வலங்களில் முன்னணியில் கலந்துகொள்ளும் ஒருவராகவும் அவர் இருக்கின்றார்.

இதே காலத்தில் இந்திய இராணுவம் 'அமைதிப்படை' என்ற பெயருடன் வந்திறங்குகின்றது. புலிகளுக்கு இந்திய இராணுவத்துடன் முறுகல் நிலை ஏற்பட, நிறைய ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன. மாணவர்கள் பங்குகொள்ளும் போராட்டமொன்றில் இந்திய இராணுவ அதிகாரிகளுக்கு மனுக்கொடுக்கப்படும் போது,

ஆங்கிலம் பேசக்கூடியவர் என்பதால் நிரோமியை முன்னுக்குப் போகச் சொல்கிறார் முரளி. அந் நிகழ்வு யாழ்ப் பத்திரிகைகளில் படத்துடன் வெளிவர நிரோமிக்கு புலிகள் அமைப்போடு இருக்கும் தொடர்பு பலருக்குத் தெரிய வருகின்றது.

இப்படிச் சம்பவங்களை வரிசைக் கிரமமாய்க் கூறிக் கொண்டிருக்கும் போது, மலையகப் (இந்திய வம்சாவளி) பின்புலத்திலிருந்து வந்த தாயாரையும் தம்மையும், தகப்பன் வழி ஆதிக்க சாதியினர் யாழ்ப்பாணத்தில் எப்படிக் கீழ்மைப்படுத்துகின்றனர் என்பதையும் நிரோமி விரிவாக எழுதுகின்றார். மேலும் பயிற்சியின் நிமித்தம் யாழ்க் கோட்டைப் பகுதியில் 'சென்றி'க்கு விடப்படும்போது அங்கே நிற்கும் ஆண்கள் சிலருக்கு அவரோடு முகிழும் காதல் பற்றியும் (அதிலொருவர் நிரோமி இயக்கத்தை விட்டு விலகியபின் கூட அவரைப் பின் தொடர்ந்து வந்தது பற்றியும்) சிறு சிறு சம்பவங்கள் மூலம் கூறுகிறார். இயக்கத்தில் காதல் தடை செய்யப்பட்டிருக்கின்றது என்ற எச்சரிக்கையை மீறி இதெல்லாம் நடக்கிறதென்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். நிரோமி 'சென்றி'க்கு நிற்கும்போது தன் கரங்களில் இருக்கும் துப்பாக்கியும், கழுத்தில் தொங்கும் சயனைட்டும் தனக்கு அதிக பலத்தையும், எதற்கு அஞ்சாத மனோநிலையையும் தந்திருக்கிறதெனவும் குறிப்பிடுகிறார்.

திலீபனின் அகிம்சைப் போராட்டமும் ஈற்றில் அவரின் மரணமும், ஈழப்போராட்டத்தில் ஒரு முக்கிய நிகழ்வு. திலீபனின் இழப்போடுதாம் பெண்கள் பெருந்தொகையாக புலிகளின் இயக்கத்தில் போராளிகளாக இணைந்தும் இருக்கின்றனர். அதுவரை 'சுதந்திரப் போராளி' களிலும் இன்னபிற அமைப்புக்களிலும் தலைமறைவாய் இயங்கிய பெண்களை திலீபனின் மரணம் முழு நேரப் போராளிகளாக மாற உந்தித் தள்ளியிருக்கின்றது. திலீபனின் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொண்ட வானதி, கஸ்தூரி போன்றவர்கள் பின்னாளில் சிறந்த படைப்பாளிகளாகவும் மாறிய நிகழ்வுகள் நாமெல்லொரும் ஏற்கனவே அறிந்ததே.

இந்திய இராணுவத்தோடு யுத்தம் எழ, நிரோமி மீண்டும் புலிகளோடு இணைகின்றார். யாழ். பல்கலைக் கழகத்தில் நிலையெடுத்து நிற்கின்ற போராளிகளுடன் இணைந்து சண்டைக்கு ஆயத்தமாகின்றார். அஜந்தியைப் போல, அகிலா என்கின்ற போராளியோடும் நிரோமி அதிக நெருக்கமாகின்றார். நிரோமி இயக்கத்தைவிட்டு வெளியேறும் வரை அகிலா அவரது நெருங்கிய தோழியாக இருக்கின்றார் (இவரே ராஜீவ் காந்தியின் கொலையில் 3 ஆவது முக்கிய குற்றவாளியாகத் தேடப்பட்டவர். பின்னர் 1995 இல் யாழ். முற்றுகை எதிர்த் தாக்குதலில் பலியானவர்). யாழ். வளாகம் கைப்பற்றப்பட, புலிகள் சிறு சிறு கெரில்லா அணிகளாகப் பிரிக்கப்பட்டு தலைமறைவு இயக்கமாகின்றனர்.

பெரிய அணிகளாகத் திரிவதைத் தவிர்ப்பதன் நோக்கில் பல போராளிகள் மீண்டும் வீடுகளுக்கு அனுப்பப்படுகின்றனர். நிரோமி, அஜந்தி போன்றவர்கள் - அவர்கள் இயக்கத்திலிருப்பவர்கள் என்று அறிந்து இந்திய இராணுவம் அவர்களைத் தேடுவதால் - வீட்டுக்குச் செல்ல முடியாததால், முரளியின் அணியில் சேர்க்கப்படுகிறார்கள். இந்திய இராணுவம் யாழ்ப்பாணத்தில் எல்லாப் பிரதேசங்களிலும் முற்றுகையை இறுக்க, முரளியின் அணியினர் ஒவ்வொரு இடமாய் தப்பியோடுகின்றனர். நீர்வேலியில் இவர்களுக்கும் இந்திய இராணுவத்திற்கும் நேரடி மோதல் நடக்கின்றது. முரளி, அஜந்தி உட்பட இன்னும் பலர் அத் தாக்குதலில் கொல்லப்படுகின்றனர். மீண்டும் கடல்நீரேரி கடந்து காடுகளுக்குள் வாழும் குறுகிய கால வாழ்வோடும், அங்கிருந்து இயக்கத்தை விட்டு வெளியேறுவதோடும் நிரோமியின் நினைவுகளின் தொகுப்பு நூல் முடிவடைகின்றது. நிரோமி நேரடியாக இயக்கத்தோடு களத்தில் நின்ற காலம் ஆறு மாதங்களுக்கும் குறைவானதே.

இந்திய இராணுவக் காலத்தில், புலிகள் கெரில்லா அணியாக இயங்கிய காலத்தைப் பதிவு செய்திருப்பதை இந்த நூலின் முக்கிய பகுதிகளில் ஒன்றாய் நான் மதிப்பிடுகிறேன். இந்திய இராணுவக் காலத்தில் சிறுவனாய் இருந்த என்னைப் போன்றவர்களும் அல்லது இயக்கத்தோடு நேரடியாகச் சம்பந்தப்படாதவர்களும், ஒழுங்கைகளில்




அவ்வப்போது வந்து போகும் போராளிகளை மட்டுமே அநேகம் அறிந்திருப்போம். ஆனால் அவர்களின் 'ஒருநாள் உயிர் தப்பியிருக்கும் வாழ்வு' என்பது எவ்வளவு நெடிய போராட்டம் என்பதை இந்நூலை வாசிக்கும்போது விரிவாக அறிய முடிகிறது. மேலும் உதிரப் பெருக்கின் போது ஒழுங்கான மாற்றுடைகளில்லாது தவிக்கும் பெண் போராளிகளின் கடின வாழ்வையெல்லாம் நாம் வாசிக்கும்போது, நாமறியாத அல்லது நாமறிய விரும்பாத தடைகளையெல்லாம் பெண் போராளிகள் தாண்ட வேண்டியிருந்தது என்பதைச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. அது போலவே வன்னிக் காட்டுக்குள் முகாம் அமைத்துக் காட்டு விலங்குகளுக்கும், உடல் நோய்களுக்கும், அவ்வப்போது முகாங்களைத் தாக்கும் இந்திய இராணுவத்திற்கும் எதிராகத் தப்பிப் பிழைப்பது பற்றியும் இந்நூலில் விபரிக்கப்பட்டிருக்கின்றது.

நிரோமி போராட்டத்தை விட்டு விலகியது பற்றி, தெளிவாய் ஒரு காரணமே வைக்கப்படுகின்றது. புலிகளில் இரு போராளிகள் காதலிப்பதை அறிந்து மாத்தையா ஆண் போராளியை பலரின் முன்னிலையில் 'மண்டையில்' போடுகிறார். அதுவே இயக்கத்தைவிட்டு விலக வைத்ததென நிரோமி எழுதுகிறார். ஆனால் வாசிக்கும் நமக்கு இந்த இடத்தில் குழப்பம் வருகின்றது.

நிரோமி, புலிகள் ஏனைய இயக்கங்களை அழித்தது தெரிந்தே புலிகளில் சேருகின்றார். இயக்கத்தில் இருக்கும் போதே புலிகளின் மனிதவுரிமை மீறல்கள் பற்றியும் அறிகிறார். அப்போதெல்லாம் இயக்கத்தை விட்டு விலக நினைக்காதவர் - தமிழீழம் பெறுவதே இலக்கென நினைத்தவர் - ஒரு கொலையோடு மட்டும் ஏன் விலகுகினார் என்பது சற்று யோசிக்க வேண்டிய விடயம். சிலவேளைகளில் பல்வேறு காரணங்களோடு, இந்தக் கொலைச் சம்பவமும் அழுத்தத்தைக் கொடுத்ததனால் விலக நேர்ந்திருக்கலாம். ஒரு பக்கம் புலிகள் தம் எதிரிகளையும் துரோகிகளையும் கண்மூடித் திறப்பதற்குள் போட்டுத் தள்ளுபவர்களாக இருப்பினும், நிரோமி இயக்கத்தை விட்டு விலகப் போகின்றேன் என்றதும், உடனே அவரைப் போக அனுமதிக்கின்றனர். காட்டுக்கு வெளியே இன்னொரு இரகசிய இடத்தில் அவரது தாயார் வந்து பொறுப்பெடுக்கும் வரை அவரைப் பாதுகாப்பாக வைத்திருக்கின்றனர் என்பதையும் கவனித்தாக வேண்டும்.

நிரோமியின் இந்த நினைவுகளின் தொகுப்பில் வரும் அனுபவங்கள் போலியானது என்கின்ற சில குரல்களைக் கேட்டுக்கொண்டே இதை வாசித்திருக்கின்றேன். இந்நூலை நிதானமாக வாசிக்கும் ஒருவர் - தகவல்கள் சில இடங்களில் பிழையாக இருப்பினும் - அந்தக் காலத்தில் புலிகளுக்குள் இருக்காத ஒருவர் இதை எழுதியிருக்கவே முடியாது என்ற முடிவுக்கு

எளிதாக வந்துவிட முடியும். சில சம்பவங்களில் உயர்வு நவிற்சியும், வேறு சில இடங்களில் தகவல் பிழைகளும் இருப்பது உண்மையே.

'ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம்' என்கின்ற நூலை எழுதிய சி. புஷ்பராஜா நேரடியாகக் களத்திலிருந்த காலம், நூலின் அரைவாசிக்கும் குறைவான பக்கங்களிலேயே வருகின்றது. அவர் பிறரின் அனுபவங்களைக் கேட்டு, பிற்பகுதியில் எழுதியவற்றையும் ஒரு சாட்சியமாகவே எடுத்துக் கொள்கின்றோம். அவர் நேரடியாகப் பங்குபெறவில்லை; ஆகவே அதெல்லாம் போலிச் சாட்சியமென எவரும் அந்நூலை நிராகரிக்கவில்லை. அவ்வாறான ஒரு பார்வையை ஏன் நாம் நிரோமியின் நூலிற்குக் கொடுக்க முடியாது இருக்கிறது?

இந்தப் புத்தகம் போலியாக இருப்பதற்குச் சந்தர்ப்பம் குறைவு என்பதற்கு நான் முன்வைக்கும் சில காரணங்கள்:

(1) இந்நூலில் பல புகைப்படங்கள் இருக்கின்றன. நிரோமியின் சிறுவயதுப் படங்கள் மட்டுமல்லாது அஜந்தி மற்றும் அவர்களின் பெற்றோர் எனப் பலரின் புகைப்படங்கள் இருக்கின்றன. ஆகக் குறைந்தது, அஜந்தியின் பெற்றோரோ அல்லது அவரின் உறவினர்களோ, இந் நூலில் கூறப்பட்டது போல அஜந்தி இறக்கும்போது நிரோமியும் களத்தில் இருக்கவில்லை என்றால், இந் நூல் போலியானது என மறுத்திருப்பார்கள்.

(2) நிரோமி உயர்தரம் படிக்கும்போது, யாழில் இந்திய இராணுவத்திற்கு எதிராக நடந்த ஊர்வலத்தில் அவரும் முரளியும் நிற்கின்ற படமும் இந்நூலில் இருக்கின்றது. எனவே நிரோமி தன் அடையாளத்தை மறைக்க விரும்பவில்லை என்ற முடிவுக்கு வரமுடியும்.

(3) நிரோமி என்பவர் ஒரு 'ghost write ஆக இருந்து தன்னை வெளிப்படுத்த விரும்பாதிருந்தால் அவர் பொதுப் பார்வைக்கு வந்திருக்கத் தேவையில்லை. ஒருவர் வெளிப் பார்வைக்கு வருகின்றாரென்றால் (நூல் கண்காட்சிகள் மற்றும் பொது உரையாடல்களில் வெளிப்படையாகவே நிரோமி கலந்துகொள்கிறார்.) எப்படியோ அவரின் கடந்தகாலம் பற்றி எவருக்கும் பதில் கூறத் தயாராக இருக்கின்றார் என எடுத்துக் கொள்ளலாம்.

(4) நிரோமி நடந்த சம்பவங்களில் நேரடிச் சாட்சியாக இல்லாதிருந்தால் எளிதாக 'memoir' என்பதற்குப் பதிலாக இதை 'auto fiction' என மாற்றிவிட்டிருக்காலம். அப்படி மாற்றியிருந்தாரானால் நாம் அதன் நம்பகத் தன்மையைக் கேள்வியே கேட்க முடியாது. அவர் இதையொரு 'நினைவுக் குறிப்பு' என அடையாளமிட்டிருக்கின்றார் என்றால், அவர் இதன் மூலம் வரும் கேள்விகளைச் சந்திக்கத் தயார் என்பதுதான் அர்த்தம்.

20 வருடங்களுக்கு முன் நிகழ்ந்தவற்றை எழுதும்போது பல தவறுகள் ஏற்படுவதும் இயல்பானதே. 'A Long Way Gone' என்கின்ற மிகவும் கவனிப்புப்பெற்ற குழந்தை இராணுவத்தினனின் நூலையே போலியென பலர் கடுமையான விமர்சனங்களை முன்வைக்கின்றனர். இப்படியான விமர்சனங்கள் வருவது விதிவிலக்குமல்ல. உண்மை என்பது ஒன்றா, என்பதே கேள்விக்கு உள்ளாக்கப்படும் போது ஒருவர் நூற்றுக்கு நூறு சரியாக எழுதிவிடத்தான் முடியுமா என்ன? மேலும் இது நினைவுகளின் தொகுப்பு; விடுபடல்களும், மறதியும், தவிர்ப்புகளும் சாதாரணமாக நிகழக் கூடியதே.

இந் நூலின் கடைசி அத்தியாயத்தில் புலிகளைப் பற்றி மட்டுமன்றி சமகால இலங்கையின் நிலைமை பற்றியும் நிரோமி கொடுக்கும் தகவல்களும், ஆதாரங்களும் ஒரு முக்கியமான அரசியல் அறிக்கையே. அந்தக் கடைசி அத்தியாயம் எப்படி தீவிர புலியாதரவாளர்களை கோபப்படுத்த வைக்குமோ, அவ்வாறே புலியெதிர்ப்பாளர்களையும் எரிச்சலுறச் செய்யும். போராட்டத்தின் பெயரால் எல்லாச் சுமைகளையும் சுமந்த மக்கள் என்கின்ற மூன்றாவது தரப்பும் இருக்கின்றது. அத் தரப்பைப் பற்றியே நாமின்று நிறையக் கவலை கொள்ள வேண்டியிருக்கின்றது. அந்த அக்கறை இந்நூலை எழுதிய நிரோமியிடம் ஏதோ ஒருவகையில் இருப்பதை இந்நூலை வாசிக்கும்போது அறிய முடிகிறது.

(தொடரும்)

2009 இல், போரின் முடிவில், போர் தந்த சிதைவுளுக்கு நாம் முகம் கொடுத்தோம். இதில் மிக முக்கியமானது போர் சிதைத்த எமது நிறுவன நினைவு வளம் (Institutional Memory) ஆகும். மனித இழப்புகளுக்கு அடுத்ததாக, எம்மால் கட்டமைக்கப்பட்ட நிறுவனங்களின் பெயர்வும், சிதைவும் பிடுங்கி எறியப்பட்ட பூசணிக் கொடிகள் போல எங்கும் பரவிக் கிடக்கிறது. நிறுவனங்களின் சிதைவுகளில் மிக முக்கியமானதும், மிகவும் பாதிக்கப்பட்டதுமாக அமைவது கூட்டுறவு இயக்கமாகும்; கூட்டுறவுத் துறையின் வெற்றிக்கு அச்சாணியாக இருந்த கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்களும் அதனோடு இணைந்தே அழிவுக்குள்ளாகின. இச் சிதைவுகளைக் கண்டறிந்து மீள் உருவாக்கம் செய்ய வேண்டிய காலமிது. அதன் பொருட்டு, கூட்டுறவு இயக்கம் – கூட்டுறவின் கட்டமைப்புக்கள் மிக முக்கிய அசைவியக்கமாக மாற முடியுமா? போரின் பின்னரான மீள் கட்டுமானத் திட்டங்களுக்கும் நிலையான அபிவிருத்திக்கும் கூட்டுறவு இயக்கத்தின் வகிபாகம் யாது? எங்கிருந்து தொடங்குவது? போரின் பின்னரான சிதைவுகள், அதன் விளைவாக விளைந்த பொருளாதார நெருக்கடிகளுக்கு அதனால் உதவ முடியுமா? ஆகிய வினாக்களை இத் தொடர் முன்வைத்து ஆராய்கின்றது. போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் மலையகம் உட்பட, இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள கூட்டுறவுத் துறையினால் ஒரு வலுவான மாற்றுப் பொருளாதாரக் கட்டமைப்புக்கு சிறப்பாக உதவ முடியும். கூட்டுறவுத் துறையின் வளர்ச்சி சார் விடயங்களை மையமிட்டு காத்திரமான விடயங்களை தர்க்கத்துடன் கலந்துரையாடி, சிந்தனைக்கான முன்மொழிவுகளை தரும் இத் தொடர் 'கூட்டுறவு இயக்கத்தின் வகிபாகம் : போரின் பின்னரான மீள் கட்டுமானமும் அபிவிருத்தியும்' எனும் பெயரில் அமைகிறது.




வை. ஜெயமுருகன்


சமூக அபிவிருத்தி ஆய்வாளரான இவரது எழுத்துக்கள் அபிவிருத்தி பிரச்சினைகள் தொடர்பாக கவனம் கொள்வதுடன் போரின் பின்னரான நினைவுகொள் காலத்தின் மீள் கட்டமைப்புக்கள் மீதும் அழுத்தம் கொடுக்கிறது. இவர், அபிவிருத்திக் கல்விக்கான கலாநிதிப் பட்ட ஆய்வுக்காக 'இலங்கையின் போரின் பின்னரான அபிவிருத்தி முரண்நிலை' என்னும் கருப்பொருள் மீதான ஆய்வை முன்னெடுத்தவர். இவ் ஆய்வு நூலாக வெளிவரவுள்ளது. சர்வதேச கிறிஸ்டின் பல்கலைக்கழகத்தில் 'M.A in Peace Study' ஆய்வுப் பட்டம் செய்ய ரோட்டரி (Rotary Peace Fellow) புலமைப்பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டவர்.


# ஓர் அரசியற் கருவியாக கூட்டுறவு ஏன் வலுவிழந்தது? : கூட்டுறவின் அடையாளம் மற்றும் அரசியல்

கூட்டுறவின் தனித்துவ அடையாளம், அதன் அரசியல் மொழி தொடர்பான கருத்துரைகள் மிக அவசியமானவை. ஏனெனில், கூட்டுறவின் இன்றைய தேக்க நிலையைப் படம் பிடிக்கவும் அதன் தொடரும் நெருக்கடிகளை ஆராய்ந்து நாடி பிடிக்கவும் இவைகளைப் பற்றிய தெளிவு மிக அவசியம். கூட்டுறவின் ஆரம்ப நிலை, அதன் அடையாளம், சிறப்புத் தன்மைகள் மற்றும் இன்றைய செல்நெறி வழி நோக்கின், ஓர் அரசியற் கருவியாக கூட்டுறவு ஏன் வலுவிழந்தது? என்பதைத் தெளிவுறக் காணலாம்.

இலங்கையின் கூட்டுறவு இயக்கம் ஒரு வரலாற்று நிகழ்வாகும். பிரித்தானியக் காலனித்துவ சகாப்தத்தின் பிற்பகுதியில் தோன்றியதிலிருந்து, இந்த இயக்கம் இலங்கையின் அரசியல் பொருளாதாரத்தில் ஒரு தனித்துவமான அமைப்பை உருவாக்கி வருகிறது. இலங்கையில் கூட்டுறவு இயக்கத்தின் வரலாற்றை 1904 ஆம் ஆண்டு மணிக்கிண்ணத்தில் விவசாயக் கடன் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது முதல் ஆராயலாம். 1911 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கச் சட்டத்தின் கீழ் முதல் கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவுக் கடன் சங்கமாக

நிறுவப்பட்டது. கூட்டுறவு அமைப்பின் கருத்து என்ன? ஒரு கூட்டுறவு அமைப்பு என்பது ஒரு பொதுவான, புறநிலையாக இல்லாவிட்டாலும், தகவல் அல்லது பணிகளைப் பகிர்ந்து கொள்ளும் பல ஆற்றல்மிக்க நிறுவனங்களின் அமைப்பாக வரையறுக்கப்படுகிறது. ஒரு கூட்டுறவு அமைப்பு (system) என்பது உடல், உயிரியல் மற்றும் சமூகக் காரணிகளின் ஒருங்கிணைப்பு ஆகும்; அதன் நோக்கம் வரம்புகளை கடப்பதாகும். ஒரு கூட்டுறவு அமைப்பு உருவாக்கப்படும் போது, அது அதன் சொந்த நோக்கத்தையும், தன்னைத்தானே பராமரிக்கும் சிறப்பு உறுப்பையும் உருவாக்க வேண்டும். கூட்டுறவு, ஒரு அமைப்பு (system) என்னும் கருத்துநிலை சரியாக புரியாவிட்டால். காலப்போக்கில் அது செயலிழக்கும்.




**இலங்கையிலுள்ள கூட்டுறவு அமைப்புகளுக்கான சில உதாரணங்கள்**

Image Source - icaap.coop

சர்வதேச கூட்டுறவு ஒன்றியத்தின் சட்ட ஆராய்வு அறிக்கை பின்வருமாறு கூறுகிறது:

“இலங்கையில் கூட்டுறவுச் சட்டங்கள் கூட்டுறவுக் கோட்பாடுகளை (Cooperative Principles) முழுமையாக உள்ளடக்கியிருக்கவில்லை. கூட்டுறவுப் பிரகடனத்திற்கு முன்னரே சட்டங்கள் உருவாக்கப்பட்டமை இதற்கான காரணமாகும். 1995 ஆம் ஆண்டின் கூட்டுறவு அடையாள அறிக்கை (Cooperative Identity Statement), கூட்டுறவுக் கொள்கைகளின் தனித்தன்மையை வரையறுத்துக் கூறினாலும், தற்போதுள்ள கூட்டுறவுச் சட்டத்திற்குள்ளே இன்னும் அதன் மதிப்புகள் மதிப்பூட்டப்படவில்லை. பதிவு செய்வதற்கான தேவையின் நிமித்தம், ஒரு சடங்காக, குறிப்பிடப்பட்ட கூட்டுறவுக் சட்டங்களுக்கு இணங்க முன்மொழியப்பட்ட சங்கங்கள், அதன் பொருளாதார - சமூக - கல்வி மற்றும் கலாசார நலனுக்குப் பங்களிக்கும் சேவைகள் மட்டும் எனக் குறிப்பிடப்பட்டு கூட்டுறவு பற்றிய முழுமையான பார்வை மற்றும் அதன் சிறப்பு நிலை அறியாது இயங்கும் போக்கு, கூட்டுறவின் தேய்பிறைக் காலத்துக்கு மிக முக்கிய காரணங்களின் ஒன்றானது எனலாம். தொடக்கமே பிழையான பிள்ளையார் சுழி கூட்டுறவு பற்றிய போதிய தெளிவின்மைக்கு வித்திடுகிறது.”

கூட்டுறவின் மிக உயிரான பகுதி அதன் உள்ளடக்கிய தன்மை (Inclusiveness) ஆகும். உள்ளடக்கிய தன்மை என்பது ஒடுக்கப்படுபவர்களின் பக்கம் நிற்பது; ஒடுக்கப்படுபவர்களின் குரலாக மாறி அவர்களின் வளர்ச்சிக்குப் பாடுபடுவது; உடல் அல்லது அறிவுசார் குறைபாடு உள்ளவர்கள் அல்லது பிற சிறுபான்மை குழுக்களைச் சேர்ந்தவர்கள் போன்ற ஒடுக்கப்பட்ட சமூகம் அல்லது ஒடுக்கப்பட்ட நபர்களுக்கு வாய்ப்புகள் மற்றும் வளங்களில் சமமான வாய்ப்பை உறுதிசெய்வது; கொள்கைகளை அமைப்பாக இயக்கி நடைமுறைப்படுத்தப் பாடுபடுவது. உள்ளடங்கிய தன்மை நீர்த்துப்போகும் நிலையில் கூட்டுறவு அதன் உயிரை தானே எடுக்கும் நிலைக்கு தள்ளப்படுகிறது.

கூட்டுறவு என்பது மக்களை மையமாகக் கொண்ட நிறுவனங்களாகும். கூட்டுறவு அமைப்புகள் கூட்டுறவுத் திணைக்களத்தின் நீட்சி இல்லை; கூட்டுறவுத் திணைக்களம் தான் கூட்டுறவு அமைப்புகளின் நீட்சி. இந்நிலை மாறும் போது கூட்டுறவு தன் நிலையை இழந்து வீரியமற்று மடியும் நிலையை அடையும். கூட்டுறவுகள் மக்களை ஜனநாயக மற்றும் சமமான வழியில் ஒன்றிணைக்கின்ற அதற்கான கருவிகள் மட்டுமே. இலாபம் மட்டும் அல்ல,

மதிப்புகளால் இயக்கப்படும் வணிகமாக, கூட்டுறவுகள் சர்வதேச அளவில் ஒப்புக் கொள்ளப்பட்ட கொள்கைகளைப் பகிர்ந்து கொள்கின்றன. ஒத்துழைப்பின் மூலம் ஒரு சிறந்த உலகத்தை உருவாக்க ஒன்றாகச் செயற்படுகின்றன. கூட்டுறவு நிறுவனத்தின் இதயத்தில் நியாயம், சமத்துவம் மற்றும் சமூக நீதியை வைத்து, உலகெங்கிலும் உள்ள கூட்டுறவு நிறுவனங்கள் நீண்ட கால வேலைகள் மற்றும் செழிப்பை உருவாக்கும் நிலையான நிறுவனங்களை உருவாக்க மக்கள் ஒன்றிணைந்து செயற்பட அனுமதிக்கின்றன. இவைதான் கூட்டுறவின் வெற்றிக்கான பாதை ஆகும்.

கூட்டுறவு வழங்கும் நடைமுறை அல்லது கொள்கைக் கற்றலின் ஐந்து முக்கிய கூறுகள்:

1. நேர்மறையாக ஒன்றை ஒன்று சார்ந்திருத்தல் (Positive interdependence).
2. ஒரு குழுவின் அனைத்து உறுப்பினர்களும் ஒன்றாக மூழ்கி நீந்துவதைப் புரிந்து கொள்ளும்போது ஒரு குழு இலக்கை அடைதல் (A group achieves this element when all team members understand that they sink or swim together).
3. தனிநபர் மற்றும் குழுப் பொறுப்பு வகித்தல் (Individual and group accountability).
4. தனிப்பட்ட மற்றும் சிறிய குழுத் திறன்கள் அபிவிருத்தி (Interpersonal and small group skills) நேருக்கு நேர் தொடர்பு (Facetoface interaction).
5. குழுச் செயலாக்கம் (Group processing).

இவையாவும் கூட்டுறவு அமைப்புகள் செயல்படும் நிலையில் அக, புற முரண்பாடுகளைக் களைந்து கூட்டுறவின் அடையாளத்தை நிலை நிறுத்த உதவுகின்றன.

கூட்டுறவுக் கோட்பாடுகள் யாவை? கூட்டுறவுக் கொள்கைகள் என்பது கூட்டுறவுகள் தங்கள் மதிப்புகளை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்கள் ஆகும். கூட்டுறவுகள் சுய உதவி, சுய பொறுப்பு, ஜனநாயகம், சமத்துவம் மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் மதிப்புகளை அடிப்படையாகக் கொண்டவை. தங்கள் நிறுவநர்களின் பாரம்பரியத்தில், கூட்டுறவு உறுப்பினர்கள் நேர்மை - வெளிப்படைத்தன்மை - சமூகப் பொறுப்பு மற்றும் பிறரைக் கவனித்துக்கொள்வது போன்ற நெறிமுறை மதிப்புகளை நம்புகிறார்கள்.

1. தன்னார்வ மற்றும் திறந்த உறுப்பினர் : கூட்டுறவு என்பது தன்னார்வத் தொண்டு நிறுவனங்களாக, பாலின - சமூக - இன - அரசியல் அல்லது மதப் பாகுபாடு இல்லாமல், தங்கள் சேவைகளைப் பயன்படுத்தக்கூடிய அனைத்து நபர்களுக்கும் சமமாகவிருக்கும் உறுப்பினர் பொறுப்புகளை ஏற்கத் தயாராக உள்ளது.

2. ஜனநாயக உறுப்பினர் கட்டுப்பாடு : கூட்டுறவு என்பது அவர்களின் உறுப்பினர்களால் கட்டுப்படுத்தப்படும் ஜனநாயக அமைப்புகளாகும். அவர்கள் தங்கள் கொள்கைகளை அமைப்பதிலும் முடிவுகளை எடுப்பதிலும் தீவிரமாகப் பங்கேற்கின்றனர். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகப் பணியாற்றும் ஆண்களும் பெண்களும் உறுப்பினர்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும். முதன்மைக் கூட்டுறவுகளில் உறுப்பினர்களுக்குச் சமமான வாக்குரிமைகள் (ஒரு உறுப்பினர், ஒரு வாக்கு) வழங்கப்படுகின்றன. பிற மட்டங்களில் உள்ள கூட்டுறவுகளும் ஜனநாயக முறையில் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

3. உறுப்பினர் பொருளாதாரப் பங்கேற்பு : உறுப்பினர்கள் தங்கள் கூட்டுறவு மூலதனத்திற்கு சமமாகப் பங்களிக்கிறார்கள்; ஜனநாயக ரீதியாக கட்டுப்படுத்துகிறார்கள். அந்த மூலதனத்தில் குறைந்தபட்சம் ஒரு பகுதி கூட்டுறவுச் சொத்தாக இருக்கும். உறுப்பினர்கள், வழக்கமாக வரையறுக்கப்பட்ட இழப்பீட்டை (ஏதேனும் இருந்தால்), உறுப்பினர் நிபந்தனையாக, சந்தா செலுத்தப்பட்ட மூலதனத்தில் பெறுவார்கள்.

4. சுயாட்சி மற்றும் சுதந்திரம் : கூட்டுறவு என்பது தன்னாட்சி பெற்ற, தங்கள் உறுப்பினர்களால் கட்டுப்படுத்தப்படும் சுய உதவி நிறுவனங்கள் ஆகும். அவர்கள் அரசாங்கங்கள் உட்பட பிற அமைப்புகளுடன் ஒப்பந்தங்களில் நுழைந்தால் அல்லது வெளிப்புற மூலங்களிலிருந்து மூலதனத்தை திரட்டினால், அவர்கள் தங்கள் உறுப்பினர்களின் ஜனநாயகக் கட்டுப்பாட்டை உறுதிசெய்து, தங்கள் கூட்டுறவுச் சுயாட்சியை





Figure 1: Cooperative statistics per sector in Sri Lanka (2019) (Data received from NCCSL for 2019)

Image Source - coops4dev.coop

நிலை நிறுத்தும் விதிமுறைகளைக் கடைப்பிடிப்பார்கள்.

5. கல்வி, பயிற்சி மற்றும் தகவல் : கூட்டுறவுகள் தங்கள் உறுப்பினர்கள், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், மேலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு கல்வி மற்றும் பயிற்சியை வழங்குகின்றன. இதனால் அவர்கள் தங்கள் கூட்டுறவுகளின் வளர்ச்சிக்கு திறம்பட பங்களிக்க முடியும். அவர்கள் பொது மக்களுக்கு - குறிப்பாக இளைஞர்கள் மற்றும் தலைவர்களுக்கு - ஒத்துழைப்பின் தன்மை மற்றும் நன்மைகள் பற்றி தெரிவிக்கின்றனர்.

6. கூட்டுறவு அமைப்புகளிடையே ஒத்துழைப்பு : கூட்டுறவுகள் தங்கள் உறுப்பினர்களுக்கு மிகவும் திறம்பட சேவை செய்கின்றன. உள்ளூர், தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச கட்டமைப்புகள் மூலம் ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துகின்றன.

7. சமூகத்தின் மீதான அக்கறை : கூட்டுறவின் மந்த நிலைக்கு, மூல காரணங்கள் பல உண்டு; கூட்டுறவு அமைப்புகளிடையே ஒற்றுமையின்மை, ஒத்துழைப்பின்மை அவற்றுள் மிக முக்கியமானவை. கூட்டுறவு ஒரு அடர்ந்த காடு; எல்லாம் அடங்கிய ஒரு இராச்சியம். ஆனால், அவை தனிமரங்களாக இருப்பதால் அதன் பலத்தை அறிவதில்லை.

வட மாகாணத்தின் சிக்கனக் கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை பற்றி ஆராய்ந்தால் அதன் அங்கத்துவப் பலம் பரந்து, விரிந்து, செறிவானதாக உள்ளதைக் கண்டு அதிர்ச்சியே அடைய வாய்ப்புண்டு. 2015 ஆம் ஆண்டு முதல், வட மாகாணக் கூட்டமைப்பாக (சம்மேளனமாக - Federation) உருவாக வட மாகாணத்தின் சிக்கனக் கூட்டுறவுச் சங்கங்கள் செயற்பட்டு வருகின்றன. வட மாகாணச் சம்மேளனத்தில் ஐந்து மாவட்ட சமாஜங்கள் உள்ளன. 1983 முதல் யாழ்ப்பாணம், 1986 முதல் கிளிநொச்சி, 1987 முதல் முல்லைத்தீவு, 1986 முதல் வவுனியா மற்றும் 1986 முதல் மன்னார் ஆகிய மாவட்டங்களில் சமாஜங்கள் செயற்பட்டு வருகின்றன. இவற்றில் 39,290 உறுப்பினர்கள் உள்ளனர். அனைத்துச் சங்கங்கள், தொழிற்சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகள் ஆகியவை கூட்டுறவுத் துறையின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. கூட்டுறவுத்துறை அவர்களின் செயற்பாடுகளைக் கண்காணித்து ஆலோசனைகளை வழங்குகின்றன.

- **யாழ்ப்பாணத்தில் 560 சங்கங்கள் உள்ளன. 285 செயலில் உள்ளன மற்றும் 275 செயற்படவில்லை.**
- **கிளிநொச்சியில் 118 சங்கங்கள் உள்ளன. 54 செயலில் உள்ளன மற்றும் 64 செயற்படவில்லை.**
- **முல்லைதீவு 134 சங்கங்கள் உள்ளன. 65 செயலில் உள்ளன மற்றும் 69 செயற்படவில்லை.**
- **வவுனியாவில் 196 சங்கங்கள் உள்ளன. 102 செயலில் உள்ளன மற்றும் 94 செயற்படவில்லை.**
- **மன்னாரில் 125 சங்கங்கள் உள்ளன. 73 செயலில் உள்ளன மற்றும் 52 செயற்படவில்லை.**

வட மாகாண சிக்கனக் கூட்டுறவுச் சம்மேளனத்தில் வட மாகாணத்திலுள்ள 05 மாவட்டச் சிக்கனக் கடனுதவுச் சமாஜங்களும் அங்கத்துவம் பெற்றுள்ளன. இவற்றில் அங்கத்துவம் வகிக்கும் சங்கங்கள் 1,095 ஆகும். இதில் இயங்கும் சங்கங்கள் 559 ஆகும். மொத்தமாக இயங்கும் அங்கத்தவர்கள் 30,703.

மாகாண மட்ட சிக்கன மீன்பிடி, தெங்கு -




பழ உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சமூகம் - வவுனியா

Image Source - icaap.coop

பனை பலநோக்கு கூட்டுறவுச் சம்மேளனங்கள் ஒரு அமைப்பின் அல்லது ஒரு இணைவுக் கட்டமைப்பிற்குள் வரும் போது ஒரு தனி அடையாளம் உருவாக்கப்படலாம். இதனால் உருவாக்கப்படும் அடையாள அட்டை, சகல கூட்டுறவாளர்களையும் இணைக்கும் புள்ளியாகத் தொழிற்படும். உத்தேசக் கணிப்பின்படி, அனைத்துச் சம்மேளனங்களும், அங்கத்தவர்களும் ஒரு இணைவில் வலம் வரும் போது அதே ஒரு பெரிய சந்தையாக மாறலாம். அது, நாமே பொருளை உருவாக்கி, நமக்குரிய நுகர்வை நாமே பேணும் ஒரு உத்தியாக அமையும். உண்மை யாதெனில், கூட்டுறவுத் திணைக்களத்துக்கு இவ்விடயம் நன்கு தெரியும். ஆனால், அரசியல் உள்நோக்கம் காரணமாக செயற்படுத்த மாட்டார்கள். ஆனால், மாகாண நியதிச் சட்டங்களால் இதனை அழகாகச் செய்யமுடியும். 13 ஆவது யாப்புத் திருத்தம் இங்கு உதவ முடியும். வட மாகாணக் கூட்டுறவு அமைச்சு இதற்குரிய அதிகாரத்தைக் கொண்டுள்ளது. ஆனால், நடைமுறையில் அதிகாரம் பூச்சியம்.

### கூட்டுறவு என்றால் என்ன?

கூட்டாக மற்றும் ஜனநாயகக் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனத்தின் மூலம் அவர்களின் பொதுவான பொருளாதார, சமூக மற்றும் கலாசாரத் தேவைகள் மற்றும் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய தன்னார்வமாக ஒன்றுபட்ட நபர்களின் தன்னாட்சிச் சங்கமே கூட்டுறவாகும். இலங்கையிலும் உலகளாவிய ரீதியிலும் ஆறு அடிப்படை வகையான கூட்டுறவுகள் உள்ளன:

1. தயாரிப்பாளர் கூட்டுறவு : பண்ணைகள், கலைஞர் ஸ்டூடியோக்கள் அல்லது மீன்பிடிப் படகுகள் போன்ற தனித்தனி நிறுவனங்களின் உறுப்பினர்கள் உற்பத்தியில் ஈடுபடுவர். இந்தக் கூட்டுறவுகள் ஏனைய சேவைகளுடன், பொருட்கள், சந்தைப்படுத்தல், செயலாக்கம் அல்லது காப்பீடு ஆகியவற்றை வழங்கலாம் (Producer Cooperatives).

2. தொழிலாளர் கூட்டுறவு : இது சில அல்லது அனைத்துத் தொழிலாளர்களுக்கும் சொந்தமானது. வழக்கறிஞர்கள், பொறியாளர்கள், உணவகங்கள், பகல்நேரப் பராமரிப்பு மற்றும் பலவற்றின் சிறிய குழுக்களில் இது பிரபலமாக உள்ளது (Worker Cooperatives).

3. கடன் சங்கம் : கடன் சங்கக் கணக்கில் பணத்தை வைப்புச் செய்யும் ஒவ்வொரு நபரும் உறுப்பினர் - உரிமையாளராய் இருப்பர். சமீபத்திய நிதி நெருக்கடியை அடுத்து, பலர் பெரிய இலாபம் ஈட்டும் வங்கிகளுக்கு மாற்றாக கடன் சங்கங்களை நோக்கி திரும்புகின்றனர் (Credit Union).

4. நுகர்வோர் கூட்டுறவுகள் : இவை கூட்டுறவு நிறுவனத்தில், வாங்கும் நபர்களுக்குச் சொந்தமானது. பலசரக்குப் பொருட்கள் முதல் மின்சாரம், சுகாதாரம் வரை மக்கள் விரும்பும் எதையும் இந்தக் கூட்டுறவுகளால் வழங்க முடியும். நுகர்வோர் கூட்டுறவுகள் மிகவும் சிறியதாக இருக்கலாம்; ஒரு கிராமப்புற உணவு வாங்கும் கடை முதல் நகரத்தின் மிகப்பெரிய சூப்பர் மார்க்கெட் வரை (Consumer Cooperatives).

**5.** சில்லறை அல்லது கொள்முதல் கூட்டுறவு : இது பகிரப்பட்ட சேவைக் கூட்டுறவு என்றும் அழைக்கப்படலாம். சிறந்த மேற்கத்தேய மோட்டல்கள், ஏஸ் ஹார்டுவேர் மற்றும் கார்பெட் ஒன் போன்ற நீங்கள் அங்கீகரிக்கக்கூடிய வணிகங்களை இந்த வகை உள்ளடக்கியுள்ளது. இந்தச் சுயாதீன வணிகங்கள் பொருட்களை வாங்குதல் அல்லது சேவைகளை வழங்குவதில் செயற்திறனை அதிகரிக்க கூட்டுறவுகளை உருவாக்கியது (Retail or Purchasing Cooperative).

**6.** சமூகக் கூட்டுறவுகள் : வளர்ந்து வரும் இந்த வகையான கூட்டுறவு, பெண்கள் மற்றும் ஒதுக்கப்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவது போன்ற சமூக நோக்கத்தைக் கொண்டுள்ளது (Social Cooperatives).

கூட்டுறவு அமைப்புகளில் மிக மிக வளர்ச்சி அடைந்தது சமூகக் கூட்டுறவுகள் ஆகும். இது மலேசியா, சிங்கப்பூர், வியட்நாம், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் மிகவும் பலமாக உள்ளது. ஆனால், எம்மிடம் இவை இன்னும் முறையாக வளரவில்லை. உலக வங்கி அறிமுகப்படுத்திய கட்டமைப்புச் சரி செய்தலானது (Structural Adjustment Program - SAP) பொருளாதாரத்தில் அரசாங்கத்தின் பங்கைக் குறைப்பதற்கும் சந்தைப் பொருளாதாரத்திற்கு நெருக்கமாக நகர்த்துவதற்கும் வடிவமைக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளின் தொடராக விளங்குதல் இதற்கான காரணமாகும். SAP இன் குறிக்கோள், பற்றாக்குறையைக் குறைப்பதும் சமூகத்தின் திருப்தியை அதிகரித்து அவர்களின் வரம்பற்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதுமாகும். உண்மையில், கூட்டுறவுக்கு இது பாதகமில்லை; கூட்டுறவாளர்கள் இதை எதிர் கொள்வதற்கு மாற்று மூல உபாயத்தை கொண்டுவரவில்லை என்பதே பிரச்சினை. பிரச்சினைகளை எதிர்கொள்ள மாற்றுத் தந்திர உபாயம் இல்லாமல் நவ தாராளவாத சுனாமில் மாட்ட வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

## நவதாராளவாத இலங்கையில் கூட்டுறவு நிறுவனங்களின் பங்கு

சுதேச பொருளாதார அரசு, 1977 முதல், கூட்டுறவு வீழ்ச்சிக்கு அடித்தளம் இட்டது. திறந்த பொருளாதாரம் அதை மேலும் படுகுழிக்கு தள்ளியது. 1961 ஆம் ஆண்டு ஜுலை 1 ஆம் திகதி வர்த்தகம், உணவு மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சர் டி.பி. இளங்கரத்னவினால் மக்கள் வங்கியானது திறந்து வைக்கப்பட்டது. முதலாவது கிளை கொழும்பு டியூக் வீதியில் திறக்கப்பட்டது. பலமாக, மேலும் சிறப்பாக வரக்கூடிய ஆரம்பகால கூட்டுறவு வங்கிச் செயற்பாட்டை, மக்கள் வங்கி முடிவில் சிதைத்து விட்டது. கூட்டுறவு அரசின் கருவியாகி, பலம் இழக்கும் நிலைக்கு வழிவகுத்தது. சீனாவினால் மக்கள் வங்கி 'கறுப்புப் பட்டியலில்' சேர்க்கப்படும் முன்னரே மக்கள் வங்கி அதன் பெறுமதியைத் தானே அழித்தது. இது கூட்டுறவுத் துறையை ஒரு அரசு எப்படிச் சிதைக்கலாம் என்பதுக்கு நல்ல உதாரணம்.

1977 இல் இலங்கை தனது பொருளாதாரத்தைத் திறந்தவுடன், கூட்டுறவுகளின் சமூக, பொருளாதாரப் பாத்திரமான 'இரட்டை இயல்பு' (பொருளாதார இலாபமும் சமூக வளர்ச்சியும் இணைந்த செயற்பாடுகள்) ஒரு தெளிவற்ற, சவாலான சூழ்நிலைக்குச் சென்றது. அக் காலம் முதலே, தடையற்ற சந்தை நிலைமைகளில் உள்ள சவால்களைச் சமாளிக்க முடியாமல் திணறி வருவதால், இலங்கையின் கூட்டுறவு நிறுவனங்கள் சந்தையில் தங்கள் வேகத்தை தொடர்ந்து இழந்து வருவதைக் காண முடிகிறது. இலங்கை கூட்டுறவு இயக்கம் எதிர்காலத்தில் தொடர வேண்டுமானால், 'தன்னார்வ மக்கள் இயக்கமாக' அது தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும்; கூட்டுறவின் அடையாளத்தை நாட வேண்டும்.

மூன்றாம் பகுதி, 'கூட்டுறவின் தனித்துவம் - பிற நாடுகளில் அதன் வளர்ச்சின் போக்கு' பற்றி மிக விரிவாக ஆராய்கிறது.


### உசாத்துணை


சர்வதேச கூட்டுறவு ஒன்றியத்தின் சட்ட ஆராய்வு அறிக்கை (LEGAL FRAMEWORK ANALY SIS

withintheICAEUPartnershipNationalReportSriLanka,page04Downloaded https://coops4dev.coop/sites/default/files/202106/Sri%20Lanka%20Legal%20 Framework%20Analysis%20National%20Report.pdf


(தொடரும்)

ஈழநாடானது தமிழகத்திலிருந்து கடலால் பிரிக்கப்பட்ட நாடாக அமைகின்ற போதும், பண்டைக்காலந்தொட்டே தமிழர்களின் மரபுத் தொடர்ச்சியான பண்பாட்டுக் கூறுபாடுகளை உடைய மண்டலமாக காணப்பட்டு வருகிறது. தொல்காப்பியம் சுட்டும் பல இலக்கண விதிகள் இன்று தமிழகத்தில் வழக்கில் இல்லாத போதும் ஈழத்தில் அவை வழங்கப்பட்டு வருகின்றன. பண்பாட்டு வாழ்வியல்களின் அடிப்படையிலும் பண்டைத் தமிழரின் மரபுகள் பலவற்றை ஈழத்தில் காணவியலும். இந்நிலையின் தொடர்ச்சியாகவே பண்டைத் தமிழரின் சமயப் பண்பாட்டு மரபுகளையும் கருதலாம். அந்த வகையில், வடக்கே பருத்தித்துறைமுதல் தெற்கே தேவேந்திரமுனைவரை உள்ள தமிழ் மக்களிடமும், சிங்கள மக்களிடமும் காணப்படும் வழிபாட்டு முறைகளில் பண்டைத் தமிழ் நூல்களில் காணப்படும் வழிபாட்டு மரபுகளை ஆய்வுப் பரப்பாகக் கொண்டு பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும், இலக்கணங்களிலும் காணப்படும் வழிபாட்டு மரபுகளில் இலங்கையில் இன்றளவும் வழங்கி வருகின்ற மரபுத் தொடர்ச்சியினை ஆராய்வதே ‘இலங்கையில் பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபுகள்‘ எனும் இத் தொடரின் நோக்கமாகும். இத் தொடர், இலங்கையில் பண்டைத் தமிழரின் வழிபாட்டு மரபுகள் இன்றளவும் தொடர்கின்றன என்னும் கருதுகோளினை அடையும்.





ஜெகநாதன்
அரங்கராஜ்


முனைவர் ஜெ. அரங்கராஜ் யாழ்ப்பாணம் நீர்வேலியைச் சேர்ந்தவர். இவர் பழந்தமிழ் இலக்கியத் துறையில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். மேலும் தமிழ் இலக்கியம், இலக்கணம், வரலாறு, சமயம் முதலான துறைகளில் தமது ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறார். சிங்கப்பூர்த் தமிழ்ப் பாடநூற்கள் குறித்தும் பண்டைத் தமிழர்களின் அயலகத் தொடர்புகள் குறித்தும் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். ‘செம்மொழித் தமிழ் இலக்கண, இலக்கிய மேற்கோள் அடைவு’ என்னும் இவரது நூல் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் ஈழம், தமிழகம் என இரண்டு தலங்களிலும் ஆய்வு மேற்கொண்டுள்ள ஆய்வாளராக இவர் திகழ்கின்றார்.

# சிலப்பதிகாரமும் ஆசீவகமும்

1

தமிழ்க் காப்பிய அமைப்பில் சிலப்பதிகாரம் இன்றளவும் தோன்றிய காப்பியங்கள் யாவற்றிலும் வேறுபட்டு நிற்கின்ற தன்மையினை உடையதாகின்றது. அவ்வேறுபட்ட தன்மையே இன்று அதனது சிறப்புத் தன்மையாகப் போற்றப்படுகின்றது. அச்சிறப்புத் தன்மைக்கான ஏந்துதல்கள் எவ்வகையில் இளங்கோவடிகளுக்குக் கிடைத்திருக்கும் என்பனவான எண்ணங்கள் தோன்றுதல் இயல்பேயாம். அவ் வகையில் சிலப்பதிகாரத்தின் சிறப்பியல்புகளுக்கான காரணங்கள் இளங்கோவடிகள் காப்பியமியற்றிய காலச் சூழலில் இருந்தே கிடைத்தனவாகக் கொள்ளுதலே பொருத்தமாக இருக்கும். அவர் காலச் சூழலில்



**இளங்கோவடிகள்**
Image Source - www.britannica.com

நிலவிய சமயங்களின் தாக்கம் பல வகையிலும் சிலப்பதிகாரத்தில் தங்கியிருக்கும். ஆதலால் சிலப்பதிகாரத்தின் தனித்தன்மைகளைக் காணுவோம்.

ஏனெனில் காரியங்களுக்கான காரணம் களியத்துள்ளேயே காணப்படுவதாகும்.

முப்பது பகுதிகளையுடைய சிலப்பதிகாரத்தின் முதற்பகுதியாக அமைவது, மங்கல வாழ்த்துக் காதையின் தொடக்கமாக அமைவதாலும், கலியாணப்பாட்டு என அரும்பத உரையாசிரியர் குறிப்பிடுவதாலும், காதை நிகழ்வு இல்லாமையாலும், அது மங்கள வாழ்த்துப் படலாயிற்று எனலாம். மங்கல வாழ்த்து மரபில் பிற காப்பியங்கள் யாவற்றிலும் அவ்வக் கடவுளரின் வாழ்த்துப் பாடலும் வழிபாட்டுப் பாடலும் அமைய, சிலப்பதிகாரத்தில் மாத்திரம் பின்வருவதான பாடல் அமைகின்றது:

> **“திங்களைப் போற்றுதும் திங்களைப் போற்றுதும், என்றும்**
> **ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் என்றும்,**
> **மாமழை போற்றுதும் மாமழை போற்றதும் என்றும்,**
> **பூம்புகார் போற்றுதும் பூம்புகார் போற்றுதும்”**

இப்பாடல் இயற்கையை வாழ்த்துவதாக அமையினும், உற்று நோக்கில் பல மெய்மைகளை உணரலாம். இப்பாடலிற் குறிப்பிடப்பட்ட திங்கள், ஞாயிறு, மாமழை, பூம்புகார், சோழ அரசு என்பன யாவுமே ஒரு முறைமையில் இயங்குவன. அம்முறை, பிறழின் அவ்வியக்கம் என்பது நிகழாது; ஆதலால் முறை பிறழாமல் ஊழின் வழிப்பட்டதாகிய நியதியில் இயங்கக்கூடிய இப்பொருட்களை வாழ்த்துதலின் வழி இக் காப்பியப் புலவனின் மெய்யியல் யாதென விளங்குவதாகின்றது. இதில் காட்டப்படும் நிகழ்வுகளில், ஒரு நிகழ்வின் தொடர்ச்சியாக மற்றொரு நிகழ்வு நிகழ்வதாகக் காட்டப்படிருப்பது, ஊழானது சங்கிலித் தொடர் போலத் தொடர்ந்து இயங்கும் நிலைப்பாட்டினைக் கூறும் வகைமையானதாக உள்ளது. சான்றாக ‘ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும்’ என்ற அடியின் தொடர்புடையதாக சோழ மன்னனின் ‘திகிரி மேருவை வலந்திரிதல்’ இணைத்துக் கூறப்படுகின்றது. இவ்வகை உவமையானது இயங்கும் பொருட்களின் செயலை நிகழ்வுகளின் செயலோடு ஒப்பித்துக் கூறும் தன்மையினை உணர்த்துவதாக அமைகின்றது. இது, ஊழின் தன்மை இயங்கு பொருட்களிலிருந்து நிகழ்வுகளுக்குத் தொடர்புப் பரிமாற்றம் பெறுதலினை விளக்குவதாக உள்ளமையினைக் காணலாம். திங்கள், மாமழை இவற்றிற்கான இயங்கியல் தொடர்பு இக்காப்பியம் முழுவதிலும் பரவுதலைக் காணலாம்.

அத்துடன் இப்பாடலின் இறுதியடிகளான “பொதியிலாயினு மிமயமாயினும், பதியெழு வறியாப் பழங்குடி கெழீஇய, பொதுவறு சிறப்பிற் புகாரே யாயினு, நடுகின்றி நிலையிய வென்பதல்லதை, யொடுக்கங் கூறா ருயர்ந்தோ ருண்மையின், முடித்த கேள்வி முழுதுணர்ந் தோரே” என்பன பொருட்களின் நிலைப்புத் தன்மையை உணர்த்துவனவாக அமைகின்றன. பொருட்கள் நிலைப்புத் தன்மையுடையன என உணர்த்துவோர் ஆசீவகரேயாம். ஆதலால் இந்நிலைப்புத் தன்மையை உணர்ந்த, முடிந்த கேள்வி முழுதுணர்ந்தோர் என்போரும் ஆசீவக அறிவுத்துறையைச் சார்ந்தோரேயாதல் வேண்டும் என்பதனையும் அறியலாம். இவ்வடிகளுக்கு உரைகூறும் அடியார்க்குநல்லார் “முனைவனூலின் முடிந்த கேள்வியான் எனைத்துப் பொருளையு முணர்ந்த பெரியோர், பொதியில் இமயம் புகாரென்றும், இம்மூன்றும் ஒரு தன்மைய வாதலான், ஆதியிற்றோன்றிச் சலிப்பின்றி நிலைபெற்றனவென்று கூறினல்லது அவற்றிற்கு அந்த முண்டென்று கூறார்; அவற்றில் உயர்ந்தோருண்டாகலானென்க” எனக் கூறுதலின் வழியும், அழிவற்ற நிலைப்புத் தன்மையினையுடைய ஆசீவகக் கொள்கையினை இவ்வடிகள் விளக்குதலினை உணரலாம். வைசேடிகம் போன்ற மெய்யியல் கோட்பாடுகள் பொருட்களின் நிலைப்பேற்றினை வலியுறுத்திய வழியும் பெரும் சமயநிலையில் வழிபாட்டு மரபில் அதனைக்கொண்டு சென்றது ஆசீவகமே எனலாம்.

துன்பம் நிறைந்தது இவ்வுலகம். துன்பத்தில் இன்பத்தினைத் தேடுதலே உலகிலுள்ளோர் கடமை எனக் கூறும் ஆசீவகம் இதனை:

> **“இன்னாது அம்ம இவ்வுலகம்!**
> **இனிய காண்க அதன் இயல்புணர்ந்தோரே!”**


எனக் கூறுகிறது. கண்ணகி, கோவலன் ஆகியோரது வதுவை மங்கல நாளிலும் அவர்களை வாழ்த்துவோர் துன்பத்தில் இன்பம்

காணும் வகையிலும், பிரிவினில் சேர்க்கை காணும் வகையிலுமே வாழ்கவென வாழ்த்தினர். இதனை:

> "காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமற்
> றீதறு கென வேத்திச் சின்மலர் கொடுதூவி
> மங்கல நல்லமளி யேற்றினார்" (சிலம்பு. மங்கலவாழ்த்து. 616)

என்னும் அடிகள் உணர்த்துகின்றன. 'காதலினால் கோவலனும் கண்ணகியும் பற்றியகை தளராமலும் தீயன அறுகவென்றும், இவள் தன் காதலனைக் கண்ணிலும் நெஞ்சிலும் பிரியாமற் புணர்வாளாக. இவள் காதலனும் இவளை அகத்திட்டகை புல்லினும் போதினும் நெகிழாமற் புணர்வோனாக' என வழிபடு தெய்வத்தை மலர்தூவி வணங்கி வாழ்த்தியதாகக் கூறப்படுவதும் 'கண்ணினும் நெஞ்சினும் பிரிதல், கவவுக்கை ஞெகிழல்' என்பனவான துன்பத்திற்குரிய சொற்களால் வாழ்த்திய முறையும், துன்பத்துள் இன்பம் என்ற ஆசீவகச் சமயக் கருத்தின் விளைவேயாம். மற்ற காப்பியங்களில் இவை போன்ற எதிர்மறைக் கருத்துக்களைக் காண்பதும் அரிதேயாம்.

ஒவ்வொரு பொருட்களுக்கும் ஒரு இயல்பு உண்டு. அவ்வியல்பின் அடிப்படையிலேதான் அப்பொருட்களின் செயற்பாடுகள் அமையும். ஊழின் தன்மையாலும் சூழலினாலும் பொருட்களின் தன்மை மறுபடாது. சுரை விதையினை நட்டுவிட்டுப் புடலங்காயினை எதிர்பார்த்தலியலாது. ஆதலால் பொருட்களின் இயல்பு என்பது மாற்றமடையாததேயாம்.



மாதவியும் கோவலனும்

Image Source - en.wikipedia.org

சிலப்பதிகாரக் காப்பியத்தின் காதை தேர்வில், அசீவர்களின் சுபாவக் கோட்பாடு என்னும் இயல்புக் கோட்பாடு எவ்வகையில் இளங்கோவடிகளாற் கையாளப்பட்டது என்பதினை இனிக் காணலாம்.

## கோவலனின் இயல்பு

மனையறம்படுத்த காதையில் கண்ணகியுடன் மணவாழ்வினைத் தொடங்கிய கோவலன் அவளைக் கண்டு மகிழ்ந்து:

> "மாசறு பொன்னே, வலம்புரி முத்தே,
> காசறு விரையே, கரும்பே, தேனே
> அரும்பெறற் பாவாய், ஆருயிர் மருந்தே,
> பெருங்குடி வாணிகன் பெருமடமகளே,
> மலையிடைப் பிறவா மணியே என்கோ?
> அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
> யாழிடைப் பிறவா இசையே என்கோ?
> தாழிருங் கூந்தல் தையால்! நின்னை"

என கண்ணகியின் நலங்களைப் பலவாறு பாராட்டி, அவளைப் புகழ்ந்தே இல்லறம் நடத்திச் சென்றான். கோவலன் சில ஆண்டுகள் கழிந்த பின் இதே கண்ணகியை மறக்கக் கூடிய சூழல் எவ்வகையில் ஏற்படலாயிற்று? வலிந்து ஏற்படுத்திக் கொண்டதும், கொண்டனவும் அல்ல. மாதவியின் அரங்கேற்றமும் தலைக்கோல் வழங்கும் நிகழ்வும் இயல்பு வழி நடந்த நிகழ்வு. இவற்றில் கோவலனுடைய நிலைப்பாடுகள் ஏதுமில்லை. மாதவியின் மாலையினைக் கோவலன் வாங்க வேண்டும் எனக் கூறவுமில்லை. ஆனால் எச்செயலையும் சட்டெனச் செய்ய வேண்டும் என்னும் இயல்பினையுடைய கோவலன் அம் மாலையினை வாங்கினான்.

> "மாமலர் நெடுங்கண் மாதவி மாலை
> கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு
> மணமனை புக்கு மாதவி தன்னோடு
> அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி
> விடுத லறியா விருப்பின னாயினன்
> வடுநீங்கு சிறப்பின்தன் மனையகம் மறந்தென்"
> (அரங்கேற்று காதை. 170– 175)

கண்ணகியைப் புகழ்ந்த கோவலன் யாதொரு குற்றமும் அற்ற நிலையிலேயே அவளைப் பிரிந்து மாதவியை அடைந்து தனது மனையினை மறந்தான். இதில் ஊழின் பங்களிப்பே பெரிதாக நின்றது. அதற்குக் கோவலனின் இயல்பு (சுபாவம்) பெருந்துணை செய்தது. கோவலனின் இயல்பாவது எதனையும் ஆயாது சட்டென முடிவு செய்தலாம் இதனைக் கோவலனின் வரலாறெங்கும் காணலாம். அகத்திணைப் பாடல்களில் தலைவன் - தலைவி பிரிவுகளில் ஒன்றான பரத்தமைப் பிரிவிற்கு இவ்வியல்பே துணையாதலைப் பின்னர் நோக்குவோம். எவ்வகையில் கோவலனின் இயல்பானது ஊழின் வழித்துணை நின்று கண்ணகியைப் பிரிப்பதாயிற்றோ, அதே இயல்பு மீண்டும் மீண்டும் கோவலனை வழிநடத்திய பாங்கினைக் காணலாம்.

மாதவியுடன் ஆண்டுபல வாழ்ந்து வந்தபோதும் கோவலனது மனமாற்றம் திடுமென எழுவதாயிற்று. கானற்பாட்டில் கோவலன் குறிப்பு வைத்துப் பாடிய பாடல்களை, அவன் மனநிலைப் போக்கில் உணராமல் மாதவி தானும் குறிப்புடன் பாட, கோவலன் மாதவியைத் தழுவிய கையினைவிட்டு எழுந்தான். இதனை:

> **“கானல் வரி யான் பாட, தான் ஒன்றின்மேல் மனம் வைத்து,**
> **மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினாள்’ என**
> **யாழ்இசைமேல் வைத்து, தன் ஊழ்வினை வந்து உருத்தது ஆகலின்,**
> **உவவு உற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக் கை ஞெகிழ்ந்தனனாய்,**
> **‘பொழுது ஈங்கு கழிந்தது ஆகலின், எழுதும்’ என்று உடன் எழாது,**
> **ஏவலாளர் உடன் சூழ்தர, கோவலன்தான் போன பின்னர்”**
> **(கானல்வரி.52:277– 282)**

என்ற அடிகளால் அறியலாம். யாழிசையின் மேல் வந்த ஊழ் மாதவியைப் பிழை பட எண்ண வைத்தது. ஆராயாமல் முடிவெடிக்கும் கோவலனின் இயல்பு இங்கும் ஊழிற்குத் துணையாக நின்றது. ஆதலால் மாதவியை அணைத்த கையை நெகிழ எழுந்தான். மாதவியுடன் இருக்க வேண்டிய காலம் முடிந்துவிட்டதால் ஊழின் வழி அவன் பிரிய வேண்டியதாயிற்று. இதற்கு அவனது இயல்பு துணை நின்றது எனலாம். கண்ணகியின் மனைவந்த விடத்தும் விரைவான முடிவெடுக்கும் குணத்தோடு ஆராயாது உடனே மதுரைக்குச் செல்ல வேண்டுமென்றான். இதுவும் அவளது ஊழிற்குத் துணையாயிற்று.

> **“நீடிய காவலன் போலும், கடைத்தலையான் வந்துநம்**
> **கோவலன்!’ என்றாள் ஓர் குற்றிளையாள். கோவலனும்**
> **பாடு அமை சேக்கையுள் புக்கு, தன் பைந்தொடி**
> **வாடிய மேனி வருத்தம் கண்டு, ‘யாவும்**
> **சலம் புணர் கொள்கைச் சலதியொடு ஆடி,**
> **குலம் தரு வான் பொருள்குன்றம் தொலைந்த;**
> **இலம்பாடு நாணுத் தரும் எனக்கு’ என்ன”**

என்பதன் வழி, திடுமென எழச் செய்து கண்ணகியை மதுரைக்குச் உடன் அழைத்துச் செல்லும் அவனது திடீர் முடிவெடுக்கும் இயல்பே அவனது ஊழினுக்குத் துணையாயிற்றெனலாம். இவ்வாறான கோவலனின் இயல்பு என்பது உணர்வு வயப்பட்டதாகவே இளங்கோவடிகளால் காட்டப்பட்டுள்ளது. எதனையும் ஆராய்ந்து முடிவெடிக்கும் இயல்பற்றவனாகவே கோவலன் விளங்கியமையை அவனது சிறப்பினைக் கூறும் பாடல்களாலும் அறியலாம்.

> **“விஞ்சையின் பெயர்த்து, விழுமம் தீர்த்த,**
> **எம் குலதெய்வப் பெயர் ஈங்கு இடுக’ என:**
> **அணி மேகலையார் ஆயிரம் கணிகையர்,**
> **“மணிமேகலை” என வாழ்த்திய ஞான்று;**
> **மங்கல மடந்தை மாதவிதன்னொடு**
> **செம் பொன் மாரி செங் கையின் பொழிய;”**

என மாதவிக்கும் தனக்கும் மகளாகப் பிறந்த மணிமேகலையின் பிறந்தநாள் விழாவிலே பொன்னினை மழையாகப் பெய்த நிகழ்வும்,

> **“மையிருங் குன்றின் விஞ்சையன் ஏய்ப்பப்**
> **பிடர்த்தலை இருந்து பெருஞ்சினம் பிறழாக்**
> **கடக்களி றடக்கிய கருணை மறவ”**

என வயது முதிர்ந்த தன்னிடம் தானம் கேட்க வந்த பார்ப்பானனை யானை தாக்கவர யானையினைத் தாக்கிய வீர நிகழ்வும்,

> "பத்தினி யொருத்தி படிற்றுரை எய்த
> மற்றவள் கணவற்கு வறியோன் ஒருவன்
> அறியாக் கரிபொய்த் தறைந்துணும் பூதத்துக்
> கறைகெழு பாசத்துக் கையகப் படலும்
> பட்டோன் றவ்வை படுதுயர் கண்டு
> கட்டிய பாசத்துக் கடிதுசென் றெய்தி
> என்னுயிர் கொண்டீங் கிவனுயிர் தாவென
> நன்னெடும் பூதம் நல்கா தாகி
> நரக னுயிர்க்கு நல்லுயிர் கொண்டு
> பரகதி யிழக்கும் பண்பீங் கில்லை
> ஒழிகநின் கருத்தென உயிர்முன் புடைப்ப
> அழிதரு முள்ளத் தவளொடும் போந்தவன்
> சுற்றத் தோர்க்கும் தொடர்புறு கிளைகட்கும்
> பற்றிய கிளைஞரின் பசிப்பிணி யறுத்துப்
> பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மல்"
> (சிலம்பு அடைக்கலக்காதை.76- 79)

என பத்தினி ஒருத்தியைப் பழித்தமையாற் சினம் கொண்ட சதுக்க பூதம் அவனை விழுங்க எத்தனித்த போது அவனது பெற்றோர்க்கு அவன் ஒரு மகன் ஆனபடியால் அவனைவிட்டுத் தன்னைக் கொல்லுமாறு கேட்ட நிகழ்வும் எனபனவான மேற்கண்டதான யாவற்றின் வழியும் கோவலன் ஆழ்ந்து சிந்தித்து ஒரு முடிவினை எடுப்பவனல்ல என்றும், அவன் திடீர் என உணர்வு வயப்பட்ட நிலையிலேயே முடிவு எடுக்கும் இயல்பினன் என்பதனையும் அறியலாம். அவனது இவ்வியல்பே அவனது ஊழினை வழிநடத்துதலுக்குப் பெருந்துணையாயிற்று என்பதினை மேற்கண்ட நிகழ்வுகளின் வழி அறியலாம். அத்துடன் அவனைச் சார்ந்தோரது இயல்பும் அவனை ஊழின் வழியிலிருந்து பாதுகாக்கவில்லை என்பதனையும் அறிய வேண்டியதாகின்றது.

### ஊழின் வழி செல்வதில் கண்ணகியின் இயல்பு

கோவலன் கொலைக் களப்படுதற்கு முன்புவரை கண்ணகி பேசிய இடங்களாக இளங்கோவடிகள் குறிப்பிடும் இடங்கள் மிகமிகக் குறைவே. மங்கல வாழ்த்திலிருந்து அடைக்கலக் காதை வரை உள்ள பதினைந்து பகுதிகளிற் கண்ணகி பேசியதாக உள்ள இடங்களில், கோவலனது இயல்பு ஊழ்வழிச் செல்லும் வகைமையில் படைக்கப்பட்டது போலவே கண்ணகியினது இயல்பும் கோவலனது ஊழிற்குத் துணை செய்வதாகவே படைக்கப்பட்டுள்ளமையினைக் காணலாம். தமிழ் இலக்கியங்களில் சிந்தாமணியில் இடம் பெறும் கனவு, கம்பராமாயணத்தில் இடம் பெறும் கனவு என்பனவான கனவுகளைக் காட்டிலும் சிலப்பதிகாரத்தில் இடம் பெறும் கனவுகள் மிகத் தெளிவானவை. ஆயினும் அக்கனவினைத் தாண்டி, அக்கனவின் நிகழ்வுகளைப் பொய்க்கும் வல்லமை, கனவினைக் கண்ட மூவருக்கும் வாய்க்கவில்லை என்பது உற்று நோக்கத்தக்கது. அவ்வகையிலேயே கண்ணகி கண்ட கனவும் அமைகின்றது. மங்கல வாழ்த்து முதலாக, கொலைக் களப்படுவது ஈறாகவுள்ள கோவலனுடன் கண்ணகி வாழ்ந்த பதினாறு காதைகளிலும் கண்ணகி தன் இயல்பு வெளிப்படப் பேசிய இடங்கள் மிகக் குறைவே. அவ்வகையில் கண்ணகி முதன் முதல் பேசிய இடமாக இக் கனாத்திறம் உரைத்த காதை விளங்குகின்றது. நடக்கக்கூடிய நிகழ்வுகள் முன்கூட்டியே நிகழ்வில் உள்ளோரின் கனவு வழியே வெளிப்படுவதும், ஊழின் வலிமையின் முன்னால் ஏதும் செய்தலியலாது போகும் என்பதும், அதற்கு அவர்களது இயல்பும் துணை நிற்கும் என்பதும் இப் பகுதி வழியே அறியக் கிடைக்கின்றது. குளங்களில் மூழ்கித் தெய்வ வழிபாட்டினை முடித்து வரும் தேவந்தி, அருகு - சிறுபூளை முதலானவற்றைத் தூவி கணவனோடு வாழ்கவெனக் கண்ணகியை வாழ்த்தினாள். அப்பொழுது கண்ணகி கணவனைப் பெறுவேன் ஆயினும் தான் கண்ட கனவின் காட்சிகளான பெருநகர் செல்லல், கோவலன் தீங்குறுதல், தான் வழக்குரைத்தல், மதுரை எரிதல் என்பனவான பலவற்றையும்:

> "கடுக்கும்என் நெஞ்சம் கனவினால் என்கை
> பிடித்தனன் போய்ஓர் பெரும்பதியுள் பட்டேம்
> பட்ட பதியில் படாதது ஒருவார்த்தை
> இட்டனர் ஊரார் இடுதேள்இட்டு என்தன்மேல்
> கோவலற்கு உற்றதுஓர் தீங்குஎன்று அதுகேட்டுக்
> காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன் காவலனோ"
> (சிலப்பதிகாரம்.9:45- 50)

எனத் தேவந்தியிடம் கூறுகிறாள். தேவந்தியோ, முன்னை ஊழ்வினையால் வரும் தீங்கினையே இக்கனவு உரைத்தது; ஆதலால் காவிரியின் கழிமுகத்திற்கு அருகே சோமகுண்டம், சூரியகுண்டம் என இரண்டு பொய்கைகளுள்ளன; அவற்றின் நீர்த்துறைகளிலே மூழ்கி காமவேலின் கோயிலை வழிபட்டோர் இப்பிறவியிலும் கணவனோடு இன்புற்றிருந்து மறுமையிலும் போக பூமியிற் சென்று கணவனோடே பிறந்து இன்புறுவர்; நாமும் ஒருநாள் முழுகி வருவம் எனக் கூற, 'அங்ஙனம் செய்தல் தங்கட்கு வழமையல்ல ஆதலால் பீடன்று' என மறுத்து விடுகின்றாள். அப்பொழுது அங்கு வந்த கோவலன் பள்ளியறைக்குள் செல்கின்றான். அவனைத் தொடர்ந்து சென்ற கண்ணகியின் உருவக் குழைவையும் உள்ள மெலிமையையும் கண்டு வருந்திய கோவலன், எல்லாம் தனது கொள்கையினாலேயே நிகழ்ந்தன எனக் கூறி, பெரும் செல்வத்தை இழந்த நாணத்தால் இங்கு எவ்வகையில் வாழ்வேன் என வருந்த, மாதவிக்கு வழங்க அரும் பொருள் இல்லை என அவன் வருந்துவதாக நினைத்த கண்ணகி:

> **"நலங்கேழ் முறுவல் நகைமுகங் காட்டிச்**
> **சிலம்புள கொண்மெனச் சேயிழை கேளிச்"**

எனத் தன்னிடம் சிலம்புகள் இரண்டு இருப்பதாகக் கூறுகிறாள். அதற்குக் கோவலன், சிலம்பை முதலாகக் கொண்டு மதுரை மாநகர் சென்று, அதனை விற்று வாணிகம் செய்து பெருஞ் செல்வமடைவேன்; இப்பொழுதே எழுக எனக் கூற, கண்ணகியும் உடனே எழுந்தாள்; வினையினது ஏவலால் எழுந்தகன்று ஊழினது வழிச் செல்லத் தலைப்பட்டாள். இதனைக் கீழ்வரும் அடிகள் வழி உணரலாம்:

> **"காதலி கண்ட கனவு கருநெடுங்கண்**
> **மாதவிதன் சொல்லை வறிதாக்கமூதை**
> **வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குற்**
> **கனைசுடர் கால்சீயா முன்"**

கண்ணகி கண்ட கனவு, மாதவி 'கோவலன் நாளை வருவான்' என்று சொன்ன சொல்லையும் பொய்யாக்கி ஊழின் வழி இழுக்கத் தலைப்பட்டது. கண்ணகி தான் கண்ட கனவினைக் கணவனுக்குக் கூறாமலேயே அவனுடன் செல்லத் தலைப்பட்டாள். கனவின் பலனை அறிந்து அதனைத் தடுக்கும் எண்ணம் கண்ணகிக்கு எழவில்லை. ஆதலால் ஊழின்வழி மதுரை செல்ல எழுந்தாள். கண்ணகியின் இயல்பால் ஒரு நிகழ்வினை எதிர் மறித்துத் தடுத்தல் இயலாது என்பதானபடியால், கனவின் நிகழ்வினை கூறித் தடுப்பதற்கு முயலாமல், கோவலன் 'எழும்' எனக் கூறிய உடனேயே எழுந்தாள். ஆதலால் ஊழின் ஆற்றலுக்கு அவளின் இயல்பும் உடன்படுவதாயிற்று. புகாரிலிருந்து மதுரை வரும் வரையான பல நிகழ்வுகளிலும் கண்ணகி தெளிவான மன நிலையிலேயே இருந்துள்ளாள். திருவரங்கத்தினை அடைகின்றபோது:

> **"மதுரை மூதூர் யாதென வினவ**
> **ஆறைங் காதநம் மகனாட் டும்பர்**
> **நாறைங் கூந்தல் நணித்தென நக்குத்**
> **தேமொழி தன்னொடுஞ் சிறையகத் திருந்த"**

என மகிழ்வுடனேயே கோவலனுடன் உரையாடி வந்துள்ளாள். கவுந்தி, சோலையில் வப்பப் பரத்தையருக்கு சாபமிட்ட போதும், அதற்கு மனம் வருந்தி அவர்களைப் பொறுத்தருள கவுந்தியிடம் வேண்டுகின்றாள். பாலை வழியில் எயினர்கள், சாலினிக்குக் கொற்றவை வேடமிட்டு வழிபட்டபோது:

> **"இவளோ கொங்கச் செல்வி குடமலையாட்டி**
> **தென் தமிழ்ப்பாவை செய்தவக் கொழுந்து**
> **ஒருமா மணியாய் உலகிற்கு ஓங்கிய**
> **திருமா மணிஎனத் தெய்வமுற்று உரைப்ப**
> **போதுறவு மொழிந்தாள் மூதறிவாட்டி என்று**
> **அரும்பெறற் கணவன் பெரும்புறத் தொடுங்கி"**

என மிகுந்த நாணமுடையவளாகவே காணப்பட்டாள். ஆயினும் எவ்விடத்திலும் தாம் கண்ட கனவு குறித்து விளக்கி, அதிலிருந்து விடுபடும் முயற்சியற்ற நிலையினையே கண்ணகிக்கான இயல்பாக இளங்கோவடிகள் கொண்டு செல்வதினைக் காணலாம்.

கொலைக்களக் காதைக்குப் பிறகு, மிகுதியாகப் பேசும் இயல்புடையோளாகக் கண்ணகி காணப்படுகின்றாள். கனவின் வழியே ஊழின் தன்மையானது அவளை இழுத்துச் செல்வதாயிற்று.

> **"தோழிநீ ஈதொன்று கேட்டியென் கோமகற்கு**
> **ஊழ்வினை வந்தக் கடை"**
> **"மாதராய் ஈதொன்றும் கேளுன் கணவற்குத்**
> **தீதுற வந்த வினை; காதின்"**

என்பனவாக மதுராபதித் தெய்வம் கூறுவதும் ஊழின் படியே அதற்குத் துணையாக கண்ணகி சென்றமையினைக் காட்டுகிறது. இவ் ஊழின் தன்மையினையே பின்னர் வரந்தரு காதையில் கண்ணகியின் கூற்றில் வைத்து இளங்கோவடிகள் கூறுவதை:

> **"தென்னவன் தீதிலன் தேவர்கோன் தன்கோயில்**
> **நல்விருந்து ஆயினான் நான்அவன் தன் மகள்**
> **வெல்வேலான் குன்றில் விளையாட்டு யான் அகலேன்**
> **என்னோடும் தோழிமீர் எல்லீரும் வம்மெல்லாம்"**

என்ற அடிகளின் வழி அறியலாம். இதன்வழி கோவலனைப் போலவே கண்ணகியும் இளங்கோவடிகளால் ஆசீவகச் சமயம் சுட்டும் இயல்புக் கோட்பாட்டின் வழி ஊழினை அரண் செய்து சென்றமையினைக் காணலாம்.

## தற்செயலியம்

சிலப்பதிகாரத்தில் ஆசீவக சமயத்தின் தற்செயல் என்னும் சூழலியம் எவ்வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதினை நோக்கலாம். ஊழே சிலப்பதிகாரத்தில் முதன்மை வகித்தாலும், அதற்குத் துணை நிற்பனவாக அமைபவை இயல்பும் தற்செயலுமாகும். அவ்வகையில் சிலப்பதிகாரத்தில் காணப்படும் சில தற்செயல் நிகழ்வுகள் குறித்துக் காண்போம்.

வாழ்வின் போக்குகளை மாற்றக் கூடியவர்களை எவ்வகை முன்னெடுப்புமின்றி தற்செயலாய் சந்தித்தலைச் தற்செயல் வாதம், சூழலியம் என ஆசீவக சமயக் கோட்பாடுகள் குறிப்பிடும்.

அவ்வகையில் கோவலன் - மாதவி சந்திப்பென்பது தற்செயலான நிகழ்வாகவே கருதத்தக்கதாகும்.

> **"மாலை வாங்குநர் சாலுநங் கொடிக்கென**
> **மானமர் நோக்கியோர் கூனிகைக் கொடுத்து**
> **நகர நம்பியர் திரிதரு மறுகிற்**
> **பகர்வனர் போல்வதோர் பான்மையின் நிறுத்த**
> **மாமலர் நெடுங்கண் மாதவி மாலை**
> **கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு**
> **மணமனை புக்கு மாதவி தன்னோடு**
> **அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி**
> **விடுத லறியா விருப்பின னாயினன்**
> **வடுநீங்கு சிறப்பின்தன் மனையகம் மறந்தென்"**
> **(அறங்கேற்றுக் காதை.166– 175)**

என்றமையால் மாதவியின் மாலையைக் கோவலன் வாங்க வேண்டுமென யாரும் வலியுறுத்தவில்லை; கூனியிடம் கொடுக்கப்பட்ட அம்மாலை வீதியிலேயே விலை பகர்வது போல் விலை பகரப்பட்டது. தன்னுடைய, எதனையும் செய்யத்துடிக்கும் இயல்பின் வழி, கோவலன் ஆர்வ மிகுதியால் அம் மாலையை வேண்டினான். மாலையை வேண்டியதன் வழி மாதவியைச் சந்திக்கலாயிற்று. இது தற்செயல் நிகழ்வாகும். மாதவியைச் சந்தித்த கோவலன் சட்டென முடிவெடுக்கும் தன் இயல்பால் தனது மனையாளையும் மனையையும் மறந்தான். இது அவனது இயல்பாயிற்று. இங்கு தற்செயலுக்கு இயல்பு துணையாயிற்றெனலாம்.

கோவலன் மதுரை மாநகர வீதியில் சிலம்பினை விற்பதற்குச் சென்ற வேளையில் தற்செயலாகவே அரச பொற்கொல்லனைக் கண்டு தனது சிலம்பின் திறன் குறித்தும் அதனை விற்பது குறித்தும் பேசினான். அவன் முன்னரே திட்டமிட்டுப் பொற்கொல்லனிடம் சிலம்பை விற்றல் தொடர்பாக வரவில்லை; பொற்கொல்லனையும் அவனுக்குரிய இடத்தினிற் சென்று சந்திக்கவில்லை; மதுரையின் வீதியிலேயே சந்திக்கின்றான். இதனை:

“மாதர் வீதி மறுகிடை நடந்து,
பீடிகைத் தெருவில் பெயர்வோன்ஆங்கண்,
கண்ணுள் வினைஞர், கைவினை முற்றிய
நுண்வினைக் கொல்லர், நூற்றுவர் பின் வர,
மெய்ப்பை புக்கு, விலங்கு நடைச் செலவின்
கைக் கோல் கொல்லனைக் கண்டனனாகி,
‘தென்னவன் பெயரொடு சிறப்புப் பெற்ற
பொன் வினைக் கொல்லன் இவன்’ எனப் பொருந்தி,
‘காவலன் தேவிக்கு ஆவதோர் காற்கு அணி
நீ விலையிடுதற்கு ஆதியோ?’ என”

என்பனவற்றால் அறியலாம். அத்துடன் இந்தத் தற்செயலுக்கு, எதனிலும் ஆர்வம் காட்டும் கோவலனது இயல்பும் உறுதுணையாயிற்று. நூறுகொல்லர்கள் பின் தொடரவரும் அவனது தகைமையும், அவனே தமது சிலம்பினுக்கு ஏற்ற பொருள்தரக்கூடிய தகையோன் என்ற சூழ்நிலை சார்ந்த எண்ணமும், சிந்திக்காது முடிவெடுக்கும் அவனது இயல்பும் அச்செயலுக்குத் துணை நின்றமையினை மேற்கண்ட அடிகளிற் காணலாம். பொற்கொல்லன் கோவலனைக் கள்வனெனக் குற்றம் சுமத்த, பாண்டிய மன்னனிடம் சென்றவேளை, அங்கு நிலவிய சூழலும் கோவலனின் ஊழுக்குத் துணையாயிற்றெனலாம்.

“கூடல் மகளிர் ஆடல் தோற்றமும்,
பாடல் பகுதியும், பண்ணின் பயங்களும்,
காவலன் உள்ளம் கவர்ந்தன’ என்று, தன்
ஊடல் உள்ளம் உள் கரந்து ஒளித்து,
தலைநோய் வருத்தம் தன்மேல் இட்டு,
குலமுதல் தேவி கூடாது ஏக”
(கொலைக்களக் காதை. 131– 136)

பாண்டிய மன்னன் ஆடல் மகளிரின் தோற்றத்தினையும் ஆடலின் தன்மையினையும் பண்ணின் இனிமையினையும் உள்ளம் செலுத்தி ஈடுபட்டமையினைக் கண்டு, மகளிருக்கேயுரியதான ஊடலுள்ளம் பாண்டி மாதேவிக்குத் தோன்றி, தலை நோவு என



பாண்டியன் அவையில் கண்ணகி

Image Source - prepp.in

அவள் எழுந்து சென்றமையால், அவள் ஊடல் தணிக்க வகையற்று மன்னவனும் பின் சென்றான். அவ்வேளையிலேயே பொற்கொல்லன் பாண்டியனின் காலில், பாண்டி மாதேவியின் கோயில்முன் வந்து விழுந்தான். இதனை:

“மந்திரச் சுற்றம் நீங்கி, மன்னவன்
சிந்து அரி நெடுங் கண் சிலதியர்தம்மொடு
கோப்பெருந்தேவி கோயில் நோக்கி,
காப்பு உடை வாயில் கடை காண் அகவையின்
விழ்ந்தனன் கிடந்து தாழ்ந்துபல ஏத்திக்”
(கொலைகளக் காதை. 137– 141)

என்ற பாடலால் அறியலாம். பாண்டிய மன்னன் மனக் குழப்பத்தில் பாண்டி மாதேவியின் ஊடலைத் தவிர்க்க தனக்குப் பற்று ஏதும் இல்லாத நிலையில் இருந்தமை, அவன் அவளது மாளிகை வாயிலைக் கடக்கும் முன்பு பொற்கொல்லன் அவன் காலில் விழுந்தமை போன்ற நிகழ்வுகள் யாவும் திட்டமிட்டு நிகழ்ந்தனவல்ல; யாவும் தற்செயலாக நிகழ்ந்தனவே. இவற்றில் அந்நிகழ்வுகளில் உள்ளோரின் இயல்பும் தற்செயலும் ஒருங்கு சேர்ந்து ஊழினுக்கு வழியமைத்துக் கொடுத்தமையைக் காணக்கூடியதாக உள்ளமையினை அறியலாம்.

## ஆசீவக மும்மைக் கொள்கையும் சிலப்பதிகாரமும்

கண்ணகி, கோவலன் ஆகியோரது வாழ்வு ஆசீவகத்தின் இயல்பு, தற்செயல், ஊழ் என்னும் மும்மைக் கொள்கைகளின் வழி, எவ்வகையிற் கட்டமைக்கப்பட்டுள்ளது என்பதனை மேற்கண்டவாறு கண்டோம். இனி, இவ் ஆசீவகக் கோட்பாடுகள், இக் காப்பியமெங்கும் விரவிக் காணப்படக்கூடிய தன்மையினை நோக்குவோம்.

கண்ணகியின் இயல்பு கோவலனின் ஊழினுக் கெதிராகச் செல்லாமல் இயைந்தே சென்றமையினை, கோவலன் தன்னைப் பிரிந்து சென்றபோதும் அவனை அடைதற்கு எவ்வித முயற்சியும் செய்யாமல், சில வழிமுறை கூறிய தேவந்தியின் செயல்களையும் 'பீடன்று' கூறி மறுத்தமையின் வழி அறியலாம்.

கனவின் வழி எதிர்கால நிகழ்வுகளை அறிந்தபோதும் அதனைத் தடுப்பதற்கான முயற்சியினை மேற்கொள்ளவில்லை என்பதினையும் முன்னர் கண்டோம். ஆனால் மாதவியிடம் கோவலனின் ஊழினுக்கு எதிராக வினையாற்றும் தன்மையினைக் காணக் கூடியதாக உள்ளது. கோவலன் தன்னை விட்டுப் பிரிதலை மாதவி ஏற்கவில்லை. கோவலனது இயல்பு, ஊழினுக்குத் துணையாகி மாதவியிடமிருந்து அவனைப் பிரித்தது.

> "யாழிசைமேல் வைத்துத்தன் ஊழ்வினைவந் துருத்ததாகலின்
>
> உவவுற்றதிங்கள் முகத்தாளைக் கவவுக்கை ஞெகிழ்ந்தனனாய்ப்"
>
> (கானல்வரி, 52:27 82– 79)

என்பதனால் இதனை அறியலாம். ஆனால் மாதவி, கோவலன் பிரிந்து செல்வதினைத் தடுக்க முயற்சித்தமையினை, அவள் எழுதிய இரண்டு கடிதங்களும் உறுதிப்படுத்தும். முதலாவது கடிதம், முற்றிய வெள்ளை நிறத் தாழம்பூவின் மடலினை விரித்து எழுதப்பட்டது.

ஏனெனில் படிக்கின்ற காலத்து விரித்துப் படிப்பதற்கும் மற்றைய நேரங்களில் சுருட்டியமைவதற்கும், ஓரிரு நாட்களின் பயன்பாட்டிற்கும் ஏற்புடையதாதலால் இதனைப் பயன்படுத்தினாள். இதனை:

> "முதிர்பூந் தாழை முடங்கல்வெண் தோட்டு
> விரைமலர் வாளியின் வியனிலம் ஆண்ட
> ஒருதனிச் செங்கோல் ஒருமகன் ஆணையின்
> ஒருமுக மன்றி உலகுதொழு திறைஞ்சுந்
> திருமுகம் போக்குஞ் செவ்விய ளாகி
> அலத்தகக் கொழுஞ்சேறு ஆளை இ அயலது
> பித்திகைக் கொழுமுகை ஆணி கைக்கொண்டு"
>
> (வேனிற்காதை.49– 55)

என்ற அடிகளால் அறியலாம். மாதவி எழுதிய திருமுகத்திற்குக் கட்டுப்பட்டதல்ல ஊழ்; அது அவ்வவ் காலங்களில் நிகழச் செய்ய வேண்டியவற்றினை நிகழச்செய்யக் கூடியது. ஆதலாலேயே 'ஆகும் காலத்து ஆம்' என்ற ஆசீவகக் கொள்கை தெளிவுறுத்தப்பட்டது. மாதவியின் மேலுற்ற வெறுப்பு மாறாமையால் திருமுகத்தைப் படிக்காமலேயே வசந்தமாலை துயருறத் திருப்பி அனுப்பினான். மாதவியுடன் இருந்த காலம் முடிந்தது; அதன்மேல் ஊழின்வழி அங்கு நிற்றலியலாது; சுகமுறுதலும் குறிப்பிட்ட காலத்தில் அதிலிருந்து விடுபடுதலும் ஆசீவகச் சமயக் கொள்கை; அதனையே இது குறிக்கின்றது.

> "பொழுதீங்குக் கழித்ததாகலின் எழுதும்என் றுடனெழாது"
>
> (கானல்வரி.52:6)

என்ற கானல் வரியின் அடிகள் இதனைச் சுட்டுகிறது. ஆன போதிலும், மாதவி தனது முயற்சியைக் கைவிடும் இயல்பினள் இல்லை. காலையில் பார்ப்போம் என்ற முயற்சியை உடையோளாகவே விளங்கினாள். இதனை:

> "மாலை வாரா ராயினும் மாணிழை
> காலைகாண் குவமெனக் கையறு நெஞ்சமொடு
> பூமலர் அமளிமிசைப் பொருந்தாது வதிந்தனள்
> மாமலர் நெடுங்கண் மாதவி தானென்"
>
> (வேனிற்காதை.114– 117)

என்ற அடிகளின் வழியறியலாம். ஆயினும் மாதவியின் முயற்சி கோவலனின் ஊழின் முன், பெரு வெள்ளத்தைத் தடுக்கவியலாத மற்சிறை ஆகியமையினை கானாத்திறம் உரைத்த

காதையின், இறுதி வெண்பா காட்டும். இதனை:

> “காதலி கண்ட கனவு கருநெடுங்கண்
> மாதவிதன் சொல்லை வறிதாக்கமூதை
> வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குற்
> கனைசுடர் கால்சீயா முன்”

என்ற வெண்பாவின் வழியறியலாம். மாலையிற் காணாவிடினும் காலையிற் காண்போம் என மாதவி சொன்ன சொல்லைப் பொய்த்ததாக்கியது, கண்ணகி கண்ட கனவு. ஊழின்முன் மாதவியின் முயற்சி எடுபடவில்லை. ஆதலாலேயே அன்றைய இரவின் கங்குல் பொழுதாகிய வெள்ளி முளைக்கும் வேளைக்கு முன்னதாகவே கோவலனும் கண்ணகியும் புகார் நகரைவிட்டுப் போந்தனர். ஊழின் வலிமையை மாதவியின் விடாமுயற்சியும் தடுக்கவில்லை. ஆயினும் மாதவியின் இயல்பு ஊழினுக்கு எதிராகச் செயல்பட்டமையினை, அவளது முயற்சிகள் மீண்டும் தொடர்ந்ததின் வழியறியலாம். கோவலனும் கண்ணகியும் இரவோடு இரவாகப் புகார் நகரைவிட்டுப் போய்விட்டமை, புகார் நகரிலே கோவலனின் பெற்றோருக்கும் மற்றோருக்கும் பெருந்துயரினைக் கொடுத்தது. வருந்திய மாதவி கௌசிகமணி என்னும் பார்ப்பானிடம் வேண்டி, அவனிடம் ஒரு திருமுடங்கலையும் எழுதி மண் முத்திரையிட்டுக் கொடுத்தனுப்பினாள். அவ்வோலையினை மதுரைப் புறச் சேரியிலே கௌசிகமணி கோவலனிடம் சேர்ப்பித்தான். அவ்வோலையில் எழுதிய வரிகளும் மறைமுகமாக ஊழினையே சாடுதலினை உணரலாம்.

> “போதவிழ் புரிகுழற் பூங்கொடி நங்கை
> மாதவி யோலை மலர்க்கையின் நீட்ட”

என்றவாறு மாதவியின் ஓலையினைக் கண்டு அவள் தீதற்றவள்; எல்லாம் தனது ஊழின் வினை என்பதனை உணர்ந்தோனாக மாறினன் கோவலன். இவற்றில் மாதவியின் முயற்சியின் காலம் கடந்துவிட்டது; கோவலன் கண்ணகியோடு மதுரை நகர் எட்டிவிட்டான்; ஊழ்வினை அவனை இழுத்து வந்துவிட்டது; பொருளீட்டும் நோக்கத்தினைத் தாண்டி எதனையும் செய்யவியலாத சூழலில் அவனைத் தள்ளிவிட்டது. அந் நிலையிலேயே அவனுக்கு உண்மை புலப்பட்டது. ஊழ் எனும் உருட்டப்பட்ட நூல் கண்டின் வழி அவன் மதுரையை அடைந்து விட்டான். இனி, அந் நூற்கண்டினைச் சுற்றுதல் இயலாது. அந் நூற்கண்டினை மதுரை நோக்கி உருளாமல் தடுப்பதற்கு மாதவி செய்த முயற்சிகள் யாவும் பயனற்றதாகவே முடிந்தமையினைக் காணலாம். ஆதலால் ஊழின் முன் எம் முயற்சியும் வெல்லாது எனும் ஆசீவகக் கருத்தியலின் வெற்றி இங்கு மாதவியின் வாயிலாக நிறுவப்பட்டுள்ளமையினைக் காணலாம். ஆனால் சமணக் காப்பியங்களில் ஊழினை முறியடித்து காப்பியத் தலைவன் தன்னைச் சார்ந்தோரின் முயற்சியால் வெல்வதினைக் காணலாம். ஆயினும் சிலப்பதிகார அமைப்பு ஊழின் வெற்றியை எம் முயற்சியாலும் வெல்ல முடியாது என்னும் தன்மையினை நோக்கியதாகவே உள்ளமையினை மாதவியின் முயற்சிகளின் தோல்வியின் வழி அறியலாம். ஆசீவகச் சமயத்தார் ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் இன்பம் - துன்பம், பயனடைதல் - பயனற்று இழத்தல், வாழ்வு - தாழ்வு, சிறப்பு - சிறவாமை என்பனவான எதிர்மறைகள் யாவும் நிகழும் என்னும் கொள்கையில் மிகவும் உறுதியோடிருந்தனர். இவையும் ஊழின் வழி அமைவனவேயாம். இத் தன்மையினைச் சிலப்பதிகாரக் காப்பியமெங்கும் காணலாம். இவ்வூழின் வழிப்பட்ட துன்பத்திலிருந்து விடுபட நினைத்த கோவலன் அது குறித்து முயற்சித்தும் அதற்கு அறிவோர் உதவாமையால் ‘நீர்வழிச் செல்லும் துரும்பு’ போல் ஊழ் வழிச் சென்றமையினை இனிக் காண்போம்.

மாடல மறையோனிடம் கோவலன் தான் கண்ட கனவினைக் கூறி, விரைவில் துன்பம் வரும்போலும் எனக் கூறுகின்றான். ஆனால் அதற்கான கழுவாய் எதனையும் மாடல மறையோன் கூறினானில்லை. இது எவ்வகையிலும் கோவலனது ஊழிலிருந்து வெளிவருதல் இயலாது என்பதினையே மெய்ப்பிக்கும் வண்ணம் உள்ளதனைக் காணலாம். ஆனால் கோவலனின் பண்டைய மறவாழ்வையும், அறவாழ்வையும், கொடைவாழ்வையும் பலவாறு புகழ்ந்து பாடுகின்றான். ஆனால் அவன் உற்ற இடர் களைய முன்வருவாரில்லை. அவனது கனவின் தன்மையினையும் எடுத்துக்கூறி ‘ஆற்றுப் படுத்துவாருமில்லை’ என்பது ஊழ் தன்வழியே செல்லும் என்பதனைக் காட்டுவதாக அமைகின்றது.

2

## கனவும் நிமித்தமும்

கனவும் நிமித்தங்களும் நிகழவிருக்கும் நிகழ்வினை முன்னுரைக்கும் தன்மையுடையன. கனவிற்கும் நிமித்தங்களுக்குமான பலன்களைத் தமிழ்க்கணியன்கள் ஆய்ந்துரைப்பர்.

- கி.பி. பத்தாம் நூற்றாண்டிலேயே கனவும் கனவின் தன்மையும் கனவிற் தோன்றும் காட்சிகளும் எவ்வகையில் பலிதமாகக்கூடியன.
- பகலிற் காணும் கனவு பலிக்காது என்ற நம்பிக்கை.
- கனவு காணும் காலம் : இதனை இரவின் முன் யாமத்தில் கண்ட கனவு, நடு யாமத்தில் கண்ட கனவு, பின் யாமத்திற் கண்ட கனவு என மூன்றாகப் பகுப்பர். இதனை ஒட்டியே கனவின் நிகழ்வு யாருக்கு, எப்பொழுது பலிதமாகும் என்பன அறியக் கூடுதலாகும் என்ற நம்பிக்கை.
- கனவிற்காணக் கூடாதவை: சில விலங்குகள், சில ஊர்ந்திகள், சில தொழில் முனைவோர், சில மங்கல நிகழ்வுகள், சில புழங்கு பொருட்கள், சில பயணங்கள், சில சடங்கியல்கள், காவலர், தூதுவர் முதலானவை கனவிற்காணக் கூடாதவையாம்.
- கனவிற் காணக்கூடியவை: சில மனிதர்கள், சில மங்கல நிகழ்வுகள், சில அமங்கல நிகழ்வுகள், நிலைத்திருத்தல், மகிழ்ந்திருத்தல், தேவரடியார், மலர்கள், கனிகள், பறவைகள், அருவி, மலை, ஆறு முதலானவை கனவிற்காணக் கூடியவையாம்.

இவ்வாறான கனவுகள் குறித்து ஆராய்ந்து எழுதப்பட்ட நூலாகவே ‘பொன்னவன் கனாநூல்’ விளங்குகின்றது. சோழர் காலத்தில் இந்நூல் வெளிவந்துள்ளது. அக் காலகட்டத்தில் ஆசீவக நெறி தமிழகத்தில் வழக்கிலிருந்ததேயாகும். இப் பொன்னவன் கனாநூலில் இருந்தே சிலப்பதிகாரத்தில் வரும் கனவுகள் குறித்தான விளக்கத்திற்குரிய மேற்கோற் செய்யுட்களினை அடியார்க்கு நல்லார் தமது உரையில் எடுத்தாண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

சிலப்பதிகாரத்தில் மூன்று கனவுகள் ஊழின் தன்மையில் இயங்கும் தீக்கனவாக இளங்கோவடிகளாற் காட்டப்பட்டதெனலாம். மூன்று கனவுகளின், பின்நிகழ்வும் ஒன்றுதான்; ஒரே வகையான பலனைக் கொடுக்கக் கூடியதுதான். மூன்று கனவினைக் கண்டவர்களும் மாண்டே அதன் பலனைக் கண்டனர். மூன்று கனவும் ஒரு தொடர் நிகழ்வாகவே பலித்ததெனலாம். துன்பத்தில் உழன்று அதில் சிறிது இன்பம் காணுதல் என்பதை உலக இயற்கையாக ஆசீவக சமயம் கொண்டது. அவ் அடிப்படையிலேயே இத் துன்பக் கனவுகளை நோக்க வேண்டியதாகின்றது.

கனாத்திற முரைத்த காதையில் கண்ணகி கண்ட கனவு குறித்தான செய்தி இடம் பெறுவதாகின்றது. முதலில் கண்ணகி கூற்று நிகழ்த்துமிடமாகவும் இக்காதையே அமைகின்றது. பார்ப்பனத் தோழியான தேவந்தியிடம் இக்கனவு குறித்த செய்தியைக் கண்ணகி கூறுகின்றாள்.

> “கடுக்குமென் நெஞ்சங் கனவினால் என்கை
> பிடித்தனன் போயோர் பெரும்பதியுட் பட்டோம்
> பட்ட பதியிற் படாத தொருவார்த்தை
> இட்டன ரூரா ரிடுதேளிட் டென்றன்மேற்
> கோவலற் குற்றதோர் தீங்கென் றதுகேட்டுக்
> காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன் காவலனோ
> டூர்க்குற்ற தீங்குமொன் றுண்டா லுரையாடேன்
> தீக்குற்றம் போலும் செறிதொடீஇ தீக்குற்றம்
> உற்றேனொ டுற்ற உறுவனோ டியானுற்ற
> நற்றிறங் கேட்கின் நகையாகும் பொற்றொடீஇ”

எனத் தானுற்ற கனவினை விபரிக்கின்றாள். இதன் பின் நிகழவுள்ள நிகழ்வுகள் யாவும் கண்ணகியை மையப்படுத்தி நிகழ்வதினைக் கவனிக்கலாம். பெருநகரினை அடைதல், கோவலன் துயருறல், பழிச்சொல் எழுதல், மன்னனிடம் வழக்குரைதல், நகரைத் தீக்கிரையாக்கல் இவை போன்ற கொடுமையான உள்ளத்தினை நடுங்கச் செய்யும் துன்ப நிகழ்வுகளுக்குப் பின், கோவலனும் தானும் விண்ணோர் உலகமான சுவர்க்கத்தில் இருத்தலை நகைப்பிற்குரியதாகக் கண்ணகி

குறிப்பிடுகின்றாள். கடுமையான துன்ப நெறிகளுக்கிடையேயும் துன்பங்களினூடேயுமே இன்பத்தினைக் காணவியலும் என்பது ஆசீவகர்களது கொள்கை. அக்கொள்கையினை அடியொற்றியதாகவே கண்ணகியின் இக் கனவும் அமைவதினைக் காணலாம். கடுமையான வாழ்வியற் துன்பங்களுக்கிடையில் இனிதாய மறுமையுலகு அமைவது இக் கனவின் வழி விளங்குவதாகின்றது. இவள் கனவு கண்ட பொழுதும் கங்குற் பொழுதாகும்.

இனி, கோவலன் தான் கண்ட கனவினைக் குறித்து மடல மறையோனிடமும் கவுந்தியிடமும் கூறுவான். அக்கனவினை இனிக் காண்போம்.

> **"கோவலன் கூறுமோர் குறுமகன் தன்னால்**
> **காவல் வேந்தன் கடிநகர் தன்னில்**
> **காறைங் கூந்தல் நடுங்குதுயர் எய்தக்**
> **கூறைகோட் பட்டுக் கோட்டுமா ஊரவும்**
> **அணித்தகு புரிகுழல் ஆயிழை தன்னொடும்**
> **பிணிப்பு அறுத்தோர்தம் பெற்றி எய்தவும்**
> **மாமலர் வாளி வறுநிலத்து எறிந்து**
> **காமக் கடவுள் கையற்று ஏங்க**
> **அணிதிகழ் போதி அறவோன் தன்முன்**
> **மணிமே கலையை மாதவி அளிப்பவும்**
> **கனவு போல நள்ளிருள் யாமத்துக்**
> **கனவு கண்டேன் கடிது ஈங்குறும்"**
> **(95– 106)**

என்ற கனவின் வழி கோவலன் உடுத்திய ஆடை பிறரால் களையப்பட்டு கோட்டுமா என்னும் எருமைக் கிடாவின் மேல் ஏறுவது போலவும், கண்ணகி இச் செய்தி கேட்டு நடுக்குறுதல் போலவும், கண்ணகியுடன் உம்பாரார் பதியினை அடைவது போலவும், மணிமேகலையைப் பௌத்தப் பிக்குகளிடம் துறவு நோற்க மாதவி வழங்குவது போலவும், விடியற்கால வைகறைப் பொழுதில் கனவு கண்டதாகக் கூறுகின்றான். இத் தெளிவான கனவிலும் பல துண்பங்களுக்கிடையே சுவர்க்கத்தை அடைவதான இன்பம் என்னும் ஆசீவகக் கருத்தியல் விளக்கப்பட்டுள்ளமை எண்ணத் தகுந்ததாகும். கண்ணகி கண்ட கனவிலும் கோவலன் கண்ட கனவிலும் தீக்கனா தங்களைச் சார்ந்து நிகழ்வதாகவே சுட்டப்பட்டுள்ளது. அத் துன்ப நிகழ்வுகளுக்குள் இருவருக்கும் பெறற்கரிய பேறான வீடு பேறு ஒருமைத்துக் கூறப்பட்டுள்ளது.

ஆசீவகத்தின் வீடு பேற்றுக் கோட்பாட்டினை வலியுறுத்துவதாக இவை உள்ளமையினைக் காணக் கூடியதாகின்றது.

இனி, மூன்றாவதாகச் சுட்டப்படும் கனவு கோப்பெருந்தேவியின் கனவாகும். மற்றை இரு கனவிலும் கனவுக்குரியோர் துன்பமுறும் காட்சிகள் தெளிவுற இடம் பெற்றமை போல் கோப்பெருந்தேவியின் கனவில் துன்ப நிகழ்வுகள் இடம் பெறவில்லை. அரசன் குறித்தோ கோப்பெருந்தேவி குறித்தோவான நிகழ்வுகள் இடம் பெறவில்லை.

ஆயினும் கனவு முழுதும் தீநிமித்தங்களே எழுந்தன. கண்ணகியும் கோவலனும் கண்ட கனவில் துன்பங்களுக் கிடையேயும் இன்பமுண்டு; ஆனால் கோபெருந்தேவி கனவில் தீநிமித்தங்களே உண்டு.

> **"ஆங்கு.......................... குடையொடு கோல்வீழ, நின்று நடுங்கும்**
> **கடைமணி இன்குரல் காண்பென் காண்எல்லா**
> **திசையிரு நான்கும் அதிர்ந்திடும் அன்றிக்**
> **கதிரை இருள்விழுங்கக் காண்பென்காண் எல்லா!**
> **விடுங்கொடி வில்இர, வெம்பகல் வீழும் கடுங்கதிர்**
> **மீன்இவை காண்பென்காண் எல்லா!"**
> **(17)**

என்றவாறான மேற்கண்ட கனவில் வெண்கொற்றக் குடையும் செங்கோலும் வீழ்தல், பகலில் இருளுதல், பகலில் மீன் விழுதல் என்பவனவான தீமித்தங்கள் குறிக்கப்படுகின்றன. இந் நிமித்தங்கள் யாவும் துன்பத்திற்கே உரியனவாதலைக் காணலாம். இவ்வகையில் சிலப்பதிகாரத்தில் கனவின் வழி துன்பம் நிறைந்த, ஆனால் சிறிதே இன்பமுடைய உலகு என்னும் ஆசீவக கோட்பாட்டின் மேலாண்மை இருத்தலைக் காணக் கூடியதாகின்றது.

## நிமித்தம்

ஆசீவக சமயச் சிந்தனையில் கணியன்களின் பங்களிப்பு மிகப் பெரிதாக இருந்துள்ளமைக்குப் பல சான்றுகள் உண்டு. கணியன்கள் நிமித்தங்களை நோக்குவதிலும் அதனது பலிதங்களை அறிவதிலும் திறனுடையோர். வானியலில் திறனுடைய அவர்கள், மக்களின் உளவியல் சார்ந்த நிகழ்வுகளிலும் திறனுடையோராகவே விளங்கினர். சிலப்பதிகாரக் காப்பியப் போக்கிலும் சில நிமித்தங்கள் இளங்கோவடிகளால் பயன்படுத்தப்பட்டுள்ளன. கண் துடித்தல் என்பது அக்காலம் முதல் இக்காலம் வரை தமிழர்கள் நம்பிக்கைக்குரியதாகிய நிமித்தமாகும். அவ்வகையில் கண் துடித்தல் ஆண்களுக்கும் பெண்களுக்கும் மாறிய பலனைக் கொடுக்கும். ஆண்களுக்கு வலது கண் துடித்தல் சிறப்பானது. பெண்களுக்கு இடது கண் துடித்தல் சிறப்பானதாகும். இவை போன்ற நிமித்தங்கள் நடப்பனவற்றை முன்கூட்டியே அறியத் தகும் குறியீடுகள் என ஆசீவகர்கள் நம்பினர். அவ்வகையில் இந்திர விழவூரெடுத்த காதையில் கண்ணகி, மாதவி ஆகியோருக்கு முறையே இடக் கண்ணும் வலக் கண்ணும் துடித்ததாகக் குறிப்பிடுவர். இதனை :

> **"உள்ளுக நறுந் தாது உறைப்ப, மீது அழிந்து,**
> **கள் உக நடுங்கும் கழுநீர் போல;**
> **கண்ணகி கருங் கணும், மாதவி செங் கணும்,**
> **உள் நிறை கரந்து, அகத்து ஒளித்து, நீர் உகுத்தன;**
> **எண்ணு முறை, இடத்தினும் வலத்தினும் துடித்தன"**
>
> ***(இந்திர விழா ஊர் எடுத்த காதை. 235-239)***

என்பனவற்றின் வழி கூறக் காணலாம். இவ்வடிகளுக்கு உரை கூறிய அரும்பத உரையாசிரியர் "கருங்கணென்றது, கண்ணகிக்குப் புணர்ச்சியில்லாமையால் நிறை கரந்து துன்பத்தால் கண்கள் நீருகுத்தன; செங்கணென்றுரைத்தது, மாதவிக்குப் புணர்ச்சி விதும்பலாகி, அகத்து நிறை கரந்து இன்பத்தால் கண்கள் நீருகுத்தன. கண்ணகிக்கு நிறை கரத்தல், கற்பாற் பரிகாரப்பட்டதால் ஆற்றாமை மிகுதி கூறிற்று. மாதவிக்கு நிறுத்தலைக் கரந்து காமத்தாலே நீருகுத்தன. கண்ணகிக்கு அழுகைக்கண்ணீர்; மாதவிக்கு உவகைக் கண்ணீர்; எண்ணுமுறை எண்ணினவடைவே. பின்பு கண்ணகிக்குக் கூட்டமுண்டாகையால் இடக்கண்டித்தன; மாதவிக்குப் பின்பு பிரிவுண்டாகையால் வலக்கண் துடித்தன" என்றமை, கண்ணகியின் இடக்கண் துடித்தது நற்செய்தியாகக் கணவன் வருகையை உணர்த்தியும் மாதவிக்கு வலக்கண் துடித்தமை கோவலனின் பிரிவினை உணர்த்துதற்குமான அறிகுறி நிமித்தங்களாகும். ஆசீவகர்களைப் பொறுத்தவரை தனி மனிதனின் வாழ்வில் வரும் இன்பம் - துன்பம் பெறுமதி - இழப்பு, வாழ்வு - தாழ்வு முதலியவை யாராலும் தடுக்க இயலாமல் என்றும் நிகழ்ந்து கொண்டிருப்பவையாகும். அந் நிகழ்வுக்குரிய குறியீடுகளாகவே இச் சமிக்கைகளைக் கருதினர். ஒரே நிகழ்வு போல் உள்ள இச் சமிக்கை இடம் - வலம் மாறி நிகழ்தலின் வழி, அடையக் கூடிய பலன்களும் மாறுகின்றமையினைக் காணலாம். அடுத்த சமிக்கையாகக் கோவலன் கொலையுண்ட பின், இடைச்சேரியிலே ஏற்பட்ட தீநிமித்தங்களைக் குறிப்பிடலாம். கோவலன் கொலைக்களப்பட்ட செய்தியை ஆயர் பாடியிலுள்ள கண்ணகியோ மாதரியோ யாரும் அறிந்திலர். ஆயினும், அங்கு நிகழ்ந்த நிகழ்வுகள் நிமித்தங்களாக அச்செய்தியை வலியுறுத்தினவாக அமைந்தமையை,

> **"குடப்பால் உறையா குவியிமில் ஏற்றின்**
> **மடக்கணீர் சோரும் வருவதொன் றுண்டு;**
> **உறிநறு வெண்ணெய் உருகா உருகும்**
> **மறிதெறித் தாடா வருவதொன் றுண்டு;**
> **நான்முலை யாயம் நடுங்குபு நின்றிரங்கும்**
> **மான்மணி வீழும் வருவதொன் றுண்டு"**
> **(ஆய்ச்சியர் குரவை. 1, 2, 3, 4)**

என்பனவற்றால் அறியலாம். குடத்தில் உறையிட்ட பால் உறையாமலிருத்தல், இளைய எருதின் கண்களிலிருந்து நில்லாமல் கண்ணீர் பெருகிக் கொண்டிருத்தல், தயிர் கடைவோர் கடைந்த போதும் வெண்ணை திரளாமல் பிரிந்தோடுதல், ஆட்டு மறிகள் துள்ளி

விளையாடுதலை ஒழித்து குழைந்து கிடத்தல், நிரைகள் நடுங்கிக் கத்துதல், அவற்றின் கழுத்திற் கட்டிய மணிகள் அறுந்து விழுதல் போன்றன அந் நிமித்தங்களாம். ஆதலால் தமக்கு வருவதோர் உற்பதம் உண்டென்றால், ஊழின் தன்மை உயர்திணை வாயிலாகவும், அஃறிணை வாயிலாகவும் நிமித்தமாக வெளிப்படும் என்பது கணியன்களான ஆசீவகர்களது நம்பிக்கையாகும்.

ஆசீவகச் சமயக் கொள்கையினை வரையறை செய்தவர்களுள் ஒருவரான மற்கலி கோசலர் தனது நோயுற்ற காலத்தில் வேட்கோ மரபில் வந்த ‘ஆலகாலா’ என்ற தனது மாணவியின் வீட்டில் தங்கியிருந்தார். அப்பொழுது அவர் ஆசீவகத்திற்குரிய எட்டுக் கொள்கைகளைத் தொகுத்து வெளியிட்டார். அவை,

இறுதிப்பருகல், இறுதிப்பாடல், இறுதியாடல், இறுதிவரவேற்பு, இறுதிப் பெரும்புயல் முகில், இறுதியானை நீரூற்று, இறுதிப்போர், 24 ஆவது தீர்த்தங்கரர் என்பனவாம். இவைகுறித்து பகவதி சூத்திரம் என்ற சமண நூல் குறிப்பிடுகின்றது. இவ் எட்டு அமைப்பினை ஒத்த பல பகுதிகள் சிலப்பதிகாரத்தில் காணக்கூடியதாகின்றன.

### இறுதி விருந்து

கவுந்தியடிகள் கண்ணகியை மாதரி என்னும் இடைக்குல மடந்தையிடம் அடைக்கலமாகக் கொடுத்து அனுப்ப மாதரி கண்ணகியை மங்கல நீராட்டி கோவலனுக்கும் அவளுக்கும் சமைப்பதற்குரிய நற்கலங்களையும், பல்வேறு பசுங்காய்களையும் கனிகளையும் சாலி அரிசியினையும் கொடுத்தாள். இவற்றையெல்லாம் விரைந்து பாகம்பன்னி, கோவலன் சாவக நோம்பிகள் என்பதனால் அவனுக்குப் பரிமாறி உண்பித்தாள். இதுவே கோவலனுக்குக் கண்ணகி அளித்த இறுதி விருந்தாகும். அதனாற்றான் போலும் இவ்விருந்துக் காட்சி எழிலுறக் கூறப்பட்டுள்ளமையினைக் காணலாம்.

**“வையெரி மூட்டிய ஐயை தன்னொடு**
**கையறி மடைமையிற் காதலற் காக்கித்**
**தாலப் புல்லின் வால்வெண் தோட்டுக்**
**கைவன் மகடூஉக் கவின்பெறப் புனைந்த**
**செய்வினைத் தவிசிற் செல்வன் இருந்தபின்**
**கடிமல ரங்கையிற் காதல னடிநீர்**
**சுடுமண் மண்டையில் தொழுதனள் மாற்றி**
**மண்ணக மடந்தையை மயக்கொழிப் பனள்போல்**
**தண்ணீர் தெளித்துத் தன்கையால் தடவிக்**
**குமரி வாழையின் குருத்தகம் விரித்தீங்கு**
**அமுத முண்க அடிக ளீங்கென**
**அரசர் பின்னோர்க் கருமறை மருங்கின்**
**உரிய வெல்லாம் ஒருமுறை கழித்தாங்கு**
**ஆயர் பாடியின் அசோதைபெற் றெடுத்த**
**பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ**
**நல்லமு துண்ணும் நம்பி யீங்குப்**
**பல்வளைத் தோளியும் பண்டுநங் குலத்துத்**
**தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை”**

என்பனவற்றின் வழி, தான் இனிதுற சமைத்த கறிகளைக் கோவலனுக்கு வழங்குதற்கு முன் பனையோலையாலே செய்யப்பட்ட தவிசில் கோவலனை இருக்கச் செய்து அவனுடைய கால்களைப் புதிய மட்கல நீரால் கழுவி வழிபட்டு அவனுக்கு முன் இருந்த இடத்தில் மண் புழுதி எழாமல் இருத்தல் பொருட்டு மண் மகள் மயக்கத்தினைத் தெளிவிப்பது போல் நீரினைத் தெளித்துத் தனது கைகளால் பூசி, பின்னர் குமரி வாழையின் விரியாத குருத்திலையினை விரித்து அதில் கறிகளைப் பரிமாறி ‘அமுதமுண்க அடிகளீர்’ எனக் கண்ணகி உணவுண்ணக் கோவலனை அழைத்தமை கூறப்பட்டுள்ளமையினைக் காணலாம். உணவுண்ட கோவலனும் தாம்பூலம் மென்றிருத்தமையும் கூறப்படுதலாயிற்று. இக்காட்சியினைக் கண்டு வந்த மாதரியும் ஐயையும் கோவலனைக் கண்ணனோடு ஒப்பிட்டு வாழ்த்தினர். இந் நிகழ்ச்சியே கோவலனுடைய இருதிப் பருகல் என்னும் இருதி விருந்தாகவும் இறுதி வரவேற்பாகவும் அமைந்து செல்வதினைக் காணலாம். காப்பியம் முழுதும் கோவலன் உணவுண்டமையைப் பெரிதும் காட்டாத இளங்கோவடிகள் இவ்விடத்தில் மாத்திரம் இவ்விருந்துக் காட்சியைச் சிறப்புறக் குறிப்பிட்டுக் காட்டுவதாவது எங்ஙனமாம்? இது கோவலன் உண்ணும் இறுதி விருந்து என்பதனாலேயே அதற்கான தரவுகளும் இவ்வடிகளின் உள்ளேயே தொடர்ந்து காணப்படுகின்றதெனலாம்.

> “மண்ணக மடந்தையை மயக்கொழிப் பனள்போல்
> குமரி வாழையின் குருத்தகம் விரித்தீங்”

எனக் கூறுவதன் வழி, கோவலனுக்கு உள்ள துயரம் உவமை வழிப்பட்டு உரைக்கப்பட்டுள்ளமையினைக் காணலாம். எனவே, கோவலனின் இவ்விருந்து ஆசீவக சமயத்தார் குறிப்பிடும் இறுதி விருந்துடன் ஒப்புமையுடையதே எனலாம்.

## இறுதிப் பாடலும் துன்பத்தில் இன்பமும்

ஆசீவகச் சமயம் துன்பத்தில் இன்பம் காணக்கூடியது. இவ்வுலக வாழ்க்கை துன்பமானது. அதில் கிடைக்கும் சிறிதான இன்பத்தினைப் போற்றுகிறேன் என்னும் சிந்தனைப் போக்குடையது. இத்தன்மையினைச் சிலப்பதிகாரத்திலும் காணலாம். கதையின் தலைவன் கோவலன், ஊழ்முறையால் கொலையுண்டு மாண்டு கிடக்கின்றான். மிகப்பெரிய துன்பம் நிகழ்ந்துவிட்டது. காப்பியத்தின் போக்கு முழுவதும் துன்பத்தை நோக்கி நகர்ந்துவிட்டது. இனித் துன்பமல்லாமல் வேறில்லை என்ற நிலையில் காப்பியத்தைக் காண்போர் நெஞ்சு வெடித்துவிடும். கோவலன் கொலைபட்டு மாண்ட செய்தி அறிந்து கண்ணகி படும் துன்பத்தையே முழுவதும் பொருளாகக் கொண்ட துன்பமாலை, ஊர்சூழ்வரி, வழக்குரை காதை, வஞ்சிமாலை எனக் காப்பியமே துன்பத்தினை நோக்கித் தள்ளப்பட்ட நிலையில், கொலைக்களக் காதைக்கும் துன்பமாலைக்கும் இடையில் ‘ஆய்ச்சியர் குரவை’ என்ற இன்பப் பாடற் பகுதியை வைத்தமைக்கு யாது காரணம்? துன்பம் சூழ்ந்த நிலையில் துன்பங்களுக்குகிடையில் வெளிப்படும் சிறிது இன்பத்தினை வெளிப்படுத்துதலுக்காகவேயாம்; அவ்வாசீவகக் கோட்பாட்டின் போக்கிலேயே காப்பியம் அமைக்கப்பட்டுள்ள பாங்கினாலேயாம். மற்கலி கோசலர் வகுத்த எண்வகைக் கொள்கைகளுள் இறுதிப் பாடலும் ஒன்றேயாம். அவ்வகையில் கோவலன் மாண்டவுடன் வரும் இறுதிப்பாடல் பகுதியாக அமைவது ஆய்ச்சியர் குரவையாகும். அல்லாமல் கதைத்தலைவன் மாண்டு கிடக்கும்போது:

> “வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
> கடல்வண்ணன் பண்டொருநாள் கடல்வயிறு கலக்கினையே
> கலக்கியகை அசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
> மலர்க்கமல உந்தியாய் மாயமோ மருட்கைத்தே”

என்பன போன்ற இனிய பாடல்களை வட்டப்பாதையில் நின்று பாடுதலை உலகக் காப்பியங்கள் யாவற்றிலும் காணாத புதுமையாக அமைத்ததும் ஆசீவகச் சிந்தனையின் வழிப்பட்டமையாலேயே எனலாம். இசையில் ஆசீவக சமயத்தார் மிகுந்த ஆர்வமும் ஆராய்வும் கொண்டிருந்தனர். இதனை அரிச்சலூர்க் கல்வெட்டு முதலானவை தெளிவுறுத்தும். அவ்வகையில் சிலப்பதிகாரக் கதைப்போக்கின் மாற்றத்தை இசைப்பாடலின் ஊடாக வடிவமைத்தமையும் எண்ணத்தகும். மாதவியை கோவலன் பிரிவதினைக் கானல்வரிப் பாட்டினால் கூறியும், வேனிற் காதையிலே பண்ணுப் பெயர்ச்சி (கிரகபேதம்) என்னும் நுட்பத்தினைப் பயன்படுத்தி கதையின் போக்கு மாறுதலினை அறிவுறுத்தியும், வரந்தரு காதையில் வரும் இனிய பாடல்களைக் காப்பியத்தின் இறுதிப் பாடலாகவும் கொண்டு காப்பியத்தினை நகர்த்தியிருத்தலின் வழி, சிலப்பதிகாரம் ஆசீவக இசை மரபிற் செல்வதினை அறியலாம். அதுபோலவே காப்பியத்தில் இடம்பெறும் ஆடல் வகைகளையும் குறிப்பிடலாம். ஆடலும் பாடலும் கட்டமைக்கப்பட்ட முறையை உற்று நோக்குவோர் அதன் ஆசீவகத் தன்மையை அறிவர்.

## ஒருவர் துன்பமும் ஒருவர் இன்பமும்

துன்பத்தையும் - இன்பத்தையும் எதிர்நிலைப் பொருளாக வைத்துப் பார்த்தல் ஆசீவக மரபு. அம்மரபில்,

**இன்பம் – துன்பம்**

**பிறப்பு – இறப்பு**

**ஊதியம் – இழப்பு**



கண்ணகி சிலை Image Source - ta.wikipedia.org

“இல்வளர் முல்லையொடு மல்லிகை யவிழ்ந்த
பல்பூஞ் சேக்கைப் பள்ளியுட் பொலிந்து
செந்துகிர்க் கோவை சென்றேந் தல்குல்
அந்துகின் மேகலை யசைந்தன வருந்த
நிலவுப்பயன் கொள்ளும் நெடுநிலா முற்றத்துக்
கலவியும் புலவியுங் காதலற் களித்தாங்கு
ஆர்வ நெஞ்சமொடு கோவலற் கெதிரிக்
கோலங் கொண்ட மாதவி யன்றியும்”

என்ற அடிகளில் நிலா முற்றத்தில் மலர்ப் படுக்கையில் ஊடலும் கூடலுமாக கோவலனுடன் களித்து மகிழ்கின்ற மாதவியின் வழி அறியலாம். அவளை ஒப்பவே தலைவனோடுள்ள மகளிரும் மகிழ்கின்றனர். ஆனால் கணவனான கோவலனைப் பிரிந்த கண்ணகியின் நிலை வேறாக உள்ளது. அதனை:

“அஞ்செஞ் சீறடி யணிசிலம் பொழிய
மென்துகில் அல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றிற் குங்கும மெழுதாள்
மங்கல வணியிற் பிறிதணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்துவீழ் காதினள்
திங்கள் வாண்முகம் சிறுவியர் பிரியச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பப்
பவள வாணுதல் திலகம் இழப்பத்
தவள வாணகை கோவலன் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி யன்றியும்”

என்ற அடிகள், சிலம்பணியாமல் மேகலை அணியாமல் குங்குமம் எழுதாமல் மங்கள அணியில்லாமல் மற்றைய அணிகள் தவிர்த்துக் காதிற் குழை அணியாமல் கண்ணிற்கு மைதீட்டாமல் நெற்றியில் திலகமிடாமல் தலைக்கு நெய் தடவாமல் ஊதுலைக் குருகினை அன்ன மூச்சினையுடையோளாய்க் கண்ணகி விளங்கினாள் எனக் கூறுகின்றன. கண்ணகி மாத்திரமல்லாமல் அவ் அந்தி நிலாக் காலத்திலே தலைவனைப் பிரிந்த பெண்களின் நிலை யாவும் அவ்வாறே அமைந்திருந்த தெனலாம்.

என்னும் ஆறு உண்மைகளையும் ஆறு திசையாசிரியர்கள் கூடி வகுத்தனர் என்று கூறுவர். அவ்வழி இன்பமும் - துன்பமும் எதிர்நிலையினை உடையனவாம். சிலப்பதிகாரக் காப்பிய மரபினில் இக்கொள்கை பின்பற்றப்பட்டமையை, காதற் கோவலனைக் கூடியுள்ள மாதவியின் இன்ப நிலையினையும், காதற் கொழுநனான கோவலனைப் பிரிந்துள்ள கண்ணகியின் துன்ப நிலையினையும் விளக்குகின்ற பாடலடிகளின் வழிநின்று அறியலாம். தலைவனைச் சேர்ந்த பெண்களுக்கும், தலைவனைப் பிரிந்த பெண்களுக்கும் அந்தி மாலைப் பொழுது இன்பமும் துன்பமும் தருவனவான பொருண்மையில் அமைவதினைப் பின்வரும் அடிகளின் வழியறியலாம். சிறுபொழுதினைப் போற்றுவதாக அமைந்த இவ் அந்திமாலைச் சிறப்புச் செய்காதையில் இன்பமும் துன்பமும் ஒருங்கே வாய்க்கப் பெற்றமையை:

ஒரு அந்தி மாலைப் பொழுதின் நிலவொளியில் சிலர் இன்பமாக உள்ளமையினையும் சிலர் துன்பமாக உள்ளமையினையும் இப்படைப்பில் ஒப்பீட்டு நிலையில் காட்டுதல் என்பது சங்கப் பாடலை நினைவுறுத்துவதாக உள்ளது. இதன்வழி இளங்கோவடிகள் ஆசீவக மரபில் கொண்டிருந்த நாட்டமும் அக்காலத் தமிழகச் சூழலில் ஆசீவக மரபு பெற்றிருந்த செல்வாக்கினையும் காணலாம்.

### கோவலன், கண்ணகியின் வீடு பேறு

கோவலன், கண்ணகி ஆகியோரது வீடுபேறு இக் காப்பியத்தில் எவ்வகையில் இடம் பெற்றது என்பதை நோக்குகின்ற போது அதன் சமயத் தன்மையினை உணரலாம். ஏனெனில் ஒவ்வொறு சமயமும் வீடுபேற்றினை மாறுபட்ட வகைகளிலேயே கூறிச் செல்கின்றன. மறுபிறப்புக் கொள்கையிலும் வீடுபேற்றுக் கொள்கையிலும் தெற்காசியச் சமயங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்ட தன்மையினையே கொண்டன. ஆயினும் இவ்விரண்டு கொள்கைகளையும் பெரும்பாலான தெற்காசிய சமயங்கள் ஏற்றுக் கொண்டனவாகவே உள்ளன. பெருந்துறவு மேற்கொண்டே வீடுபேற்றினை அடைய முடியும் என்றும் பெண்களுக்கு வீடுபேறில்லை என்றும் பெண்கள் துறவுமேற் கொண்டு தவமியற்றி அடுத்த பிறவியில் ஆணாகப் பிறந்து துறவு மேற்கொள்ளவதன் வழியிலேயே வீடுபேற்றினை அடைய முடியும் என்ற கொள்கை சமணத்தில் உண்டு. இவ்வாறான மாறுபட்ட சிந்தனைகளினுடாகவே கோவலன், கண்ணகி ஆகியோரது வீடுபேற்றினைப் பற்றி ஆராய வேண்டியதாகின்றது. சிலப்பதிகாரக் கொலைக்களக் காதையில் கோவலன் கொலையுண்ட செய்தி பின்வருமாறு கூறப்படுகின்றது:

> "கல்லாக் களிமக னொருவன் கையில்
> வெள்வாள் எறிந்தனன் விலங்கூ டறுத்தது
> புண்ணுமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப
> மண்ணக மடந்தை வான்றுயர் கூரக்
> காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்
> கோவலன் பண்டை ஊழ்வினை யுருத்தென்"
> (சிலம்பு, கொலைக்களக் காதை.212– 127)

இவ்வடிகளில் 'கல்லாத அறிவற்ற களிமகன் ஒருவன் கோவலனைத் திடுமென வாளால் வெட்டினான். வாள் அவன் உடற்கு இடையில் சென்றுவிட்டது' என்பதாக உள்ளது. இவ்வடிகளுக்கு உரை கூறும் அரும்பத உரையாசிரியர் "வெள்வா ளெறிந்தனன் விலங் கூடறுத்தது" என்பதற்கு "குறுக்காகற் ஊடறுத்தது அந்த வாளென்க" எனக் குறிப்பிடுவர். அடியார்க்கு நல்லார் "இங்ஙனம் இவர் கூறலின், அறிவின்மையாற் கொலையஞ்சான் ஒரு களிமகன் தன்கையில் வெள்வாளாலே வெட்டினானாக. அது குறுக்கே துணிந்தது. துணிந்த உடற்குறைப் புண்வழியே கொப்புளிக்கின்ற குருதி குதித்து எங்கும் பரக்க நிலமடந்தை தனக்கு ஆவது உணர்ந்து மிக்க துயரமுற...." என்றவாறு கூறுவதினைக் காணலாம். அறிவற்றவன் எறிந்த வாள் என்னும் ஆதம் உடலுக்கு இடையே சென்றுவிட்டது அதனால் கோவலன் உயிர் பிரிந்தது என்பதாம். ஆசீவகம் அணுக்கள் அழிவதில்லை என்னும் கொள்கையினை உடையது. கொலை முதலியவற்றையும் ஏற்றில்லது. அதனால் ஆயுதம் உடலின் குறுக்கே சென்றுவிட்டது என்னும் மொழியில் கோவலனின் கொலை குறிக்கப்பட்டுள்ளமையினைக் கொண்டு இதனை ஆசீவக சமயக் கருத்தியலாகக் கொள்ளலாம். கோவலன் கொலைக்குப்பின் கண்ணகி கோவலன் கொலையுண்ட இடத்தினை அடைத்து அவனது வெட்டுண்ட உடலைப் பொருத்தி நெஞ்சோடு பொருத்தியழ அவன் உயிர் பெற்று எழுந்து 'மதிபோன்ற முகம் வாடியதென்ன' எனக் கூறி, கைகளால் அவள் கண்ணீரைத் துடைத்து நீ இங்கிருக்க எனக்கூறி உடலினை உதறி, அமரர்கள் சூழ அமரர் குழாத்துள் ஒருவனாகச் சுவர்க்கம் புகுந்தான் என்பதனை,

> "என்றிவை சொல்லி யழுவாள் கனவன்றன்
> என்றிவை சொல்லி அழுவாள் கணவன்றன்
> பொன்துஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக்கொள்ள
> நின்றான் எழுந்து நிறைமதி வாள்முகம்
> கன்றிய தென்றவள் கண்ணீர்கை யான்மாற்ற
> அழுதேங்கி நிலத்தின்வீழ்ந் தாயிழையாள் தன்கணவன்
> தொழுதகைய திருந்தடியைத் துணைவளைக்கை யாற்பற்றப்
> பழுதொழிந் தெழுந்திருந்தான் பல்லமரர் குழாத்துளான்"
> (ஊழ் சூழனி.60– 66)

என்றமையால் அறியலாம். ஆசீவகச் சமய அடிப்படையிலேயே கோவலனின் வீடு பேறானது அமைந்துள்ளமையினைக் காணலாம். இனிக் கண்ணகியின் வீடு பேறு குறித்த செய்திகளைக் காண்போம். கோவலனின் பழம் பிறப்பினைக் கண்ணகிக்கு மதுராபதித் தெய்வம் உரைத்து இன்றிலிருந்து பதினான்காம் நாள் பகற் பொழுதினுக்குப் பிறகு நின் கணவனைக் கண்டு அடைவாய் எனக் கூறியது. மேற் திசை வாயிலின் வழி வைகைக்கரையில் மேற்கு நோக்கிச் சென்ற கண்ணகி செங்குன்றென்னும் மலைமீது ஏறி ஒரு வேங்கை மரத்தின் நிழலில் நின்று பதினான்காம் நாள் பகற்பொழுதிற்குப் பின் அங்குத் தெய்வ உருவுடன் வந்த கோவலனைக் கண்டு அவனுடன் வானூர்தியிலேறித் தேவர்கள் யாவரும் போற்றத் சுவர்க்கத்தை அடைந்தாள் எனக் கூறப்பட்டுள்ளமையினை,

**"அவுணரைக் கடந்த சுடரிலை நெடுவேல்**
**நெடுவேள் குன்றம் அடிவைத் தேறிப்**
**பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழோர்**
**தீத்தொழி லாட்டியேன் யானென் றேங்கி**
**எழுநா ளிரட்டி எல்லை சென்றபின்**
**தொழுநா ளிதுவெனத் தோன்ற வாழ்த்திப்**
**பீடுகெழு நங்கை பெரும்பெய ரேத்தி**
**வாடா மாமலர் மாரி பெய்தாங்கு**
**அமரர்க் கரசன் தமர்வந் தேத்தக்**
**கோநகர் பிழைத்த கோவலன் றன்னொடு**
**வான வூர்தி ஏறினள் மாதோ**
**கானமர் புரிகுழற் கண்ணகி தானென்"**

**(கட்டுரை காதை.189– 200)**

என்பனவாறு அறியலாம். கண்ணகி கோவலனுடன் வானூர்தியிலேறி சுவர்க்கம் புகுதல், பெண் வீடுபேறடையும் தகுதியற்றவள் என்ற சமணக் கோட்பாட்டிற்கு எதிரானதாகும். ஆசீவக மதமே பெண்ணின் வீடுபேற்றினையும் ஆணுக்குச் சமமாக ஏற்கின்றது. வீடுபேறடைந்த வீரபத்தினிக்கு வெட்சித் தினை மறவர்களுக்குக் கடைப்பிடிக்கும் அதே நடைமுறைகளும் பின்பற்றப்பட்டன. இதனைக் காட்சிக்காதை, கால் கோள்க்காதை, நீர்ப்படைக் காதை, நடுகற் காதை, வாழ்த்துக் காதை என்பனவற்றால் அறியலாம். தொல்காப்பிய மரபினைத் தாண்டி வரந்தருகாதை என்னும் காதையில் தெய்வ நிலையில் வரந்தருதல் என்னும் நிலைக்குக் கண்ணகியைக் கொண்டு சென்றார் இளங்கோவடிகள். இவை தமிழ் மரபை அடியொட்டிய ஆசீவகச் சமய நெறியின் வழிப்பட்ட படிநிலையே என்பதனை அறுதியிட்டுச் சொல்லலாம். இதன் வழிப்பட்ட கண்ணகியின் தந்தையும்:

**"கண்ணகி தாதை கடவுளர் கோலத்து**
**அண்ணலம் பெருந்தவத் தாசீ வகர்முன்**
**புண்ணிய தானம் புரிந்தறங் கொள்ளவும்"**

**(நீர்ப்படைக் காதை.97– 100)**

என்ற அடிகளின் வழி ஆசீவகச் சமயத்தில் இணைந்தமையைக் காணலாம். துன்பம் நிறைந்த இவ்வுலகத்தில் இன்பத்தினைப் பெறுதல் ஆசீவகர்களின் தன்மையாகும். இது துன்பத்தினையும் இன்பத்தினையும் சமமாகக் கருதும் மனப்போக்கினைக் காட்டுவதாகின்றது. கண்ணகியிடத்திலும் இப்போக்கினைக் காணலாம். நீண்ட காலம் கணவனைப் பிரிந்து மங்கல அணி தவிர மற்றவை துறந்து இருந்த போதும் கண்ணகியின் மொழியில் நகைச்சுவை மிளிர்வதை ஆங்காங்கே காணலாம். கண்ணகியின் தோழியான தேவந்தி கண்ணகியினைக் காணச்சென்று கணவனோடு வாழ்க என வாழ்த்தும் போது, தாம் கண்ட கனாவினை உரைத்த கண்ணகி நாங்கள் கனவில் பெற்ற நற்பேற்றினைக் கூறினால் உனக்கு நகையுண்டாகும் எனக் கூறுகின்றமையினை:

**"கடுக்கும் என்நெஞ்சம் கனவினால் என்கை**
**பிடித்தனன் போய்ஓர் பெரும்பதியுள் பட்டேம்**
**பட்ட பதியில் படாதது ஒருவார்த்தை**
**இட்டனர் ஊரார் இடுதேளிட்டு என்தன்மேல்**
**கோவலற்கு உற்றது ஓர் தீங்கு' என்று அதுகேட்டு**
**காவலன் முன்னர்யான் கட்டுரைத்தேன் காவலனோடு**
**ஊர்க்கு உற்ற தீங்கும் ஒன்று உண்டால் உரையாடேன்**
**தீக்குற்றம் போலும் செறிதொடீஇ! தீக்குற்றம்**
**உற்றோனொடு உற்ற உறுவனோடு யானுற்ற**
**நற்றிறங் கேட்கின் நகையாகும்"**

**(சிலம்பு.9:45– 54)**



சிலப்பதிகாரத்தில் ஆடலும் பாடலும்

Image Source - ta.quora.com

என்றமையால் அறியலாம். அத்துடன் நீண்ட நாட்களுக்குப் பின் வந்த கோவலன் தமது கூடா ஒழுக்கத்தினால் செல்வமெல்லாம் இழந்தமையைக் கூற, கண்ணகி தனது காற் சிலம்பு உள்ளமையை நகை முகங்காட்டிக் கூறுதலினை:

> **"நலங்கேழ் முறுவல் நகைமுகங் காட்டிச்**
> **சில்லம்புள கொண்மெனச் சேயிழை கேளிச்"**
> **(சிலம்பு.9:72– 73)**

என்னும் அடிகளின் வழி அறியலாம். துன்பங்களுக்கிடையிலும் இன்பத்தினைக் காணும் சம நிலைப் பாங்கை இவை உணர்த்துவதாக அமைவதினைக் காணலாம். அது போலவே வேட்டுவ வரியில் தெய்வ மேற்றப்பட்ட சாலினி தன்னைப் பலபட பாராட்டிக் கூறிய புகழுரையைக் கேட்ட கண்ணகி, இம் மூதறிவினையுடையாள் மயக்கத்தால் தம்மை இப்படிக் கூறினாள் என்று நகைச்சுவை தோன்றக் கூறுகின்றமையை:

> **"போதுறவு மொழிந்தனள் மூதறி வாட்டி என்று**
> **அரும் பெறற் கணவன் பெரும்புறத் தொடுங்கி"**
> **(சிலம்பு. 12:51– 52)**

என்ற அடிகளின் வழியறியலாம். இதன்வழி துன்பமான சூழலிலும் இன்பத்தினைக் காட்டும் சமநிலைத் தன்மையினைக் கண்ணகியிடம் காணலாம். இது 'இன்னாதம்ம இவ்வுலகம் இனியன காண்பதிலனே' என்ற ஆசீவக அடிப்படைக் கருத்தியலை விளக்குவதாகக் காணலாம்.

(தொடரும்)

இலங்கையைப் பொறுத்தமட்டில், தமிழர்களின் தொன்மையான வரலாறு இன்னும் மகாவம்ச இருளால் மூடப்பட்டிருக்கும் சூழலில், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் அண்மைக்காலத்தில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகள் இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்த தமிழ் மக்களின் இருப்பியல் தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளன. அந்தவகையில் 'இலங்கையின் அண்மைக்கால தொல்லியல் ஆய்வுகள்' என்ற இத்தொடர் சமகாலத்தில் இலங்கையில் குறிப்பாக வடக்கு – கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் தொடர் அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட தொல்லியல் ஆதாரங்களின் அடிப்படையில், பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களிடம் நிலவிய நாகரிகம், அவர்களின் கலாச்சார பண்பாட்டு அம்சங்கள், பொருளாதார சமூக நிலவரங்கள், வெளிநாட்டு உறவுகள், உறவுநிலைகள், சமய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை ஆதாரபூர்வமாக வெளிக்கொணர்வதாக அமைகின்றது.




பரமு புஷ்பரட்ணம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியரான பரமு புஷ்பரட்ணம் அவர்கள், தனது இளமாணி மற்றும் முதுமாணிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், கலாநிதிப் பட்டத்தைத் தஞ்சாவூர் பல்கலைக்கழகத்திலும் பெற்றுக்கொண்டார்.

இவர் எழுதிய பதினைந்து நூல்களில் நான்கு நூல்கள் இலங்கை அரசின் சாகித்திய மண்டலப் பரிசையும், மூன்று நூல்கள் மாகாண சாகித்திய மண்டலப் பரிசையும் பெற்றன. இவர் 82இற்கும் மேற்பட்ட தேசிய, சர்வதேச ரீதியிலான ஆய்வுக்கட்டுரைகளை எழுதியுள்ளதுடன், இதுவரை 55 சர்வதேச மற்றும் தேசிய கருத்தரங்குகளில் பங்குபற்றியுள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் 18 இடங்களில் இவரால் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் மூன்று அகழ்வாய்வுகள் தொடர்பான விடயங்கள் நூல்வடிவில் வெளிவந்துள்ளன.


# ஆனைக்கோட்டை முத்திரை; உண்மையும் திரிபும்



அகழாய்வில் பேராசிரியர் கா. இந்திரபாலா, சி.க. சிற்றம்பலம், பொ. இரகுபதி

ஆனைக்கோட்டை முத்திரை தொடர்பாகச் சமீபத்தில் வெளிவந்த ஆய்வுகள் சிலவற்றில் முத்திரையில் பொறிக்கப்பட்டிருந்த சில எழுத்துக்களில் மாற்றங்கள் செய்யப்பட்டு அதற்குப் புதிய வாசிப்பும், புதிய விளக்கங்களும் கொடுக்கப்பட்டு வந்திருப்பதைக் காணமுடிகின்றது.

முத்திரையில் காணப்படும் எழுத்துக்களுக்கு அறிஞர்கள் வேறுபட்ட வாசிப்புக்களும், விளக்கங்களும் கொடுத்து வருவது

அவர்களுக்குரிய சுதந்திரமாகவே நோக்கப்படும். ஆனால் அவற்றின் எழுத்துக்களை மாற்றிவிட்டு அதற்கு புதிய வாசிப்புகளும் விளக்கங்களும் கொடுப்பது திட்டமிட்ட வரலாற்றுத் திரிபாகவே பார்க்கப்படும்.

**யாழ்ப்பாண நகருக்கு வடமேற்கே ஏறத்தாள 5.5 கிலோ மீற்றர் தொலைவில் ஒரு குக்கிராமமாக இருந்த ஆனைக்கோட்டை 1980 களின் பின்னர் தொல்லியல், வரலாற்று அறிஞர்களாலும், வரலாற்று ஆர்வலர்களாலும் அதிகம் பேசப்படும் ஒரு வரலாற்று இடமாக மாறியுள்ளது.**

இத் தவறுகளை ஊடகங்கள் மூலம் அறிஞர்களுக்கும், வரலாற்று ஆர்வலர்களுக்கும், மக்களுக்குத் தெரியப்படுத்தவே இக் கட்டுரை எழுதப்படுகின்றது. கடந்த காலங்களில் ஆனைக்கோட்டை முத்திரையின் வரலாற்று முக்கியத்துவத்தை வெளிச்சம் போட்டுக் காட்டிய ஊடகங்கள் தமது சேமிப்பில் இருக்கும் ஆனைக்கோட்டை முத்திரையின் திரிவுபடுத்தப்பட்ட புகைப்படங்களை நீக்கவும், எதிர்காலத்தில் இவ்வாறான புகைப்படங்களைப் பிரசுரிப்பதைத் தவிர்க்கவும் முன்வந்தால் மிக்க மகிழ்ச்சி அடைவோம்.

யாழ்ப்பாண நகருக்கு வடமேற்கே ஏறத்தாள 5.5 கிலோ மீற்றர் தொலைவில் ஒரு குக்கிராமமாக இருந்த ஆனைக்கோட்டை 1980 களின் பின்னர் தொல்லியல், வரலாற்று அறிஞர்களாலும், வரலாற்று ஆர்வலர்களாலும் அதிகம் பேசப்படும் ஒரு வரலாற்று இடமாக மாறியுள்ளது.

இதற்கு அக்கிராமத்தில் முன்னெடுக்கப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட பெருங்கற்கால ஈமச்சின்னங்களும், அவற்றுடன் கிடைத்த கிறிஸ்தவ சகாப்தத்திற்கு முற்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த முத்திரை மோதிரமும் முக்கிய காரணங்களாகும்.

1980 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறையில் இளம் தொல்லியல் ஆசிரியராக இணைந்த பொன்னம்பலம் இரகுபதி (ஓய்வுநிலைப் பேராசிரியர், உத்கல் பல்கலைக்கழகம், ஒரிசா, இந்தியா) தனது முதல் தொல்லியல் ஆய்வுப் பணிகளில் ஒன்றாக தன் மாணவர்களுடன் இணைந்து ஆனைக்கோட்டையில் தொல்லியல் ஆய்வினை முன்னெடுத்திருந்தார்.

இந்த ஆய்வின் மூலம் அங்கு ஆதியிரும்புக்கால (பெருங்கற்கால) மக்கள் வாழ்ந்துள்ளனர் என்ற உண்மை முதன் முதலாகத் தெரியவந்தது. இவ்விடத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை உணர்ந்த பேராசிரியர் கா. இந்திரபாலா தலைமையிலான ஆய்வுக் குழுவினர் அங்கு 1980 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் விரிவான அகழ்வாய்வினை மேற்கொண்டிருந்தனர்.

இந்த ஆய்வில் வரலாற்றுத்துறையுடன் ஏனைய துறைசார்ந்த ஆசிரியர்களும் மாணவர்கள் சிலரும் பங்கெடுத்தனர். இவ்வகழ்வாய்வின் மூலம் ஏறத்தாழ 2200 ஆண்டுகளுக்கு முன்னரே ஆனைக்கோட்டையில் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்துள்ளனர் என்ற உண்மை உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும் கந்தரோடையை அடுத்து யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாவது பெருங்கற்கால மையம் என்ற பெருமையையும் இது பெற்றது. இருப்பினும் கந்தரோடையுடன் ஒப்பிடும் போது ஆனைக்கோட்டை அகழ்வாய்வு இரு அம்சங்களில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகின்றது. ஒன்று, யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த பெருங்கற்கால மக்களது மனித எலும்புக்கூடுகள் இரண்டு முதன் முதலாக ஆனைக்கோட்டை அகழ்வாய்வின் போதுதான் கண்டுபிடிக்கப்பட்டது.

இரண்டாவது, இந்த மனித எலும்புக்கூட்டுடன் பெயர் பொறித்த முத்திரை மோதிரம் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. இதுபோன்ற முத்திரை மோதிரம் ஆனைக்கோட்டையைத் தவிர தென்னாசியாவின் வேறு எந்தவொரு பெருங்கற்கால ஈமச்சின்ன மையங்களிலும் கண்டுபிடிக்கப்படவில்லை.



அகழாய்வில் பல்கலைக்கழக மாணவர்கள்

இம்முத்திரை மோதிரத்தின் மேலைப்பகுதியில் சிந்துவெளி எழுத்தை நினைவுபடுத்தும் மூன்று குறியீடுகளும், அக்குறியீடுகளுக்குக் கீழே மூன்று பிராமி எழுத்துக்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இம்முத்திரை தென்னாசிய வரலாற்று ஆய்விற்குப் புதிய சான்றாதாரமாகக் கிடைத்திருப்பதால் சாசனவியல் அறிஞர்கள் பலரும் தமது பிராமிச் சாசனங்கள் பற்றிய ஆய்வுகளில் ஆனைக்கோட்டை முத்திரை மோதிரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர்.

அதிலும் தமிழ் எழுத்தின் தோற்றம், தமிழ் மொழியின் தொன்மை பற்றிய ஆய்வுகளிலும், கருத்தரங்குகளிலும் இம்முத்திரைக்கு முதன்மையிடம் கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் அண்மைக்காலத்தில் வெளிவந்த சில ஆய்வுகளிலும், கருத்தரங்குகளிலும் இம்முத்திரை மோதிரத்தின் உண்மையான புகைப்படத்திலும், அதன் வரைபடங்களிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டு அதன் வாசகத்திற்கு புதிய வாசிப்பும், அதற்குப் புதிய விளக்கங்களும் கொடுக்கப்பட்டு வந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

இச் செயற்பாடுகள் ஆனைக்கோட்டை முத்திரையிலிருந்து அறியப்பட்ட வரலாற்று உண்மைகளைத் திரிவுபடுத்துவதாக உள்ளது. ஆனைக்கோட்டை அகழ்வாய்வை முன்னெடுத்த அறிஞர்களால் உத்தியோகப்பூர்வமாகப் பிரசுரிக்கப்பட்ட முத்திரையின் எழுத்துகளை மீள்வாசிப்பு செய்வதும், அதற்குப் புதிய விளக்கம் கொடுப்பதும் ஆரோக்கியமான ஆய்வு முறையாகும்.

அதற்கு பதிதலாக அதன் எழுத்துக்களில் மாற்றங்களைச் செய்துவிட்டு அதற்குப் புதிய வாசகமும், விளக்கமும் கொடுத்திருப்பது மோசடியான வரலாற்று அணுகுமுறையாகும். இது பற்றிய முறைப்பாடுகள் அண்மையில் எனக்கும் கிடைத்துள்ளன.

இதனால் ஆனைக்கோட்டை ஆய்வில் மாணவனாகப் பங்கெடுத்தவன் என்ற முறையிலும், வரலாற்றுத்துறை ஆசிரியனாகக் கடமையாற்றியவன் என்ற வகையிலும் ஆனைக்கோட்டை முத்திரையின் உண்மை நிலை பற்றி கூறுவதை எனது கடமையாகவும், பொறுப்பாகவும் கருதுகின்றேன்.

இம்முத்திரை மோதிரம் ஆனைக்கோட்டையில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எலும்புக்கூட்டின் தலைமாட்டுப் பகுதியில் வைக்கப்பட்டிருந்த மண்சட்டியொன்றில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது.


இம் முத்திரை கண்டுபிடிக்கப்பட்ட இடத்தில் வைத்தே உரிய முறையில் துப்பரவு செய்யப்பட்டு, யாழ்ப்பாண வளாகத் தலைவராக இருந்த பேராசிரியர் க. கைலாசபதியின் கையில் வைத்துப் பல கோணங்களில் பொருளியல்துறை விரிவுரையாளர் வி.பி. சிவநாதன் (பொருளியல்துறை ஓய்வுநிலைப் பேராசிரியர்) அவர்களால் படமெடுக்கப்பட்டன. அப்போதைய சூழ்நிலையில் கறுப்பு - வெள்ளைப்படம் எடுக்கும் சூழ்நிலையே காணப்பட்டது.

அவ்வாறு எடுக்கப்பட்ட புகைப்படத்திலிருந்தும், முத்திரையிலிருந்தும் படிக்கப்பட்ட "கோவேத" என்ற பெயரை வைத்தே பேராசிரியர் கா. இந்திபாலா மற்றும் பொ.இரகுபதி ஆகியோரால் இந்து பத்திரிகையில் விரிவான இரண்டு கட்டுரைகள் முதன் முதலாகப் பிரசுரிக்கப்பட்டன. இதன் சமகாலத்தில், உள்ளூர் ஆங்கிலம் மற்றும் தமிழ்ப் பத்திரிகைகளில் இப் படத்தை ஆதாரமாகக் கொண்டு பல கட்டுரைகளும், செய்திகளும் வெளிவந்தன.

அவற்றுள் தமிழில் வெளியிடப்பட்ட கவிஞர் சேரனின் (பேராசிரியர், சமூகவியல், கனடா) "சிந்துவெளியில் இருந்து வழுக்கியாறுவரை ஒரு எழுத்தின் பயணம்" என்ற கட்டுரையும், கவிஞர் ஜெயபாலனின் "கற்காலக் கிளவியும், குறுந்தாடி அழகனும்" என்ற தலைப்பிலான கவிதையும் முக்கியமானவை.

இவற்றின் தொடர்ச்சியாகப் பாடசாலை, பல்கலைக்கழக சஞ்சிகைகளினதும், ஆய்வு நூல்களினதும் அட்டைப்படங்களை அலங்கரிப்பதில் ஆனைக்கோட்டை முத்திரை முக்கிய இடம்பிடித்தது. இந்நிலையில் சிந்துவெளி நாகரிக கால எழுத்து பற்றி ஆய்வை மேற்கொண்ட தமிழகத்தின் முதன்மைச் சாசனவியலாளரில் ஒருவரான ஐராவதம் மகாதேவன் 1980 களில் எடுக்கப்பட்ட ஆனைக்கோட்டை முத்திரையின் புகைப்படத்தையே முக்கிய ஆதாரமாகக் கொண்டு தனது ஆய்வை முன்னெடுத்துள்ளார்.

அவ்வாறே தமிழகத்தில் தமிழ்ப் பிராமி பற்றி ஆய்வு செய்த பேராசிரியர்களான எஸ். ரமேஸ்,



2021 இல் எடுக்கப்பட்ட முத்திரையின் புகைப்படம்

வை. சுப்பராயலு, க. இராசன், எஸ். இராஜவேலு மற்றும் கலாநிதி சு. இராஜவேலுவும், தென்னிலங்கையில் பேராசிரியர் அனுராமனதுங்க, பேராசிரியர் ராஜ்சோமதே முதலியோரும் இப்புகைப்படத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

இவ்வாறு பலதரப்பட்ட அறிஞர்களால் ஆய்வுசெய்யப்பட்ட ஆனைக்கோட்டை முத்திரை தொடர்பான வேறுபட்ட வாசகங்களையும், பொருள் விளக்கங்களையும் கருத்தில் எடுத்த பேராசிரியர் இந்திரபாலா 25 ஆண்டுகள் கடந்த நிலையில் மீண்டும் இம்முத்திரையை விரிவாக ஆய்வு செய்து அதன் வரலாற்று முக்கியத்துவம் பற்றி எடுத்துக்காட்டியுள்ளார்.

அவற்றை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும். "கோவேத" என்ற

சொற்றொடர் பிராகிருத மொழியைச் சேர்ந்தது அன்று. இதனைக் "கோ - வேத" எனப் பிரிக்கலாம். இது சமகாலத்துத் தமிழ்நாட்டுத் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் சொற்றொடர்களாகிய "கோ ஆதன்", "கோபூதி விர" ஆகிய சொற்றொடர்களுடன் ஒப்பிடத்தக்கது.

இதில் வரும் "கோ" மன்னனைக் குறிக்கும் ஆதித் தமிழ் திராவிடச் சொல்லாகும். முத்திரைகளிலும், நாணயங்களிலும் வரும் பெயர்கள் பொதுவாக ஆறாம் வேற்றுமை உருபுடன் (அதாவது உடைய என்ற பொருள்படும் சொல் இறுதியுடன்) காணப்படும்.

இதே போன்று, ஆனைக்கோட்டை முத்திரையிலும் பெயர் ஒன்று ஆறாம் வேற்றுமை உருபுடன் காணப்படுகின்றது. அந்த உருபு பழந் தமிழில் காணப்படும் "அ" உருபு ஆகும். அண்மையில் ஆனைக்கோட்டை முத்திரையை நேரில் பார்த்துப் படமெடுக்கவும், அது பற்றிய மேலதிக விபரங்களைத் தெரிந்து கொள்ளவும் வாய்ப்புக் கிடைத்தது.

இம்முத்திரை மோதிரம் எவ்வகையான மூலப்பொருள் கொண்டு செய்யப்பட்டதென்பதில் அறிஞர்கள் மத்தியில் மாறுபட்ட கருத்துக்கள் நீண்டகாலமாக இருந்து வந்தன. இந்நிலையில் தமிழக அறிஞர்கள் இது "ஸ்டிட்டைட்" எனப்படும் ஒரு வகைக் கல்லில் செய்யப்பட்டதென்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இம்முத்திரைக்கல் 10.2. மி.மீ நீளமும், 10.6 மி.மீ. அகலமும், 5.05 மி.மீ, தடிப்பும், 1.9 கிராம் நிறையும் கொண்டது. இக்கல்லை முத்திரை மோதிரமாகப் பயன்படுத்தும் நோக்கில் கல்லின் பின்பக்கத்தில் சற்சதுரமன சிறிய பீடம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதன் இரண்டு பக்க விளிம்பில் காணப்படும் சிறிய அடையாளங்கள் மோதிரத்திற்குரிய வளையம் பொருந்தியிருந்ததை உறுதிப்படுத்துவதாக உள்ளன.



2021 இல் எடுக்கப்பட்ட முத்திரையின் பின்பக்கப் புகைப்படம்

ஆயினும் அந்த மோதிர வளையம் என்ன மூலப்பொருள் கொண்டு செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை. ஆயினும் அது ஸ்டிட்டைக் கல்லினால் செய்யப்பட்டிருக்க முடியாதென்பது தெரிகின்றது. இக் கல்லின் முன்பக்கத்தில் முத்திரையாகப் பயன்படுத்தப்பட்ட குறியீடுகளையும், பிராமி எழுத்துக்களையும் தெளிவாகப் பார்க்க முடிந்தது.

அவற்றைப் பல கோணங்களில் வண்ணப் படமாக எடுத்துப் பார்த்த போது அவை 1980 களில் பேராசிரியர் சிவநாதனால் எடுக்கப்பட்ட கறுப்பு - வெள்ளைப்படங்களில் இருந்து சிறிதும் மாறுபடவில்லை. உண்மைகள் இவ்வாறு இருக்கும் போது அண்மைக்கால ஆய்வுகள் சிலவற்றில் இம்முத்திரையின் குறியீடுகளிலும், பிராமி எழுத்துக்களிலும் ஏன் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டது என்பது தெரியவில்லை.

இதன் மூலம் ஆனைக்கோட்டை முத்திரையில் இருந்து புதிய வரலாறு படைத்துவிட்டதாகப் பெருமை கொள்வது இதன் நோக்கமாக இருந்திருக்கலாம். இதனால் ஆனைக்கோட்டை முத்திரையின் வரலாற்றுப் பெறுமதியும், அதனால் அறியப்பட்ட வரலாற்று உண்மைகளும் திரிவுபடுத்தப்படுகின்றது என்ற உண்மைகளை ஏன் அவர்கள் மறந்துவிடுகின்றனர்?

(தொடரும்)

ஒரு பிரதேசத்தின் பல்வேறு விடயங்களை கட்டமைப்பதில் அந்தப் பிரதேசத்தின் இயற்கை அம்சங்கள் மிகப்பெரிய பங்கினை வழங்குகின்றன. குறிப்பாக ஒரு பிரதேசத்தின் காலநிலை சார்ந்த அம்சங்கள் அந்தப் பிரதேசத்தினுடைய இயற்கையையும் அந்த பிரதேசத்திற்குரிய பொருளாதார, சமூக, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களையும் கட்டமைப்பதில் மிகப்பெரிய பங்கினை வழங்குகின்றது. அந்த அடிப்படையில் வடக்கு மாகாணத்தினுடைய பல்வேறு வகைப்பட்ட விடயங்களை தீர்மானித்ததில் வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை மிகப்பெரிய செல்வாக்கினை பெற்றிருக்கின்றது. வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை சார்ந்த பாரம்பரிய அறிவியல் விடயங்களையும் நவீன விஞ்ஞான ரீதியிலான ஆய்வு சார்ந்த விடயங்களையும் உள்ளடக்கியதாக வடக்கு மாகாணத்தினுடைய காலநிலைப் பண்புகளை முழுமைப்படுத்தி வெளியிடுவதாக ‘பிராந்திய காலநிலையியல் : வடக்குப் பிராந்தியம், இலங்கை‘ எனும் தொடர் அமைகின்றது.

# இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தின் வெப்பநிலை



நாகமுத்து பிரதீபராஜா

கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறையில் முதுநிலை விரிவுரையாளராக கடமையாற்றி வருகின்றார். காலநிலையியலில் தனது கலாநிதி பட்டத்தினை பூர்த்தி செய்த பிரதீபராஜா காலநிலையியல் தொடர்பான பல்வேறுபட்ட ஆராய்ச்சிகளை வெளியிட்டுள்ளார். வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை பற்றியும் பொதுவான காலநிலை அம்சங்கள் தொடர்பாகவும் 07 இற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். 40 இற்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை தேசிய மற்றும் சர்வதேச சஞ்சிகைகளில் பிரசுரித்துள்ளார். கடந்த ஒரு தசாப்தத்திற்கும் மேலாக, வடக்கு மாகாணத்தினுடைய வானிலை தொடர்பான இவரது எதிர்வு கூறல்களை பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்களும் பின்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


## அறிமுகம்

உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகின்ற, வளிமண்டல வெப்பநிலை அளவீடு செய்கின்ற உலக வளிமண்டல திணைக்களத்தின் தர நிர்ணயத்திற்கு உட்படுத்தப்பட்ட வகையிலான வெப்பமானிகள் மூலமே இலங்கையிலும் வெப்பநிலை அளவீடு செய்வதற்கான வெப்பமானிகள் பயன்படுத்தப்படுகின்றன. அந்த அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் ஈர மற்றும் உலர் வெப்பமானிகள், மண் வெப்பமானிகள், உயர்வு மற்றும் இழிவு வெப்பமானிகள் மற்றும் தன்னியக்க வெப்பநிலை பதிவுக் கருவி போன்றவற்றை பயன்படுத்தி வெப்பநிலை பற்றிய அளவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்த அடிப்படையில் கடந்த 50 ஆண்டுகாலமாக வடக்கு மாகாணத்தில் சராசரியாக 28.7 பாகை செல்சியஸ் வெப்பநிலை நிலவுகின்றது. இருப்பினும் பிரதேசங்கள் சார்ந்தும் ஆண்டுகள் தோறும் இந்த வெப்பநிலையில் மிகப்பெரிய அளவிலான வேறுபாடுகள் அவதானிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும் (Dananjaya et al., 2022).

## வடக்குப் பிராந்தியத்தின் வெப்பநிலையில் பருவகால மாறுபாடுகள்

வடக்கு மாகாணத்தின் பருவகால வெப்பநிலையில் அதிக வேறுபாடுகள் காணப்படுகின்றன. முதலாவது இடைப் பருவத்தில், சூரியனின் கோணம் நேரடியாக வடக்கு மாகாணத்திற்கு மேல் இருப்பதால், வடக்குப் பகுதி அதிக வளி வெப்பநிலையை அனுபவிக்கிறது. இந்தக் காலகட்டத்தில், சராசரி வெப்பநிலை 29.2°C ஆகும். இருப்பினும், தென்மேற்கு

பருவக்காற்றுக் காலத்தில் கிடைக்கின்ற வறண்ட காற்றும் வட மாகாணத்தில் அதிக வெப்பநிலை நிலவக் காரணமாகிறது. இக் காலப்பகுதியில் இலுப்பைக்கடவை, அடம்பன், கரியாலை, நாகபடுவான் ஆகிய பகுதிகளில் சராசரியாக 34.7 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகின்றது (படம் 6.1). தென்மேற்கு பருவ காலத்தில்; வெள்ளாங்குளம், தேவன்பிட்டி, உமையாள்புரம், பல்லவராயன்கட்டு, நாகப்படுவான், பூநகரி, முழங்காவில், துணுக்காய், கல்விளான், அடம்பன், நாச்சிக்குடா, புங்குடுதீவு, முருங்கன், கறுக்காய்த்தீவு, நானாட்டான், நெடுந்தீவு, கிராஞ்சி, பன்னங்கண்டி, செட்டிக்குளம் மற்றும் வலைப்பாடு ஆகிய பல பிரதேசங்கள் அதிக வளி வெப்பநிலை காரணமாக வறண்ட காலநிலையை எதிர்கொள்கின்றன. இரண்டாவது இடைப்பருவத்தில் வடக்குப் பகுதி சராசரியாக 28.8°C வெப்பநிலையை அனுபவிக்கின்றது. எவ்வாறாயினும், வடக்கு மாகாணத்தின் அனைத்துப் பகுதிகளும் வடகீழ்ப் பருவத்தின் போது 27.5°C இற்கும் குறைவான வெப்பநிலையைப் பெறுகின்றன. குறிப்பாக டிசம்பர் முதல் பிப்ரவரி வரை, வடக்குப் பகுதியில் ஈரப்பதமான காற்று வீசுவதாலும், மேகமூட்டமான வானத்தாலும் குறைவான வெப்பநிலை நிலவுகின்றது.




படம் 6.1. வடக்கு மாகாணத்தின் வெப்பநிலையின் இடம் சார்ந்த வேறுபாடுகள்

### வடக்கு பிராந்தியத்தில் வளி வெப்பநிலையின் இடஞ்சார்ந்த மாறுபாடுகள்

வடக்கு மாகாணத்தின் வெப்பநிலையில் இடம் சார்ந்த வேறுபாடுகள் உள்ளன. கொண்டாச்சி, தேரங்கண்டல், அனலைதீவு, மருதோண்டிக்குடா, மறிச்சுக்கட்டி, வேரவில், முசலி, செட்டிக்குளம், முருங்கன், பறையனாலங்குளம், நாகபடுவான், அடைக்கலமோட்டை, சின்னத்தம்பனை, அகத்திமுறிப்பு, விபூதிமோட்டை, சாளம்பன், தள்ளாடி, கல்விளான், ஊர்காவற்துறை, நெடுந்தீவு, பல்லவராயன்கட்டு, மூன்றாம்பிட்டி, துணுக்காய், ஒட்டங்குளம், மூன்றுமுறிப்பு, இலுப்பைக்கடவை, கள்ளியடி, விடத்தல்தீவு, பெரியமடு, சிலாவத்துறை, பாலம்பிட்டி, ஆண்டாங்குளம், மடு, பெரிய பண்டிவிரிச்சான்குளம், இரணை இலுப்பைக்குளம், நானாட்டான், வங்காலை, அரிப்பு, எருக்கலம்பிட்டி, தோட்டவெளி, போன்றன அதிக வருடாந்த வளி வெப்பநிலையைப் பெறுகின்றன. இந்திய உபகண்டச் செல்வாக்கு, இப்பிரதேசங்களின் புவியியல் அமைவிடம் மற்றும் இப் பிரதேசங்கள் வடகிழக்கு பருவக்காற்றின் ஒதுக்குப் பக்கத்தில் அமைந்திருக்கின்றமை ஆகியன இந்த உயர்வுக்கான முக்கிய காரணிகளாகும். ஸ்கந்தபுரம், உருத்திரபுரம், கொக்குவில், இரணைமடு, மணியன்குளம், அக்கராயன், வட்டக்கச்சி, திருநெல்வேலி போன்ற சில பகுதிகள் வட மாகாணத்தில் உள்ள ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும்போது குறைந்த வளி வெப்பநிலையைப் பெறுகின்றன. அதற்கு அப் பகுதிகளில் உள்ள மேற்பரப்பு நீர்நிலைகள்,இயற்கைத் தாவரப் போர்வை போன்றன பிரதானமான காரணங்களாகும்.

### அவதானிக்கப்பட்ட வெப்பநிலை அதிகரிப்பு

வெப்பநிலையின் போக்கு பற்றிய பகுப்பாய்வுகளின் அடிப்படையில் வடமாகாணத்தின் வெப்பநிலையின்

போக்குகள் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. வடக்குப் பிராந்தியத்தின் காலநிலைச் சூழ்நிலையில் வெப்பநிலை இன்றியமையாத ஒன்றாகும்.


வடக்கு மாகாணம் வெப்பமண்டலப் பகுதியில் அமைந்துள்ளது. ஆண்டு முழுவதும் சூரியக் கதிர்வீச்சை நேரடியாகப் பெறுவதால் வெப்பநிலை அதிகமாக இருக்கும். இருப்பினும், சில மாதங்களில் அதிகமாகவும், சில மாதங்களில் குறைவாகவும் இருக்கும்.


சென்னின் சாய்வுப் பகுப்பாய்வின்படி, 1970 முதல் 2022 வரையிலான காலப்பகுதியில் ஒரு தசாப்தத்திற்கு 0.44 பாகை செல்சியஸ் ஆக இலங்கையின் வடக்குப் பகுதியில் வெப்பநிலை அதிகரிப்பு உள்ளது.


ஆனால் அது இடத்திற்கிடமும் காலரீதியாகவும் மாறுபடும் தன்மை கொண்டதாக உள்ளது (படம் 6.2). வடக்கு மாகாணத்தின் பல நிலையங்களுக்கான வெப்பநிலை அதிகரிப்பு தொடர்பான சென்னின் சாய்வு மதிப்புகளை பின்வரும் அட்டவணை குறிப்பிடுகிறது.


அட்டவணை 1. வடக்கு மாகாணத்தில் பிரதேசம் சார்ந்து பருவ ரீதியிலான வெப்ப அதிகரிப்பு


| நிலையங்கள் | பருவங்கள் | சென்னின் சாய்வுப் பெறுமானம்/தசாப்தம் | போக்கு |
|---|---|---|---|
| இரணைமடு | வடகீழ்ப் பருவக்காற்று | 0.37 | அதிகரிப்பு |
| | தென்மேற்கு பருவக்காற்று | 0.32 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 0.43 | அதிகரிப்பு |
| முருங்கன் | வடகீழ்ப் பருவக்காற்று | 0.31 | அதிகரிப்பு |
| | தென்மேற்கு பருவக்காற்று | 0.39 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 0.44 | அதிகரிப்பு |
| கணுக்கேணி | வடகீழ்ப் பருவக்காற்று | 0.35 | அதிகரிப்பு |
| | தென்மேற்கு பருவக்காற்று | 0.38 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 0.41 | அதிகரிப்பு |
| திருநெல்வேலி | வடகீழ்ப் பருவக்காற்று | 0.36 | அதிகரிப்பு |
| | தென்மேற்கு பருவக்காற்று | 0.39 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 0.45 | அதிகரிப்பு |
| வவுனியா | வடகீழ்ப் பருவக்காற்று | 0.33 | அதிகரிப்பு |
| | தென்மேற்கு பருவக்காற்று | 0.44 | அதிகரிப்பு |
| | வருடாந்தம் | 0.49 | அதிகரிப்பு |













*படம் 6.2 வட மாகாணத்தின் வேறுபட்ட நிலையங்களின் வெப்பநிலைப் போக்கு*


## வேறுபட்ட காலநிலைக் காலங்களில் மாதாந்த சராசரி வெப்பநிலை வேறுபாடு


*1901-1930 மற்றும் 1930-1960 காலநிலைக் காலங்களில் வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க அளவுக்கு வேறுபாடுகள் காணப்படவில்லை. இருப்பினும், முந்தைய இரண்டு காலகட்டங்களுடன் ஒப்பிடுகையில் 1960-1990 காலகட்டத்தில் வெப்பநிலை திடீரென அதிகரித்துள்ளது. 1901 முதல் 1930 வரையிலான காலகட்டத்தில் சராசரி வெப்பநிலை 27.25 பாகை செல்சியஸ் ஆகும். 1931 முதல் 1960 வரை இது 27.27 ℃ ஆக இருந்தது. பின்னர் 1961-1990 இல் 27.57 ° செல்சியஸ் ஆக திடீரென அதிகரித்தது. இறுதியாக, 1991-2022 காலகட்டத்தில் 28.2° செல்சியஸ் ஆக அதிகரித்துள்ளது. 1901-1930 மற்றும் 1931-1960 காலகட்டத்தில் அத்தகைய வேறுபாடு இல்லை. வடக்கு மாகாணத்தில் 1960 இல் இருந்து அதன் திடீர் விலகலும் 1960-1990 மற்றும் 1991-2022 இற்கு இடையில் வெப்பநிலையில் 0.4 பாகை செல்சியஸ் அதிகரிப்பும் ஏற்பட்டுள்ளது. வெப்பநிலையின் படி, 1901-1930 காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 1990-2022 காலகட்ட வெப்பநிலை அதிகரித்துள்ளது. வடக்கு மாகாண வெப்பநிலை (அனைத்து நிலையங்களையும் சேர்த்து) 1901 முதல் 2022 வரை 0.84℃ உயர்ந்துள்ளது. இருப்பினும், இது மாங்குளத்தில் 0.96℃ என்ற அளவிலும், கணுக்கேணியில் 1.06℃ என்ற அளவிலும், இரணைமடுவில் 0.86℃ என்ற அளவிலும், அக்கராயன்குளத்தில் 0.74℃ என்ற அளவிலும், திருநெல்வேலியில் 0.84℃ என்ற அளவிலும், பல்லவராயன்கட்டில் 0.88℃ என்ற அளவிலும், முருங்கனில் 0.87℃ என்ற அளவிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. கணுக்கேணி நிலையம் வடக்கு மாகாணத்தின் வெப்பநிலையில் அதிகபட்ச அதிகரிப்பைக் கொண்டுள்ளது. இது 1.06 பாகை செல்சியஸ் ஆகும். மாத அடிப்படையில், ஜனவரி மாத வெப்பநிலை 1.01 பாகை செல்சியஸ் அதிகரித்துள்ளது. இருப்பினும், மழைவீழ்ச்சி அவதானிப்பு நிலையங்களுக்கு இடையே இது அதிகரித்துள்ளது. உதாரணமாக, ஜனவரி 1901-1930 இல் 25.32 ℃ ஆக இருந்த வெப்பநிலை, பின்னர் வெப்பநிலை 26.33 ℃ ஆக உயர்ந்துள்ளது. பெப்ரவரியில் வளி வெப்பநிலையில் அதிகரிப்பு உயர்வாக உள்ளது. பிப்ரவரி மாதங்களில் வெப்பநிலை 0.9℃ ஆக அதிகரித்துள்ளது. 1901-1930 காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், பெப்ரவரி மாத அதிகரிப்பு 1991-2022 காலப்பகுதி வவுனியாவில் 0.96℃ என்ற அளவிலும், பல்லவராயன்கட்டில் 0.94℃ என்ற அளவிலும், இரணைமடுவில் 0.97℃ என்ற அளவிலும், முருங்கனில் 0.95℃ என்ற அளவிலும், கணுக்கேணியில் 0.98℃ என்ற அளவிலும், திருநெல்வேலியில் 0.98℃ என்ற அளவிலும், மாங்குளத்தில் 1.05 பாகை செல்சியஸ் என்ற அளவிலும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது (படம் 6.3).*















*படம் 6.3. வடக்கு மாகாணத்தில் பிரதேசம் சார்ந்து வேறுபட்ட காலநிலைக் காலங்களுக்கிடையிலான வெப்பநிலை வேறுபாடுகள்*


*மார்ச் மாதத்தில், வடக்கு மாகாண பகுதியில் சராசரி வெப்பநிலை 1.07 பாகை செல்சியஸ் ஆக அதிகரித்துள்ளது. 1901-1930 காலகட்டத்துடன் ஒப்பிடும்போது, ஒவ்வொரு காலநிலைக் காலத்திலும் அது அதிகரித்து வருகின்றது. எடுத்துக்காட்டாக, 1930-1960 காலப்பகுதியில் மார்ச் மாதத்தில் வெப்பநிலை 27.5 பாகை செல்சியஸ் ஆக இருந்தது, பின்னர் 1961-1990 காலகட்டத்தில் அது 28.1 பாகை செல்சியஸ் ஆகவும், பின்பு 1991-2022 காலகட்டத்தில் 28.57 பாகை செல்சியஸ் ஆகவும் அதிகரித்தது. அனைத்து நிலையங்களிலும், மார்ச் மாதத்தின் சராசரி வெப்பநிலை ஒரு பாகை செல்சியஸை விட அதிகமாகவே அதிகரித்துள்ளது. எனவே, 1991-2022 காலகட்டத்தில் வவுனியாவில் 1.04°C என்ற அளவிலும், பல்லவராயன்கட்டில் 1.06°C என்ற அளவிலும், இரணைமடுவில் 1.05°C என்ற அளவிலும், முருங்கனில் 1.03°C என்ற அளவிலும், கணுக்கேணியில் 1.07 பாகை செல்சியஸ் என்ற அளவிலும், 1.07 பாகை செல்சியஸ் என்ற அளவிலும் மற்றும் திருநெல்வேலியில் 1.07 பாகை செல்சியஸ் என்ற அளவிலும் வெப்பநிலை அதிகரித்துள்ளது. அக்கராயன் மற்றும் தண்ணிமுறிப்பு பகுதிகளில் மட்டும் 0.85 பாகை செல்சியஸ் அதிகரித்துள்ளது. நிலையங்களுக்கிடையேயான அதிகரிப்பு 0.7 பாகை செல்சியஸ் இல் இருந்து 0.85 பாகை செல்சியஸ் ஆக இருந்த போதிலும், மாதாந்த அதிகரிப்பில் மார்ச் மாதத்தில் அதிக அதிகரிப்பு உள்ளமை குறிப்பிடத்தக்கது.*

*வடக்கு மாகாணத்தில் மே, ஜூன், ஜூலை மாதங்களில் வெப்பநிலையும் அதிகரித்துள்ளது. இந்த மாதங்களில், வடக்கு மாகாணப் பகுதிகளில் அதிக வெப்பநிலை உணரப்படும் இடங்களில் வெப்பநிலை அதிகரிப்பு மிக உயர்வாக காணப்படுகின்றது. எனவே, ஜூன் மாதத்தில் 0.83 பாகை செல்சியஸ் ஆகவும், மே மாதத்தில் 0.85 பாகை செல்சியஸ் ஆகவும், ஜூலையில் 0.92 பாகை செல்சியஸ் ஆகவும் வெப்பநிலை அதிகரிப்பு*


காணப்பட்டது. ஒகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் அவதானிக்கப்பட்ட வெப்பநிலை அதிகமாக உள்ளது. வடக்கு மாகாணப் பகுதிகளில் *1931* முதல் *1990* வரை ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு இல்லை. ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களின் சராசரி வெப்பநிலையில் பெரியளவிலான மாற்றங்கள் இல்லை. நவம்பரில், வெப்பநிலை அதிகரிப்பு டிசம்பர் மாதத்தை விட குறைவாக உள்ளது. வடக்கு மாகாணத்தில் டிசம்பர் மிகவும் ஈரப்பதமான மாதமாகும். எனவே, வடக்கு மாகாணத்தின் அதிக மழை பெய்யும் மாதமாக நவம்பர் மாதம் மாறியுள்ளது. ஒக்டோபரில், வெப்பநிலை அதிகரிப்பு *0.65* பாகை செல்சியஸ் ஆகவும், டிசம்பரில் *0.73* பாகை செல்சியஸ் ஆகவும் உள்ளது. நவம்பர் மாதத்தில் குறைவான வெப்பநிலை அதிகரிப்பு இருந்தது. டிசம்பரில் சிறிது அதிகரிப்பு இருந்தாலும், பகுதி வாரியாக பல வேறுபாடுகளைக் காணலாம்.





*படம் 6.4. வடக்கு மாகாணத்தின் ஆண்டுச் சராசரி வெப்பநிலைப் போக்கு*




*படம் 6.5. வடக்கு மாகாணத்தின் ஆண்டுச் சராசரி இழிவு வெப்பநிலைப் போக்கு*




*படம் 6.6. வடக்கு மாகாணத்தின் ஆண்டுச் சராசரி உயர்வு வெப்பநிலைப் போக்கு*




*படம் 6.7. வடக்கு மாகாணத்தின் ஆண்டுச் சராசரி, உயர்வுஇழிவு வெப்பநிலைப் போக்கு*

### இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தின் மாதாந்த சராசரி வெப்பநிலையின் மாறுபாடுகள்

### ஜனவரி முதல் ஏப்ரல் வரை மாதாந்த வெப்பநிலை

ஜனவரியில் சராசரி வெப்பநிலை, *1960* முதல் *1990* வரை *27.5* பாகை செல்சியஸ் ஆக காணப்படுகின்றது. *1990* முதல் *2008* வரை அதிக வித்தியாசம் இல்லாவிட்டாலும், சில நேரங்களில் அது ஏற்ற இறக்கமாக உள்ளது. இருப்பினும், இது சராசரியாக *27 - 28* பாகை செல்சியஸ் வரம்பில் உள்ளது. பிப்ரவரி *1990* முதல் *2008* வரை சராசரி வெப்பநிலை *27.7* பாகை செல்சியஸ் ஆக இருந்தது. *1960* முதல் *2015* வரை மார்ச் மாதத்தில் சராசரி வெப்பநிலை *28.7* பாகை செல்சியஸ் ஆக இருந்தது. *1972* முதல் *1981* வரை மற்றும் *2008* ஆம் ஆண்டு மார்ச் நடுப்பகுதி முதல் ஏப்ரல் வரை மிக அதிக வெப்பநிலை உணரப்பட்டது. ஏப்ரல் மாதத்தில் வெப்பநிலையில் குறிப்பிடத்தக்கதான மாற்றங்கள் இல்லை. இது

29-30 பாகை செல்சியஸ் என்ற வீச்சுக்குள்ளேயே உள்ளது. மேற்கூறிய நான்கு மாதங்களிலும் வடக்கு மாகாண வெப்பநிலையில் அதிக வேறுபாடுகள் இல்லை. வட பகுதியில் தாக்கம் செலுத்துகின்ற ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் சராசரி வெப்பநிலை குறைவாகப் பதிவு செய்யப்படுவதற்கு இக் காலப்பகுதியில் கிடைக்கும் மழைவீழ்ச்சியை தீர்மானிக்கும் வடகீழ் பருவக் காற்று பிரதானமான காரணமாகும் (Makubura et al., 2022).

## மே முதல் ஆகஸ்ட் வரை வெப்பநிலை மாற்றங்கள்

அதன் பிறகு, மே முதல் ஒகஸ்ட் வரையிலான வட பிராந்தியத்தின் வெப்பநிலையை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில் இக் காலப்பகுதியில் இம் மாதங்களின் சராசரி வெப்பநிலை 1960 முதல் 2022 வரை அதிகரித்திருப்பதைக் காணலாம். 1960 முதல் 1990 வரை மே மாதத்தின் சராசரி வெப்பநிலை 29.50 °C ஆக இருந்தது. இருப்பினும், 1999 இல் 31.30 °C ஆகவும், 2001 இல் 31.0°C ஆகவும், 2000 முதல் 2022 வரை மே மாதத்தில் சராசரி வெப்பநிலை 30.3°C ஆகவும் இருந்தது. ஜூன் மாதத்தில், 1960 முதல் 1990 வரை, 29°C ஆகவும், 2002 இல் 30.80°C ஆகவும், 2006 இல் 30°C ஆகவும் இருந்தது. 1960முதல் 1990 வரை ஜூலையில், இது 28.6°C ஆகவும், 1999 இல் 31.3°C ஆகவும், 29.4°C ஆகவும் இருந்தது. 2000, 2001 ஆண்டுகளில் 29.3°C ஆகவும், 2002 இல் 29.3°C ஆகவும், 2003 இல் 30.1°C ஆகவும், 2009 இல் 29.9°C ஆகவும் இருந்தது. 1960 முதல் 1990 வரை ஒகஸ்டில் சராசரி வெப்பநிலை 28.8°C ஆக உள்ளது. இருப்பினும், 1999 இல் 31.2°C ஆகவும், 2001 இல் 28.9°C ஆகவும், 2004 இல் 29.4°C ஆகவும், 2005 இல் 29.5°C ஆகவும், 2006 இல் 29.5°C ஆகவும் இருந்தது.

மேற்கூறிய மாதங்கள் வடக்கு மாகாணத்தின் வறண்ட மாதங்களாகும். 1990 களுக்குப் பிறகு இந்தக் காலகட்டங்களில் வெப்பநிலை அதிகரித்தாலும் சராசரியாக மே மாதத்தில் 0.28°C ஆகவும், ஜூன் மாதத்தில் 0.21°C ஆகவும், ஜூலையில் 0.28°C ஆகவும், ஒகஸ்டில் 0.3°C ஆகவும் அதிகரித்துள்ளது.

இவை வடக்கு மாகாணத்தில் மழை வீழ்ச்சியற்ற மாதங்களாக காணப்படுகின்ற அதே வேளை இம் மாதங்களே ஆண்டின் அதி கூடிய வெப்பநிலையைப் பெறுகின்ற மாதங்களாகும். இக் காலப்பகுதியில் இலங்கையினுடைய தெற்கு மற்றும் மேற்கு பிராந்தியங்கள் அதிக அளவிலான மழை வீழ்ச்சியை தென்மேற்கு பருவக்காற்று மூலம் பெறுகின்றன. இக் காலப்பகுதியில் வடக்கு மாகாணம் வறண்ட காற்றை எதிர் கொள்வதோடு வெப்பநிலையையும் உயர்வாகப் பெறுகின்றது; ஆவியாக்கத்தினுடைய அளவும் உயர்வாகவே காணப்படுகின்றது. வடக்கு மாகாணத்தினுடைய நீர் வளங்களைப் பொறுத்தவரையில் மிக அதிகளவான நீர்ப் பற்றாக்குறை நிலவும் காலமாகவும் இக் காலங்களே அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக ஜூலை மாதமே வடக்கு மாகாணத்தின் அதிகூடிய வெப்பநிலையைப் பெறுகின்ற மாதமாகக் காணப்படுகின்றது. இக் காலப்பகுதியின் மழை வீழ்ச்சியும், இந்த நான்கு மாதங்களுக்கும் சேர்த்ததாக, 100 மில்லி மீட்டரை விடக் குறைவாகவே உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


## செப்டம்பர் முதல் டிசம்பர் வரை வெப்பநிலை மாறுபாடுகள்

செப்டம்பர் மற்றும் டிசம்பர் இடையே வெப்பநிலையில் அதிக வேறுபாடுகள் இல்லை. இருப்பினும், 1960 முதல் 1990 வரை செப்டம்பரில் வெப்பநிலை 28.3 பாகை செல்சியஸ் ஆக இருந்தது. பின்னர் அது 1990 முதல் 2022 வரையான காலப்பகுதியில் அதிகரித்திருக்கின்றது. 1999 இல் 30.7°C ஆகவும், 2001 இல் 29.1°C ஆகவும், 2003 இல் 29.7°C ஆகவும், 2006 இல் 29.2°C ஆகவும் இருந்தது. 19611990 காலகட்டத்தில் செப்டம்பர் மாத சராசரி வெப்பநிலை 28.3°C ஆக காணப்பட்டது. 1930 முதல் 2022 வரையான காலப்பகுதியில், வெப்பநிலை சராசரியாக 0.30 பாகை செல்சியஸ் இனால் அதிகரித்துள்ளது. ஒக்டோபர் மாத வெப்பநிலையும் 0.34°C அதிகரித்தது. 1930 முதல் 1960 வரை 27.7°C ஆகவும், 1960 முதல் 1990 வரையான காலப்பகுதியில் இது 28°C ஆகவும், 1990 முதல் 2022 வரை இது 30.03°C ஆகவும் உயர்ந்துள்ளது. நவம்பர் மாத

*வெப்பநிலை **1960** முதல் **1990** வரை **26.9**°C ஆகவும், **1990** முதல் **2022** வரை **27.2**°C ஆகவும் அதிகரித்துள்ளது. **1930** முதல் **1960** வரை டிசம்பர் மாத வெப்பநிலை **25.8**°C ஆகவும், **1960** முதல் **1990** வரை **26.3**°C ஆகவும், **1990** முதல் **2022** வரையான காலப்பகுதியில் இது **26.8**°C ஆகவும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

### வெப்பச்சலன காலத்தில் அதிக வெப்பநிலை

*வட இலங்கையில் வெப்பச்சலன மாதங்களில் சராசரி மாத வெப்பநிலை ஏனைய மாதங்களை விட அதிகமாக இருப்பதாக பகுப்பாய்வு முடிவுகள் காட்டுகின்றன (படம் 6.8). மேலும், வடக்கு மாகாணத்தின் வெப்பமான மாதங்கள், வெப்பச்சலனக் காலத்தின் கீழ் வருகிறது. எடுத்துக்காட்டாக, ஜூலை மாதம் வட பிராந்தியத்தில் வெப்பமான மாதமாக உள்ளது. ஆனால் வெப்பச்சலன செயல் முறையே ஜூலையின் அதிக வெப்பநிலைக்கு முக்கிய காரணமாகும். வடக்கு மாகாணத்தின் அனைத்துப் பகுதிகளும் வெப்பச்சலன காலங்களில் குறிப்பிட்டளவு மழையைப் பெறுகின்றன. எனினும் பிரதேசங்களுக்கிடையில் இதில் அதிக வேறுபாடு காணப்படுகின்றது (Somasundaram et al., 2020).*




*படம் 6.8. வடக்கு மாகாணத்தின் வெப்பச்சலன மாதங்களின் சராசரி வெப்பநிலைப் போக்கு*

**வெப்பநிலையின் போக்கு பற்றிய பகுப்பாய்வுகளின் அடிப்படையில் வடமாகாணத்தின் வெப்பநிலையின் போக்குகள் பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. வடக்குப் பிராந்தியத்தின் காலநிலைச் சூழ்நிலையில் வெப்பநிலை இன்றியமையாத ஒன்றாகும். வடக்கு மாகாணம் வெப்பமண்டலப் பகுதியில் அமைந்துள்ளது. ஆண்டு முழுவதும் சூரியக் கதிர்வீச்சை நேரடியாகப் பெறுவதால் வெப்பநிலை அதிகமாக இருக்கும். இருப்பினும், சில மாதங்களில் அதிகமாகவும், சில மாதங்களில் குறைவாகவும் இருக்கும்.**

*பொதுவாக, இலங்கையின் வடக்குப் பிராந்தியத்தில் பகல் மற்றும் இரவு வெப்பநிலைகளுக்கு இடையிலான வெப்பநிலை அளவில் மாறுபாடுகளை நாம் அவதானிக்கலாம். இது பகல் மற்றும் இரவு இடையே தீவிர வானிலை மாறுபாடுகளை உருவாக்குகிறது. வட மாகாணத்தின் பகல் இரவு வளிமண்டல வெப்பநிலை மாறுபாடுகள் சீரான வானிலை அமைப்பை பாதிக்கிறது. இந்த வெப்பநிலை மாறுபாடுகள் கடலோரப் பகுதிகளில் காற்றில் வேக மாறுபாடுகளை உருவாக்குகின்றன. இது நிலையான நிலகடல் காற்று திசைகள் மற்றும் வேகத்தைச் சீர்குலைக்கிறது. மேலும், இந்த நிலைமைகள் மீன்பிடி நடவடிக்கைகளையும் விவசாய நடவடிக்கைகளையும் பாதிக்கின்றன.*

*(தொடரும்)*

முதலாளி வர்க்கம் வசதியாக வாழ தம் வாழ்க்கையைத் தியாகம் செய்த மலையகத் தமிழ் மக்கள் தாது வருடப் பஞ்சத்தின் போது தமிழகத்திலிருந்து பல நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அண்மை நாடான இலங்கைக்கும் அழைத்துவரப்பட்ட இம் மக்கள் ஏமாற்றப்பட்டே அழைத்துவரப்பட்டதாக வரலாறு கூறுகின்றது. இந்த நாட்டிலே உழைத்து இந்த நாட்டின் சகல மக்களுக்காகவும் தங்களை மாய்த்துக் கொண்ட இலங்கை மலையகத் தமிழ் சமூகம் 200 வருடங்களாக அடையாளச் சிக்கலைச் சந்தித்து வருகிறது. மலையகத் தமிழர்களின் அவலங்களையும் கடந்த காலத்தின் துன்பியல் சுவடுகளையும் அனுபவங்களாகக் கொண்டு, எதிர்காலத்தில் இச் சமூகம் தனியான ஓர் தேசிய இனமாக அங்கீகரிக்கப்படுவதையும், சுதந்திரமான வாழ்க்கையை நோக்கி நகருவதையும் நோக்கமாகக் கொண்டு ”இலங்கை மலையகத் தமிழ் மக்களின் இன அடையாளச் சர்ச்சை : 200 வருடங்கள் என்னும் இத் தொடர் அமைகின்றது.




சை. கிங்ஸ்லி கோமஸ்

அரச உத்தியோகத்தராகப் பணியாற்றும் சை. கிங்ஸ்லி கோமஸ் வீரகேசரி, தினக்குரல், தாயகம் (யாழ்பாணம்), புது வசந்தம் (யாழ்ப்பாணம்) ஆகிய பத்திரிகைகளின் கொட்டகலைக்கான மேலதிக நிருபருமாவார். கட்டுரையாளர், விமர்சகர், சிறுகதை எழுத்தாளர், திரைப்படத் தயாரிப்பாளர், குறும்பட இயக்குனர் என பன்முக ஆளுமை கொண்டவர். 'The Dark Nest' எனும் இவரது குறுந்திரைப்படத்திற்கு பெண்கள் ஊடக மையத்தின் (இலங்கை) 2023 ஆம் ஆண்டிற்கான விஷேட விருது கிடைத்திருக்கின்றது. ஊடறு, பெண்ணியா, காக்கைச் சிறகினிலே (தமிழ்நாடு), ஜித்தன் (தமிழ் நாடு) போன்ற பிற நாட்டுப் பத்திரிகைகளிலும் எழுதி வருகிறார். மலையக வரலாறு, சமூகவியல், அரசியல் சார்ந்த இவரது எழுத்துகள் குறிப்பிடத்தக்கவை.


# இலங்கையில் பெருந்தோட்டத் தொழிலாளர் வர்க்கத்தின் ஆரம்பம்

தொழிலாளர்கள் தங்களின் ஊதியத்தைக் கொண்டு வாழ முடியாத நிலைமையில் போராட்டங்கள் ஆரம்பமாகும் என்று அனுபவங்கள் கூறுகின்றன. தொழிலாளர் எழுச்சி என்பது விவசாயிகளின் வளர்ச்சியையும் போராட்டங்களையும் பார்க்கிலும் வித்தியாசமானதாகும். தொழில் வழங்குநர்களான முதலாளி வர்க்கத்தினருக்கு எதிராக வளர்ச்சி அடைந்த ஒரு சமூகக் கட்டமைப்பாக தொழிலாளர் வர்க்கமும் அவர்களின் போராட்டங்களும் காணப்படுகின்றன.

தொழிலாளர் வர்க்கமானது இலங்கையின் அரச காலத்தில் இருந்து வந்ததாக காணப்படுகின்றது. ஆனாலும் அன்றைய நிலைமை சாதிய ரீதியாகவே காணப்பட்டது. காலனித்துவ ஆட்சியாளர்களினால் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்காக தென்னிந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட தொழிலாளர்களின் வருகையுடனே இலங்கையின் அரசியல் வரலாற்றில் தொழிலாளர்கள் என்ற வார்த்தைப் பிரயோகமும் ஆரம்பமாகிறது. இத்தோடு சேர்த்து வர்க்கக் கட்டமைப்பும் நவீன தொழிலாளர் படையும் தோற்றம் பெற்றது. தொடர்ந்து, தொழிலாளர்கள் முன்னெடுத்த வேலை நிறுத்தப் போராட்டங்கள், தொழிற்சங்கங்களை நிர்மாணிப்பதற்கான அடித்தளங்கள் என்பவற்றோடு தொழிலாளர் வர்க்கத்தினர் முன்னெடுத்த புரட்சிகரச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.

பிரித்தானிய பணக்கார வர்க்கம் இவர்களுக்குச் சேவகம் செய்த




Image Source - www.teafarerteas.com

சுதேசிய பணக்கார வர்க்கம் என்பவற்றுடன் நகர்ப்புறம் சார்ந்த தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள் ஆகிய மிகப் பிரதானமான வகுப்புக்கள் நாட்டில் தோற்றம் பெற்றன. இலங்கையின் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வருகையும் அவர்களின் வாழ்வியலுமே எமது நாட்டில் தொழிலாளர்கள் என்ற பதத்தினை மக்கள் மத்தியில் பரவலடைய செய்தது என்றால் மிகை ஆகாது. இலங்கையின் பணக்கார வர்க்கம் என்ற கட்டமைப்பு தோட்டத் தொழிலாளர்களின் வருகையாலும் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையுடனான உப வியாபாரங்களாலும் தோற்றம் பெற்றது. 1830 ஆம் ஆண்டு துவங்கி 1880 ஆம் ஆண்டு வரை கோப்பி பயிர்ச்செய்கை பிரித்தானியாவின் உயர் வர்க்கத்தினரின் தேவை கருதி ஆரம்பிக்கப்பட்ட போதும், 1870 ஆம் ஆண்டிலேயே ஐரோப்பிய தனவந்தர்கள் முகம் கொடுத்த பொருளாதார நெருக்கடி காரணமாக ஐரோப்பியப் பொருளாதாரம் நிறுவனமயப்படுத்தப்பட்டது. அதுவரைக்கும் ஐரோப்பிய பொருளாதார கட்டமைப்பு நேர்த்தியான முகாமைத்துவ முறைமையினை கொண்டிருக்கவில்லை.

பெருந்தோட்ட பயிர் செய்வதற்கான அதிகாரத்தினை இலங்கையிலும் அறிமுகப்படுத்தியதுடன் பிரிட்டிஷ் தயாரிப்புகள் இலங்கை வர்த்தகத்தில் பிரதான இடத்தினைப் பெற்றன. “மேட் இன் இங்லாண்ட்” என்ற அடையாளத்துடனான பொருட்கள் இறக்குமதியானமை தேசிய உற்பத்தியாளர்களுக்கு பெரும் அச்சுறுத்தலானது. 1930 ஆம் ஆண்டு இலங்கையின் சுய உற்பத்திகளாக சிகரெட், சவர்க்காரம், மெழுகுவர்த்தி, ஐஸ்கட்டிகள், குளிர்பானங்கள், விளக்குகள் போன்ற உற்பத்தி பொருட்களே உற்பத்தி செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ் உற்பத்திகள் ஐரோப்பியர்களின் நிறுவனங்கள் ஊடாகவே உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இத்துடன் புதிய தொழிலாளர்களின் உருவாக்கம் இலங்கையின் தலைநகர் பகுதியில் உருவாகியது. ஆனால்

இவை தவிர்ந்த வேறு பொருளாதார நடவடிக்கைகள், பெருந்தோட்டப் பொருளாதாரத்துடன் தொடர்புபட்டவையாகவே காணப்பட்டன. இதில் பிரதானமாக, தேயிலைப் பயிர்ச்செய்கையுடன் தொடர்புபட்ட போக்குவரத்து அபிவிருத்தியின் பிரதான அங்கமான புகையிரதப் பாதைகளும் அவற்றை முகாமை செய்த அரச தொழிற்சாலைகளும் நிறுவனங்களும் அதிகமாகக் காணப்பட்டன. மேலும் துறைமுகங்களுடன் தொடர்புபட்ட தொழில் நிலையங்களும் காணப்பட்டுள்ளன. தேயிலைத் தொழிற்சாலைகளின் இயந்திர உபகரணங்களை பழுது பார்க்கும் நிறுவனங்களும் தென்னை, தேயிலை போன்ற விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களும் அதிகமாகக் காணப்பட்டன. அக் காலகட்டத்தில் காணப்பட்ட ஆடைத் தொழிற்சாலை இந்திய நிறுவனமாகக் காணப்பட்டதுடன் தீக்குச்சி, பீடி, பலகையில் செய்த வீட்டுப் பாவனைப் பொருட்கள் போன்ற சிறு கைத்தொழில்கள் உள்நாட்டு வியாபாரிகளுக்கு சொந்தமானதாகக் காணப்பட்டது. மிகப் பெரிய இலாபகரமான வியாபார நிறுவனங்கள் ஆங்கிலேயக் கம்பெனிகளுக்கும், சில இந்தியக் கம்பெனிகளுக்கும் சொந்தமானவையாகக் காணப்பட்டன.

இந் நாட்டின் வளங்களைச் சூறையாடுவதற்காக குறைந்த கூலிக்கு தொழிலாளர்களைத் தேட வேண்டிய கட்டாயம் காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டது. தேயிலை, கோப்பி பயிர்ச் செய்கைக்காக தமிழகத்தில் காணி இல்லாத ஏழைகளைத் தேடிப்பிடித்தனர். நகர்ப்புறத் தொழிற்சாலைகளின் தொழிலாளர்களாக சிங்கள, தமிழ், மலையாள இனங்களைச் சேர்ந்தவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

இவ்வாறான காலத்தில் தான் இன, மத, சாதி, பிரதேசம் ஆகிய வேற்றுமைகளுடைய மக்களை ஒன்றிணைத்த புதிய தொழிலாளர் படை உருவானது. அதிகமான தொழிலாளர்கள் மலையகத் தோட்டப்புறங்களில் செறிவாக வாழ்ந்தனர். தொழிலாளர்களின் தொழிற்சங்கப் போராட்ட வளர்ச்சியானது தலைநகரில் வலுப் பெற்றது.

## தோட்டத் தொழிலாளர்கள் ஓர் அறிமுகம்

சிங்களத் தொழிலாளர்கள் தங்கி இருந்து வேலை செய்ய விரும்பாதவர்களாகவும் அன்றாடம் தங்களின் வீடுகளுக்குச் செல்ல முற்படுபவர்களாகவும் இருந்தமையால் இவர்களை தோட்டத் தொழிலாளர்களாக நியமிக்க காலனித்துவ கம்பெனிகள் இணங்கவில்லை. மேலும், சிங்களத் தொழிலாளர்கள் நிலங்களுக்குச் சொந்தக்காரர்களாக காணப்பட்டதால், பெருந்தோட்டங்களில் வேலை செய்ய விரும்பவில்லை. இவர்கள் சாதி ரீதியாக ஒடுக்கப்பட்டவர்களாக வாழ்ந்தாலும் விவசாய நிலங்களையும் வாழ்விடங்களையும் விவசாயத்துடனான வாழ்வியலையும் கொண்ட மக்கள் கூட்டமாக காணப்பட்டனர். பிரித்தானியக் கம்பெனிகளின் உழைப்புச் சுரண்டலுக்கு ஏதுவான நில உரிமையற்ற மக்கள் இலங்கையில் இல்லாத காரணத்தினால் தென் இந்தியாவில் இருந்து நிலமற்ற ஏழை விவசாய நாட்கூலி மக்கள் கூட்டத்தினை அழைத்து வர ஆங்கிலேயர்கள் முற்பட்டனர். தென்னிந்தியாவில் ஏற்பட்ட பஞ்சத்தை சாதகமாக்கிய பிரித்தானியர்கள், 1825 ஆம் ஆண்டு தொடக்கம், இந்தியர்களை இலங்கை பெருந் தோட்டத் தொழிலாளர்களாக கொண்டு வரத் தொடங்கினர். 1931 இல் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை ஏழு இலட்சமாக அதிகரித்தது. ஆரம்ப காலங்களில் கங்காணிகள் அல்லது ஆள்கட்டிகளால் தொழிலாளர்கள் அழைத்து வரப்பட்டனர்.

## புலம்பெயர் தொழிலாளர்கள்

1827 ஆம் ஆண்டு முதலாவது தொழிலாளர் கூட்டம் இந்தியாவில் இருந்து புலம் பெயர்ந்து வந்தது. இவர்களின் எண்ணிக்கை சுமார் பத்தாயிரம் என்று கூறப்படுகிறது. மலையகத்திற்கு புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் அவர்கள் பயணித்த பாதைகளை அவர்களே வெட்டிச் செப்பனிட்டு பயணித்தார்கள். உலகப் பொருளாதாரச் சந்தையின் தேவை கருதி புலம்பெயர் தொழிலாளர்கள் அதிகமாகக் கொண்டு வரப்பட்டதாகவும், மலையகத் தொழிலாளர்களே அவ்வாறு அதிகமாக

புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் என்றும் கூறப்படுகின்றது.

## கடத்தி வரப்பட்ட தொழிலாளர்கள்

தொழிலாளர்கள் அதிகமாக ஆள் கட்டிகளால் அல்லது கங்காணிமார்களால் அழைத்துவரப்பட்டதாக கூறப்பட்டாலும், அந்த முறைமை ஆள் கடத்தல் முறைமைக்குள்ளேயே அடங்குகிறது என்பதற்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன. பலர் மோசமான பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு அழைத்துவரப்பட்டனர். சில வசதியாக வாழ்ந்தவர்கள் கூட ஆசை வார்த்தைகளால் மயங்கி வந்ததற்குப் பல சான்றுகள் காணப்படுகின்றன.

*“சீரான சீமை விட்டு*
*சீரழிய காடு வந்தோம்*
*கூடை தலை மேலே*
*குடி வாழ்க்கை கானகத்தில்”*

என்ற எமது நாட்டார் பாடலும்,

*“ஊரான ஊரிழந்தேன்*
*ஒத்தப்பனை தோப்பிழந்தேன்*
*பேரான கண்டியில*
*பெத்த தாயை நான் மறந்தேன்”*

என்ற பாடலும் வசதியான மானிடரும் தொழில் செய்ய இங்கே வந்ததற்கான சான்றுகளாகக் காணப்படுகின்றன.

*“சோளம் குரக்கன்*
*கம்பு கேவரு*
*மொச்சை மறந்து போச்சே,*
*கண்டி சீமை துரை*
*நெல்லு சோறு*
*கோதுமை தின்னல் ஆச்சே”*

எனும் பாடலும் மேற்சொன்ன கருத்திற்கான சான்றாகும்.

## தாது வருடப் பஞ்சம்

1876 தொடக்கம் 1978 வரை சென்னை மாகாணத்தை கடும் பஞ்சம் பீடித்தது. இதனை பெரும் பஞ்சம், தென்னிந்தியப் பெரும் பஞ்சம், சென்னை மாகாணப் பஞ்சம், தாது வருடப் பஞ்சம் எனப் பல பெயர்களில் அழைத்தனர். இரு ஆண்டுகள் நீடித்த இப் பஞ்சம் முதலாண்டில் தென்னிந்தியப் பகுதிகளைத் தாக்கியது. இப் பஞ்சங்களுக்கு ஆங்கிலேயரின் அடக்கு முறையும் பிரதான காரணம் எனக் கூறப்படுகின்றது. 1640 முதல் 1907 வரை சுமார் 17 முறை சென்னை மாகாணத்தை பஞ்சங்கள் வாட்டிய போதும் 1877 ஆம் ஆண்டின் பஞ்சம் அதிக உயிர்களை காவு கொண்ட பஞ்சம் என்று கூறுவதில் பிழையில்லை. கடுமையான நிலவரி விதிப்பு, விளைந்த பயிர்களை இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்தமை என்று உணவு உற்பத்தி பிரிட்டிஷாரின் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டதன் விளைவாக தாது வருடப் பஞ்சம் மக்களை அதிகமாகப் பாதித்தது. வறட்சி ஏற்பட்டபோது மக்கள் விதை நெல்லைக் கூட உணவாக்கி உண்ண வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆயினும் கூட பிரிட்டிஷ் அரசாங்கம் தனது நாட்டிற்கான தானிய ஏற்றுமதியை நிறுத்தவில்லை. பஞ்சத்தை பயன்படுத்தி தானிய சிறு வியாபாரத்தை முற்றாகத் தடை செய்த ஆங்கிலச் சர்வாதிகார ஆட்சி சிறு வணிகங்களை முற்றிலும் தனதாக்கிக் கொண்டது. பிரிட்டிஷ் அரசு வரி செலுத்த முடியாத உள்நாட்டு உற்பத்தியாளர்கள், விவசாயிகள் ஆகியோரின் ஆடு, மாடுகளைக் கூட பறிமுதல் செய்து கொண்டது. பஞ்ச காலத்தில் மக்கள் வேலை வாய்ப்பினை முழுதாக இழந்தனர். வருமானமற்ற நிலையில் நகைகள், உடைமைகள் என்பவற்றை விற்று உணவு உண்டனர். பணம் கரைந்ததும் நாடோடி வாழ்க்கைக்கு பெரும்பாலானோர்




Image Source - post-card-diary.blogspot.co

தள்ளப்பட்டனர். யாசகர்கள் ஆக்கப்பட்ட மக்கள், கூட்டம் கூட்டமாக பெருநகரங்களை நோக்கி புலம்பெயரத் தொடங்கினர். ஒரு துண்டு ரொட்டிக்காகச் சண்டை போட்ட வரலாறுகளும் கசப்பான பதிவுகளாகக் கூறப்படுகின்றது. சந்தைக்கு தானியங்கள் வராததன் காரணத்தால் பெரு முதலாளிகளின் கைகள் ஓங்கின. இவர்கள் ஆங்கில அரசாங்கத்தின் அடிமைகளாகவே வாழ்ந்த வரலாறுகளும் உண்டு. பர்மாவிலிருந்து தானியம் இறக்குமதி செய்யும் வியாபாரத்தில் கள்ளச் சந்தை, பொருட்களைப் பதுக்கி விற்பனை செய்தல், கொள்ளை இலாபம், கருப்புக் கடை வியாபாரம் என்பவற்றை உள்ளூர் வியாபாரிகள் ஆரம்பித்தனர். கிராமங்களில் இருந்து மக்கள் நடைபயணமாக பெருநகரங்களைத் தேடி பயணிக்கத் தொடங்கிய காலகட்டத்தில் வயோதிபர்கள், பெண்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள், நோய்வாய்ப்பட்டவர்கள் பாதி வழியிலேயே இறந்து வீழ்ந்த நிலைமையும் காணப்பட்டது. ஊர்வன, பறப்பன என அனைத்தையும் உண்ணத் தொடங்கினர். காட்டுக் கிழங்குகள், விஷக் கிழங்குகள், விஷக் கொட்டைகளை உண்டதனால் பலர் நோயுற்று இறந்தனர். எப்படியாவது உயிர் வாழ வேண்டும் என்ற எண்ணத்திற்காக இலங்கை, மலேசியா, பர்மா, பிஜி, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளுக்கு கொத்தடிமைகளாகச் சென்றனர். இலங்கை மலையகத் தமிழர்களின் புலம்பெயர்வில் தாது வருடப் பஞ்சம் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது.



தேயிலை ஏற்றுமதி செய்யப்படுதல்

Image Source - www.basilurtea.com

**நாட்டின் வளங்களைச் சூறையாடுவதற்காக குறைந்த கூலிக்கு தொழிலாளர்களைத் தேட வேண்டிய கட்டாயம் காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு ஏற்பட்டது. தேயிலை, கோப்பி பயிர்ச் செய்கைக்காக தமிழகத்தில் காணி இல்லாத ஏழைகளைத் தேடிப்பிடித்தனர். நகர்ப்புறத் தொழிற்சாலைகளின் தொழிலாளர்களாக சிங்கள, தமிழ், மலையாள இனங்களைச் சேர்ந்தவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.**

## வஞ்சனை செய்த கங்காணிகள்

கங்காணி என்பதை மலேசியாவில் 'கிராணி' என்று கூறுவர். இந்த கங்காணிமார் பற்றிய பல கசப்பான வரலாற்றுக் கதைகள் காணப்படுகின்றன. தென்னிந்தியாவிலிருந்து மக்களைத் தெரிவு செய்து கடத்தி வரும் செயலை சிறப்பாகச் செய்ய இந்த கங்காணிகளை ஆங்கிலேயர்கள் விசேடமாகத் தெரிவு செய்தனர்.

திருச்சியில் இருந்து ராமேஸ்வரம் 150 மைல் தூரம். அந்தத் தூரத்தை நடந்தே வந்த எம் மக்கள் (தலவாக்கலை பிரதேசத்தில் அதிகமான தொழிலாளர்கள் திருச்சி மாவட்டம், முருக்கன் கிராமத்தில் இருந்து வந்தவர்கள்.) ராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னார் வரை முப்பது மைல் தூரம் கப்பலில் வந்தார்கள்.

இந்தக் கப்பல் பயணங்களின் போதும் மக்கள் பட்ட துன்பங்கள் சொல்லில் அடங்காதவை. மக்களோடு கடலில் மூழ்கிய கப்பல்கள், புயல் காற்று காரணமாக திசை தெரியாமல் போனவர்கள், கொடிய நோயினால் பாதிக்கப்பட்டு கடலில் தூக்கி எறியப்பட்டவர்கள் என்று சோகக் கதைகள் ஏராளமாக வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது.

தலைமன்னாரில் இருந்து மாத்தளைக்கான நூற்று எண்பது மைல் தூரத்தை கடந்து வந்த மக்கள் மாத்தளை நகரிலே சிகிச்சை முகாம்களில் நோய் எதிர்ப்புச் சிகிச்சையைப் பெற்றபின் அங்கிருந்து பல திசைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளனர். மாத்தளையிலிருந்து தலவாக்கலைக்கு கிட்டத்தட்ட 70 மைல் தூரம் நடைபயணமாக வந்த மக்களின் மொத்த நடை பயணத் தூரம் கிட்டத்தட்ட 400 மைல்கள் ஆகும். காடுகளை வெட்டி பாதைகள் அமைத்து, விலங்குகளை விரட்டி உணவு தேடி உண்டு, நீர் தேடிப் பருகி, நச்சுப் பாம்புகள் - குளவிகள் - நுளம்புகள் - அட்டைப் பூச்சிகள் - விஷ ஜந்துகளால் பாதிக்கப்பட்டு இறந்தவர்கள் போக, உயிர் தப்பியவர்களே இறுதியாக மலையகம் வந்து சேர்ந்தனர். இம் மக்களை கொண்டு வந்து சேர்த்த கங்காணிகள் தொடர்பாக விசேடமாக ஆய்வு செய்ய வேண்டியதும் மலையக வரலாற்றின் கட்டாயத் தேவையாகும். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட ஒவ்வொரு தொழிலாளிக்காகவும் கங்காணிமாருக்கு ஆங்கிலேயக் கம்பெனி மற்றும் கிழக்கிந்தியக் கம்பெனியால் பணம் வழங்கப்பட்டது. இந்தக் கங்காணிமார் ஏற்கனவே வெள்ளைக்கார காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு பரிச்சயமானவர்களாகவோ சேவகம் செய்தவர்களாகவோ இருந்தனர். நாட்டையும் நாட்டு மக்களையும் சுரண்டுவதற்காக வெள்ளைக்காரர்களுக்கு உதவி புரிந்து காட்டி கொடுத்த ஒரு மக்கள் கூட்டத்தையே காலனித்துவ ஆட்சியாளர்கள் கங்காணிகளாகத் தெரிவு செய்திருக்க வேண்டும்.

மலையகத்தில் இன்று காணப்படும் 'பெரட்டு'




Image Source - www.pureceylontea.com

(*parade*) ஆரம்ப காலங்களில் காலையில் தொழிலாளர்களை கணக்கெடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டதே ஆகும். இதன் போது தொழிலாளர்களின் தலை எண்ணிக்கைக்கு ஏற்ப கங்காணிமாருக்கு பணம் வழங்கப்பட்டுள்ளது. எனவே 'பிரட்டுக்களம்' என்பது ஆங்கிலேய காலம் முதல் இன்று வரை எமது பண்பாட்டோடு இரண்டறக் கலந்த ஒரு விடயமாக அமைந்து வந்துள்ளது. கங்காணிமார் தோட்டத் தொழிலாளர்களை கடனாளியாக வைத்திருந்ததும், வைத்திருப்பதும் ஒரு விதமான அடிமை முறைமையின் மாற்று வடிவம் ஆகும். தொழிலாளர்களுக்கும் கண்காணிகளுக்கும் இடையேயான கொடுக்கல் வாங்கல்கள் அவ்வாறான நவீன அடிமை முறைக்கு சான்றாக அமைந்தது. அன்று முதல் இன்று வரை தோட்டத் தொழிலாளர்கள் கடன் பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். கங்காணிக்கும் தொழிலாளர் படைக்கும் இடையில் காணப்பட்ட கடனே கங்காணிமாரின் மிகப்பெரிய பலமாக அமைந்தது.

மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பாக எழுதப்பட்ட பல ஆவணங்களில், பிறக்கும் போதும் கடனாளியாகப் பிறந்து, வாழ்ந்த போதும் கடனாளியாக வாழ்ந்து, இறக்கும் போதும் கடனாளியாக இறப்பவனே தோட்டத் தொழிலாளி என்று பதியப்பட்டுள்ளன. கங்காணியே தோட்டத்தில் கடன் கொடுக்கும் ஒரே மனிதனாகவும் கடை வைத்திருந்தவனாகவும் மக்களுக்கு பொருட்களை வாங்கி கொடுப்பவனாகவும் காணப்பட்டுள்ளான். இவன் இந்த மக்களை ஏமாற்றி வியாபாரம் செய்தமைக்கு பல வாய்மொழி ஆதாரங்கள் காணப்படுகின்றன. பெரிய கங்காணிமார் தோட்ட நிர்வாகத்திடம் கடன் பெற்று தோட்டங்கள் தோறும் கடைகளை நடத்தி வந்துள்ளனர். தொழிலாளர்களின் கூலியாக கடையிலிருந்த பொருட்கள் வழங்கப்பட்டதுடன், கங்காணியின் கடையில் மாத்திரமே பொருட்களை வாங்க வேண்டிய நிர்ப்பந்தமும் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டது. அவர்கள் எவ்வளவு கடனைக் கொடுக்க வேண்டும் என்ற உண்மையைக் கூட கங்காணி தொழிலாளர்களுக்கு தெரிவிப்பதில்லை. ஆரம்ப காலங்களில் தொழிலாளர்களின் கூலி, ஒரு மாதம் கூலியாகவும் அடுத்த மாதம் கடனை அளவிடும் தொகையாகவும் காணப்பட்டுள்ளது. இது போன்ற விடயங்களிலிருந்து கம்பெனிகளும் கங்காணிமாரும் தொழிலாளர்களை எவ்வாறு சுரண்டினார்கள் என்பது தெளிவாகின்றது.

## கண்டிச் சீமை தந்த ஏமாற்றங்கள்

கண்டிச்சீமை ஓர் சொர்க்கம் என்று பல கற்பனைக் கதைகளைக் கூறி இலங்கைக்கு அழைத்து வரப்பட்ட மலையகத் தொழிலாளர்கள் கண்ட கனவுகள் பொய்த்து போனதற்கு ஆதாரங்களாக பல நாட்டார் வழக்காற்றியல் வாய்மொழி இலக்கியங்கள் காணப்படுகின்றன. "ஊரான ஊரிழந்தேன்....." என்ற நாட்டார் பாடல் கண்டிச் சீமை கொடுத்த ஏமாற்றங்களை எமக்குக் கூறுகின்றது.

1903 ஆம் ஆண்டு பிரித்தானிய பாராளுமன்றம் இலங்கை மலையக மக்களின் கல்வி தொடர்பான தரவுகளைக் கேட்டது. பதிலாக தோட்ட உரிமையாளர் சங்கம், கூலிக்காரர்களுக்கு அத்தியாவசியக் கல்வியினை வழங்க இன்னும் காலம் முதிர்ச்சி அடையவில்லை என்று கூறியது. கூலிக்காரர்களுக்கு கல்வி தேவையில்லை என்பதே இந்தச் சொற்களின் அர்த்தம். கூலிக்காரர்களுக்கு ஏனைய பிரஜைகளுக்கு வழங்கப்படும் கல்வியினை வழங்க இன்னும் காலம் முதிர்ச்சி அடையவில்லை என்னும் வார்த்தைகளில் அவர்களின் வஞ்சனையை இனம் காணக் கூடியதாக உள்ளது.

ஏனைய சமூகங்களுடன் ஒப்பிட்டு நோக்கும் இடத்தில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் மரண வீதம், சிசு மரண வீதம் அதிகமாகக் காணப்பட்டது. இதற்கு காரணம் மந்தபோசனம். நோய்கள் சீக்கிரமாக பரவியது. மலேரியா, யானைக்கால் நோய், அம்மை, வாந்தி பேதி போன்ற கொடுமையான நோய்கள் ஏற்பட்டன. இவைகளுக்கான முறையான மருத்துவ வசதிகள் இல்லாமல் இருந்தது. தோட்ட நிர்வாகம்

**மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் தொடர்பாக எழுதப்பட்ட பல ஆவணங்களில், பிறக்கும் போதும் கடனாளியாகப் பிறந்து, வாழ்ந்த போதும் கடனாளியாக வாழ்ந்து, இறக்கும் போதும் கடனாளியாக இறப்பவனே தோட்டத் தொழிலாளி என்று பதியப்பட்டுள்ளன.**

*தொழிலாளர்களின் ஆரோக்கியத்தில் அக்கறை கொள்ளாததுடன் போதுமான வைத்தியசாலை வசதிகளையும் ஏற்படுத்தவில்லை. வேலைக்கு வராவிட்டால் ஊதியம் இல்லை என்னும் நிலைமை அன்று முதல் இன்று வரை செயலில் காணப்படுகின்றது. உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்றால் வேலைக்கு சென்றே ஆக வேண்டும். கூலிக்காரர்களுக்குச் சொத்து இல்லை; வேலைக்குச் சென்றால் தான் உணவு. சுகயீனம் காரணமாக வேலைக்குப் போகாவிட்டால், குடும்பத்திற்குச் சுமையாகி விடும் நிலைமை உண்டாகும். தொழிலாளர்களின் மரண வீதம் அதிகரித்தது என்பதற்கு ஆதாரமாக மலையக மக்களின் மரணம் தொடர்பான கமிஷன் சபை மூலம் பிரித்தானிய அரசு செய்த ஆய்வுகளைக் குறிப்பிடலாம். 1883 மற்றும் 1891 காலகட்டத்தில் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சென்ற நோயாளர்களில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் உயிரிழப்பு மிக அதிகமாகக் காணப்பட்டதாக தரவுகள் கூறுகின்றன. கல்வி, சுகாதாரம் ஆகிய இரண்டு பிரதான தேவைகளும் மலையக மக்களுக்கு எட்டாக் கனியாகவே காணப்பட்டுள்ளது.*

*1913 அக்டோபர், மார்ச் மாதங்களில் நிவிதிகளை என்னும் தோட்டத்தின் பிரதான பாதையில் தொழிலாளர்கள் ஏழு பேர் மரணம் அடைந்து கிடப்பதாக கிடைத்த தகவலை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கையில் இந்தத் தோட்டத்தில் பலர் நோயுற்றிருப்பது தெரிய வந்தது. 1913 இல் இந்த தோட்டத்தில் 227 மரணங்கள் இடம் பெற்றதாகவும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இந்தத் தோட்டத்தில் வாழ்ந்த மொத்தத் தோட்டத் தொழிலாளர்களில் 24 வீதமானவர்கள் இறந்திருப்பது குறிப்பிடத்தக்கது. 1914 அக்டோபர் மாதம் பின்கந்த தோட்டத்து தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தினரால் இழைக்கப்பட்ட கொடுமைகள் காரணமாகவும், உணவு முறையாக இல்லாததன் காரணத்தினாலும் இடை விலகிச் சென்ற தொழிலாளர்களுக்கு, சேவையை கைவிட்டுச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் தொழிலாளர் சட்டத்தின் அடிப்படையில் வழக்குத் தொடரப்பட்டது. தொழிலாளர்கள் நோய்வாய்ப்பட்டிருந்ததன் காரணத்தினால் அவர்களை நீதிபதி விடுதலை செய்தார். தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களின் ஆரோக்கியம், ஊதியம் தொடர்பாக அக்கறை காட்டவில்லை என்பதனையும் தனது தீர்ப்பில் குறிப்பிட்ட நீதிபதி இதனை அடையாளப்படுத்த வேண்டியது முக்கியம் என்பதையும் குறிப்பிட்டார்.*

*மக்கள் இந்தியாவில் இருந்து இங்கு வந்தபோது '8 x 10' என்ற சிறிய வீட்டுக் கட்டமைப்பிற்ள் தங்களைச் சிறைப்படுத்திக் கொண்டனர். இந்த துன்பியல் வாழ்க்கை முறைமைக்கு தள்ளப்பட்டதானது நவீன அடிமை முறைமையின் மிகவும் கொடூரமான அம்சமாகும். மத்திய மாகாணத்தின் அமுகம் கோரளையின் கூல்போன் தோட்டத்தில் பெரிய கங்காணியாக இருந்து 'கூல்போன் கண்காணி' என்று அழைக்கப்பட்ட கங்காணியால் கட்டப்பட்ட இவ் வகை வீடுகளை இன்றும் காணலாம். இவ் வீடுகளில் கால் நீட்டிப் படுக்க கூட வசதி இருக்காத சீவியத்தை கற்பனை பண்ணிக் கூட பார்க்க முடியாது. தொழிலாளர்கள் தப்பி ஓடிவிடக் கூடாது என்ற காரணத்தினால் கால் நரம்புகள் வெட்டப்பட்டிருக்கின்றன. மலையக மக்கள் ஆபிரிக்க அடிமைகளை விட மோசமாக நடத்தப்பட்டனர் என்றால் மிகை ஆகாது. கண்டி சீமையும் அதன் வாழ்கையும் எமது மக்களுக்கு பெரும் ஏமாற்றமாகவே அமைந்தது.*

*(தொடரும்)*

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தி என்பது அந்நாட்டின் நிலைபேறுகைக்கு ஸ்திரத்தினை வழங்குகின்றது. இலங்கையில் உள்ள வளச் செழிப்பு நாட்டின் அபிவிருத்திக்கு பெரும்பங்காற்றக்கூடியது. இலங்கையின் கால்பங்குக்கும் அதிகமான நிலப்பரப்பை வடக்கு – கிழக்கு மாகாணங்கள் கொண்டுள்ளன. இந்தவகையில் இலங்கையில் வடக்கு – கிழக்கு மாகாணங்களின் நிலப்பரப்பு, அதில் அடையாளப்படுத்தக்கூடிய வளங்கள் அல்லது இதுவரை கண்டறியப்பட்ட வளங்கள் தொடர்பாக தெளிவுடுத்துவதாகவும், அந்த வளங்களின் இப்போதைய பயன்பாடற்ற முறைமையை மாற்றியமைத்து உச்சப்பயனைப் பெறுதல், அதனூடே வடக்கு – கிழக்கின் விவசாயத்துறை, உட்கட்டமைப்பு, கடல்சார் பொருளாதாரம் என்பவற்றை அபிவிருத்தி செய்வது பற்றியும் 'வடக்கு – கிழக்கு மாகாணங்களின் வளங்களும் உள்ளூர்ப் பொருளாதார அபிவிருத்தியும்' என்ற இந்தக் கட்டுரைத் தொடர் விளக்குகின்றது.




அமரசிங்கம்
கேதீஸ்வரன்

பொருளியல் துறையில் சிரேஷ்ட வளவாளராகவும், பயிற்றுனராகவும் செயற்பட்டு வருகின்ற அமரசிங்கம் கேதீஸ்வரன் அவர்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் பிரதி திட்டமிடல் பணிப்பாளராவார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் இளமாணி மற்றும் முதுமாணிப்பட்டம் பெற்ற இவர் 2012ஆம் ஆண்டு 'திட்டமிடல் மூல தத்துவங்கள்' என்ற நூலினை வெளியிட்டுள்ளார்.


# வடக்கு - கிழக்கு மாகாணங்களின் வாழ்வாதாரத்தில் கைத்தொழில்களின் வகிபாகம்

வாழ்வாதாரத் தொழில் முனைவுகளில் பெரிதும் விரும்பப்படுவதும் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டக் கூடியதுமான தொழிற்துறையாக கைத்தொழிற்துறை இருந்து வருகிறது. வளர்ச்சியடைய விரும்பும் எந்தப் பொருளாதாரமும் கைத்தொழிற்துறையின் மீது வளர்ச்சியை ஏற்படுத்தினால் தான் அது நிலைபேறுடைய பொருளாதார வளர்ச்சியாக அமையும். இலங்கையின் தற்போதைய பொருளாதாரக் கொள்கையிலும், முன்னுரிமைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக்கான 7 பிரதான பகுதிகளில், நான்கு துறைகள் கைத்தொழிற் துறை சார்ந்தே காணப்படுகின்றன. பின்வருவன அந்த 07 பிரதான பகுதிகள் :



Image Source - np.gov.lk

1. உணவுப் பாதுகாப்பு (Food Security)
2. வருமான அதிகரிப்பு (Income Generation)
3. வாழ்வாதார அபிவிருத்தி (Livelihood Development)
4. அரசு, தனியார் கூட்டு முதலீடுகளினூடாக



Image Source - www.ft.lk

1. முதலீட்டுச் சந்தர்ப்பங்களை உயர்த்திக் கொள்ளுதல் (Promoting Investment Opportunity through PPP Model)
2. சர்வதேசச் சந்தைத் தேவைப்பாடுகளை நிறைவு செய்யக் கூடிய தொழில்நுட்ப வல்லுநர்களை உருவாக்குதல் (Gener ating Techno crops to cater International Labor Market)
3. மீள் புதுப்பிக்க, சக்தி வளப் பயன்பாட்டினை வலுப்படுத்தல் (Enhancing renewable share in the energy mix)
4. நுண் தொழிலிருந்து சிறிய அளவிலான தொழில் முயற்சியாண்மையை அறிமுகம் செய்வதன் மூலம் பிராந்திய மட்டத்திலான குறித்த உற்பத்தியை வளர்ச்சியடையச் செய்தல் (Introducing Micro to small entrepreneurship based on regional specific product the specific basis)

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கைத்தொழில் துறையினை நிர்ணயம் செய்யும் வளங்களாக இப் பகுதியில் காணப்படும் இயற்கை வளங்களும், கனிய வளங்களின் இருப்பும் இருந்து வருகிறது.

கிழக்கு மாகாணத்தில் சிறிய தொகையில் காணப்படும் பாரிய கைத்தொழில்களாக 'பிறீமா' மா ஆலை, 'பிறீமா' உணவு வசதிகள், மிட்சுபிசி டோக்கியோ சீமெந்து, 'Fuji' சீமெந்து, இயற்கை உயிர் வாயுச் சக்தி ஆலை, இந்திய எண்ணெய், திருமலைக் கப்பல் துறை, கைத்தொழிற் பேட்டை, அம்பாறை நவுகம் புற் கைத்தொழிற் பேட்டைக் கம்பனி ஆகியன இருந்து வருகின்றன. வடக்கு மாகாணத்தில் திக்கம் வடிசாலை, ஆணையிறவு உப்பளம், வடகடல் நிறுவனம், அச்சுவேலிக் கைத்தொழில் பேட்டை, 'Mass Intimate' ஆடைத் தொழிற்சாலைகள், அல்லிப்பளைக் காற்றாலை ஆகிய பாரிய கைத்தொழிற் சாலைகள் இயங்கி வருகின்றன.

வட மாகாணத்தில் 5,344 நுண் மற்றும் சிறிய கைத்தொழில்கள் காணப்படுகின்றன. இதில் 11,177 பேர் நேரடியாக ஈடுபட்டிருக்கின்றனர். நடுத்தர மற்றும் பாரிய கைத்தொழிலாக 260 கைத்தொழில்கள் காணப்படுவதுடன், இதில் 13,791 பேர் நேரடியாகப் பயன்பெற்று வருகின்றனர். இந்த வகையில், வட

மாகாணத்தில் மொத்தமாக 5,604 கைத்தொழில் மையங்களிலிருந்து 24,968 பேர் நேரடியாக நன்மை பெற்று வருகின்றனர். கிழக்கு மாகாணத்தில் 114 சிறிய கைத்தொழில்களில் 114 பேரும், 32 நடுத்தரக் கைத்தொழில்களில் 896 பேரும், 50 பாரியளவிலான கைத்தொழில்களில் 15,904 பேருமாக, மொத்தமாக 196 கைத்தொழில் சாலைகளில் 16,914 பேர் நேரடியாகத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். இதனை மாவட்ட அடிப்படையில் பிரித்து நோக்கின், யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறிய தொழில் முனைவில், 2,238 மையங்களில் 3,854 பேர் பங்கு பற்றுவதுடன், நடுத்தர மற்றும் பாரிய கைத்தொழில் சார்ந்த 65 நிலையங்களில் 1,744 பேர் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். கிளிநொச்சி மாவட்டத்தில், 949 தொழில்கள் சிறிய அளவில் செயல்படுவதுடன், 1,708 பேர் இதில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர். இங்கு 18 நடுத்தர மற்றும் பாரிய தொழில் முயற்சிகள் இயங்குவதுடன், இதில் 3,721 பேர் நேரடியாக ஈடுபட்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் 221 சிறிய தொழில் முயற்சிகள் இயங்கி வருவதுடன், இதில் நேரடியாக 1,269 பேர் ஈடுபட்டுள்ளனர். இங்கு 17 நடுத்தர மற்றும் பாரிய தொழில்கள் இயங்கி வருவதுடன், இதில் 2,420 பேர் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இதே போல் வவுனியா மாவட்டத்தில் 615 சிறிய தொழில் முயற்சிகளில் 1,640 பேர் ஈடுபட்டிருப்பதுடன், 07 பாரிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளில் 4,011 பேர் ஈடுபட்டுள்ளனர். இதே போல் மன்னார் மாவட்டத்தில் 1,301 சிறிய தொழில் முயற்சிகளில் 2,706 பேர் நேரடியாக ஈடுபட்டுள்ளதுடன், பாரிய மற்றும் நடுத்தரத் தொழில் முனைவுகளில் 1,895 பேர் நேரடியாகப் பயன்பெற்று வருகின்றனர்.

மாகாணத் திட்டமிடல் செயலகத்தின் புள்ளிவிபரத் தகவல்களின்படி, கிழக்கு மாகாணத்தின் திருகோணமலையில் 25 சிறிய கைத்தொழில்களில் 28 பேரும், 8 நடுத்தரக் கைத்தொழில் மையங்களில் 851 முயற்சியாளர்களும், 20 பாரிய கைத்தொழிற் சாலைகளில் 4,994 பேரும் நேரடியாக ஈடுபட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 55 சிறிய கைத்தொழில் மையங்களில் 45 பேரும், 07 நடுத்தரக் கைத்தொழில் மையங்களில் 285 பேரும், 17 பாரிய கைத்தொழிற் சாலைகளில் 6,442 பேரும் தொழிலில் ஈடுபடுகின்றனர். அம்பாறை மாவட்டத்தில் 34 சிறிய கைத்தொழில் மையங்களில் 41 பேரும், 7 நடுத்தரக் கைத்தொழில் மையங்களில் 145 பேரும், 13 பாரிய கைத்தொழிற் சாலைகளில் 4,468 பேரும் நேரடியாக இணைக்கப்பட்டிருக்கின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உணவு - குடிபானங்களின் உற்பத்தி, புடவை - ஆடைகள் உற்பத்தி, தோற் பொருட்களின் உற்பத்தி, சுரங்கத் தொழில், மரம் சார்ந்த உற்பத்திகள், காகிதாதிகள் சார்ந்த உற்பத்திகள், இராசாயன உற்பத்திகள், இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் சார்ந்த உற்பத்திகள், இரும்பு சார் உற்பத்திகள், அட்டவணைப்படுத்தப்படாத ஏனைய பொருட்கள், சீமெந்து சார்ந்த உற்பத்திகள், அழகுக்கலை தொழில்நுட்பம், தும்புசார் கைத்தொழில்கள், பனை சார் கைத்தொழில்கள், மட்பாண்டக் கைத்தொழில்கள் போன்ற தொழில்கள் ஓரளவு தகமையுடன் இயங்கிக் கொண்டிருக்கிறன.

### கைத்தொழிற் பேட்டைகள்

அரசின் ஒதுக்கீட்டுக் காணிகளில், கைத்தொழிற் துறையின் விருத்தியினை மையமாகக் கொண்டு தனித்தனியாக தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு, அவற்றுக்குத் தேவையான உட்கட்டுமான வசதிகள், நீர் - கழிவகற்றல் வசதிகள், மின்சார வசதிகள் போன்றவற்றை ஏற்பாடு செய்து, ஆர்வமுடைய பல்வேறு முயற்சியாளர்களை ஒரே மையத்தில் செயல்பட வைத்து, குறைந்த செலவில் தொழிலை முன்னெடுக்கும் நோக்கில் முன்வைக்கப்பட்ட கொள்கையே கைத்தொழிற் பேட்டைகள் ஆகும். இக் கைத்தொழிற் பேட்டைகள் வடக்கு கிழக்கு மாகாணத்திலும் உருவாக்கப்பட்டுள்ளன. திருகோணமலையில் கப்பல் துறையில் 50 ஏக்கர் விஸ்தீரணக் கைத்தொழிற் பேட்டையில் 08 நிறுவனங்கள் செயற்படுகின்றன. இங்கு 851 பேர் வேலைவாய்ப்பை பெற்றுள்ளனர். இதே போல் மட்டக்களப்பில் திராய்மடு கைத்தொழில் பேட்டை 24 ஏக்கர் நிலத்தில் செயற்படுகிறது.

இங்கு 07 நிறுவனங்கள் செயற்படுவதுடன் 300 வரையான பணியாளர்கள் வேலை பெற்றுள்ளனர். அம்பாறை மாவட்டத்தில் நவகம்புர கைத்தொழிற் பேட்டை 20 ஏக்கர் விஸ்தீரணத்தில் செயற்படுகிறது. இங்கு 07 நிறுவனங்கள் செயற்படுவதுடன் 45 பேர் நேரடி வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

இதே போல் யாழ்ப்பாணம், அச்சுவேலியில் 40 ஏக்கர் விஸ்தீரணத்தில் கைத்தொழிற் பேட்டை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு 200 பேர் வரையிலானோர் தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். 87 நிறுவனங்கள் இங்கு செயற்பட்டு வருகின்றன. வவுனியா, பம்பைமடுவில் 30 ஏக்கர் நிலப்பரப்பில் கைத்தொழிற் பேட்டை நிறுவப்பட்டுள்ளது. இங்கும் 34 வரையிலான நிறுவனங்கள் செயற்படுவதுடன் 140 பேர் நேரடி வேலைவாய்ப்பையும் பெற்றுள்ளனர். இதே போல் கிளிநொச்சி மாவட்டத்தை மையப்படுத்தி ஒரு கைத்தொழிற் பேட்டையொன்றை அமைக்க வேண்டுமென முன்மொழியப்பட்ட திட்டத்துக்கமைய பரந்தன் பகுதியில் 50 ஏக்கர் நிலம், முன்னர் பரந்தன் கெமிக்கல் கூட்டுத்தாபனம் இயங்கிய காணியில் ஒதுக்கப்பட்டிருந்த போதும் இதுவரை அது அமுலாக்கம் செய்யப்படவில்லை.

எது எவ்வாறாயினும் கைத்தொழில் முயற்சிகளின் ஆரம்பம் என்பது எப்போதும் சவாலான ஒன்றாகவே காணப்படுகிறது. ஏனெனில் ஆரம்ப நிலைக் கைத்தொழில்களில் இருந்து உருவாக்கப்படும் வெளியீடுகள் உற்பத்திச் செலவு கூடியதாகவும் தரம் குறைந்ததாகவுமே முதலில் வெளிவரும். இதனால் இவ் உற்பத்திகளின் சந்தைப் போட்டி என்பது கடினமாகக் காணப்படும். ஏலவே வளர்ச்சியடைந்த கைத்தொழிற் சாலைகளில் இருந்து சந்தைக்கு வரும் பொருட்கள், விலை குறைந்ததாகவும் தரம் உயர்வானதாகவும் காணப்படும் என்பதால் இந்தப் பொருட்களுடன் போட்டியிடுவது என்பது குழந்தைக் கைத்தொழில்களுக்கு (Infant Indus tries) சவாலாகவே காணப்படும். இதனால் இப் பிரச்சனையை ஆராய்ந்த பொருளியலாளர்கள் குழந்தைக் கைத்தொழில்களை பாதுகாப்பதற்கான பாதுகாக்கப்பட்ட சந்தைகளை (Protected Market) அரசாங்கங்கள் உத்தரவாதப்படுத்த வேண்டும் என்ற கொள்கையை 1960 களில் முன்மொழிந்திருந்தன. இதன் அடிப்படையில் போட்டிப் பொருட்களை மட்டுப்படுத்த, இறக்குமதித் தடைகளை நாடுகள் கடைப்பிடித்தன. அதனூடாக உள்நாட்டுத் தொழிற்துறை மிக வேகமாக வளர, தொழிற் பிரிப்பும் சிறப்புத் தேர்ச்சியும் முன்னேறி, அவை வளர்ந்த தொழில்களின் பொருட்களுடன் போட்டி போடும் நிலைக்கு உயர்ந்து வந்தன. இந்த அனுபவம் இந்தியாவின் கைத்தொழில் வளர்ச்சியில் வெற்றிகரமாக நிறுவப்பட்ட ஒரு பொருளாதாரமாகப் பார்க்கப்பட்டு வருகிறது.

இலங்கையில் இக் கொள்கையை அடியொற்றி இறக்குமதித் தடைகள் விதிக்கப்பட்டதாயினும் அது 1980 களில் கைவிடப்பட்டு, ஒரு தோல்வியடைந்த அனுபவமாக மாறியது. இந்த நிலையில் ‘குழந்தைக் கைத்தொழில்களின்’ பாதுகாப்புக்கென முன்மொழியப்பட்ட கைத்தொழிற் பேட்டைகள், உற்பத்திச் செலவைக் குறைத்து, புதிய தொழில் முயற்சியாளர்களை கைத்தொழிற் துறை நோக்கி எடுத்து வருவதற்கான தந்திரோபாயத்தை முன்னெடுத்துள்ளது. எனினும் குடும்ப மட்டத்தில் தொடங்கப்பட்ட சிறிய அளவிலான தொழிற்துறைகளை, இயந்திரத் தொழில்நுட்பத்துடன் இணைத்து, உலகச் சந்தையின் தரம் வாய்ந்த பொருட்களுடன் போட்டி போடும் வகையில் முயற்சியாளர்களை வழிப்படுத்திச் செல்வதில் அரசு கவனம் செலுத்தவில்லை. உணவு பதனிடலும் பொதியிடலும், மரம் சார்ந்த கைத்தொழில்கள், ஆடைத் தயாரிப்புகள், கைவினைப் பொருட்கள் உற்பத்தி, பனைசார் உற்பத்தி, சேவைக் கைத்தொழில்கள், தென்னைசார் கைத்தொழில்கள், கடலுணவு பதனிடல் போன்ற தொழில்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகளவில் இயங்குகின்ற குடிசைக் கைத்தொழில்களாகக் காணப்படுகின்றன. இவை வேலை வழங்கும் தொழிற்துறைகளாக அன்றி வீட்டு மட்டத்திலான தொழில்களாகவே இயங்கி வருகின்றன. பின்வருவன இந்தத் தொழில்களை



Image Source - www.koormai.com

செய்யும் எம் நாட்டில், முதலாம் நிலைக் கைத்தொழில் பொருட்களை போட்டியிட்டு விற்பனை செய்தல் கடினமான செயலாகவே காணப்படுகின்றது. இதன் காரணமாக தொழில் தொடங்கப்பட்ட சிறு கைத்தொழில்கள் சிறிது காலத்திலேயே கைவிடப்பட்டு விடுகின்றன. இதனால் இளம் தொழில் முயற்சியாளர்கள் பாரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகின்றனர். நிறுவன ரீதியான வலைப்பின்னலுக்கு ஊடாக உறுதிப்படுத்தப்பட்ட சந்தை வசதிகள் கொண்ட தொழில்கள் மட்டுமே நிலைத்திருக்கக் கூடியதாகவுள்ளது.

கைத்தொழிற் பொருட்களின் உற்பத்தியின் மீது நியமங்களை அடிப்படையாக வைத்தே இலாப - நட்டப் பகுப்பாய்வை மேற்கொள்ள முடியும். பொருட் கொள்வனவு, மறு கட்டளையிடும் மட்டம் போன்ற மிக முக்கிய தீர்மானங்களும் ஆக்கப் பொருட் செலவீனமும் நியமங்களின் அளவினாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. நியமங்களைப் பராமரிப்பது தொடர்பில் போதிய அறிவின்மை காரணமாக, அதிக உற்பத்தியானது நட்டத்தை ஏற்படுத்தி விடுவதால், தொழிலிலிருந்து ஒதுங்கும் தன்மை கைத்தொழில் உற்பத்தியில் பரவலாக ஏற்படுகிறது. நியமங்களை முறையாக நிர்ணயிப்பது, அதன்படி வெளியீடு இடம் பெறுவதை உறுதி செய்து பதிவு ஏடுகளைப் பராமரிப்பது போன்ற எந்த முறைகளுமின்றி குடிசைக் கைத்தொழில்கள் செயற்படுவதனால் அவை விரைவில் நட்டமடைந்து போகின்றன. மாறாக, நியம வெளியீடு மாறுபடும் போது ஆலோசனையாளர்களின் சேவையைப் பெறுதல், சாத்திய வள ஆய்வை மீள் பரிசீலனை செய்தல் என்பன இடம்பெற்றால், தொழிற்சாலைகள் மூடப்படுவதனையும் தொழில் நட்டம் ஏற்படுவதையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

தரமுயர்த்துவது தொடர்பில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளாகும் :

தர ரீதியான குறைபாடுகளும் சந்தை வாய்ப்பின்மையும்.

பொதியிடலில் காணப்படும் குறைபாடுகள்.


நியமங்களைப் பேணுவதிலுள்ள குறைபாடுகள்.

சட்டக்கட்டுப்பாட்டு நெருக்குவாரங்கள்

உணவுப் பதனிடல் - பொதியிடல் மற்றும் பனை, தென்னைசார் உற்பத்திகளே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ள கைத்தொழில் முனைவுகளில் பெரிதும் வளர்ந்து வரும் கைத்தொழில் முனைவுகளாகும். இத் தொழிற்துறைகளில் தர ரீதியாக முன்னேற்றத்தைக் கொண்டு வருவதில் பாரிய பிரச்சினைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. தென்னை சார்ந்து, பெருமளவு இயந்திரத் தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு உற்பத்திகள் நடைபெறும் போதும், தும்பு மட்டுமே வெளியீடாக தென்னிலங்கைக்கு ஏற்றப்பட்டு வருகிறது. இதே போலவே உணவுப் பதனிடலின் கீழ் உற்பத்தி செய்யப்படும் பெருமளவிலான அரிசி, அரிசி மா, பலகார வகைகள், தானிய வகைகள், பருப்பு வகைகளின் பொதியிடல், தரம் - கவர்ச்சி போன்றன காரணமாக சந்தைப் போட்டியிலும் தரப் பாதுகாப்பிலும் வீழ்ச்சியைச் சந்தித்து வருகின்றன. பெருமளவில் தரம் கூடிய பொருட்களைத் தாராளமாக இறக்குமதி

(தொடரும்)

கால்நடை வளர்ப்பு என்பது இலங்கையின் முக்கியமான ஒரு பொருளாதாரக் கூறு. மனிதனின் புராதன தொழில்களில் கால்நடை வளர்ப்பு மிகமுக்கியமானது. பால், முட்டை, இறைச்சி, எரு, வேலைவாய்ப்பு என பல வழிகளிலும் கால்நடை வளர்ப்பு மக்களுக்கு வருவாயை ஏற்படுத்தும் துறையாகும். அத்துடன் நுகர்வோரின் புரத மற்றும் முக்கியமான ஊட்டச் சத்துகளின் தேவையை பூர்த்தி செய்வதாகவும் கால்நடை வளர்ப்பு அமைகிறது. பொருளாதார நெருக்கடியால் இலங்கை தள்ளாடும் சூழ்நிலையில், கால்நடை வளர்ப்பினூடாக கிராமிய மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் போசணைமட்டத்தை உயர்த்துவதோடு, இதை மேம்படுத்துவதனூடாக இலங்கையின் பொருளாதாரத்தை எவ்வாறு மேம்படுத்தலாம் என்பது தொடர்பான வழிமுறைகளை அனுபவரீதியாகவும், ஆய்வியல் ரீதியாகவும் முன்வைப்பதாக 'இலங்கையின் கால்நடை வளர்ப்பு பொருளாதாரம்' என்ற இத்தொடர் அமைகிறது.






சிவபாத சுந்தரலிங்கம்
கிருபானந்தகுமரன்

கால்நடை மருத்துவரான சி. கிருபானந்தகுமரன் அவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்தில் தனது கால்நடை மருத்துவ பட்டப்படிப்பினை மேற்கொண்டார் (BVSc, MVS). தமிழக, இலங்கை ஊடகங்களில் கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கியல் நடத்தைகள் தொடர்பான தொடர்களை எழுதி வருகிறார்.


# கறவை மாடுகளின் இனப்பெருக்கப் பிரச்சினைகளைக் களைதல்

கடந்த கட்டுரையில் கறவை மாடு வளர்ப்பின் போது தோன்றும் இனப்பெருக்கம் சார்ந்த பல பிரச்சனைகளை ஆராய்ந்திருந்தேன். இந்தக் கட்டுரையும் அதன் நீட்சியே. எனினும் தீர்வுகளை மையப்படுத்திய கட்டுரையாக அமைகிறது.

கறவை மாடுகள் சினை பிடிக்காமைக்கும் ஏனைய இனப்பெருக்கம் சார்ந்த பல பிரச்சினைகளுக்கும் வெப்ப அயர்ச்சி (Heat stress) மிக முக்கியமான ஒரு காரணியாகும். அண்மைக் காலங்களில் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் முன்பு இருந்ததை விட அதிக வெப்பநிலை நிலவுகிறது. உலக வெப்பமுறல் (Global warming) இதற்குப் பிரதான காரணமாக விளங்குகிறது. மனிதர்களைப் போல கறவை மாடுகளுக்கும் உலக வெப்பமுறலால் பல பாதிப்புகள் நிகழ்வதுண்டு. இது குறிப்பாக கருவுறுதல் தொடர்பான பல ஓமோன்களின் செயற்பாட்டைப் பாதித்து, கருச்சிதைவை - கருத்தங்காமையை ஏற்படுத்துகிறது. இதனால் மாடுகளை வெப்பத் தாக்கத்திலிருந்து பாதுகாத்தல் அவசியமாகிறது.




Image Source - cattlemensharrison.com

வெப்ப காலங்களில் மதிய நேரங்களில் கறவை மாடுகளை மேய்ச்சலுக்கு விடுவதை தவிர்க்கலாம். வெப்பப் பாதிப்புக்கு உள்ளாகாமல் தவிர்க்க, பொருத்தமான கொட்டகைகளை அமைக்கலாம். அதிக வெப்பம் நிறைந்த உலர் வலயங்களுக்குப் பொருத்தமான கால்நடைகளைத் தெரிவு செய்யலாம். மாடுகளுக்கு எப்போதும் சுத்தமான குளிர்ந்த தண்ணீர் கிடைக்க வகை செய்தல் வேண்டும் (இலங்கையில் பொதுவாக மாடுகளுக்கு நாள் முழுவதும் தண்ணீர் கிடைக்கச் செய்வது அரிதிலும் அரிது). அடிக்கடி மாடுகளைக் குளிப்பாட்டலாம். கொட்டகைகளை வெப்பம் தாக்காத வகையில் அமைக்கலாம் (விசிறிகள், குளிர்மையான கூரைகள், சுற்றுப்புறமாக மரங்களை அமைத்தல்). அத்துடன் இலங்கையின் இனப்பெருக்கக் கொள்கைக்கு (Breeding policy) அமைவாகவே மாடுகளை வளர்க்க பண்ணையாளர்கள் அறிவுறுத்தப்பட வேண்டும். குறிப்பாக உலர் வலயப் பகுதிகளில் வறட்சியை தாங்கும் இந்திய, உள்ளூர்க் கலப்பு மாடுகளையும், குளிர்ப் பகுதிகளில் ஐரோப்பியக் கலப்பு மாடுகளையும் வளர்க்கப் பரிந்துரைக்க வேண்டும். இதன் மூலம் வெப்பம் மற்றும் ஏனைய காலநிலையால் தோன்றும் இனப்பெருக்கப் பிரச்சனைகளைத் தவிர்க்க முடியும்.

இலங்கையின் மாடுகளுக்கு வருடம் முழுதும் தேவையான சமச்சீர் உணவு (Balanced nutrition) கிடைப்பதில்லை என்பது பாரிய சவாலாகும். நெற்பயிர் செய்யப்படும் காலங்களில், மாடுகள் மேய இடமின்றி அடைத்து வைக்கப்படுகின்றன. பயிர் செய்யப்படாத வயல்களும் நீர் குறைந்த குளங்களில் வளரும் புற்களுமே கால்நடைகளின் பிரதான உணவு மூலங்களாக அமைகின்றன. இவை தடைப்படும் காலங்களில் மாடுகள் பட்டினி கிடக்கின்றன. இதனால் பண்ணையாளர்கள் மேய்ச்சல் நிலங்களைத் தேடிச் சிரமப்படுவதைக் காண முடிகிறது. பலர் மாடு வளர்ப்பையே கை விடுகின்ற நிலை தோன்றுகிறது. முறையாக உணவு கிடைக்காத மாடுகளின் வளர்ச்சி குறைகிறது. இனப்பெருக்க ஓமோன்களின் சுரப்புக் குறைகிறது. மாடுகள் மெலிகின்றன; நலிவடைகின்றன. கருவைத் தங்கச் செய்யும் வகையான உடல் நிலைச் சுட்டியும் (Body condition score) மாடுகளுக்குக் கிடைப்பதில்லை. இதனால் கருச்சிதைவு ஏற்படுகிறது. கன்று ஈன முடியாத நிலை (Dysto cia) தோன்றுகிறது. கருப்பை வெளித்தள்ளல் (Uterine prolapse), நஞ்சுக் கொடி விழாமை (Retained placenta) போன்ற நிலைகளும் ஏற்படுகின்றன. இந்த உணவுப் பற்றாக்குறையைப் போக்க ஊட்டச்சத்து மிக்க தீவனப் புற்களை வளர்க்கலாம். பொருத்தமற்ற காலத்துக்கும் கிடைக்கத் தக்கவாறு ஊறுகாய்ப் புற்களைச் (silage) செய்யலாம். நவீன TMR உணவூட்டலைச் செய்யலாம் (பசுந்தீவனம் மற்றும் அடர்தீவனத்தைக் கலந்து வழங்கும் முறை). புற்கள் விரயமாகாமல் தவிர்க்க புல் வெட்டும் இயந்திரம் மூலம் புற்களை வெட்டி வழங்கலாம். அசோலா போன்ற தீவனங்களை வழங்கலாம். இவை அனைத்தும் அரச மற்றும் தனியார் அமைப்புகளால் பண்ணையாளர்களுக்கு மானிய முறையில் வழங்கப்படுகின்ற போதும் பெருமளவில் நிலைத்து நிற்கும் (sustainable) வகையில் இவை அமைவதில்லை. ஒரு சில பண்ணையாளர்களைத் தவிர ஏனையோர் இந்த முறைகளைச் சிறிது காலத்தின் பின் கை விடுகின்றனர்.

இலங்கையின் கறவை மாடுகள் அதிகளவில் விற்றமின் கனியுப்புக் குறைவை (vitamins and minerals) கொண்டிருப்பவை. அடைத்து வளர்க்கும் உள்ளக முறை (intensive) தவிர்ந்த ஏனைய வளர்ப்பு முறைகளின் போது தேவையான மேற்படிச் சத்துக்கள் கிடைப்பதில்லை. இனப் பெருக்கத்துக்கு அத்தியாவசியமான விற்றமின் கனியுப்புச் சத்துக்களை வெளியிலிருந்த வழங்குவது அவசியமாகிறது. கனியுப்புக் கட்டிகளும், மாப் பொருட்களும், விற்றமின் திரவங்களும் சந்தையில் தாராளமாகக் கிடைப்பதால் பொருத்தமானதை கால்நடை வைத்தியரின் பரிந்துரையின் அடிப்படையில் வழங்கலாம். மேலும், குடற்புழுத் தாக்கமும் சத்துக்களின் இழப்புக்கான முக்கிய காரணமாக அமைவதால் அவற்றை அழிக்கும் குடற்புழு நீக்க மருந்துகளை (dewormers) கால்நடை வைத்தியர் பரிந்துரையில் வழங்கலாம். மேற்படி மருந்துகள் மற்றும் சத்து மருந்துகளின் விலை அதிகமென்பதால் பல பண்ணையாளர்கள் அவற்றைத் தொடர்ச்சியாக வழங்குவதில் பின்னடிக்கின்றனர். அரசாங்கத்தால், மேற்கூறிய விற்றமின், கனியுப்புகள் போன்றவற்றுடன் குடற்புழு நீக்க பூச்சி மருந்துகளும் குறித்த அளவில் வருடாந்தம் வழங்கப்படுகின்ற போதும் அது பண்ணையாளருக்குப் போதியதாக இருப்பதில்லை. எனவே அவற்றின் அளவை அதிகரிக்க வழி செய்யலாம். இதனை அரச சார்பற்ற நிறுவனங்களும் வலுப்படுத்த வேண்டும்.

இலங்கையில் காணப்படும் மாடுகளில் கணிசமானவை தற்காலிக அல்லது நிரந்தர மலட்டுத் தன்மையானவை (infertile). தொடர்ச்சியாகக் கன்றீனாத மாடுகள் ஏனைய கன்றீனும் மாடுகளுடன் உணவு, தண்ணீர் மற்றும் இருப்பிடத்துக்கு போட்டி போடத்தக்கன. இதனால் பண்ணைகளில் அதிக செலவு ஏற்படுவதோடு உற்பத்தியும் குறைகிறது. இந்த மாடுகளை மலடு நீக்கச் சிகிச்சை செய்ய வேண்டும் அல்லது நிரந்தரமாகப் பண்ணையிலிருந்து அகற்ற வேண்டும்.

### அண்மைக் காலத்தில் பல நவீன மலடு நீக்கச் சிகிச்சை முறைகள்

அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. கால்நடை வைத்தியர்களால் நடத்தப்படும் சினைப் பருவ ஒருங்கிணைத்தல் (Oestrus synchronisation) எனும் வெளியிலிருந்து வழங்கப்படும் ஓமோன் சிகிச்சை, தற்காலிக மலட்டுத் தன்மையை பெருமளவு நீக்குகின்றன. எனினும் ஓமோன் மருந்துகளின் விலை அதிகம் என்பது ஒரு குறைபாடே. அரசாங்க அலுவலகங்களால் சில வேளைகளில் இலவசமான ஓமோன்கள் வழங்கப்பட்டு குறித்தளவான கால்நடைகளுக்கு



சைலேஜ் புல் Image Source - cattlemensharrison.com

சிகிச்சையளிக்கப்படுகின்ற போதும் அது போதுமானதாக இல்லை. அத்துடன் ஓமோன் மூலமான சினைப்பருவ ஒருங்கிணைத்தலின் செலவு மற்றும் நீண்ட காலத் தன்மை காரணமாக பல பண்ணையாளர்கள் இந்தச் சிகிச்சையை மாடுகளுக்குச் செய்வதில் பின்னடிக்கின்றனர். தமது கால்நடைகள் நீண்ட நாட்கள் மலடாக இருப்பதால் ஏற்படும் உற்பத்திக் குறைவுச் செலவுடன் ஒப்பிடும் போது மேற்படி சிகிச்சையின் செலவு குறைவானது என்பதைப் பண்ணையாளர்கள் உணர வேண்டும். மேலும் அரச மற்றும் தனியார் அமைப்புகள் அடிக்கடி மலடு நீக்கச் சிகிச்சை முகாம்களை (infertility clinics) கிராமங்கள் தோறும் செய்யும் போது விழிப்புணர்வு ஏற்படுவதுடன், கால்நடைகள்

இலங்கையில் காணப்படும் மாடுகளில் கணிசமானவை தற்காலிக அல்லது நிரந்தர மலட்டுத் தன்மையானவை (infertile). தொடர்ச்சியாகக் கன்றீனாத மாடுகள் ஏனைய கன்றீனும் மாடுகளுடன் உணவு, தண்ணீர் மற்றும் இருப்பிடத்துக்கு போட்டி போடத்தக்கன. இதனால் பண்ணைகளில் அதிக செலவு ஏற்படுவதோடு உற்பத்தியும் குறைகிறது. இந்த மாடுகளை மலடு நீக்கச் சிகிச்சை செய்ய வேண்டும் அல்லது நிரந்தரமாகப் பண்ணையிலிருந்து அகற்ற வேண்டும்.



Image Source - www.sweetlix.com

உற்பத்தியுடையதாகவும் மாற்றமடையும்.

பல பண்ணையாளர்கள் தங்களது கறவைப் பசுக்கள் சினைப்பட்டிருக்கிறதா இல்லையா என்று அறியாது பண்ணைகளில் வைத்திருக்கிறார்கள். சினைப்படாத மாடுகளை அவற்றின் நிலையறியாது வைத்திருந்து நட்டப்படுகின்றனர். கால்நடை வைத்தியர்களால் நடத்தப்படும் சினைப் பரிசோதனைச் (*pregnancy diagnosis*) செய்து அடுத்த கட்ட நடவடிக்கைக்குத் தயாராக வேண்டும். சினைப்படுத்தப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் சினை நிலையை அறிய வேண்டும்.

இலங்கையில் தனியார் செயற்கை முறைச் சினைப்படுத்துநர்களே அதிகளவில் மாடுகளைச் சினைப்படுத்தும் சிகிச்சையைச் செய்கின்றனர். அரச சினைப்படுத்துநர்களின் அளவு குறைவடைந்து போகிறது. மேலும் சினைப்படுத்துநர்களின் வெற்றி வீதமும் (*success rate*) குறைவாகவே உள்ளது. அலுவலக நேரம் தவிர்ந்த நேரங்களில் மாடுகளுக்குச் சினைப்படுத்த வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படின் அவை தட்டிக் கழிக்கப்படுகின்றன. பண்ணையாளர்களும் சினைப் பருவ அறிகுறிகளைச் சரிவரக் கவனிக்காத காரணத்தால் அதனைத் தவறவிடுகின்றனர். இந்த மாதிரியான நிலையைத் தடுக்க, முறையான செயற்கை முறைச் சினைப்படுத்தல் பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். குறைந்தளவு எண்ணிக்கையிலான பண்ணைகள் வரும்படியாக செயற்கைமுறைச் சினைப்படுத்துநர்களின் எல்லைகள் வகுக்கப்பட வேண்டும். பொருத்தமான சம்பளத்துடனும் மேற்பார்வைக் கட்டமைப்பு உருவாக்கப்பட்டும் அவர்கள் உள்ளீர்க்கப்பட வேண்டும். இது அரச துறையாகவோ தனியார் துறையாகவோ கூட்டுறவாகவோ அமையலாம். ஆனால் தருணம் பிழைக்காது சினைப்படுத்தல் சிகிச்சை மேற்கொள்ள வழி செய்யப்பட வேண்டும். அதற்குரிய தகவல்களைச் சினைப்படுத்துநருக்கு அறிவிப்பதை பயிற்சிகளினூடாகப் பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். இதற்கு நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த முடியும். குறிப்பாக *Uber*, *Pickme* போன்ற பயண மற்றும் உணவு விநியோக முறைகளைப் போல் ஒரு நவீன முறையை உருவாக்கலாம்.

மேலும், செயற்கை முறைச் சினைப்படுத்தலைச் செய்ய முடியாத பண்ணைகளுக்கு வீரியமிக்க நல்லினக் காளைகளை வழங்கும் செயற்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். தற்போது இது அரச செயற்திட்டங்கள் மூலம்




Image Source - www.dogcare-clinic.com

செய்யப்படுகின்ற போதும் அது பரந்துபட்டு இடம் பெறுவதில்லை. தேவைப்படின் மேற்படி காளை வகைகளை வெளிநாடுகளில் இருந்தும் வழங்கலாம். இலங்கையில் பரவலாக, உள்முக இனக்கலப்பு (*inbreeding*) நிகழ்ந்து நெருங்கிய தொடர்புடைய காளைகளே பரவலாகப் பாவிக்கப்படுகின்றன.

இதனால் பரம்பரையலகு தொடர்பான (*genetic disorders*) குறைபாடுகள் புதிய சந்ததிகளில் தோன்றுகின்றன. வெளிநாட்டுக் காளைகளில் இருந்து விந்தணுக்கள் பெறப்படும் போதோ, வெளிநாட்டுக் காளைகளை நேரடியாகப் பாவிக்கும் போதோ, அவற்றின் பரம்பரை விபரங்கள் (*progeny testing details*) காட்சிப்படுத்தப்படுகின்றன; ஆய்வுகூடங்களில் அடிக்கடி பரிசோதிக்கவும் படுகின்றன. இந்த மாதிரி ஆய்வுகூடங்கள் இலங்கையிலும் அமைக்கப்பட வேண்டும். கால்வாய்நோய், புருசலோசிஸ் நோய் காரணமாக இலங்கையில் அடிக்கடி மாடுகளில் கருச்சிதைவு மற்றும் ஏனைய சினைப் பிடிக்காத நிலைகள் தோன்றுகின்றன. இதற்குரிய தடுப்பூசிகளும் முற்றுமுழுதாக வழங்கப்படுவதில்லை என்பதுடன் கணிசமான தடுப்பூசிகள் இந்தியா போன்ற நாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன.

மேலும் மேற்படி நோய்களுக்குரிய இலங்கைசார் ஆய்வுகள் குறைவாகவே மேற்கொள்ளப்படுகின்றன. பொருத்தமான ஆய்வுகளையும் தடுப்பூசி உற்பத்திகளையும் இலங்கைச் சூழலுக்கு ஏற்ப உற்பத்தி செய்யும் வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும்.

(தொடரும்)



நவரத்தினம் கிரிதரன்

தற்போது கனடாவில் வாழ்ந்து வரும் எழுத்தாளர் வ.ந.கிரிதரன் இலங்கையைச் சேர்ந்த தமிழ் எழுத்தாளர். வவுனியா மகாவித்தியாலயம், யாழ் இந்துக்கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கல்வி கற்ற இவர், மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் கட்டடக்கலைப் பட்டதாரி. 'டொராண்டோ' சென்டனியல் கல்லூரியில் இலத்திரனியற் பொறியியல் துறையில் பட்டம், தகவற் தொழில் நுட்பம் நுட்பத்துறையில் பல்வேறு கல்வித் தகைமைகளைப் பெற்றவர். இலங்கையிலிருந்த காலத்தில் தன் எழுத்துலக வாழ்வினை ஆரம்பித்த புகலிடத்தில் தொடர்ந்து எழுதி வருகின்றார். பதிவுகள் என்னும் இணைய இதழினை 2000 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியராகவிருந்து நடாத்தி வருகின்றார். இவரது படைப்புகள் இலங்கை, தமிழகம் மற்றும் புகலிடத்தமிழர்கள் வெளியிட்ட சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. தமிழக ஆய்வரங்குகளில் இவரது புகலிடப்புனைகதைகளைப் பற்றிய ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதுவரை இவரது எட்டு நூல்கள் வெளியாகியுள்ளன. மண்ணின் குரல் (நாவல், கவிதை, கட்டுரைத் தொகுப்பு), எழுக அதி மானுடா! (கவிதைத்தொகுப்பு), அமெரிக்கா (நாவல், சிறுகதைகளின் தொகுப்பு), நல்லூர் ராஜதானி நகர அமைப்பு (ஆய்வு) மண்ணின் குரல் (நாவல்களின் தொகுப்பு), குடிவரவாளன் (நாவல்), அமெரிக்கா (நாவல், திருத்திய இரண்டாவது பதிப்பு) மற்றும் கட்டடக்கா(கூ)ட்டு முயல்கள் (சிறுகதைத்தொகுப்பு) ஆகிய நூல்கள் வெளியாகியுள்ளன.

# புராதனமான காஞ்சிரமோடை, 'பரராசசேகரன் அணை' எல்லைப் பிரதேசங்களும் பண்டிதர் க. சச்சிதானந்தனின் 'யாழ்ப்பாணக் காவியமும்'

காஞ்சிரமோடை என்னும் இப்பகுதியை நான் அறியக் காரணமாகவிருந்தது எண்பதுகளில் மொறட்டுவைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் பொறுப்பேற்று நடத்திய காந்தியத்தின் 'நாவலர் பண்ணைத் தன்னார்வத் திட்டம்' ஆகும். நாவலர் பண்ணையில் மலையகத்திலிருந்து 77 இனக்கலவரத்தில் அகதிகளாக வந்திருந்த மக்களைக் காந்தியம் அமைப்பு குடியேற்றியிருந்தது. நாவலர் பண்ணைக்கும், மருதோடைக்குமிடையில் அமைந்திருக்கும் காஞ்சிரமோடை என்னும் பகுதி அப்போது காடாகவிருந்தது. மருதோடை வரை மட்டுமே பஸ் செல்லும். அங்கிருந்து பண்ணைக்கு மூன்று மைல்கள் வரையில் நடக்க வேண்டும். பண்ணைவாசிகள் அங்கிருந்து நடந்தே பண்ணைக்குச் செல்ல வேண்டும். இத்தூரத்தைக் குறைப்பதற்காக காஞ்சிரமோடைக் காட்டினூடு பாதை அமைப்பதும் அத் தன்னார்வத் திட்டத்தின் ஓரம்சம். அத்திட்டத்தின் மூலம் அப் பண்ணைவாசிகளின் பயணம் இலகுவானதாகவும், பாதுகாப்பானதாகவும் அமையும் என்று தீர்மானிக்கப்பட்டது.

காந்தியம் அமைப்பின் நாவலர் பண்ணையின் முக்கிய காரணங்களில் ஒன்று எல்லைப் பகுதியைப் பாதுகாப்பது. அத்திட்டத்தில் கலந்து கொள்வதற்காகச் சென்றவர்களில் நானுமொருவன். அப்பொழுது நான் என் படிப்பை முடித்து வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது அப்பகுதி மக்கள் அக்காட்டுப் பகுதியைக் 'காஞ்சிரமொட்டை' என்றே அழைத்தார்கள். ஆனால் அதன் உண்மையான பெயர் காஞ்சிரமோடை. பண்டிதர் க. சச்சிதானந்தனின் 'யாழ்ப்பாணக் காவியம்' நூலின் முன்னுரை அப்பகுதியின் வரலாற்று முக்கியத்துவத்தை விரிவாகவே எடுத்துரைக்கின்றது.

இச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதி பற்றி பேராசிரியர் புஷ்பரட்ணம் போன்றோர் ஏதாவது ஆய்வுகள் செய்திருக்கின்றார்களா அல்லது அது பற்றிய ஆய்வுக்கட்டுரைகள் எழுதியுள்ளார்களா என்பது


தெரியவில்லை. முக்கியமான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களில் ஒன்றான இப்பகுதி இலங்கைத் தமிழர்களின் வரலாற்றை எடுத்துக்காட்டும் பகுதி என்பதால் ஆய்வுகளை வேண்டி நிற்கும் பகுதிகளில் ஒன்று.

'யாழ்ப்பாணக் காவியம்' நூலில் எழுத்தாளர் பண்டிதர் க. சச்சிதானந்தன் எழுதியுள்ள முன்னுரையில் காஞ்சிரமோட்டை பற்றியும் அப் பிரதேசத்தில் காணப்படும் இடிந்த ஆலயங்கள், தூண்கள், தூபிகள், வாயிற்படிகள், சிற்பங்கள், கருங்கல் அணை பற்றியும் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

"1958 ஆம் ஆண்டு சிறியேன் நெடுங்கேணியிலிருந்து மருதோடை வழியாகக் காஞ்சிரமோட்டை சென்று அங்கிருந்து காட்டுப்பூவரசங் குளத்தைக் கடந்து பணிச்சமடு என்னுமிடத்துக்குப் பலமுறை செல்லவேண்டியிருந்தது. இங்கு குறிப்பிடும் காடு மிக அடர்ந்தது. கொடிய வனவிலங்குகளும் பேராபத்துக்களும் நிறைந்துள்ளது. பனிச்சமடுவென்னும் ஏரியின் கரையிலே சிலநாள் வசித்த சிறியேன், மிக உயர்ந்த பாலை மரமொன்றின் உச்சியில் மூன்றாம் அடுக்குப் பரணில் நித்திரை செய்து வந்தேன். ஒருநாள் நள்ளிரவில் கடலிரைவது போல் நீரின் ஓசை கேட்டுப் பயந்தேன். ஆனால் நீர்ப்பெருக்கு சிறியேன் இருந்த இடத்தை அடையவில்லை. மறுநாள் சிறியேனும் வேறு பணியாளர்களும் பாதையற்ற காடு வழியே நீரோசைத் திசைநோக்கிச் சென்றோம். அக் காடுகளிலெல்லாம் இடிந்த பிள்ளையார் கோவில்களும், சிவன்கோவில்களும், தூண்களும், தூபிகளும் வாயிற்படிகளும் காணப்பட்டன. கருங்கல் வேலைகளும் சிற்பங்களும் அங்கங்கே போன வழியெல்லாம் சிதறிக் கிடந்தன. ஈற்றில் ஒரு உயர்ந்த பிரதேசத்துக்கு வந்தபொழுது, கருங்கல்லாற் கட்டப்பட்ட ஒரு பெரிய அணைக்கட்டுக் காணப்பட்டது."

**சபுமல்குமாரயாவிடம் (செண்பகப்பெருமாள்) கனககூரிய சிங்கையாரியான் ஆட்சியை இழந்துவிடவே, அவனது குமாரனான பரராசசேகரன் காஞ்சிரமோடையை உள்ளடக்கிய வன்னிப் பகுதியில் மறைந்திருந்து, இழந்த யாழ்ப்பாண இராச்சியத்தை மீளக் கைப்பற்றுவதற்கான தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ளதாக பண்டிதர் க. சச்சிதானந்தனின் 'யாழ்ப்பாணக் காவியம்' விபரிக்கின்றது:**

அங்கிருக்கும் நீள்சதுரக் கனவடிவக் கருங்கற்கள் பிரமாண்டமானவை என்று கூறும் பண்டிதர் க. சச்சிதானந்தன் அப்பகுதியில் காணப்படும்




மருதோடை

Image Source - https://www.google.com/maps

நீர்வீழ்ச்சியின் அழகையும் மனத்தைத்தொடுமாறு வர்ணித்திருப்பார். அந்நீர்வீழ்ச்சியின் எழுச்சியே அவர் யாழ்ப்பாணக் காவியம் எழுதியதற்குத் தன்னைத் தூண்டியது என்று குறிப்பிடுவார்:


"அங்கு பிரயோகிக்கப்பட்ட நீள்சதுரக் கனவடிவக் கருங்கற்கள் மிகப் பிரமாண்டமானவை; அன்றியும் கருங்கல்

வேலை மிக உன்னதமானது. அணையின் நடுவிலே சில கருங்கற்கள் குலைந்தமையால் அந்த இடைவழியாக நீர் மிக உயரத்திலிருந்து குதிக்கிறது. ஒரு நீர்வீழ்ச்சி போன்று குதிப்பதால் பேரிரைச்சல் உண்டாகிறது. விழுமிடத்தில் மிகப் பலமாக நீர் சுழன்று அகப்பட்டவற்றைப் பல பரிவலுவுடன் இழுத்துச் செல்கிறது. கால் வைக்கப் பயமாக இருக்கும். வழிந்த நீர் சிற்றாறு போல் ஓடுகின்றது. அதன் இருமருங்கிலும் கண்ட இயற்கைக் காட்சியை என்னென்பது! பூக்களின் மகரந்தம் சொரிந்து, பசுமை கலந்த பொன் போன்று நிலத்திற் பரந்திருப்பது நெஞ்சை அள்ளுகிறது. எத்தனை வண்ணச் சேர்க்கைகள் கொண்ட வண்ணாத்திப் பூச்சிகள்! விதம் விதமான புள்ளிசைகள், மிருகங்களின் உறுமல்கள்! இந்த நீர்வீழ்ச்சியின் ஓசை மனத்தைப் பறையடித்துக் கிளர்த்தியது. அதன் உன்னதம் உள்ளத்தை மீட்டியது. அந்த எழுச்சியே இக் காவியத்தைப் பாடுவதற்குச் சுருதியாயிற்று."

அங்கு காணப்பட்ட கல்லணை பரராசசேகரன் அணையென்று அழைக்கப்பட்டதையும் அவர் ஊரவரிடமிருந்து அறிந்து கொள்கின்றார்.

"பின்னர் காஞ்சிரமோடையில் வாழ்ந்த முத்தரம்மான் என்ற மூத்தோரை இதன் வரலாறு பற்றிச் சிறியேன் கேட்டேன். அவர், 'இது பரராசன் அணைக்கட்டு' என்று கூறினார். இங்கு கருங்கற்களில் பல எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவை மங்கியிருந்தன. இவ்வணைக்கட்டுப் பற்றிச் சரித்திர நூல்களில் தேடியபோது ஒன்றுங் கிடைக்கவில்லை. இப்பிரதேசம், வட, வடமத்திய, கீழ் மாகாணங்கள் பொருந்துமிடத்தில் தமிழ்ப் பிரதேசத்தில் உள்ளது. பதவியாவின் வடக்கே பத்துப் பதினொரு மைல் தூரத்திலுள்ளது."

இந்த அணையினை வண்ணாத்திப்பாலமென்றும் அழைக்கும் விடயத்தைப் புறோகியர் என்பவரின் குறிப்புகளிலிருந்து அறிந்துகொள்ள முடியும் தகவலையும், இப்பிரதேசம் பற்றிய பேராசிரியர் கா. இந்திரபாலாவின் ஆய்வுகள் பற்றிய விபரங்களையும் பண்டிதரின் மேற்படி



பண்டிதர் க. சச்சிதானந்தன்
Image Source - www.geotamil.com

கட்டுரை தருகின்றது:

"புறோகியர் என்பார் (BrOhior 1934, P. 41) இது பற்றிக் குறிப்பிட்டிருப்பவற்றைக் கீழே மூலத்திலுள்ளவாறு ஆங்கிலத்தில் தருகின்றோம்.

*"About ten or eleven miles down the more or less sinuous course of Ma. Oyo, which passes out the breach of Padaviya tank, there is an ancient stone dam or weir which is entitled to take one of the foremost places among the structures of the kind in Ceylon. This is known as Varnardi Palam. Only one authority has ever inspected this monument of labour. (Parker Sessional paper, XX11 of 1886)"*

"வண்ணாத்திப் பாலமென்று இதை வழங்குவர். கீழ் மாகாணத்தில் இயன் ஓயாப் பகுதியிலும், ஒரு வண்ணாத்திப் பாலமுண்டு. அதனையும் இதனையும் வேறு பிரித்துக் கொள்க. இந்த அணைக்கட்டைக் கடந்து கிழக்கே சென்றால் கொக்கிளாய், தென்னமரவடி போன்ற இடங்களை அடையலாம். பதவியாப் பகுதி பற்றி இந்திரபாலா (1972, பக். 95) ஆராய்ந்துள்ளார். பதவியாவிலே கண்டெடுக்கப்பட்ட சாசனம் பதிவியாவுக்கு மறுபெயர் மதீபதி கிராமம் என்று கூறுவதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலே குறிப்பிட்ட அணைக்கட்டைச் சுற்றி எத்தனையோ இடிந்த கோவில்கள் இருக்கின்றன. கல்லெழுத்துக்கள்

”கனகசூரியனின் மூத்த புதல்வனான பரராசசேகரன் (பரராசசேகரன், செகராசசேகரன் என்பன பட்டப்பெயர்கள் என்பதை மனத்திற் கொண்டே எழுதப்படுகின்றன.) இங்குதான் யாழ்ப்பாண அரசை மீண்டடைவதற்குச் சில ஆயத்தங்கள் செய்தான் என இக் காவியம் கூறுகின்றது. அவன் தம்பி திருக்கேதீச்சரத்தையடுத்த காட்டிலும் மறிச்சுக்கட்டிப் பிரதேசத்திலும் மறைந்து வாழ்ந்தான் என்றும், அவன் காஞ்சிரமோடைப் பகுதிக்குச் செல்லும்போது, வன்னிச் சிற்றரசியைச் சந்தித்தானென்றும் இங்கு கூறப்பட்டிருக்கிறது.

*இருக்கின்றன. இவற்றைப் பற்றி எழுதிய நூல்கள் கைக்கெட்டவில்லை. மக்கள் வாழ்ந்ததற்கடையாளமாக, கிணறுகள், பாத்திரங்கள், மனைச் சிதைவுகள் காணப்படுகின்றன. பேராபத்துக்கள் நிறைந்த பிரதேசமானபடியால் அங்கு சரித்திராசிரியர்கள் செல்லவில்லை போலும்! “*




Image Source - www.geotamil.com

சபுமல்குமாரயாவிடம் (செண்பகப்பெருமாள்) கனகசூரிய சிங்கையாரியான் ஆட்சியை இழந்துவிடவே, அவனது குமாரனான பரராசசேகரன் காஞ்சிரமோடையை உள்ளடக்கிய வன்னிப் பகுதியில் மறைந்திருந்து, இழந்த யாழ்ப்பாண இராச்சியத்தை மீளக் கைப்பற்றுவதற்கான தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ளதாக பண்டிதர் க. சச்சிதானந்தனின் ‘யாழ்ப்பாணக் காவியம்’ விபரிக்கின்றது:

*“கனகசூரியனின் மூத்த புதல்வனான பரராசசேகரன் (பரராசசேகரன், செகராசசேகரன் என்பன பட்டப்பெயர்கள் என்பதை மனத்திற் கொண்டே எழுதப்படுகின்றன.) இங்குதான் யாழ்ப்பாண அரசை மீண்டடைவதற்குச் சில ஆயத்தங்கள் செய்தான் என இக் காவியம் கூறுகின்றது. அவன் தம்பி திருக்கேதீச்சரத்தையடுத்த காட்டிலும் மறிச்சுக்கட்டிப் பிரதேசத்திலும் மறைந்து வாழ்ந்தான் என்றும், அவன் காஞ்சிரமோடைப் பகுதிக்குச் செல்லும்போது, வன்னிச் சிற்றரசியைச் சந்தித்தானென்றும் இங்கு கூறப்பட்டிருக்கிறது. இவை சரித்திர நூல்களிற் காணப்படாதவை. காட்டுப் பூவரசங்குளம், காஞ்சிரமோடை தென்னைமரவடி என்ற இடங்களில் வாழ்ந்த வயோதிபர்களிடையில் பெற்ற கர்ண பரம்பரைக் குறிப்புக்களிலிருந்து இவை எழுதப்பட்டன.”*

இக் காஞ்சிரமோடை பகுதி பற்றியும், இப் பிரதேசத்தில் காணப்படும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க பகுதிகள் பற்றியும் விரிவான ஆய்வுகள் செய்யப்பட வேண்டியது அவசியம். வரலாறு மற்றும் தொல்லியற் துறையில் பணிபுரியும் பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் கவனத்தில் வைத்திருக்க வேண்டிய பகுதி காஞ்சிரமோடைப் பிரதேசம்.

திரை கடலோடி திரவியம் தேடியவர்கள் தமிழர்கள். உலக வணிகத்துறையில் மிகமுக்கியமான இடம் தமிழர்களுக்கு இருந்தது. ஆனால் அவையெல்லாம் இன்றோ பழங்கதைகளாகிவிட்டன. வணிகம் என்றாலே, தமக்கும் அதற்கும் சம்பந்தமில்லாதது போலவும், தம்மால் ஒருபோதும் வணிகத்துறையில் சாதிக்கவே முடியாதென்பது போலவும் நம்மவர்கள் ஒதுங்கி, ஒடுங்கிக் கொண்டுள்ளனர். உண்மையில் இத்தகைய முற்கற்பிதங்கள் தான் வணிகத்துறையில் அவர்கள் நுழைவதற்கும், சாதிப்பதற்கும் தடைக்கற்களாக இருக்கின்றன. அவற்றைக் களைந்து, சரியான படிமுறைகளுக்கூடாக, உலகின் எதிர்காலத்துக்குப் பொருத்தமான வணிகத்தில் காலடி எடுத்து வைத்தால், நம்மாலும் சாதிக்க முடியும். இவை வெறுமனே மேம்போக்கான வார்த்தைகள் அல்ல. ஈழத்தில், புலோலி என்ற கிராமத்தில் பிறந்து, அமெரிக்காவின் சிலிக்கன் பள்ளத்தாக்கில் வணிகத்துறையில் சாதித்த பின்னர் வெளிவருகின்ற கட்டுரையாளரது பட்டறிவின் மொழிதலே இது. 'ஈழத்திலிருந்து சிலிக்கன் வலி வரை' என்ற இக்கட்டுரைத்தொடர் உலகில் மிகப்பிரபலமான தொழில் நுட்பதாரிகளைப்பற்றியும் அவர்களது ஆரம்ப நிலை தொழில் நிறுவனங்களை (Startup Companies) அமைக்கும் போது எதிர் கொண்ட சில முக்கியமான நுணுக்கங்களை (Nuances) அடிப்படையாகக் கொண்டும், கட்டுரையாளரின் வணிகரீதியான சாதிப்பு அனுபவங்களைப் பகிர்வதாக அமைகிறது.

# எளிமைக்குத் திரும்புதல் : ஒரு வணிக உத்தி




கணபதிப்பிள்ளை ரூபன்

கணபதிப்பிள்ளை கந்தரூபன் (ரூபன்) அவர்கள் யாழ் மாவட்டத்தின் புலோலியைச் சேர்ந்தவர். போர் காரணமாக ஆபிரிக்காவுக்கு இடம்பெயர்ந்து பின் அங்கிருந்து ஐக்கிய அமெரிக்காவிற்கு சென்று இளமாணி, முதுமாணிப் பட்டங்களை இயந்திரவியலில் பெற்றுள்ளார்.

கடந்த மூன்று தசாப்தங்களில் பல புதிய தொழில் நிறுவனங்களை உருவாக்கி பல கோடி டொலருக்கு விற்றுள்ளார். மேலும் இவர் "Accidental Entrepeneur by Ruban என்ற தலைப்பில் நூற்றிற்கு மேற்பட்ட கட்டுரைகளை தன்னுடைய அனுபவங்களை உள்ளடக்கி ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.



**"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்"**
**திருக்குறள் (664)**

*மு. வரதராசனார் விளக்கம் :*
*இச் செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் என்று சொல்லுதல் எவர்க்கும் எளியனவாம். சொல்லியபடி செய்து முடித்தல் அரியனவாம்.*

ஈழத்தில் நாமும் எங்களின் மூதாதையர்களும் மிக எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து வந்தோம். இந்த வறண்ட பூமியையும் குறைந்த இயற்கை வளங்களையும் கொண்டு மிகச் சந்தோசமாக வாழ்ந்த நாட்கள் எனது நினைவில் உண்டு. எமது வாழ்க்கையானது ஒவ்வொரு கிராமத்திலும் சிறு சிறு சமூகங்களாக ஆலயங்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்களைச் சுற்றி இருந்தது. அந்தச் சமுதாயங்களில் பொதுவான வாசிகசாலைகள், கிணறுகள், சிறு விளையாட்டு மைதானங்கள் என்று உடல், உள நலங்களை ஊக்குவிக்கும் பொதுவான வளங்களும் காணப்பட்டன.

எளிமைக்குத் திரும்புதல் என்பது எளிமையான, அலங்காரமற்ற மற்றும் சிக்கலற்ற விஷயங்களில் அழகைக் காணுவதாகும்; குறைந்தபட்ச (Minimalism) நேர்த்தியைக் கொண்டு, தூய்மையான மற்றும் ஆடம்பரமற்றவற்றில் மகிழ்ச்சியைக் கண்டறிவது. இவ்வாறான முறை, வாழ்க்கையின் அனைத்துத் துறைகளுக்கும் பயன்படக்கூடியது. அப்படியான எளிமையைக் கடைப்பிடிப்பதன் மூலம் தொழிற்துறைகளில் வெற்றி காணமுடியும். அதிலும் ஆரம்பத் தொழில் நிறுவனம் ஒன்றைப் பெருக்கி வெற்றிகரமாக உருவாக்க இந்த எளிமை மிகவும்

தேவையானது. இதற்கு கூகிள் (Google) நிறுவனத்தை, ஓர் உதாரணமாகக் கூறலாம். அதனைத் தொடங்கியவர்களின் முதலாவது குறிக்கோள் "உலகிலுள்ள தகவல்களை இலகுவாக எப்படி ஒழுங்குபடுத்துவது" என்பது. அதை அவர்கள் அடைய அணுகியமுறை சுவாரசியமானது. ஏனைய நிறுவனங்கள் செய்வது போல் செய்தால் தகவல்களை ஒழுங்குபடுத்த பல கோடி பணம் தேவைப்படும். ஆனால் அவர்கள், சாதாரணக் கணினிகளையும், விலை குறைந்த மின் கருவிகளையும் பயன்படுத்தி தங்களது மென்பொருளின் (Software) திறனை அதிகரித்து அவர்களது குறிக்கோளை அடைந்தார்கள்.



சாதாரண தகவல் சேமிப்பு சாதனம் (Regular Storage Device)

ஓர் நிறுவனத்தையோ, பொருளையோ உருவாக்குவதற்கு, ஆரம்பத்திலிருந்து முடிவு வரை எளிமையைக் கடைப்பிடிக்க வேண்டும். அதன் மூலமே சிறந்த வெற்றியை அடைய முடியும். அதைப் பற்றி சில விடயங்களை இங்கே கூறலாமென்று இருக்கிறேன்.

வியாபாரத்தை விரிவாக்குதல் (Scalability): வியாபாரம் செய்வதென்பது ஒரே வேலையை அல்லது ஒரே பொருளை அதிகளவில் விற்பதன் மூலம், வேலைகளின் பல்வேறு தன்மையைக் குறைத்து, சில விடயங்களில் மட்டும் கவனம் செலுத்தி வியாபாரத்தின் இலாபத்தைக் கூட்டுவதாகும். ஒரு பொருளை உருவாக்குவது இலகு. ஆனால் அதனை ஆயிரக்கணக்காக உருவாக்கும் போது, தவறுகள் நேரும் சந்தர்ப்பம் அதிகம். பொருட்களை உருவாக்கும் போதே அதன் சிக்கல் தன்மையைக் குறைப்பதன் மூலம் அந்தத் தவறுகளை தவிர்க்க முடியும்.

நான் உருவாக்கிய இரண்டாவது நிறுவனத்தில் வடிவமைத்த பொருட்களை பல சிறிய பாகங்களாகப் பிரிக்கக் கூடியதாகச் செய்திருந்தோம். அவற்றைப் பாவிக்கும் போது பழுதடைந்தால், திருத்துவதற்காக அப்படியான ஒரு ஏற்பாட்டைச் செய்தோம். ஒவ்வொரு பாகங்களையும் இணைக்க பல இணைப்பிகள் (connectors) இருந்தன. பல இணைப்பிகள் இருந்ததால் அவற்றில் சிலது பழுதாகும் சந்தர்ப்பம் (Probability) அதிகமாக இருந்தது. அதனை வடிவமைக்கும் போதே, அந்தப் பாகத்தை விற்ற ஜப்பான் நாட்டைச் சேர்ந்த நிறுவனத்தினர் எமக்கு இது தொடர்பில் எச்சரித்திருந்தனர். அதனைக் கவனத்தில் கொள்ளாது, அதிக இணைப்பிகளுடன் பொருட்களைச் செய்தமை எமது பொருட்கள் பழுதாகும் வீதத்தை அதிகரித்து, வாடிக்கையாளர்களிடம் அவநம்பிக்கையை ஏற்படுத்தியது. இது எமக்கு ஓர் பாடத்தைப் புகட்டியது. அதற்கு அடுத்த உற்பத்திகளை இணைப்பிகள் குறைத்து எளிமையாகச் செய்ததன் மூலம், பல கோடி ரூபா வருமானம் ஈட்ட முடிந்தது. எப்போதும் குறைவான பாகங்களைக் கொண்டு பொருட்களை உருவாக்குவதன் மூலம், பொருட்களை பெரிய அளவில் உற்பத்தி செய்வது இலகு என்பதை இதிலிருந்து நான் கற்றுக்கொண்டேன்.

கணித்துச் செய்தல் (Predictable) : பொருட்களை உருவாக்கும் போது அதனை வெற்றிகரமாகச் சந்தைக்குக் கொண்டுவந்து பெரியளவில் விற்பதன் மூலம் நிறுவனங்கள் வெற்றி பெற முடியும். வாடிக்கையாளர்களிடம் நம்பிக்கையைப் பெறுவது அதற்கு முக்கியமானது. அப்படியான நம்பிக்கையைப் பெறுவதற்கு அவர்களுக்குக் கொடுத்த உறுதியின்படி, பொருட்களை உருவாக்கி அதனை உரிய நேரத்திற்கு வழங்க வேண்டும். அதற்கும் எளிமை மிக உதவியாக இருக்கும்.


ஓர் பொருளைத் திட்டமிட்டு, அந்தத் திட்டத்தின்படி உருவாக்கி, அதை உரிய நேரத்திற்குச் செய்வதற்கு, பொருளின் வரைபை எளிமையாக்குவது முக்கிய விடயமாகும். உதாரணமாக, மென்பொருள் (Software) உருவாக்கும் போது குறைந்த எண்ணிக்கையான 'code' வரிகளில் தேவையான வேலையை முடித்தல் அவசியம். வன்பொருள் (Hardware) உருவாக்கும் போது மிகக் குறைந்த கூறுகளைப் பயன்படுத்தி ஓர் பொருளை உருவாக்குவது முக்கியம். அதை "*The code easiest to maintain is the code that was never written*" (என்றும் எழுதப்படாத குறியீடு தான் பராமரிக்க இலகுவான குறியீடு) என்று கூறுவார்கள். எனது நண்பர் அமேசன்

நிறுவனத்தில் வேலை செய்கிறார். அவர்கள் குறியீட்டு மதிப்பாய்வு (Code Review) செய்யும் போது, இந்தக் குறியீடு தேவைதானா என்பதையே முதலில் பரிசோதிக்கிறார்கள். அதன் மூலம் பல எதிர்காலப் புற விளைவுகளைத் தவிர்க்கலாம்.

அடிப்படைக்கட்டுமானத் தொகுதிகள் (Basic Building Blocks) : அடிப்படை உறுதியாக இருந்தால் எப்படியான சிக்கலான பொருட்களையும் உருவாக்குவது சுலபமாக இருக்கும். அடிப்படையான விடயங்களைச் சிக்கலாகத் தொடங்கினால் அவைகளுக்கு மேலே கட்டும் கோபுரங்கள் உறுதியாக இருக்காது. அவை சிறிய காற்றுக்கே ஆடத் தொடங்கிவிடும்.

நான் முதலாவது நிறுவனம் நடாத்தும் போது, பெரிய இலக்கங்கள் கொண்ட எண்களை கணினியில் (Multiplication using Computer Arithmetic) திறமையாகவும் துரிதமாகவும் பெருக்கல் செய்வதென்பது ஒரு அடிப்படைத் தொழில்நுட்பமாகக் காணப்பட்டது. அதை, சிக்கலான நுணுக்கங்களைக் கொண்டு ஏராளமான பாகங்களைப் பாவித்துச் செய்வது ஒரு வழி. மற்றையது, இலகுவான பாகங்களைக் கொண்டு சமாந்தர நிலைகளைப் பயன்படுத்தி சிறிது எளிமையாகச் செய்வது. நான் சமாந்தர வழியைப் பாவித்ததன் மூலம் சிக்கல் இல்லாது வேலையை முடிக்கக் கூடியதாக இருந்தது. அடிப்படைக் கட்டுமானத் தொகுதிகளை அறிந்து திறமையாகப் பயன்படுத்தி அதனைச் செய்ததன் மூலம் பொருட்களை உரிய நேரத்திற்கு பிழைகளின்றி உருவாக்க முடிந்தது.

அடிப்படை அறிவு (Foundational Knowledge) : அடிப்படை அறிவு உறுதியாக இருந்தால், அதைக் கொண்டு பொருட்களைச் செய்வதும், செய்யும் பொருட்களில் பிழைகள் வரும் போது துரிதமாக மூல காரணங்களைக் கண்டுபிடித்துச் சரி செய்வதும் இலகுவானதாக அமையும். சிக்கலான மின் பொருட்களை உருவாக்குவதற்கு மின்னியல் படித்திருக்க வேண்டும்; வெப்பம் (Heat), இயந்திரவியல் (Mechanics), ஒலியியல் (Acoustic/ Sound) போன்று பல விடயங்களையும் அறிந்திருக்க வேண்டும். இவற்றை அறிவதன் மூலம் ஓர் பிரச்சினைக்கு பல கோணங்களிலும் தீர்வு கண்டுபிடிக்க முடியும். அது மட்டுமன்றி வாடிக்கையாளர் அப் பொருட்களைப் பயன்படுத்தும் சூழ்நிலைகளால் வரும் பிரச்சினைகளை அவர்களோடு சேர்ந்து தீர்க்கவும் முடியும்.



தொடர் (Serial) மற்றும் சமாந்தர (parallel) கணனி எண்கள் பெருக்கும் முறைகள்

எமது இரண்டாவது நிறுவனத்தை நடாத்தும்போது, ஐக்கிய அமெரிக்காவின் ஓர் பெரிய நிறுவனமான EMC என்ற நிறுவனத்தோடு சேர்ந்து, ஓர் நுணுக்கமான தகவல் சேமிப்புப் பொருள் செய்ய வாய்ப்புக் கிடைத்தது. அது மிகப் பெரிய நிறுவனமென்றாலும், நாங்கள் காட்டிய அடிப்படை அறிவைக் கண்டு பாராட்டிய அவர்களது மூத்த விஞ்ஞானி, எங்களுடன் சேர்ந்து பொருளை வரையறுத்து, அவர்களது தேவைக்கேற்ப உருவாக்க உதவினார்; எந்த எந்த அம்சங்கள் முக்கியமானவையென்று கூறி, செய்யும் பொருளுக்குத் தேவையில்லாதவற்றையும், சிக்கலானவற்றையும் நீக்கி, பொருளை எளிமையாக உருவாக்க அறிவுரை செய்தார்.

எளிமையைக் கடைப்பிடிப்பதன் மூலம் பின்வரக்கூடிய பல பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளலாம். எளிமையான முறையில் பொருட்களையோ நிறுவனங்களையோ உருவாக்குவதன் மூலம் கடினமும் சிக்கலும் இல்லாத பாதையைத் தேர்ந்தெடுத்து எமது இலக்கை அடையலாம். பெரிய அளவில் பொருட்களை உருவாக்கும் போது அதற்கான வழிமுறைகளை எமது அணியினருக்கு வரைந்து கொடுப்பதையும் அது இலகுவாக்கும். அதன் விளைவாக பலரும் துரிதமாகச் செயற்படுவதற்குப் பங்களிக்க முடியும். எமது மூதாதையினர் எளிமையாக வாழ்ந்து எமது சமூகத்தை தற்போதைய நிலமைக்கு கொண்டு சென்றது போல், நாமும் எளிமையைப் பயன்படுத்தி, எதிர்காலச் சந்ததிகளை முன்னேற்றுவோமாக!

(தொடரும்)

SpotOn Money



# SEND MONEY to SRI LANKA

**FIRST TRANSFER FEE FREE***

Immediate Payment to Any Account

*Partnership with*
CargillsBank
BANKING ON THE HUMAN SPIRIT

Cash Pickup at any Cargills food city

get 5% Discount* on Purchases

0207 341 7300
www.spoton.money

Authorised and regulated by the Financial Conduct Authority (FRN 510848)
SpotOn Money is a trading name of Monex International Limited, a company incorporated in England and Wales, and registered as a money service business with HMRC (12161278)

* T & C Apply


வணக்கம் London
www.vanakkamlondon.com
உலகம்
அரசியல்
தமிழ்நாடு
சினிமா
CINEMA
IN LOVE memory
விளையாட்டு
துயர் பகிர்வு
யாதும் ஊரே யாவரும் கேளிர்
தமிழால் இணையும்
தமிழ் செய்திச் சஞ்சிகைத் தளம்
vanakkamlondon.com
/vanakkam.london
/vanakkamlondon
/Vanakkam_London
/TheVanakkamLondon

# Protection For You & Your Family



## Our services

- Life Insurance «
- Critical Illness Protection «
- Mortgage Protection «
- Travel/Super Visa Insurance «
- Dental & Medical Benefits «
- Disability Benefits «
- Long Term Care «
- Employee Benefits «
- RESP, RRSP & TFSA «

## Are You Getting Million Dollar Advice?



Life100
INSURANCE & INVESTMENTS INC.

416-918-9771 | 416-321-2500
info@life100.ca www.life100.ca
10 Milner Business Court, Suite 208,
Scarborough, ON M1B 3C6

**Sritharan Thurairajah** CLU, CHS

*Simple Solution in a Critical Situation*

XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

### OUR GROUP OF COMPANIES

**codelantic**
CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**
ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**
ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**
OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**
EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**
BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

**FINACCDIRECT**
FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**
LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**
callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**
LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

### CSR INITIATIVE

**NurtureLeap**
NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**
#32 Spring Street,
Paddington W21JA.
Phone : +44 203 5001380
Email : contact@xebiro.com

**Colombo**
#7 - 3/1, Galle Road,
Colombo 06.
Phone : +94 112 559854
Email : contact@xebiro.com

**Jaffna**
#63, Sir Pon Ramanathan Road,
Kallady, Thirunelvelly, Jaffna
Phone : +94 212 212797
Email : contact@xebiro.com

# WE PROVIDE THE CHEAPEST MINIVAN & CAR SERVICE
## ALL OF THE GTA & ONTARIO



ரொறொன்ரோ பெரும்பாகம் உட்பட ஒன்ராறியோ மாகாணம் எங்கணும் மலிவான மினிவான் மற்றும் கார் சேவையை நாங்கள் வழங்குகிறோம்.

**கிழமை ஏழு நாட்களும் 24 மணி நேர சேவை வசதியுள்ளது.**
**அழைக்க வேண்டிய இலக்கம் 647-9723619**

Helping you harness the power around you
**NEW DAWN ENERGY SOLUTIONS**

## SOLAR POWER சூரிய சக்தி

SAFE ☼ CLEAN ☼ FREE ☼ பாதுகாப்பானது ☼ இலவசமானது ☼ சுத்தமானது

**AUTOMATIC OPERATION | NO REFUELLING | POWER DIRECTLY TO YOUR HOME**

**GRID-TIED SOLAR**
With this solar system you can earn up to $3850 annually for 20 years.

**NANO GRID SOLAR**
With this solar system you can cut your electricity bill to zero and you are never without electricity.

**ENERGY CONSERVATION**
With this solutions you can reduce your energy bill.

**OFF-GRID SOLAR**
With this solar system you can have electricity wherever you want.

**SOLAR POOL HEATER**
With this solar system you can cut your pool heating bill to zero.

HomeStars
Read Our Reviews
www.homestars.com

A+ Rating | BBB | ACCREDITED BUSINESS

500
2015 TOP SOLAR CONTRACTORS

**info@NewDawn-ES.Com | www.NewDawn-ES.Com | 416-855-9377**




# யாழ் மண்ணில்

வீடு, காணி,
வியாபார ஸ்தாபனங்கள்
வாங்குவதற்கு,
விற்பதற்கு அல்லது
வாடகைக்கு
நம்பிக்கையுடன் நாடுங்கள்

RE/MAX
ELITE

021 224 2855 | 0777 44 1113

இடம்: இல. 115 கே.கே.எஸ் வீதி சுன்னாகம்
(பீப்பிள்ஸ் லீசிங் கட்டிட தொகுதி, 1ம் மாடி)

BUY-SELL-RENT HOME AND LANDS

WWW.REMAXELITE.LK


abc DRIVING SCHOOL
We offer a variety of courses for new and experienced drivers. We offer our students quality driver education and training at affordable rates. Our extremely knowledgeable driving instructors fluent in 7 languages with their many years of professional experience make learning especially easy.
CAR DRIVING LESSONS
Class 5 Driving License
Refresher Lessons
Knowledge Test Preparation
ENROLL NOW!
ÉCOLE DE CONDUITE ABC DRIVING SCHOOL Ogilvy
528 avenue Ogilvy
Montréal QC
H3N 1M8
(514) 278-1824
abc.conduire@gmail.com
ÉCOLE DE CONDUITE ABC DRIVING SCHOOL Jean-Talon
4294 rue Jean-Talon O
Montréal, QC
H4P 2T6
(514) 866-4777
abc.driving4295@gmail.com


SS CAKES
Say "I Do"
to Sweet Perfection!
Planning your dream wedding? Look no further!
At SS Cakes, we specialize in crafting exquisite wedding cakes that are as stunning as they are delicious. From classic elegance to modern masterpieces, we'll design the perfect cake to sweeten your special day.
+94 76 347 0055
We do delivery around the world

# வீடு என்பது ஞாபகங்களின் கலவை

காதல், சில்மிஷங்கள், கனவுகள், சிரிப்புக்கள், நேசங்கள், அரவணைப்புக்கள், தவிப்புக்கள், அடையாளங்கள், கூடல்கள், குதூகலங்கள் என நீங்கள் உறைவிடமாகும் பொழுதுதான் வீடு விலாசம் கொள்கிறது.

தற்போதைய நிலையில் நீங்கள் வீடொன்றை விற்பது அல்லது வாங்குவது குறித்து உங்களிடம் இருக்கும் கேள்விகள் மற்றும் சந்தேகங்களுக்கு என்னால் தெளிவாக விளக்கமளிக்க முடியும்.

நம்பிக்கையோடு என்னை அழையுங்கள் நல்லதோர் வீடு செய்வோம்.



# XEBIRO

Xebiro has multiple technology companies under its umbrella, whereby we help any organization with any of their technological service needs. These companies have been in operation for the last few years and have helped more than 200 companies worldwide. Our team works seamlessly with businesses around the world – from the UK, Canada, Australia, USA, Norway, Switzerland, France, Poland, Singapore, and Sri Lanka.

## OUR GROUP OF COMPANIES

**codelantic**

CodeLantic offers one-stop solutions in the field of custom web application, mobile app development and software solutions.

**ExentAI**

ExentAI aims to research and develop innovative solutions for problems arising across a range of domains and industries for users or customers using state-of-the-art AI technologies.

**itaffix**

ITaffix is a leading technical support company providing 24/7 services supporting all the IT needs of businesses to resolve their core technical issues.

**ontomatrix**

OntoMatrix is a full-service digital marketing company with flawless techniques and innovative ideas that assist the brands to reach the heights of success.

**EmbryoZ**

EmbryoZ offers an extensive investor database of seasoned industry professionals to connect with. In addition to this, we provide you with multiple supporting service providers to ease off your work.

**BurgeonFirst**

BurgeonFirst is focused on closing the funding gap between the 'friends and family' stage and the Venture Capital stage.

## BUSINESS PROCESS OUTSOURCING

**FINACCDIRECT**

FinAccDirect is a financial process outsourcing company offering outsourced bookkeeping services, outsourced tax preparation services and company secretarial services.

**LegalLiaise**

LegalLiaise is an independent boutique law firm trusted to meet the diverse needs of business clients around the world.

**callOcare**

callOcare helps businesses reach out to their customers in the best possible way with 24x7 phone answering services, real-time reporting and 100% call recording facilities.

**LeadHRM**

LeadHRM Services provide customized Human Resource Services to corporate houses and companies across varied industries that want their people to grow and achieve success

## CSR INITIATIVE

**NurtureLeap**

NurtureLeap is a foundation that focuses on the youth of Northern Sri Lanka to create professionals by providing them real world training and exposure to international organisations.

**London**

**#32 Spring Street,**
**Paddington W21JA.**
**Phone : +44 203 5001380**
**Email : contact@xebiro.com**

**Colombo**

**#7 - 3/1, Galle Road,**
**Colombo 06.**
**Phone : +94 112 559854**
**Email : contact@xebiro.com**

**Jaffna**

**#63, Sir Pon Ramanathan Road,**
**Kallady, Thirunelvelly, Jaffna**
**Phone : +94 212 212797**
**Email : contact@xebiro.com**

# புத்தகங்கள், எழுத்து வாசிப்பு, பரவலாக்கம்

**உரைகள்... ஆய்வரங்குகள்...**

- இலங்கை இந்திய ஆய்வாளர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள், கல்வியலாளர்கள், பதிப்பாளர்கள் கலந்து கொள்கிறார்கள்.
- இந்த புத்தக கண்காட்சி அரங்கில் இலங்கை, இந்திய பதிப்பகங்கள், புத்தகசாலைகளின் நூல்களைப் பார்வையிடலாம், வாங்கலாம்!
- ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களுக்கான தனி அரங்கு உள்ளது!

## செயற் திட்டம்
## அங்குரார்ப்பண நிகழ்வு

**காலம்**
**21, 22, 23 ஜூன் 2024**

**நேரம்**
**வெள்ளி மாலை 5 - 8 மணி**
**சனி, ஞாயிறு காலை 10 மணி தொடக்கம்**
**மாலை 8 மணி வரை**

**இடம்**
**சைவ மங்கையர் கழக மண்டபம்**
**23 ருத்ரா மாவத்தை வெள்ளவத்தை**

**அரிய வாய்ப்பு, அழைக்கிறோம்!!**

**தொடர்புகளுக்கு**
**S.Kandeepan (Panuwal Book Mart) 076 742 7596**
**M.Fauzer 0044 78 1726 2980**

மானுடம் நிறுவனம்
maanudam foundation

மதகு

**புத்தகங்களை நேசிப்போம்!! வாசிப்பினை வளர்ப்போம்!!**



Netwyn.Place
Unleash Your Potential
www.netwyn.place
10 Thornmount Drive, Scarborough, ON M1B 3J4
+1 416-906-1414
Coworking Space • Private Office
Event Space • Boardroom
BOOK YOUR TOUR TODAY